41937.

# அம்பிகாபதி கோவை

— மூலமும் குறிப்புரையும் —

மறைமலையடிகள் நூல்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1

பதிப்பாசிரியர் :

மு. அருணாசலம், எம். ஏ.

956

தமிழ் நூலகம்

தியாகராயநகர் : : சென்னை

முதற் பதிப்பு 1-9-1944

M. I. P. PROJECT
Microfilmed.

விலை ரூபா நான்கு

உரிமை பதிவு செய்யப்பெறறது

---

சாது அச்சுக்கூடம், சென்னை

# முகவுரை

அம்பிகாபதி கோவை என்ற இந்த நூல் தமிழ்க் கோவைப் பிரபந்தங்களின் வரிசையிலே மிகவும் பழமை யானதொன்று; அம்பிகாபதி இயற்றியதாக வழங்குவது. பாட்டுடைத் தலைவனின்றிப் பாடப்பெற்றமை இதற்குள்ள தனிச் சிறப்பு. இத்தகைய கோவை வேறு இல்லை.

இந்நூல் முதன்முதல் 1899இல் வெளியிடப்பெற்றது. பிழைகளை நீக்கி, புதிதாய்க் குறிப்புரை எழுதி, அரும்பொரு ளகராதி முதலியவற்றைச் சேர்த்து இப்போது இது வெளி யிடப்பெறுகிறது. இலக்கண விளக்கம் உரையில் இதன் பாடல்கள் மிகுதியாகப் பயின்றுள்ளன. ராவ்சாகிப் வையாபுரிப் பிள்ளையவர்களுடைய இலக்கணவிளக்கவுரை ஏடு, பாடங்களைச் செப்பனிடப் பெரிதும் உதவிற்று.

இக்கோவை அச்சானபின், சென்னைச் சருவ கலாசாலை யில் தமிழாராய்ச்சி வேலையிலிருந்த வித்துவான் மு. சண்முகம் பிள்ளையவர்களும் ராவ்சாகிப் வையாபுரிப் பிள்ளையவர்களும் நூல் முழுவதையும் பார்த்துத் திருத்தங்களைத் தெரிவித் துதவினார்கள். இவர்களுக்கு எனது நன்றி உரியதாகின்றது.

பல வேலைகளுக்கிடையில் மிக்க அவசரமாய் அச்சிட வேண்டியிருந்தமையால், இதனுள் பிழைகள் சற்று அதிக மாய்க் காணப்படுகின்றன. வாசிக்குமுன், பிழை திருத்தத் திற் காட்டிய பிழைகளைத் திருத்திக்கொண்டு, விசேடக் குறிப்புக்கள் என்ற பகுதியில் காட்டிய குறிப்புக்களையும் சேர்த்து வாசித்தல் நலம்.

*குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்*
*கற்றறிந்த மாந்தர் கடன்.*

தியாகராயநகர
28—5—1944

மு. அருணாசலம்

# பொருளடக்கம்


பக்கம்

முகவுரை 3

நான்முகம் 5

**அகப்பொருள்** [பொருளதிகாரம் - அகப்பொருள்-சங்க நூலும் அகப்பொருளும் - அகப்பொருளிலக்கணம் - அகப்பொருளிலக்கியம் - கோவை] 5

**கோவை** [கோவை என்ற பெயர் - கோவையின் இலக்கணம் - பண்டைய கோவைகள் - திருக்கோவையார் - தலசம்பந்தமான கோவைகள் - அரசர்மீதுள்ள கோவைகள் - வள்ளல்கள்மீதுள்ள கோவைகள் - வருக்கக் கோவை - ஒருதுறைக் கோவை - பிற வகைகள் - கோவைக் கொத்து - கொளு - கோவையின் - பொருள் தொடர்பு - அமைபபு] 10

**அம்பிகாபதி கோவை** [நூற்பெயர் - கம்பரும் அம்பிகாபதியும் - அம்பிகாபதியும் தண்டியும் - வீரை அம்பிகாபதி - மேற்கோள் ஆட்சி- காலம்-மிகைச்செய்யுள் - நூலாராய்ச்சி-தெய்வங்கள் - தமிழ் - தமிழ்ப்பண் - தமிழ் நூல்கள்-சோழ பாண்டியர் - புராண கதைகள் - பழக்க வழக்கங்கள் - அருஞ்சொற்கள் - துறைகள் - சில நயங்கள்] 25

பிழை திருத்தம் 43

அம்பிகாபதி கோவை க-உருரு

விசேடக் குறிப்புக்கள் உருச

பழமொழி அகராதி உசாக

அரும்பொருள் அகராதி உசாஉ

கிளவிக் கொத்து உஅஎ

பாட்டு முதற்குறிப்பகராதி உஅஅ

# நூன் முகம்

## அகப்பொருள்

**பொருள் அதிகாரம்**

"எழுத்து முதலாம்ஐந் திலக்கணமும் தோய்ந்து - பழுத்த தமிழ்ப்புலமை பாலிக்க" வேண்டுமென்று குமரகுருபர சுவாமிகள் வேண்டுகிறார். ஐந்திலக்கணங்களாவன எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன. யாப்பு அணி என்பவற்றைத் தொல்காப்பியர் பொருளினுள் அடக்கிவிடுகிறார். அவர் செய்த இலக்கணம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களை உடையது.

இலக்கியத்துக்கு விஷயமாக அமையும் பொருளைக் கூறுவதால், பொருளதிகாரமே மற்ற இரு பகுதிகளினும் சிறப்புடையதென்று கருதப்பெற்றது. இதுபற்றி இறையனார் அகப்பொருளுரையாசிரியர் கூறுவது இங்கு அறியத்தகும்:

> பனனீரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னா, நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்றை, அரசன, இனி நாடு நாடாயிற்றாகலின், நூல வலலாரைக் கொணர்க என்று எல்லாப் பககமும ஆட்போகக, **எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்** வலலாரைத தலைப்பட்டுக் கொணாந்து, **பொருளதிகாரம்** வலலாரை எஙகுந் தலைப் பட்டிலேமென்று வந்தாா. வர, அரசனும புடைபடக் கவன்று, "என்னை? எழுத்துஞ் சொலலும ஆராயவது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெறறும் பெறறிலேம" எனச் சொலலா நிறப, மதுரை ஆலவாயில அழலநிறக கடவுள் சிநதிபபான்: "என்னை, பாவம்! அரசற்குக கவறசி பெரிதாயிற்று. அதுதானும, ஞானத்திடைய தாகலான்,

யாம் அதனைத் தீர்க்கற் பாலம்'' என்று இவ்வறுபது சூத்திரததையும் மூன்று செப்பு இதழ் அகத்து எழுதிப் பீடத்தின்கீழ் இட்டான்.

ஆலவாய் அழலனிறக் கடவுளே இப்பொருளிலக்கணத்தை அறுபது சூத்திரமாகச் செய்துகொடுக்கத் திருவுளங் கொண்டான் என்ற கற்பனை, அக்காலத்து அறிஞர் பொருளிலக்கணத்தை எத்துணைச் சிறப்பாய்க் கருதியிருந்தனர் என்பதையே காட்டுகிறது.

தமிழ் இலக்கிய மரபில், பொருளானது, அகம் புறம் என இருவகைப்படும். அகப்பொருள் என்பது, ஒத்த அன்புடைய ஒரு பெண்ணும் ஓர் ஆடவனும் தம்முட் கூடித் தம் உள்ளத்தே இன்பம் நுகர்வது; இவ்வின்பம் இத்தகையதெனப் பிறர்க்குக் கூற இயலாததாயுள்ளது. 'புறப்பொருள் என்பது, அவ்வாறன்றிப் பிறர்க்கு எடுத்துக்கூற இயல்வதாய்ப் பலரும் நுகர்ந்து அனுபவித்தற்குரியது.

அகப்பொருளும் புறப்பொருளும் ஒத்த சிறப்பினவாயினும், புறத்தினும் பார்க்க அகத்திலேயே ஆன்றோர் மிகுதியும் ஈடுபட்டிருக்கிறார்கள். தொல்காப்பியப் பொருளதிகாரத்துள் அடங்கிய ஒன்பது இயல்களுள், ஒன்று புறத்திணை; நான்கு இயல்கள் அகத்திணை பற்றியவை.

**அகப் பொருள்**

இங்ஙனமே, சங்க நூல்களிலும் அகத்துறைப் பகுதியையே மிகுதியாகக் காண்கிறோம். எட்டுத் தொகை என்னும் தொகைநூல்கள் எட்டினுள், குறுந்தொகை, நற்றிணை, நெடுந்தொகை (அகநானூறு), ஐங்குறுநூறு, கலித்தொகை என்பன முற்றும் அகப்பொருள் பற்றியன; பரிபாடலுட் பெரும்பகுதி அகப்பொருள் பற்றியது.

**சங்க நூலும் அகப் பொருளும்**

பதினெண்கீழ்க் கணக்கினுள், ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை என்பன அகப்பொருள் பற்றியன. திருக்குறள் காமத்துப்பாலும், நாலடியார் காமத்துப்பாலும் அகப்பொருள் பற்றியன.

பிற்காலத்தில் சங்கநூல் நடையிலேயே அவற்றை அடியொற்றி யமைந்த இலக்கியம் கல்லாடம் என்பது; மதுரைச் சோமசுந்தரக் கடவுளைப் புகழ்வது. இந்நூல் ஆசிரியப்பாவினால் அகப்பொருளைக் கூறும் நூறு செய்யுட்களை யுடையது. (இதனுள் அடங்கிய நூறு துறைகளும், தனித்துறைகளா யுள்ளனவேயன்றிப் பொருள் தொடர்புற அமைக்கப்பெறவில்லை.)

**அகப் பொருள் இலக்கணம்**

அகப்பொருளின் இலக்கணத்தைத் தொல்காப்பியம் விரிவாகக் கூறியபோதிலும், அதிலமைந்த செய்திகள் யாவும் தொடர்புபெற ஒரு கதைபோல அமைத்து முறையாகச் சொல்லப்பெறவில்லை. தொல்காப்பியச் சூத்திரங்களுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள், அதனுட்கண்ட செய்திகளுக்கு மேற்கோளாக, மேலே கூறிய சங்கநூல்களையும் கீழ்க்கணக்கு நூல்களையும் எடுத்தாளுகிறார்கள். இந்நூல்களில் வந்துள்ள செய்யுட்களும், அகப்பொருட் செய்திகளைத் தொடர்புபெற அமைத்துக் கூறவில்லை; குறுந்தொகை, நற்றிணை முதலியன, பல்வேறு புலவர் செய்த தனிப்பாடல்களைக் கொண்டவையாதலால், தொடர்பான அகப்பொருட் செய்தி அவற்றுள் அமையக்கூடியதன்று.

தொல்காப்பியத்தின் பின்வந்த அகப்பொருளிலக்கண நூல்கள், அகப்பொருட் செய்திகளை முறையாகத் தொகுத்துக் கூறுகின்றன. இவற்றுள் தலையாயது, முன்னமே காட்டிய இறையனார் அகப்பொருள் (களவியல் என்றும் வழங்கும்);

இதன்பின்னர், பல இலக்கண நூல்கள் எழுந்தன. அவற்றுள் முக்கியமானது, நாற்கவிராச நம்பி எழுதிய அகப்பொருள் விளக்கம். களவியற்காரிகை (கலித்துறையாலானது), தமிழ் நெறி விளக்கம், மாறனகப் பொருள் என்பன பிற அகப் பொருளிலக்கண நூல்கள். வீரசோழியம், இலக்கண விளக்கம், முத்துவீரியம் என்பன ஐந்திலக்கணமும் கூறுகின்றன; அகப்பொருளும் இவற்றுள் ஒரு பகுதியா யமைந்துள்ளது.

**அகப் பொருள் இலக்கியம்**

இவ்விலக்கண நூல்கள் ஒவ்வொன்றின் உரையிலும், துறைக்கு விளக்கமாகவும் மேற்கோளாகவும் அகப்பொருள் இலக்கியங்கள் எடுத்தாளப் பெற்றுள்ளன. இவற்றுள் முக்கியமான வற்றை இங்குக் குறிப்பிடலாம்.

களவியற் காரிகையின் உரையில் கிளவித் தெளிவு, கிளவி மாலை, கிளவி விளக்கம் என்ற மூன்று நூல்கள் எடுத்தாளப்பெற்றுள்ளன; இதில் வந்துள்ள இவற்றின் செய்யுட்கள் முறையே சரு, ௪, ௩. இச்செய்யுட்கள் யாவும் வெண்பாக்கள். பெயர்களே, இவை அகப்பொருள் பற்றியன என்பதை உணர்த்தும். இவற்றின் அமைப்பையும் அழகிய நடையையும் பார்க்கும்போது, தொடர்பாக அகப்பொருட் செய்திகளனைத்தையும் தொகுத்துக் கூறிய நூல்கள் இவை என்று கருதலாம். ஆனால் இன்று, இந்நூல்கள் முழுதும் கிடைக்கவில்லை, வேறு வழியாக இவற்றை அறியவும் இயல வில்லை.

குறிப்பிடத்தக்க மற்றொரு நூல், பொருளியல் என்பது. இது ஆசிரியப்பாவாலானது; மிகக் குறைவான அடிகளால் ஒவ்வொரு துறையின் கருத்தையும் விளக்கவல்ல இலக்கியமா யுள்ளது. இதன் பாடல்கள் களஉ தமிழ்நெறி விளக்கவுரை யில் எடுததாளப் பெற்றுள்ளன; களவியற் காரிகை யுரையில்

கூகூ பாடல்கள் வருகின்றன. தொல்காப்பிய வுரை நம்பியகப் பொருள் உரை முதலியவற்றுள்ளும் இதன் பாடல்கள் வருகின்றன. இவற்றைத் தொகுத்துப் பார்க்கும்போது, அகப் பொருட் செய்திகளை முறையாகத் தொடர்புபெறக் கூறுதற் கென்றே ஆசிரியப்பாவில் எழுந்த இலக்கியமென்று இதைக் கருதலாம். இந்நூல் முழுதும் இன்று கிடைக்கவில்லை. மிகுதியான செய்யுட்கள் தமிழ்நெறி விளக்க வுரையில் வருவதால், அவ்வுரைகாரரே இதைச் செய்தாரோ என்று எண்ணவும் இடமுண்டு.

அகப்பொருள் கூறும் மற்றொரு சிறுநூல் சிற்றட்டகம்; ஆசிரியப்பாவாலானது. இதன் பாடல்களிற் சில பண்டையுரையாசிரியர்களால் ஆங்காங்கு ஆளப்பெறுகின்றனவே யன்றி, நூல் முழுதும் கிடைத்திலது.

மாறன் கிளவி மணிமாலை என்ற நூலின் பாடல்கள் இரண்டு மாறனலங்கார வுரையில் வந்துள்ளன. நூல் முழுதும் கிடைத்திலது. இதன் செய்யுட்கள் கட்டளைக் கலித்துறையி லமைந்தவை; நூல், அகப்பொருட் செய்திகளைத் தொடர்பு பெறக் கூறுவதென்று கருதலாம்.

மேற்கூறியவாறு வெண்பாவினாலோ ஆசிரியப்பாவினாலோ இயன்ற அகப்பொருள் இலக்கியம் பிற்காலத்தில் அருமை.

**கோவை**

கலித்துறையாலியன்ற கோவை என்ற இலக்கியமே மிகுதியாக எழுந்துள்ளது. இதுவே பின்னர்த் தோன்றிய இலக்கண வுரைகளிலும் விரிவாக எடுத்தாளப்பெற்றுள்ளது.

இறையனார் அகப்பொருள் உரை பாண்டிக்கோவையை விரிவாக (கூ௨எ பாடல்கள்) எடுத்தாளுகிறது. அவ்வுரையில் எடுத்தாளா விட்டால், இக்கோவை முற்றுமே மறைந்து போயிருக்கக்கூடும். நம்பி யகப்பொருளுக்கு இலக்கியமாக

அமைந்தது தஞ்சைவாணன் கோவை ; இதன் பாடல்கள் முழுமையும் அதன் உரையில் வந்துள்ளன. இறையனுரைத் தழுவி வந்த களவியற்காரிகை, திருக்கோவையாரையும் பாண்டிக்கோவையையும் எடுத்தாளுகிறது. தமிழ்நெறி விளக்கவுரை, முன்னே குறிப்பிட்ட பொருளியலேயும் சங்க நூற் பாடல்களையும் எடுத்தாளுகிறதேயன்றி, இறையனூர் உரை முதலியன போல, கோவைப் பாடல் ஒன்றையும் ஆளவில்லை. மாறனப் பொருளுக்கு இலக்கியம். திருப்பதிக்கோவை. இலக்கண விளக்கவுரையில் திருக்கோவையார், அம்பிகாபதிகோவை, தஞ்சைவாணன் கோவை, சுப்பற் கோவை முதலியவை பயின்று வருகின்றன. இவற்ருல், கோவைப் பிரபந்தங்கள் அகப்பொருளுக்கு இலக்கியமாகச் செய்யப்பெற்றனவென்பது தெளியலாகும்.

## கோவை

**கோவை என்ற பெயர்**

கோவை என்பது கோத்தல், ஒழுங்குபடத் தொடுத்தல் என்று பொருள்படும் ; இங்கு, அவ்வாறு ஒழுங்குபெறக் கோக்கப்பட்ட அகப்பொருள் துறைச் செய்யுட்களாலானதொரு பிரபந்தம் என்பதாகும். சங்க நூல் முதலியவற்றுள் தனித்தனியாகத் தொடர்பின்றி அமைந்திருந்த அகப்பொருள் துறைகளை ஒருசேரத் தொகுத்து, கதை நிகழ்ச்சியைத் தொடர்புபெற அமைத்துக் கோக்கப்பெற்ற புது நூலே கோவையாகும். இங்ஙனம் கோத்தமைக்கப் பெற்ற நூலைக் கோவை என்றல் மரபு ; "கோக்கும் தமிழ்க்கொத் தனைத்தும் வாழியே" என்பது தக்கயாகப் பரணி (௮௧௩). ஆசார நெறிகளை ஒருசேரக் கோத்தமைத்த தமது நூலைப் பெருவாயின் முள்ளியார் ஆசாரக் கோவை என்பர் ; இது பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்று. இங்ஙனமே, வெண்பா, கலித்துறை, ஆசிரியம் என்ற பாக்களை

நிரல்படக் கோத்த சிறு பிரபந்தம் மும்மணிக்கோவை என்ற பெயரோடு வழங்கும்.

அகப்பொருட் செய்திகளை முறையாகக் கூறும் இலக்கியத்துக்குக் கோவை என்பது இங்ஙனம் சிறப்பாக அமைந்த பெயர் ; அகப்பொருட் கோவை என்றும் இது சொல்லப் பெறும் ; 'கலித்துறை நானூறாய் நடப்பது அகப்பொருட் கோவை நாமம்மன்னே '-சிதம்பரப் பாட்டியல் ௩0. குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐந்திணைபற்றி இயன்றதாதலின் இது ஐந்திணைக்கோவை என்றும் சொல்லப் பெறும் ; 'குலோத்துங்கசோழனைச் சொல்லிய ஐந்திணைக் கோவை பாட' என்பது குலோத்துங்கசோழன் கோவை (காப்பு). கோவையில் நானூறு பாடல்கள் அமையவேண்டு மென்பது விதியாதலால், இது நானூற்றுக்கோவை என்னவும் பெறும்.

தொடர்பான பொருள் கொண்டதாதலின், கோவை தொடர்நிலைச் செய்யுள் வகையைச் சேர்ந்ததாகும். 'கோவையும் பொருட்டொடர் நிலைச்செய்யுள் எனக் கொள்க' என்பது தண்டியலங்கார வுரை. இத்தொடர்நிலைச் செய்யுள், பெருங் காப்பியம் சிறு காப்பியம் என இருவகை; இவற்றுள் கோவை, சிறு காப்பியமாகும்.

ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவியுள், வித்தார கவியாவான் செய்யத்தக்க நூல்களுள் கோவையுமொன்று ; 'வித்தார கவியாவான் மும்மணிக் கோவையும் பன்மணிமாலையும் மறமும் கலிவெண்பாவும் மடலூர்ச்சியும் முதலாகிய நெடும்பாட்டும், கோவையும் பாசண்டமும் கூத்தும் விருத்தமும் கதை முதலாகிய செய்யுளும் இயலிசை நாடகங்களோடும் கலை நூல்களோடும் பொருந்தப் பாடும் பெருங்கவி எனக் கொள்க' என்பது யாப்பருங்கல விருத்தியுரை. 'யாவையும் பாடிக் கோவை பாடு' என்ற பழமொழி

வழக்கும், இப்பிரபந்தம் பாடுதற்குப் புலமை மிகுதியும் வேண்டும் என்பதைப் புலப்படுத்தும்.

தொண்ணூற்றாறு வகைத் தமிழ்ப்பிரபந்தத்துள் கோவையும் ஒன்று; மிகப் பழமையானது. பாட்டியல் நூல்கள் யாவும் இதற்கு இலக்கணம் கூறுகின்றன.

**கோவையின் இலக்கணம்**

'ஆய்ந்த கலித்துறை தான் நானூறு அகப் பொருள்மேல், வாய்ந்த நற்கோவையாம்' என்பது வச்சணந்திமாலை (௧எ). பன்னிருபாட்டியல் இதை இன்னும் விரிவாய்க் கூறும்:

கோவை என்பது கூறுங் காலை
மேவிய கற்பு களவெனுங் கிளவி
ஐந்திணை திரிய அகப்பொருள் தழீஇ
முந்திய கலித்துறை நானூ றென்ப. (௩௩௧)

களவினும் கற்பினும் கிளவி வகையால்
திணைநிலை திரியாச் செம்மைத் தாகி
நாட்டிய கலித்துறை நானூ றுரைப்பது
கோட்ட மில்லாக் கோவை யாகும். (௩௪௦)

ஐந்திணை தழுவிய அகநிலைக் கோவை
தந்தநா னூறும் தாநகலித் துறையே. (௩௪௧)

எனவே, கோவைப் பிரபந்தம் கட்டளைக் கலித்துறையால் பாடப்பெறுதல் வேண்டுமென்பது விதி. கட்டளைக் கலித்துறையால் மட்டுமான தனி நூல், கோவையொன்று தான் எனவும் கூறலாம். இவ்வாறு கோவையில் பயின்று வந்தமைபற்றி, இக்கலித்துறை கோவைக்கலித்துறை என்றே வழங்கலாயிற்று; வீரசோழியம் இதற்கு இலக்கணமும் இலக்கியமும் உரைக்கின்றது (சூ. ௧௨௪).

கலித்துறை 'நானூறு' என்ற வரையறையானது, திருக்கோவையாரைப் பார்த்தே இலக்கணத்துள் அமைத்துக் கொள்ளப் பெற்றதென்று தெரிகிறது. இதற்கு முன்னிருந்த கோவைகளுக்கு இவ்வரையறை பொருந்துமென்று தோன்றவில்லை. பாண்டிக்கோவையைப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும். இதன்கண், பல துறைகளுக்கு ஒன்று மேற்பட்ட செய்யுட்கள் - எட்டுச் செய்யுட்களுங்கூட - அமைந்துள்ளன. இந்த முறையிலே பார்த்தால், இக்கோவையில் ஆயிரஞ் செய்யுட்கள் இருந்திருத்தலும் கூடுமென யூகிக்கலாம். எனவே, நானூறு என்ற வரையறை இதற்குப் பொருந்தவில்லை ; பிந்தியதேயாகும்.

**பண்டைய கோவைகள்**

இன்று வழக்கிலுள்ள கோவை நூல்களுள் மிகுதியும் பயிலப் பெறுவது, திருக்கோவையார் எனப்பெறும் திருச்சிற்றம்பலக் கோவையார். இதற்கு முன்னும் தமிழில் பல கோவைகள் இருந்தனவென்று ஆங்காங்குள்ள உரைக் குறிப்புக்களால் விளங்குகிறது. பாண்டிக்கோவை மேலே குறிக்கப் பெற்றது. திருஞான சம்பந்தருக்குச் சம காலத்தவனை நெல்வேலி வென்ற சீர் நெடுமாறன் என்னும் பாண்டியன் அரிகேசரி மாறவர்மனைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டது இந்நூல். இவன் காலம் சுமார் கி. பி. 650. தமிழில் முதன்முதல் தோன்றிய கோவை இதுவேயாகும். இந்நூல் முழுதும் இன்று கிடைக்கவில்லை. இறையனார் அகப்பொருள் உரையில் துறை விளக்கத்துக்கு மேற்கோளாக இந்நூற் செய்யுட்கள் எடுத்துத் தரப்பெற்றுள்ளன ; ஆனால் நூற் பெயர் அங்குக் காணப்பெறவில்லை. இதன் செய்யுட்களை எடுத்தாண்டு, நூற் பெயரையும் பெய்து தருவது, களவியற்காரிகை. அன்றியும், செய்வித்தோனூற் பெயர் பெற்றமைக்கு உதாரணமாகப் பாண்

டிக் கோவையை வச்சணந்திமாலை யுரையும் (௬௭) இலக்கண விளக்கப்பாட்டியல் உரையும் (௧௧௬) குறிப்பிடுவதனால்,இந்நூற் பெயர் தெளிவாகும். இறையனா ரகப்பொருளுரை, களவியற் காரிகை யுரை, யாப்பருங்கல விருத்தியுரை ஆகியவற்றால், இந்நூற் செய்யுட்கள் ஏறக்குறை ௩௬௦ கிடைக்கின்றன. நூல் முழுதும் மறைந்து போய்விட்டது. இக்கோவை பாடியவர் குமர சேனாசிரியர் என்பது, யாப்பருங்கல விருத்தி யுரையில் காணப்படும் குறிப்புக்களால் ஊகிக்கலாம்.

தமிழ் முத்தரையர் கோவை என்பதொன்று யாப்பருங்கல விருத்தியிலும் தண்டி யலங்கார வுரையிலும் குறிப்பிடப்பட் டுள்ளது. சேர சோழ பாண்டிய ரென்னும் மூவேந்தர்மீதும் பாடப்பெற்ற முத்தொள்ளாயிரத்தோ டொப்ப, தமிழ் அரை யர் இம்மூவர் மீதும் பாடப்பெற்ற கோவை என்று இதைக் கருதலாம். களவியற் காரிகையுரையில் அரையர் கோவை என்ற நூலின் செய்யுளொன்று காணப்படுகின்றது. இச்செய் யுளிற் காணப்படும் 'தயாபரன் தஞ்சை' என்ற தொடர் சோழனைக் குறிக்கிறதென்றும், இவ்விரு நூல்களும் ஒன்று என்றும் எண்ண இடமுண்டு. இந்நூலும் இன்று கிடைக்க வில்லை.

வங்கர் கோவை என்ற நூலிலிருந்து மூன்று அழகிய செய்யுட்களைக் களவியற் காரிகை எடுத்தாளுகிறது. இந் நூலும், வேறு வழியால் அறிதற்கில்லை.

தேவார திருவாசகங்கள், ஆழ்வார் பாடல்கள் போன்ற அருட்பாசுரங்களிலும், அந்தாதி, கலம்பகம், மும்மணிக் கோவை முதலிய பிரபந்த வகைகளிலும் அகப்பொருட் பாடல் கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஆயினும், மேற்கூறி யவையன்றி, திருக்கோவையாருக்கு முன்னர் வேறு கோவை நூல் இருந்ததாகத் தெரியவில்லை.

ஆலவாய் அழனிறக் கடவுள் அகப்பொருளிலக்கணத்தை அறுபது சூத்திரமாய்ச் செய்து பீடத்தின் கீழ் இட்டான் என்ற கதையானது, தமிழ்ப் புலவர்களுக்கு அகப் பொருளின்மீது அதிக ஈடுபாட்டைத் தந்தது. பின்னர், அழகிய திருச்சிற்றம்பல முடையான் தானே எழுந்தருளி வந்து, மாணிக்கவாசகரைக் கோவை பாடச்செய்து அதைத் தனது அருமைத் திருக்கரத் தாலேயே எழுதிக்கொண்டான் என்ற கதையும் தோன்றிற்று. இது, கோவையினிடத்தில் தமிழ் மக்களுக்குள்ள ஈடுபாட்டை அதிகப்படுத்தியதில் வியப்பில்லை. நூற்றுக் கணக்கான கோவைப் பிரபந்தங்கள் பிற்காலத்தில் பாடப்பெற்றன. பின்னர், திருக்கோவையார் வெறுஞ் சிற்றின்பத்தையே கூறும் நூலென்ற எண்ணம் மிகுதியாகி விடுமோ என்ற அச்சத்தால், பெரியார் ஒருவர் **திருக்கோவையா ருண்மை** என்று அக் கோவைக்கு விளக்க மொன்றெழுதி, அதைப் பேரின்பச் சார்பாக விளக்க முயன்றார் :

**திருக்கோவை யார்**

ஆரணங் காண்என்பர் அந்தணர், யோகியர் ஆகமத்தின்
காரணங் காண்என்பர் காமுகர் காமநன் னூலதென்பர்
ஏரணங் காண்என்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே

என்ற பாடலும் எழுந்தது. எனினும், கோவை என்ற முறையிலே அதனிடத்துப் புலவர்களுக்குள்ள ஈடுபாடு குறைய வில்லை. 'இறையனார் பொருள் விளக்க'மாகப் **பழனிக் கோவை**யென ஒரு நூல் செய்யவந்த புலவரொருவர், தாம் திருக்கோவையாரை அடியொற்றி நூலியற்றி வருவதாகக் கூறுகின்றமை இங்கு உணரத் தக்கது :

மாணிக்க வாசகர் வாய்மலர்ந் தன்றுமன் றுடினர்மேற்
பேணிக் கொளச்சொன்ன கோவையி லேபற்றிப் பின்படர்ந்து

வேணிக்கங் காநதி ஈன்றோர் பழனிச்செவ் வேள்கடம்பிற்
பாணிக்கொள் வேலிற் படர்ந்திந்தக் கோவை பழுத்ததுவே

என்பது அவர் கூற்று.

திருக்கோவையாரை ஒட்டித் தல சம்பந்தமாகப் பாடப் பெற்ற கோவைகளே மிகுதியாகவுள்ளன. திருக்கோவையார் தில்லையைச் சிறப்பிப்பது. மதுரைக் கோவை, திருவாரூர்க் கோவை, வெங்கைக் கோவை, கழுக்குன்றக் கோவை முதலியன சிவபெருமான்மீது பாடப் பெற்றவை. திருப்பதிக் கோவை முதலாயின திருமால்மீது பாடப் பெற்றவை; திருவத்தியூர்க் கோவை என ஒன்று இருந்ததமை இலக்கண விளக்கவுரையால் தெரிகிறது; இந்நூல் இப்போது கிடைக்கவில்லை. பழனிக் கோவை, மயூரகிரிக் கோவை முதலாயின முருகன்மீது பாடப் பெற்றவை. இவற்றின் பெயர்களே இவை தலசம்பந்தமானவை என்பதை யுணர்த்தும்.

**தல சம்பந்தமான கோவைகள்**

அடியவர் மீது பாடப்பெற்ற கோவைக்கு உதாரணம் மாறன் கோவை; நம்மாழ்வார் விஷயமானது.

அரசர்மீது பாடப்பெற்ற கோவைகளும் சில உள்ளன. பாண்டியன் அரிகேசரி மாறவர்மன்மீது பாடப்பெற்ற பாண்டிக் கோவை முன்னமே குறிப்பிடப்பட்டது. மூன்றாம் குலோத்துங்க சோழன் (கி. பி. 1178 - 1216) மீது பாடப்பெற்ற குலோத்துங்கசோழன் கோவை முக்கியமானது. இதன் ஆசிரியர் பெயர் புலப்படவில்லை.

**அரசர் மீதுள்ள கோவைகள்**

'கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்' என்று பாராட்டப் பெற்ற ஒட்டக்கூத்தர் இரண்டு கோவைகள் பாடினரென்று தெரிகிறது. ஒன்று இரண்டாம் குலோத்துங்க

சோழன் (கி. பி. 1133 - 1146) மீது பாடப் பெற்ற குலோத்துங்க சோழன் கோவை. மற்ருென்று, காங்கேயன் என்ற வள்ளல்மீது பாடப்பெற்ற நாலாயிரக் கோவை; துறையொன்றுக்குப் பத்துப் பத்துப் பாடல்களாக நாலாயிரம் பாடல்கள் பாடினர்போலும். இதன் சிறப்பைக் கருதியே, ஒட்டக்கூத்தர் கோவை பாடுதலில் வல்லவர் என்ற பெயரும் ஏற்பட்டிருக்கலாம். ஆனல் இவ்விரு கோவைகளும் இன்று கிடைக்கவில்லை.

**வள்ளல்கள் மீதுள்ள கோவைகள்**

வள்ளல்கள் மீது பாடப் பெற்ற கோவைகளுக்கும் கணக்கில்லை. இவற்றுள் முதன்மையானது, பொய்யாமொழிப் புலவர் பாடிய தஞ்சை வாணன் கோவை. *கருமாணிக்கன் கப்பற்கோவை என்பது, கப்பலூரில் வாழ்ந்த கருமாணிக்கன் என்ற வள்ளல்மீது பாடப்பெற்றது. *உத்தண்டன் கோவை என்பது தையூர் உத்தண்டன் என்ற கார்காத்த குலவள்ளலைச் சிறப்பிப்பது. இவ்வகையைச் சேர்ந்த வேறு கோவைகள் *அசதிக்கோவை, *ஆனந்தரங்கன்கோவை, கரவை வேலன் கோவை என்பன. அசதிக் கோவை ஔவையார் பாடியது, மிகப் பழமையானது; இதிலுள்ள பாடல்கள் சில வழக்கிலுள்ளனவேயன்றி. நூல் முழுதும் இறந்து போயிற்று.

**வருக்கக் கோவை**

இதுகாறும் கூறிய கோவைகள் யாவும் நானூற்றின் மிக்க செய்யுட்களையுடையன. இங்ஙனமின்றி, குறைந்த செய்யுட்களாலான சில வகைகளுமுண்டு. வருக்கக் கோவை என்பது இவ்வகையுள் ஒன்று. இது, தமிழ் நெடுங்கணக்கில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களைக் கொண்டு தொடங்

*இக்குறியானது, இங்கும் பின்னரும் இக்கோவை அச்சாகவில்லை என்பதைக் காட்டும்.

கப்பெற்று அகர வரிசையில் அமைந்த செய்யுட்களைப் பெற்றிருக்கும். இதன் செய்யுட்களின் தொகை ஏறக்குறைய நூறு இருக்கும். இலக்கணப்படி கோவைக்குரிய நானூறு துறைகளுள் சிலவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து அவற்றை இந்நூலில் அமைத்திருக்கும். இவ்வகைக்கு உதாரணமாக, மாறன் வருக்கக் கோவை, வடகரைப் பெரிய சுவாமித் தேவர் வருக்கக் கோவை, பாம்பலங்காரர் வருக்கக் கோவை என்பவற்றைக் கூறலாம். இவற்றுள் அடங்கிய நூறு செய்யுட்களும் முறையாகப் பொருள் தொடர்பு கொண்டவையா யிருக்கின்றன.

இவ்வாறு ஒழுங்கான பொருள் தொடர்பு பெறுமல், தனித் தனித் துறைகளாக மட்டும் நூறு கொண்ட வருக்கக் கோவைகளுமுண்டு. [1]நெல்லை வருக்கக் கோவை, மருதூர் *சவரிப்பெருமாள் வருக்கக் கோவை, முத்துசாமித்தேவர் வருக்கக் கோவை என்பனவற்றைச் சொல்லலாம். இவற்றின் பாடல்களில் முதலெழுத்துக்கள் அகர வரிசை தவறவில்லை: ஆனல், நூலில் தொடர்பான பொருட்போக்கு இல்லை.

**ஒருதுறைக் கோவை**

நானூறு துறைகளே இலக்கணங்கள் குறிப்பிடுகின்றன. ஆனல், பின் வந்த கோவையாசிரியர்கள் அவ்வெல்லையினும் மிகப் பலவான துறைகளைப் படைத்துக் கொண்டு செய்யுள் செய்திருக்கிறார்கள். உதாரணமாக, குலோத்துங்க சோழன் கோவைச் செய்யுள் ருகo ; தஞ்சைவாணன் கோவைச் செய்யுள் சஉரு ; மதுரைக்கோவை சoடு ; ஆரூர்க்கோவை ருகடு ; மயூரகிரிக்கோவை ருடகூ ; திருப்பதிக் கோர்வை ருஉஎ. எனவே, நானூற்றின் மிக்க துறைகளையும் செய்யுட்களையும்

[1] இக்கோவை இலக்கண விளக்கத்தில் எடுத்தாளப்பெற்றுள்ளது.

ஆசிரியர்கள் தங்கள் தங்கள் கற்பனைத் திறத்தால் படைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருதுறைக் கோவை என்ற புது வகையும், இவ்வண்ணமே ஆசிரியருடைய கற்பனைத் திறத்தை விளக்கும் கருவியாக அமைகிறது. குறித்த ஒரு துறைக்கே நானூறு செய்யுட்கள் இயற்றப்பெற்றால், அக்கோவை அத்துறையைக் கொண்ட ஒருதுறைக் கோவையாகிறது. இதற்கு உதாரணம், நாணிக் கண் புதைத்தல் என்னும் துறைபற்றிப் பொன்னுங்கால் அமுத கவிராயர் பாடிய [1]இரகுநாத சேதுபதி ஒருதுறைக் கோவையாகும். வண்டோச்சி மருங்கணைதல் என்னும் துறை பற்றிய *சசிவர்ணன் கோவையும், வெறி விலக்கு என்னும் துறையில் கீழ்வேளூர்க் குருசாமி தேசிகர் பாடிய *தியாகேசர் கோவையும் பிற ஒருதுறைக் கோவைகளாகும்.[2] நூறு பாடல்களால் இது செய்யப்பெறுதலுமுண்டு. நாணிப் புறங்காட்டல் என்னும் துறையில் செண்டத்தூர் ஐயாத்துரைமுதலியார்மீது துரைசாமிப் பாவலர் பாடிய ஒருதுறைக்கோவை ௧0௮ பாடல்களுடையது.

பாண்டிக்கோவையின்கண் ஒரே துறைக்குப் பல பாடல்கள் காணப்படுகின்றமை இங்கே கருதத்தகும். உதாரணமாக, நயப்புணர்த்தல் என்னும் துறையில் ஐந்து பாடல்கள் உள்ளன; பிரிவச்சம் - ௩; இடமணித் தென்றல் - ௪; மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல் - ௮. பிற்காலத்து ஒருதுறைக் கோவைகள் தோன்றுவதற்கு இவ்வமைப்பு வழிகாட்டியா யிருந்திருத்தல் கூடும்.

---

[1]இந்நூலின் அச்சுப பிரதியில் இடையே ௮௯ பாடல்கள் காணப பெறவில்லை.

[2]சீராமலைக் கோவை, ஐயரவர்கள் பதிப்பு, முகவுரை பக்கம் iv. இவ்விரு கோவைகளும் இன்று கிடைக்கக் கூடுமென்று தோன்றவில்லை.

கோவைச் சதகம் என்பது மற்றொரு வகை; தமிழி லேயே பல வகையான சதகங்கள் தோன்றியபின், இவ்வகை நூலொன்று பிறந்ததாகலாம். வடகரைப் பெரியசுவாமித் துரை பேரில் பாடப்பெற்ற கோவைச் சதகம் இதற்குதாரணம். (நூறு பாடல்கள் இருக்கவேண்டிய இந்நூலில் ௬௬ மட்டுமே உள் ளன. எஞ்சியவை, பிரதி சிதலமாய்ப் போனமையால் கிடைக்க வில்லைபோலும்.) இதன் செய்யுட்கள், பொருள் தொடர்பு பெற அமைந்துள்ளன.

**பிற வகைகள்**

தருமைக் குருஞான சம்பந்தர்மீது சண்முகத் தம்பிரான் பாடிய அகப்பொருள் நவமணிக்கோவை (கி. பி. 1900) என் பது ஒரு சிறு நூல்; ஒன்பது அகத்துறைப் பாடல்கள் கொண்டது.

கோவைப் பிரபந்தத்தை மக்கள் பலவகையிலும் விரும் பிப் பயின்று வந்தார்கள் என்று 'தெரிகிறது. பலவேறு கோவைகளிலிருந்து எடுத்த பாடல்களின் தொகுதிகள் பல இன்று கிடைக்கின்றன. *பல கதம்பக் கோவை என்பது அவ்விதம் தொகுத்த அகத்துறைப் பாட்ல்கள் முந்நூறு வரையிலடங் கிய ஒரு தொகுதி. *கோவைக் கோத்து என்பது மற்றொன்று. இதில் முதலிலிருந்து தொடங்கி ஒவ்வொரு துறைக்கும் திருக் கோவையார், குலோத்துங்க சோழன் கோவை, தஞ்சை வாணன் கோவை, அம்பிகாபதி கோவை, *கப்பற் கோவை, ஆரூர்க் கோவை, *முத்துரகுநாதன் விஞ்சைக்கோவை, *சங்கர மூர்த்தி கோவை முதலிய பல சிறந்த கோவைகளிலுள்ள பாடல்களை எடுத்து முறையாகத் தொகுத்து வைக்கப் பெற் றிருக்கிறது. இக்கொத்து முழுமையும் இன்று கிடைக்கவில்லை.

**கோவைக் கொத்து**

கோவையின் துறை ஒவ்வொன்றையும்விளக்கி இரண்டு வரிகளிலே கூறுதலுமுண்டு. இது கொளு என்று சொல்லப் பெறும். இக்கொளு, பழைய கோவையாகிய திருக்கோவையாரில் ஒவ்வொரு செய்யுளுக்கும் அமைக்கப் பெற்றிருக்கிறது. அதை அடியொற்றி வந்த பழனிக் கோவையும் அதைப்போலவே கொளுவுடையது ; கொளு அமைந்த பிற கோவைகள் ஆரூர்க் கோவை, *திருவம்பலக் கோவை, உருத்திரகோடிக் கோவை (சமீப காலத்தில் பாடப்பெற்றது) என்பன.[1]

**கொளு**

இனி, கோவையிலமைந்த பொருள் தொடர்பைச் சுருக்கமாய் இங்குக் கூறலாம். வேட்டைமேற் சென்ற இளங்காளை யொருவன் ஒரு பொழிலகத்தே போய், மலர் கொய்து நின்ற மங்கை யொருத்தியைக் கண்டு காதல் கொள்கிறான். (இது கைக்கிளை.) தன்மீது அவளுக்கும் காதல் உண்மை குறிப்பாலுணர்ந்து அவளை நெருங்கி அவள் மெய்தீண்டிக் கூடுகிறான். பின் ஒருவாறு அவளைப் பிரிந்து தன் இல்லம் அடைகிறான். (இதுகாறும் இயற்கைப் புணர்ச்சி.) மறுநாளும் அதே இடத்துக்குச் சென்று அவள் அங்கு வந்திருக்கக் கண்டு அவளைக் கூடி மகிழ்ந்து பின் பிரிகிறான். (இது இடந்தலைப் பாடு.) பின்னர், நிகழ்ந்தவற்றை அவன் தன் உயிர்ப்பாங்கனிடம் கூறி, அவன்மூலமாய்த் தலைவி பொழிலகத்தே வந்தமை யறிந்து சென்று மீண்டும் அவளோடு கூடுகிறான். (இது பாங்கற் கூட்டம்.) தலைவனைப் பிரிந்து ஆயத்தை யடைந்த தலைவியின் நிலையைச் சோதித்தறிந்த பாங்கி, தலைவனையும் காண்கிறாள். இருவர் காதலையும் உணர்கிறாள். (இது பாங்கி

**கோவையின் பொருள் தொடர்பு**

[1]கொளு அமைக்கப் பெற்றுள்ள வேறு நூல்கள் புறப்பொருள் வெண்பா மாலையும் சித்தாந்த சாத்திரமாகிய சிவப்பிரகாசமும்.

B

மதி யுடன்பாடு.) தழை முதலியவற்றைக் கொண்டுவந்து தலைவன் தலைவிக்குக் கையுறையாகப் பாங்கியிடம் கொடுக்க, அவள் ஏற்க மறுக்கிறாள். பின்பு அவன் தான் காதல் மிகுதியால் மடலேறத் துணிந்தமை கூறுகிறான். கேட்டு அஞ்சிய தோழி, தழையை ஏற்றுத் தலைவியையும் தழை ஏற்கச் செய்கிறாள். தோழி துணையாகத் தலைவன் தலைவியை மீண்டும் அடைகிறான். (இது பாங்கியிற் கூட்டம்.) தினைப்புனங் காத்து வரும் தலைவியைப் பகல் நேரத்தில் தோழி உதவியால் தலைவன் பலமுறை வந்து காண்கிறான். புனங்காவலை விட்டுத் தலைவி இல்லம் செல்வதைத் தோழி அவனுக்கு உணர்த்துகிறாள். (இது காறும் ஒருசார் பகற்குறி.) பகலிலே தலைவன் வந்து ஒழுகும் போது சில இடையூறுகள் நிகழ்கின்றன. (இது பகற்குறி யிடையீடு.) இற்செறிக்கப் பெற்ற தலைவியைத் தலைவன் இரவிலே வந்து காண்கிறான். (இது இரவுக்குறி.) இதிலும் சில இடையூறுகள் நிகழ்கின்றன. (இது இரவுக்குறி யிடையீடு.) இதற்கிடையில் தலைவியிடத்துத் தோன்றிய மாறுபாடுகளைக் கண்ட தாய் முதலாயினோர் அவளைப் பேய் தீண்டியதென எண்ணி முருகனை வழிபட்டு வெறியாடத் தொடங்கவும், தலைவன் தன்னை மணம் புரிதல் வேண்டுமெனத் தலைவி விரும்புகிறாள். (இது வரைதல் வேட்கை.) களவிலுள்ள துன்பத்தைக் கூறித் தோழி, வரையுமாறு அவனுக்குக் குறிப்பாலுணர்த்துகிறாள். (இது வரைவு கடாதல்.) தலைவன் ஒருவாறு சிறிது காலம் பிரிகிறான். (இது ஒருவழித் தணத்தல்.) பின்னர், தலைவி மணத்துக்குப் பரிசம் தரப் பொருள் வேண்டுமாதலின், பொருளீட்டி வருவேனென்று பிரிந்து செல்கிறான். தோழி ஆற்றத் தலைவி ஒருவாறு பிரிவாற்றியிருக்கிறாள். (இது வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்.) தலைவன் மீண்டு வந்து பரிசம் அனுப்ப, தலைவியின் தமர் அதை ஏற்கின்றனர்.

(இது வரைவு மலிவு.) இடையில், தோழி மூலமாக, தலைவியின் காதல் நிலையைச் செவிலி முதலியோர் அறிகின்றனர். (இது அறத்தொடு நிற்றல்.) தலைவியின் தமர், தலைவன் அவளை வரைதற்கு உடன்படாது போகின்றனர். போகவே, அவன் அவளைச் சுரத்தின் வழியே தன்னூர் நோக்கித் தனியே அழைத்துச் சென்று விடுகின்றான். (இது உடன் போக்கு.) இதை அறிந்த செவிலி தலைவியின் மென்மைத் தன்மை எண்ணி வருந்துகின்றாள். (இது கற்பொடு புணர்ந்த கவ்வை.) எங்கும் தேடிக் காணாது மீண்டு வந்து தாயிடம் கூறுகின்றாள். (இது மீட்சி.) சென்ற தலைவன் தன் மனையகத்தே தலைவியை மணஞ் செய்கின்றான். (இது தன் மனை வரைதல்.) உடன்கொண்டு செல்லும் காலத்துச் சில தடைகள் நிகழ்கின்றன. (இது உடன்போக்கிடையீடு.) பின்னர், தலைவன் வரைதலைத் தமர் ஏற்கின்றனர். தலைவன் மணம் புரிகின்றான். (இது வரைதல்.) இருவரும் இன்புற்று இல்லறம் நடத்துகின்றார்கள். (இது இல்வாழ்க்கை ) பின்னர்த் தலைவன் பரத்தைகாரணமாகத் தலைவியைப் பிரிகின்றான். கருவுற்ற தலைவிக்கு ஓர் ஆண் மகவு பிறக்க, மகவு வாயிலாகத் தலைவன் மீண்டு வருகின்றான். (இது பரத்தையிற் பிரிவு.) இதன் பின் ஓதல் காரணமாகவும் (ஓதற் பிரிவு), நாடுகாவல் முதலியன காரணமாகவும் (காவற் பிரிவு), பகைவேந்தரைச் சந்து செய்வித்துப் பகை தணித்தற் காரணமாகவும் (பகை தணிவினைப் பிரிவு), வேந்தனுக்குத் துன்பம் வந்த விடத்துத் துணை செய்தற் காரணமாகவும் (உற்றுழிப் பிரிவு), பிரிந்து சென்று உரிய காலத்தே மீண்டு வருகின்றான். கடைசியில் பொருள் தேடற் காரணமாகப் பிரிந்து சென்று பொருளீட்டி மீள்கின்றான். (இது பொருள் வயிற் பிரிவு.) இருவரும் இல்லறம் நடத்திய பின், முடிவில் துறவறம் மேற்கொள்கின்றனர். (இது துறவறம்.)

இதுவே கோவைப் பிரபந்தத்துளடங்கிய பொதுவான கதைப் போக்கு. பிற்காலத்துக் கோவைகள் யாவுமே நம்பி யகப் பொருளையும், அதற்கிலக்கியமான தஞ்சை வாணன் கோவையையும் அடியொற்றி யமைந்திருக்கும். பாண்டிக் கோவை, திருக்கோவையார், அம்பிகாபதி கோவை, மதுரைக் கோவை என்பன மட்டும் சற்று வேறான அமைப்புடை யனவாயிருக்கும்.

**கோவையின் அமைப்பு**

கோவைகள், கைக்கிளை, களவு, கற்பு என்ற மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டவை. கைக்கிளை என்பது நான்கு செய்யுட்களைக் கொண்ட சிறு பகுதி. மற்றைய இரண்டும் விரிவான அமைப்புடையவை. இவை, மேலே பொருள் தொடர்பு என்ற தலைப்பில் காணப்பட்ட இயற்கைப் புணர்ச்சி முதல் முதல் பொருள்வயிற் பிரிவு ஈறாகவுள்ள முப்பதுக்கு மேற் பட்ட சிறு பிரிவுகளையுடையவை. இப்பிரிவு ஒவ்வொன்றும் கிளவி எனப்படும். (கிளவிகளின் பெயரும் தொகையும் வெவ்வேறு கோவைகளில் மாற்றியும் கூட்டியும் குறைத்தும் வெவ்வேறு விதமாக அமைப்பதுண்டு.) கிளவிகளின் பகுதி கள் துறை எனப்படும். ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு செய்யுளே இருக்கும்; அபூர்வமாக, ஒன்றுக்கு மேற்பட்ட செய்யுட்கள் இருத்தலுமுண்டு.

கூற்றுக்குடையவர்கள் தலைவன், தலைவி, பாங்கி, பாங்கன், செவிலி, முக்கோற் பகவர், நற்றாய், உழையர், பரத்தை, கண் டோர், பாணன், விறலி முதலியோராவர். கூற்றுக்களில் தலைமையானவை தலைவன், தலைவி, பாங்கி ஆகியோர் கூற்றுக் கள்; இவைகளே கோவையுட் பெரும்பகுதியானவை. (திருக் குறள் காமத்துப்பாலிலும் இம்மூவர் கூற்றுக்களே அமைக்கப் பெற்றுள்ளன.) ஏனையர் கூற்றுக்கள் சிறுபான்மை வரும்.

கவி கூற்றாக ஒரு துறையேனும் சில துறைகளேனும் வருதலு முண்டு.

கோவையிலமைந்த தொடர்பான வரலாற்றின் கதைத் தலைவன் கிளவித்தலைவன் என்று கூறப்பெறுவான். இவனது இயற்பெயரைக் கூறுவது மரபல்ல; அவ்வத் திணைக்குரிய பெயர்களாகிய வெற்பன், நாடன், விடலை, ஊரன், சேர்ப்பன் என்பன போன்ற பெயர்களாலேயே இவன் குறிப்பிடப்படு வான்.

கிளவித் தலைவனையன்றி, கோவையில் பாட்டுடைத் தலை வன் என மற்றொரு தலைவனும் உண்டு. நூலுள் எந்தத் தலத்து மூர்த்தி அல்லது எந்த அரசர் அல்லது வள்ளல் சிறப்பிக்கப் பெறுகின்றாரோ அவர் அந்நூலுக்குப் பாட் டுடைத் தலைவர். உதாரணமாக, திருக்கோவையாருக்குத் திருச்சிற்றம்பலவரும், பாண்டிக்கோவைக்கு நெடுமாறனும், தஞ்சைவாணன் கோவைக்கு வாணனும் பாட்டுடைத் தலைவர் கள். இவ்வாறு பாட்டுடைத் தலைவன் இன்றிப் பாடப்பெற்ற ஒரே கோவை அம்பிகாபதிகோவையாகும். பாட்டுடைத் தலைவனின்றிப் பாடப்பெற்ற வேறு கோவை தமிழில் கிடை யாது.

## அம்பிகாபதி கோவை

அம்பிகாபதி கோவை என்பது ருசுஙு செய்யுட்களை யுடைய பழமையான ஒரு கோவைப் பிரபந்தம். பாட்டுடைத் தலைவனாக யாரையும் ஆசிரியர் கொள்ளாமை யால், ஒரு தலைவனையோ அவனுக்குரிய நகர், மலை, ஆறு, மாலை போன்ற அடையாளமொன்றையோ ஒவ் வொரு பாட்டிலும் தவறாமல் பாடவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு இல்லாது போயிற்று. மீண்டும் மீண்டும் ஒரே பெயரைச் செய்யுள்தோறும் சொல்லிவருவதனால் படிப்போ

**நூற் பெயர்**

ருக்கு ஏற்படக்கூடிய சோர்வும் இக்கோவையின்கண் இல்லா மற் போயிற்று.

இந்நூலுக்குக் காப்புச் செய்யுள் காணப்பெறவில்லை. ஆசிரியரே செய்ததாக அவையடக்கச் செய்யுளொன்று மட்டும் காணப்பெறுகிறது. இதனுள், 'அம்பிகாபதி பொன் னடித் தாமரை சூட்டி, அகப்பொருள் அம்பிகாபதி கம் புனைந் தேன்'[1] என்று ஆசிரியர் கூறுகிறார். நூலின் பெயரானது, இச்செய்யுளில் வரும் 'அகப்பொருள் அம்பிகாபதி' என்ற தொடரினின்றும் அமைந்ததோ என்ற ஐயம் இயல்பாய் எழுகின்றது.

ஆனால், நூற்பெயரின் பொருளானது, அம்பிகாபதி பாடிய கோவை என்றே கற்றோரால் நெடுங்காலமாய்க் கருதப் பட்டு வருகிறது. அவையடக்கத்திற் கண்ட குறிப்பும் இக் கருத்துக்குத் துணைசெய்திருக்கலாம். இங்ஙனமாயின், இவ் வாசிரியரான அம்பிகாபதி யார் என்பது ஆராய்தற்குரியது.

**கம்பரும் அம்பிகாபதியும்**

கவிச்சக்கரவர்த்தியான கம்பநாட்டாழ்வாரின் அருமைப் புதல்வன் அம்பிகாபதி என்பது பழங்கதை. "கம்பைநதி பாயும் கம்பநாட்டி லெழுந்தருளிய ஏகம்ப நாதர் என்ற சிவபிரானது திருநாமத்தை முன்னோர் தமக்கிட் டழைத்ததுபோல், கம்பர், தாமும் அம்முறை வழுவாது தம் மகனுக்கு அம்பிகாபதி என்று நாமகரணஞ் செய்தார்." இப் புதல்வனும் இளமையிலேயே சிறந்த தமிழ்ப்புலமை எய்தி னன். "இவர் பெயர்பெற்று வழங்கும் அம்பிகாபதி கோவை

[1] இதன் பொருள்: அம்பிகாபதியாகிய சிவபிரான் திருவடித் தாமரைகளை என் தலையிலே சூட்டிக்கொண்டு, இவ்வகப்பொருள் நூலை அவர் முடிக்கு மாலையாகச் சூட்டுகின்றேன். கம் - தலை.

என்னும் நூலையன்றி வேறு ஏதும் ஓர் நூல் செய்ததாகக் கண்டிலம். பஞ்ச இலக்கணங்களுள் ஒன்ருன அலங்காரமும் இவர் செய்ததாகச் சிலர் கூறுவர்; அது கிடைத்திலது[1]."

இவ்வம்பிகாபதியும் சோழ மன்னன் புதல்வியும் ஒருவர் மீதொருவர் மிக்க காதலுற்றிருந்தனர். இக் காதலைப் பொருத மன்னன், கோபங் கொண்டு, அவனைச் சோதித்தறிய வேண்டி, ஒரு விருந்து செய்து, அதில் தன் மகளையே பரிமாறச் செய்தான். பந்தியிலிருந்த அம்பிகாபதி, அவள் பரிமாறி வரக் கண்டபோது,

இட்டடி நோவ எடுத்தடி கொபபுளிக்க
வட்டில் சுமந்து மருங்கசைய -

என்று பாடத் தொடங்கவும், அருகிலிருந்த கம்பர், அரச குமாரியையே பொருளாக அமைத்து மகன் இப்பாட்டை முடித்துவிடுவானுயின் மன்னனுல் அவனுக்கு அபாயம் வருமென்றஞ்சி,

- கொட்டிக்
கிழங்கோ கிழங்கென்று கூறுவாள் நாவில்,
வழங்கோசை வையம் பெறும்

என்று, தெருவில் கிழங்கு விற்பவளைக் குறிப்பதுபோல, அப் பாட்டை முடித்தார். ஆயினும் அரசன், தான் கொண்ட ஐயந் தெளியானுகி, சிற்றின்பக் கருத்துக் கலவாமல் நூறு பாடல் பாடினுல் அம்பிகாபதியை மன்னித்துவிடுவதாகக் கூறினுன். அவ்வாறே அம்பிகாபதி பாடத் துணிந்து, காப்புக் கூறிப் பாடிவரும்போது, கக பாடல் முடிந்ததும், காப்புச்

[1] தனிச்செய்யுட் சிந்தாமணி, மு. ரா. கநதசாமிக் கவிராயர் பதிபபு பக்கம் ருக.

செய்யுளுடன் நூறென்று கணக்கிட்டிருந்த அரசகுமாரி, உப்பரிகையிலிருந்து எட்டிப் பார்த்தாள். கண்ட அம்பிகாபதி,

சற்றே பருத்த தனமே குலுங்கத் தரளவடம்
துற்றே யசையக் குழையூச லாடத் துவர்கொள்செவ்வாய்
நற்றே னொழுக நடனசிங் கார நடையழகின்
பொற்றே ரிருக்கத் தலையலங் காரம் புறப்பட்டதே

என்று அவளழகை வருணித்துப் பாடத் தலைப்பட்டுவிட்டான். கேட்ட அரசன் கோபமிகுந்து, தான் முன்னமே சூளுரைத் திருந்தபடி அம்பிகாபதியைச் சிரச்சேதம் செய்தான்.[1]

அம்பிகாபதி பாடியனவாக வழங்கும் வேறு தனிச்செய் யுட்கள் பின்வருவன வாகும் :

உருகி உடல்கருகி உள்ளீரல் பற்றி
எரிவ தவியாதென் செய்கேன் - வரியரவ
நஞ்சிலே தோய்ந்த நளின விழிப்பெருமாள்
நெஞ்சிலே இட்ட நெருப்பு.

மாவுறங்கின புள்ளுறங்கின வண்டுறங்கின தண்டலைக்
காவுறங்கின இன்னமென்மகள் கண்ணுறங்கிலள் கையணைக்
கோவுறங்கு கிடைத்தலைக்குல தீபவள்ளை குதட்டநின்
ஆவுறங்கு புகாரசஞ்சல் அஞ்சலென்ன அடுக்குமே.

ஏகா வடமென் னிருகொங் கையின்மேல்
ஆகா வடமா னதறிந திலையே

[1] ‘அம்பிகாபதி பாடிய **பலதுறைக்காரிகை**’ என்ற பெயரோடு நூறு பாடல்களடங்கிய தொகுதியொன்று அச்சிட்டு வழங்குகிறது. அகத் துறைப் பாடல்களும் சிற்றின்பப் பாடல்களும் இதனுள் காணபபடு கின்றன. இவை வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு புலவர்கள் பாடி யன. இவற்றுக்கும் அம்பிகாபதிக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. அம்பிகாபதி பாடியதாக இக்கதையில் சொல்லபபெற்ற பாடல்கள் இன்று கிடைக்கவில்லை.

த்யாகா பரஞ் திசையா னைகளின்
பாகா பரரா சபயங் கரனே.

வீரமுண் டோமதன் கையம்பி ஞல்வெந்து வீழுகைக்கு
நேரமுண் டோவஞ்சி நேர்பட்ட காலையில் நெஞ்சைவிட
பேரமுண் டோசொல ஒண்ணுத காமப் பெருநெருப்புக்
கீரமுண் டோஐய னேஎன்ன பாவம்இனிச் சொல்வதே.

'மாவுறங்கின' என்ற செய்யுள் ஒட்டக்கூத்தர் மாணுக்கனும் அம்பிகாபதியும் சேர்ந்து பாடியதென்று தமிழ் நாவலர் சரிதை கூறும். அம்பிகாபதியைப்பற்றிய இக்கதைகளிலே சிறிதேனும் உண்மையிருக்குமா என்பதும் சந்தேகம். இவ்வம்பிகாபதி இக்கோவை பாடினுன் என்று கூறுதற்குச் சான்று இக்கதைகளிலே இல்லை.

**அம்பிகாபதி யும்தண்டியும்**

தண்டியலங்காரம் செய்த தண்டியாசிரியரின் தந்தையாரும் ஓர் அம்பிகாபதி என்பது, அந்நூற் பிரதிகளில் காணப்படும் சிறப்புப்பாயிரத்தால் தெரியவருகிறது :

திருநதிய மணிமுடிச் செம்பியன் அவையத்து
அரும்பொருள் விளங்க யாபபின் வகுத்தனன்
ஆடக மன்றத்து நாடக நவிற்றும்
வடநூ லுணர்ந்த தமிழ்நூற் புலவன் :
பூவிரி தண்பொழிற் காவிரி நாட்டு
வம்பவிழ் தெரியல் அம்பி காபதி
மேவருந் தவத்தினிற் பயந்த
தாவருஞ் சீர்த்தித் தண்டிஎன் பவனே.

இப் பகுதியானது, காவிரி நாட்டு அம்பிகாபதியின் புதல்வர் தண்டியலங்காரஞ் செய்த தண்டி என்பதைத் தெரிவிக்கிறது. இதுகொண்டு, கம்பர்தம் புதல்வர் அம்பிகாபதி, அம்பிகாபதியின் புதல்வர் தண்டி எனவும் ஆசிரியர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இம்முடிவில் உண்மையுண்டென்று கூறுதற்கில்லை.

ஆயினும், தண்டியலங்கார உரையில் மேற்கோளாக வந்துள்ள இரண்டு பாடல்கள் இங்குக் கருதத் தக்கன. முதலாவது பாடல், கூ0 ஆம் சூத்திர வுரையில் திரிபங்கி என்னும் சொல்லணிக்கு உதாரணமாய்த் தரப்பட்டுள்ள செய்யுள் :

ஆதரந் தீரன்னை போலினி யாயம்பி காபதியே
மாதுபங் காவன்னி சேர்சடை யாய்வம்பு நீண்முடியாய்
ஏதமுய்ந் தாரின்னல் சூழ்வினை தீரெம்பி ரானினியார்
ஓதுமொன் றேயுன்னு வாரமு தேஉம்பர் நாயகனே

இத்திரிபங்கியின் மூன்றும் செய்யுளாகிய 'அம்பிகாபதியே, வம்புநீள் முடியாய், எம்பிரான் இனியார், உம்பர் நாயகனே' என்பது புலவர் அம்பிகாபதியை நினைவூட்டுவதாயுள்ளது. இது உண்மையா யிருக்குமானால், அம்பிகாபதி தண்டியலங்கார வுரைகாரருக்கு முற்பட்டவரா யிருத்தல் வேண்டும்.

மற்றொரு பாடல், இதனுள் கஅ ஆம் சூத்திர வுரையில் சமனிலைக்கு மேற்கோளாய்க் காட்டப் பெற்றுள்ள கட்டளைக் கலித்துறையாகும் :

சோகம் எவன்சொல இதழிபொன் தூக்கின சோர்குழலாய்
மேகம் முழங்க விரைசூழ் தளவங் கொடிஎடுப்ப
மாக நெருங்கவண் டானங் களிவண்டு பாடஎங்குந்
தோகை நடஞ்செயும் அன்பர்திண் தேரினித் தோன்றியதே.

இது, கார்ப்பருவங் கண்டு வருந்திய தலைவிக்குத் தலைவன் தேர் வரவு கூறித் தோழி ஆற்றுவித்தல் என்னுந் துறையிலமைந்துள்ளது. பாட்டுடைத் தலைவன் பெயர் இதனுள் இல்லை. எனவே, இச்செய்யுள் அம்பிகாபதி கோவையைச் சேர்ந்ததா யிருக்குமோ என்ற ஐயம் எழுகின்றது ; அக்கோவையுள் இது காணப்பெறவில்லை. எனினும், இச்செய்யுளில் வரும் 'தோகை நடஞ் செயும்' என்ற தொடரானது,

அம்பிகாபதிகோவை யாசிரியர் அதிகமாய் உபயோகிக்கின்ற தொடர்; 'களியுறு தோகைக் கண நடஞ்செய் சோலை' - கக; 'தோகை பெருநடஞ் செய் சோலை' - கசுக; 'களிதங்கு தோகைக் கண நடமாட....அளிதங்கு சோலை'-உசுரு: என்பவற்றைக் காண்க. எனவே, இச்செய்யுளும் இவ்வாசிரியர் பாடியதாயிருத்தல் கூடும். அங்ஙனமாயின், இவர் தண்டியலங்கார வுரைகாரருக்குக் காலத்தால் முந்தியவராயிருத்தல் வேண்டுமென்ற கூற்று வலியுறுகின்றது.

**வீரை அம்பிகாபதி**

சௌந்தரிய லகரியைத் தமிழிற் பாடிய வீரை கவிராச பண்டிதர் மகன் வீரை அம்பிகாபதி என்பார் இப்பெயர் கொண்ட மற்றொரு புலவர். இவர் வாழ்ந்த காலம் பதினாறாம் நூற்றாண்டு. இவர் செய்த நூல் நெல்லைவருக்கக் கோவை. (இதிலிருந்து ஒரு பாட்டு இலக்கண விளக்கத்தில் மேற்கோளாக வந்துள்ளது.)

அம்பிகாபதி கோவை பாடிய அம்பிகாபதி இம்மூவருள் ஒருவரா அன்றி வேறானவரா என்பது திட்டமாய்க் கூற முடியவில்லை.

**மேற்கோள் ஆட்சி**

அம்பிகாபதி கோவை திருவாரூர் வைத்தியநாத தேசிகரால் பெரிதும் போற்றப்பெற்றுள்ளது. தேசிகர், தம்முடைய இலக்கண விளக்கம் பொருளதிகாரத்துள் அகத்திணையியல் முழுவதையும் நம்பியகப் பொருளையே பெரும்பான்மையும் தழுவி யமைத்திருக்கிறார். எனினும், அதனுட் கூறப்பெற்ற துறைகளையும் பார்க்க மிக அதிகமான துறைகளைத் தாம் அமைத்திருக்கிறார். இங்ஙனம் இவர் அமைக்க வழி காட்டியது அம்பிகாபதி கோவையாகும். திருக்கோவையார், தஞ்சை

வாணன் கோவை, கப்பற்கோவை போன்றவற்றை இவர் துறைகளுக்கு மேற்கோளாகத் தம் உரையில் காட்டிய போதிலும், அவற்றுட் காணப்பெறாத துறைகளுக்கு அம்பிகாபதி கோவையையே மேற்கோள் காட்டுவர். இங்ஙனம் இலக்கண விளக்க வுரையில் ஆளப்பெற்ற அம்பிகாபதி கோவைச் செய்யுட்கள் கக௨.

அம்பிகாபதி கோவைச் செய்யுட்களை எடுத்தாள்கின்ற மற்றோர் ஆசிரியர் சொக்கப்ப நாவலர். தஞ்சைவாணன் கோவைக்கு உரை எழுதி வரும்போது, இவர் அக்கோவையுட் காணப்பெறாத சில துறைகளை நம்பியகப் பொருள் விளக்கத்திலிருந்து எடுத்துக் கூறுகிறார். இவற்றுக்கு மேற்கோளாக இவர் காட்டும் நூல்கள் திருக்கோவையாரும் அம்பிகாபதி கோவையும். இக்கோவையிலிருந்து ௨௨௫, ௩கக, ௩௭௦, ௪௦௮, ௪௭௮ ஆகிய ஐந்து செய்யுட்கள் இவரால் காட்டப் பெற்றுள்ளன.[1]

---

[1] இவ்வுரையில் ௩௭௧ என்ற எண்ணுடன் காணப்பெறும் பின் வரும் செய்யுள் தஞ்சை வாணன் கோவைக் குரியதல்ல; 'பிற செய்யுட் கவி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது:

வரையுமிந் நாளள வெவ்வாறு நீரெம் மடந்தைமுகை
புரையுமென் கொங்கை பிரிந்திருந் தீர்முன் பொருப்பெடுத்தே
நிரையுமிஞ் ஞாலமும் காத்தரு டானன் பதாகையினீள்
திரையும் குயிலும் விடாதெழும் ஓசை செவிமடுத்தே.

இது, 'தலைவனைப பாங்கி வரையுநா ளளவும் நிலைபெற ஆற்றிய நிலைமை வினுதல்' என்ற துறைக்கு மேற்கோள். இததுறைக்குரிய பாடல் அம்பிகாபதி கோவையில் காணப்பெறவில்லை. இதனாலும், இச்செய்யுளில் பாட்டுடைத் தலைவன் பெயர் காணப்பெறாமையாலும், இது அக்கோவைக்குரிய செய்யுளோ என்ற ஐயம் எழுகின்றது.

காலத்தை யறிவதற்கான குறிப்புக்கள் இதனுள் ஒன்றும் காணப்பெறவில்லை. தம் காலத்து வள்ளல், அரசர் முதலி

**காலம்**

யோரையோ பிற செய்திகளையோ இவ்வாசிரியர் குறிப்பிடவில்லை. ஆயினும், இக் கோவையை இலக்கணவிளக்கத்துள் வைத்தியநாத தேசிகர் விரிவாக எடுத்தாளுவதால், இது அவர் காலமாகிய பதினேழாம் நூற்றாண்டுக்கும் முற்பட்டதென்பது தெளிவு. எவ்வளவுகாலம் முற்பட்டதென்பது திட்டமாய்ச் சொல்லவியலாது; நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதா யிருக்கலாம். கம்பர் மகன் அம்பிகாபதி என்றும் அவன் இக்கோவை செய்தான் என்றும் வழங்கும் கதைகளை நம்புதற்கில்லை. ஆயினும், தண்டியலங்கார வுரையில் மேலே காட்டிய இரு குறிப்புக்களும் அம்பிகாபதியையும் இக்கோவையையும் முறையே சுட்டுகின்றன என்று கொண்டால், இந்நூல் அவ்வுரைக்கும் முற்பட்டதென்று கருதலாம். எங்ஙனமாயினும், இது பதினாறும் நூற்றாண்டிக்கு முற்பட்டது என்று மட்டுமே கூறமுடியும்.

இக்கோவையைச் சேர்ந்ததென்று நிச்சயமாய்ச் சொல்லக் கூடிய செய்யுள் ஒன்று இலக்கண விளக்கவுரையால் கிடைக்

**மிகைச் செய்யுள்**

கிறது. பரத்தையர் தன்மையைக்கூறும் சூத்திர வுரையில் (௧௦௨), ௪௮௨, ௪௮௦, ௪௭௯ ஆகிய எண்ணுள்ள அம்பிகாபதி கோவைச் செய்யுட்கள் மேற்கோளாக வந்துள்ளன. அடுத்த சூத்திரமாகிய

பரத்தையர் காதற் பரத்தையைப புகழ்தலும்
தம்மை இகழ்தலும் தம்முளுங் கூறுப (௧௦௩)

என்பதன் உரையில், ‘ பரத்தையர் காதற் பரத்தையைப்

புகழ்ந்து தம்மை இகழ்தற்கு' மேற்கோளாகப் பின்வரும் செய்யுள் தரப்பட்டுள்ளது :

*நிணைகாணும் நன்னிதி யன்னானைத் தன்வசஞ்*
*செய்தவஞ்சி*
*துணைகாணும் மாமுலைத் தோற்றங்கண் டீர்அந்தத்*
*தோன்றலம்பொற்*
*பணைகாணுந் திண்புயம் புல்லாது வீணிற்*
*பருத்தகொங்கை*
*யிணைகாள் உமக்கிந்த மேம்பா டுறுவ*
*தியல்பலவே.*

இககட்டளைக் கலித்துறையில் பாட்டுடைத் தலைவன் பெயரெதுவும் காணப்படாமையாலும், இதன் முன்னர் வந்துள்ள செய்யுட்கள் வரிசையாக அம்பிகாபதி கோவையாக இருத்தலாலும், இதுவும் அம்பிகாபதி கோவைச் செய்யுளொன்றே எண்ணத் தோன்றுகிறது. ஆனால், இக்கோவையுள் இந்தச் செய்யுளும் இதன் துறையும் காணப்பெறவில்லை. ஆயினும், பல ஏட்டுப்பிரதிகள் கிடைத்து அவற்றை ஆராயின் இச் செய்யுளையுந் துறையையும் அங்கு ஒருகால் காணவுங் கூடும். இது, இக்கோவை ௪௮௨ ஆம் செய்யுளின்பின் சேர்த்துக் கொள்ளுதற்குரியது.

ஆசிரியரைப் பற்றிய குறிப்புக்கள் நூலினுள் கிடைக்காமற் போயினும், வேறு செய்திகள் பல புலப்படுகின்றன.

**நூலாராய்ச்சி- தெய்வங்கள்**

சிவபிரானைப்பற்றி இவர் கூறுபவற்றால் இவர் சைவ சமயத்தவரென்பது தெளிவு. அவையடக்கத்தில் சிவபிரானை வணங்குகிறார். சிவபிரானது கொன்றைமாலையையும் (௪௮, ௫௩, ௩௧௫, ௫௧௮), செஞ்சடையையும் (௭௮, ௫௩௮) போற்றுகிறார்; முடிமேலணிந்த மதியையும் கங்கையையும் குறிப்பிடுகிறார் (௪௩௩,

கக0). உமையொரு பாகமான வடிவத்தைக் கூறுகிறார் (எஅ, உஅஉ). தவஞ் செய்தது, மன்மதனை எரித்தது, புர மெரித்தது, எட்டுக் கை தரித்திருப்பது, சூரியன் வலக் கண்ணாக இருப்பது, விடமுண்டது போன்ற புராணக்கதைகளைக் குறிப்பிடுகிறார். மதுரையில் சங்கப்பலகை தந்தது, அருங்கலை தந்தது, பலகைமுன் பதங்கள் வருந்த நின்றது, பாணர்பின் சென்றது என்ற செய்திகளையும் உரைக்கிறார்.

விநாயகர் முருகனுக்காக வள்ளிமுன் யானை வடிவத்தோடு வந்ததைக் கூறுகிறார் (களகூ). முருகனைக் கூறும்போது, அவன் இளமைக் கோலத்தையுல், ஆறு முகத்தையும், பன்னிரு கையையும், ஆகத்து நூலையும், மயில் வாகனத்தையும், வேலையும், அவன் வள்ளிக்கு அஞ்சலென்றதையும் சொல்லுகிறார். திருமால், பிரமனுக்கும் மன்மதனுக்கும் தந்தை என்பதையும், திருமகளை மார்பில் தரித்தது, சக்கரமேந்தியது, ஆலிலையில் துயில் கொண்டது, வாமன வடிவு கொண்டது, உலகளந்தது, துளவணிந்தது, கடல் கடைந்தது, குன்றெடுத்தது, சங்கு ஏந்தியது, கஜேந்திரனுக்கு அருளியது போன்ற செய்திகளையும் கூறுகிறார். சனி பகவான் சூரியன் புதல்வன், காக்கை வாகனமுடையவன் என்பவற்றைக் குறிப்பிடுகிறார்.

**தமிழ்**

தமிழ் மொழியை இவர் பலவிடத்தும் பாராட்டி யுரைத்தல் அறியத்தக்கது. முச்சங்கமிருந்து தமிழ் வளர்த்த செய்தியை, 'முச்சங்க வண்தமிழ்போல் மொழி' என்று குறிப்பிடுகிறார். அகத்தியர் இருப்பிடமான பொதிய மலையில் தென்றலோடு தமிழும் பிறந்தது என்ற கருத்தை, 'மந்த மாருதம் வண்தமிழ் நாறும் மலைய வெற்பு' என்று வெளியிடுகிறார். தலைவன் மெலிவுக்குக் காரணத்தைப் பாங்கன் வினவுமிடத்து, 'கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ' என்று திருக்

கோவையார்' கூறுகிறது. அக்கருத்தையே இவ்வாசிரியர், 'தெய்வப் பாவலர் தாம், முன் செய்த நூலின் முறை தெரிந்தோ....என் செய்ததோ அறியேன் திருமேனி இறைவனுக்கே' என்கிறார். தெய்வப் பாவலர் முன் செய்த நூல் என்றது, இறையனார் செய்த களவியலைக் குறிக்கிறதென்று கருத இடமுண்டு.

உடல் மெலிந்தது, 'ஏழிசைச் சூழல்புக்கோ' என்று பாங்கன் திருக்கோவையாரில் கேட்பதோடொப்ப, இந்நூலில், தமிழ் இசை கேட்டு உருகிவிட்டாயோ என்று பொருள் படும்படி, 'தென் செய்த பண்ணின் திறமறிந்தோ' என்று கேட்கிறான். பண் என்று பொதுவாய்க் கூறாமல், இவ்வாசிரியர் தமிழ்ப்பண் என்று சிறப்பித்துக் கூறுகிறார்; 'செய்ய தண் தமிழ் தோய் பண்போல் இனிய பணிமொழிச் செந்தளிர்ப் பைந்தொடி' (௪௧௨) என்பது காண்க. பஞ்சுரம் என்ற பண், செவ்வழி யாழ் என்பன இதனுள் கூறப்படுகின்றன.

**தமிழ்ப் பண்**

திருக்குறளை எடுத்தாளாத ஆசிரியர் யாரும் இல்லை என்று கூறலாம். இக்கூற்றுக்கு இவ்வாசிரியரும் விலக்கல்லர். 'நோய் நாடி நோய் முதல் நாடி அந்நோய் தணிக்கும் வாய் நாடி வாய்த்த மருந்து செயல்' (௩௪௯) என்ற பாடலில் ௪௯அ ஆம் குறள் அப்படியே வந்திருப்பது வெளிப்படை. 'ஊழிற் பெருவலி என்று மின்றால்', 'தெய்வந் தொழாள்' என்பன போன்ற தொடர்கள் இங்ஙனமே இவற்றுக்கு நேரான குறட்பாக்களை நினைவூட்டுகின்றன.

**தமிழ் நூல்கள்**

மடலைக் குறித்துக் கூறும்போது ஆசிரியர், 'தலையாய நண்புடையார் தளர்ந்தார் உயிர் தாங்குதற்கோர் நிலை' என்று

பனையைக் குறிப்பிடுகிறார். இது, 'நட்பில்....தலையாயார், எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே, தொன்மையுடையார் தொடர்பு' என்ற நாலடியார்ச் செய்யுளை எடுத்தாளுகிறது. 'மருவிய அப், பேயின் திறத்தும் பிரிதல் இன்னா என்று பேசுவரே' என்ற தோழியின் கூற்று, 'இன்னாதே, பேஎயொ டானும் பிரிவு' என்ற பழமொழி நானூற்றுச் செய்யுளை உட்கொண்டது. 'அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும், முழையுறை சீயமும் என்றிவை நான்கும், இளைய எளிய பயின்றன என்றெண்ணி, இகழின் இழுக்கந் தரும்' என்ற ஆசாரக் கோவைச் செய்யுள் (அ௪) இதனுள் 'அளை தாழ் அரவும் அரியும்வெந் தீயும்எங்ஙன், இளைதாயினும் கொல்லும் என்பது....கேட்டிலையோ' என்ற பாட்டில் அப்படியே பெய்யப் பெற்றிருக்கிறது.

அம்பிகாபதி கோவையாசிரியர், துறைகளிற் கூறும் செய்திகளுக்குப் பெரும்பான்மையும் சங்கநூற் செய்திகளையே எடுத்தமைத்துக் கொள்ளுகிறார். சங்க நூற் கருத்துக்களையும் தொடர்களையுமே இங்கு விரிவாகக் காணலாகும். 'முக்கோற் பகவரை வினுதல்' என்ற துறையில் வரும் செய்யுள் (௪00) கலித்தொகை ௯ ஆம் பாடலின் தரவுப் பகுதியை அடியொற்றி வந்துள்ளது. அங்ஙனமே கலி. ௧அ, ௧௯ ஆம் பாடல்களையும் இந்நூல் ௫௪௧, ௫௪௩ ஆம் பாடல்களையும் முறையே ஒப்பு நோக்குக. 'ஊரார் புதுப்புனலும், கானமர் புள்ளும் கடவுளும் வாசியும் காய்சினமால், யானையும் ஆவர் கொல்லோ நாளும் நாளும்வந் தெங்கையரே' என்ற பாடல் (௫௪0) மருதக் கலியிற் கண்ட செய்திகளைத் தொகுத்துக் கூறுகிறது.

'கொடியிடம் புகுதல்' என்னும் துறையில், தலைவி மாதவிக் கொடியைச் சார்ந்து நின்றாள் என்று கூறுமிடத்து,

'மாதவி பெற்ற மணிமேகலை நம்மை வாழ்விப்பதே' என்ற தலைவன் கூற்று, மணிமேகலை என்ற காப்பியத்தைத் தொனி யால் புலப்படுத்துகிறது. இங்ஙனமே, 'ஆவியை....வன்னிக் கடவுள் வலம் வந்து கோடல் மரபியலே', 'வழுவுவரோ பெரியோர் தம் மரபியலே' என்ற தொடர்கள் பொருளிலக் கணத்திலுள்ள மரபியல் என்ற பகுதியை நமக்கு நினைவூட்டு கின்றன.

**சோழ பாண்டியர்**

**பா**ண்டியனையும் சோழனையும் இரண்டிடங்களில் குறிப் பிடுகிறார். 'செழியர் வெற்றிக் கயல் பொருங்கண்', 'தென்னன் மீனஞ்சு கண்ணி' என்ற தொடர்கள் பாண் டியனது மீனக் கொடியைக் குறிக்கின்றன. 'பதங்கம் பழிச்சல்' என்ற துறையில், 'உதவி புனல் நாடன் என்றே என்கண் நல்கியதால்' என்ற தலைவன் கூற்று, சோழனது பெயர்களுள் ஒன்றைக் குறிக் கின்றது. சோழன் நதியாகிய காவிரியின் பெயர், 'புணையின்றி யார் கடப்பார் பாய்புனற் பொன்னியையே' என்ற பழ மொழியில் வந்துள்ளது.

**புராண கதைகள்**

**அ**கத்தியர் கடல் நீரை யுண்டது, அனுமன் கடலைத் தாண்டியது, சஞ்சீவி மலை கொணர்ந்தது, கஜேந்திரனுக்குத் திருமால் அருள்செய்தது, திருமகள் பாற் கடலிற் பிறந்தது, திருமகள் கையில் பங்கயம் ஏந்தியிருப்பது, சிபிச்சக்கரவர்த்தி புறவுக் குதவி செய்தது, மார்க்கண்டனுக்குச் சிவபிரான் அருள் புரிந்தது, மேருமலை சிவபிரானுக்கு வில்லாக அமைந்தது என்பனபோன்ற புராண கதைகளை இதனுள் காணலாம்.

மணம் வேண்டித் துர்க்கையை வழிபடுதல், புதல்வன் பிறந்தபோது அந்தணர்க்குப் பசுவும் பொன்னும் தான மளித்தல், மணம் விரும்பி ஆடவர் பெண்ணுக்குப் பரிசம் அளித்தல், தலைவன் வரக் கரையும் புள்ளுக்குப் பலி நேர்தல், மடலேறுவோர் கிழியேந்தி வெள்ளெருக்கும் வெண்ணீறும் அணிதல், வேங்கை பூத்தலும் திங்கள் ஊர்கொண்டமையும் மணஞ் செய்தற்குரிய காலமெனல், பரிசிலர் புதிய பண்ணும் பாவும் புனைந்து பாடியாடல், அமரருக்கு அவியேற்றல், பெதும்பையைப் பின்முறை வதுவை செய்தல், பரத்தையரோடு புனலாடல், பல்லி சொல்லலும் பெண்களுக்கு வாமந் துடித்தலும் நன்மைதருமெனல், மகளிர் குயிலழைத்தும் வரை எதிர் கூவியும் மணற்சோறட்டும் விளையாடுதல், பந்தாடுதல், சிற்றி லிழைத்தல், குறவர் வேங்கைத் தழையை உடுத்தல் என்பன இந்நூலுட் காணப்பெறும் பழக்கவழக்கங்களுட் சில. இத னுளமைந்த பழமொழிகளையும் வழக்குத் தொடர்களையும் உசுக ஆம் பக்கத்திலுள்ள பழமொழியகராதியில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்

அருஞ்சொற்கள் சிலவற்றை இவ்வாசிரியர் அடிக்கடி உபயோகிக்கிறார். தாரை என்பது அத்தகைய ஒரு சொல்; ஒழுக்கம், ஒழுங்கு, கூர்மை, வழி, குதிரையின் கதி என்ற பல பொருள்களில் இச் சொல் வந்திருக்கக் காணலாம். மழை என்பது மற்றொரு சொல். இச்சொல்லினிடத்து இவருக்கு விருப்பம் அதிகமெனத் தெரிகிறது. மழைக்கண், மழைக்குழல், மழைக்குன்றவாணர், மழைமதம் என்றெல்லாம் பலவகையாலும் தொடர்புபடுத்தி மழை என்ற சொல்லை ஆளுகிறார். தலைவனை அடிக்கடி மழைவள்ளல் என்று கூறுவார். தேவை

அருஞ் சொற்கள்

(விருப்பம்), கூண்டு (கூடி), சரி (வழி) என்பன இப்படிப்பட்ட வேறு சொற்கள்.

ஆண் மயில்கள் கூட்டமாக நின்று நடமாடுதலைப் பெரிதும் பாராட்டிக் கூறுகிறார். 'தோகைக்கணம் நடமாடல்' என்பது இவர் அடிக்கடி கூறும் தொடர்; 'களியுறு தோகைக் கணம் நடஞ்செய் சோலை', 'களிதங்கு தோகைக் கணம்நட மாட' என்பர். பெடை கண்டு களிக்கும்படி தோகை ஆடுதலை, 'பெடைநின்று காண உடன்நின்று தோகை பெருநடஞ் செய் சோலை' (௧௯௧) என்பர்.

அதி தூரத்தர், ஆவலி, காமானலம், சந்தாடவி, சோகானலம், துத்திநாகச் சிகாமணி, பங்கேருகம், பற்பராகம், பாரணம், பூரணம், மாதங்கம், வியங்கம் என்பன முக்கியமான வேறு சொற்கள்.

செய்யுளின் பாடம் சிற்சில விடங்களில் தெளிவாகாமையால், பொருள் கருகலாயுள்ளது; ௩௩, ௩௪, ௨௧௫, ௪௪௩, ௪௭௦ என்ற செய்யுட்களைப் பார்க்க. பிரதிகள் கிடைப்பின், பாடம் திருந்திப் பொருள் தெளிவாதலுங் கூடும்.

**துறைகள்**

வேறெந்தக் கோவையினும் விட இக்கோவையே செய்யுள் அளவில் மிக நீண்டதாயுள்ளது. இவ்வாசிரியர் புதிய புதிய துறைகளை யமைத்து நூலை விரித்திருக்கிறார். ஆயினும், பிறர் விரிவாகக் கூறியுள்ள சில இடங்களை இவர் சுருக்கிக் கூறியிருப்பதும் இங்கு அறியத்தக்கது. 'அவ்வகை ஏழிலும் ஐயமுற் றோர்தல்' என்பது இதனுள் ஒரே துறையாகவுள்ளது (௭௪). ஆனால் இதுவே பிற கோவைகளில், நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினை மறத்தல், செலவு, பயில்வு என்னும் ஏழு துறைகளாக விரித்துக் கூறப்படும். தாய் துஞ்சாமை, நாய் துஞ்சாமை, கோழி குரல் காட்டல், ஊர் துஞ்சாமை, காவலர்

கடுகுதல், கூகை குழறல், நிலவு வெளிப்படுதல் என்ற ஏழு துறைகளுக்குப் பதிலாக இதனுள் இரண்டே பாடல்கள் அமைக்கப் பெற்றுள்ளன (உகூ௫-கூ). ஓதற் பிரிவு, காவற் பிரிவு, பகை தணிவினைப் பிரிவு, உற்றுழிப் பிரிவு ஆகிய கிளவிகளின் முடிவில், 'தோழி ஆற்றுவித்தல்' என்ற துறையொன்று பிற கோவைகளிற் காணப்படும். இக்கோவையுள் அத்துறை இல்லை. பிற கோவைகளில் கவிகூற்றாக ஒரே துறை இருக்கும்; இக்கோவையில் பலதுறைகள் கவிகூற்றாகவுள்ளன.

'காமஞ் சான்ற கடைக்கோட் காலை, ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி, அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும், சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே' என்ற தொல்காப்பியச் சூத்திரத்துக் கிணங்க (பொருள். கக௦), இந்நூலின் இறுதியில் இல்லறம், துறவறம் என்பவற்றை ஆசிரியர் இரண்டு செய்யுட்களால் கூறுவது அறிந்து மகிழ்தற்குரியது. (௫கூ௩ஆம் பாடல் உரை பார்க்க. 'தெவ்வென்ற வேலனும் பூவையும் இல்லறம் செய்துமுற்றி, அவ்வன்பி னோடும் துறவறந் தாங்க அமைந்தனரே' - மாறன் வருக்கக் கோவை இறுதிச்செய்யுள்.)

ஆனந்தரங்கன் கோவை என்ற நூல், அம்பிகாபதி கோவையிலுள்ள தொடர்களையும் சொற்களையும் செய்திகளையும் அப்படியே எடுத்தமைத்துக்கொண்டிருக்கிறது.

**சில நயங்கள்**

தலைவியின் ஒழுக்கத்தைத் தோழி தலைவனுக்குக் கூறும் செய்யுள் அறிந்து இன்புறத் தக்கது; 'கண்டால் எழல்; தொழல்; கண்முன் நில்லாமை; சொல்வதுண்டாயின் ஒன்று பலவுக்குரைத்தல்; உரையன்றியே குறிப்பாள் நம் குலக் கொடி' என்பது அவள் கூற்று.

காதலனோடு அருஞ்சுரஞ் சென்ற தன் மகளை எண்ணித் துயருறுகின்ற நற்றாய், ''மலர்ப் பொன்போல் அரிய என்

பாவையை அருஞ்சுரம் போக்கி இங்ஙன் அன்போடு அழுங்குகின்றேன் ; அயல் வாழும் அரிவையரே, என்போல நீரும், காதல்கொண்டு ஏதிலன்பின் போம் மகவைப் பெறுதொழிவீர்' (௩௯௪) என்று அரற்றும்போது, அவள் நம்முடைய பரிவையுமே பெற்று விடுகிறாள். தலைவன் பொருள் தேடிச் சென்ற பின், பிரிவாற்றாது வருந்துகின்ற தலைவி, 'மட நெஞ்சமே, இறந்தால் இனிப் பெண்பால் பிறவு ஆகா எழுமையும்' (௫௪௫) என்று தன் நெஞ்சொடு கூறி இரங்குவது, வாழ்க்கையிலுள்ள இரங்கத்தக்கதொரு நிலையைச் சுட்டிக் காட்டுகிறது.

பிரிந்து சென்ற தலைவன் கனவிலே தலைவியைக் கண்டு, நனவில் அவளை அடையப் பெறாமையை எண்ணி எண்ணிக் கனவின்மீதே கோபங்கொள்கிறான். 'கனவே, உனக்கும் கனவு எய்துமால் ஒரு காலத்திலே' (௫௫௧) என்று அவன் கூறும்போது, அவனுடைய காதல் வெறியைத் தனி உருவத்தோடு காண்கிறோம்.

வேழமும் கலையும் வினவி வந்த தலைவனைத் தோழி பரிகசிக்கும் பகுதி நகைச் சுவை மிகுந்துள்ளது. 'முன்னமே இவர் தழையைக்கொண்டு யானையை எய்தார். அந்த யானை பின்னர் மானாயிற்று. அந்த மான் இனிக் குறுமுயலாகுனும் ஆகும். அம்பெய்தலில் இவருக்கு ஒப்பவர் வேறு யார்!' (௯௨) என்ற அவள் கூற்று ஏளனத்தின் உச்ச நிலை. காதல் கொண்ட தலைவனைப் பழித்துரையாடிய பாங்கனுக்குத் தலைவன் நகையும் ஆத்திரமும் கலந்த பாவத்தில், 'கொன்றைவேணியனை சிவபிரான் மன்மதன் அம்பில் ஏவுண்ட நாள், அவனது தவம் குலையாவகை இடித்துரைப்பதற்கு, எனக்கு வாய்த்த பாங்கனை உன்னைப்போல் ஒருவரும் அச்சிவபிரானுக்கு வாய்க்கவில்லையே!' (௪௮) என்று கூறுவதும் அங்ஙனமே அறிந்து இன்புறுதற்குரியது.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 14 | குறிப்புறிதா | குறிப்பரிதா |
| 4 | 6 | இல்லாத உற்பலம் | இல்லாத முகம் |
| 7 | 7 | நீட்டிததல் | நீட்டிததால் |
| 10 | 28 | கருமை | கருமை |
| 18 | 21 | அவன் நகை | அவள் நகை |
| 19 | 26-7 | கனமுடையதா | மேகம் |
| | 27 | அல்லவா | அல்ல |
| 21 | 3 | தெறிநதோ | தெரிந்தோ |
| 26 | 18 | குறிவழியே | குறியிடததே |
| 28 | 26 | சாமளமே,சாயல்மயிலே, | சாமளமே மயிலே, |
| 29 | 17 | பின்னி | மாறுபட |
| 32 | 20 | எழிலும் | ஏழிலும் |
| 42 | 19 | தலைவியை | தலைவியையும் பாஙகியையும் |
| | 20 | பெணணே | பெண்களே |
| 43 | 12 | திண்கோடிரலை | திண்கோட்டிரலை |
| 45 | 4 | பல இருஞ் | பலவு இருஞ் |
| 46 | 3 | அன்பிற | அம்பிற் |
| 56 | 21 | தறம் | தரும் |
| 59 | 24 | அவன் | அவர் |
| 60 | 27 | வெற்பும் | வெற்புப் |
| 62 | 9 | மல்ரவதாத | மலாவதாத |
| 64 | 4 | பாஙகிதலைவியைமுனிதல் | தலைவி பாஙகியை முனிதல் |
| 65 | 22 | கஙகமும் | சஙகமும |
| 66 | 15 | செயலயல் | செயலையின் |
| | 17 | தருமோ | தருமே |
| 68 | 11 | நெஞ்ச மிக்கதுவாய்ச் [சோதல் | நெஞ்சம்மிக்கது வாய்சோர் [தல் |
| 78 | 3 | புவனம் | புனம |
| 81 | 12 | தேனே | தேனேய் |
| | 19 | நுதலாரொர் | நுதலாரோர் |
| 92 | 18 | நாதல் | காதல் |
| 94 | 4 | கானும் | காலும் |
| | 13 | கொள்ளது | கொள்ளாது |
| 97 | 23 | கடலுள்ளே | கடல் வெள்ளத்துள்ளே |
| 99 | 13 | தலைவன் | தோழி |
| | 16 | பாாததிருந்தவளானதலைவி | பார்த்திருந்தவரான தலைவர் |
| | 17-8 | தலைவர்; நான் என்றவாறு | தலைவர் என்றவாறு |

| | | | |
|---|---|---|---|
| 99 | 18 | பாங்கியை | பாங்கி தலைவியை |
| 105 | 6 | காயில் | சாயின் |
| 117 | 6 | இவ்ள் | இவள் |
| 123 | 14 | வந்தெனுள்ளம் | வந்தென் வண்ணம் |
| | 19 | ஆறறுவிததுத | ஆறறுவித்துழித் |
| | 29 | வைகறுஞ் | வைகலுஞ் |
| 126 | 14 | தோ | தேரில் |
| | 18 | அணடா | வண்டர் |
| 127 | 15 | கூடலாற | கூடலார் |
| 128 | 5 | சோவதென் | சோர்வதென் |
| | 10 | தலைவியை | கடறதெய்வமாகியவருணனை |
| 131 | 24 | நிழல்வளைந்த | நிழல அளைந்த |
| 135 | 8 | காரகால | தார்கால |
| 140 | 3 | கொல | சொல் |
| 143 | 10 | சென்ற | செறற |
| 151 | 5 | அறிகின்றிலேல்ன் | அறிகின்றிலேன் |
| | 9 | பொய்ப்படுவன் | மெய்ப்படுவன |
| 153 | 18 | மெய்நாணும் | மெய்ந்நாணும் |
| | 29 | மறப்ப | மறைப்ப |
| 162 | 23 | அடமாக் | அடல்மாக் |
| 169 | 4 | யாக | யாகம் |
| | 8 | போயினன் | போயினள் |
| 170 | 26 | விதியைச் | விதியைத |
| 173 | 17 | மைய்யோ | மையோ |
| | 22 | வாயாபின் | வாயாயின |
| 174 | 13 | மருவில் | மறுவில் |
| 184 | 20 | தணணருங | தணணறுங |
| | 23 | தாய் | தமையர் |
| 189 | 6 | கோணுக | கோணுத |
| 190 | 9 | அறிந்தஙகு | அறந்தஙகு |
| | 11 | தகுதி | பதவி |
| | 13 | என்று | என்றும் |
| 196 | 10 | விருந்தும் | விருந்து |
| 197 | 9 | குறலானும் | குரலானும் |
| 201 | 20 | நோக்கர் | நோக்கார் |
| 204 | 2 | புதல்வனைப் பெற்றமை | கருப்பந் தரித்தமை |
| | 19 | வெள்ளனி | வெள்ளணி |
| 208, 209-28, 5 | | வரும்புறமோ | வறும்புறமோ |

# அம்பிகாபதி கோவை

### அவை யடக்கம்

### கட்டளைக் கலித்துறை

**அ**ருளம் பிகாபதி பொன்னடித் தாமரை சூட்டிஅகப்
பொருளம் பிகாபதி கம்புனைந் தேன்இப் புனைந்தசெஞ்சொற்
றெருளம் புலவர்முன் செப்பிய போதுள தப்புரையார்
மருளுங் குழவி மழலைக்கென் றேபொருள் மற்றிங்கன்றே.

(**குறிப்புரை**) அம்பிகாபதி - சிவபெருமான். சூட்டி - என் தலை யிலே அணிந்து. அகப்பொருள் அம்பிகாபதி கம் புனைந்தேன் - இக் கோவை மாலையை அவர் முடியில் சூட்டினேன் ; கம் - தலை. தெருளப் புலவர் - அறிவுள்ள புலவர். தப்புரையார் - குற்றம் பாராட்டார். குழவி மழலைக்கென்றே பொருள் : ‘ தாம் பயந்த புதல்வர் வாயில், கூடுமொழி மழலையொடு குழறி ஒன்றும் குறிப்பறிதா யிடினும்மிகக் குலவிப் போற்றி, மாடுநமக் கிதுஎன்று கொண்டு வாழ்வார் அதுபோல மன்னு தமிழ்ப் புலமையோர்என், பாடுகவிக் குற்றங்கள் பாரார் ’ - **சிவஞான சித்தியார்** அ. ‘ யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா, பொரு ளறி வாரா ஆயினும் தந்தையர்க்கு, அருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை, என்வாய்ச் சொல்லும் அன்ன ’ - **புறநானூறு** கூ௨.

# நூல்

## க. கைக்கிளை

கைக்கிளை - ஒருதலைக் காமம். அது, ஆண்பாற் கைக்கிளை பெண்பாற் கைக்கிளை என இருவகைப்படும். அவற்றுள் இது ஆண்பாற் கைக்கிளை.

### 1. காட்சி

**மா**வின் கொழுந்தளிர் ஈன்றுபொற் கோங்கிடை வந்தரும்பி
மேவும் கமல மலர்ந்தல்லி வாய்விம்மு தேன்பொதிந்து
தாவும் சிறைவரி வண்டினம் கொண்டு தழைஅவிழ்பூங்
காவின் புறம்படர் வல்லிகண் டேகண் களிகொண்டதே.

(உரை) தலைவன் தலைவியைக் காணுதல். மாந்தளிர் : மேனி. கோங்கரும்பு : முலை. கமல மலர் - முகம். அல்லி : வாய். சிறை - சிறகுடைய. வண்டினம் : கண்கள். கா - சோலை. படர் வல்லி - படர்கின்ற கொடியாகிய பெண்.

### 2. ஐயம்

**தி**ருவோ வரையுறை தெய்வங்கொ லோதெண் திரையமுதின்
உருவோ வளர்கொல்லி ஓவிய மோஉயர் வானிடையில்
வருவோர் சிலவிஞ் சையர்மக ளோஅன்றி மானிடமோ
தருவோடு வல்லி தழுவுந்தண் சாரலில் தாழ்குழலே.

(உரை) இப்பெண் தெய்வ மகளோ மானிட மகளோ என்று தலைவன் ஐயுற்றுக் கூறுதல். திரு - இலக்குமி. வரையுறை தெய்வம் - வரையர மகள். திரை அமுதின் உரு - நீரர மகள். திரை - அலை. கொல்லி ஓவியம் - கொல்லிப் பாவை; தேவருக்கும் அசுரருக்கும் போர் நடந்த காலத்தில், திருமகள் கொல்லிப் பாவை வடிவுகொண்டு, போர்க் கோலத்தோடிருந்த அசுரர் மோகித்து விழும்படி ஆடினாளாம்; இப்பாவையின் வடிவத்தைத் தேவர்கள் கொல்லி மலையிலே அமைத்து வைத்தார்கள்; இது கண்டோரைத் தன் வசப்படுத்தும் மோகினித திறம் வாய்ந்தது. ‘பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரை, பூதம் புணர்த்த

புதிதியல் பாவை' - **நற்றிணை** ௧௬௨. விஞ்சையர் மகள் - வித்தியாதரப் பெண். தருவோடு வல்லி தழுவும் - மரமும் கொடியும் அடர்ந்த. சாரல் - மலைச்சாரல். தாழ் குழல் - தாழ் குழலாகிய இவள். ௨

## 3. துணிவு

மூசிய வண்டு முரல்கின்ற தாமம் முகங்கருகும்
பூசிய சாந்தும் புலரும்நம் போற்பொரு நீர்க்கயலை
ஏசிய கண்களும் இவ்வா றலமரும் இந்திரவில்
கூசிய நன்னுதற் கொம்பைவம் பேயென் குறித்தனமே.

(உரை) வண்டு மொய்த்தல் முதலியவற்றால் இவள் மானிட மகளென்று தலைவன் துணிதல். மூசிய - மொய்த்த. முரல்கின்ற - ஒலிக்கின்றன. தாமம் - மாலை. முகம் கருகும் - வாடும். நம்போல் - என்னைப்போல. நீர்க் கயலை ஏசிய கண்கள் - நீரிலுள்ள கயல் மீனை யொத்த கண்கள். அலமரும்: இமைக்கும் என்க. இந்திர வில் கூசிய நன்னுதல் - வானவில்லை வென்ற நெற்றியுடையவள். கொம்பை - கொம்பு போல்வாளை. வம்பே என் குறித்தனமே - வீணாக என்னவோ எண்ணிவிட்டோம்; 'வம்பு பழுத்து' - **திருவாசகம்** ௫௬௪.

வண்டு முரல்வதையும் தாமம் கருகுவதையும் சாந்து புலர்வதையும் கண்கள் அலமருவதையும் கண்டு இவள் மானிடப் பெண் என்று தெளிகிறான். ௩

## 4. குறிப்பறிதல்

ஒருகால் உமையவர் உண்டது பொய்யெனும் உள்மகிழ்ந்திங்(கு)
ஒருகால் இமையவர் உண்டது பொய்யெனும் ஊதைபுகுந்(து)
ஒருகால் அசைய ஒசியுமின் சாயல் உருவவஞ்சி
ஒருகால் நிறைவும் குறைவுமில் லாமதி உற்பலமே.

(உரை) தலைவியின் பார்வைக் குறிப்பினால் அவளுக்குத் தன்பால் வேட்கை யுண்டென்று தலைவன் அறிதல். உமையவர்: சிவபிரான்; உண்டது, ஆலகால விடம். இமையவர் உண்டது, அமுதம். அவள் நோக்கு, விடமும் அமுதமுமா யிருக்கிறதென்கிறான். 'இருநோக் கிவளுண்க ணுள்ளது ஒருநோக்கு, நோய்நோக்கொன்று அந்நோய்

மருந்து' - குறள் ௧0௬௬. உண்டது பொய் என்னும்படியான விடம் அல்லது அமுதம். ஊதை - குளிர் காற்று. ஒசியும் - துவளும். மின் சாயல் உருவ வஞ்சி - மின்னொத்த சாயல்பெற்ற கொடிபோல்வாள். உற்பலம் - குவளை மலர்; கண்ணுக்குவமை. சந்திரனைப்போல் தேய்வதும் வளர்வதும் இல்லாத உற்பலம் என்க. ச

## உ. இயற்கைப் புணர்ச்சி

இயற்கைப் புணர்ச்சியாவது, ஊழ்வினை கூட்டுவிக்கக் கூடும் புணர்ச்சி; இயற்கை - ஊழ்வினை. 'தெய்வம் புணர்ப்பச் சிந்தை வேறாகி, எய்தும் கிழத்தியை இறையோன் என்ப' என்பது **நம்பியகப் பொருள்** ௧௨௪. இது, தெய்வப் புணர்ச்சி, இறைவியிற் கூட்டம் என இருவகை. இவற்றுள், இக்கோவை தெய்வப் புணர்ச்சியைக் கூறுகின்றது.

### 1. கலந்துழி மகிழ்தல்

கருகிய பைங்கயல் செங்கய லாயன்ன கண்மலர்கள்
செருகிய பைங்குழல் வஞ்சிமென் கிஞ்சுகச் செங்கனிவாய்
பருகி முயங்கி மயங்கியிவ் வாறு படுமெழுகில்
உருகிய அன்னையென் னேஇங்ஙன் நானின் றுரைசெய்வதே.

(உரை) கருகிய பைங்கயல் - கயல்போன்ற கரிய கண்கள். செங்கயலாய்: சிவக்க என்க. அன்ன - அப்படிப்பட்ட. கிஞ்சுகம் - கிளி. 'பூண்முலையாள் எனக்கீந்த முருக்கலர் வாய், மட்டின் சுவைக் கின்ன மட்டென்று சொல்ல வரம்பில்லையே' - **திருவாவடுதுறைக் கோவை** ௨௧. ரு

### 2. நலம் பாராட்டல்

தள்ளா வளமையும் தாவா இளமையும் தங்குமின்பக்
கள்ளால் மயங்கிவெங் காமா னலஞ்சுடக் காய்ந்துருகி
உள்ளா ருயிர்கலந் தொன்றாய் உடம்பின் உடம்பொளித்து
விள்ளா நலமிங்ஙன் யாவர்பெற் றார்மண்ணில் விண்ணிலுமே.

(உரை) தலைவியின் நலத்தைத் தலைவன் பாராட்டுதல்; 'புகழ்தல்' என்றும் கூறப்பெறும். தாவா - அழியாத. காமால் - காமத்தால்; காமம் காம் எனக் குறைந்தது. விள்ளா - சொல்ல முடியாத; 'என்னே இங்ஙன் நானின்றுரை செய்வதே' (ரு) என்றமை காண்க. உ

### 3. ஏற்புற அணிதல்

தூசும் கலையும் தொலையா அழகெறிக் குந்தொடியும்
வாசம் கமழு மதுமலர் ஓதியும் வண்களபம்
பூசும் கனதனம் பூணுமுத் தாரமும் பூங்குழையும்
ஆசும் பழுதில்பொன் னேபண்டு போல அணிந்தனமே.

(உரை) நிலை குலைந்த அணிகலன்களை முன்போலவே தலைவன் தலைவிக்கு அணிதல். தூசும் கலையும் : ஆடைகள். அழகெறிக்கும் - ஒளிவிடுகின்ற. தொடி - ஓர் அணி. ஓதி - கூந்தல். ஆசும் பழுது இல் - அற்பமும் குற்றமில்லாத. பொன்னே - விளி.

இச்செய்யுள் இலக்கண விளக்கம் அகத்திணையியல் கஉக, கஉ௩-ம் சூத்திரவுரைகளின் மேற்கோள். எ

### 4. மென்மொழி விரும்பல்

தோளானும் வெய்ய துணைமுலை யானும் துவக்கிநம்மை
ஆளா தவரினின் றுண்டுகொண் டார்அன்ன மென்னடையும்
வாளார் விழியும் எழுதவொண் ணாத வடிவுங்கண்டால்
கேளா ததுமொழி யேஅளி யேமுனங் கேட்குதுமே.

(உரை) தலைவியின் வாய்மொழியைக் கேட்கத் தான் விரும்புவதைத் தலைவன் தெரிவித்துக்கொள்ளுதல். தோளினுலும் முலையினுலும் என்க. துவக்கி - பிணித்து. நடையும் விழியும் வடிவுங் கண்டாயிற்று; கண்டால் : கண்டபின் என்க. கேளாதது - கேளாமல் எஞ்சியுள்ளது. மொழியே - சொல் ஒன்றுதான். அளியேம் : அளியேனுகிய நான். கேட்குதுமே - நான் கேட்குமாறு நீ பேசுவாயாக.

இத்துறை 'கிளவி வேட்டல்' எனவும் பெறும் (திருக்கோவையார் ௬௦); நம்பி அகப்பொருளில் இது இல்லை; இதற்குப் பதிலாக, 'அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல்' என்ற துறை உள்ளது. அ

### 5. பெருநயப் புரைத்தல்

சுருங்கா விரிசினைச் சூதமும் நீள்சுர புன்னையுஞ்சூழ்
இருங்கா இயலும் இசையினங் காள்இவ் இருஞ்சிலம்பின்
மருங்காவி யின்கண் மலர்வதுண் டோசொ லும் வாசியறக்
கருங்காவி யுஞ்செங் குமுதமும் தோயும் கமலமொன்றே.

(உரை) தனது காதல் மிகுதியைத் தலைவன் புகழ்ச்சி வகையாற் கூறுதல்; பெரு நயப்பு - மிக்க விருப்பம். விரி சினை - விரிந்த கிளைகளுடைய. சூதம் - மா. இருங் கா இயலும் - நெருங்கிய சோலையில் வாழும். இசையினங்காள் - வண்டுகளே; விளி. சிலம்பின் மருங்கு - மலையின் பக்கலில். ஆவியின்கண் - குளத்திலே, உயிரிலே. வாசியற - வேறுபாடில்லாமல்; 'அஞ்சிறைத் தும்பி, காமஞ் செப்பாது கண்டது மொழிமோ' (குறுந்தொகை உ) என்றாற்போல. கருங் காவி - கருங்குவளை; கண்கள். செங்குமுதம்: வாயிதழ். கமலம் - தாமரை; முகம். 'குமுதமும்......கமல முகையுமுண்டோ உங்கள் ஆவியிலே' - திருவாரூர்க்கோவை உரு. கூ

### 6. தெய்வத் திறம் பேசல்

யாங்கா ணும் ஆவியொன் றுயிரு வேமும் எழுபிறப்பும்
நீங்கா நிலைபெற்ற நேயமும் தந்து நினைவறஇப்
பூங்காவில் இங்ஙனம் புல்லும் புணர்ச்சி புணர்ந்தவெல்லாம்
கோங்கார் வனமுலைக் கோமள மேநம் குலதெய்வமே.

(உரை) தம்மைக் கூட்டிவைத்த குலதெய்வத்தின் அருளைத் தலைவன் பாராட்டல். நேயம் - அன்பு. எழு பிறபபும் நீங்கா நிலைபெற்ற நேயம்: 'நம் கேண்மை...இறவாதிங்கு எழுமையுமே' - மதுரைக் கோவை கஎ. கோங்கார் - கோங்கு ஒத்த. கo

### 7. பருவரல் உணர்தல்

கறியுறு சாரற் களியுறு தோகைக் கணநடஞ்செய்
வெறியுறு சோலை விழைவுற நீடில் வெருவுறுமான்

மறியுறு செங்கண் மதுமலர்க் கோதை நொதுமலர்வந்(து)
அறியுறல் கூடுமென் றேதிரு மேனி அழுங்குவதே.

(உரை) அயலார் அறிவர் என்று தலைவி துயருறுவதை உணர்தல். பருவரல் - துன்பம். கறி - மிளகுக்கொடி. தோகைக்கணம் - மயிலினம். வெறியுறு சோலை - தேன் நிறைந்த சோலை. விழைவுற - விரும்பி. நீடில் - காலம் நீட்டித்தல். வெருவுறும் - அஞ்சும். மான்மறி - மான் குட்டி. கோதை - தலைவி. நொதுமலர் - அயலார். அறியுறல் கூடும் - அறியக்கூடும். *இ. வி. கஉரு. (பாடபேதம்) விழைவுற நாடி ; அறிவுறல். கக

## 8. பிரிவச்சம்

நீங்கிற் சிறிது பொழுதுநில் லாஉயிர் நேரிழைக்கின்(று)
ஈங்கிப் படிநமை எய்தும் பழியதற் கென்றுசிந்தித்(து)
ஓங்கற் சிலம்பிடை நின்றாச லாடி உயங்குநம்மைத்
தாங்கத் தகும்துணை யாதுகொல் லோஎன் தனிநெஞ்சமே.

(உரை) தலைவியை நீங்கில் அவள் உயிர் நில்லாது என்று தலைவன் அவ்வளைப் பிரிய அஞ்சுதல். நேரிழைக்கு - இவளுக்கு. பழி - இவள் உயிர்விட்டதாகிய பழி. ஓங்கற் சிலம்பிடை - மலைச்சாரலிடை. உயங்கும் நம்மை - வருந்துகின்ற என்னை. இ. வி. கஉரு. (பா - ம்) ஏகில் எய்தும் பழி நமக்கென்று. கஉ

## 9. பிரியேன் என்றல்

நினையோ மறந்தும் பிரியப் பிரிய நினையினும்இத்
தனையோ பொழுதும் தரிக்ககி லேன்தடஞ் சூழுமன்றில்
அனையோம் இருவர்க்கும் ஆவிஒன் றேஎன் றறிந்திருந்தும்
வினையோ மலரணங் கேதிரு மேனி மெலிகின்றதே.

---

* இ. வி. கஉரு - இலக்கண விளக்கம் அகத்திணையியல், கஉருஆம் சூத்திரவுரையில் இதே துறைக்கு மேற்கோள். பின்வரும் குறிப்புக் களுக்கும் இங்ஙனமே கொள்க.

(உரை) தலைவன் கூறுதல். இத்தனையோ பொழுதும் - சிறிது பொழுதும் என்பது கருத்து. அன்றில் : ஆணும் பெண்ணும் துணை பிரியாத ஒரு பறவையினம்; 'துணைபிரியா அன்றில்' - **நாலடியார்.** ஆவியொன்றே : சூ. மலரணங்கே - திருமகளை ஒத்தவளே. கூ

## 10. பிரிந்து வருகென்றல்

சுரியேர் நறுங்குழல் துஞ்சிய இன்பத் துயில்பயில
உரியேன் ஒழிந்தும் உறைவதுண் டோகெண்டை ஓடவென்ற
அரியேர் மதர்விழி அன்னமுன் ஏகுபின் யானுமந்தச்
சரியே வருகுவன் நீவண்ட லாடுமத் தண்டலைக்கே.

(உரை) பிரிந்து போய் வருகிறேன் என்று தலைவன் தலைவிக்குக் கூறுதல்; வருகு - வருவேன். சுரி - சுருண்ட. உரியேன் - உரியவனாகிய நான். உறைவதுண்டோ : இல்லை என்றபடி. கெண்டை : மீன். அரியேர் மதர்விழி - ரேகை படர்ந்த செழித்த விழி. அன்னம் - அன்னமாகிய நீ. சரியே - வழியே. வண்டல் - மகளிர் விளையாடும் விளையாட்டு. தண்டலை - சோலை. 'நின்றே வருவல் இங்கே விளையாடுக நீ சிறிதே' - **தஞ்சைவாணன்கோவை** உச. கச

## 11. இடமணித் தென்றல்

குன்ற மழைக்கக் குயிலழை யாநிற்பர் கூடிஎதிர்
நின்று மழைக்குழல் நேரிழை யாய்நின்னை யான்பிரிவல்
என்று மழைக்கண் இரும்பனி கூர்வ தெவன்கொல்நம்மூர்
மன்றல் மலர்ப்பொழி லும்மலைச் சாரலும் வாழ்பவரே.

(உரை) தங்கள் ஊர்கள் ஒன்றுக்கொன்று அருகாமையில் உள்ளன என்பதைத் தலைவன் கூறுதல்; அணித்து - அருகிலுள்ளது. குன்றம் மழைக்க - மழை பெய்து குன்றம் தழைக்க. குயிலழையா நிற்பர் : மழை வேண்டிக் குயிலைக் கூவுமாறு அழைத்தலைப் பள்ளுப் பிரபந்தத் துட் காணலாம். மழைக் குழல் - மேகம் போன்ற கூந்தல். மழைக் கண் - கரிய கண். இரும் பனி கூர்வது - நீர் ததும்புவது. மன்றல் - மணமிக்க. வாழ்பவர் அழையா நிற்பர், நேரிழையாய் கூர்வதெவன் என்க. கரு

## 12. நலம் தெரிந்து உரைத்தல்

கரும்புண்ட ரீகம் அனையகண் ணீர்வரக் காமருதேன்
சுரும்புண் டெழுநன் மலரில் தொலைநலம் சூதொர்டுகோங்(கு)
அரும்புண்ட மென்முலை யாய்உலை வாய்வெவ் வழல்குளித்த
இரும்புண்ட நீரல்ல வோநீயும் நானும் இயைந்த அன்பே.

(உரை) தலைவன் கூறுதல். புண்டரீகம் - தாமரை. காமரு - அழகிய. சுரும்பு - வண்டு. சூதும் கோங்கரும்பும் முலைக்குவமை. இரும்புண்ட நீர்: 'கொல்லன் செந்தீ மாட்டிய, இரும்புண் நீரினும் மீட்டற் கரிது' - **புறநானூறு** உக. இயைந்த அன்பு, இரும்புண்ட நீர்போல, பிரிவறியாதது என்க. ௧௬

## 13. நீராத் தேற்றம்

வரியோர் நெடுங்கண் வரும்பனி கூர மனந்தளர்வுற்(று)
எரியோர் தளிரன்ன நின்னெழில் வாட இசைஅளிசூழ்
புரியோர் நறுங்குழற் பூவையன் னாய்இமைப் போதுநின்னைப்
பிரியேன் மறந்தும் பிரிவுறின் மாய்கஎன் பேரிசையே.

(உரை) பிரியேன் என்று தலைவியைத் தேற்றுதல்; தீர்தல் - நீங்குதல். வரிஎர் - ரேகை படர்ந்த. எரியொத்த தளிர்போன்ற செந்நிறமுடைய அழகு என்க. அளி - வண்டு. பூவை அன்னாய் - பூவை போன்றவளே. மாய்க என் பேரிசை - எனது பெரும்புகழ் கெடுக. 'மெல்லியல் அரிவைநின் நல்லகம் புலம்ப, நிற்றுறந்து அமைகுவெனாயின் எற்றுறந்து, இரவலர் வாரா வைகல், பலவா குகயான் செலவுறு தகவே' - **குறுந்.** ௧௩௭. ௧௭

## 14. நெஞ்சு வலியுறுத்தல்

நினையாமல் நல்வினை தந்தஇக் கூடலை நீடிலன்னம்
அனையார் வரிநெடுங் கட்புல னாமெனில் நாமகலின்
சுனையார் மலர்க்கண்ணி சோருமென் றுவி துளங்கும்நமக்(கு)
இனையா உகுமுளம் அஞ்சிநெஞ் சேஇங் கிரங்கல்நின்றே.

(உரை) தலைவன் பிரிந்து செல்லத் தன் நெஞ்சைத் திடம் செய்து கொள்ளல். நல்வினை : குலதெய்வம் (௪0) என்றது காண்க. நீடில் - நீட்டித்தால். அன்னம் அனையார் : தலைவியின் ஆயவெள்ளம். கூடல், கட்புலனுகும். துளங்கும் - கலங்கும். இனையா - இனைந்து ; இரங்கி. இங்கு நின்று இரங்கல் என்க. (பா - ம்) நெஞ்சுறு வலியுறுத்தல். ௧௮

## 15. உயிரெனக் கூறல்

**வ**டக்குங் குமக்கொங்கை வம்பற வேவிம்ம மல்குமைநீர்
அடக்குங் கயலும் அடங்கா வெயர்வு மியாவும்பின்னே
கிடக்குங் கடைக்கண்ணும் சோரும் கலாபமும் கேசமுமாய்
நடக்கின் றதுமெல்ல மெல்லஎன் ஆருயிர் நன்னெஞ்சமே.

(உரை) பிரிந்து செல்லும் தலைவியைப பாராட்டித் தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறுதல். வடம் - மாலை. வம்பு அறவே விம்ம - கச்சு அறும்படியாக விம்ம ; விம்முதல், தலைவனைப் பிரிந்த காரணமாக. நீர் அடக்குங் கயல் என்றது நயம் ; கண்ணீரை அடக்கிக் கொண்டு என்று பொருள். கயலொத்த கண் என்க. கடைக்கண் பின்னே கிடக்கும் என்றது முரண் ; கடைக்கண்ணுல் தலைவனை நோக்கு கிறுள் என்றவாறு. நெஞ்சமே, என் ஆருயிர் நடக்கின்றது என்க. 'உயிரென வியத்தலென்பது தலைவியிடத்து வைத்த ஆதரவின் மிகுதியாலே தனதுயிரென வியத்தல்' - **களவியற் காரிகை**. 'புலனன் றென்ப இன்னுயிர் அதுவே, அலர்முலை யாகந் தாங்கி, நிலவொளி மதியின் நிலவும் என் உயிரே' - **தமிழ்நெறி விளக்கம்** மேற்கோள் ௬. ௧௯

## 16. எய்தல் அருமை உரைத்தல்

**உ**ய்யா மடநெஞ்ச மேவரு மேஇரு தோள்வளைச்செங்
கைஆய வெள்ளம் கடந்தொரு வாறு கனவெனவே
பொய்யாய நுண்ணிடை புல்லிய காதற் புணர்ச்சிஎல்லாம்
மெய்யாக வுந்தரு மோதெரி யாது விதிவசமே.

(உரை) 'எய்துதற் கருமை என்பது புணர்ந்து நீங்கிய தலைவன் ஆயவெள்ளத்துட் கண்ட தலைமகளை அரியளென்பது படச்சொல்லுதல்' - **கள. காரிகை**. வருமே - மீட்டும் இக்கூட்டம் நமக்கு வருமோ. கை -

கையுடைய தலைவி. ஆயவெள்ளம் - பாங்கியர் கூட்டம். கனவெனவே - கனவுபோல. 'பெண்ணணங்கின் திருநலஞ் சேர்ந்ததெல்லாங் கனவே என்று சிந்திப்பனே' - பாண்டிக்கோவை; 'புணர்ப்போ கனவோ அறி யேன் புகுந்ததுவே' - திருக்கோவை. கள. உ0

## 17. ஆங்கவன் காதற் பாங்கியை அறிதல்

புல்லத் தருவதும் பொற்குழை யோடப் பொருநெடுங்கண்
செல்லத் தருவதும் தேமென் குமுதம் திறந்தினிய [(து)
சொல்லத் தருவதும் சூழ்கின்ற யாழ்மொழித் தோகைக்குழாத்
தல்லொத்த பூங்குழல் பாங்கது போலும் அணங்கினுக்கே.

(உரை) ஆய வெள்ளத்திருப்போருள், தலைவியின் காதற்பாங்கி இன்னொன்று அறிந்து, அவள் தலைவியைக் கூட்டி வைக்கும் தூதாக உதவுவாள் என்று கண்டு, தலைவன் ஆற்றுமை நீங்குதல். புல்ல - தலைவி யைத் தழுவ. குமுதம் - வாய். இனிய சொல்ல - தனக்குத் தூது சொல்ல. அணங்கு, தலைவி. அல்லொத்த - இருளொத்த. 'வாயில் பெற்றுய்தல்' என்பதும் இத்துறையே. உக

## 18. பண்பு பாராட்டல்

திருந்திய திண்பொருப் பால்திருப் பாற்கடல் முன்கடைந்து
வருந்திய நாள்வந்த நஞ்சும் அமுதும் மலர்க்கமலம் [னின்
பொருந்திய தன்முகத் தேகொண்டு போந்தனள் போலுமென்
அருந்திய வாறெங்ங னேஎம் பிரானும் அமரருமே.

(உரை) தலைவியின் பண்பை (அழகை) தலைவன் பாராட்டல். திண் பொருப்பு - மந்தரமலை. நஞ்சு - ஆலகால விடம்; அருந்தியவன் சிவபிரான். நஞ்சும் அமுதும் தன் முகத்தே கொண்டு போந்தனள்: ரு-ஆம் பாடல் குறிப்புரை பார்க்க. உஉ

## 19. பயந்தோர்ப் பழிச்சல்

தூயசெந் தாமரைப் பொன்னைஎன் ஆவித் துணையைத்தந்த
தாயரும் தந்தையும் தாரணி மேலுந்தி தந்தவண்ணல்

ஆயுவும் தந்தை அருளும் புராரி அழகெறிக்கும்
தேயுவும் இந்திரன் செல்வமும் கூடிச் சிறக்கநின்றே.

(உரை) தலைவியைப் பெற்ற தாய்தந்தையரைத் தலைவன் வாழ்த்தல். தந்த - பெற்ற. உந்தி தந்த அண்ணல் - பிரமன். ஆயு - ஆயுள். தந்தை- திருமால். புராரி - சிவபிரான். தேயு - தேஜஸ், ஒளி. தாய்தந்தைய ருக்குப பிரமனது ஆயுளும் திருமாலின் அருளும் சிவபிரான் மேனி யொளியும் இந்திரன் செல்வமும் வாய்ப்பதாக என்க. இ. வி. சஉகூ. (பா - ம்) சிறக்க இன்றே. உரு

## 20. கண்படை பெறாது கங்குல் நோதல்

மயில்போல் இனியமென் சாயனல் லாருடன் வல்வினையேன்
துயில்போன தின்னமுந் தோன்றவும்காண்கிலன் சோலைஇளங்
குயில்போல் மொழியவர் தம்குழல் போலிருள் கூர்ந்துகொற்ற
அயில்போல் மறஞ்செய்கண் போல்அற நீளும் அருங்கங்குலே.

(உரை) தலைவியைப் பிரிந்த தலைவன் இரவில் துயில் பெறாமல் வருந்திக் கூறுதல். கண்படை - துயில். கங்குல் - இரவில். சாயல் நல்லாருடன் : பிரிந்து சென்ற அத்தலைவியோடு. தோன்றவும் காண் கிலன் : 'வன்னெஞ்சர் போன வழிபார்த் துடன்போன, என்னெஞ்சம் என்னுடன்வந் தெய்துவதெக் காலமே' என்ற தநுகூர்ப்பள்ளுப் பாடலை ஒப்பிடுக. அயில் - வேல். இ. வி. கஉகூ. உச

# ௩. இடந் தலைப்பாடு

இடந்தலைப்பாடு - இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த இடத்தைத் தலைவன் மீண்டும் அடைதல்.

## 1. தலைவி இறைவனை நினைத்தல்

**பு**றவார் நறுமுல்லை போல்நகை யார்பொய்த லாடுஞ்சிற்றில்
நறவாடு சந்தனம் நாறுதண் சாரல் நயந்தஇன்பம்
மறவாத நெஞ்சும் வனமுலை தோயு மணிப்புயமும்
உறவாடி நிற்பர்கொல் லோஎன்னை ஆளும் ஒருவர்வந்தே.

(**உரை**) இறைவனை - தலைவனை. புறவு - முல்லை நிலம். நகையார் : பெண்கள். பொய்தலாடும் - மகளிர் விளையாடுகின்ற. நறவு - தேன். ஒருவர் - என்னைக் கூடிய தலைவர். இ. வி. ௧௩௩, தலைவி தலைவன் வருங்கொலென நினைத்தற்கு மேற்கோள். (பா - ம்) உறவாட. ௨௫

## 2. தலைவன் தலைவியை நினைத்தல்

**நீ**டுங்கொல் லோகொண்ட நேயமென் ஆயத் தவர்நிலையில்
தேடுங்கொல் லோவந்து செல்லுங்கொல் லோஅந்தச் செவ்விஇன்னும்
கூடுங்கொல் லோவிதி கூட்டுங்கொல் லோஎன்று கொம்பினுள்ளம்
வாடுங்கொல் லோஅறி யேன்மலைச் சாரலில் வந்துநின்றே.

(**உரை**) நேயம் நீடுங்கொல்லோ என்க. வந்து - இவ்விடத்தில் வந்து. அந்தச் செவ்வி - முன்னமே கூட்டிவைத்த தருணம். இ. வி. ௧௯௧, தலைவன் நெஞ்சொடு வினுதற்கு மேற்கோள். (பா - ம்) ஆயத்தவரிடையில் ; வந்த செவ்வி. ௨௬

## 3. தந்த தெய்வம் தருமெனச் சேறல்

**கு**ருந்தம் நரந்தம் குராமரம் மாமகிழ் கோங்குபுன்னை
செருந்தி பொருந்தும் செழுமலர்க் காவிடைச் சென்றுவிண்ணோர்
அருந்தும் மருந்தன்ன அன்னமன் னாளை அளித்ததெய்வம்
இருந்தது காண்நமக் கின்னமென் னேநெஞ் சிளைக்கின்றதே.

(உரை) முன்பு தலைவியைக் கூட்டி வைத்த தெய்வம் இப்போதும் கூட்டிவைக்கும் என்றெண்ணித் தலைவன் அவ்விடத்துக்குச் செல்லுதல். குருந்தம்...செருந்தி - மரவகை. மருந்து - அமுதம். 'முன்னாள் தந்த தெய்வம் நமக்கு, இன்றுந்தரும் நெஞ்சமே எழுவாழி இங்கென்னுடனே'- தஞ்சை. ௩௪. உஎ

## 4. பொழில் கண்டு வியத்தல்

கரிதாகி மென்குழல் போனிழல் போல்கலந் தால்விடுத்தற்(கு)
அரிதாய் உறவில் அறவினி தாய்அர வல்குலினிற்
பெரிதாய் விரும்பின எல்லாம் நுகரப் பெறுவதற்கே
உரிதாய் அளிஉடைத் தாயவர் போலும் உயர்பொழிலே.

(உரை) சென்ற தலைவன் அப்பொழிலைக் கண்டு வியந்து கூறுதல்; பொழிலின் தோற்றம் தலைவியை ஒத்திருக்கிறது. உரிதாய் - உரித் தாய் என்பதில் எதுகை நோக்கி இடை குறைந்தது. அளியுடைத்தாய வர் - கருணையுடையவர். 'தனிமை நெஞ்சத்து முனிவுகண் டகற்ற லின், வினைமாண் பாவை யன்ன, புனையிழை மாதரும் போன்றதிப் பொழிலே' - பொருளியல். உஅ

## 5. தலைவன் தலைவியைக் காண்டல்

இடமாம் சிறுகுடில் இன்னுயிர் ஆயம் இகந்துவந்தித்
தடமாம் பொதும்பர்த் தனிநின்ற வாதறு கட்சிறுகட்
கடமாம் பிடிபுணர் வேரலஞ் சாரற் கலைபிரிந்த
மடமான் பிணையன்ன ளேமருங் கோட மழைக்கண்களே.

(உரை) இன்னுயிர் - இன்னுயிரான தலைவி. குடில் ஆயம் இகந்து- இல்லத்தையும் பாங்கியரையும் பிரிந்து. பொதும்பர் - பொழிலிலே. தறுகண் - கொடுமையுடைய. கடம் - யானைமதம். வேரலஞ் சாரல் : மூங்கிலடர்ந்த மலைச்சாரல். பிணையன்னள், மழைக்கண்கள் மருங்கோட, இகந்துவந்து தனிநின்றவள் என்க. 'பிணையன்னவே' என்ற பாடமே காணப்பெறுகிறது.

நம்பியகப்பொருளும் பின்வந்த கோவைகளும் மருங்கணைதல் முதல் முறுவற் குறிப்புணர்தல் வரையுள்ள பத்துத் துறைகளையும் இயற்கைப் புணர்ச்சியின் தொடக்கத்திலேயே கூறும். உகூ

## 6. மருங்கு அணைதல்

அறுகால் படஇரு ளைம்பால் இருக்கில் அளியினங்காள்
மறுகால் வருக்க மருங்கிலுண் டோமணி முத்தணிகொண்(டு)
உறுகால் வருந்தன பாரம் பொறுதுயங் கித்தயங்கும்
சிறுகால் அசைய ஒசியுமென் சாயல் திருந்திழைக்கே.

(உரை) வண்டோச்சி மருங்கணைதல் என்னும் துறை. நாணங் கொண்டு நிற்கின்ற தலைவியை அணுகிய தலைவன், அவள் கூந்தலில் மொய்க்கும் வண்டுகளை ஓட்டுபவன்போல அவள் பக்கம் நெருங்குதல். அளியினங்காள் : விளி. அறுகால் பட - ஆறு காலும் படும்படி. ஐம் பால் இருக்கில் - ஐம்பாலாகிய கூந்தலில் நீங்கள் தங்கினால். மருங்கில் உண்டோ : இடை இல்லை என்றபடி. உயங்கி - வருந்தி. சிறுகால் - மெல்லிய தென்றல். திருந்திழைக்கு - திருந்திய அணிகளணிந்த இவளுக்கு. ஙூ0

## 7. மெய்தொட்டுப் பயிறல்

அளகம் திருத்தி மதிநுதல் நீவி அளிஅகற்றிப்
புளகஞ்செய் தோளில் புரிவளை ஏற்றிப் புதியதென்றற்(கு)
இளகும் கொழுந்தளிர் மெல்லடி தைவந்த இன்பமுறக்
களபஞ் செறிதனத் தாய்பெற்ற வாஎன் கரதலமே.

(உரை) தலைவியின் மெய்யைத் தீண்டித் தலைவன் அவளை நெருங் குதல். அளகம் - கூந்தல். மதிநுதல் - சந்திரன் போன்ற நெற்றி. நீவி - தடவி. தனத்தாய் : விளி. என் கரதலம், ஏற்றித் தைவந்த இன்பமுறப் பெற்றவா என்க. கரதலம் - கை. இ. வி. கஉஙு. (பா - ம்) அணி அகற்றி. ஙூக

## 8. பொய் பாராட்டல்

ஓருதனி யேநின் றிரவும் பகலும் உறுவெயிலும்
வருபனி யோடு மழையுமெண் ணாது வரையினுமா

வெருவரு கானினும் மெய்த்தவம் செய்வது வேய்களெல்லாம்
திருவனை யார்தடந் தோள்செற்ற நீள்பகை தீரஎன்றே.

(உரை) தலைவியின் எழிலைத் தலைவன் புனைந்து கூறுதல். தலைவி தோளுக்கு உவமை கூறப்பெறும் மூங்கில் தவம் செய்வது, தோளோடு மாறுகொண்ட பகை தீர என்றான். வரையினுமாய் - மலையினுமாய். வெருவரு கானினும் - அச்சமுடைய காட்டிலும். வேய் - மூங்கில். திருவனையார் - திருவையொத்த உனது. செற்ற - மாறுகொண்ட. ௫௨

## 9. இடம்பெற்றுத் தழாஅல்

இளவேய் பொருமிரு தோளும்செவ் வாயும் இளமுலையும்
களவே செயுமரிக் கண்ணும் பதமும் கலைமதியின்
பிளவே அனைய திருநுதல் வேர்வும் பிறக்குநல்ல
வளவே இனிஇந்த மானென்றன் ஆவிக் கருள்செய்யவே.

(உரை) உரிய இடத்தைப் பெற்றுத் தழுவ விரும்பித் தலைவன் கூறுதல. அரிக் கண் - செவ்வரி படர்ந்த கண். ௫௩

## 10. கொடியிடம் புகுதல்

வழிகின்ற தெள்ள ருவிமலைச் சாரலில் வண்டருந்தப்
பொழிகின்ற தேன்கமழ் பூங்கொடி யேபுதி யாரொருவர்
மொழிகின்ற காதலின் முன்னமென் ஆவி முடியுமென்று
கழிகின்ற நாணமும் நெஞ்சமும் நானுமுன் கையடையே.

(உரை) தலைவன் செய்யும் வழிபாட்டை நாணம் காரணமாக மறுதத தலைவி, ஒரு பூங்கொடியைச் சார்நது மறைந்து கொள்ளுதல்; இக்கொடி மாதவிக் கொடி என்றல் மரபு (௩௬); 'வழிபாடு மறுத்தல்' என்றும் இம்முறை பெயர் பெறும். புதியா ரொருவர்: தலைவனைக் குறித்து இவ்வாறு சொல்லுகிறாள். ஆவி முடியுமென்றது, நாணங் காரண மாக. கையடை - அடைக்கலம். ௫௪

## 11. கண் புதை

**தோ**ளும் தொடியும் துடிசேர் இடையும் துணைமுலையும்
வேளும் திறையிடு மென்மயிற் சாயலும் மேவிஎன்னை
ஆளும் புதிய அழகுமெல் லாம்நல் லமுதமன்னீர்
வாளும் கணையும் மறலியும் போலும் மலர்க்கண்களே.

(உரை) கொடியிடம் புக்க தலைவி நாணம் மிகுந்து தன் விழிகளைப் புதைத்துக்கொள்ள, அதனால் தனக்குண்டான துன்பத்தைத் தலைவன் கூறுதல்; நாணிக் கண் புதைத்தல், இடையூறு கிளத்தல் எனவும் இத் துறை வழங்கும். வேளும் திறையிடும் - மன்மதனும் திறையிடத் தக்க. சாயலும் மேவி ஆளும் அழகுமெல்லாம் வாளும் கணையும் மறலியும் போலும் மலர்க் கண்களே என்க. மறலி - யமன். 'வந்தென் உடலின் உயிர்வாங்க வாணுதலாய், சந்த வனமுலையே சாலாதோ - பைந்தளிரால், நின்கண் புதைத்தனையே நின்வடிவெ லாம்புதைய, என்கண் புதைத்தரு ளாய் இன்று' (கிளவித் தெளிவு) என்பதை ஒப்பிடுக. நரு

## 12. நீடுநினைந்து இரங்கல்

**கா**தல் மடந்தையர் கையகல் காலையும் மெய்யகலா
மேதகு நாணும் மெலியவென் றோவிழி போலுநெய்தற்
போதவிழ் மென்மலர்ப் புன்னையங் கானல் பொருந்துமிந்த
மாதவி பெற்ற மணிமே கலைநம்மை வாழ்விப்பதே.

(உரை) தலைவி செய்கையால் காலம் நீட்டித்தலை நினைந்து தலைவன் வருந்துதல். நீடு - நீட்டித்தலை. காதல் மடந்தையர் - பாங்கியர். கையகல் காலை - விட்டு நீங்கியபோது. மெய்யகலா - மெய்யை நீங்காத. மெலிய - நீங்கிப் போய். என்றோ - எப்பொழுதோ. மாதவி பெற்ற மணிமேகலை - மாதவிக் கொடியிடம் ஒதுங்கிய மணிமேகலை பணிந்த தலைமகள்; மாதவி மகளான மணிமேகலை என்பது ஒரு நயம். 'தாயென் றிடமா தவிமே கலையொன்று தான்செய்ததே' - ஆனந்தரங்கன் கோவை கச. மெலிய, வாழ்விப்பது என்றோ என்க. இ. வி. ௧௨௩.

நசு

### 13. நனிநாண் விடுத்தல்

வெங்கோல் நடாத்திய வேந்தன் திருவினும் மேதகைய
செங்கோல் அரசன் பகையினும் தேய்ந்த திரைமுழங்கச்
சங்கோ லிடும்புனல் தண்ணந் துறைவன்வண் ணங்கவர்ந்த
எங்கோன் அறிவினன் றேமட நாணம் எனக்கினியே.

(உரை) தலைவி தன் நாணத்தை விடுத்தல் ; இத்துறை மறுத்தெதிர் கோடல் எனவும் சொல்லப்பெறும். வெங்கோல் வேந்தன் திருவும் செங்கோல் அரசன் பகையும் தேய்ந்தன போல, எங்கோன் அறிவினால் எனக்கு இனி மடம் நாணம் தேய்ந்த அன்றோ என்க. திரை - அலைகடல். துறைவன்; நெய்தல் நிலத் தலைவன். ௩௭

### 14. வறிதுநகை தோற்றல்

பூணும் தரள நிரையவிர் தோற்றமும் பூந்தளவின்
சேணும் கமழும் முகையின் தகையும் செழுஞ்சிலம்பிற்
காணும் கலாப மயில்நெடும் பீலியின் காலும்சிந்தை
நாணும் கெடவறி தேநகைத் தாள்மதி நன்னுதலே.

(உரை) தலைவி சிறிதே புன்னகை செய்தல் ; வறிது - சிறிது. தரள நிரை - முத்து மாலையின் வரிசை. அவிர் - பிரகாசிக்கின்ற. தளவு - முல்லை. சேணும் - தொலை தூரமும். முகை : விரியும் பருவத்துள்ள அரும்பு. தகை - தகுதியும். பீலியின் கால் : (வெண்ணிறமுடைய) அடிக் காம்பு. கெட - தோற்க. அவன் நகையின் ஒளி, முத்து மாலையையும் முகையையும் பீலியின் காலையும் வென்றது. இ. வி. ௧௨௩. ௩௮

### 15. முறுவற் குறிப்பு உணர்தல்

மிகலே ஒழியக் குறைவின்றி நீடிய வெந்துயர்க்கோர்
புகலேதும் இன்றிப் புலம்பல்நெஞ் சேபொருந் தார்வருந்த
இகலே செயுமயில் அன்னகண் ணார்முகத் தெல்லியன்றிப்
பகலே நிலவும் பவளத்துள் ளேவந்து பாரித்ததே.

(உரை) தலைவியின் புன்னகையாற் பெற்ற உடம்பாட்டுக் குறிப் பினைத் தலைவன் உணர்தல். மிகல் - மிகுதல். இகல் - போர். எல்லி -

இரவு. பவளத்துள்ளே - பவளமாகிய இதழ்களுக்குள்ளே. பாரித்தது - பரந்தது. நெஞ்சே, புலம்பல், நிலவு பகலே வந்து பாரித்தது என்க. நிலவாவது அவள் நகையின் ஒளி. (இ. வி. ௩உ௩. (பா - ம்) குறைவற; கண்ணுள் ; நிலவு. ௩௯

## 16. முயங்குதலுறுத்தல்

சுரிகுழல் வண்டும் சுரும்பொடு தேனும் விரும்புநெஞ்சும்
அரிபொரும் கண்ணும் அலமரு கின்றன அன்றிவண்ணம்
எரிபுரை மாவின் இளந்தளிர் ஈன்றன போன்றதினி
முரிபுரு வச்சிலை யார்முலை ஆர முயங்குதுமே.

(உரை) கூடுதல். குழல் - குழலிலுள்ள. அலமருகின்றன - சுழல்கின்றன. எரிபுரை - எரியொத்த நிறமுடைய. புருவச் சிலையார் - விற்போன்ற புருவமுடையவள். ௪0

## 17. புணர்ச்சியின் மகிழ்தல்

சுரும்பெழு கூந்தலும் செவ்வாய் மழலையும் சோதிநுதல்
அரும்பிய வேர்வும் அலமரும் நோக்கும் அசைந்தொசியும்
கரும்புரு வச்சிலை யுந்நிலை சோருங் கலையும்கண்டு
விரும்பின மேமன மேகளி கூர்இன்ப வெள்ளத்தையே.

(உரை) தலைவன் கூற்று. கலை - ஆடை. இ. வி. ௩௩௧, முயங்கற்கு மேற்கோள். (பா - ம்) சுரும்புழு ; வெள்ளத்திலே. ௪௧

## 18. புகழ்தல்

கனமே கருங்குழல் கங்குலன் றேகண் கருங்கயலின்
இனமே குவளையும் நெய்தலும் அல்ல இவர்க்கிடையென்
மனமே வளரிளம் வஞ்சியன் றேவஞ்ச மாரன்வைத்த
தனமே தனம்கன கத்தட மேருச் சயிலமன்றே.

(உரை) தலைவி நலத்தைத் தலைவன் புகழ்தல். கனமே - கனமுடையதா. கங்குல் அன்றே - இருள் அல்லவா. இடை வஞ்சியன்றே - இடை கொடி போன்றது. மாரன் - மன்மதன். தனம் -

அவன் வைத்த நிதி. தனம் கனக மேருச் சயிலமன்றே - மூலையானது பொன் மேரு அன்றே. இ. வி. கரு௧. (பா - ம்) கண் கருவிளையின்; இவற்கிடை; வளரிள. ௪௨

### 19. ஆயத்து உய்த்தல்

விலையாக்கி வேளை விழிக்கடை யால்நல மிக்ககொங்கை
மலையாக்கி என்னை மருங்காக்கி வைத்தனிர் வங்கமுந்நீர்
அலையாக் கியஅமு தன்னநல் லீர்இனி அம்பவளக்
குலையாக் கியதண் டலைவண்டல் ஆயம் குறுகுகவே.

(உரை) பாங்கியர் கூட்டத்தை யடையுமாறு தலைவன் தலைவியை விடுத்தல். மருங்காக்கி - அருகிலே இருக்கச் செய்து. வங்க முந்நீர் - கப்பல் செல்லும் கடல். அலையாக்கிய அமுது - பாற்கடலிலே பிறந்த அமுதம். தண்டலை - சோலையிலுள்ள. வண்டல் ஆயம் குறுகுக - விளையாடிக் கொண்டிருக்கும் பாங்கியரைச் சென்று அடைவாயாக. ௪௩

## ௬. பாங்கற் கூட்டம்

பாங்கற்கூட்டம் - பாங்கன் துணையாக ஏற்படும் கூட்டம்; அதாவது பாங்கனுடைய உதவியால் தலைவன் தலைவியை அடைதல். பாங்கன் - உயிர்த்தோழன்.

### 1. பாங்கனை நினைத்தல்

அணங்கும் தெரிவையும் இன்னரு ளால்முன் அளித்தசெவ்வி
மணங்கொண் டுளமகிழ் தூங்கும் பரிசினி வாய்ப்பதென்றென்
றுணங்கும் தனிநெஞ்ச மேஅஞ்சல் நீநம் உயிர்மருந்தாய்
இணங்கும் துணைவன் இருபிறப் பாளன் இருந்தனனே.

(உரை) தலைவன், துணைவன் இருக்கிறானென்று நெஞ்சைத் தேற்றுதல். என்று என்று - என்றைக்கென்று. உணங்கும் - துயருறும். இருபிறப்பாளன் - பார்ப்பனன்; பார்ப்பனப் பாங்கனென்பது மரபு; ' ஒருவனுண்டே துணை வேதியனே' - அநுர்க்கோவை ௪௬. ௪௪

## 2. பாங்கன் வினுதல்

தென்செய்த பண்ணின் திறந்தெறிந் தோதெய்வப் பாவலர்தாம்
முன்செய்த நூலின் முறைதெரிந் தோசெம் முகங்கருகிப்
பொன்செய்த மேனியும் புல்லென்று வாடிப் புலம்பஎன்னே
என்செய்த தோஅறி யேன்திரு மேனி இறைவனுக்கே.

(உரை) தலைவனது மெலிவைப் பாங்கன் வினுதல். தென் செய்த பண் - தென்னுட்டுப் பண், தமிழ்ப் பண். நூலின் முறை தெரிந்தோ - இலக்கியம் கற்ருே. புல்லென்று - பொலிவழிந்து. இறைவனுக்கு - தலைவனுகிய உனக்கு. ‘ கூடலின் ஆய்ந்தஒண் தீந்தமிழின், துறைவாய் நுழைந்தனை யோஅன்றி ஏழிசைச் சூழல்புக்கோ, இறைவா தடவரைத் தோட்கு என்கொலாம்புகுந் தெய்தியதே ’ - திருக். உ௦. ௪௫

## 3. தலைவன் உற்றது உரைத்தல்

சொல்லேன் உனக்கும் எனஇருந் தேன்எங்ஙன் சொல்லுகைக்கும்
வல்லேன் வருந்தவும் மாட்டுகில் லேன்வரி வேட்டையிற்சென்(று)
அல்லேர் குழலோர் அணங்கெதிர்ப் பட்டனன் ஆவியன்னுய்
செல்லேன் அறியில் அதுதடஞ் சாரல் திரிவதுவே.

(உரை) சொல்லுகைக்கும் வல்லேன் - சொல்ல வல்லேன். அல் லேர் குழல் - இருண்ட குழலுடைய. எதிர்ப்பட்டனன் - கண்டேன். ஆவி யன்னுய் : விளி. அது - அவ்வணங்கு. தடஞ்சாரல் - மலைச்சாரலில். (பா - ம்) திருவதுவே. ௪௬

## 4. பாங்கன் கழறல்

முன்னே அறிஞர் மொழியும் கலைகள் முழுதுணர்ந்து
மின்னே அனைய நலம்பொருட் டாகமெய் வேட்கையுற்றுக்
கொன்னே அறிவும் குறையா நிறைவும் குலைந்துநின்முய்
என்னே தகுவன வோஎம் பிரானுக் கிவையுமின்றே.

(உரை) கழறல் - இடித்துக் கூறுதல். மின்னே அனைய நலம் - மின்போன்றதோர் பெண்ணின் நலம். வேட்கை - விரகம். கொன்னே - வீணே. எம்பிரானுக்கு : உனக்கு. ௪௭

### 5. கழற்றெதிர் மறுத்தல்

என்போல் மலரம்பில் ஏவுண்ட நாளில் எனக்கினிய
நின்போல் ஒருவரும் நின்றில ரேவெண் ணிலாவெறிக்கும்
மின்போல் ஒளிர்கொன்றை வேணிப் பிரானுக்கு மெய்த்துணையாய்த்
தன்போல் அரிய தவங்குலை யாவகை சாற்றுதற்கே.

(உரை) பாங்கன் இடித்துக் கூறியதைத் தலைவன் மறுத்துக் கூறுதல். மலரம்பில் - மன்மதன் விட்ட கணையில். கொன்றை வேணிப் பிரான் : சிவபிரான். தன்போல் - உன்னைப்போல. சிவபிரான் தவஞ் செய்த காலத்து மன்மதன் மலரம்பை அவர்மீது ஏவிய நாளில், அவர் தவம் குலையாவகை இடித்துரைத்தற்கு, எனக்கு வாய்த்த நண்பனாகிய உன்னைப்போல் யாரும் அவருக்கு வாய்க்கவில்லையோ என்று தலைவன் நகைக் குறிப்புத் தோன்றக் கூறுகிறான் ; 'எண்போதென் போல மயல் கொண்ட போதில் இயலுரைக்க, நண்போர்உன் போல அவர்க்கில்லையோ மொழி நாரணனார், கண்போது வைத்த கழலார் தியாகர் கமலைவெற்பில், வெண்போ தகத்தற்கும் செம்போ தகத்தற்கும் வேலற்குமே' - அநூர். ரு௦. ௪அ

### 6. பாங்கன் கிழவோற் பழித்தல்

இளங்கொம் பொருதனி நின்றிருஞ் சாரலில் என்னைஇங்ஙன்
உளங்கொண் டுறுதுயர் செய்ததென் றாய்மின் ஒளிர்வதுபோல்
விளங்கும் கதிர்வடி வேலண்ண லேதென்றல் மீதசையத்
துளங்கும் சிறுகொடிக் கோமத வேழம் துவக்குண்பதே.

(உரை) கிழவோன் - தலைவனை. இளங்கொம்பு - கொம்புபோல் வாள். என்றாய் - என்று நீ சொன்னாய். கொடி : பெண் கொடி, கொடி. வேழம் : வேழம்போன்ற நீ. துவக்குண்பது - கட்டுப்படுவது. மத வேழம் சிறு கொடியால் கட்டுண்ணுமோ என்றவாறு. 'சூரார் சிலம்பிற் சிலம்பிபொன் னூல்கொண்டு சுற்றவெற்றிப், போரார் களிறு புலம்பி நைந தாங்கொரு பூவை கொங்கை, வாரால் அணைப்ப வருந்தினை நீ' - தஞ்சை. ௪ரு. இ. வி. கஙஙு. (பா - ம்) விண்ணொளிரு மின் போல். ௪௯

### 7. கிழவோன் வேட்கை தாங்கற்கருமை சாற்றல்

சுழிக்கே அழுந்தும் நதிக்கொரு வான்புணை தோன்றிலங்நீர்
வழிக்கே ஒழுகி வருந்துவ ரோவருந் தாஅமுதின்
விழிக்கே அகப்பட் டழிந்தழி யாஉயிர் மீண்டுமுன்றன்
மொழிக்கே படிலென்செய் வேன்முன்செய் பாவம் முடியநின்றே.

(உரை) வேட்கை - தலைவியின்பாலுள்ள விருப்பம். புணை - தெப்பம். சுழியுடைய நதியில், புணை தோன்றில், நீர் வழிக்கே ஒழுகி வருந்தார் என்க. அமுது - தலைவி. மொழிக்கே படில்: விழியிலகப்பட்டு அழியாத உயிர் உன் கொடிய மொழியைக் கேட்டுப் பிரிந்துவிட்டதானல். 'காமக் கடல்மன்னு முண்டே யதுநீந்தும், ஏமப் புணைமன்னு மில்;' - குறள் ௧௧௬௪. என் செய்வேன் முன்செய் பாவம் முடிய நின்றே: 'ஊழ்வினையால், வெறுக்கும் தகைமை விதியன்றி யாரை வெறுப்பது வே' - மதுரைக்கோவை ௫௪. ௫௦

### 8. பாங்கன் தன் மனத் தழுங்கல்

யானும் அறிவு கொளுத்துகிற் பேனிங்ஙன் ஏறனையான்
தானும் அறிவு தளர்ந்துநிற் பான்செந் தளவரும்பும்
தேனும் இனிய குதலைச்செவ் வாயிளஞ் செவ்விநவ்வி
மானும் இவனை மயங்கஇவ் வாறு வருத்துவதே.

(உரை) அழுங்கல் - வருந்தல். ஏறனையான்: தலைவன். செந்தளவு - செம்முல்லை. செவ்வி - நலமுடைய. நவ்விமான்: தலைவி. இ. வி. ௬௫௫. (பா - ம்) அறிவுந் தளர்ந்து. ௫௧

### 9. தலைவனோடு அழுங்கல்

நீறுக வேலை நெருப்பெழுங் காலையும் நீர்மைசற்றும்
மாறு உணர்வும் மதியும் கலங்கி மழைவள்ளலே
தேறுத இங்குனைத் தேற்றுவ தொன்றும் திருவுளத்தில்
ஏறு தொழிவதென் னோஎன்ன மாயம் எதிர்ப்பட்டதே.

(உரை) அழுங்கல் - பாங்கன் வருந்திக் கூறுதல். வேலை - கடல். திருவுளத்தில் - உன் மனத்தில். ஏறுது ஒழிவது - ஏற்காமற் போவது.

வேலை நெருப்பெழுங்காலையும் என்றது, அது நடவாது, எனவே உன் உணர்வும் மதியும் மாரு என்று குறித்தவாறு ; 'அமிர்தங் குணங்கெடி னும், காலததி ஞன்மழை மாறினும் மாருக் கவிகை நின்பொற், சீலத்தையும் நீ நினையா தொழிவது' - திருக். உஎ. ருஉ

## 10. பாங்கன் எவ்விடத் தெவ்வியற்றென்றல்

பேரோத ஞாலம் பெயரினும் ஒற்றைப் பெருந்திகிரித்
தேரோன் உதிக்கும் திசைதடு மாறினும் செய்யகொன்றைத்
தாரோன் வரிசிலை சாயினும் சாயாத் தறுகணினை
யாரோ வணக்கினர் எங்கே அவர்வந் தெதிர்ப்பட்டதே.

(உரை) நீ கண்ட உருவம் எவ்விடத்தில் உள்ளது எவ்வியல்பை யுடையது என்று பாங்கன் தலைவனை வினவுதல். 'என்ன மாயம் எதிர்பபட்டது' (ருஉ) என்றது காண்க. ஓத ஞாலம் - குளிர்ந்த நீர் சூழ்ந்த உலகு. ஒற்றைத திகிரித் தேரோன் : சூரியன். கொன்றைத் தாரோன் : சிவபிரான். வரிசிலை - திரிபுரமெரித்தபோது வில்லாயுதவிய மேரு மலை. சாயாத் தறுகண் நினை - அசையாத தறுகண்மையையுடைய உன்னை ; தறுகண்மை - வலிமை. வணக்கினர் - சாயச் செய்தனர். அவர் - வணக்கிய அவர் ; அத்தலைவி. இத்துறை இயலிடங் கேட்டல் எனவும் பெறும். ருங

## 11. அவன் அஃதிவ்விடத் திவ்வியற்றென்றல்

தோற்றம் திருவென்று சொல்லத் தகினும் துணைமுலைகள்
கூற்றம் கொடிய கொலைவிட மேகண் கொடிஇடையும் [ஞே
ஊற்றம் பிறிதொன்றும் இன்றிஎன் போனின் றுயங்குமென்
மாற்றம் கடலமு தேமலை வாணர் மடமகட்கே.

(உரை) முலைகள் கூற்றம், கொலைவிடமே கண், இடை கொடி, மாற்றம் கடலமுது என்க ; மாற்றம் - மொழி. ஊற்றம் - பற்றுக்கோடு. உயங்கும் - (இடை) துயருறும். மலைவாணர் மடமகள் : மலைச்சாரலில் தோன்றி என்னை வணக்கிய தலைவி. ருச

### 12. இறைவனைத் தேற்றல்

திருவே அனைய உருவமும் செவ்வித் திருநகையும்
பெருவேல் அனைய விழிகளும் கொண்டென் புலனழிய
அருவே தனைசெய்த ஆவிஅன் னாரை அறிந்துவல்லே
வருவேன் வருந்துணை யும்வருந் தேலென் மழைவள்ளலே.

**(உரை)** பாங்கன் தலைவனை ஆற்றுவித்தல். ஆவி அன்னார் - உயிர் போல்வாள். வல்லே - விரைவில். இத்துறை வற்புறுத்தல் எனவும் பெறும். ருரு

### 13. பாங்கன் குறிவழிச் சேறல்

சிலைக்கே பயிலுந் திருநெடுந் தோளண்ணல் செப்பியஅந்
நிலைக்கே தனிவந்து நிற்குங்கொல் லோவெங்கை நீள்களிற்றின்
கொலைக்கே புரிந்தவெங் கோடும் குரும்பையும் போல்நெருங்கு
முலைக்கே பழிவைத தழியுநுண் ணேரிடை மொய்குழலே.

**(உரை)** தலைவன்கூறிய இடத்துக்குப் பாங்கன் செல்லுதல். சிலைக்கே பயிலும்: மலைபோன்ற. அண்ணல் - தலைவன். அந்நிலைக்கே - அவ்விடத்தே. வெம் கை - கொடிய கையுடைய. கோடு - கொம்பு. பழி - தலைவனை வணக்கிய பழி. மொய்குழல்: தலைவி. மொய்குழல் நிற்குங் கொல்லோ என்க. ருசா

### 14. தலைவன் பாங்கற் கிரங்கல்

பாடுங் குலமின வண்டுக ளாகப் பளிக்கரங்கில்
ஆடுங் கலாப மயிலன்ன சாயலென் னாரணங்கைத்
தேடுங்கொல் தேடித் திசைஅறி யாமல் திகைத்துநின்று
வாடுங்கொல் காணில் மகிழ்க்குங்கொ லோஎன்னை மன்னுயிரே.

**(உரை)** தலைவியைத் தேடிச் செல்லும் பாங்கனை எண்ணித் தலைவன் இரங்கல். பாடுங் குலம் - மயிலின் ஆடலுக்கேற்பப் பாடுவோர். கலாப மயில் - தோகையுடைய மயில். என் ஆரணங்கை: தலைவியை. மன்னுயிர்: உயிராகிய தலைவி. 'என்னாருயிர்' (கக) என்றது காண்க. பாங்கன் அணங்கைத் தேடுங்கொல், வாடுங்கொல், காணில் மன்னுயிர்

என்னை மதிக்குங்கொல் என்க. 'இவ்வளவிற் செல்லுங்கொல் இவ்வள விற் காணுங்கொல், இவ்வளவிற் காதல் இயம்புங்கொல் - இவ்வளவில், மீளுங்கொல் என்றுரையா விம்மினான்' - நளவெண்பா ௪௦. ௫௭

## 15. எய்திய பாங்கன் தெய்வம் வியத்தல்

**வை**வைத்த வேலண்ணல் உள்நிறை வாரி மயலளித்த
நெய்வைத்த கூந்தல் நிரைவளை மானை நெடுங்கடல்போற்
கைவைத்த ஆயங் கடந்திங்ங னேவரக் காட்டியஅத்
தெய்வத்தை அல்லது வேறில்லை யேஎன்றும் சிந்திப்பதே.

(உரை) சென்ற பாங்கன், தலைவி வரக்கண்டு, தெய்வத்தை வாழ்த்தல். வை - கூர்மை. அண்ணல் : தலைவனுக்கு. உள் நிறை வாரி மயல் - உள் நிறைந்த காதல் வெள்ளம். நெய் - எண்ணெய். ௫௮

## 16. குறிவழிக் காண்டல்

**ந**வரேகை அன்ன மருங்குலும் செவ்வி நகைநிலவும்
கவரே செயுமரிக் கண்களும் கொண்டவன் கல்விசெற்றார்
எவரே எனநின் றிடைநெஞ்ச மேஎம் பிரான்மொழிந்த
அவரே இவரும் அவையே இவையும் அவயவமே.

(உரை) தலைவன் கூறிய குறிவழியே சென்ற பாங்கன் தலைவியைக் காணுதல். நவரேகை யன்ன மருங்குல் - புதிய கோடு போன்ற நுண்ணிய இடை. கவரே செயும் - கவரும. அவன் - தலைவன். கல்வி செற்றார் - அறிவை யழித்தவள். இடை - மயங்குகின்ற. எம்பிரான் - தலைவன். இவர் - இவள். அவையே - அவன் சொன்ன அடையாளங்கள். ௫௯

## 17. பாங்கன் தலைவியை வியத்தல்

**மு**ன்னாள் வருந்தி முழுங்கும் பரவை வழங்கவந்த
பொன்னார் கமலமென் பூந்திரு வேஇவர் போந்திருந்த
இந்நாக வெற்பின் எதிர்ப்பட்ட காலையில் என்னுயிரை
அன்னான் இவருக்கு மாலாவ தும்மினி ஐயமின்றே.

(உரை) பரவை - கடல். வழங்க - தர. திரு - கடலிற் பிறந்த இலக்குமி யனையாள். இந்நாக வெற்பின் - இம் மலைச்சாரலில். உயிரை அன்னான் - உயிர்த் தலைவன். கூO

### 18. பாங்கன் இறைவனை வியத்தல்

மகரம் செறியும் மறிகடல் நீந்தி வடமலையின்
சிகரம் கடந்து வரிஅரி தாவும் செறியிருள்கூர்
தகரம் செறிவனம் தள்ளிஎன் னாவி தனிவந்தவா
பகரும் தகைமைய தோபெரி யோர்தம் பரிசுகளே.

(உரை) மகரம் - மீன். கடல் நீந்தி, சிகரங் கடந்து, வனந் தள்ளி, ஆவி தனி வந்தவா என்க. முறையே நெய்தல், குறிஞ்சி, முல்லை என்பவற்றைக் குறிப்பிட்டவாறு. வட மலை - மேரு மலை; முலைகள். வரி அரி - வரி பொருந்திய வண்டு; கண்கள். இருள்கூர் தகரஞ் செறி வனம் - இருண்ட தகரமரம் செறிந்த காடு; தகரமாகிய மயிர்ச்சாந்து பூசிய இருண்ட குழற்காடு. தள்ளி - இவற்றைப் பிரிந்து. தனி வந்தவா - தலைவன் தனியே மீண்டு வந்தமை எத்துணை அருமைப்பாடுடையது. பெரியோர் தம் பரிசுகள் : 'புடைபெயர்ந்து, கலங்கா திருந்தவெவ் வாறு எம்பிரான் தன் கலைக்கடலே' - தஞ்சை ருசு. கூக

### 19. இகழ்ந்ததற் கிரங்கல்

பண்ணார் பனிமொழி வண்ணமும் தண்ணறும் பைங்குவளைக்
கண்ணால் அருள்செய்த காதலும் காமக் கனல்கொளுந்திப்
புண்ணான நெஞ்சமும் தஞ்சமில் லாதவன் வன்பொறையும்
எண்ணா தருவினை யேனிகழ்ந் தேனெம் இறைவனையே.

(உரை) தலைவியைக் கண்ட பாங்கன் முன்னமே தான் தலைவனை இகழ்ந்ததை எண்ணி வருந்தல். பண்ணார் பனிமொழி வண்ணம் - பண்ணொத்த குளிர்ந்த சொல்லுடைய இத்தலைவியின் அழகு. வன்பொறை - அரிதிற் பிரிந்தாற்றி யிருந்தமை. அருவினையேன் - நான். 'எண்ணாது, ஆர்அண்டு வேலற் பழித்தனம் நம்மறிவு அத்தனையே' - கோடீச்சுரக் கோவை ருஅ. இ. வி. கஙங. (பா - ம்) பணி மொழி; கொளுத்தி. கூஉ

### 20. தலைவன்தனக்குத் தலைவிநிலை கூறல்

**வா**விகண் டேன்மலர்ச் சோலைகண் டேன்மருங் கேமருங்கில்
பாவிகண் டேன்முலைப் பாரங்கண் டேன்பனி நீரரும்பும்
காவிகண் டேன்கண்ட நின்வழி யேதன் கருத்துவைத்த
ஆவிகண் டேன்கண்டி லேனண்ண லேநின் அறிவின்மையே.

(உரை) தனியேயுள்ள தலைவியைத் தான் கண்டமை பாங்கன் தலைவனுக்குக் கூறுதல். வாவியும் சோலையும், இடம் சொல்லியது. மருங்கே - அருகே. மருங்கு இல் - இடை இல்லாத. பாவி என்றமையால் அவளுடைய நிலையும் சொல்லியவாறாயிற்று. காவி - குவளையொத்த கண். அறிவின்மை என்றான், முன்னமே தான் பழித்துரைத்ததை எண்ணி. ‘இலங்கை வெற்பில், நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டே னல்லேன், இற்பிறப பென்ப தொன்றும் இரும்பொறை யென்ப தொன்றும், கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்’ - **கம்பர்.** ‘ சயலுள வேகம லத்தலர் மீது களிபவளத், தயலுள வேமுத்த மொத்த நிரையரன் அம்பலத்தின், இயலுள வேயிணைச் செப்புவெற் பாநின தீர்ங்கொடிமேற், புயலுள வேமலர் சூழ்ந்திருள் தூங்கிப புரள் வனவே’ - **திருக்.** ௩௫. ௬௫

### 21. அவயவம் தோற்றல்

**வெ**யிலே விடுகுழை மேல்சென் றடரும் விழியிணைகள்
அயிலே மடமென் னடையன்ன மேஅமு தூறுமின்சொல்
குயிலே தருநிறம் கோமள மேகுழற் சாமளமே
மயிலே மருங்குல் மின்னேமதி யேஅவர் வாண்முகமே.

(உரை) தலைவன் தலைவியின் அவயவங்களை எண்ணுதல். வெயிலே விடு குழை - ஒளி காலும் குழை. விழி அயிலே, நடை அன்னமே, இன் சொல் குயிலே, நிறம் கோமளமே, குழல் சாமளமே, சாயல் மயிலே, மருங்குல் மின்னே, வாள் முகம் மதியே என்க. அயில் - வேல். கோமளம் - மாணிக்க நிறம். சாமளம் - நீலநிறம். வாள்முகம் - ஒளி பெற்ற முகம். (பா - ம்) மயிற் சாமளமே. ௬௬

## 22. தலைவன் குறிவழிச் சேறல்

ஊனொன் றியஇன் னுயிரனை யாயுற்று நீவினவ
யானின் றுனக்கிங் கியம்பிய வண்ணம் இமையவர்கள்
வானின்று வந்த வரைநின்ற தோர்தெய்வம் என்னவஞ்சி
தானின்ற தோதணி யேஇனி யான்சென்று சார்குவனே.

(உரை) பாங்கன் சொன்ன இடத்துக்குத் தலைவன செல்லுதல். ஊன் ஒன்றிய - உடலோடு ஒட்டிய. அனையாய்: பாங்கனை விளித்தது. வானின்று - தேவலோகத்திலிருந்து. வஞ்சி : தலைவி. சூரு

## 23. தலைவன் குறிவழிக் காண்டல்

மறக்கும் பரிசறி யாவண்டல் ஆயம் மறந்துவந்து
சிறக்கும் கமலத் திருநின்ற வாசெங்கண் முத்தரும்ப
நிறக்கும் பசலையும் மேனியு மாய்நெஞ்சில் நீடுயிர்ப்பும்
பிறக்கும் பெருநல னும்மட நாணும் பிணங்கவிட்டே.

(உரை) தலைவியைக் காணுதல். மறத்தலையே அறியாத வண்டல் விளையாட்டையும் ஆயத்தையும் மறந்து வந்து என்க. நின்றவா - நின்ற அருமை என்னே. உயிர்ப்பு-பெருமூச்சு. பிணங்கவிட்டு - பின்னி விட்டு. இ. வி. கஙங, தலைவியைக் காண்டற்கு மேற்கோள். (பா - ம்) நெஞ்சு ; நலமும் ; பிறங்கவிட்டே. சூசு

## 24. குறிப்பறிந்து கூறல்

வண்டலை யும்பொன் மணிஊச லையும் மறந்துநறுந்
தண்டலை நீழல் தமியளின் றுளிடம் தாமரையோ
விண்டலை யோமலை யோவிசும் போஇன்றென் வேட்கைவெள்
கொண்டலை அன்னமென் பூங்குழல் மான்விழிக் கொத்ததுவே. [ளம்

(உரை) தலைவியின் குறிப்பை யறிந்து தலைவன் கூறுதல். தமியள் - தனியளாக. இடம் தாமரையோ என்றது, இவள் இலக்குமி என்றவாறு. விண்தலையோ, மலையோ, விசும்போ என்றது தேவமகள், வரையர மகள், விஞ்சையர் மகள் என்றவாறு. மறந்து நின்றுள் பூங்குழல் மான்விழிக் கொத்தது இடம் தாமரையோ விசும்போ என்க. சூஎ

### 25. முகம்புகு கிளவி

தேரோ திருவல்குல் மேனகை யோமலர்ச் செந்திருவோ
யாரோ இவரிங் கறியப் பெறுகிலம் ஆடகப்பொன்
வாரோ டிகலி வளர்கின்ற பார வனமுலைக்கு
நேரோ மருங்குலும் நெஞ்சமும் நாணும் நிறையுமின்றே.

**(உரை)** தலைவன் தலைவியை எதிர்பார்த்து நிற்றல். முகம்புகுதல் - தயவை எதிர்பார்த்து நிற்றல். 'முகம்புகுத லாற்றுமோ மேல்' - **நாலடி.** ௩௦௬. ஆடகப பொன் - நால்வகைப் பொன்னுள் ஒன்று. வாரோடு இகலி - கச்சோடு பொருது. நேரோ மருங்குல் - இடை அப்பாரத்தைத் தாங்கவல்லதோ என்றபடி. 'இவரார் அறியப் படாது விடாயுடனே இருந்தேன், அவரா குலபபடி தானுமி ரார்பொன் அசலமிரு, கவராய் முளைத்த புயன்கரு மாணிக்கன் கார்செய்வெற்பில், சுவையா ரமுதும் இரண்டிள நீருஞ் சுமந்துகொண்டே' - **கருமாணிக்கன்கோவை.** ௬அ

### 26. புணர்ச்சியின் மகிழ்தல்

மெய்வாய்கண் மூக்குச் செவிஎனும் நாமங்கள் மேவப்பெற்ற
ஐவா யினும்நின் றருந்தின ரோஅருந் தானவர்முன்
உய்வான் மலைகொண் டொலிநீர்க் கடல்கடைந் தும்பரென்போல்
மைவார் அளக மடந்தைநின் போலும் மருந்தினையே.

**(உரை)** ஐவாயினும்: 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம் புலனும், ஒண்டொடி கண்ணே உள' - **குறள்** ௧௧0௧. தானவர் முன் - அசுரருக்கு முன்னாக. மலை - மந்தரமலை. உம்பர் - தேவர். மை வார் அளகம் - கருங்கூந்தல். மருந்து - அமுதம். எனக்குக் கிடைத்த நீ உம்ப ருக்கும் கிட்டாத அமுதம் என்றவாறு. 'யாரும்பர் பதமென்போல் எய்தினர்...தேருந் தொறும்இனி தாந்தமிழ் போன்றிவர் செங்கனிவாய், ஆருந்தொறும் இனி தாய்அமிழ் தாம்என தாருயிரே' - **தஞ்சை.** ௫௬. **இ. வி.** ௩௩௩. (பா - ம்) ஒலி நீர்க்கடைந்த அன்றும்பரென்போல். ௬௯

## 27. பாங்கியொடு வருகெனப் பகர்தல்

முன்ஞவி வந்த முருகன்னவை வேற்கண் முனேகவர்ந்த
என்ஞவி நல்கும் இதுநினே யேலின்று போலினிய
நன்ஞவி வாச நறுங்குழ லாய்வரில் நாளேஇங்கு
நின்ஞவி அன்னவள் முன்ஞக அன்றி நிலேயலேயே.

(உரை) இனி நீ இவ்விடம் வரும்போது உன் உயிர்பபாங்கியோடு வருக என்று தலேவன் தலேவிக்குக் கூறுதல். இது நினேயேல் - இப் படித் தனியே வர எண்ஞதே, ' நின்பாங்கிக் கினிஒளித்திங், நடையுற் றிடுதல் நலனன்று ' - கோடி. சுசு. நாவிவாசம் - கத்தூரிவாசம். ஆவி யன்னவள் - உயிர் போன்ற பாங்கி. முன்ஞக - உடன் கொண்டு. நிலேயல் - வந்து நில்லற்க. இ. வி. கருரு. (பா - ம்) இது நினேவேல் ; நினேயலேயே. எO

## 28. ஆயத்துய்த்தல்

முற்றும் பழுதற்ற மொய்ம்முலே ஆகம் முயங்குமின்பம்
பெற்றும் பெருத பெருநலம் தந்தனிர் பேரளிகள்
சுற்றும் பரிமளச் சோலேயில் ஆயம் தொழுஅருவி
எற்றும் பணிவரைச் சீறூர் நலம்பெற எய்துகவே.

(உரை) பாங்கியர் கூட்டத்தில் செல்லுமாறு தலேவன் தலேவியை விடுத்தல். பெற்றும் பெருத நலம் என்றது, பிரிந்து விடுவதை எண்ணி. தந்தனிர் - தநதீ. பேரளிகள் - பெருவண்டுகள். சீறூர் - சிற்றூர். இ. வி. கருரு., பாங்கிற் கூட்டற்கு மேற்கோள். எக

## 29. நீங்கற் கருமை சாற்றல்

நடைபோல் குறுகும் நலிவா ரிடைச்செல்லும் நாணயனக்
கடைபோல் நெடுகும் கழிபடர் கூர்தரும் காமர்வஞ்சி
இடைபோல் மெலிய இருவினே யேனேஇங் கீடழித்துப்
புடைபோய் வளர்கள பத்தன மாகப் பொருப்பிடமே.

(உரை) தலேவன் தலேவியைப பிரிவதாலுண்டாகும் துயரத்தைக் கூறுதல். கழிபடர் - மிக்க துன்பம். இருவினேயேனே - என்னே.

களபத்தனம் : முலை. தனத்துக்கும் பொருப்பிடத்துக்கும் சிலேடை. இவள் நடை குறுநடை ; நடைபோல் மலை சிறு சிறு குன்றிடமாயுள்ளது. நலியும் கச்சிடையுள்ளது (வார் - கச்சு); துன்பந்தரும் வழியையுடையது (ஆரிடை - வழி); நயனக்கடைபோல் பெருத்திருக்கும்; நீண்டு உயர்ந்திருக்கும். இரண்டும் துன்பம் விளைவிக்கும். பொருப்பிடம், களபத்தனமாக, இங்ஙனம் செய்யும் என்க. (பா - ம்) களிர்படர். எ௨

### 30. பாங்கற் புகழ்தல்

**வா**ளா நமக்கு வழங்கிய தன்றிநம் வாட்டமுயிர்க்
கேளாகி வந்துபின் கேட்டது வோகண்டு கேட்டபின்னும்
தாளால் வருந்தியும் நெஞ்சால் அழுங்கியும் தாமுயன்று
கோளாக இன்னலம் கூட்டிய தோநம் குலதெய்வமே.

(உரை) தலைவியைக் கூட்டி வைத்த பாங்கனைத் தலைவன் புகழ்தல். உயிர்க்கேள் - உயிரென்னத்தக்க சுற்றம். வாட்டம் கேட்டது, சஉ; வருந்தியும் அழுங்கியும் கூட்டியது ௫உ, ௫சு, சுஙு. கூட்டியதற்கு நன்றி பாராட்டிய பாங்கனைக் ' குலதெய்வம் ' என்கிறான். எ௩

## ௫. பாங்கி மதி யுடன்பாடு

பாங்கி மதியுடன் பாடு - தலைவனுக்கும் தலைவிக்குமுள்ள அன்பைப் பாங்கி அறிந்து, அதற்கு உடன்படுதல்.

### 1. அவ்வகை எழிலும் ஐயமுற்றோர்தல்

**பூ**ங்கேச மன்றல் புனையா எழில்வெண் புதுமதிகண்(டு)
ஆங்கே இகழ்தல் அருகிய உண்டி அருஞ்செலவு
தீங்கேதங் காத்தல் ஒருவயி னேசென்று சென்றுநிற்றல்
தாங்கே வலமல்ல வந்ததென் னோஇந்தத் தையலுக்கே.

(உரை) தலைவி எழிலின் வேறுபாடுகளைக் கவனித்த பாங்கி ஐயமுற்று ஆராய்தல். கேசமன்றல், புனையா எழில், மதி இகழ்தல், அருகிய உண்டி, அருஞ்செலவு, ஏதங்காத்தல், சென்று நிற்றல் என்ற குறிப்புக்

களைப் பாங்கி கண்டாள். கேச மன்றல் - கூந்தலின் மணம். புனையா எழில் - தன்னை அழகு செய்து கொண்டமை. அருகிய உண்டி - உணவு குறைந்தமை. அருஞ் செலவு என்றது, வண்டலும் ஊசலும் மறந்து செல்லுதலை. ஏதங்காத்த லென்றது புதிதாய் அவளிடத்துத் தோன்றியுள்ள நாணை. **குலோத்துங்க சோழன் கோவை, மதுரைக் கோவை** முதலியவற்றுள், இக்குறிப்புக்கள் ஒவ்வொன்றும் தனித் துறையாக அமைக்கப் பெற்றிருக்கும். இவை மேலே கூறிய நாற்றம் (மன்றல்) முதலிய ஏழு ; அவையாவன : நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினை மறுத்தல், செலவு, பயில்வு என்பன. **இ. வி.** கஙகு, நாற்ற முதலிய ஏழானும் ஐயமுற்றோர்தற்கு மேற்கோள். (பா - ம்) நீங்கே கரத்தல் ஒருவயினே என்றும் சென்று. எச

## 2. ஐயம் கரந்து தையலை வினுதல்

தழங்கும் அருவியும் தாம்பணி ஊசலும் கந்துகமும்
கழங்கும் பெரிதுநின் றுடினை யோகளி மாமயில்கள்
வழங்கும் கரிய வரிக்குயி லோடு வரவழைத்தோ
பழங்கண் பசலை புரிந்துபைங் கோதை பரிவுற்றதே.

(உரை) பாங்கி தன் ஐயத்தை மறைத்துத் தலைவியைக் கேட்டல். தழங்கும் அருவி - இரைத்து வரும் அருவி. தாம்பணி - கயிறு கட்டிய. கந்துகம் - பந்து. கழங்கு - அம்மனை. கண் பசலை புரிநது என்றது, கண்ணின் ஒளி மாறுபட்டமையை ; 'கண்ணுஞ் செவ்வரி படர்ந்தன்று '- **சிற்றட்டகம்.** பரிவுற்றது - துன்புற்றது. ' இரும்பொழில் வாய்ப் பண்ணை யாயத்துக் கோலமென்பூம், பந்தாடலினடி நொந்துகொல் பைங் கழ லெம்மன்னமேல், வந்தா டலின்அடி நொந்துகொல் வாணுதல் வாடியதே ' - **பாண்டிக் கோவை.** ' புனை யிழை யாயமொடு பூம்பந் தெறியவும், நனைமலர் ஞாழல் ஒள்வீ கொய்யவும், வருந்தினள் கொல்லோ மடந்தை, பிரிந்தன்று மாதோ பண்புகெழு நிறனே ' - **பொரு ளியல்.** எரு

## 3. கரந்துறை

கோடிய தண்பிறை தோய்குன்ற மீதுபைங் கொன்றையென்ன
நீடிய பூங்குழல் நேரிழை யாய்நென்னல் நின்னைஒழிந்(து)

ஆடிய பூஞ்சுனை வாய்அளி மூசி அளித்தவண்ணம்
வாடிய தன்றி வருந்திய காரணம் மற்றில்லையே.

(உரை) தலைவியினிடத்துக் கண்ட வேறுபாடுகளுக்குக் காரணம் யாதென்று வினவிய பாங்கிக்கு, தலைவி ஒரு சுனையாடி வந்தமையால் ஏற்பட்ட வேறுபாடுகள் என்று கூறுதல். கரந்துறையாவது உள்ளக் குறிப்பை மறைத்துச் சொல்லுவது. கோடிய - வளைந்த. பைங்கொண்டல் - கரு மேகம். நென்னல் - நேற்று. ஆடிய - நீராடிய. அளி மூசி - வண்டு மொய்த்து. இத்துறை, சுனை நயப்புரைத்தல் என்னவும் பெறும். 'அரி கேசரி யானை தங்கும், பொதியிலின் ஆங்குனை நீங்கிய போதொரு பூஞ் சுனைவாய், விதியதுதான் கொடுபோய்ப புனலாட்டு விளைவித்ததே' - **பாண்டிக் கோவை.** குன்றத்தின்மீது தங்கிய கொன்றை போன்றது, குழல்மீதுள்ள பூ. இ. வி. கஙு(டு). (பா - ம்) கோடியர்; கொண்டலன்ன; பைங்குழல்; உன்னை; இனிதாக அழித்த வண்ணம். எசு

### 4. ஆடிய சுனையின் அணிநலம் வியத்தல்

நீலம் பவளம் படரப் பவள நிறந்தரளக்
கோலம் புனைய நுதல்குறு வேர்எழக் கோமளமே
போலுந் திருநிறம் பொன்னிற மாகஇப் பூஞ்சுனைநீர்
ஏலங் கமழ்குழ லாய்கிடை யாதுகொல் எங்களுக்கே.

(உரை) கேட்ட பாங்கி, சுனை இங்ஙனம் செய்ததோ என்று வியந்து கூறுதல். நீலம் பவளம் படர: கருங்கண் சிவக்க. பவள நிறம் தரளக் கோலம் புனைய: செவ்விதழ் வெளுக்க. குறுவேர் - சிறு வேர்வை. குழலாய்: விளி. கிடையாது கொல் - கிடைக்காதோ என்ற படி. 'அறலார் குழலாய் நுதற்குறு வேர்வும் அழகும் நின்போற், பெறலா மெனிற் குடைவேன் அடியேனும் பெருஞ்சுனையே' - **தஞ்சை.** சுசு. 'நின் கொங்கையில் அங்கழி குங்குமமும், மைந்நிற வார்குழல் மாலையும் தாதும் வளாய்மதஞ்சேர், இந்நிற மும்பெறின் யானுங் குடைவேன் இருஞ்சுனையே' - **திருக்.** சுக. இ. வி. கஙு(டு), கரவு நாட்டத்திற்கு மேற்கோள். (பா - ம்) புனைசுனை நீர். எஎ

## 5. பிறைதொழு கென்றல்

மருமாந் தளிர்புரை வண்ணமும் செவ்வி வடிவுங்கண்டு
திருமான் பணிமலர்ச் சீறடி யாய்தொழு செங்கணவ்வி
ஒருமான் கரத்தும் ஒருமான் புடையும் உடையஎங்கள்
பெருமான் சடையொக்கு மேசெக்கர் வானும் பிறையுமின்றே.

(உரை) அந்தி வானத் தெழுந்த பிறையைத் தொழுமாறு பாங்கி தலைவியை அழைத்தல். தலைவி ஒரு காதலனைக் கூடி யொழுகியிருந்தா ளானல், அவனையன்றி வேறு தெய்வம் தொழுமிடத்துத் தனது கற்பு அழியுமென்று அவள் தொழாது நிற்பாள்; இதனால் அவளது ஒழுக்கம் வெளிபபடும் என்று பாங்கி எண்ணிக் கூறுகிறாள். மரு மாந்தளிர் புரை வண்ணம் - மணம் பொருந்திய மாந்தளிரை யொத்த நிறம். திரு - இலக்குமி. சீறடியாய் - சிறு அடியுடையவளே. தொழு - தொழுவா யாக. ஒருமான் புடையும் என்றது, இடப்பக்கத்திலுள்ள உமாதேவியை. செக்கர்வான் - சிவந்த அந்தி வானம். 'திளைக்குந் திரைமே லுனக்கு முன் தோன்றலின் சேமவெற்பை, வளைக்கும் பிரான்முடி வைகுத லால் தஞ்சை வாணன்மண்மேல், விளைக்கும் புகழ்போல் விளங்குதலால் செக்கர் விண்பிறைகார், தளைக்குங் குழற்றிரு வேதொழ வேதகும் தன் மையதே' - தஞ்சை. ௬௪. எஅ

## 6. தகையணங் குறுத்தல்

மைகவால் வளைகறங் கக்கழுங் காடிஎன் காதல்வஞ்சி
மைவாவி அந்தண் மலர்கொய்யச் சென்றனள் வண்பவளச்
செவ்வாய் வெளுப்பும் கருங்கண் சிவப்பும் நுதல்வியர்ப்பும்
ஒவ்வா தொழிந்தளல் லாமணங் கேநின்னை ஒக்குமின்றே.

(உரை) தலைவி வேறுபாட்டைக் கண்ட தோழி, தான் உணர்ந் ததை புலப்பட, அவளைத் தெய்வப் பெண்ணாகப் பாவித்துக் கூறுதல். அதாவது, உன் வேறுபாடுகள் சில நிற்க,மற்றைத் தோற்றம் மலர்கொய்யச் சென்ற என் தலைவியை ஒக்கும் என்றல். வால் வளை - வெள்ளிய வளை. கறங்க - சுழல. காதல் வஞ்சி: தலைவி. மை வாவி - கரிய தடாகம். உன்னிடம் காணும் வெளுப்பும் சிவப்பும் வியர்ப்பும் அவளை

ஒவ்வா தொழிந்த; இவை களவுக் கூட்டத்தால் விளைந்த குறிகள். எல்லாம் - பிற எல்லாம். அணங்கு - தெய்வப் பெண். 'செவ்விக் கமல வெயரும் மைக் காவிச் சிவபபுமிந்தக், கொவ்வைக் கனியில் வெளுப்பு மல்லால் இயற் கூடல்வந்த, நவ்விக் கரத்தர் திருவால வாயின்று நா னகன்ற, பவ்வத் திருவென்ன லாம்அணங் கேநின் படிவத்தையே' மதுரை. ௧௦௭. ௭௬

## 7. நடுங்க நாட்டம்

மருவிய செங்கதிர் ஒன்றினை வாங்கி வகிர்ந்துமுகம்
செருகிய திண்கிரி செல்வது போலும் தினையிருவிக்
குருவி இனங்கள் மகளிர்பந் தாடிய கொள்கைஒப்ப
வெருவி எழுந்து விழுங்குளிர் சாரலில் வேழமொன்றே.

(உரை) தலைவனுக்கு ஏதம் வந்தது என்று சொல்லி, கேட்ட தலைவி நடுங்குவதைக் கண்டு அவளிடம் உண்மையை அறிவதை நாடிப் பாங்கி கூறுதல். செங்கதிர்: ஒளி மிக்க வேல் என்றபடி. முகம் வகிர்ந்து செருகிய; வகிர்ந்து - பிளந்து. திண் கிரி - வலி பொருந்திய மலை செல்வதை யொத்து. தினை இருவி - தினைத் தாளில். குருவி இனங்கள் எழுந்து விழும் சாரல் என்க. வெருவி - அஞ்சி. வேழ மொன்று செல்வது போலும் என்க. 'கோடுங் குடருங் குருதியு மாயலை குங்குமநீ, ராடும் கடமலையொன்று கண்டேன் அயலே...சூடுஞ் சுடரிலை வேல்தூரந் தாளொரு தோன்றலுண்டே' - மதுரை. ௧௧௧. ௮௦

## 8. பிரிவுழிக் கலங்கல்

தனியே இடந்தலைப் பட்டுமென் னுருயிர் தந்தஅந்தண்
பனியோர் நறுமலர்ப் பாவையை மேவிநம் பாரநெஞ்சே
இனிஏது சென்றெய்து மாறென்று நீநின் றிரங்கலென்னோ
கனியே இதழ்வஞ்சி கண்சொன்ன ஆருயிர் கண்டுவந்தே.

(உரை) தலைவியைப் பிரிந்த தலைவன் கலங்குதல். ஆருயிர் தந்த - உயிரைப் போகாது நிறுத்திய. பாவையை - தலைவியை. இரங்கல் என்னோ - வருந்துவது என். கனியே இதழ் - கொவ்வைக் கனிபோலும் இதழுடைய. வஞ்சி கண் சொன்ன - தலைவியின் கண்ணு

னது சுட்டிக் காட்டிய ; கண் சொன்னது, உக-ஆம் செய்யுள். நெஞ்சே, ஆருயிர் கண்டு வந்தும், எய்துமாறு எது என்று நீ இரங்கல் என்னே என்க. அக

## 9. பாங்கியை இரவு வலியுறுத்தல்

குளிக்கும் சுனையினும் கொய்மலர்க் காவினும் குன்றுநின்று
விளிக்கும் சிலம்பினும் வெண்மணற் சோற்றினும்வேரியந்தேன்
துளிக்கும் பனிமலர்க் கொம்பைவி டாதஅத் தோகையைஇன்(று)
அளிக்கும் தனிநெஞ்ச மேஇனி நாம்சென் றடைகுவமே.

(உரை) பாங்கியை இரக்கத் தலைவன் எண்ணுதல். இரவு - இரத்தல். குன்று நின்று விளிக்கும் சிலம்பு : வரை எதிர் கூவல் என்னும் மகளிர் விளையாட்டு ; 'பொங்கர், இடத்தினில் ஒதுங்கி வெற்பின் எதிரெதிர் கூவி மஞ்ஞை, நடித்திடும் ஆடல் நோக்கித் திரிந்தனர் நங்கை மார்கள்' - **கந்தபுராணம்** தெய்வயானையம்மை திருமணப படலம், ககரு. மணற்சோற்றினும் - மணற்சோறு சமைத்து விளையாடும் விளையாட்டினும் என்றவாறு. வேரி - மணம் நிறைந்த. கொம்பை : கொம்பு போல்வாளான தலைவியை. விடாத அததோகை : பிரியாத பாங்கி. அஉ

## 10. புனங் கண்டு மகிழ்தல்

உவரும் புலவும் ஒழிக்கும் கழிப்புன்னை ஒண்மலர்த்தா(து)
இவரும் துறைஅன்ன மென்னடை யாரிதண் ஏறமுல்லைப்
பவரும் கறியும் படர்கொழுஞ் சாரற் பசுந்தினையைக்
கவரும் கிளியினுக் கின்றுகைம் மாறொன்றும் கண்டிலமே.

(உரை) தலைவி காக்கின்ற தினைப்புனங் கண்டு தலைவன் மகிழ்ந்து கூறுதல். உவர் - உப்பு. புலவு - புலால். புன்னை - கடற்கரைக்குரிய மரம். இவரும் - பொருந்திய. நடையார் - தலைவி. இதண் - புனங் காத்தற்குரிய பரண். பவரும் - நெருங்கிய கொடியும். கறியும் - மிளகுக் கொடியும். கைம்மாறு : கிளி கவருதலைத் தவிர்க்க வேண்டியே தலைவி புனங் காக்கின்றுளாதலால். இத்துறை கிள்ளை வாழ்த்து என்னவும் பெறும் ; 'இளமானைஇங் கெய்துவித்த மான்வாழி கிள்ளை யினம் வாழி' - **மதுரை**. எஎ. இ. வி. கஙரு. (பா - ம்) பவருங்கொடியும். அங

### 11. ஊரும் பெயரும் தாரையும் வினுதல்

உரைக்கும் பெயரும் உறையும் பதியுமெம் ஊர்க்குமுங்கள்
வரைக்கும் பெயரும் வழியும்சொல் லீர்மணி வாய்திறக்கில்
விரைக்கும் குமுத மலரிற்செந் தேனை விரும்பிவண்டு
நிரைக்கும் சுரிகுழ லீர்உகு மோமணி நித்திலமே.

(உரை) பாங்கியைக் குறை இரக்க எண்ணிய தலைவன், அவளது ஊரும் பெயரும் ஊருக்கு வழியும் வினுதல். தாரை - வழி. விரைக்கும் குமுத மலர் - மணம் பொருந்த வாயிதழ். சுரி குழலீர்: பாங்கியை விளித்தது. உகுமோ மணி நித்திலமே - வாயின் முத்து உதிருமோ என்க. 'விந்தாசனி கொண்கன் வேந்தரி லாண்பிள்ளை வென்றி வெற்பில், கொந்தார் தினைப்புனங் காவல்நிற் பீர்வழி கூறுமென்று, வந்தார் சிலர்க்கு வழியறி வாரொரு வார்த்தை சொன்னால், சிந்தாது காணும் பவழச்செவ் வாயிற் றிருமுத்தமே' - **வங்கர் கோவை.** அ௪

### 12. மான் கேடு வினுதல்

விண்போய் வளரிள வேங்கையும் காந்தளும் பூங்குவளைத்
தண்போ துடன்கமழ் தண்ணறுஞ் சாரலில் தங்குமுங்கள்
கண்போல் பிணையும் கலையுமிங் கேவரக் கண்டதுண்டோ
பண்போல் மொழிகொண்டு பைங்கிளி யோடு பகைத்தவரே.

(உரை) தன் வேட்டையில் தப்பிய மான் அங்கு வந்ததோ என்று அவளைத் தலைவன் கேட்டல்; கேடு - கெட்டு வந்தது. வேங்கை - வேங்கை மரம். பண்போல் மொழிகொண்டு என்றது, கிளியின் மொழியும் இனிமையுடைமையால். பகைத்தவர்: பகைத்து ஓட்டுதலினால் - 'தத்திச் சிலைத்தெழுந்து தார்குருதி மெய்சோர, இத்திக்கில் இந்தப் புனத்திடையே - தித்தித்தேன், போந்தனைய சோர்குழலீர் யானெய்த போதொருமான், போந்ததே இவ்வழியே புக்கு' - **பழம் பாட்டு.** அரு

### 13. யாரே இவர்மனத் தெண்ணம் யாதெனத் தேர்தல்

ஈங்கார் இவர்நினை வேதென் றறிந்திலம் எப்படியும்
தாங்கா ரியமுள்ள தன்மையர் போல்வர் தனைஅவிழும்

பூங்கார் அனைய புரிகுழல் காவற் புனத்தைவிட்டு
நீங்கார் அணுகல்செய் யார்நின்று நோவர் நெடிதுயிர்த்தே.

(உரை) இவன் கூறுவன ஒன்றுக்கொன்று மாறாயுள்ளமையால், இவன் யார், இவன் எண்ணம் யாதாகும் என்று பாங்கி தன் மனத்துள் ஆராய்தல். புரிகுழல் காவற் புனத்தை - தலைவி காக்கும் இப்புனத்தை. நெடிதுயிர்த்து - பெருமூச்சு விட்டு. 'வாயுற் றதுபொய் கருத்துற்ற தூஉம், மெய்யுற்ற தூஉமறி யோம்எவ ரோஇந்த வித்தகரே' - கோவை. அக. அ௬

### 14. எண்ணம் தேர்தல்

கூடமலை என்பர் கலைஎன்பர் மானென்பர் கன்னிகொங்கை
வடமலை தாங்க மருங்குலெங் கேஎன்பர் வாளருவித்
தடமலை மேலுங்கள் சீறூர் எதுஎன்பர் தாரைஎன்பர்
அடமலை வேலவர் எண்ணமென் னோஇங் கறிந்திலமே.

(உரை) அவள் அவன் எண்ணத்தைத் தன் மனத்துள் ஆராய்தல். என்பர் - என்று சொல்லி வினவுகிறார். வேலவர் - வேலையுடையவர். அஎ

### 15. இதுவுமது

புனத்தே வருவர்நல் லோர்குறை போலப் புகலவென்று
மனத்தே எழும்சொல்ல மாட்டார் வருந்துவர் வண்தழைகொண்(டு)
இனத்தே பிரிந்த கலைவின வாநிற்பர் ஈங்கிவர்தாம்
நினைத்தே உழல்கின்ற தென்னறி யேன்ஒன்றும் நேரிழையே.

(உரை) நேரிழையே: தலைவியை நோக்கிப் பாங்கி கூறுகிறாள். தழை கொண்டு: தலைவியைக் கூடுமுன் அவளுக்குக் கையுறையாகத் தலைவன் கொடுத்தற்குரிய தழையுடையைக் கொண்டுவந்து. 'முடித்த குல்லை இலையுடை நறும்பூச், செங்கால் மராஅத்த வாலிணர் இடையிடுபு, சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை, திருந்து காழல்குல் திளைப்ப உடீஇ' என்ற திருமுருகாற்றுப்படை வரிகள் தழையுடையின் இயல்பைத் தெரிவிக்கின்றன. அஅ

மறைமலையடிகள் நூல் நிலையம் MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

## 16. தெளிதல்

தேரும் கருங்கலை பொய்உழை பொய்மழைச் செங்குருதி
வாரும் கடமலை பொய்வழி பொய்நம் வளமலையில்
சாரும் புதியவர் வேட்டைஎல் லாம்இத் தளிரியலார்
பேரும் பதியும் மருங்குலும் ஆனது பின்புவந்தே.

(உரை) இவ்வகை ஆராய்ச்சியால், தலைவன் தலைவியைப பெறு தற்கு எண்ணினன் என்று பாங்கி தெளிதல். கலை, உழை, கடமலை, வழி பொய் என்க. கலை, உழை - மான். குருதி வாரும் - இரத்தம் ஒழுகுகின்ற. புதியவர் : தலைவன். இவன் வேட்டையெல்லாம், இத்தளி ரியலார் வேட்டையே, பேரும் பதியும் மருங்குலும் பின்னே தோன்றிய வை என்க. மருங்குல் என்றது மேலே 'கன்னி கொங்கை, வடமலை தாங்க மருங்குல் எங்கே' (அஎ) என்று வினவியமை குறித்து. 'மழை காட் டியமத மாவந்த தோளனும் மாற்றம்பொய்கைத், தழைகாட்டி நம் குல மானைக்கொண் டேகிடச் சார்ந்தனரே' - கோ௨. அஉ. அ௯

## 17. கையுறை ஏந்திவந் தவ்வகை வினுதல்

சாந்தகிற் போதும் தழையும் தருகுவன் சாற்றும்வென்றி
வீந்ததுப் போடொழி வேழம் கணைபட்டு வெண்தாளம்
சேந்ததுப் போதுமென் செவ்வாய் முறுவல் திருந்திழையீர்
போந்ததிப் போதிங்கு வந்ததுண் டோநும் புனத்திடையே.

(உரை) யானை வந்ததோ என்று தலைவன் கேட்டல் சாற்றும் - சொல்லும். வீநத துப்போடு - வீழ்ந்து ஒழுகும் குருதியோடு. கணை - அம்பு. தாளம் - முத்து. சேந்த துபபு ஓதும் : சிவந்த நிறமுடைய வாயிதழ். செவ்வா யிதழையும் வெண்தாள முறுவலையுமுடைய திருந் திழையீர், தருகுவன், வேழம் கணைபட்டு இபபோது போந்தது, இங்கு நும் புனத்திடையே வந்ததுண்டோ, சாற்றும் என்க. ௯௦

## 18. எதிர்மொழி கொடுத்தல்

உடுக்கும் கலையன்றி ஈங்கொரு நாளும் ஒருவர்வந்து
கெடுக்கும் கலைகண் டறிகிலம் யாம்கிளர் வானுலகை

அடுக்கும் கலைமதி துஞ்சுமஞ் சாரல் அருவிவெற்பா
தொடுக்கும் கலைஇனி வேறுமுண் டாயினும் சொல்லுகவே.

(உரை) தலைவன் வினவியவற்றுக்குப் பாங்கி விடை யளித்தல். உடுக்கும் கலை, ஆடை. கெடுக்கும் கலை, வேட்டையாடும் மான். அடுக்கும் கலைமதி - நெருங்கிய பிறைச்சந்திரன். வெற்பா : விளி. தொடுக்கும கலை - தொடுத்த தழையினலான ஆடை ; அல்லது தொகுத்துப் பேசும் பேச்சுக்கலை ; 'கணைக்கும் விழிக்கும் மனத்திற்கும் தபபிஎங்கும், நிலை யாதிங் குற்ற கலைகண்டி லேம்ஐய நீடுநின்போற், கலையாய் வதற்குப் பொழுதுள தோபுனங் காப்பவர்க்கே' - கோடீ. அசு. இ. வி. கஙரு. (பா - ம்) அருகு வெற்பா. ௬௧

## 19. இறைவனை நகுதல்

மின்னே தழைகொண்டு வேழமெய் தார்அந்த வேழம்வந்து
பின்னே பிணைபிரி யுங்கலை ஆனது பேசிலின்னம்
கொன்னே புகழும் குறுமுய லாகவும் கூடும்கொல்லோ
என்னே உலகில் இவரைஒப் பாரில்லை ஏவினுக்கே.

(உரை) பாங்கி தலைவனைப பரிகசித்தல். மின்னே : தலைவியை விளிக்கிருள். தழை கொண்டு வேழ மெய்தாரென்றது நகைக்குறிபபு. வேழம் கலையாயிற்று, பின் குறுமுயலாகவுங்கூடும் என்றது எளனம். கொன்னே - வீணே. ஏவினுக்கு - அம்பு விடுதற்கு. 'கான் விலங் கைத், தழையதின் எய்திட எய்தினர் ஈண்டித் தழையதனல், மழைமத வேழங் கயமாம் உழையும் மறிதருமே' - கோடீ. அஎ. இ. வி. கஙரு. (பா - ம்) இணைபிரியும் பிணையானது ; உகளுங் குறுமுயல். ௬௨

## 20. மதியின் அவரவர் மனக்கருத்து உணர்தல்

உள்ளம் களிப்ப விழியிணை யாலொரு வர்க்கொருவர்
கொள்ளும் குறைஒரு கோடிசொல் லாநிற்பர் கூர்வளைவாய்ப்
புள்ளின் தவமுடி யப்புன மேஇவள் காத்ததுவும்
துள்ளும் கருங்கலை யேஅவர் நாடத் துணிந்ததுவே.

(உரை) தலைவன் தலைவியர் எண்ணங்களைப் பாங்கி ஆராய்ச்சியால் உணர்தல். கூர்வளைவாய்ப்புள், கிளி. இவள் புனங்காத்ததும் அவன் கலை நாடி வந்ததும் பொய் என்றவாறு. ‘ கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள், என்ன பயனு மில ’ - **குறள் ககOO**. ‘ஏனல் காவல் இவளும் அல்லள், மான்வழி வருகுவன் இவனும் அல்லன், நரந்தங் கண்ணி இவனொடு டிவளிடைக், கரந்த உள்ளமொடு கருதியது பிறிதே, நம்முள் நாணுநர் போன்று தம்முள், மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல, உள்ளத் துள்ளே மகிழ்ப, சொல்லும் ஆடுப கண்ணி னானே ’ - **பழம்பாட்டு**. கூங

## சா. பாங்கியிற் கூட்டம்

பாங்கியிற் கூட்டம் - தலைவன் பாங்கி துணையால் தலைவியை அடைதல்.

### 1. முன்னிலை யாக்கல்

தழைக்கின்ற சந்தனத் தண்ணறும் சாரல் தவழுங்கொண்டல்
மழைக்குன்ற வாணர் மடவிய ரேநும் மழைக்கண்களால்
உழைக்கன் றையுமொழி யாலொரு கோடிபைங் கிள்ளையையும்
அழைக்கின்ற உங்களை யோபுனம் காவலர் ஆக்குவதே.

(உரை) தலைவியை முன்னிலையாக்கித் தலைவன் கூறுதல். மடவியரே : பெண்ணே. உழைக்கன்று - மான்கன்று. கிள்ளை - கிளி. கண்ணுக்குத் தோற்ற மானும் மொழிக்குத் தோற்ற கிளியும் வருகின்றன. எனவே, புனங்காவல் எவ்வாறு நடைபெறும் (இவை அழித்துவிடுமல்லவா) என்றவாறு. (இ. வி. கஙரு, கையுறை ஏந்திவந் தவ்வகை விளைதற்கு மேற்கோள். (பா - ம்) மலர்க்கண்களால் ; காவலும். கூச

### 2. அவற்குத் தோழி கூறல்

ஆக்கும் செயலென் அழியிலென் ஏனல் அரியபகல் [நாண்
காக்கும் தொழிலெம்மைக் கற்பித்தல் காண்அவர் கங்குலும்
வீக்கும் சிலையில் இருங்கணை கோத்து வெகுண்டுமனம்
தூக்கும் களிறு துரப்பரென் நீரினிச் சொல்வதுவே.

(உரை) மானும் கிளியுமன்றிக் களிறும் உண்டென்று பாங்கி தலைவனுக்குக் கூறுதல். ஆக்கும் செயல் என்றது, முந்திய பாட்டில் காவலர் ஆக்குவதே என்று தலைவன் கூறியதைப் பழித்து. எனல் அழியிலென் என்றது, கானவர் தாமே காக்கவல்லவர், ஆயினும் எம்மைக் கற்பித்தல் வேண்டிக் காவலராக்கினர் என்றபடி. அவர் - அக்கானவர். கங்குலும் - இரவிலும்கூட. நாண் வீக்கும் சிலை - நாணேற்றிய வில். துரப்பர் - வெருட்டி யோட்டுவர். ௧௫

## 3. உட்கோள் சாற்றல்

பொருகுன் றனைய புணர்முலை யீர்நும் புனங்குறித்து
வருகுஞ் சரங்கெட வெஞ்சரம் கோத்தெய்வன் மானுமுச்சி
திருகும் கவைநெடுந் திண்கோ டிரலையும் செந்தினையின்
அருகும் செறியஒட் டேன்அணு காமல் அகலநின்றே.

(உரை) யானையையும் மானையும் ஓட்டுவேன் என்று சொல்லித் தலைவன் தன் உள்ளத்திற் கொண்ட காதலைப் பாங்கிக்குக் கூறுதல். குஞ்சரம் - யானை. வெம் சரம் - கொடிய அம்பை. உச்சி திருகும் கவை நெடுந் திண்கோடு இரலை - திருகிக் கிளைகளா யமைந்த நீண்ட வலிய கொம்புடைய கலைமான். ௧௬

## 4. தோழிக்குத் தலைவன் கூறல்

இருளும் புயலும் முயலும் தவமிய லாதமுங்கச்
சுருளும் கருங்குழல் தோகையன் னீர்சொரி தேன்பருகி
மருளும்சுரும்பொடுவண்டறை பூந்தழை கொண்டுவந்தேற்(கு)
அருளுங்கள் நெஞ்சில் பிறப்பதெந் நாளின் றறிகிலனே.

(உரை) இருளும் புயலும் தவம் செய்தும் வாய்க்காத கருமை பொருந்திய குழல் என்க. அறை - ஒலிக்கின்ற. 'பூமென் தழையும் அம் போதும்கொள் ளீர்தமி யேன்புலம்ப, வாமென் றருங்கொடும் பாடுகள் செய்துநும் கண்மலராம், காமன் கணைகொண் டலைசெய்ய வோ முற்றக் கற்றதுவே' - திருக். ௯௦. (பா - ம்) வந்தோற்கு. ௧௭

## 5. குலமுறை கிளத்தல்

தாரூர் குழலிக்கு மாமலை நாடு தனித்திகிரித்
தேரூர் சிலம்பில் சிறுகுடி யூர்நின் திருநகர்நன்
னீரூர் கழனியும் நெல்லும் கரும்பும் நெருங்குமந்தண்
பேரூர் பெரும்புனல் நாடுநின் நாடெம் பெருந்தகையே.

(உரை) தங்கள் குலத்தின் தாழ்மையையும் தலைவன் குலச்சிறப்பையும் பாங்கி தலைவனுக்கு எடுத்துக் கூறுதல். கம்பராமாயணத்தில் குலமுறை கிளத்து படலம் என்றொரு படலமே உள்ளமை இங்கு அறியத்தக்கது. தாரூர் குழலி - மாலை யணிந்த குழலையுடைய தலைவி. தனித் திகிரித் தேர் ஊர் சிலம்பு - ஒற்றைச் சக்கரத் தேர்மீது வரும் சூரியன் தவழ்ந்து செல்லும் மலை. நன்னீரூர் - மருத நிலத்தூர் என்பது கருத்து. நீ பெருந்தகை, யாம் சிறுகுடி யூரினர், எனவே நம்மிடையே காதல் பொருந்தாது எனல். கூஅ

## 6. தலைவன் தலைவியை வியத்தல்

வானக முற்ற வரையக நாடன் மடந்தைஎன்றே
பானகை மென்மொழிப் பாவைசொன் ஞய்பணி வெண்தரளத்
தூநகை யின்னகைத் தோகையன் னளைச் சுரருலகில்
மேனகை என்றுகொண் டேநினை யாநிற்கும் என்நெஞ்சமே.

(உரை) தலைவன் தலைவியை உயர்த்தல் என்றும் பாடம். வானக முற்ற வரை - வானளாவி வளர்ந்த மலை. பாலநகை - வெண்ணகை. சொன்ஞய் : பாங்கிக்குக் கூறுதல். தரளத் தூநகை - முத்துப போன்ற தூயவெண் முறுவல். இன்நகை - இனிய நகையுடைய. சுரருலகு - தேவ உலகு. கூகூ

## 7. பாங்கி அறியாள்போன்று வினுதல்

வளையார் முளரி வருந்தமைக் காவியை வாவிகொய்தும்
சுளையார் பலவிருஞ் சோலையில் ஆடியும் தோகைஇனம்
விளையாடல் கண்டும் விருந்தய ராநின்ற வேல்நெடுங்கண்
இளையார் இவரிடை யார்கண்ண தோகண் இறைவனுக்கே.

(உரை) தலைவன் விரும்பிய மங்கை இன்னாளென்று அறியாதவள் போலப் பாங்கி வினாதல். வளையார் முளரி-வளையணிந்த தாமரையாகியகை. மைக் காவி - கருங்குவளை மலர். வாவி - தடாகத்தில். பல இருஞ் சோலை - பலவு அடர்ந்த சோலை. இளையார் - இளமங்கை. இவர் - இக்கூட்டத்தார்; யார்கண்ணதோ, கண் - யாரிடத்துக் காதல் உள்ளதோ. இறைவன் - தலைவன். 'வாங்கிருங் கானலுள் வண்டல் அயரும், தேங் கமழ் கூந்தல் மகளிருள், யாங்கா கியதோ பாங்குநின் னருளே' - நம்பி. மேற்கோள். ௧௦௦

## 8. அறியக் கூறல்

**ப**ண்ணார் மொழிமென் பவளச்செவ் வாய்முலை பைங்குரும்பை
விண்ணார் மதிமுகம் வேயிரு தோள்விரி நீருலகில்
பெண்ணார் அமுதன்ன பெய்வளை மொய்குழற் பேதைக்குநீ
கண்ணா குவைநினக் கங்குயிர் ஆவள் கனங்குழையே.

(உரை) தலைவி இன்னாள் என்பதைத் தலைவன் பாங்கி அறியும் படி கூறுதல். விண்ணார் - விண்ணிலே பொருந்திய. வேய் - மூங்கில். பெய்வளை - வளை பெய்துள்ள. ௧௦௧

## 9. இறைவி தன்மை இயம்பல்

**சீ**றும் களிற்றினம் தேறலும் தேறலும் சிந்தையும்நீ
மாறும் படிமெய் வருந்திய தாயினும் மாமழைவந்(து)
ஏறும் குலவெற்ப யானும் பிறரும் எதிர்நின் றன்ன
கூறும் தகைமைய தோகுன்ற வாணர் குலதெய்வமே.

(உரை) முந்திய துறை, இறையோன் இறைவி தன்மை இயம்பல் என்றும், இத்துறை, பாங்கி தலைவியருமை சாற்றல் என்றும் சொல்லப் பெறும். தலைவி பெறுதற்கரியாள் என்பதைப் பாங்கி தலைவனுக்குக் கூறுகிறாள். களிற்றினம் தேறல் - வேழம் வினாவி வருதல். குல வெற்ப : தலைவனே. பிறரும் : தலைவியும் என்பது குறிப்பு. குன்ற வாணர் குலதெய்வமாகிய என் தலைவி எதிர்நின்று கூறுந் தகைமையதோ என்க. ௧௦௨

## 10. இன்றியமையாமை கூறல்

சினத்துறை வாங்கிய திண்பிறை அன்பிற் சிலைக்குறவர்
இனத்துறை பூங்கொடி என்றல்ல வேஇசை ஏழுமந்தண் [என்
புனத்துறை கிள்ளையும் பூவையும் போல்மொழிப் பொற்றொடி
மனத்துறை தெய்வமென் றேஎன தாருயிர் வாழ்கின்றதே.

(உரை) தனக்குத் தலைவி இன்றியமையாதவளென்பதைப் பாங்கிக்குத் தலைவன் கூறுதல். சினத்துறை வாங்கிய - கோபத்தினாலே வளைத்த. பூங்கொடி மனத்துறை தெய்வம் என்க. 'வனைந்தாலன கொங்கை மாதுருவாய்...என் நல்வினை தான்வந்து நண்ணிற்றென்று, நினைந்தால் அணங்கனை யாய்தமி யேனுயிர் நிற்கின்றதே' - தஞ்சை. அஎ. கoரு

## 11. நின்குறை நீயே கூறென்றல்

மின்குறை கூற மெலியு நுண் ணேரிடை மெல்லியலுக்(கு)
உன்குறை கூறவும் யானஞ்சு வேனிகல் மாமதனன்
தன்குறை தீர்த்தருள் உன்திரு மேனி தளரநின்ற
நின்குறை கூறுக நீயே அலங்கல் நெடுந்தகையே.

(உரை) நின்குறையை நீயேசென்று உரைஎன்று பாங்கி தலைவனுக்குக் கூறுதல். குறை - காரியம்; பெரும்பாணாற்றுப்படை சசரு. அலங்கல் - மாலையணிந்த. 'தன்னையுந் தாணுணுஞ் சாயலாட் கீதுரைப் பின், என்னையும் நாணப் படுங்கண்டாய் - மன்னிய, வேயேய்மென் தோளிக்கு வேறு வினியொருநாள், நீயே உரைத்து விடு' - நம்பி. மேற்கோள். கoச

## 12. பாங்கியைத் தலைவன் பழித்தல்

பொற்பிணை யாமடப் பூவைமென் பாவை புருவமென்னும்
விற்பிணை யார்விழி மெல்லியல் ஆகம் விரும்பிஉன்றன்
சொற்புணை யாகத் துயர்க்கடல் நீந்தத் துணிந்ததுவன்
கற்புணை யாகமுந் நீர்கடப் பார்தம் கருத்தொக்குமே.

(உரை) பாங்கியைத் துணைகொள்ளத் துணிந்தது வீண் என்று தலைவன் அவளைப் பழித்தல். பொன் பிணையாம் - பொன் மானொத்த.

பிணையும் பூவையுமாகிய பாவை ; பூவை - நாகணவாய்ப் புள். புருவ வில்லும் பிணை விழியும் உடைய மெல்லியல். மெல்லியல் : தலைவி. சொல் புணையாக - விருப்பத்தால் விளைந்த துயர்க்கடலைக் கடக்க, உன் சொல்லே தக்க தெப்பமாக எண்ணி. வன் கல் புணையாக முந்நீர் கடப்பார் என்றது, அப்பர் சுவாமிகள் கல்புணையாகக் கடலினின்றும் கரையேறிய செய்தியை நினைவூட்டுகிறது. முந்நீர் - கடல். ௧௦௫

### 13. பாங்கி பேதைமை ஊட்டல்

செறியா தவருறு சிந்தைஎண் ணுள்சிந்தை யில்சிறிதும்
அறியாள் எனுமதற் கையமுண் டோஅடுங் கூற்றைஎன்றும்
குறியா விலங்கு துலங்கயில் வாளி குறியிற்பட்டு
மறியா விழுவளைக் கும்சிலை வாணர் மடமகளே.

(உரை) தலைவியின் அறியாமையைத் தலைவன் உணரும்படி பாங்கி எடுத்துக் கூறுதல். செறியாதவர் - கூடப்பெறாதவர் ; 'செறிதோறுஞ் சேயிழை மாட்டு' - குறள் ௧௧௧௦. அடுங் கூற்றை - கொல்லும் கூற்று வினை. வளைக்கும் சிலை வாணர் - தலைவியின் தந்தையாகிய கானவர். மட மகள் எண்ணுள், அறியாள் எனுமதற்கு ஐயமுண்டோ. ௧௦௬

### 14. தலைவன் மூதறிவுடைமை மொழிதல்

தன்னால் வருந்திய நெஞ்சமும் நாணுமோர் தஞ்சமற்ற
இன்னா அரும்பிணிக் கின்மருந் தாகி இணைவிழியால்
அந்நாளில் உன்னை அறிவித்த மானுக் கறிவின்மைநீ
சொன்னால் இயையும்கொல் லோதுடி நேரிடைத் தூமொழியே.

(உரை) தலைவி முதிர்ந்த அறிவுடையவள் என்று தலைவன் பாங்கிக்கு எடுத்துக் கூறுதல். தன்னால் - தலைவியால். நெஞ்சமும் நாணும - என் மனமும் நாணும். தஞ்சமற்ற - புகலிடமற்ற. இன்னா - கொடிய. இன் மருந்தாக - இனிய மருந்தொத்த புகலாக. அந்நாள் - அவளை நான் கூடிப்பிரிந்த அன்று. உன்னை அறிவித்த மான் : தலைவி. அறிவித்தமையை ௨௧ஆம் செய்யுளிற் காண்க. அறிவின்மை - பேதைமை. இயையுங் கொல்லோ - பொருந்துமோ. தூமொழி : பாங்கியைத் தலைவன் விளித்தது. ௧௦௭

### 15. பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல்

உறும்தாரை என்னொடு சாற்றுவ தென்கொலின் றன்னைமுன்னே
அறிந்தாரை எய்தற் கருமையுண் டோஅடை யார்மடியச்
செறுநதாரை வேல்வல்ல சேயனை யாய்செப்பில் நீஅறிய
நறுநதாரை வார்குழற் சூடினும் சால நடுங்கிடையே.

(உரை) தலைவிபால் முன்னமேயே தலைவன் நட்புக் கொண்டிருநத மையைப் பாங்கி அவனுக்குக் குறிப்பிடுதல். உறும் தாரை-அடையத்தக்க வழி. முன்னமே நீ தலைவியை அறிந்துள்ளமையால், அவளை அடைய அருமையுண்டோ, என்னொடு சாற்றுவதென் என்க. அடையார் - பகைவர். செறும் தாரை வேல் - கொல்லும் கூர்மையான வேல். சேய் - முருகன்; 'சேயோன் மேய மைவரை யுலகம்' என்ற **தொல்காப்பியம்** காண்க. தாரை வார் குழல் - ஒழுங்காய் அமைந்த கூந்தல். சால நடுங்கு இடை - மிக நடுங்கும் இடையுடைய தலைவியை, உறும் தாரை என்னொடு சாற்றுவதென். 'காவின்முன் கூடிய வாறின்னுங் கூடுகநீ, கறி வளர் சாரல் வெற்பா பிறராலென்ன காரியமே' - **தஞ்சை. கூஉ.** கoஅ

### 16. தன்னிலை தலைவன் சாற்றல்

கணைஒன் றியஇரு கண்வலைக் கேளன் கலைமுழுதும்
பணைஒன்று தோளிதன் பார்வையில் பட்டுப் பரிசழிந்து
துணைஇன்றி நின்று வருந்துறு வேற்கிவை சொல்லிநில்லாய்
புணைஇன்றி யார்கடப் பார்கடற் பாய்புனற் பொன்னியையே.

(உரை) கணை ஒன்றிய - அம்புபொருந்திய. கலை முழுதும் - கல்வியெல்லாம். பணை ஒன்று தோளி - மூங்கிலொத்த தோளுடைய தலைவி. பரிசழிநது - தன்மை கெட்டு. வருந்துறுவேற்கு - வருந்தும் எனக்கு. நில்லாய் என்றது, நீ சொல்லி நின்றால் போதுமோ, அவளை நீ எனக்குக் கூட்டவேண்டும் என்றவாறு. கடல் பாய் - கடலிலே சென்று பாய்கின்ற பொன்னி - காவேரி. கoகூ

### 17. பாங்கி உலகியல் உரைத்தல்

தன்னிற் கடவுளர் இல்லாத தன்மை தரித்தகங்கைச்
சென்னிக் கடவுள் செயலனை யாய்வெஞ் சிலைக்குறவர்

கன்னிக் கடவுள் அனையஎன் ஆவியைக் காந்தள்பற்றி
வன்னிக் கடவுள் வலம்வந்து கோடல் மரபியலே.

(உரை) ஒரு மங்கையைக் காதலித்த தலைவன் அவளை மணஞ்செய்து கொள்ளலே முறை என்று பாங்கி அவனுக்கு உரைத்தல்; உலகியல் - ஆன்றோர் செயல். கங்கை சென்னிக் கடவுள் - கங்கை சூடிய சிவபிரான். அனையாய்: தலைவனை விளித்தது. ஆவி: தலைவி. காந்தள்: கை. வன்னிக் கடவுள் - அக்கினியை. கோடல் - மணந்துகொள்ளுதல். 'தீயிற் கரியி னல்லாது இணங்காது எங்கள் செய்ய பொன்னே'- குலோத்துங்கசோழன் கோவை ககஎ. ககO

## 18. தலைமகன் மறுத்தல்

சிலைமேல் முகிலன்ன நன்னுதல் மீது செறிகுழலாள்
முலைமேல் முயங்குவன் நீசொன்ன வாறு முழுமணியின்
கலைமேல் அணிதழை அல்குனல் வாய்முன் கவிகொணர்ந்த
மலைமேல் மருந்துவந் தோதலை மேல்விடம் மாற்றுவதே.

(உரை) மணஞ்செய்ய மறுத்தல். சிலைமேல் முகில் என்றது மலைமீதுள்ள மேகம். நுதலுக்குவமை, சிலையாகிய வில். சொன்னவாறு: 'வன்னிக் கடவுள் வலம்வந்து கோடல் மரபு' (ககO) என்றவாறு. கவி கொணர்ந்த மலை: அனுமான் கொணர்ந்த சஞ்சீவி மலை. தலைமேல் விடம்: தலைக்கேறிய விடத்தை; விடம் தலைக்கேறினால் உடனே உயிர் போகும் என்பர். மருந்து வந்தோ மாற்றுவ தென்றது, மாற்றாது எனக் கூறியவாறு. இ. வி. கருஎ. கககூ

## 19. பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்

புதியார் வருமிடம் அன்றிது குன்றிற் புனக்குறவர்
மதியார் எவரையும் வாரலெம் சாரலில் வந்துநின்னைத்
துதியார் அறுமுகன் தோற்றமுண் டாயினும் தோகைஇல்லை
நுதியார் கதிர்வடி வேலில்லை ஆகத்து நூலில்லையே.

(உரை) தலைவனைப் புனம்விட்டு நீங்குமாறு கூறி அஞ்சச்செய்தல்; அச்சம் - விகாரம். வருமிடம் - வரத்தக்க இடம். வாரல் - வாராதே.

உனக்கு அறுமுகன் தோற்றமுண்டாயினும், உன்னைத் துதியார். தோகை இல்லையென்றது, உனக்கு மயிலில்லாமையால் அவர் துதியாரெனவும், நீ தேடிவந்த பெண் இங்கில்லை எனவும் பொருள்படும். நுதியார் - கூர்மை பொருந்திய. நூல்-முப்புரி நூல். (பா - ம்) புனைக்குறவர். ககஉ

## 20. கையுறை புகழ்தல்

முலைக்கா மணிவடம் முத்திவை கோத்தணி மொய்தழைநின்
கலைக்கா மலர்திரு அல்குலுக் காம்இக் கருங்குவளை
சிலைக்காம வேள்கொடி சேர்குழைக் காமழை சென்றுதங்கும்
தலைக்கார் மயிலனை யாய்குழற் காம்இத் தழையுமின்றே.

(உரை) தான் கொண்டுவந்த கையுறையைத் தலைவன் புகழ்ந்து ஏற்குமாறு பாங்கியை வேண்டல். மணிவடம் முத்து இவை முலைக்கு ஆம் (ஆகும்). மொய்தழை நின் கலைக்காம். மலர் அல்குலுக்காம். கருங் குவளை குழைக்காம். சிலைக்காம வேள் கொடி - வில்லேந்திய மன்மதன் கொடியான மீன்; மீனொத்த கண் சென்று மோதும் குழை என்க. குழை - காதணி. அனையாய்: பாங்கியை விளித்தது. இத்தழையும் இன்று குழற்காம் என்றது, இக்கண்ணி கூந்தலுக்காகும் என்றவாறு. 'கண்ணி தகைசிறந் தனவே தண்ணென், பூநதழை செவ்விய போலும் வாங்கிருங், கூந்தலும் அல்குலும் பொலிய, ஏந்திழை கொள்கயாம் விழை குவம் பெரிதே' - நம்பி. அ மேற்கோள். ககங

## 21. உண்டென மறுத்தல்

ஆடுங் கழுங்கும் அடுஞ்சிறு சோறும் அகல்கழனிக்
கோடும் குளிர்புனல் ஆற்றுக் குரம்பும் கரும்புஞ்செந்நெற்
காடும் துணிந்திட்ட கைவினை யாளர் கவரும்கொற்று
நீடுந் தடந்துறை வாஎம தூரில்வெண் நித்திலமே.

(உரை) தலைவன் கொண்டுவந்த முத்துத் தம்மூரிலுள்ளதென்று கூறிப் பாங்கி கையுறை ஏற்க மறுத்தல். கோடு - வரம்பு. குரம்பு - கரை. நித்திலம் - முத்து. 'நீடுநீர்க் கானல் நெருநலும் நித்திலம்கொண் டைய வந்திர், கோடுயர் வெண்மணற் கொற்கை எம்மூர் இவற்றூற் குறைவிலம்

யாம், ஆடுங் கழங்கும் அணிவிளக்கும் அம்மனையும் பிறவுமெல்லாம், பாடி யவைப்பனவும் பந்தாடப் படுவனவும் பனிநீர் முத்தம்' - **இறையனார் அகப்பொருளுரை** மேற்கோள். ககச

## 22. இல்லென மறுத்தல்

பூங்கற்ப வண்டழை கொண்டுவந் தாலும் புனக்குறவர்
வேங்கைத் தழைபன்றி வேறறி யார்வெய்ய சேடனுச்சி
தாங்கத் தருமணி யுந்திரு மால்செங்கைச் சங்கின்முத்தும்
வாங்கக் கிடைப்பதன் றேஇடை வேறில்லை வாணுதற்கே.

(உரை) தழை முதலியன இல்லையென்று கூறிப் பாங்கி மறுத்தல். கற்ப வண் தழை - கற்பக மரத்தின் தழை. சேடன் - ஆதிசேடன். மணியும் முத்தும் வாங்கக் கிடைக்கும் என்றவாறு. வாணுதற்கு இடை இல்லை எனவே, கையுறை மறுத்தாள்; 'மின்னொரு நூலிடையோ தாங்கும் நீதரு வேய்முத்தமே' - **நூலோ.** கஉச. 'மாணெழி லண்ணல் வாங்கலம் யாமெம், சேணுயர் சிலம்பின் யாங்கணும், காணலம் மன்னோ இக் கமழ்பூந் தழையே' - **பொருளியல்.** 'கொல்லி மால்வரை வாய்க், கானக வாணரும் கண்டறி யார்இக் கமழ்தழையே' - **பாண்டிக் கோவை.** ககரு

## 23. ஆற்று நெஞ்சினோடு அவன் புலத்தல்

மாவையும் இன்சொற் குயிலையும் வண்புனல் வாவியையும்
காவையும் அங்ஙன் கலக்கிய பாவங் கவிரிதழும் [சென்ற
கோவையும் அன்னசெவ் வாய்நவ்வி பாற்கொண்டு கொண்டு
யாவையும் உள்ளதும் இல்லது மாய்விட்ட தென்செயலே.

(உரை) பாங்கி மறுத்தமை பொறாமல் தலைவன் வெறுத்துரைத்தல். கோவை - கோவைக் கனி; இதழுக்குவமை. கவிர் - முள்முருக்கு. நவ்வி - மானொத்த தலைவி. யாவையும் - கையுறை யனைத்தும். மா மரத்தையும் அதன் கணுள்ள குயிலையும் வாவியையும் சோலையையும் கலக்கியது பாவம்; அப்பாவத்தால், கொண்டுசென்ற யாவையும் உள்ளதும் இல்லதுமாய்விட்டது. என் செய்வது என்றபடி. உள்ளதும் இல்லதும்: உக, உஉ. ககசு

## 24. ஆற்றுவித் தகறல்

வென்றே புகழ்புனை வேலண்ண லேஇந்த வெற்பினுள்ள(து)
அன்றே எனினும் அரிவையை யானடி வீழ்ந்திறைஞ்சி
இன்றே திருத்தி இருந்தழை வாங்குவன் இற்றைக்குநீ
சென்றே வருக சிறுகால் முடியும்நின் சிந்தனையே.

(உரை) தலைவன் துயரத்தை ஆற்றுவித்துப் பாங்கி அவனைப் போக விடுதல். தழை இந்த வெற்பிலுள்ளதன்று எனினும், வாங்குவன், நின்சிந்தனை முடியும், சென்றே வருக என்க. புனக்குறவர் இவ்வெற்பின் வேங்கைத் தழையொன்றையன்றி வேறறியார் என்றது காண்க (கக௫). சிறுகால் - சிறிது நேரம். ககஎ

## 25. மடலே பொருளென மதித்தல்

தலையாய நண்புடை யார்தளர்ந் தாருயிர் தாங்குதற்கோர்
நிலையாக வைத்துமுன் னின்றில ரேல்வெய்ய நீணெடுங்கண்
வலையால் வளைப்புண்டு வார்குழற் கண்ணியில் வந்துபட்ட
கலையார் விடுக்கவல் லார்விடு வாரெவர் கைப்பட்டதே.

(உரை) பனை மடலாற் குதிரைசெய்து, அதனை வீதியில் ஊர்ந்து செல்லுதலே தலைவியைப் பெறுதற்குபாயமென்று தலைவன் கருதுதல். தலையாய நண்புடையார் என்றது பனையை; 'கடையாயார் நட்பிற் கமுகனையர் ஏனை, இடையாயார் தெங்கின் அனையர் - தலையாயார், எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே, தொன்மை யுடையார் தொடர்பு' - நாலடி உகசு. பனையைத் தலையாய நண்புடையார் என்றது, மடலேறுதற்கு உதவும் என்று குறிபபிட்டவாறு. தளர்ந்த என் உயிர் தாங்குதற்குப பனைமடல் நிலையாக முன்னிற்கும் என்று கூறிய வாறு. கண்ணி - வலை.

" மடலேறலாவது, தலைவன் ஒவ்வாக் காமத்தால, பனங் கருக்கால் குதிரை முதலியனவும் பனந்தருவிலுள்ளனவற்றால் வண்டில் முதலியனவும் செய்து அக்குதிரையின் மேலேறுவது. மடலேறுவான் திகம்பரனாய் உடலெங்கும் நீறு பூசி, கிழி ஓவியர் கைப்படாமல் தானே தீட்டி, கிழியின் தலைப்புறத்தில் அவன் பெயரை வரைந்து கைப்பிடித்து

ஊர் நடுவே நாற்சந்தியில் ஆகார நித்திரையின்றி அக்கிழி மேற் பார்வையுஞ் சிந்தையு மிருத்தி, வேட்கை வயத்தனாய் வேறுணர்வின்றி ஆவூரினும் அழல் மேற்படினும் அறிதலின்றி மழை வெயில் காற்றால் மயங்காதிருப்புழி, அவ்வூரிலுள்ளார் பலருங்கூடி வந்து, 'நீ மடலேறுதியோ? அவளைத் தருதும், சோதனை தருதியோ?' என்றவழி இயைந்தானாயின் அரசனுக்கு அறிவித்து அவனேவலால் அவனிளைந்து நையத்தந்து 'மடலேறு' என்றவழி, ஏறு முறைமையாவது: பூளைபூ எலும்பு எருக்கு இவைகளாற் கட்டிய மாலை யணிந்துகொண்டு அம்மாவில் ஏற, அவ்வுடத்தை வீதியில் ஈர்த்தலும், அதனுருளை உருண்டோடும்போது, பனங்கருக்கு அறுத்த இடமெல்லாம் இரத்தந் தோன்றாது வீரியந் தோன்றின் அப்போது அவளை அலங்கரித்துக் கொடுப்பது. இரத்தங் கண்டுழி அவனைக் கொலைசெய்து விடுவது. இவை புலவர் நாட்டிய வழக்கென்றுணர்க" - **தஞ்சைவாணன் கோவை யுரை.** கக அ

## 26. உலகின்மேல் வைத்துரைத்தல்

கொம்மைப் பணைமுலை கூட்டும் பரிசு கொடியிடையார்
தம்மைப் பெறுதவர் தாலப் புரவியும் மாலைஎன்பும்
வெம்மைச் சுடலையின் நீறுமென் பூளையும் வெள்ளெருக்கும்
இம்மைக்கு நாடி மறுமைக்கும் ஆனதென் றெண்ணுவதே.

(உரை) முன் நட்புடைய தலைவியைப் பெறுவிடில் ஒருவன் மடலூர்ந்து பெறுவது உலகியல் என்று தலைவிக்கு எடுத்துக் கூறுதல். கொம்மை - திரண்ட. தாலப் புரவி - பனை மடலாலான புரவி. என்பு மாலை, சுடலை நீறு, பூளை, வெள்ளெருக்கு என்பன சூடுவது மரபு. "மாவென மடலும் ஊர்ப பூவெனக், குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப, மறுகின் ஆர்க்கவும் படுப, பிறிதும் ஆகுப காமம் காழ்க் கொளினே' - **குறுந்.** கள. 'மங்கையர்தங் கண்ணால் மயங்கினோர் வெள்ளெலும்புந், துங்க எருக்கும் தொடுத்தணிந்து - அங்கமெலாம், வெந்தேறு சாம்பல் மிசைஅணிந்து வீதிதொறும், வந்தேறி யூர்வர் மடல்' - **கிளவித் தெளிவு.** 'நீறெருக் கென்பு மேலணிந்து, கையார் கிழியுடனூர்வர் பனைமடற் கந்துகமே' - **சிராமலைக் கோவை** ககரு. **இ. வி.** கருஎ.

(பா - ம்) நிலையாக இன்றுள நின்றிலரேல். கககூ

### 27. தன்மேல் வைத்துரைத்தல்

சோலையில் வந்தபைந் தோகைநல் லீர்மன்று சூழ்மறுகில்
காலையில் வந்தும்மைக் காண்பது நான்கரி யோன்கடைந்த
வேலையில் வந்த விடமுண்ட நாதர் விளங்கியபொன்
மாலையும் வண்ணக் கிழியும்வெண் ணீறும் மடலுங்கொண்டே.

(உரை) அம்மடலூர்தலைத் தான் செய்வதாகப் பாங்கியிடம் தலைவன் கூறுதல். கரியோன் - திருமால். வேலை - சமுத்திரம். நாதர் - சிவபிரான். பொன் மாலை - கொன்றை மாலை. வண்ணக் கிழி - தலைவி யுருவமெழுதிய கிழி. 'கிழி பிடித்துப் பாய்சினமா ஏறுவர் சீறூர்ப் பனைமடலே' - திருக். கஎ. மடலுங்கொண்டு உம்மைக் காண்பது நான் என்க. ௧௨௦

### 28. மடல் விலக்கு

பேணும் குலனும் புலனுங்குன் றுத பெருந்தகையாம்
பூணும் புகழும் பழியும் கிடக்கப் புதுநலனும்
நாணும் பணிமொழி யும்நவ்வி நோக்கும் நடையுமிங்ஙன்
காணும் படிஎழு திக்கொண்டு வாருமிக் கன்னியையே.

(உரை) மடலேறுதலைத் தடுக்க வேண்டி, தலைவியின் அவயவ அழகை எழுதுதல் அருமையாதலால், அதை நீ எழுதி வா என்று பாங்கி தலைவனுக்குக் கூறுதல். கன்னியை, நோக்கும் நடையும் காணும்படி எழுதி வாரும் என்க. 'கிளிசேர் மொழியுங் கருங்குழல் நாற்றமும் கேட்பின் ஐய, எளிதே எழுத எழுதிபபின் ஊர்க எழின்மடலே' - பாண்டிக் கோவை. (பா - ம்) பணிமொழி. ௧௨௧

### 29. தான்கற்ற புகழ்தல்

மிகுத்தேன் ஒருகிளி வேட்கையில் சால விசாலத்துள்ளே
தொகுத்தேன் நிதம்பமும் தோளும் தனங்களும் சூதவடு
பகுத்தே பதித்த தெனஎன்னை வாழ்வித்த பாதகக்கண்
வகுத்தேன் வகுத்தவற் கும்முடி யாதிந்த வல்லபமே.

(உரை) கிழி எழுதுவதில் தனக்குள்ள திறமையைத் தலைவன் புகழ்ந்து கூறுதல். மிகுத்தேன் - மிகுந்தவனாகிய நான். கிளி :- தலைவி.

சூதவடு - மாவடு; கண். வருத்தவற்கும் - படைத்தவனாகிய பிரமனுக்கும். வல்லவம் - அரிய செயல். ௧௨௨

### 30. பாங்கி அருளியல் கிளத்தல்

**ம**கிழ்ந்தாவி ஒன்றி மணந்தக லாத மடஅன்றில்வாய்
நெகிழ்ந்தா லுறுதுயர் நீஅறி வீர்இந் நெறிஉமக்குத்
தகுந்தா ரையுமன்று தண்ணளிக் கும்பிழை சாலுமன்பு
மிகுந்தாலும் இன்னசெய் யார்பெரி யோரிவ் விருநிலத்தே.

(உரை) மடலுக்காகப் பனையை வெட்டும்போது அதன்மீதுள்ள அன்றில் முதலியன துன்புறுமாதலால், இச்செயல் அருளியல்புக்கு மாறு என்று சொல்லிப் பாங்கி தடுத்தல். அன்றில் - பனைமீதுள்ள அன்றிற் பறவைகள். வாய் நெகிழ்ந்தால் - கலைந்தால். தகுந் தாரை - தகும் நெறி. அளி - கருணை. இன்ன - இவ்வகை. 'பெண்ணை, யுடனும் பெடையொடொண் சேவலு முட்டையுங் கட்டழித்து, மடனும் புனைதரின் யார் கண்ணதோ மன்ன இன்னருளே' - திருக். எஎ. ௧௨௩

### 31. பாங்கி கொண்டுநிலை கூறல்

**எ**ன்னால் உளது வணங்கியும் வாழ்த்தியும் ஏற்குவண்ணம்
சொன்னால் மறுத்தெதிர் சொல்லத் தகாளிருந் தோகைமயில்
அன்னாள் நிலைசென் றறிந்துநின் பால்வரும் அவ்வளவும்
மன்னா வருந்தல் பொருந்திய வாறுசெய் வந்தபின்னே.

(உரை) தலைவன் குறையை மனத்துட்கொண்டு, அது நீக்கத் தான் உடம்பட்டமையைப் பாங்கி கூறுதல். சொல்லத் தகாள், தலைவி. வந்த பின்னே - நான் அவள் நிலை யறிந்து வந்தபின்னே. 'இளமா எயிற்றிக்கு இந்நிலை யறியச், சொல்லினென் இரக்கும் அளவை, வெள்வேல் விடலை விரையா தீமே' - ஐங்குறுநூறு ௩௯௪. ௧௨௪

### 32. பாங்கி இளமைத்தன்மை கூறல்

**வி**னைவரும் செங்கதிர் வேலண்ண லேகழை விற்குறவர்
மனைவரும் வஞ்சி விழியும் குழலும் வனமுலையும்

அணைவரும் நாடும் மருங்கும் தவமும் அளிபொருந்தும்
சிணைவருந் நாண்மல ருங்கலர் தேடிய செல்வமுமே.

(உரை) தலைவியின் பேதைமையைக் கூறுதல். வினை வரும் - செய்தொழிலமைந்த. கழை வில் - மூங்கில் வில். மனைவரும் வஞ்சி : தலைவி. விழியும் குழலும் முலையும் மருங்கும், தவம், அளிபொருந்தும், நாண்மலர், கலர் தேடிய செல்வம் என்றது, நிரல் நிறை. விழி, தவமுடையார் ஒப்பச் சலனமற்றிருக்கும் ; குழல் அளிபொருநதும் ; முலை நாண்மலர் ஒக்கும் ; மருங்கு, கலர் (சூதாடுவோர்) தேடிய செல்வம் இல்லாது போவதொபப இல்லாது போகும். நாடும் - நாடுகின்ற. ௧௨௫

### 33. தலைவன் தலைவி வருத்தியவண்ண முரைத்தல்

அளைதாழ் அரவும் அரியும்வெந் தீயும் அரசுமெங்ஙன்
இளைதா யினும்கொல்லும் என்பது நீவந் திருஞ்சுரும்பின்
கிளைதாழ் குழல்வஞ்சி கேட்டிலை யோஇளங் கிள்ளைமென்சொல்
முளைவா ணகைப்பெண் ணரசல்ல வோஇந்த மொய்குழலே.

(உரை) தலைவி மங்கைப பருவமுடையவ ளென்பதைக் கூறும் பொருட்டுத் தலைவன் அவளது பார்வை தன்னை வருத்திய வண்ணம் உரைத்தல். அளை - புற்று. அரி - சிங்கம். சுரும்பு - வண்டு. வஞ்சி : பாங்கியை விளித்தது. கேட்டிலையோ : 'அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும், முழையுறை சீயமும் என்றிவை நான்கும், இளைய எளிய பயின்றன என்றெண்ணி, இகழின் இழுக்கந் தரும்' என்ற **ஆசாரக்கோவை** காண்க ; பெண் **அரசு** ஆனமையால் இவள் கொல்லும். கிள்ளை இன்சொல் - கிளிமொழி. மொய்குழல் - தலைவி. இ. வி. ௧௩௭. (பா - ம்) கிள்ளையின் சொல். ௧௨௬

### 34. சேட்படைகூறத் தானல கூறல்

புனையும் தரள வடமும் தடமென் புணர்முலையும்
வனையும் சுரிகுழ லும்மட நாணும் மகரமுடன்
முனையும் கயலும் முகமதி வேர்வும் முறுவல்முத்தும்
நினையுந் தொறும்வினை யேன்களி கூரமுன் நிற்கின்றதே.

(உரை) தலைவியை அகன்றிருக்குமாறு பாங்கி கூற, தலைவன் தன் கண் முன்னே தலைவி எப்போதும் இருத்தலைக் கூறுதல்; சேட்படை - அகன்றிருத்தல். மகரம் - மீன். கஉஎ

## 35. பாங்கி தலைவி செவ்வி அருமை செப்பல்

துறைவாய் மணற்சிற்றி லுஞ்சிற்றில் வாயடுஞ் சோறும்துற்ற
நறைவாய் மலர்ப்பண்ணை நன்மணி ஊசலும் நந்தலைக்கும்
குறைவாய் நறுமலர் கொய்துபந் தாடலுங் கூடஇற்றைக்(கு)
இறைவா மறந்துநின் முட்கென்கொ லோசொல் இயம்புவதே.

(உரை) தலைவியைப் பார்த்தற்குரிய காலம் பெறுதற் கரியதென்பதைப பாங்கி தலைவனுக்குக் கூறுதல். துற்ற - சூடிய. நறை - தேன். இற்றைக்கு - இன்று. இறைவா : விளி. 'வல்லியன்னாள், சூடாள் குவளையும் முல்லையுஞ் சூட்டும் சுனையும் பந்தும், ஆடாள் தனக்கென் கொலோஅடி யேன்சென் றறிவிப்பதே' - தஞ்சை. ககo. 'நெறிநீர் இருங்கழி நீலமுஞ் சூடாள், பொறிமாண் வரியலவ னாட்டலு மாட்டாள், சிறுநுதல் வேரரும்பச் சிந்தியா நின்றாட்கு, எறிநீர்த்தண் சேர்ப்ப யான் என் சொல்லிச் செல்கோ' - நம்பி. அ. மேற்கோள். கஉஅ

## 36. தலைவன் செவ்வி எளிமை கூறல்

திரைவார் கருங்கடற் கண்டலந் தண்டுறை சிற்றின்முத்தத
திரையார் குருகின் இனம்விளை யாட இளையவஞ்சி
விரையார் மணிவண்டல் மாறிய காரணம் வேறொன்றல்ல
உரையாய் இனிமயி லேசென்று நீஎன்றன் உள்மெலிவே.

(உரை) இதுவே பார்த்தற்கேற்ற காலமென்று தலைவன் கூறுதல். கண்டலம தண்துறை - தாழையடர்நத குளிர்ந்த துறை. மாறிய - மறந்து நின்ற. வேறொன்றல்ல என்றது, என்மீதுள்ள காதல் என்று குறிப்பித்தவாறு. கஉகூ

## 37. என்னை மறைப்பதென்னென நகுதல்

கருந்தா மரையன்ன கண்ணியர் வண்ணக் களிமயிலின்
திருந்தாடல் கண்டு சிலம்பெதிர் கூய்ச்சிறு சோறருந்தி

விருந்தாடும் சோலையில் மேவிநின் முவியின் வேட்கைசிந்தை
வருந்தா வகைமுடிப் பார்மறை யாரெனை மன்னவனே.

(உரை) எனக்கு மறைத்தால் உன் கருத்து எளிதில் கூடாது, ஆகவே என்னை மறைப்பது என் என்று பாங்கி தலைவனை நகுதல். சிலம்பெதிர் கூய்: வரையெதிர் கூவல் என்ற விளையாட்டை விளையாடி (அஉ). சிறு சோறு - மணற்சோறு ஆக்கி விளையாடல். முடிப்பார் - முடிக்க உன்போல் எண்ணுபவர். கந௦

## 38. அந்நகை ஆற்றுமை

புகையாட நெஞ்சம் புரையழல் மூழ்கிப் பொலிவழிந்து
தகையாட லாய்நின்ற தன்மைகண் டாலுயிர் தாங்கலன்றி
நகையாடல் சாலநன் றேநட மாடு நயனநல்லீர்
பகையா டவருஞ்செய் யார்தைய லார்செய்யும் பாதகமே.

(உரை) ஆற்றுது தலைவன் கூறுதல். தன்மை - எனது இநதத் தன்மையை. நன்றே - நல்லதோ. பகையாடவர் : அவளோ பெண், அதிலும் நட்புடையவள், எனவே செய்யும் பாதகம் கொடிதென்று குறித்தவாறு. கநக

## 39. தேற்றல்

எனக்காவி நின்னை வருத்திய மானவ் விளங்கிழையாள்
தனக்காவி நானும் தடமலை நாட தளைஅவிழ்பூஞ்
சினைக்காவில் நீகொய்த தேமென் தழையும் சிலம்பிலந்தண்
சுனைக்கா வியுங்கரு கத்துவ ளேல்இறை சோரநின்றே.

(உரை) மான் எனக்காவி ; தனக்கு நானும் ஆவி, சுனைக்காவி - சுனையில் பூத்த குவளைமலர் ; அவன் கையுறையிலுள்ளது. இறை சோர - கைசோர. நீ கொய்த தழையும் காவியும் கருகும்படி துவளேல் என்க. இ. வி. கநஎ, பாங்கி தலைமகளைத் தேற்றற்கு மேற்கோள். (பா - ம்) விளங்கிழைமான் ; காவியுமங் கருத்துவளே இறை. கநஉ

### 40. கிழவோன் ஆற்றல்

மொய்ம்மால் வரையன்ன விம்மா எழுமெம் முகிழ்முலைக்கு
நம்மால் வரையினை நாடொறும் சொல்லி நலஞ்சிறக்க
எம்மால் ஒருபயன் இல்லா தருந்தழை ஏற்றசெங்கை
மைம்மான் விழிக்கொரு கைம்மாறு கண்டிலம் வையகத்தே.

(உரை) தலைவன் மனந்தேறி யிருத்தல். மால்வரை - பெரிய மலை. விம்மா - விம்மி. நம் மால் வரையினை - மலைபோற் பெரிய எனது காதலை. மைம்மான் விழி - கரியமான் விழியுடைய தலைவி. இ. வி. கருஎ. (பா - ம்) எழுமென் ; பயன் ஏலாது. கருரு

### 41. பாங்கி கையுறை ஏற்றல்

மேலிங் கொருபடி போயடி யேன்செய்த மெய்த்தவத்தால்
ஏலங் கமழ்குழ லாளிசைந் தாளெறி நீருலகில்
ஆலுங் கலவ மடமயி லூர்தி அடல்முருகன்
போலுந் திருவுரு வாதரு வாயினிப் பூந்தழையே.

(உரை) தலைவன் தந்த கையுறையைப் பாங்கி ஏற்றுக்கொள்ளல். இசைந்தாள் - நின் தழையை ஏற்க இசைந்தாள். ஆலும் - ஆடுகின்ற. கலவ - தோகையுடைய. கருச

### 42. இறைவன் தனக்குக் குறைநேர் பாங்கி இறைவிக்கு அவன்குறை உணர்த்தல்

கையும் தழையும் கருகிய மேனியும் கட்டுரையும்
பொய்யும் புதியர் பழையரும் போல்வர் புனமகலார்
வையங் கடந்த மலரடி யார்தம் மகனுக்கொப்பார்
செய்யும் திறமென் கொலோதிரு வேஅவன் சிந்தனைக்கே.

(உரை) தலைவன் குறையைப பாங்கி தலைவிக்கு உணர்த்தல். வையம் கடந்த மலரடியார் - உலகளந்த திருவடியுடைய திருமால் ; தம் மகன், மன்மதன். ஒப்பார், புனமகலார், செய்யுந்திறம் என்கொல் என்று பாங்கி வினவுகிருள். ' கானல் வேலிக் கழிவாய் வந்து, நீ நல்கென்றே

நின்று ரொருவர், நீநல் கென்றே நின்று ரொருவர் நம், மானேர் நோக் கம் மறந்தா ரல்லர்' - **சிலப்பதிகாரம்**, கானல்வரி. கருடு

### 43. நாணொடு நீங்கல்

குருவி பசுங்கிளி கொள்ளைகொண் டேனற் குரல்முழுதும்
இருவி படும்புனம் இத்தனை போதிது போதும்குன்றத்(து)
அருவி இரும்புனல் ஆடவும் பெற்றிலம் ஆவியன்னாய்
பருவிய நுண்மணற் பாவையும் தேடிப் பரிந்தெழுமே.

(உரை) நாணத்தால் தலைவி வேறு பொருளைக் கூறுதல். ஏனல் - தினைபபுனம். குரல் - தினை. இருவி - தினைத்தாள். குரல் முழுதும் இருவி படும் என்றது, தினைமுழுதும் குருவியும் கிளியும் கொள்ளை கொள்ள இருவியொன்றுமே நிற்குமென்றபடி. புனம் இத்தனை போது இருவிபடும்; இதுபோதும். எழும் - நாம் எழுந்து செல்வோம். ஆவி யன்னாய் - பாங்கியை விளித்தது. கருசு

### 44. இறைவி அறியாள்போன்று குறியாள் கூறல்

அருவியும் சாரலும் ஏனலும் தோரையும் ஐவனமும்
குருவியும் கிள்ளையும் கொள்ளைமென் பூவையும் கோகிலமும்
வெருவியிங் கேவந்த மென்பிணை மானும் விடாதவெற்பை
மருவியும் போவிர்கொல் லோமஞ்சு காள்விஞ்சு வானகத்தே.

(உரை) தலைவி, தலைவனை முன்பு அறியாதவள் போல், பாங்கி கூறியவற்றைக் கொள்ளாது, மனத்திற் கருதாத வேறொன்றைக் கருதி அவளிடங் கூறுதல். தோரை - மூங்கிலரிசி. ஐவனம் - மலை நெல். விடாத - இவை பிரியாத. வெற்பை - இம்மலைச்சாரலை. மஞ்சுகாள் - மேகங்களே. கருஎ

### 45. பாங்கி இறையோற் கண்டமை பகர்தல்

உருவது மன்னுங் குமாரனும் மாரனும் ஒத்தவள்ளல்
தருவது கண்ணியும் தண்ணந் தழையும் தடக்கைவெற்பும்
பொருவதும் அன்புடன் போவதும் மீளப் புனத்தயலே
வருவதும் நிற்பதும் நின்பொருட் டேகொல் மதிநுதலே.

(உரை) தான் தலைவனைக் கண்டமை பாங்கி தலைவிக்குக் கூறுதல். உரு - உருவம். குமாரன் - முருகன். மாரன் - மன்மதன். தடக்கை, வெற்பும் பொருவது. அவன் தழை தருவதும், வருவதும் நிற்பதும் நின்பொருட்டேகொல் என்க. கரு அ

## 46. பாங்கியைத் தலைவி மறைத்தல்

இல்லா தியம்பவும் ஏலா துரைக்கவும் யானொன் றிங்கு
வல்லாது சொல்லவும் வல்லேகொல் லோவண்ட லாடிடத்தும்
கல்லார வாவி யினுங்கடி காவினும் நீஅருகு
நில்லாத போதுமுண் டோஎன்சொ னுயின்சொல் நேரிழையே.

(உரை) பாங்கிக்கு உண்மை கூறுது மறைத்தல். ஏலாது - பொருந் தாத சொல். கல்லார வாவி - குவளைத் தடாகம். கடி - மணம் பொருந்திய. நீ அருகு நில்லாத போது முண்டோ என்றது, நீ அறி யாத நிகழ்ச்சி ஒன்றுமில்லை என்றவாறு. என் சொனுய் என்றது, வீண் பழி சொன்னுய் என்ற குறிப்பு. கரு கூ

## 47. என்னை மறைப்ப தென்னெனத் தழாஅல்

மஞ்சறி யாமினும் வானறி யாத மருந்துமற் றுன்
நெஞ்சறி யாத நினைவுமுண் டோநெடு நீருலகில்
நஞ்சறி யாஅன்பி னல்லவர் ஊட்டினும் நாணியசெம்
பஞ்சறி யாத பனிமலர்ச் சீறடிப் பைந்தொடியே.

(உரை) எனக்கு ஒளிப்பானேன் என்று பாங்கி சொல்லித் தலை வியைத் தழுவுதல். மஞ்சு - மேகம். வான் அறியாத மருந்தாவது அமுதம். மின்னும் மருந்தும் நினைவும் உண்டோ என்றது, உன் நட்பை யான் அறியாது மறைக்க ஒண்ணுமோ என்றவாறு. நஞ்சறியா அன்பு, சிறிதும் நைந்து (குறைந்து) அறியாத அன்பு; நஞ்சு - நைந்து; 'நஞ்சுருகி நிற்பார்' - **கம்பர்**. நல்லவர் - பாங்கியர். நாணிய சீறடி; செம்பஞ்சறியாத என்றது, செம்பஞ்சு ஊட்டினும் வருந்துகின்ற மென்மை பொருந்திய அடி என்றவாறு. இ. வி. கருஎ. (பா - ம்) மஞ்சரியாயினும். கசO

### 48. பாங்கி கையுறை புகழ்தல்

வில்லும் பிறையும் திறையிடு வாணுதல் மெல்லியலாய்
எல்லும் குமுத மலருங்கண் டாயிரு கோங்கரும்பும்
வல்லும் பொருத வனமுலைக் கான மணிஇதுபோர்
சொல்லும் பொழுது பிரமனும் மாலும் தொழத்தகுமே.

(உரை) தலைவன் தந்த கையுறையைப் புகழ்ந்து தலைவியிடம் கூறுதல். எல்லும் குமுதம் அலரும்: இப்பகற் பொழுதிலும், குமுதம் இக் கையுறையில் மலர்கிறது என்ற வியபபு; குமுதம் இரவில் மலர்வதாதலால். வல்-சூதாடு கருவி. மணியிது, தொழத்தகும். இ. வி. கரு.எ. கச௧

### 49. வலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல்

சாயா அறிவும் தளர்ந்துசென் றார்சென்ற தன்மைகண்டு
மாயா எனக்குள்ள வன்கண்மை யேமயி லேபயிலும்
வேயார் சிலம்பில் களிறும் பிடியும் விழைந்தருவி
தோயா வளைநிழ லிற்றுயில் கூருந் தொடர்வுகண்டே.

(உரை) தலைவியை நினைந்து வந்த தலைவன் வருந்தி மீண்டு சென்றான் என்ற வன்மொழியைப் பாங்கி தலைவிக்குக் கூறுதல். சாயா அறிவு - எதனாலும் கெடாத அறிவு. எனக்குள்ள வன்கண்மை மாயா - என் கொடுமை போகவில்லை (அதாவது நீ இரங்கவில்லை). தோயா-தோய்ந்து. களிறும் பிடியும் துயில் கூருந் தொடர்வு கண்டு சென்றார் என்க. கச௨

### 50. மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல்

இரப்பார் ஒருவர்க் கிருநிதி வைத்தங் கிருந்துமுள்ளம்
கரப்பார் உரைசெயும் கள்ளமெல் லாமுனம் கட்டுரைத்தேன்
பரப்பாரும் அல்குல்மின் னேஇனி நானென் பகர்வதென்னோ
மரப்பாவை யும்கண்ட போதுரு காதல்ல வள்ளலையே.

(உரை) காதல் மிக்க தலைவன் வந்து இன்னும் நிற்கிறான் என்ற மென்மொழி கூறுதல். இருநிதி: சங்கநிதி பதுமநிதி. நிதி இரப்பாருக்குக் கரப்பார் உரை செய்யும் கள்ளமெல்லாம் கட்டுரைத்தேன். கரப்பார் - கொடாது மறைப்பவர். கள்ளம் - பொய் மொழி. வள்ளலைக் கண்ட

போது மரப்பாவையும் உருகாததல்ல என்க. 'கையுந் தழையுமுன் காண் தொறும் காண்டொறும் கட்டுரைத்த, பொய்யுந் தொலைந்தன' - தஞ்சை. கஉச. . கசரு

### 51. தலைவன் குறிப்பு வேருக நெறிப்படக் கூறல்

தருக்குங் களிறும் உழையுமுன் தேடித் தழைகைக்கொண்டு
மருக்குங் குமமுலை யாய்வழி கேட்டவர் வந்துமஞ்ஞை
செருக்கும் பணிவரைச் சீறூரில் உங்கள் தெருவுமன்றும்
இருக்கும் படிறனென் ருர்அறி யேனவர் எண்ணியதே.

(உரை) தலைவன் வேறு நினைபபினனுகத் தோற்றுகிருனென்று பாங்கி தலைவிக்குரைத்தல். நெறிப்பட - ஒழுங்கு பெற. மருக் குங்குமம் - மணம் பொருந்திய குங்கும மணிந்த. மஞ்ஞை - மயில். பணி வரை - பனிச் சிகரமுடைய மலையுள்ள சாரல். படிறன் - பொய்யன்; 'பொக்கஙகளே பேசும், பாலூறு தேன்வாய்ப படிறீ கடை திறவாய்' - திருவாசகம் உருக. 'கள்ளப படிறர்க் கருளா அரன்' - திருக். அஎ. அறியேனவர் எண்ணியது என்றது, மடலேற (கஉ0) அவன் துணிந் ததைக் கருத்துட்கொண்டு ; 'சொல்லாடல் செய்யான், பாவியந் தோபனை மாமட லேறக்கொல் பாவித்ததே' - திருக். அஅ. (பா - ம்) இருக்கும்படி என்னென்ருர். கசச

### 52. பாங்கி தலைவியை முனிதல்

சாந்தம் தருமித் தழைக்குக் குறைஇபஞ் சாய்த்ததனு
ஏந்தும் கரத்தி லிருந்தது வோஇங் கெழுதரிய
மாந்தண் தளிர்நிறத் தாய்வினை யேன்கையில் வந்ததுவோ
பூந்தண் புரிகுழ லாரிடை யாமுன் புகலெனக்கே.

(உரை) முனிதல் - கோபித்தல். சாந்தம் - சந்தனத் தழை. குறை - அதை நீ ஏற்காததற்குள்ள குறைபாடு. இபம் சாய்த்த தனு - யானையை எய்த வில். கரம் - தலைவன் கை. வினையேன் - தீவினை யுடைய நான். புரிகுழலார் - மற்றைப் பாங்கியர். இடையாமுன் - வந்து நெருங்காமுன், எனக்குப் புகல் என்க. இதற்குள்ள குறை,

தலைவன் கொணர்ந்ததா அல்லது நான் வாங்கியதா என்று கேட்கிருள். (பா - ம்) இங்கெழுந்தரிய. கசரு

## 53. பாங்கி தலைவியை முனிதல்

**வா**ளாது நின்றென்னை வந்தன் சொல்லி மணிவரைவேய்த்
தோளாய் புலந்து துயர்வதென் னேதொன் று தொட்டுவந்திந்
நாளாக ஒன்றி நயந்தரும் கேண்மையில் நாளுமுன்சொல்
கேளா தனவுமுண் டோஎன்கொல் நீஇனிக் கேட்கின்றதே.

(உரை) வந்தன சொல்லி : ' வாய் தந்தன சொல்லுதியோ மறை தந்த நாவால் ' - **கம்பர்.** தோளாய் : பாங்கியை விளித்தது. கேண்மை - நட்பு. இ. வி. கரு௭. (பா - ம்) வந்தெனை ; வந்தனஞ் சொல்லி. கசசு

## 54. தலைவி கையுறை ஏற்றல்

**தீ**தாகி லென்அன்றி நன்றாகி லென்நின் சிலம்பர்தந்த
போதார் தழையும் புதுநறுங் கண்ணியும் பூங்குவளைத்
தாதார் மலர்க்குழல் தையனல் லாய்வையம் சாற்றுவன
யாதாகி லென்வந்து நின்கைய தானதின் றென்கையதே.

(உரை) பாங்கியினிடமிருந்து கையுறையை வாங்கிக் கொள்ளுதல். சிலம்பர் - தலைவன். கண்ணி - தலையில் சூட்டும் மாலை. யாதாகிலும், உன் கையில் வந்ததை நான் பெற்றுக்கொள்ளத் தடையில்லை என்றபடி. இ. வி. கரு௭. கசஎ

## 55, தழை நயப்புரைத்தல்

**வெ**ல்லப் பிறந்த விழிமட வாரெழில் மேனிஎன்றும்
சொல்லப் பிறந்த தரும்பிவர் பூந்தழை தோன்றிஅங்கை
செல்லப் பிறந்து சிறந்தநல் லாள்தன் திருமுலைமேல்
புல்லப் பிறந்தது சொல்லவொண் ணாதெம் புரவலனே.

(உரை) தலைவி கையுறை ஏற்றமை பாங்கி தலைவனுக்குக் கூறுதல். மடவார் : தலைவி. அரும்பு இவர் பூநதழை - அரும்போடுகூடிய தழை. அங்கை - தலைவியின் கையில்: ' செங்கையில் வாங்கித் திரு

முடி சேர்த்தி விழியிலொற்றிக், கொங்கையின் மேல்வைத்துக் கொண்டு நின்றாள்,........பொருப்பா நீதந்த பூந்தழையே' - **வங்கர் கோவை.** 'வட்ட முலையில் மலர்க்கண்ணில் வார்குழலிற், பட்ட படியைப் பகர் வதோ - மட்டுவிரி, கந்தநறுங் கூந்தற் கனங்குழைக்குக் காவலநீ, தந்த நறுஞ் சாரற் றழை' - **கிளவித் தெளிவு.** கசஅ

## 56. பகற்குறி நேர்தல்

**க**ல்லும் கழையும் தருவுமிக் கானவர் தாம்விரும்பும்
இல்லும் பெரிதும் இகழ்ச்சிய தாயினும் யாரொருவர்
ஒல்லுந துணையும் ஒருபகற் றங்கி வரும்பகற்றும்
செல்லும் திறம்நினை வார்சிலம் பாதங்கள் சேணகர்க்கே.

(உரை) பகற் குறி - களவொழுக்கத்தே தலைவனும் தலைவியும் பகலில் சந்திக்கும் இடம். கானவர் - தலைவியின் இனத்தவரான வேடுவர். இல் - வீடு. இகழ்ச்சியது-சிறப்புடையதன்று. ஒல்லுந் துணையும் - இயன்றவரை. தங்கி : அக்கானவர் ஊரில் தங்கி. வரும் பகல் - அடுத்த நாள். செல்லும் திறம் - தங்களூருக்குச் செல்லுதலை. சேண் நகர் - தொலைவிலுள்ள நகர். (பா - ம்) எல்லுந் துணிவும். கசக

## 57. பகற்குறியிடங் கூறல்

**கோ**டையும் கொண்டலும் கண்டறி யாத குளிர்பொழிற்கண்
வாடையும் தென்றலு மேவரு மேவரில் காண்பதன்னப்
பேடையும் சேவலும் சேலும் வராலும் பிறங்குநன்னீர்
ஓடையும் கங்கமும் சங்குமி ழாநின்ற ஒண்முத்துமே.

(உரை) தலைவன் தலைவியைக் காண்பதற்கான இடத்தைப் பாங்கி கூறுதல். கோடையும் கொண்டலும் - வெயிலும் மழையும். ஓடை முதலியவற்றைக் கூறியது, குளிர்ந்த பொழில் என்பதற்காக. 'வெய்யோன் தானுழையா இருளாய்......எழில் காட்டுமோர் கார்பொழிலே' - **திருக்.** ககசு. கருഠ

### 58. குறியிடங் கொண்டு சேறல்

பேதாய் அறிவின் பிறந்தக மேமடப் பெண்ணமுதே
போதாய் அருவிப் புனன்மலைச் சாரல்நின் பூண்முலைக்கு
வாதாய குன்றை மறுமொழி கேட்கவும் மைக்கண்களால்
நீதான் வெறுத்த குவளையம் போது நெரிக்கவுமே.

(உரை) பாங்கி தலைவியைக் குறி யிடத்துக்கொண்டு செல்லுதல். பேதாய்: இளமை குறித்தது. அறிவின் பிறந்தகம் என்றது முரண். போதாய் - செல்வாயாக. குன்றை மறுமொழி கேட்கவும்: வரையெதிர் கூவல் (குன்றிேனாடு பேசி விளையாடுதல்) என்னும் விளையாட்டு. 'ஏனலுங் காத்துச் சிலம்பெதிர் கூவி இளமரபூங், கானமும் காணுதும் போதருநீ... ...பொதியிலெம் வெற்பிடத்தே' - பாண்டிக் கோவை. கடுக

### 59. குறியிடத் துய்த்து நீங்கல்

உகையார் முகிலின் ஒலிவெள் ளருவி உருமென்றஞ்சித்
திகையாது நில்லிச் செயலயல் நீழனின் செங்கைகளும்
நகையார் முறுவலும் கண்டல ராது நடுங்கிஅந்தண்
முகையாக வுந்தரு மோசெய்ய காந்தளும் முல்லையுமே.

(உரை) தலைவியைப் பாங்கி குறியிடத்துக்கு அனுப்பிவிட்டு, மலர் கொய்து வருவேனென்று சொல்லி நீங்குதல். உரும் என்றஞ்சி - அருவியின் ஒலியை இடியென்று அஞ்சி. நில் - நிற்பாயாக. செயல் அயல் நீழல் - இவ்வசோகின் அருகுள்ள நிழலில். செயலை - அசோகு. கைக்கும் முறுவலுக்கும் உவமை முறையே காந்தளும் முல்லையும் ஆனமையால், கண்டு அலராது நடுங்கின; அலராது - மலராமல். முகையாக - அரும்பாகவே. செய்ய - சிவந்த. கடுஉ

### 60. நீங்கும் தோழி தலைவனுக்கு உணர்த்தல்

பனியேர் நறுமலர்ப் பாயலிற் கண்வளர் பாவைஒரு
தனியே கிடந்தழும் தாயுமங் கில்லைத் தடஞ்சிலம்பா [செங்
முனியேல் விடைகொள்வன் முற்றுநின் காவல் முகிழ்நகை
கனியே இனியசெவ் வாய்நவ்வி மான்விழிக் காரிகையே.

(உரை) தலைவி வந்து தனியே இருப்பதை உணர்த்தல். தடஞ் சிலம்பா : தலைவனை விளித்தது. முனியேல் - கோபியாதே. கனியே இனிய - கனிபோல் இனிய. கார்கை முற்றும் நின்காவல். பாவை என்றமைக்கேற்க, தாயுமங்கில்லை, முற்றும் நின் காவல் என்றாள். 'நெய்தற் பரப்பிற் பாவை கிடப்பி, நின்குறி வந்தனென் இயல்தேர்க் கொண்க, செல்கஞ் செலவியங் கொண்மோ அல்கலும், ஆரல் அருந்த வயிற்ற, நாரை மிதிக்கும் என்மகள் நுதலே' - குறுந். கக௪. இ. வி. கருஎ. (பா - ம்) தாயுமிங்கில்லை. கருரு

## 61. இறைவி இறையோனிடத்து எதிர்ப்படுதல்

நீயோ திருமகள் நின்னைமுன் னாள்வர நேர்ந்துபெற்ற
தாயோ அமுதம் தருந்திருப் பாற்கடல் கார்க்கடல்போல்
தீயோ டழல்விழிச் சேக்கையின் மேற்றிருக் கண்வளர்ந்த
மாயோன் எனநினைந் தோஎன்னை வாழ்விக்க வந்ததுவே.

(உரை) எதிர்ப்படுதல் - சந்தித்தல்; சந்தித்த தலைவன் கூறுதல். அமுதம் தரும் பாற்கடல் : திருமகள் தோன்றியது பாற்கடலில். தீயோ டழல்விழிச் சேக்கை : பாம்பாகிய பள்ளி. மாயோன் : திருமால்; என்னைத் திருமாலென்றெண்ணியோ. 'படமா சுணப்பள்ளி யிக்குவ டாக்கிய பங்கயக்கண், நெடுமால் எனஎன்னை நீநினைந்தோ...மடவாய் வந்து வைகிற்றிவ் வார்பொழிற்கே' - திருக். கஉ௦. கரு௪

## 62. புணர்ச்சியின் மகிழ்தல்

பங்கே ருகமலர்ப் பாதம் பணிந்து பரிமளப்பூங்
கொங்கேர் அலங்கற் குழன்மணங் கொண்டு குவிமுலையும்
சங்கேர் கழுத்தும் தடம்பணைத் தோளும் தழுவிஇங்ஙன்
எங்கே எவருக் கிவருமிக் காதலும் எய்தியதே.

(உரை) பங்கேருக மலர் - தாமரை. கொங்கு - தேன். சங்கு - கழுத்துக்குவமை. பணை - மூங்கில். கருரு

### 63. தலைவியை விடுத்தல்

நலமார் கலவி நயந்தென்னை வாழ்வித்து நாணிறைந்த
குலமா மடக்கொடி யேஅடி யேன்விடை கொண்டுநிற்கப்
பொலமால் வரைவழிக் குத்துணை யாவுடன் போந்தநெஞ்சை
மலர்மாளி கையள வுங்கொண்டு போகி வரவிடுமே.

(உரை) தலைவன் தலைவியைப் பாங்கியின்பால் அனுப்புதல். கொடியே - தலைவியை விளித்தது. பொல மால் வரை - அழகு பொருந்திய பெரிய மலை. உடன் போந்த நெஞ்சை - உன்னுடன் போகின்ற என் நெஞ்சை. மாளிகை - உங்கள் வீடு. கருகூ

### 64. நெஞ்சு மிக்கதுவாய்ச் சோர்தல்

பொன்றாத காதற் பொறையாரும் ஆவி புலம்பிநைப
இன்றாரும் இன்றி இருந்தென்னை யாளிக் குருந்தினிடை
குன்றாத அன்பொடு கூடியும் வாடியும் கோலங்கொண்டு
சென்றார் மணிநெடுந் தேரொடு போனதென் சிந்தையுமே.

(உரை) தலைவி சோர்தல். பொன்றாத - குறையாத. சென்றார், தலைவர். தேரொடு - அவர் சென்ற தேரோடு. சிந்தை - நெஞ்சம். 'வருவது கொல்லோ தானே வாராது, அவணுறை எவல் இசைவது கொல்லோ, பந்தாடு மகளிரிற் றேன்றும், குன்றுகெழு நாடனொடு சென்றஎன் நெஞ்சே' - ஐங். உகூரு. 'அகன்ற கொண்கன், திருமா மணிநெடுந் தேரொடுஞ் சென்றதென் சிந்தனையே' - **பாண்டிக்கோவை.** **இ. வி.** கருஎ, தலைவி சோர்தற்கு மேற்கோள். (பா - ம்) இருந்தென்னை யாளிக் குருந்திடையே. கருஎ

### 65. புனத்தை நோக்கிக் கூறல்

மேகம் தழுவும் வியன்மலைச் சாரலில் வெவ்வினையேன்
ஆகம் தழுவியும் அன்பமை யாஎன் நசைஅறிந்தும்
பாகன் பரிவிடப் பின்புமுன் பார்த்தின்று பையப்பையப்
போகின்ற தேரின்ன மும்வரு மோஇப் புனத்திடையே.

(உரை) தலைவி கூறுதல். நசை - வேட்கை. பரி - குதிரை. கருஅ

## 66. பாங்கி கையுறை காட்டல்

**ப**னியோர் நறுமலர்ப் பாவைகண் டாலும் பணிந்திறைஞ்ச
நனியே நெறிக்கும் நறுநுத லாய்கன்னி நாகநிழல்
தனியே உனைநிறுத் திச்சென்று நீடிய தன்மைகொண்டு
முனியே லுவையுவை நின்முகைக் காந்தளும் முல்லையுமே.

(உரை) பிரிந்து சென்றிருந்த பாங்கி தலைவியை யடைந்து, தான் பறித்துவநத பூக்களைக் காட்டல். பாவை : திரு. நாகம் - புன்னாகம். நீடிய தன்மை - சென்று நெடுநேரமானமை. உவை உவை - இவை யிவை. கருசு

## 67. தலைவியைப் பாங்கிற் கூட்டல்

**பா**டின மேதகு பஞ்சுரஞ் செஞ்சிறைப் பாணினங்கள்
வாடின மேனியும் வண்ணமும் தோளும் மலர்க்கழுநீர்
சூடின மேலொண் சுனையும் கழங்கும் துளங்குபந்தும்
ஆடின மேஇனி நாம்வண்ட லாயம் அடைகுவமே.

(உரை) பாங்கில் - பாங்கியர் கூட்டத்தில். பஞ்சுரம் - ஒரு பண். பாண் இனங்கள் - வண்டுகள். வாடின, தலைவிக்கு. சூடினம் - நான் சூட்ட நீ சூட்டிக்கொண்டாய். வண்டல் ஆயம் அடைகுவம் - விளையாடும் பாங்கியரை இனி நாம் அடைவோம். கசாO

## 68. நீங்கும் தலைவற்கு ஓம்படை சாற்றல்

**பெ**டைநின்று காண உடனின்ற தோகை பெருநடஞ்செய்
புடைநின்ற சோலைப் பொதியில்வெற் பாபொற் குழைதொடரும்
கடைநின் றுகுபுனற் கண்ணிக்கும் நின்புகழ்க் காதலுக்கும்
இடைநின்ற பாவிக்கும் ஏதமு றுவண்ணம் எண்ணுகவே.

(உரை) தலைவியை எபபொழுதும் பாதுகாக்க வேண்டுமென்று, பாங்கி நீங்கும் தலைவனுக்குக் கூறுதல் ; ஓம்படை - பாதுகாப்பு. பொதி யில் வெற்பா : தலைவனை விளித்தது. குழை தொடரும் கடை - காதைத் தொடர்நத கடைக்கண். உகு புனல் - கண்ணீர். பாவிக்கு -

எனக்கு. ஏதமுறு வண்ணம் - துன்பம் நேரிடாதபடி. இ. வி. கரு௭, பாங்கி தலைவனை நோக்கி ஓம்படை சாற்றற்கு மேற்கோள். (பா - ம்) நின்புவி காவலுக்கும்; எண்ணம் எண்ணுகவே. கசுக

## 69. விருந்து விலக்கல்

தினைமாவும் மால்வரைத் தேனும் குழைத்துச் சிறிதருந்திச்
சுனைமா நறுமலர் ஓடைநன் னீருண்டு சோலையினன்
னனைமா தவிநிழல் நண்பகற் போது நயந்திருந்து
மனைமா லையின்நடந் தால்வரும் ஏதமென் வள்ளலுக்கே.

(உரை) செல்வேனென்ற தலைவனை நோக்கி, விருந்துண்டு செல்க என்று பாங்கி சொல்லிச் செலவு விலக்கல். நனை மாதவி - தேன் நிறைந்த மலருடைய மாதவி. மனை - வீட்டுக்கு. ஏதம் - குறைவு. வள்ளலுக்கு : உனக்கு. கசுஉ

## 70. விருந்திறை விரும்பல்

சூதார் வனமுலைத் தோகைநல் லீருங்கள் செங்கைதொட்ட(து)
ஏதா யினுமெனக் கின்னமு தாமெல்லி சாயுமெல்லை
தாதார் மலர்ப்பொழில் தங்கலு மாமிங்ங னுங்கள்வெற்புக்
காதார் நறுங்குழைக் கானவர் ஆனவர் காவலின்றே.

(உரை) தலைவன் விருந்தைச் சிறிது விரும்பல். எல்லி - சூரியன். சாயுமெல்லை - மறையும் வரையில். தங்கலுமாம் - தங்குகிறேன். காதார் நறுங் குழை - குழையணிந்த காதுடைய. இன்றே - இல்லையல்லவா என்றவாறு. இ. வி. கரு௭. (பா - ம்) எல்லைசாயுமெல்லை; யாதாயினும் கானவர் வானவர். கசுரு

# எ. ஒருசார் பகற்குறி

ஒரு சார் பகற்குறி - பகற்குறியிடத்துத் தலைவனுந் தலைவியும் ஒருவரை யொருவர் எய்தாமல் வருந்துதல்.

## 1. கிழவோன் பிரிந்துழி கிழத்தி மாலையம்பொழுது கண்டிரங்கல்

கூற்றங் கரந்து கொடியபுன் மாலை வடிவுகொண்டு
தோற்றும் சிறுபிறை யேஎயி றாகத் துறையிருந்து
தேற்றம் தரும்பெடை அன்னமும் சேவலும் சேக்கைபுகும்
ஆற்றும் திறமறி யேன்அவ ரோசென் றகன்றனரே.

(உரை) தலைவன் பிரிய, மாலைப்பொழுதைக் கண்டு தலைவி ஆற்றாது வருந்துதல். கூற்றங் கரந்து - யமன் தன் உருவை மறைத்துக் கொண்டு. எயிறாக - பல்லாகக் கொண்டு. தேற்றம் தரும் - புலப்படும். பெடை அன்னமும் சேவலும் - பறவைகள் ஆணும் பெண்ணுமாக. சேக்கை - கூடு. அவர்-தலைவர். 'பகலோன் கரந்தனன்...பைம்பொழிற் சேக்கைகள் நோக்கினவால அகலோங் கிருங்கழி வாய்க்கொழு மீனுண்ட அன்னங்களே' - திருக். கஅஅ. கசுச

## 2. பாங்கி புலம்பல்

**பொன்**னார் நறுமலர்ப் புன்னையங் கானற் புளினந்தங்கி
அந்நாள் மணந்து தணந்தவர் போல அருக்கன்சென்ற
பின்னுவதன் முன்ன மேசெக்கர் மாலை பிறந்ததினி
என்னுகும் என்றறி யேன்வளங் கோதை இளங்கொடிக்கே.

(உரை) கானல் - கடற்கரைச் சோலை. புளினந தங்கி - மணற் குன்றிலே தங்கி. தணநதவர் - நீங்கினவர்; நீங்கின தலைவர். அருக்கன் சென்ற பின்னு - சூரியன் மறைந்தவுடன். செக்கர் மாலை - சிவந்த அந்திப்பொழுது. போல என்றது, தலைவனுடைய பிரிவு துன்பத்தைத் தருவதுபோல, சூரியன் மறைவும் மாலையின் தோற்றமும் துன்பந் தருதலால். வளங்கோதை - வளமான கூந்தலையுடைய தலைவி. இ. வி. கஅக. (பா - ம்) மறந்தவர் போல; இளங்கோதை. கசுரு

### 3. தலைவனிடத் தலைவி வருந்தல்

கூவிக் குயிலை அழைக்கவும் காவி குறையினிறை
ஆவிப் புனலும் அருவியும் ஆடவும் ஆயவெள்ளம்
மேவித் தனிநின்று நெஞ்சமும் நானும் இரங்கஇன்னும்
காவிற் சிறைவண்டு காள்அவ ரோவரக் காண்கிலமே.

(உரை) நீட - வருவது தாமதிக்க. அழைக்கவும் ஆடவும், ஆய வெள்ளம் மேவித் தனி நின்று நெஞ்சமும் நானும் இரங்க, இன்னும் அவர் வரக் காண்கிலம் என்க. காவி - குவளைமலர். குறையினிறை - குறையின்றி நிறைந்த. ஆவி - வாவி, அவர்-தலைவர். (பா - ம்) குறைவி னிறை. கசுசு

### 4. தலைவியைப் பாங்கி கழறல்

அவ்வாறு புல்லி அளித்தஞ்ச லென்றவர் கஞ்சமின்னும்
ஒவ்வாத நின்னை ஒழிந்துறை வாரல்லர் ஓடரிக்கண்
மைவார் குவளையும் வம்பார் தடமுலை யும்பசந்திங்(கு)
இவ்வா றிருக்குமென் றலென் சொலாருனை ஏதிலரே.

(உரை) கழறல் - இடித்துரைத்தல். புல்லி - தழுவி. என்றவர், தலைவர். கஞ்சமின் - தாமரைத் திரு, ஓடரிக்கண் - செவ்வரி படர்ந்த கண். மை - கரிய. குவளை : கண். வம்பு - கச்சு. ஏதிலர் - அயலார். என் சொலார் என்றது, அலர்தூற்றுவர் என்றவாறு. தலைவன் வாரானென் றெண்ணி உன்னியல்பு திரியுமாயின், அயலார் கண்டு அலர் தூற்றுவர் என்க. கசுஎ

### 5. தலைவன் தாழ்த்து வந்துழிக் கூறல்

சேணார் கொடிநெடுந் தேர்மணி ஓசை செவிப்படுமிவ்
வாணுக மேல்வரு கின்றனர் போலவர் வந்துநம்மைக்
காணு தலமரு துன்பமும் காதலும் காணஇங்ஙன்
நீணுக நீழல் மறைகுவம் போது நிரைவளையே.

(உரை) பாங்கி, தலைவன் தேர்வரும் ஓசைகேட்டுத் தலைவிக்குக் கூறுதல். சேண் - தூரத்தில். தேர் மணி - தலைவன் வரும் தேரிலே

கட்டிய மணி. செவிப்படும் - கேட்கின்றது. வாள்நாகம் - ஒளி பொருந்திய யானை. அலமரு - கலங்குகின்ற. இங்ஙன் - இவ்விடத்து. நீள்நாக நீழல் - நீண்ட புன்னை நிழலிலே. போது - வருவாயாக. நிரைவளை : தலைவியை விளித்தது. தலைவன் காதற்றுன்பத்தை யறியவேண்டி, மறைந்திருக்கலாம் என்று பாங்கி தலைவியை அழைக்கிறாள். இ. வி. கசக, தலைவிக்கு அவன் வரல் பாங்கி சாற்றுதற்கு மேற்கோள். (பா - ம்) போலுவர். கசுஅ

## 6. முன்னிலைப் புறமொழி மொழிதல்

செல்லத் தருவிறல் வேள்வரக் கண்டுறை சிந்துகண்ணும்
புல்லத் துடித்த புணர்மென் முலைகளும் பொன்பசந்து
மல்லற் பதித்தவன் வன்கண்மை கூறி மறந்தஎன்னை
அல்லற் படுத்துமென் றுலென்செய் வேனிவ் வருவினைக்கே.

(உரை) பாங்கி முன்னே நிற்க, தலைவி அவளிடம் கூறாது புறமாக மொழிதல். வேள் : வேளொத்த தலைவன். உறை சிந்து கண் - கண்ணீர் துளிக்கும் கண். பொன் பசந்து - பிரிவினால் பசலை நிறங் காட்டி. பதித்தவனாகிய தலைவன். வன்கண்மை - எனக்கு அருளாமை யாகிய கொடுமை. அல்லற்படுத்தும் - துன்புறுத்தும். என் செய்வேன் இவ்வருவினைக்கு - இப்படிபபட்ட நான் பாங்கி சொல்லும் விளையாட்டுக்கு என் செய்யவல்லேன். கசுகூ

## 7. பாங்கியொடு பகர்தல்

ஐயோ மருங்குல் அறநொந்த தோவென்பர் ஆரமுலை
மெய்யோ டணைத்து விடநினை யார்வினை யேனிருசெங்
கையோ திருநெடுங் கண்ணில்லை யாநிற்பர் கற்றதெல்லாம்
பொய்யோ முடிய நெடியதண் சாரல் பொருப்பரின்றே.

(உரை) தலைவி பாங்கிக்குக் கூறுதல். என்பர் : என்னை எண்ணித் தலைவர் கூறுவர். விட - விட்டுப் பிரிய. கையோ - கையை. பொருப்பர் கற்றதெல்லாம் இன்று, முடியப் பொய்யோ என்க. இன்று பொய்யோ என்றது வாராமையால் ; ' என்கை கொண்டு தன்கண் ஒற்றியும், தன்கை கொண்டென் நன்னுதல் நீவியும், அன்னைபோல இனிய

கூறியும், கள்வர் போலக் கொடியன் மாதோ...கோடியர் பிறங்கல் மலை கிழ வோனே'. - நற்றிணை உஅ ; 'நோம் என் நெஞ்சே நோம் என் நெஞ்சே, இனிய செய்தநங் காதலர், இன்னு செய்தல் நோம் என் நெஞ்சே' - குறுந். உ0உ. கஎ0

## 8. பாங்கி அச்சுறுத்தல்

**ம**னங்கா வலருழை வைத்துமென் கூர்வளை வாய்ப்பசும்புள்
இனங்காவல் மாற்றிய ஏனல்கண் டாலன்னை எப்படியும்
கனங்காவல் கொண்ட கழைஇருஞ் சாரற் கனங்குழைநின்
புனங்காவல் மாற்றும் அதன்பினிற் காவலும் பூணும்வந்தே.

(உரை) அச்சுறுத்தல் - தலைவியை அச்சமுறச் செய்தல். காவலருழை - தலைவரிடத்திலே. வாய் - வாயுடைய. பசும்புள் : கிளி. புள்ளினம் காவல் மாற்றிய - புள்ளினத்துக்குக் காவலில்லாதபடி மாற்றிய. ஏனல் : நீ கிளியோப்பியிருந்த தினைப்புனம். கனம் - மேகம். கழை - மூங்கில். மாற்றும் - அன்னை மாற்றி விடுவாள். இற்காவலும் பூணும் - உன்னை வீட்டிலே வைத்துக் காவலும் செய்வாள் ; 'இனிக் காபபுனக்கு இல்லிடமே' - கோடீ. கடுஎ. இ. வி. கச௪க, தலைவியைப் பாங்கி அச்சுறுத்தற்கு மேற்கோள் ; நம்பி. கடு௪ உரை மேற்கோள். (பா - ம்) மாறும் ; அதன் பின்னர். கஎக

## 9. நீங்கற் கருமை தலைவி நினைந்திரங்கல்

**வா**விலொன் றாத மடவன்ன மேமுன்ன மேவகுத்த
பாவிலொன் றாகப் படைத்தில னேகண் பகழியல்ல
காவிஎன் றாரெம்மைக் காயமென் றார்தம்மைக் காயத்துற்ற
ஆவிஎன் றாரென்ற போதஞ்சி னேனவர் அன்பினுக்கே.

(உரை) நீங்கற்கு அருமை - தலைவனைப் பிரிதற்கு அருமையை. அன்னமே : பாங்கியை விளித்தது. வகுத்த பாவி - பிரமன். ஒன்றாகப் படைத்திலனே என்றது, எங்கள் இருவர் உயிரும் ஒன்றாயுள்ளமைபோல எங்கள் இருவர் உடலும் ஒன்றாய்ப் படைக்கவில்லையே என்றவாறு ; 'அரிக்கும் அரியா ருடன்உமை யொற்றித்தென்றும், பிரியா திருக்கச் செயுமா தவஞ்செயப பெற்றிலனே' - சீகாழிக்கோவை கக௦ ; 'இறை

வற்கும் நன்றியிலேற்கும் முன் நான்முகத்தோன், ஒன்று விதித்திலனே உயிர்போல உடம்பையுமே' - தஞ்சை. கசகூ. பகழி - அம்பு. காவி - குவளை மலர். குவளைமலர் மன்மதனுக்குரிய பஞ்சபாணங்களுள் ஒன்று ; எய்யப்பெற்ற காதலரைக் கொல்வது அதன் குணம். எனவே, அவள் காவியாகிய கண் (வேல்) தன்னைத் தைத்தமை அவன் கூறியதை எண்ணி, தான் நீங்கினால் உயிர் விடுவானோ என்றஞ்சுகிறாள் தலைவி. காயம் - உடல் ; ஆவி - உயிர். அன்பினுக்கு அஞ்சினேன், உயிர் விடுவா ரென்று. களஉ

## 10. தலைவிக்கு அவன் வரவு பாங்கி சாற்றல்

தீட்டிய தொய்யில் திருமுலை யாய்அன்பர் தேர்வரவு
கேட்டிய மன்றற் கிளைவளர் சாரலில் கேகயங்கள்
ஓட்டி யகன்ற உழைமுல்லை போய்விழ ஊர்பரிதி
வாட்டிய முல்லையும் கொண்டலும் நாற வருகின்றதே.

(உரை) அவன் வரவு சாற்றல் - தலைவன் வருதலைக் கூறுதல். தொய்யில் - பெண்கள் மார்பிலே சந்தனத்தால் எழுதும் சித்திரம். கேட்டிய - கேட்டு. கேகயங்கள் ஒட்டி - மயில்களை வெருண்டோடச் செய்து. உழை - வெருண்ட மான். முல்லை - முல்லையிலே, காட்டிலே. ஊர் பரிதி - தலைவன் ஊர்ந்து வரும் தேர். வாட்டிய முல்லையும் : முல்லைக் கொடி மீது வருவதனால் அக்கொடியின் மணமும். கொண்டலும் நாற - கீழ்காற்றில் வீசும்படியாக. களங

## 11. தலைவன் நாட்டம் தலைவி புதைத்தல்

மின்கண் புதைக்கு மருங்குல்நொந் தேவிம்ம விம்முகொங்கை
தன்கண் புதைக்கத் தரும்புறம் சார்ந்துமென் சாயலொளித்(து)
என்கண் புதைத்தகை இம்மலர்க் காவில் எதிர்ப்பட்டநாள்
நின்கண் புதைத்தகை யோஅறி யேன்கொல் நிரைவளையே.

(உரை) தலைவன் கண்ணைத் தலைவி புதைத்தமை தலைவன் கூறுதல். கொங்கை தன்கண் - கொங்கையின் கண்ணை. புதைக்கத்தரும் புறம் சார்ந்து - புதைக்கத்தக்க எனது முதுகிலே சாய்ந்து நின்று

ஒளித்து - தன்னை ஒளித்துக்கொண்டு. என்கண்ணே இப்போது புதைத்த கையானது, முன்னமே நான் இம்மலர்க் காவில் எதிர்ப்பட்ட நாள் நாணிக்கண் புதைத்த உனது கைதானோ, அறியேன்கொல் என்க. நிரைவளை : தலைவியை விளித்தது. கஎச

## 12. சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல்

இயலும் கலவ மயிலுமென் மானும் இனக்கிளியும்
முயலும் தவங்கள் முடிவது போலும் முதுமறலிச்
செயலும் கமலமும் செங்கழு நீரும் செழியர்வெற்றிக்
கயலும் பொருங்கணல் லாயின்று நாளை கடிபுனத்தே.

(உரை) தலைவன் வேலிப்புறத்தே நிற்க, தலைவி வீட்டின்கண்ணே செறிக்கப் பெற்றமையைப பாங்கி தனக்குள்ளே கூறுவாள்போல் அவனுக்கு அறிவுறுத்தல். சிறைப்புறம் - வேலிபபுறம். செறிப்பு - தலைவியை வீட்டின்கண் செறித்தலை. முதுமறலி : பழைய கூற்று. செழியர் - பாண்டியர். இன்று நாளை கடிபுனத்தே தவங்கள் முடிவது போலும் ; உன்னை இற்செறித்தபின், இங்கு அவை உன்னோடு கொண்டிருநத பகை முடிவதால். இ. வி. கசக, தோழி சிறைப் புறமாகத் தலைமகட்குச் செறிப்பறிவுறுத்தற்கு மேற்கோள். (பா - ம்) கடிபுனங்தே. கஎரு

## 13. தலைமகளாற்றுமை கூறல்

என்னுவி அன்னவர்க் கேறும் பழிஎன்கண் இல்லைஎனப்
பொன்னூர் தொடியுண்டு பூந்துகில் உண்டுமென் பூவணைமேல்
பன்னாள் இரவினும் பாயல்கொள் ளாள்பொன் பசந்தொளிரும்
கன்னு பரணம் பொரும்விழிக் கேதுன்றும் காண்கிலமே.

(உரை) பழி இல்லை என்று சொல்லுமாறு வளையும் துகிலும் கழலாமல் உள்ளன ; நழுவி விட்டால்தான் பழி ஏற்படும். பாயல் கொள்ளாமையால் விழி பொன் பசந்தது ; எனவே, அதற்குப் பழியுண்டு, இல்லையென்பதற்கு ஒன்றும் காண்கிலம். தொடி - வளை. கன்னுபரணம் : கன்னம் - காது. (பா - ம்) பொன்னூர்கொடி ; என்றும். கஎசு

### 14. தலைமகளை நோக்கிக் கூறல்

மல்லற் பணில மணிமுத் தலைகடல் வாணர்தங்கள்
இல்லைப் பொருதும் இருங்கழிச் சேர்ப்பன் இருஞ்சுரும்பின்
வில்லைப் பொருநுத லீரென்சொ னீருங்கள் மேனியென்று
சொல்லப் பழிவரு மோஒரு நாளித் துறையில்வந்தே.

(உரை) மல்லல் - செல்வ மிகுதி. பணிலம் - சங்கு. இல் - வீடு. பொருதும் - மோதும். சேர்ப்பன், நுதலீர் என்சொனீர் உங்கள் மேனி என்று சொல்லப பழிவருமோ என்க. கஎஎ

### 15. முன்னின் றுரைத்தல்

கூனுங் கழைவிற் குறவர்கண் டாலும் குமரனென்ன
மானுஞ் சிலம்பில் வருவிர்கொல் லோதொல்லை வல்வினையால்
யானுங் கரும்பும் இரும்புனங் காவல்விட் டேகுகின்றோம்
தேனும் சுரும்பும் செறிகொடிச் சாரல் சிறுகுடிக்கே.

(உரை) புனங்காவல்விட்டு வீட்டுக்குச் செல்லுதலைப் பாங்கி தலைவன் முன்னின்று கூறுதல். குமரன் - முருகன். மானும் - ஒக்கும். கரும்பு : தலைவி. சிறு குடிக்கு ஏகுகின்றோம் என்க. கஎஅ

### 16. தாய் குறிப்புணர்த்தல்

முறம்போல் தழைசெவி மும்மத வாரணம் முன்னம்செய்த
அறம்போல வந்தஞ்சல் அஞ்சலென் றூற்கென் அறிவழிந்து
நிறம்போ னதுகண்டு நேர்பண்டு போனம்மை நெய்தல்கொய்யப்
புறம்போம் என்றனள் என்னைகொல் அன்னைநம் பூங்கொடியே.

(உரை) தலைவியின் தன்மை கண்டு தாய் இற்செறித்ததைப் பாங்கி கூறுதல். வாரணம் - யானை. முன்னம் செய்த அறமாவது, தினைப் புனம் காத்த வள்ளி முருகனுக்கு இணங்காதபோது, விநாயகர் யானையாக வந்து அச்சுறுத்தி, இணங்கத் துணை புரிந்தமை. அஞ்சல் என்றூற்கு :

யானையினின்றும் காத்த தலைவனுக்கு. நிறம் போனது - பசலைபோர்த்தமை. புறம்போம் - புவனம் காவல் விட்டு இற்புறம்போம். கஎகூ

## 17. ஓம்படை சாற்றல்

ஆழுங் கனைகடல் அன்னநின் காதலும் ஆடல்மயில்
சூழும் புனமும் தொலைந்தன வாயினும் தூயமுதும்
யாழும் குழலும் அனையசொல் லாள்நின்னை அன்றிஉயிர்
வாழும் திறமல்ல ளேமற வேல்எம்மை மன்னவனே.

(உரை) தலைவிக்கு உய்யுமாறு வேறில்லை யென்று பாங்கி தலைவனுக் குரைத்தல். ஓம்படை சாற்றல் - பாதுகாக்க வேண்டுமெனச் சொல்லுதல். காதல் தொலைந்த தென்றது, கூட்டமின்மை எண்ணி. சொல்லாள் : தலைவி. 'இவளே நின்னல திலளே யாயும், குவளை யுண்கண் இவளல திலளே, யானும் ஆயிடை யேனே, மாமலை நாட மறவா தீமே' - இறையனார் அகப்பொருள் சூ. உஙு உரை. கஅ0

## 18. மேம்பட உரைத்தல்

சுறவே குழையும் மழைபொரு கூந்தலும் சூழ்வளைத்தோள்
நிறவே யழகும் நெறியும் புருவமும் நேரிடையும்
அறவே வளர்தன பாரமும் அல்குல் அழகுஞ்செம்மை
மறவேல் விழிஇணை யும்மற வேனொரு வைகலுமே.

(உரை) தலைவியை மறவேன் என்று தலைவன் கூறுதல். சுறவு - சுறுமீன் ; குழைக்குவமை. வேய் - மூங்கில் ; நிறம்பொருந்திய மூங்கிலொத்த தோளின் அழகும். அறவே - இடை அற்றுப் போகும்படியாக. செம்மை மற வேல்விழி - செம்மையும் மறமும் பொருந்திய வேலொத்த விழி. ஒரு வைகலும் - ஒருநாளும். கஅக

# அ. பகற்குறி இடையீடு

பகற்குறி இடையீடு - பகற்குறியின்படி கூடுவதற்கு இடையே சில தடைகள் நிகழ்தல். இது விலக்கலும் சேறலும் கலக்கமும் என மூன்று வகையுடையது.

## 1. இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்

உருமும் கிரியும் உடல்களி றுயிவள் உண்மெலியப்
பொருமுங் களபப் புணர்முலை நோக்கிப் புனத்திலின்றே
அருமுங் களகம் வலிதென்று போயினள் அன்னையென்று
வருமென் றுணர்வரி தாலென்செய் வேமிவ் வரையிடத்தே.

(உரை) குறித்த இடத்துக்குத் தலைவன் வருவதைத் தடுத்தல். உருமு - இடி. உடல் களிறு - போரிடும் களிறெண்ணி. அரும் உங்கள் அகம் வலிதென்று - அரிய உங்கள் இல்லம் அணுகுதற் கரியதென்று எண்ணி. வரும் - தலைவன் வருவான். வரையிடத்தே இறை வருமென் றுணர்ந்து மெலிகின்றாள் ; வழியில் உடல் களிறுள்ளமையால். அன்னை போயினள், என்று வருமென்று உணர்வரிதால் எனச் சொல்லி விலக்கல். (பா - ம்) புனத்திலிறை. கஅஉ

## 2. இறைவியைக் குறிவரல் விலக்கல்

காலையும் நண்பக லுங்கதிர் போய்வரை காணுமந்தி
மாலையும் வந்துன் வனமுலை ஏற்றமும் வண்டிமிர்பூஞ்
சோலையும் தண்டுறை யுங்குறை யாவஞ் சுருதியையும்
பாலையும் அன்னசொல் லாயென்னையோ அன்னைபார்க்கின்றதே.

(உரை) இறைவியை - தலைவியை. கதிர் போய் - சூரியன் மறைந்து. வரை காணும் அந்தி - மலையிலே மறைகின்ற தோற்றம் காட்டும் அந்தி. இமிர் - ஒளிர்கின்ற. அம் சுருதியையும் : பண்ணையும். பாலையுமொத்த சொல்லாய் : தலைவியை விளித்தது. ஏற்றமும் சோலையும் துறையும் அன்னை பார்க்கின்றது என்னையோ, அதனால் அங்கே செல்லற்க என்றவாறு.

இவையிரண்டும், விலக்கல். கஅரு

### 3. இறைமகள் ஆடிடம் நோக்கி அழுங்கல்

சினவெங் குறவர்பின் செல்லரும் பாவியைத் திண்சிலம்பர்
வினவும் பொழுதென் விளம்புங்கொல் லோவிளை யாடுநவ்வி
இனமும் புனமும் இதணுமஞ் சாரல் இருவியுமை
வனமும் சுனையும் வளையுமந் தாரமும் மவ்வலுமே.

(உரை) விளையாடும் இடங்களை நோக்கித் தலைவி இரங்குதல். செல் அரும்பாவியை : பாவியாகிய என்னைக் குறித்து. சிலம்பர்-தலைவர். நவ்வி - மான். மந்தாரம் மவ்வல் - மலர்கள். விளையாடும் இடத்துள்ள நவ்வி இனமும் புனமும் இதணும் இருவியும் ஐவனமும் சுனையும் வளையும் மந்தாரமும் மவ்வலும், சிலம்பர் பாவியை வினவும்போது என் விளம்புங் கொல்லோ. கஅச

### 4. பாங்கி இறைவியை ஆடிடம் விடுத்துக் கொண்டகறல்

கொய்கின்ற ஏனலும் கொய்யா நறுங்குவ ளைச்சுனையும்
செய்குன்றும் ஊசலும் சிற்றிலும் பார்த்துத் திகைத்துயிர்த்து
நைகின்ற ஆவியும் தாழுமென் னுவர்கொல் நண்பர்கொண்டல்
பெய்கின்ற சாரலும் சீறூ ரிதுவெனப் பெற்றிலமே.

(உரை) விளையாடு மிடங்களை விட்டுத் தலைவியைப் பிரித்துப் பாங்கி வீட்டுக் கழைத்துச்செல்லும்போது தலைவி கூறுதல். நண்பர் - தலைவர். இவற்றைப் பார்த்துத் திகைத்துயிர்த்து என்னுவர் கொல், அவருடைய சீறூர் இதுவெனப் பெற்றிலமே என்கிறாள். கொண்டல் - மேகம். இது சேறல். கஅரு

### 5. செறிப்பட அவனுற்றிரங்கல்

அழியும் இரும்புன மும்மழி யாமண லாழிதொட்ட
சுழியும் அறிந்த இதணமும் பார்த்துத் துணைவிழிநீர்
பொழிய இருந்து புலம்புமென் ஆவியும் பாவிஎம்மூர்
வழியும் அறிந்திங்ங னேவந்த வாளம் மழைவள்ளலே.

(உரை) இற்செறிக்கப் பெற்ற தலைவி, ஆடிடம் வந்து பார்த்துத் தலைவன் இரங்குவான் என்று மனத்துள் எண்ணிக் கூறுதல். புனம்

அழிவது, தினை கொய்யப் பெறுவதனால். மணலாழி தொட்ட சுழி என்றது, மணலிலே அவள் கூடலிழைத்திருந்த சுழியின் அடையாளத்தை. கூடலிழைத்தலை உகூரு ஆம்பாடல் உரையிற் காண்க. இதணம் - தான் இருந்த பரண். பார்த்து, ஆவியும் வழியும் அறிந்து மழை வள்ளல் வந்தவா என்க. இ. வி. கசஙு, பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டகறற் பின்னர் அவனுருவு வெளிப்பட இரங்கலுக்கு மேற்கோள். (பா - ம்) அறிந்தவ் விதணமும்; பாவி யெம்மால்; என் மழை வள்ளலே. கஅரு

## 6. புனத்திடை சென்றோன் மனத்திடை புலம்பல்

கானே குழல்வல்லி காவற் புனமுன்பு கண்டறியா
மானே திரிய வருத்தது வேமழை வந்துறங்கும்
தேனே மலர்ப்பொழில் வந்தென்னை வாழ்வித்த தெய்வமின்று
தானே செயிலென்செய் வேனிடை யூறு தனிநெஞ்சமே.

(உரை) குறியிடமாகிய புனத்திடை சென்று தலைவி இல்லாமைக்குத் தலைவன் நெஞ்சொடு வருந்தல். வாழ்வித்த தெய்வம்: முன்னே 'நங்குல தெய்வம்' (கo) என்றமை காண்க. தெய்வம் தானே இன்று இடையூறு செயில் என் செய்வேன். கஅஎ

## 7. வறுங்களம் நாடி மறுகல்

தேய்கின்ற திங்கள் திருநுத லாரொரர் செயலின்றியே
வீய்கின்ற பாவிக்கு வேறென்சொ லுருங்கள் மெய்த்தவத்தால்
ஆய்கின்ற வேலன் அணிமயில் காளிங் கழியவிட்டுப்
போகின்ற போது வருகின்ற நீர்கண் பொருமநின்றே.

(உரை) தலைவி இல்லாத இடத்தைக் கண்டு தலைவன் வருந்தல். தேய்கின்ற திங்கள் திருநுதலார் - பிறைபோன்ற நுதலையுடைய தலைவி. வீய்கின்ற - அழிகின்ற. வேலன் - முருகன். போகின்றபோது - தலைவி இவ்விடத்தைப் பிரிந்து போனபோது, என் சொன்னார் என்க. கஅஅ

### 8. குறுந்தொடி வாழூர் நோக்கி மதிமயங்கல்

மாறார் வளைய வளைக்கும் சிலைக்கை மலைக்குறவர்
சீறா ரதுசென்ற தேனுமெங் கேசெய லேதினிவன்
பாறார் கடலைப் பருகுசெந் தீயெனப் பற்றிவெந்து
நீறார மேனிஎன் நெஞ்சூரும் அன்பின் நிலைஇதுவே.

(உரை) தலைவி வாழும் ஊரை நோக்கித் தலைவன் மதி மயங்கிக் கூறுதல். மாறார் - மாறுகொண்ட பகைவர் ஊர். சிலை - வில். தேன்: தலைவி. செயலேது - எனக்கினிச் செயலில்லை என்றவாறு. பாறு ஊர் கடல் - மரக்கலம் செல்லும் கடல். பருகு செந்தீ - வடவைத் தீ. மேனி வெந்து நீறு ஊர - நீருக. என் நெஞ்சு ஊரும்: அன்பு, தீ எனப்பற்றி, மேனி நீறார நெஞ்சூரும் என்க. இவை நான்கு பாடல்களும் கலக்கத்திற்குரிய. கஅகூ

## கூ. இரவுக் குறி

இரவுக் குறி - தலைவனும் தலைவியும் இரவிலே கூடுமாறு குறிக்கப் பெற்ற இடம்.

### 1. இறையோன் இருட்குறி வேண்டல்

அரியா மதகரி வேட்டையில் நீடி அசைந்தனம்யாம்
சரியா அருவரை சார்ந்தது பானுவும் சாரலெங்கும்
பிரியா மழைமுகில் கூண்டிருள் மூண்ட தியங்கஇனித்
தெரியாது மங்கைநல் லீர்உங்கள் மால்வரைச் சேணெறியே.

(உரை) இறையோன் - தலைவன். நீடி - காலம் நீட்டித்து. அசைந்தனம் - அயர்ந்து போனேன். அருவரை சார்ந்தது பானு - சூரியன் அத்தமித்தான். சேண் நெறி தெரியாது. ககூO

### 2. பாங்கி நெறியினது அருமை சாற்றல்

முரியும் சிலைநுதல் வல்லிமுத் தேந்தி முறுகிவம்பு
வரியும் களப வனமுலை வேட்டு மயங்கிவரும்

கரியும் கொடுவரி யுங்கானி யாறும் கடந்துவெய்ய
அரியும் அரவுமெண் ணுதைய நீவரல் அஞ்சுவதே.

(உரை) நெறியினது அருமை - வழியானது வருவதற்கு அரிதாயிருத்தலை. முரியும் - வளைந்த. முறுகி - முதிர்ந்து. வம்பு வரியும் - கச்சு ஆர்த்த. முலை : தலைவி. வேட்டு - விரும்பி. கரி - யானை. கொடுவரி - புலி. கான் யாறு - காட்டாறு. வெய்ய - கொடிய. அரி - மலைவழியிலுள்ள பருக்கைக் கல் வரல் அஞ்சுவதே - நீ வருவதை எண்ணி அஞ்சுகின்றோம். ககக

## 3. இறையோன் நெறியினது எளிமை கூறல்

வராஇங் கரிதன்று நும்மலைச் சாரல் வழிஎமக்குக்
குரவஞ் செறிகுழற் கொம்பனை யாய்வெங் கொடுவரியும்
இரவும் தனியும் இகலுரு மேறும் இறைஞ்சுமெண்கும்
அரவும் களிறுமஞ் சேனஞ்சு வேனுங்கள் அன்பினுக்கே.

(உரை) குரவம் - குரா மலர். இரவு என்றது, இருள் நேரத்தை. தனி என்றது துணையின்றி வந்தமை கருதி. உருமேறு - இடி. எண்கு - கரடி. 'இரவு மதமலை நாகம் இவற்றினை என்னுயிரின், விரவு முகமிடை சாயலினல் வென்று மேவுவனே' - சிராமலைக் கோவை கஎக. ககஉ

## 4. பாங்கி அவன்நாட்டு அணியியல் வினுதல்

கொன்னூர் விழிதுயில் கூர்ங்கொடுங் கங்குற் குறிவிரும்பும்
மின்னூர் வடிநெடு வேலண்ண லேசொல் விலையறியாப்
பொன்னூர் வனமுலை பூசுநதண் சாந்தமும் பூந்தொடையும்
நின்னூர் வரைஇளை யார்விளை யாடுநன் னீழலுமே.

(உரை) தலைவனது நாட்டிலுள்ள பெண்கள் அணியும் ஆபரணத்தையும் அவர்கள் இயல்பையும் பாங்கி வினுதல். கொன்னூர் - பெருமையுடைய ஊர்; 'கொன்னூர் துஞ்சினும்' - குறுந். கங்அ. கங்குற் குறி : விழி துயில் கூரும் இரவுக் காலத்துக்குரிய இரவுக் குறி. மின்

னூர் - ஒளி பொருந்திய சொல் - சொல் - சொல்வாயாக. தொடை - மாலை. இளையார் - மங்கையர். கக௩

## 5. தன் நாட்டு அணியியல் பாங்கி சாற்றல்

நிரையார் மலர்க்குழல் வல்லிஎம் ஊரணி நிற்கநும்மூர்
வரையார் அணிபவும் மன்னுநன் னீழலும் மற்றிங்கென்னை
உரையாய் எனில்இன் றுயர்மலை நாட உரைசெய்வல்யான்
விரைஆ ரமுமென் குவளையும் காந்தளும் வேங்கையுமே.

(உரை) வரையார் - மலையிடத்து வாழும் பெண்கள். அணிபவும் - அணியும் அணிகளும். உரையா யெனில் - உரை என்று என்னை நீ வினவில். உரை செய்வல் - சொல்லுகிறேன். விரை ஆரம் - மணம் பொருந்திய சந்தனம். இத்துறை, தலைமகன் அவள் நாட்டணி யியல் வினுதல், பாங்கி தன் நாட்டணியியல் சாற்றல் என இரண்டாயு மிருக்கும். கக௪

## 6. இறைவிக் கிறையோன் குறையறிவுறுத்தல்

செஞ்சேல் அனைய விழிமட வாய்தெண் திரைநுகர்ந்து
மஞ்சே தவழு மணிவரைச் சாரலில் வாளரவு
நஞ்சே உமிழினும் வெஞ்சூர் அணங்கினும் நள்ளிருளில்
அஞ்சேன் வருவனென் றுரென்செய் வேனவர் அன்பினுக்கே.

(உரை) தலைவன் கருத்தைப் பாங்கி தலைவிக்குரைத்தல்; குறை யாவது இரவுக்குறி வேண்டல். மடவாய்: தலைவியை விளித்தது. திரைநுகர்ந்து - கடல் நீரைக் குடித்து. மஞ்சு - மேகம். சூர் அணங் கினும் - வனதெய்வம் துன்புறுத்தினும். கக௫

## 7. தலைவி நேராது நெஞ்சொடு கிளத்தல்

பொருமாறு கொண்டு புகர்முக மாவும் புலியுமச்சம்
தருமா றுருமுறும் தானம் கடந்து தமியள்முன்னே
உருமாறி வந்துவெஞ் சூர மாதர் உலவுங்கங்குல்
வருமா றிசைந்தன மோமன மேஅந்த வள்ளலையே.

(உரை) தலைவி அதற்குடன் படாமல் தன் நெஞ்சுக் குரைத்தல். புகர்முக மா - யானை. உருமுறும் தானம் - இடிவழங்கும் இடத்தை. சூரரமாதர் - பேய்மகளிர். கங்குல் வருமாறு இசைந்தனமோ - தலைவன் இரவில் வர நாம் இசைந்தோமோ. 'முழங்கார் அரிமுரண் வாரண வேட்டைசெய் மொய்யிருள்வாய், வழங்கா அதரின் வழங்கென்றுமோ இன்றெம் வள்ளலையே' - திருக். கடுள. (பா - ம்) தலைவி நொந்து நெஞ்சொடு கிளத்தல்; தமியன் முன்னே. கக௬

## 8. இரவுக்குறி ஏற்பித்தல்

தளவந் தருநகை யாய்நதி வாய்ந்தஅத் தண்டுறைவர்
இளவண்டல் மேவும் இருங்கழிக் கானல் இளம்பெடையைக்
களவனம் புல்லி ஒளித்துற வாடும் களவுகண்டார்
அளவின் றியதுயர் கூர்ந்தகன் றூர்நெஞ் சறிகிலமே.

(உரை) தலைவி இரவுக்குறிக்கு உடன்படுமாறு பாங்கி கூறுதல். தளவம் - முல்லை. களவனம் - களவன்; ஆண்நண்டு; 'புள்ளிக்களவன் புனல்சேர் பொதுக்கம்' - கலித்தொகை அஅ. அளவின்றிய - அளவில்லாத. (பா - ம்) இரவிற் குறி ஏற்பித்தல். கக௭

## 9. தலைவி இரவுக்குறி நேர்தல்

குருகைக் கறிக்கப் பறிக்குநங் கோடெனக் கோளரிகண்(டு)
ஒருகைக் களிறஞ்சி ஒல்குந்தண் சாரல் உயிரனையாய்
இருகைக் களிறு தனிநெறி யேநள் ளிரவுநம்பால்
வருகைக் கிசைந்தனை யோஇனி நானென் மறுப்பதுவே.

(உரை) உடன்பட்டுரைத்தல். குருகு - கொம்பின் அடிக்குருத்து. கறிக்க-தின்ன. கோடு - கொம்பை. கோளரி - சிங்கம். ஒருகைக்களிறு-யானை. 'சொரிமதத்து, வெங்கைக் களிற்றின் மருப்பைப பறிதததன் வேரருநதுஞ், சிங்கத்தடவருவிச் சிலம்பா' - உஎக. ஒல்கும் - தளரும். உயிரனையாய்: பாங்கி. இருகைக்களிறு: தலைவன். நீ இசைநது விட்டபின் நான் எபபடி மறுபபது என்க. 'உன் நாவகத்திற் கிசைநததை நீயே உரையணங்கே' - கோடீ. ௪௦அ. கக௮

### 10. நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக்கு உரைத்தல்

திருந்திய ஆறு திருமுகன் வள்ளி திருமுகம்பெற்(று),
அருந்திய வாறுனக் கன்புடன் கூட அருவினையேன்
வருந்திய வாறும் வருந்திய என்சொல் மருதுவஞ்சி
பொருந்திய வாறும் புகலவொ ணாநம் புரவலனே.

(உரை) தலைவி உடன்பட்டமை பாங்கி தலைவனுக்குரைத்தல். திருமுகம் பெற்று என்றது அவ்வள்ளி முன்னே சென்று என்றவாறு. வஞ்சி பொருந்தியவாறு - தலைவி உடன்பட்டமை. புகலவொணா - சொல்வதெளிதல்ல. ௧௯௯

### 11. குறியிடை நிறீஇத் தாய் துயில் அறிதல்

சீதஞ்செய் திங்கள் திருமுகத் தாய்நம் செழுஞ்சிலம்பின்
மாதங்கம் ஒன்று மழைமதம் பட்டுநம் மல்லிகைவெண்
போதொன்று பந்தரும் கற்பக ஊசலும் பொற்பழித்துச்
சூதஞ் சுரபுன்னை சூழ்நறுங் காவும் தொலைக்கின்றதே.

(உரை) தலைவனை நிறுத்தி, தாயின் துயிலைப் பாங்கி சோதித்தறிதல். சீதம் - குளிர்ச்சி. மாதங்கம் - யானை. மதம்பட்டு - மதங்கொண்டு. போது ஒன்றுகின்ற பந்தர். சூதம் - மா. தொலைக்கின்றது - சிதைக்கின்றது. 'சிறுகட் பெருவெண், கோடார் கரிகுரு மாமணி யூசலைக் கோப்பழித்துத், தோடார் மதுமலர் நாகத்தை நூக்கும் நம் சூழ் பொழிற்கே' - திருக். ௧௬௧. ௨௦௦

### 12. குறி எதிர்கோடல்

வீழ்கின்ற தண்புனல் வெள்ளத்து நள்ளிருள் மேவிமங்குல்
சூழ்கின்ற குன்றச் சுரம்வர வாய்த்துங்கண் துஞ்சமறந்(து)
ஆழ்கின்ற துன்பம் அருந்துய ராக அருவினையேன்
வாழ்கின்ற இல்லம் அறிந்ததெவ் வாறென் மழைவள்ளலே.

(உரை) தலைவி குறி எதிர்கொண்டு சொல்லுதல். நள்ளிருள் - நள்ளிருளில். மங்குல் - மேகம். ௨௦௧

### 13. தலைமகன் வரவு அறிவுறுத்தல்

**கொ**ன்னே அரவும் உருமும் தருமிருள் கூர்கங்குல்வாய்
மின்னே சுடர்வடி வேல்விளக் காகநம் வேட்கையினல்
என்னே தமியர்வந் தெய்தினர் போலும் எழுதரிய
பொன்னே திருமனை யின்புறஞ் சார்புட் புலம்பினவே.

(உரை) வரவு - வந்தமையை; பாங்கி தலைவிக்கு அறிவுறுத்தல். கங்குல்வாய் - இருளில். மின்னே: தலைவியை விளித்தது. வேல் விளக்காக - தலைவன் தன் கையிலேந்திய வேலின் ஒளியே துணையாக. தமியர் - தனியராக. 'புள்ளும் புலம்பின, பூவும் கூம்பின' - குறுந். ௩௧௦. புள்புலம்புதல், தலைவன் வந்த அரவங் கேட்டுத் துயில் கலைந்தமை யால். புலம்பின - ஒலித்தன. ௨௦௨

### 14. குறியிடம் கொண்டு சேறல்

**வ**ல்லிக் கொடியிடை வாட்டிய மேரு வரைஇரண்டு
புல்லிப் பொருந்திய பூண்முலை யாய்உடன் போதுதியே
அல்லிக் குவளை யகல்சுனை நீரில் அரும்பவிழ்த்துக்
கொல்லிச சுரும்பறை மல்லிகை நாண்மலர் கொய்வதற்கே.

(உரை) பாங்கி தலைவியைக் கொண்டு செல்லுதல். உடன்போ துதியே - வருவாயாக. கொல்லிச் சுரும்பு அறை - கொல்லி மலையி லிருநது வநத வண்டு முரல்கின்ற. (பா - ம்) போதுதியோ. ௨௦௩

### 15. குறியிடத்துய்த்து நீங்கல்

**கொ**த்தார் நறுமலர் கொய்துவல் லேவரும் எல்லையினில்
இத்தா ருவினிழல் எம்பெரு மாட்டி எழுந்தருள
மைத்தார் பொழிலின வண்டொரு கோடி மழைக்குழலின்
மொய்த்தால் அரிய மருங்குலெங் கேஇம் முலைமலைக்கே.

(உரை) தலைவியைக் குறியிடத்தே நிறுத்திவிட்டு, பூக்கொய்து வருவதாகச் சொல்லிப் பாங்கி பிரிதல். வல்லே - விரைவிலே. வரும் எல்லையினில் - நான் வருமளவும். தாரு - மரம். எம்பெருமாட்டி -

தலைவி. எழுந்தருள - வந்திருப்பாயாக. ஒரு கோடி வண்டு மொய்த்தால், தாங்குவதற்கு இடை இல்லை யென்றபடி. முலைமலைக்கு - மலை போன்ற முலையுடைய இவளுக்கு. உ௦௪

## 16. இறைவி இறையோனிடத் தெதிர்ப்படுதல்

வரவிந்த மன்ன வளர்தன பாரமும் மவ்வலுடன்
குரவந் தயங்கிருள் கொந்தள பாரமும் கொண்டிங்ஙனே
இரவந்த மால்வரை வந்தென்னை ஆளும் இதுநினைந்தோ
அரவிந்த மாளிகை நீர்பக லேவிட் டகன்றதுவே.

(உரை) தலைவி தலைவனிடத்து எதிர்ப்படுதல். விந்தம் அன்ன - விந்திய மலைபோன்ற. தயங்கு : இம்மலர்கள் விளங்குகின்ற. இருள் கொந்தளபாரம் - இருண்ட அளகபாரம். மால்வரை - காதல் மலை. அரவிந்த மாளிகை - தாமரையாகிய இருப்பிடம். இது தலைவியைத் திருமகளாகச் சொல்லியவாறு. 'மலர் மாளிகை' - கடுசு. பகலில் தாமரை திறந்திருக்கும், இரவில் மூடிவிடுமாதலால், இரவில் தாமரையை விட்டு வர முடியாதென்ற குறிப்புத் தோன்ற, 'பகலே விட்டகன்றதுவே' என்றான். 'இந்நிசியில் வெய்யோன்...தன்கரத்தா லடைத்திட்ட திண்மனையங்கு, ஆர்திறந்தார் வந்தெவ்வாறு வந்தாய்' (கோடீ. கசுஅ) என்றது காண்க. உ௦௫

## 17. பெருமகள் ஆற்றினதருமை நினைந்திரங்கல்

கன்னக மீது கணமழை தூங்கிருங் கங்குலுன்றன்
மின்னுக வெங்கதிர் வேல்வலன் ஏந்தி விடஞ்சொரியும்
பன்னக மும்மதம் பாய்நாக மும்பயி லுஞ்சுரத்தில்
என்னுகம் என்செய்ய வோஇறை வாஇன் றிங் கெய்தியதே.

(உரை) தலைவன் வரும் வழி வருதற்கரிதாயிருத்தலை எண்ணித் தலைவி வருந்தல். கல்நாகம் : மலை. கண மழை - மேகக்கூட்டம். மின்னுக - ஒளி பொருந்திய. விடஞ்சொரியும் பல்நாகமும் - பாம்புகளும். மதம்பாய் நாகமும் - மதம் பொழியும் யானையும். என் ஆகம் - என் உடல். ஏந்தி : 'வெம்போர் முருகென்ன வேல்வலன் ஏந்தி' - தஞ்சை. கஅசு.

## 18. புரவலன் தேற்றல்

மேகஞ் சிறந்த குழல்சிழ லோடிய வேல்நெடுங்கண்
மாகஞ் சிறந்த மதிநுத லாய்மல்கும் அல்குலுக்கும்
ஆகஞ் சிறந்த முலைக்குமுன் தோற்ற அடலெயிற்று
நாகங்கள் என்னை நலிவுசெய் யாதுங்கள் நண்பனென்றே.

(உரை) புரவலன் - தலைவன். மாகம் - வானத்திலே. அல்குலுக்கும் முலைக்கும் தோற்ற நாகங்கள் என்றது, முறையே பாம்பும் யானையும். எயிற்று - பல்லையுடைய. நலிவு செய்யாது - துன்புறுத்த மாட்டா. உங்கள் - உன்னுடைய. இ. வி. கசரு. (பா - ம்) செய்யாவுங்கள். உ௦எ

## 19. புணர்ச்சியின் மகிழ்தல்

அரியார் மதர்விழி ஆலமன் னீர்சொல் அமுதமன்னீர்
புரியார் தளைஅவிழ் பூமலர்க் காவில் புணர்ந்திங்ஙனே
தரியாத அன்பு தயங்க முயங்கும் தகைபகலும்
பிரியாம லிங்கெவர்க் குந்தெரி யாவிஞ்சை பெற்றிலமே.

(உரை) ஆலம் - ஆலகால விடமாகிய நஞ்சு. ஆலம், அமுதம் என்றது முரண். தகை - தன்மை. விஞ்சை - வித்தை. இ. வி. கசரு. (பா - ம்) அன்புந் தயங்குந்தகை இரவும் பகலும். உ௦அ

## 20. இறைவியை இல்வயின் விடுத்தல்

பங்கே ருகமலர்ப் பாயலை நோக்கியப் பாற்கடலின்(று)
எங்கே திருவென் றிரங்குமுன் னேஇசை வண்டினஞ்சூழ்
கொங்கேர் மலர்க்குழல் கொவ்வைச்செவ் வாய்மென் கொடிமரு
செங்கேழ் விழியன்ன மேதிரு மாளிகை சேர்ந்தருளே. [ங்குற்

(உரை) இல்வயின் - தலைவியின் இல்லத்துக்குச் செல்லுமாறு. பங்கேருக மலர்ப பாயலை - தாமரையாகிய பள்ளியை. திரு எங்கே என்று பாற்கடல் இரங்கு முன்னே, அன்னமே, மாளிகை சேர்ந்தருளே என்க. கொங்கேர் - தேன் நிறைந்த. செங்கேழ் - செந்நிறமுடைய.

‘ நின்மாளிகையாங், தொல்லையம் போருகங் தேடவுங்கூடும் ’ - தஞ்சை. கஅ௩.

உOகூ

## 21. களவு மகிழ்ந்துரைத்தல்

அரவங் தருமணி நூபுரத் தாமரை அன்னங்கற்ற
கரவிங் கெவருழை கண்டறி வோம்கள்வ ருந்துயில்கூர்
இரவும் பகலும் எமக்கும் தமக்கும் இசையநலம்
பரவும் பனிமதி யின்பண்பை யார்முகப் பங்கயமே.

(உரை) தலைவன் தலைவியைப் புகழ்ந்துரைத்தல். நூபுரமணிந்த அன்னம், தலைவி. கரவு - களவொழுக்கம். எவருழை - எவரிடத்து. பனிமதியின் பண்பு - தண்மை. பங்கயம் - தாமரை. உகO

## 22. பாங்கி கையுறை காட்டல்

செஞ்சேல் பொருகுழை சேர்க்கும் குவளையும் தேனிரங்கு
மஞ்சேர் குழற்கணி மவ்வலும் கொய்திவண் வந்தனன்முன்
அஞ்சேல் அரிவைஅஞ் சேலடி யேன்விட் டகன்றதற்கு
நெஞ்சேது பட்டது நீஎது பின்னை நினைந்தனையே.

(உரை) மலர் கொய்து வருவேன் என்று பிரிந்து சென்ற பாங்கி (உOச) மலர் கொண்டு வந்து காட்டல். செஞ்சேல் - சேல்மீன். சேல் பொருகுழை, குவளை: குவளை காதிலே அணிதற்கு. மஞ்சுஎர் - மேகம் போன்ற. மவ்வல், குழற்கு. தேன் இரங்கும் - வண்டு முரல்கின்ற. நெஞ்சு ஏது பட்டது: என்ன துயருற்றது. இ. வி. கசரு. உகக

## 23. இற்கொண் டேகல்

புழற்கால் நறுங்குவ ளைச்செவிப் போதும் புயலைவென்ற
குழற்கான மவ்வலும் கொய்தனம் யாமில் கொடியஅன்னை
அழற்கால் விழித்துயில் நீத்துண ராமுன் அடைகுவம்யாம்
கழற்கால் மதன்கணை போல்விழி யாய்நம் கடிமனைக்கே.

(உரை) பாங்கி தலைவியை வீட்டிற் கழைத்துச் செல்லுதல். புழற்கால் - துளையுடைய நாளம் (காம்பு); புழல் - துளை; ‘ புழற்கால் ஆம்பல் முதலியனவும் ’ - தொல். பொருள். கூசஉ உரை. போது - மலர்.

இல் - வீட்டிலே. அழல்கால் விழி - நெருப்பைக் கக்கும் விழி. உணரா முன் - நீ இல்லாமையை உணராமுன். கழற்கால் - காலிலே கழலணிந்த. இ. வி. கசரு. (பா - ம்) புழற்காலன குவளை, புழைக்கானறுங் குவளை ; கொய்தனமாயிற் ; விழியார்தம். உகஉ

## 24. இரவுநீடப் பருவரல் கூறல்

**வி**ரியும் கடலுல கெல்லாம் உறங்க விழியடையா(து)
எரியும் சுடர்துணை யாயிருந் தாளுக் கிடித்திடித்துச்
சொரியும் புயலும் துளங்கிய மின்னொடு தூங்கிருளும்
திரியும் குறுந்துளி சிந்தின வாடையும் சீரிதன்றே.

(உரை) பருவரல் - தலைவியுற்ற துன்பத்தை. விழியடையாது : உறக்கங்கொள்ளாது. இருந்தாள் : தலைவி. சீரிதன்றே - நன்மை செய்வன அல்ல. புயலும் இருளும் வாடையும் துன்பந் தருகின்றன. உகரு

## 25. இறைவனை வரவு விலக்கல்

**க**லவம் செறிமயில் அன்னஎன் காரிகை காரணமாய்
இலகும் சுடர்வடி வேலிறை நீவரின் இவ்விரவு
சிலைபைங் கழைமுத்த முந்துத்தி நாகச் சிகாமணியும்
நிலவும் வெயிலும் எறிக்குமென் சாரல் நெடுவரையே.

(உரை) தலைவன் இரவில் வருதலைப் பாங்கி விலக்கல். என் காரிகை காரணமாய் : தலைவியை விரும்பி. இறை நீ : தலைவனாகிய நீ. இவ்விரவு நீ வரின், சாரல் நெடுவரை நிலவும் வெயிலும் எறிக்கும் ஆதலால், நீ வருவது வெளிப்படும், எனவே வாரற்க என்றவாறு. கழை முத்தம் - மூங்கிலிற் பிறந்த முத்து ; முத்துப் பிறக்குமிடங்களுள் மூங்கிலு மொன்றெனல் மரபு. துத்தி நாகச் சிகாமணி - படமுடைய நாகத்தின் தலையிலுள்ள இரத்தினம். முத்து எறிப்பது நிலவு ; மணி எறிப்பது வெயில். உகச

## 26. கூகையை நோக்கிக் கூறல்

**கூ**ருகிர்ப் பைங்கண் வளைவாய்க் குருகிளங் கூகையங்ஙன்
ஊருயிர்க் குந்துயர் பாலுள் இரவின் ஒருதனியேன்

ஆருயிர்க் கேள்வர்க் ககன்றன வாய்ச்சொல்லு மாங்கசனி
நேருயிர்க் குங்குரல் காட்டவெஞ் சூட்டெலி நேர்குவனே.

(உரை) கூகை குரல் கேட்டுத் தலைவி அதற்குப் பலி நேர்வதாய்க் கூறுதல். உகிர் - நகம். குருகிளங் கூகை - இளங் குஞ்சுடைய கோட்டான். துயர் பானாள் இரவு - துயரம் நிறைந்த நள்ளிரவு. கேள்வர்க்கு-தலைவர் வருவதைக் கண்டு. அசனி நேர் உயிர்க்குங் குரல் காட்ட - இடியொத்த குரலிலே கூகை கூவ. 'குன்றக் கூகை குழறினும்...... அஞ்சுமன் அளித்தென் நெஞ்சம்' - குறுந். கஙரு. கூகை குரல் தலைவன் வருவதை உணர்த்தியமையால், சூட்டெலியைக் கூகைக்குப் பலி நேர்குவன் என்றாள். காக்கைக்குப் பலி நேர்ந்தமை, 'பல்லா பயந்த நெய்யிற் றொண்டி, முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு, எழு கலத் தேந்தினும் சிறிதென் தோழி, பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு, விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே' - (குறுந். உகO) என்பதால் அறியலாம். உகரு

## 27. பெருமகன் மயங்கல்

முதுவான் மதியை மழவுகை காட்டி மொழிந்திரங்கு
மதுவாம் நினையில் அனையவென் காதல் அளிஇனஞ்சூழ்
மதுவார் மலர்மென் குழல்வல்லி நீசொன்ன மாற்றங்கெட்டேன்
இதுவாம் எனிலவ் வனைஎது வாம்இங் கியம்புவதே.

(உரை) பாங்கி வரவு விலக்கியதை ஆற்றாத தலைவன் வருந்திக் கூறுதல். பெருமகன் - தலைவன். மழவு - குழந்தை. கை காட்டி: அம்புலியழைத்தல். என் காதல், குழவி அம்புலியை அழைத்துப் பேசுவதனோடொக்கும்போலும். அளி - வண்டு. வல்லி - பாங்கி. மாற்றம் - சொல். இதுவாம் எனில் - நீ கூறுவது இதுவானால். கெட்டேன்: தன்னை நோக்கி இரங்கிக் கூறியது. அவ் அனை: அன்னை, தலைவி. உகசா

## 28. நின்பதி அடைந்தமை நீநிகழ்த் தென்றல்

இடிக்கொத் துரும்ம் இலங்கெயிற் றாளி இபமருப்பை
ஒடிக்கத் திரியும் உழுவையஞ் சாரலில் ஓர்தனியே

வடிக்கட் சுடர்வடி வேல்மன்ன நீசெல் வழிக்கிரங்கும்
கொடிக்குப் படர்கொம்பு கூடுநின் சாரற் குறித்தகொம்பே.

(உரை) வழியெல்லாம் உனக்குத் துன்பம் நிறைந்திருக்குமே என்று தலைவி வருந்துகின்றாளாதலால், நீ தீங்கின்றி நின்பதியை அடைந்த செய்தியைத் தெரிவிப்பாயாக என்று பாங்கி தலைவனுக்குக் கூறுதல். இலங்கு எயிற்று ஆளி - ஒளி பொருந்திய எயிற்றையுடைய சிங்கம். இபமருபகை - யானையின் கொம்பை. உழுவை - புலியுடைய. வழிக்கு இரங்கும் கொடி - வழி துன்ப முடையதென்று வருந்தும் தலைவி. படர் கொம்பு : நின் பதியை நீ அடைந்தாய் என்பதைக் குறிக்கும் அடையாளம், இவளுக்குப படர் கொம்பாயிருக்கும். குறித்த கொம்பு - அடையாளமாக ஊதிய கொம்பு. 'ஏமுறு துயரமொடு யாம் இவண் ஒழிய, எற்கண்டு பெயருங் காலை யாழநின், கற்கெழு சிறுகுடி எய்திய பின்றை, ஊதல் வேண்டுமால் சிறிதே வேட்டொடு, வேய்பயில் அழுவத்துப பிரிந்த நின், ஆய்பயில் குறிநிலைக் கொண்ட கோடே' - **அகநானூறு** ௩௧௮. 'நின்னூ ரகம்புகுந் தாற்குறி காட்டு நெடுந் தகையே' - **தஞ்சை.** ௧௮௮. இ. வி. ௧௭௫, தோழி தலைமகள் துயர் கிளந்து விடுத்தற்கு மேற்கோள். (பா - ம்) இடிக்கொத் தொளிறும் ; இபங் கரும்பை ; கூடி நின் சாரல். ௨௧௭

## 29. தலைமகள் ஆங்கு நினைந்திரங்கல்

பறியிடை என்னைப் புயற்றுளி தூங்கப் படிப்புறத்துச்
செறியிடை யாமத் தொருதனி வேல்கொண்டு தீவினையேன்
குறியிடை வந்தகன் றூர்கொலை வேழக் குழாந்திரியும்
நெறியிடை யூறின்றி யேசெலு வார்தம் நெடுநகர்க்கே.

(உரை) நெறியிடையுள்ள துன்பத்தை எண்ணித் தலைவி இரங்கல். பறி - உடல் ; உடல் மழையில் நனைந்து அதன்கண் மழைத் துளி தூங்க என்க. படிப்புறத்து - ஊர்ப்புறத்து. குறியிடை - இரவுக் குறியிடை. ஊறின்றியே - துன்பமின்றி. ௨௧௮

# ௧௦. இரவுக்குறி இடையீடு

இரவுக் குறி இடையீடு - இரவுக் குறிக்கண் தடைகள் நிகழ்தல்.

## 1. இறைவிக்கு இகுளை இறைவரவு உணர்த்தல்

நீரும் கனலும் நிமிர்கடுங் கானும் நெடுவிசும்பும்
பாரும் துயில்கொண்ட பானாள் இரவும் பரவைஅம்பும்
வாரும் புலவுறு நாற்றமும் மாற்ற மலர்ந்தபுன்னை
சேரும் குருகினம் சேக்கைகொள் ளாது சிலம்பினவே.

(உரை) தலைவன் வந்தமை தோழி தலைவிக்கு உரைத்தல். இகுளை - தோழி. துயில்கொண்ட பானாள் - நீர் முதலாயின யாவும் துயின்று விட்ட நள்ளிரவிலே. பரவை அம்பு - கடல் நீர். வாரும் புலவுறு நாற்றம் - கொண்டு வந்து சேர்க்கும் மீன் முதலியவற்றின் நாற்றம். இவற்றைத் தன் நறு மணத்தால் மாற்ற மலர்ந்த புன்னை. சேரும் - அதில் வாழும். குருகினம் - பறவைகள். சேக்கை கொள்ளாது சிலம்பின - துயிலாது ஆரவாரிக்கின்றன என்று பாங்கி சொல்கிறாள். ஆரவாரித்தது, தலைவன் வந்தா னென்றமை குறித்தவாறு. 'பொன்னங் கலர் புன்னைச் சேக்கையின் வாய்ப் புலம்புற்று முற்றும், அன்னம் புலரு மளவும் துயிலாது அழுங்கினவே' - திருக். ௧௭௨. ௨௧௧

## 2. தான் குறி மருண்டமை தலைவி அவட்கு உரைத்தல்

புள்ளும் புனலும் புலம்பிய ஓசை புணர்குறிஎன்(று)
உள்ளம் பொதிந்த உவகையும் நானும் ஒலிஅடங்கி
நள்ளென்ற கங்குல் நறுமலர்ச் சோலையில் நண்ணிநிற்பக்
கள்ளம் சிறிதுள வோகலந் தார்வரக் காண்கிலமே.

(உரை) மற்றொன்றைத் தலைவன் செய்த குறியென்று தான் மயங்கினமை தோழிக்குத் தலைவி கூறுதல். புணர்குறி - கூடுதற்கு வந்த தலைவன் செய்யும் குறி. நள்ளென்ற கங்குல் - இருள் செறிந்த இரவில்; 'நள்ளென் கங்குல்' - குறுந். ௩௧௨. நண்ணி நிற்ப - நான் போய் நிற்க; வரக் காண்கிலன் என்க. காணமையால், கள்ளம் சிறிதுளவோ என்று

வினவுகிருள். ‘ பிறிதோர் குறியை, நேசத்தவர் குறியென்று சென்று யான் குறி நின்றுவந்தேன்......அவரும் எய்தார்’ - **தஞ்சை. கககக. உஉ0**

### 3. குறிபிழைத்து அழுங்கல்

குழிவந்த பைங்கண்வெங் கூர்வாய்க் குடிஞை கொடுங்குரற்
அழிவந்த நெஞ்சும் அருவினை யேனும் அலர்க்குறியின்[கின்(று)
வழிவந்து நின்று மயங்கிருள் வாயுற்ற மம்மரெல்லாம்
கழிவந் தனநெய்தல் காள்கைதை காள்சொல்லும் காதலர்க்கே.

(உரை) தான் கேட்ட குறியை யெல்லாம் பிழைத்துத் தலைவன் வாராமற் போனமைக்குத் தலைவி வருந்தல். குடிஞை - கூகை ; உகரு. அலர்க் குறி : குறியிடை வந்த தலைவன் தலைவியைக் காணாத நிலையில், தான் வந்ததை அவளறிய விரும்பிப் பூவொன்றை அடையாளமாக வைத்துச் செல்வான் ; அவ்வடையாளம். அலர் - பூ. மம்மர் - துன்பம். கைதை - தாழை. நெய்தல்காள், கைதைககாள், நெஞ்சும் அருவினையேனும் உற்ற மம்மரெல்லாம் காதலர்க்குச் சொல்லும் என்க. (பா - ம்) கொடுங்குற்றதின்று. உஉக

### 4. பாங்கி தலைவன் தீங்கெடுத்து இயம்பல்

ஆடும் படவர வல்குல்மின் னேஅவர் அன்புதுன்பம்
நீடும் பரிசு நிகழ்ந்தது வேநெஞ்சு நீடுயிர்த்து
வாடும் குறிஇன்றி மன்றலஞ் சோலையில் வந்துநம்மைக்
கூடும் குறியல்ல வேகுறித் தாரின்று கொற்றவரே.

(உரை) தலைவி அறிந்து கொள்ளாதபடி அவன் குறிப்புச் செய்த தீங்கைப் பாங்கி எடுத்துக் கூறுதல். நீடும் பரிசு - பெருகும்படி. ‘தெளிகடற் றண்சேர்ப்பன், செய்தான் தெளியாக் குறி’ - **ஐந்திணை ஐம்பது** சக. கொற்றவர் - தலைவன். உஉஉ

### 5. புலந்தவன் போதல்

நம்போல் எளியவர் இல்லைநெஞ் சேஇந்த நானிலத்து
வம்போட வென்ற வனமுலை மாதர்க்கு மாளிகையின்(று)

அம்போ ருகமென் றறிந்தும்வம் பேஎன்னை நீஅலைத்து
வெம்போ தகநதிரி கங்குலென் னேஇங்கு மேவியதே.

(உரை) தலைவன் வருந்தி மீளல். வம்பு - கச்சு. அம்போருகம் - தாமரை. வம்பே - வீணே. வெம்போதகம் - கொடிய யானை. அம்போருகம் என்றது, அவள் வாராமையால் வருந்தியதோடு, திரு என்றும புகழ்ந்தவாறு ; உ௦௫ ஆம் செய்யுளில் அரவிந்த மாளிகை என்றதும் காண்க. இ. வி. கசஎ. (பா - ம்) நானிலத்தில். உஉ௩

## 6. புலந்தபின் வறுங்களம் தலைவி கண்டிரங்கல்

யாமம் புணர்குறி வந்துநின் றேனினும் இங்கிவர்தம்
தாமம் புனையத் தவம்செய்த வாலைந் தடஞ்சுனையில்
தேமென் குவளையும் கோடலும் நாறும் செழுஞ்சிலம்பில்.
பூமென் குரவு சுரபுன்னை சூழும் புனக்கன்னியே.

(உரை) பொழுது விடிந்தபின், தலைவனில்லாத இடத்தைக் கண்டு தலைவி வருந்தல் ; வறும் களம், தலைவனில்லாத இடம். வந்து நின்றேனினும் புனக்கன்னி தவஞ் செய்தவா என்க. நின்றேனினும் - நின்ற என்னினும். இவர்தம் தாமம் - தலைவனது மாலை. கோடல் - காந்தள். புனக்கன்னி, தலைவன் மாலை சூடப்பெற்றமையால், என்னினும் தவஞ் செய்தவள் என்றவாறு. 'நீதகை கொண்டென்முன் நின்றனையே...கேதகை என்னும் நல்லாய் கொண்கர் மாலை கிடைத்த தெனறே' - தஞ்சை. ககூச. உஉ௪

## 7. தலைவி தன் துணைக்கு உரைத்தல்

வரலிங் கரிய மயங்கிருள் யாமத்து வந்தனர்வேய்
நரலும் சிலம்பர் நவமணி ஆழி நறவுண்வண்டு
முரலும் தளைஅவிழ் மொய்ம்மலர்க் காந்தளம் செம்முகைக்கை
விரலென்று கொல்செறித் தார்நெறித் தாழ்குழல் மெல்லியலே.

(உரை) தன் துணை - பாங்கி. வரல் அரிய - வருதற்கு அரிய. வந்தனர் - வந்த தலைவர். வேய் நரலும் - மூங்கில் ஒலிக்கும். காந்தளம் செம்முகை - மலருந் தருணத்திலுள்ள செங்காந்தள் அரும்பு காந்தள்,

விரலுக்குவமை. இ. வி. கசஎ. (பா - ம்) யாமத்துள் வந்திளவேய்; செம்மலர்க்கை. உஉ௫

### 8. தலைமகள் அவலம் பாங்கி தணித்தல்

அடுங்கால வேலை அணையகண் ணீர்வர ஆவிநைந்து
நடுங்கா தொழிமதி நன்னுத லாய்புன்னை நாறுசினைப்
படுங்காய் உதிரப் பழனக் குருகு பதிகலங்கக்
கொடுங்கால் எறிந்தது நம்கா தலர்தம் குறியல்லவே.

(உரை) அவலம் - துன்பத்தை; காற்றடித்தது என்று சொல்லித் தணித்தல். அடுங்கால வேலை - கொல்லும் யமனது வேலை. ஒழிமதி - ஒழிவாயாக. காய் உதிர்ந்து குருகு கலங்கியது, கால் எறிந்தமையால்; இது நம் காதலர் குறியல்ல. உஉ௬

### 9. இறைவன்மேல் பாங்கி குறி பிழைப்பு ஏற்றல்

உழிபார்த் துடனுறை புள்ளினம் போமெல்லை ஒன்றுஞ் சொல்லாக்
கழிபார்த் திரங்கு கருங்கடற் சேர்ப்ப கருத்துனக்கு
வழிபார்த் திருந்து வருந்துமெங் கானல் வரலொழிந்தீர்
பழிபார்த் துடனுறை பக்கமெங் கேசொல்லும் பாவியர்க்கே.

(உரை) குறிப்புத் தவறிப போனதைப் பாங்கி தலைவன் மீதேற்றிக் கூறுதல். உழி பார்த்துடனுறை புள்ளினம் போமெல்லை என்றது, புள்ளினம் கூட்டுக்குத் திரும்பும் மாலைபொழுது என்க. வழிபார்த் திருந்து - குறியிடத்து உன்னை எதிர்பார்த்து. உடன் உறை பக்கம் - நீ உறைகின்ற ஊர். பாவியர்க்கு - துன்புற்ற தலைவிக்கு என்றபடி. 'விம்மூர் துயர்க்கட லுள்ளேஎம்மை வீழ்வித்துநீர், எம்மூ ரகத்து வர லொழிந்தீர்.........உம்மூர் வரத் துணிந்தோம் அன்பர் கூறுமவ் வூரெமக்கே' - தஞ்சை. கககஎ. உஉ௭

### 10. இறைவிமேல் இறைவன் குறி பிழைப்பு ஏற்றல்

கடவா ரணந்திரி கங்குலின் யானவர் தங்குறியை
விடவாள் விழிவஞ்சி துஞ்சிய வாறென் விளங்குமணிப்

படவாள் அரவல்குற் பைந்தொடி யேஇப் படியகத்து
மடவா ரினுமுண்டு கொல்பண்டு போலன்றி வன்னெஞ்சரே.

(உரை) விட-அவள் குறியை யான் பிழைக்கும்படியாக. துஞ்சிய வாறு - அவள் உறங்கி விட்டது. கட வாரணம் - மதங்கொண்ட யானை. படியகத்து - உலகத்திலே. மடவாரினும் - பெண்களிலும், அதாவது இவளிலும்; அறியாதவரினும் என்பது வேறு பொருள். உஉஅ

## 11. அவள் குறி மருண்டமை அவள் அவற்கு இயம்பல்

கடுங்கால் எறியக் கடத்துகு மாவின் கனியையெல்லாம்
ஒடுங்கா அரவல்குல் உன்குறி யாக உளமகிழ்ந்து
நடுங்கார் இருள்வந்து நாண்மலர்ச் சோலையில் நண்ணியபின்
அடுங்காய் களிற்றண்ண லேஎண்ணு மாறொர் அளவில்லையே.

(உரை) வேறொன்றைத் தலைவன் செய்த குறிப்பென எண்ணித் தலைவி மருண்டமை பாங்கி அவனுக்குக் கூறுதல். குறிப்பாவது, குளத்தில் மாங்கனி வீழ்ந்த ஓசையை. கால் - காற்று. கடத்துகு மா - குளத்தில் வீழ்ந்த மா. அல்குல் - தலைவி. அடுங் காய் களிறு - கொலை வல்ல கோபம் பொருந்திய யானை. 'மாத்து விளைந்துகு தீம்பழம், நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்' - ஐங். கஉக. 'கோடை எறியக் குளுகுளென் றுமிரங் கோட்டில் நின்றும், ஓடையின் வீழ்கனி யெல்லாம் இரவினில் உன்குறியென்று, எடவிழ் கூந்தல்வந் தெண்ணு மெண்ணத்துக் கிலக்கமுண்டோ' என்ற ஆனந்தரங்கன் கோவைச் செய்யுள் (ககஙட) இதை அடியொற்றி வந்தது. இ. வி. கசஎ. (பா - ம்) கடத்துய்க்கு மாவின். உஉக

## 12. தலைவன் மாற்றம் தலைவிக்கு உணர்த்தல்

வருமந்த எல்லையில் வல்லைஇன் றேவந்து வைகிருள்மாந்
துருமம் தருங்கனி எல்லாம் தொலைத்துத் துணைபிரியா
வருமந்த அன்னங்கள் சேக்கைகொள் ளாமல் அழுங்குவித்துத்
தெருமந்து நின்றுவிட் டேனென்ப ராலன்பர் சேயிழையே.

(உரை) மாற்றம் - சொல்லை. வல்லை - விரைவாக. மாந் துருமம் - மாமரம். சேக்கை கொள்ளாமல் - துயில் கொள்ளாமல். அழுங்குவித்து - கலக்கமடையச் செய்தமையால். தெருமந்து - கலங்கி. என்பரால் அன்பர் - என்று தலைவன் கூறுகிறான். இ. வி. கசஎ, தலைமகன் சொல்லிய கொடுமை தலைமகட்குப் பாங்கி சொல்லற்கு மேற்கோள், (பா - ம்) வல்லி யென்றே. உ௱௰

## 13. தாழ்த்தற்குக் காரணம் கூறல்

கடற்பாற் றரளஞ் சொரிபுன்னை நீழல் கருமணற்சோ(று)
அடப்பார்த் திருந்தவர் சொல்லலுற் றூர்அமை யாதஇன்னல்
விடப்பார்த் திருந்து வெருவும்பைங் கானலில் வெண்ணிலவு
படப்பார்த் திருந்ததல் லாணிற்ப ரோசொல்லு பைந்தொடியே.

(உரை) காலந்தாழ்த்து வந்தமைக்குத் தலைவன் காரணம் கூறுதல். தரளம் - முத்துபோன்ற அரும்பு, 'புன்னைக் குவிமொட்டும்...சிந்தித் திகழ்முத்தம் போல்தோன்றும்' - முத்தொள்ளாயிரம். அடப்பார்த்திருந்தவர் - சோறாக்கப் பார்த்திருந்தவளான தலைவி. அமையாத இன்னல் - தாங்கற்கரிய துன்பத்தை. நிலவுபட - நிலவு மறைய. நிற்பரோ, தலைவர்; நான் என்றவாறு. பைந்தொடி: பாங்கியை விளித்தது. உ௱௰க

## 14. மதியை நோக்கிக் கூறல்

அளியாற் பெருகி அமுதஞ் சிதறி அனைத்துயிர்க்கும்
களியாக் கியதண் கலைமதி யேகயற் கண்ணுமையும்
ஒளியாப் பசலைதந் தாருடன் கூடும் இடங்கள்முற்றும்
வெளியாக்கி எம்மள வும்விட மாய்விட வேண்டியதே.

(உரை) தலைவன் வருதற்கு இடையூறாக நிலவெறித்தமைக்கு மதியைத் தலைவி பழித்துக் கூறல். அளி - அருள். அமுதம் - நிலவு. களி - இன்பம். தந்தார் - தலைவர். வெளியாக்கியது தன் ஒளியினாலே. விடமாய் - அருளின்றித் தீமை தருவதாய். உ௱௰உ

### 15. என் பிழைப்பு அன்று என்று இறைவி நோதல்

வடம்பரிக் குந்தன வல்லியன் னாய்வளை ஏறியுழு
தடம்பரிக் குந்துறை யாழ்கடற் சேர்ப்பர்தம் அல்குறியின்
கடம்பரிக் குங்குறி யேகரி யாகக் கருத்துவைத்தாங்(கு)
உடம்பிருக் குஞ்சிறை ஒன்றுமுள் ளாதென் உரைத்தனரே.

(உரை) பிழைப்பு - தவறு. அன்னாய்: பாங்கியைத் தலைவி விளித்தது. வளை - சங்கு. அல்குறி - அல்லகுறி; தலைமகனாலன்றிப் பிறிதொன்றினால் நிகழுங் குறி. கடம்பரிக்குங் குறியே கரி என்றது சிலேடை; மதத்தைத் தாங்கிய சுவடுடைய யானை; கடத்தில் ஏற்படும் குறியொன்றே சாட்சியாக எண்ணினாரே என்கிறாள். உடம்பிருக்குஞ் சிறை - தன் உடம்பு வீட்டில் அடைபட்டிருத்தலை. உள்ளாது - எண்ணாது. ௨௫௫

### 16. விருந்தென வந்த பெருந்தகை தளர்நிலை

கனைஇருள் வந்து குறிபிழைத் தார்சிறு காலையில்நம்
மனைஇடை வந்து வருந்தினன் என்ன விருந்தென்றென்னைப்
புனைஇழை நீசென்று போற்றுகென் றாளன்னை போற்றுகென்ற
நினைவறி யாதுநின் றேன்அகன் றாரவர் நீடுயிர்த்தே.

(உரை) விருந்தென வந்த தலைவனைத் தலைவி போற்றாது நின்றாளாக, அவன் தளர்ந்து சென்றமை கூறுதல். குறி பிழைத்தார் - குறி தவறிய தலைவர். வருந்தினன் என்ன: என்று அவர் சொல்ல. விருந்து என்று: என்று அன்னை எண்ணி. புனையிழை: அன்னை தன் மகளை விளித்தது. போற்றுக என்றாள்: உபசரிப்பாயாக என்றாள். இ. வி. ௪௪௭. (பா - ம்) விருந்தென்றன்னை; போற்றுதற்குன் நினைவறியாது சென்றேன். ௨௫௪

### 17. வரும் தொழிற்கு அருமை சாற்றல்

ஒருகா லமுமன்னை கண்ணுறங் காள்பின் உறங்கிலன்பர்
வருகாலம் ஞாளி மருளுமன் னேமரு ளாதொழியில்
இருகால் ஒருசிகை வாரணம் ஏங்கும் இரவுமுற்றும்
முருகார் விழவின் முழவுர்துஞ் சாதிம் முதுநகரே.

(உரை) வருதற்குப் பல இடையூறுகள் உள்ளமையால், தலைவன் வருந் தொழில் அரியது என்று கூறுதல். தாய் துஞ்சாமை, நாய் துஞ்சாமை, கோழி குரல் காட்டல், ஊர் துஞ்சாமை என்னுந் துறைகள் இவ்வொரு செய்யுளிற் கூறப்பெறுகின்றன. அன்பர் - தலைவன். ஞாளி - நாய். இருகாலும் ஒரு சிகையுமுடைய; சிகை - கொண்டை. வாரணம் - கோழி. எங்கும் - குரல் காட்டும். முழவுந் துஞ்சாது - முழவொலி நில்லாது ஒலிக்கும். 'இரும்பிழி மகாரிவ் வழுங்கல் மூதூர், விழவின் றாயினும் துஞ்சா தாகும், மல்லல் ஆவணம் மறுகுடன் மடியின், வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள், பிணிகொள் அருஞ்சிறை அன்னை துஞ்சில், துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர், இலங்குவேல் இளையர் துஞ்சின் வைஎயிற்று, வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழும், அரவவாய் ஞமலி குரையாது மடியில், பகலுரு உறழும் நிலவுகான்று விசும்பின், அகல்வாய் மண்டிலம் நின்றுவிரி யும்மே, திங்கள் கல்சேர்பு கனையிருள் மறையின், இல்லெலி வல்சி வல்வாய்க் கூகை, கழுது வழங்குயாமத்து அழிதகக் குழறும், வளைக்கட் சேவல் வளர்துயில் மடியில், மனைச்செறி கோழி மாண்குரல் இயம்பும், எல்லா மடிந்த காலை யொருநாள், நில்லா நெஞ்சத்து அவர்வா ரலரே' - **அகநானூறு** ௧உ௨. இத்துறை, காப்பு மிக்க கையறு கிளவி என்னவும் பெறும். உ௫௫

## 18. இதுவும் அது

ஒருவரு மேவலர் காவல ராலொற்றை நீண்மரத்தில்
வெருவர நின்று குழறுங் குடிஞையும் வெம்பகல்போல்
அருவரை எங்கும் நிலவெறி யாநிற்கும் அன்பர்பின்னை
இருவரை போல்முலை யாய்எங்ங னேஇங்ஙன் எய்துவதே.

(உரை) ஒருவரும் - நீங்குதற்கரிய. குடிஞை - கூகை. இதனுள் காவலர் கடுகுதல், கூகை குழறல், நிலவு வெளிப்படுதல் என்ற துறைகள் கூறப்பெறுகின்றன. இவ்விரு பாடல்களும் தலைவி கூற்று. உ௫௬

# கக. வரைதல் வேட்கை

தன்னைத் தலைவன் ஊரறிய மணஞ் செய்து கொள்ளவேண்டு மென்று, தலைவி விரும்புதல்.

## 1. தலைமகளைப் பாங்கி பருவரல் வினாதல்

மீனறி யாத விரிகடல் போலும் விழிபசந்து
தூநெறி யார்குழற் போதுந் துறந்தனை துங்கமலி
வானறி யாத மதிமுகத் தாய்இற்றை வைகனின்ற
யானறி யாத வருத்தமென் னோஉனக் கெய்தியதே.

(உரை) தலைவியின் துயரம் யாதென்று பாங்கி கேட்டல்; பருவரல் - துன்பத்தை. கடல் என்றது விழியின் பெருமை கருதி. குழற் போதும் துறந்தனை - குழலில் மலர் சூடுதலை விட்டனை. இ. வி. கசக. உ௩எ

## 2. பாங்கிக்கு இறைவி அருமறை செப்பல்

உண்ணின்ற வேட்கை உணர்ந்தனள் போலனை யூர்துயின்றும்
பண்ணென்று சொல்லிதன் பாயல்கொள் ளாளெனப் பைந்தொடியாய்
தண்ணந் துறைவனை யுந்திரு மார்பையுஞ் சாரலுற்றூர்
கண்ணுந் துயில்கொண்ட காலமுண் டோபண்டு கண்டதுவே.

(உரை) அருமறை - பிறர் அறிதற்கரிதாகிய இரகசியமாகிய களவொழுக்கத்தை; இக்களவே தன் வருத்தத்துக்குக் காரணமென்று தலைவி கூறுதல்; மறை - இரகசியம். வேட்கை - என் காதலை. அனை - அன்னை. பாயல் கொள்ளாள் - துயின்றிலள். என - என்று அன்னை சொல்லும்படியாக. துறைவன் - தலைவன். உ௩அ

## 3. அருமறை செவிலி அறிந்தமை கூறல்

கொந்தார் மலர்க்குழல் வல்லிநம் அன்னை குரிசில்வந்த
செந்தா மரையடி கண்டனள் போலுமித் திண்சிலம்பில்
வந்தார் எவரென வந்தார் சிலரிலர் மற்றிங்கென்றேன்
நொந்தாள் நெடிதுயிர்த் தாள்கொடி தாயென்னை நோக்கினளே.

(உரை) தன் களவொழுக்கத்தைச் செவிலி அறிந்தாளென்று தலைவி பாங்கிக் குரைத்தல். வல்லி : விளி. குரிசில் - தலைவன். அடி - அடிச்சுவடு. எவர் என - எவரென்று என்னைக் கேட்க. சிலர் இலர் - சிலர் இல்லை என்றேன் ; அதாவது ஒருவர் என்ற குறிப்பை உட் கொண்டது. உரு௯

### 4. தலைமகள் வருந்தொழிற்கு அருமை சாற்றல்

அன்னையும் ஊரும் அலைவாய் ஞமலியும் அம்புலியும்
கொன்னகர்க் காவல் துடியுங் குடிஞையும் கோழியுமென்(று)
இன்னவை நம்கள விற்கிடை யூறிதற் கேற்பஅந்த
மன்னவர் தாம்வரும் நாளொரு நாளில்லை வாணுதலே.

(உரை) தலைவி கூற்று ; உஙரு பார்க்க. வருந்தொழிற்கு அருமை - வருவதிலுள்ள துன்பத்தை. ஞமலி - நாய். கொன்னகர் - பெருமை யுடைய இவ்வூர் ; இன்னவை - இவை யெல்லாம். உசo

### 5. தலைமகன் ஊர்க்குச் செல ஒருப்படுதல்

மைக்கார் தவழும் மலையக நாடர் வளநகர்க்கின்(று)
இக்கார் மொழிவஞ்சி ஏகுது மோஎறி நீருலகின்
மிக்கார் அறிவும் நிறையும் நயந்து வியந்துரைக்கத்
தக்கார் தகவிது வோஎன்று நாம்சென்று சாற்றுதற்கே.

(உரை) தலைவனூர்க்குத் தானே போதற்குத் தலைவி துணிதல். மை - கரிய. இக்குஆர் மொழி - கரும்புபோல் இனிய மொழி. வஞ்சி : தோழியை விளித்தது. தகவுஇதுவோ - தலைவனுகிய உன்னுடைய தகுதி இதுதானு. சாற்றுதற்கு : அவன் வந்து அருளாமைக்காகப் பழித்துரைக் கும் பொருட்டு. 'அருங்கடி யன்னை காவல் நீவிப, பெருங்கடை யிறந்து மன்றம் போகிப, பகலே பலருங் காணவாய் விட்டு, அகல்வயிற் படபபை அவனூர் வினவிச், சென்மோ வாழி தோழி பன்னுட், கருவி வானம் பெய்யா தாயினும், அருவி யார்க்கும் அயந்திகழ் சிலம்பின், சான் றோய் அல்லை என்றனம் வரற்கே' - நற்றிணை நகரு. உசக

### 6. எதிர்மறை

உரிதோல் அரவும் உருமுறும் எண்கும் உலாநெறிக்கண்
வரிதோ லுடன்பொரு வைகிருள் யாமத்து வண்சிலைக்கை
எரிதோய் விழிஎமர் காவலும் நீந்திஇங் கேகுவதற்(கு)
அரிதோ அரிதென்னு மாறறி வாரில்லை அத்தனையே.

(உரை) தலைவனூர் சென்று பழிக்க எண்ணிய தலைவி, காவல் மிகுதியுடைய வழியில் அவன் வருதல் இயலாமை எண்ணி அமைதல். உருமுறும் - இடியொத்த. எண்கு - கரடி. உலா நெறி - உலவும் வழி. எமர் - எம்மவர். நீந்தி - கடந்து. அரிதோ அரிது - அருமை மிகுதியைக் கூறியவாறு. ஆறு அறிவாரில்லை - வழி தெரியவில்லை. அத்தனையே - வாராமைக்குக் காரணம் இவ்வளவேதான். உ௪உ

### 7. பாங்கி தலைவன் இயல் பழித்தல்

சுறவார் கனங்குழைத் தூநகை யாய்நம் துணைவருடன்
இறவார் குருகினந் தங்குபைங் காவினில் இன்னளிசூழ்
நறவார் மலர்ப்புன்னை நன்னிழல் வாய்முன் நயந்தசெவ்வி
மறவா நமைமறந் தாரவர் போலில்லை வன்னெஞ்சரே.

(உரை) இயல்பைப பழித்தல். சுறவார் கனங்குழை - கனத்த மகரக் குழையணிந்த. இறவார் குருகு - இறால் மீனை யுண்ணும் நாரை. நயந்த செவ்வி - கூடிய உன் நலத்தை. இ. வி. க௪க, பாங்கி இறை வனைப் பழித்தற்கு மேற்கோள். (பா - ம்) தம் துணைவருடன்; மறவார் நமை. உ௪௩

### 8. தலைமகள் இயற்பட மொழிதல்

ஆமைதன் பார்ப்பை இகந்துயிர் காக்கும் அருந்துறைவன்
தீமைநம் பால்செயல் சிந்திக்கு மோசிந்தை போயழுந்த
மாமையும் பார்த்தவர் வாய்மையும் பார்த்து வருந்தல்மன்றற்
பூமணம் பார்த்தளி புல்லுமல் லார்குழற் பூங்கொடியே.

(உரை) தலைவன் நல்லியல்புடையவனென்று பாங்கிக்குத் தலைவி மொழிதல். ஆமையின் முட்டையானது, தாயை நீங்கியபோதிலும், அத்

தாய் அதனை அடுத்தடுத்துப் பாதுகாத்து உயிர் காக்கிறது ; இவ்வியல்புள்ள நாட்டினனுன தலைவன் என்க ; 'தீம்பெரும் பொய்கை யாமை இளம் பார்ப்புத், தாய்முகம் நோக்கி வளர்ந்திசி ஞஅங்கு, அதுவே ஐயநின் மார்பே' ஐங். சச ; 'யாவதும் அறிகிலர் கழறுவோரே, தாயின் முட்டை போலஉட் கிடந்து, சாயில் அல்லது பிறிதெவன் உடைத்தோ, யாமைப் பார்ப்பின் அன்ன, காமங் காதலர் கையற விடினே' - குறுந். கருஉ. மாமை - பசலை. அளி புல்லும் - வண்டு பொருந்தும். அல்லார் - இருண்ட. இ. வி. கசக. (பா - ம்) பாங்கி இயற்பட மொழிதல். செவ்விபோ யொழிந்த, சிந்தைபோ யழுந்த. உசச

## 9. கனவு நலிபு உரைத்தல்

பெறுதற் கரிய துயிலொரு கால்வரப் பெற்றதன்மேல்
உறுதற் கரியவர் ஒன்றவும் பெற்றுள்ளம் நள்ளிரவில்
செறுதற் கரியநற் செல்வங்கொண் டாடியச் செற்றமுற்றும
இறுதற் கரிய நலங்கல வாமல் இழந்தனமே.

(உரை) தலைவனைக் காணும் கனவு தன்னை இவ்வாறு நலிகிற தென்று தலைவி கூறுதல். அரியவர் ஒன்றவும் - தலைவன் கனவில் வந்து என்னைப் பொருந்தவும். அச்செற்றம் - வாராமையால் அவன்மீதுள்ள கோபம். இறுதற் கரிய - அழிதலில்லாத. நலங் கலவாமல் - கூடாமல். 'கேட்டிசின் வாழி தோழி யல்கற், பொய்வ லாளன் மெய்யுற மரீஇ, வாய்த்தகைப் பொய்க்கனு மருட்ட வேற்றெழுந்து, அமளி தைவந் தனனே குவளை, வண்டுபடு மலரிற் சாஅய்த், தமியேன் மன்ற அளியேன் யானே' - குறுந். நூ௦. 'ஓராற்ருன் என்கண் இமைபொருந்த அந் நிலையே, கூரார்வேல் மாறன்என் கைப்பற்ற - வாரா, நனவென் றெழுந திருந்தேன் நல்வினையொன் றில்லேன், கனவும் இழந்திருந்த வாறு' - **முத்தொள்ளாயிரம்.** (பா - ம்) கொண்டாடிய செற்றம் ; இழந் தனவே. உசரு

## 10. கவின் அழிபு உரைத்தல்

மின்னே அவர்தந்த வேட்கையை மீட்கும் விரகறிய
முன்னே தவங்கள் முயன்றில மேமுன்செய் வல்வினையால்

என்னே அருங்கவின் எல்லாம் எனக்கும் அவர்க்குமின்றிக்
கொன்னே பசலை திருந்தஇவ் வாறு குறைகின்றதே.

(உரை) தன் அழகு தலைவனைப் பிரிந்தமை காரணமாக அழிந்தமை தலைவி கூறுதல். கவின் - அழகு. கொன்னே - வீணே. கவினெல்லாம் இவ்வாறு குறைகின்றது. இ. வி. கஉ௬, உஉ௫, உஉ௬ ஆகிய செய்யுள்கள் முன் பின்னாக மாறியிருந்தன; துறைக்குறிப்பு மாறவில்லை. (பா - ம்) கனவினழி புரைத்தல் தீவினையால்; பசலை பசந்த; குறுகின்றதே; குறைக்கின்றதே. உஉ௬

## 11. சிறைப்புறமாகத் தலைவி இரங்கல்

உரவெங் கடலொலி யும்முறங் காநின்ற கண்களும்நள்
ளிரவும் தனியும் இருவினை யேனும் இரங்குநெஞ்சும்
அரவம் தருந்துடி யும்கொடி யார்தந்த அன்புமன்றிப்
பரவும் பனிமதி யேஇல்லை யோஇப் பதிதனக்கே.

(உரை) தலைவி சந்திரனை நோக்கிக் கூறுதல். அரவம் தரும் துடி - காவலர் கையிலிருந்து ஒலிக்கும் துடி செய்யும் அரவம். கொடியார் - தலைவர். அன்பு - அவர்மாட்டுப் பிறந்த காதல். இவை யெல்லாம் அன்றி இபபதி தனக்கு வேறு இல்லையோ என்றவாறு. பனிமதி - குளிர்ந்த சந்திரன். உஉ௭

## 12. தன் துயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல்

அறைவார் ஒருவரை ஆழ்கடற் சேர்ப்பர் அறியஅந்தண்
பிறைவா ணுதல்வல்லி பெற்றில மேபிர சம்ததும்ப
நறைவாய் விடுநெய்தல் நாண்மலர் ஓதி நயந்துநின்னை
இறைவா இறைவளை போயின ளாயினள் என்னநின்றே.

(உரை) உணர்த்துமாறு தலைவி பாங்கியை வேண்டல். அறைவார் - துயரை உணர்த்துபவர். வல்லி : பாங்கியை விளித்தது. பெற்றிலமே - எனக்கு இல்லை என்றபடி. பிரசம் - தேன். ஓதி - கூந்தலையுடையவளான தலைவி. இறைவளை - கையிலே செறித்த வளை. வல்லி, 'இறைவா, ததும்பி வாய்விடு நெய்தல் ஓதி நின்னை நயந்து இறை வளைபோயினளா

யினள்' என்ன நின்று அறைவார் ஒருவரைச் சேர்ப்பர் அறியப்பெற்றிலமே என்க. எனவே, நீயே உணர்த்துவாயாக என்பது குறிப்பு. உசஅ

### 13. அலர்பார்த்துற்ற அச்சக்கிளவி

இன்றலங் காரம் இழந்தஎன் கொங்கை இலங்குபைம்பொன்
தென்றலஞ் சாரற் சிலம்பரெண் ணார்செஞ் சிறைவண்டுசூழ்
மன்றலங் காவினும் வாவிநன் னீரினும் மற்றுமுற்றும்
ஒன்றினும் பூத்தறி யாஅல ரானதிவ் வூரெங்குமே.

(உரை) அயலார் தன்னைப்பற்றிக் கூறும் பழிச்சொல் காரணமாய்த் தனக்குண்டான அச்சத்தைத் தலைவி கூறுதல். அலங்காரம் இழந்தது, தலைவனைக் கூடப் பெறுமையால். பைம்பொன், பசலை. பசலை பூத்தமையைச் சிலம்பர் எண்ணார். கா - சோலை. பூத்தறியா அலர் என்றது, பழிச்சொல் விளைந்தமையை. 'குலோத்துங்க சோழன்கல் யாணிவெற்பின், ஊரார் பவளந் தொறும்அலர் பூத்தென் னூழ்வினையே' - துலோ. உருச. உசகூ

### 14. நிலவின்மேல் வைத்துச் சொல்லியது

கங்குற் சிறந்த பகலொளி வாடக் காதலரும்
எங்கட் கிசைந்த இறைவர்கொல் லோஇமை யோரெவரும்
துங்கக் கொடுமுடி மந்தர நாகம் தொடுத்துழல
வங்கப் புணரி கடைந்தஅந் நாள்வந்த வான்மதியே.

(உரை) சந்திரனைப் பழித்தல். கங்குல் - இரவு. பகலொளி வாட என்றது, அவ்விதமாக வான்மதி நில வெறித்தமையை. காதலர் - உன்னுடைய காதலர். எங்கட்கு - எனக்கு. இறைவர் - என் தலைவன். முடி - சிகரத்தையுடைய. நாகம் - மலை. புணரி - கடல். அந்நாள் வந்தது, அமுதத்துக்காகப் பாற்கடல் கடைந்தபோது அதனின்றும சந்திரன் வந்தமையை. 'மாலை மணந்து காலை பிரியும, காதலர் உடையையோ கறை இயங்கு மதியே, இரவே ஆயின நல்லை பகலே, மெல்லியற் கொடிச்சி நுதலினும், புல்லென் றனையால் நோகோ யானே'-பொருளியல். உருo

## 15. ஆறு பார்த்துற்ற அச்சக்கிளவி

வேறிங் கொருதுணை இல்லைகொல் வேலொழிந் தின்றிவெற்ப
மாறுங் கொடிபொருட் டால்வர வேண்டிலம் வந்துழுவை
சீறும் களிற்றுத் திரளும்பன் மாவும் சினஅரவும்
ஆறும் கராமும் இயங்குதண் சாரல் அருநெறியே.

(உரை) தலைவன் வரும் வழியின் அருமையை எண்ணித் தான் அடைந்த அச்சத்தைப் பாங்கி கூறுதல். வேல் அன்றி வேறு துணை யில்லையோ என்றபடி. வெற்ப - விளி. கொடி - தலைவி. உழுவை - புலி. பல் மா - பல கொடிய விலங்குகள். ஆறும் கராமும் - நதியும் முதலையும். அருநெறியே வரவேண்டிலம் என்க. உ௫க

## 16. நெறி விலக்குவித்தல்

ஒருநாள் வரினும் உறுபழி தூற்றும் உயர்சிலம்பில்
வருநாள் பலவுண்டு மாமலை நாடர் வரினினையும்
பெருநாள் ஒழிய இனிவரில் ஏதம் பிறக்குமென்று
குருநாண் மலர்க்குழ லாய்மொழி நீசென்று கொற்றவர்க்கே.

(உரை) இத்தகைய அருமையையுடைய வழியே தலைவன் வருவதை விலக்கும்படி தலைவி பாங்கிக்குக் கூறுதல். பழி தூற்றும் சிலம் பென்றது, முன்னமே ஊரிலுள்ளார் அலர் தூற்றினரானமையால். பெரு நாள் ஒழிய - பெருநாளாகிய திருமண நாள் ஒழிய; 'ஒருபெரு நாளான் மணவணிகாண மகிழ்ந்தனர்' - **சிலப்.** க : சக. ஏதம் - துன்பம். குரு - பெருமையுடைய. கொற்றவர்க்கு-தலைவனுக்கு. **இ. வி.** கசசக. (பா - ம்) நாட. உ௫உ

## 17. குறி விலக்குவித்தல்

இருவி மறுகுலை ஈன்று விளைந்த விறைஞ்சுகுற்றம்
குருவி இனக்கிளி கொய்கின்ற தாலின்னம் கோல்வளையீர்
மருவி அடிப்புனங் காமினென் றுளன்னை வந்திழியும்
அருவி அடுக்கல் மலையக நாடர் அறிந்திலரே.

(உரை) குறியிடத்துத் தலைவன் வருவதை விலக்கும்படி தலைவி பாங்கிக்குக் கூறுதல். இருவி - தினைத்தாள். விளைந்த - விளைந்தன. கோல் வளையீர்: அன்னை தலைவியை விளித்தது. மருவி - சென்று. காமின் - காப்பீராக. நாடர் - தலைவர். 'பொன்போல் மறுதா ளிடைக் கதிர் தோன்றின பூம்புனத்தின், முன்போற் சுகங்கொளும் போற்றிடப் போமென முந்தையின்று, அன்போடு ரைத்தாள் வருவோம் வரல்இங் கென் றங்குரையே' - கோவை. உஙுரு. 'வளைவாய்ச் சிறுகிளி விளை தினை கடிஇயர், செல்கென் றோளே அன்னை சேணெனச், சொல்லின் எவனோ தோழி...ஆரிருள் நடுநாள் வருதி, சாரல் நாட வாரலோ எனினே' - குறுந். கசக. உருரு

## 18. வெறி விலக்குவித்தல்

மணியார் வனமுலை மங்கைநல் லீர்தொல்லை மாமரபு
துணியாவெறிக்கும் துணிந்தனள் அன்னை துணிவெறிக்கின்
அணியார் சிமயத் தமைசிலம் பாளர் அளித்தமயல் [(று)
தணியா தெனினும் தணியினும் சாலத் தவறெமக்கே.

(உரை) வெறியாடுதலை விலக்கும்படி பாங்கிக்குத் தலைவி கூறுதல். காதல் மிகுதி காரணமாகத் தலைவியிடத்துத் தோன்றிய வேறுபாடுகளைக் கண்ட தாயர் முதலிய சுற்றத்தார் உண்மை யறியாராய், அவளைப் பேய் பிடித்ததென் றெண்ணி, வேலனைக்கொண்டு முருகனுக்கு வழிபாடு செய்வித்தல் வெறியாட் டெடுத்த லெனப்படும். இதை விலக்குமாறு தலைவி பாங்கியரை வேண்டல். வெறிக்கு - வெறியாட் டெடுத்தற்கு. சிமயத்து - சிகரமுடைய. சிலம்பாளர்: குறிஞ்சி நிலத்தலைவன். அளித்த மயல் - அவர்மீது பிறந்த காதல். இது வெறியால் தணியினும் தணியாது போயினும், வெறியாட்டு சாலத்தவறு என்றபடி. 'காராட்டு உதிரந்தூய் அன்னை களனிழைத்து, நீராட்டி நீங்கென்றால் நீங்குமோ - போராட்டு, வென்று களங்கொண்ட வெஞ்சினவேற் கோதைக்கென், நெஞ்சு களங்கொண்ட நோய்' - முத்தொள். 'வெறிகமழ் வெற்பனென் மெய்ந்நீர்மை கொண்டது, அறியாள்மற் றன்னோ அணங்கணங்கிற் றென்று, மறியீர்த் துதிரந்தூய் வேலற் றரீஇ, வெறியோ டலம்வரும் யாய்' - ஐந். ஐம். உ0. உருச

### 19. பிற விலக்குவித்தல்

வார்க்குன் றனமுலை வல்லியன் னையநம் மணிமறுகில்
ஆர்க்கின்ற வன்முர சார்க்கென் றறிகிலம் ஆடகப்பொன்
போர்க்கின்ற மென்முலை புல்லஎண் ணார்பொன் பொழியருவிக்
கார்க்குன் றெனஎதி ருங்கட வாரணம் காய்ந்தவரே.

(உரை) தன்னை மணம்புரிய எண்ணித் தமர்பால் வரும் பிறரை உண்மைகூறி விலக்கும்படி தலைவி பாங்கிக்குக் கூறுதல். ஆர்க்கின்ற வன் முரசு - தன் மணத்தைக் கருதி முழக்கும் மண முரசு ; 'மன்றத்து நின்று முழங்குங்கொல் நாளை மணமுரசே' - **பாண்டிக்கோவை.** புல்ல எண்ணார் : காதலர். எதிரும் கடவாரணம் - எதிர்த்த மதயானையை. காய்ந்தவர் - வென்ற தலைவர், புல்ல எண்ணார் என்க. உருரு

### 20. செய்ந்நன்றி அறியாமை கூறல்

கழுதும் உறங்கு பிறங்கிருள் நாள்கழிக் கானலிற்றைப்
பொழுதும் அருநதுயர் போக்கிய தோபொறி வண்டினங்கள்
கொழுது மலர்க்குழற் கொம்புநற் பைம்பொற் குழைபொருங்கண்
அழுது பசப்புற நீஐய னேஇன் றகன்றதுவே.

(உரை) பாங்கி தலைவியின் துயரை எண்ணித் தலைவனைப் பழித்தல். கழுது - பேய். இருள் நாள் : 'கழுதுகண் படுக்கும் பானாள் இரவினில்' - **திருவிளையாடல்.** கழிக்கானல் துயர்போக்கியதோ என்றது, போக்காது என்றபடி. கொழுதும - கோதும். ஐயனே நீ அகன்றது, கொம்பு கண் அழுது பசபபுற, துயர் போக்கியதோ. கொம்பு - தலைவி. உருசு

### 21. ஏறு தழுவுரைத்தல்

ஏற்று மருப்பும் இலங்கிழை யாகத் திபமருப்பும்
கூற்று மருப்பெழும் கோலந்தந் தாட்கொரு கோடிசுரும்(பு)
ஆற்று மருப்பொலி தாரண்ண லார்முன் அணிந்துவிட்டார்
காற்றும் நெருப்புங் கலந்ததென் னுவருங் காரிகைக்கே.

(உரை) தலைவிக்கு மணம நிகழ்த்தும்பொருட்டு, ஏறு ஒன்றை அலங்கரித்து வெளிவிட்டு, அதைத் தழுவிப் பிடிப்போருக்கே அவள

உரியள் என்று அவள் தமர் நியமித்திருப்பதைப் பாங்கி கூறுதல்: இது ஆயர்குலத் தவரிடை நிகழுமென்றல் மரபு. புறப்பொருளில் இத்துறை 'ஏறுகோள் வென்றி' எனப்படும்; **புறப்பொருள் வெண்பா மாலை** ௩௪௭. ஏற்று மருப்பு - காளையின் கொம்பு; இபமருப்பு - யானையின் கொம்பு; தலைவி கொங்கையைக் கூறியவாறு. அருப்பு - அரும்பு. ஏற்று மருப்பும் இபமருப்பும் கூற்றும் அருப்பு எழும் கோலம் தந்தாள் என்க. தந்தாள் இலங்கிழைக்கு - தந்தவளான தலைவி மணத்தின் பொருட்டாக. மருப்பொலி தார் அண்ணலார் முன் அணிந்துவிட்டார் என்றது, மணம் வேண்டினோர், ஏறு தழுவுக என ஏற்றை அலங்கரித்து வரவிட்டார் என்று கூறியவாறு. காரி - ஏறு, கரிய எருது. கைக்கு - பக்கமாக. காற்றும் நெருப்புங் கலந்தது ஏற்றின் உருவம். 'ஏற்றிரு கோடு திருத்திவிட் டார்இனி ஏறுதழூஉம், ஆற்றலி னோர்மணஞ் செய்வா னமைந்தனர் அண்டர்களே' - **பாண்டிக் கோவை.** ஏறு தழுவலின் விரிந்த செய்திகளை **முல்லைக்கலி** முதலாறு பாடல்களிற்காணலாம். உ௫௭

## 22. குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல்

**போ**ற்றும் தினைவிளை யும்புனச் சாரல் புகர்முகத்துச்
சீற்றம் சிறந்த களிற்றுரு வாய்நம்மைத் தேடிவந்த
கூற்றம் கடிந்தநம் கோமான் வரைவெதிர் கொள்ளும்வண்ணம்
சாற்றும் திறமென்கொ லோதைய லாய்நந் தமர்தமக்கே.

(உரை) தலைவன் மணம் புரிவதை ஏற்றுக்கொள்ளுமாறு தாய் தந்தையருக்குச் சொல்லும்படி தலைவி பாங்கிக்குக் கூறுதல். புகர் முகம் - புள்ளியுள்ள முகமுடைய யானை. கூற்றம் கடிந்தது என்றது, யானையினின்றும் தலைவியைக் காத்தது; இதைக் களிறுதரு புணர்ச்சி கூறும் ௩௫௭ஆம் செய்யுளிற் காணலாம். கோமான் - தலைவன். வரைவு - மணம். வரைவு எதிர்கொள்ளும் வண்ணம்: ஏற்கும்படி. தமர் - சுற்றத்தார். **இ. வி.** க௫அ. (பா - ம்) புனற் சாரல்; தமர் களுக்கே. உ௫அ

# கஉ. வரைவு கடாதல்

தலைவியை மணம்புரிந்து கொள்ளும்படி பாங்கி தலைவனை வற்புறுத்தல். இது பொய்த்தல், மறுத்தல், கழறல், மெய்த்தல் என நான்கு வகைப்படும்.

### 1. வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல்

மைந்நிற வார்குழல் வல்லிநம் அன்னை வினமுலைகள்
இந்நிற மானதிங் கென்கொலென் றுள்இருங் கோங்கரும்பின்
செந்நிற நாண்மலர்ச் செப்பரும் தாதுகொண் டப்பியபின்
பொன்னிற மானதென் றேனன்ன தோஎன்று போயினளே.

(உரை) தலைவியின் வேறுபாட்டுக்குக் காரணம் யாதென்று வினவிய செவிலித் தாய்க்குத் தான் வேறு காரணங் கூறி மறைத்தமை தலைவி பாங்கிக்குரைத்தல். மை - கருமை. வல்லி : விளி. அன்னை - செவிலி, அப்பிய பின் - பூசிய பின். அன்னதோ - அப்படியோ. உ௫௯

### 2. அருமறை எங்கும் அறிந்தமை கூறல்

கணைக்கும் கரும்பும் கழையுநன் ஞுகங் கதலியுடன்
அணைக்குங் கறங்கும் அருவிவெற் பாநின் னருமறைபோய்
இணைக்கும் குரும்பையும் செவ்விள நீரும் எனநெருங்கிப்
பணைக்கின்ற கொங்கைப் பசப்பினும் சாலப் பரந்ததுவே.

(உரை) அருமறை - தன் அரிய இரகசியத்தை; இத்துறை 'அலரறிவுறுத்தல்' எனவும் பெறும். கணைக்கும் - திரண்ட. கழை - மூங்கில். நாகம் - புன்னாகம். கதலி - வாழை. அருமறைபோய் - உன் களவொழுக்கம் வெளிப்பட்டு. பசபபினும் சால - இவளது கொங்கையின் பொன்னிறத்தினும் மிகுதியாக. பரந்தது - வெளிப்பட்டுவிட்டது. உசுO

### 3. தாயறிவு உணர்த்தல்

சோகா னலஞ்சுட வெந்தொளி மாழ்குந் துணைமுலையில்
ஏகா வலியையும் என்னையும் நோக்கி இனியகன்னற்

பாகார் மொழிவஞ்சி பண்டுநம் கையில் பயின்றவண்டின்(று)
ஆகாத தென்கொலென் றுளறிந் தாள்கொல்நம் அன்னையுமே.

(உரை) களவொழுக்கத்தைத் தாய் அறிந்தாளென்று பாங்கி தலைவனுக்கு உணர்த்துதல். சோக அனலம் - சோகமாகிய நெருப்பு. 'நின், பிரிவினும் சுடு மோபெருங் காடு என்றாள்' - கம்பர். மாழ்கும் - கெடும்; 'ஒளி மாழ்குஞ் செய்வினை' - குறள் சுருரு. எகு ஆவலியை - பொருந்திய நகரேகையை; 'கதிர்முலைப் பாரிப்புக் கண்டழிவுற்று, இனிக்கண் டிலம் பற்றுச் சிற்றிடைக் கென்றஞ்சும் எம்மனையே' - திருக். கருஉ. உசுக

## 4. வெறி அச்சுறுத்தல்

முன்றிலும் அன்னை மருங்கிலு மேஅன்றி முன்னறியாக்
குன்றில் அருங்குலக் கொம்பனை யாள்குல வாணுதலின்
மன்றல் அரிந்த மறியின் குருதியின் மண்ணுமள்ளிச்
சென்றொரு வேலர்கை தீண்டஎன் செய்தது தீவினையே.

(உரை) தலைவியின் சுற்றத்தார் வெறியாட் டயர்தலைக் கூறிப் பாங்கி தலைவனுக்கு அச்சம் விளைவித்தல். வெறியாட்டு: உருச. முன்றில் - முற்றம். குன்றில் - மலைச்சாரலில். கொம்பனையாளாகிய குலவாணுதலின் மன்றல் என்க; தலைவியின் மணம். அரிந்த மறியின் குருதி - வெட்டிய ஆட்டின் இரத்தம். வேலர் - வெறியாடுபவன். குருதியின் மண்ணும் அள்ளித் தீண்ட என்றது, வேலன் அக்குருதி மண்ணால் அவள் நெற்றியை நீவுதலை; 'முதுவாய் வேல...சிறுமறி கொன்றிவள் நறுநுதல் நீவி, வணங்கினை கொடுத்தி யாயின்' - குறுந். ருசுஉ. உசுஉ

## 5. பிறர் வரைவு உணர்த்தல்

இதுமலர் செம்பொன் இதுமணி முத்தம் இவைஇவைநும்
மதுமலர் வல்லிக்கு வந்தன என்று வரைபயந்த
நொதுமல ருக்கு நுடங்கிடை யாள்இல் விடங்கிடையா
ததுமல ரங்கதிர் வேலண்ண லேஇங் கறிந்திலையே.

(உரை) தலைவியை அயலார் மணஞ் செய்து கொள்ள விரும்பிப் பரிசம் அனுப்பினரென்ற செய்தியைப் பாங்கி தலைவனுக்குச் சொல்லுதல்.

என்று - என்று அயலார் கொண்டு வந்து தர. நொதுமலர் - அயலார். இல் இடங்கிடையாதது என்றது, வருவோர் பலர் என்று குறிப்பிட்டவாறு. ' அணிகொணர்ந் தனரே அயலோர் அண்ணல், துணிவுறு செய்தி யாதுகொல், மணிபுரை கூந்தல் மடந்தைதன் வயினே '-பொருளியல். இதுவரை பொய்த்தல். உ௬௩

## 6. வரைவு எதிர்வு உணர்த்தல்

இனத்துக்கும் ஏய்ந்த அறிவுக்கும் வாய்ந்த இளங்கொடிபொற்
றனத்துக்கும் ஏற்பத் தரநினை வாரெமர் தாழருவிப்
புனத்துக் கலவ மயில்கள்நின் றாலும் பொருப்பஇன்றென்
மனத்துக் கவலையும் மற்றென்குற் றேவலும் வாய்த்ததின்றே.

(உரை) நீ இவளை மணம் செய்ய வருவாயானால், எம்மவர் உன்னை ஏற்றுக்கொள்வர் என்று பாங்கி தலைவனுக்கு உணர்த்தல். இனம் - குலம். தர - உனக்கு அவளைத் தர. கவலையும் குற்றேவலும், எமர் தர நினைந்தமையால், வாய்த்தன என்க. உ௬௪

## 7. வரையும் நாள் உணர்த்தல்

களிதங்கு தோகைக் கணம்நட மாடக் கறங்கருவி
அளிதங்கு சோலை அருவரை நாட அணிபைங்கிள்ளை
விளிதங்கு தண்புன வேங்கையும் பூத்தது விண்ணிடைநின்(று)
ஒளிதங்குதிங்களும்நீர்கொண்ட கேண்மையும்ஊர்கொண்டதே.

(உரை) மணம் செய்துகொள்வதற்குரிய காலம் நெருங்கியதென்பதைப் பாங்கி அவனுக்குணர்த்தல். கறங்கு - ஒலிக்கின்ற. வேங்கை பூப்பதும், சந்திரன் கலை நிறைந்து ஊர் கொள்ளுவதுமாகிய காலம் மணத்துக்குரிய காலமென்பது, குறிஞ்சி நிலமக்களுடைய கருத்து ; " ' பைம்புதல் வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன, நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே ' (அகம் ௨) என வினை வேறுபட்டுழியும் தம்முள் இயைந்தனவாலெனின், இணர் விரிதலும் ஊர் கோடலும் இரண்டும் மணம் செய்காலம் இதுவென்றுணர்த்துதலாகிய ஒரு பொருள் குறித்து நின்றமையான் அவை ஒரு வினைப்பாற்படும் " தொல்காப்பியம் சொல். ௪௩௬, சேனாவரையருரை. உ௬௫

## 8. அறிவு அறிவுறுத்தல்

தன்னையும் தோளையும் தோளினில் லாவரிச் சங்கையுங்கண்(டு)
உன்னைஇங் கோதும் உறுபழி நாணி உளங்கிடந்த
அன்னையும் சேரியும் ஆயத்து ளாரும் அயலுமின்றி
என்னையும் கூடவெற் பாமறைத் தாள்என் இளங்கொடியே.

(உரை) தலைமகளுடைய மூதறிவைப் பாங்கி தலைவனுக்கு அறிவுறுத்தல். வரிச்சங்கு : தொடி என்ற ஆபரணம். உறுபழி என்றது, தலைவிக்கு அருளாமை காரணமாகத் தலைவனுக்கு உறும்பழியை. அன்னை-தன் தாய். இ. வி. கருக, தலைமகளறிவு தலைமகற் றெளிவுறுத்தற்கு மேற்கோள். (பா - ம்) அங்கோதும்; உளங்கிடந்த தன்னையும். 'தன்னெவ்வங் கூறினும் நீ செய்த அருளின்மை, என்னையும் மறைத்தாள் என் தோழி' - கலி. சச.

உசசு

## 9. குறிபெயர்த்திடுதல்

வாமா னுகளு மணிவரைச் சாரலில் யாம்வளர்த்த
பூமா தவிஇது பூஞ்சிலம் பாபுல்ல நீநினையில்
தேமாலை மென்குழ லாள்செறி யாவரும் சேணெறிக்கண்
நீமாற வேறொரு நீழலுண் டாகில் நினைந்தருளே.

(உரை) குறியை மாற்றுதல். வாமான் - தாவும் மான். மாதவி - மாதவிக்கொடி. 'துறைகெழு கொண்க நீ நல்கின், நிறைபடு நீழல் பிறவுமா ருளவே' - நற். கஎஉ. இ. வி. கருக. (பா - ம்) குழலார்; நீ மாறி ; நீழலுண்டாக.

உசஎ

## 10. தாய்க்குத் தோழி கூறல்

அற்புறஞ் செல்ல விரிசுடர் எஞ்சினும் அஞ்சும்வஞ்சி
இற்புறஞ் சென்றனள் என்றறி யேன்இரு கால்வளைந்த
விற்புறஞ் சூழெயின் மேவிவிட் டாளென்கை நீளருவிக்
கற்புறஞ் சூழணங் கோகன வோஅன்னை கண்டதுவே.

(உரை) இருளிலே தலைவி இற்புறஞ் சென்றாள் என்று அன்னை கூற, அதைக் கனவென்று பாங்கி பழித்துக் கூறல். அற்புறஞ்

செல்ல - இரவிலே புறத்திற் செல்லுதற்கு. விரிசுடர் எஞ்சினும் அஞ்சும் - சூரியன் மறைந்ததும் அஞ்சுவாள். இருகால் வளைந்த வில் - வான வில். என்கை - என்று நீ சொல்லுதல். கற்புறஞ்சூழ் அணங்கோ - வரையரமகளோ; கல் - மலை. உ௬அ

## 11. பகல் வருவானை இரவு வருகென்றல்

மதிகண் டலரும் குமுதத்தை நோக்கி வரிநெடுங்கண்
குதிகொண்ட நீரிற் கொழுங்கயல் போன்றன கூற்றமன்ன
நுதிகொண்ட வேற்படை யாயிடை யாகி நுடங்குமின்னிற்
பதிகொண்ட கச்சணி பச்சிள நீர்மென் பணிமொழிக்கே.

(உரை) வருக என்றல். குமுதம் சந்திரனைக் கண்டு மலரும். நீரில் கொழுங்கயல் : குமுதம் மலர்ந்தமை கண்டவுடன் இவள் கண்ணீர் நிறைய, கயலொத்த கண் நீருள் கயலொத்தது. நுதி - நுனி. படையாய் : தலைவனை விளித்தது. பணி மொழிக்கு - தலைவிக்கு. குமுதம் மலர்தல் இவளுக்குத் துன்பந் தருதலால், அத்துன்பம் நீங்க இரவில் வா என்றவாறு. (பா - ம்) பணிமொழிக்கே. உ௬௯

## 12. இரவு வருவானைப் பகல் வருகென்றல்

பேணத் தகுந்தன் கொழுநனைப் பேணப் பெரும்பகலே
காணத் தவஞ்செய்த கஞ்சமென் றேஎன்றும் கையறவு
பூணத் தயங்கும் பொலங்குழை மாது புலம்பிநின்றாள்
யாணர்த் தடஞ்சிலம் பாஎன்கொ லோஇதற் கெண்ணுவதே.

(உரை) கஞ்சம் - தாமரை ; இதன் கொழுநன் சூரியன். கையறவு பூண - செயலொழிந்து நிற்க ; நிற்பது, இவன் பகலில் வாராது இரவில் வருதலால். எனவே, இவள் புலம்பல் நீங்க, பகலில் வா என்றவாறு. யாணர் - வளமை. உ௭0

## 13. பகலினும் இரவினும் பயின்று வருகென்றல்

கங்குற் கலைநிறை திங்களும் காலைக் கமலமுநின்
துங்கப் புயத்தை வெறுப்பவந் தாலென் சொரிமதத்து

வெங்கைக் களிற்றின் மருப்பைப் பறித்ததன் வேரருந்தும்
சிங்கத் தடஅரு விச்சிலம் பாஇன்று சேர்கின்றதே.

(உரை) திங்கள்: இரவில் நிலவு வெளிப்பட்டு தலைவியைத் துன்புறுத்தலாலும். காலைக்கமலம்: தாமரை பகலில் தன் காதலனை சூரியனைக் கண்டு இதழ்விரிந்தமை கண்டு இவ்ள் துன்புறுதலாலும். வெறுபப: உன்னைக் கோபிப்ப. வந்தால் என்: நீ இவ்விரு பொழுதினும் வந்தால் என்ன. மருப்பு - கொம்பு. வேரருந்தும் சிங்கம்: ககூஅ; வேர் - அடிக்குருத்து. அருவி - அருவியையுடைய. இ. வி. கருக. (பா - ம்) கங்குற் றலைநின்ற. உஎக

## 14. பகலினும் இரவினும் அகலிவண் என்றல்

இரவிற் பகல்பெரி தென்னுமன் னேஇவ் விரவுவந்து
விரவிற் பகலின் மிகநெடி தென்னும் வெகுண்டெழுந்த
அரவிற் படமன்ன அல்குலென் னாவியன் னாளுக்கெந்நாள்
உரவுக் களிற்றண்ண லேஇரு போதுமிங் கொப்பதுவே.

(உரை) இவண் அகல் - இவ்விடம் வாராது நீங்குவாயாக. மன்னே: மன் ஓர் அசைநிலை; கழிவைக் குறிக்கும்; 'சிறியகட் பெறினே எமக் கீயு மன்னே' - புறம் உஅ௫. ஆவியன்னாள் - தலைவி; என்னும் - என்பாள். ஒப்பது என்றது, பகலும் இரவும் ஒக்கும் என்னுமாறு இருபோதும் எந்நாள் நீ வருவாய் என்றபடி. (பா - ம்) அன்னாளுக்கென்னாள், என்றால். இதுவரை மறுத்தல். உஎஉ

## 15. தலைவன் மரபு கூறி வரைவு கடாதல்

உரவெங் களிற்றண்ணல் ஒண்புனல் நாடும்நல் லூருமுயர்
மரபும் புகழும் மறையன்ன வாய்மையும் வையமெல்லாம்
பரவும் குலமும் பழுது படாமலிப் பைந்தொடியாள்
அரவம் தரும்அல ருக்கழுங் காமல் அளித்தருளே.

(உரை) தலைவன் மரபைப் பாங்கி பாராட்டிக் கூறித் தலைவியை மணஞ்செய்ய வேண்டல். அண்ணல்: அண்ணலாகிய உன்னுடைய. மறை யன்ன - வேதமொழியை யொத்த. பழுதுபடாமல் - இழுக்கு

வாராமல் அல்லது பொய்த்துப் போகாமல். தொடியாள் - தலைவி. அர வம் தரும் அலருக்கு அழுங்காமல் அளித்தருள் - அயலார் மிகுதியாகக் கூறும் பழிச்சொல்லுக்குத் தலைவி வருத்தமுறாதவாறு நீ அவளை மணந்து கொள்வாயாக. இது கழறல். உளரு

### 16. காவல் மிகவு உரைத்தல்

இலவும் கவிரும் அனையசெவ் வாய்வஞ்சி என்செயுமின்
குலவும் சுடர்வடி வேற்கொற்ற வாகொண்ட காதலன்ன
நிலவும் பகலென்ன நின்றெறி யாநிற்கும் நீண்மறுகில்
உலவும் கருந்துடி ஊர்கா வலரும் உறங்கலரே.

(உரை) காவல் மிகவு - காவல் மிகுதி. கவிர் - முள்முருக்கு. அனைய செவ்வாய் : இலவிதழ் முருக்கிதழ் என்பன போல. காதலை யொத்து மிகுதியாயுள்ள நிலவும் பகல்போல ஒளி பெற்று எறியா நிற்கு மென்க. கடுநதுடி : ' கடுந்துடிக் கை நகர் காவலர் துஞ்சினுமே '-தஞ்சை உசச. மறுகில் - தெருவில். காவலர் கடுகுதலைச் சொல்லியவாறு. காவ லர் உறங்கலர், வஞ்சி என் செயும் என்க. (பா - ம்) காதலென்ன ; பகலன்ன. உளசு

### 17. காம மிகவு உரைத்தல்

உடனு கியநின் உளமறி யாதல்ல ஒலமுந்நீர்
விடநாண் சுடர்விடு வேலண்ண லேவெய்ய கால்புடைப்ப
மடநாண் நிதிநின்ற வங்கம் கவிழ்ந்து மலிந்தஅற்புக்
கடனுண் மலர்க்குழ லாளழுந் தாநின்ற கையறவே.

(உரை) தலைவியின் காமமிகுதியைப் பாங்கி தலைவனுக்குரைத்தல். ஒலமுந்நீர் - ஒலிக்கின்ற கடல். விடம் : கடலிற் றோன்றிய விடத்தைப் போலச் சுடர்விடுவேல் என்க. வெய்ய கால் புடைப்ப - கொடிய காற் றாகிய தென்றல் வீச, மடமும் நாணுமாகிய நிதிநின்ற மரக்கலம் கவிழ்ந்து என்க ; வங்கம் - ஓடம். அற்புக்கடனுண் மலர்க்குழலாள் - அன்பே கடனாகவுடைய மலர்க்குழலாளான தலைவி. அழுந்தா நின்ற கையறவு - கையறவாகிய துன்பவெள்ளத்துள் அவள் அழுந்தி விட்டமை, நின்உளம் அறியாததல்ல. உளஎ

## 18. கனவு நலிபு உரைத்தல்

அரவும் களிறும் அணங்கும் குலாநெறி அன்புடனீர்
வரவும் குறியிடை வந்தெதிர் புல்லவும் வல்லிநலம்
பரவும் பணிமொழி உள்ளம் பகரவும் பாயலிடை
விரவும் கனவை நனவென்று காவி விழித்தனளே.

(உரை) கனவால் தலைவி நலிந்தமை பாங்கி கூறுதல். குலா நெறி - உலவும் வழியே. வரவும், புல்லவும், பகரவும் விரவிய கனவை என்க. பணி மொழி - பணிவான மொழியுடைய தலைவி. காவி - குவளை யொத்த கண்ணையுடைய தலைவி. கனவு நலிதலைத் தலைவி கூற்றாக உசுஇல் காண்க. இ. வி. கஙக. (பா - ம்) உலாவும் அருநெறி நீ வரவும்; உள்ளம் படிக்கவும்; நனவென்று பாவம். உஎசு

## 19. கவின் அழிபு உரைத்தல்

வருமந்த மாருதம் வண்டமிழ் நாறு மலையவெற்பா
தெருமந்த வஞ்சித் திருவனை யார்திரு மார்பகலம் [போல்
பொருமந்த மென்முலை புல்லப் பெறுதுபொன் போர்த்தது
அருமந்த வண்ணமெல் லாமவ மேஇன் றழிகின்றதே.

(உரை) தலைவியின் அழகு அழிதலைப் பாங்கி கூறுதல் (உசசு பார்க்க). மாருதம் - தென்றல். மலையம் - பொதியில். மாருதம் வண் தமிழ் நாறும் : 'தென்னந் தமிழி னுடன்பிறந்த சிறுகால்' - மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழ்; 'செந்தமிழின் பின்னுதித்த தென்றலே' - தென்றல்விடு தூது ச. தெருமந்த - கலங்கிய. பொன் போர்த்தது, பசலை. அருமந்த - அருமருந்தன்ன; 'அருமந்த அரசாட்சி எளிதோ மற் றரிதோ அம்மா' - பெரியபுராணம். வண்ணம் - அழகு. அவமே - வீணாக. இ. வி. கஙக. (பா - ம்) மருமந்த; தெருமந்த நெஞ்சிற் றிருவனையாள்; போர்க்க என்போல். உஎஎ

## 20. தலைமகள் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது

பரவும் குரிசில் பகல்வரில் ஊர்பழி தூற்றும்கங்குல்
அரவும் குயவரி யும்திரி யாநிற்கும் ஆயிழையும்

விரவும் கரையழி வேட்கை பொறுதுயிர் வீயுமென்னில்
வரவும் தவிரவும் நான்சொல்லு மாறென் மடநெஞ்சமே.

(உரை) தலைவி கேட்கும்படி பாங்கி தன் நெஞ்சுக்குச் சொல்வது. கங்குல் - இரவிலே வரில். குயவரி - புலி. ஆயிழை - தலைவி. கரையழி வேட்கை - எல்லை கடந்த காதல். பொறுது - ஆற்றுது. உஎஅ

## கரு. ஒருவழித் தணத்தல்

ஒருவழித் தணத்தல் : தலைவன் ஒருவழியாகத் தன்னூருக்குப் போய்வருகிறேனென்று சொல்லிப் பிரிதல்.

### 1. தன் பதிக்கு அகற்சி தலைவன் சாற்றல்

ஓடிக்கும் கரும்பின் உடுக்குலம் தோன்றுமெம் ஊர்வயின்போய்
முடிக்கும் குறைஉண்டு நீஇசைந் தால்முழு முத்தணியும்
கொடிக்குங் குமமுலை வல்லிக்கு நீஇது கூறுசென்று
வடிக்கின்ற வேல்விழி யாய்வரு வேனிற்றை வைகல்சென்றே.

(உரை) தலைவன் தன்னூருக்குச் செல்லுதலைப் பாங்கிக்குக் கூறுதல். கரும்பு, முத்துப பிறக்கும் இடங்களுள் ஒன்று. உடுக்குலம் - நட்சத்திரம்போல் ஒளிவிடும் முத்துக்கள். குறை - காரியம். இசைந்தால் - அனுமதி தந்தால். இ. வி. கருரு. (பா - ம்) கூற என்று; வருகேன். உஎக

### 2. பாங்கி விலக்கல்

அறையும் கடலன்ன அன்பினெம் ஆவி யினும்பிரியக்
குறைஇங் குமக்கு முடிப்பதுண் டேற்கொண்ட காதலுடன்
உறையும் பதிக்கண் ஒருப்பட்ட போதின்றென் உள்ளஞ்செல்ல
இறையும் தவிர்க்கில் லேனெம் பிரானின் றெழுந்தருளே.

(உரை) தலைவன் செல்லுதலைப பாங்கி விலக்கல். அறையும் - ஒலிக்கின்ற. கடலன்ன அன்பு : 'கடலன்ன காம முழந்தும்' - குறள் ககருஎ. ஆவியினும் - தலைவியை விட்டு. உறையும் பதிக்கண் - உன்னூருக்கு. இறையும் - சிறிதளவும். இ. வி. கருரு. (பா - ம்) இரிய ; முடிப்பதுண்டே ; போது நின். உஅo

## 3. தலைவன் நீங்கல் வேண்டல்

உள்ளம் தடுப்ப வினையே எனைஇங் குறைபதிக்குத்
தள்ளும் பரிசு தலைக்கொண்ட தால்தணந் தாலும்வந்து
வெள்ளஞ் சுரும்பு விரும்புபைங் கோதை விளங்கிழையாய்
நள்ளென் பகல்வரு வேன்நடுங் காமெய் நடுங்கலையே.

(உரை) உள்ளம் தடுப்ப - போகாதவாறு மனம் என்னைத் தடுக்க. வினையே தலைக்கொண்டதால் - முன் சொன்ன குறை காரணமாகப் போகவேண்டும் என்றபடி. தணந்தாலும் - இப்போது பிரிந்து சென்றாலும். நடுங்கலை - நடுங்காதே. இ. வி. கஙுரு. (பா - ம்) தலைக் கொண்டது ; வருவேம் ; ஒடுங்கா உள். உஅக

## 4. பாங்கி விடுத்தல்

உமையாள் தலைவனை ஒன்றிய வாறிவள் உன்னையன்றி
அமையா நிலைமை அறிந்தனை யேஅய லேபுயலின்
சுமையார் தடம்பொழில் சூழும்வெற் பாநின் துணிவைஎய்தி
எமையாள எண்ணினை யேல்இன்று நாளை எழுந்தருளே.

(உரை) தலைவனைப் பாங்கி செல்ல விடுத்தல். தலைவனை - சிவ பிரானை. ஒன்றியவாறு என்றது, என்றும் பிரியாதபடி இடப்பாகம் பெற்றது. துணிவை - கருதிய காரியத்தை. எழுந்தருள் - மீண்டு வருவாயாக. இ. வி. கஙுரு. (பா - ம்) அறிந்தனையேல் ; சூடும். உஅஉ

## 5. புரவலன் பிரிவுநிலை உரைத்தல்

இருகாலும் இல்லை வலவனுக் கேறும் எழுபரித்தேர்க்(கு)
ஒருகால் ஒழிய இருகாலும் இங்கில்லை ஒண்சிலம்பா
குருகாலும் வாரிதி ஏழுமெண் குன்றமும் சூழ்ந்திரவி
வருகாலம் என்றுகொல் அன்றுகொல் நீயும் வருவதுவே.

(உரை) பிரிந்து செல்லும் தலைவனுக்குப் பாங்கி உரைத்தல். வலவன் - தேர்ப்பாகன். எழு பரித் தேர் - ஏழு குதிரைகள் பூட்டிய சூரியனது தேர். குருகு ஆலும் - குருகுகள் ஆரவாரிக்கும். வாரிதி ஏழும் - ஏழு கடலும். எண் குன்றமும் - அஷ்டகுல பர்வதங்களும்.

இரவி வரு காலம் - மறுநாள் பொழுது புலர்ந்ததும் என்றபடி. சூரிய னது வலவன் அருணன் ; அருணோதயம் காலையில் மட்டுமுண்டு. ஆகவே, வலவனுக்கு, ஒருகால் மட்டுமே உரியது இருகாலும் இல்லை ; கால் - காலம். சூரியனது தேர் ஒற்றைச் சக்கரமுடையது. அவன் காலை யில் வருவானே யொழிய மற்றொரு காலமாகிய மாலையில் வாரான் என்றபடி. இ வி. கருஙு, இரவு நிலை யுணர்த்தற்கு மேற்கோள். (பா - ம்) வலவனுக்கேனும் ; ஒரு காலமுமில்லை. உஅங

### 6. பாங்கி தலைவிக்கு அவன் செலவு உணர்த்தல்

கருநாண் மலர்க்குழற் காரிகை யாய்ஒரு காரணத்தால்
ஒருநாள் நமைவிட் டுறையவும் வேண்டினர் ஒன்றியநின்
பெருநாண் மடமை பிணிக்கப் பிணிப்புண்ட பேரறிவின்
வருநாண் மலர்த்தொங்கல் மன்னரென் றோதும் வயமொழிந்தே.

(உரை) பிணிக்க - அவரது பேரறிவைப் பிணிக்க. தொங்கல் - மாலையணிந்த. இ. வி. கருஙு. (பா - ம்) உனைவிட்டு ; வச மொழித்தே. உஅச

### 7. தலைவி ஆற்றாமை கூறல்

ஓருநாள் பிரிய நினைந்தவர் நம்மை ஒழிந்தஎல்லை
வருநாள் மறக்கவும் வல்லரன் றேமறப் பார்நினைவார்
செருநாண் மலர்க்கணைத் திண்சிலை வேள்வந்து சிந்துமெல்லை
அருநா ளுடனெங்கன் ஆவியும் நாமுமிங் காற்றுவதே.

(உரை) பிரிவாற்றாமையைத் தலைவி கூறல். வருநாள் மறக்கவும் வல்லர் - மறுநாளும் மறந்துவிடுதல் கூடும். செரு - போர். வேள் - மன்மதன். சிந்துமெல்லை - கணை சிந்தும் காலத்து. இ. வி. கருஙு, நெஞ்சொடு புலத்தலுக்கு மேற்கோள். (பா - ம்) தம்மை ஒழிந்த நம்மை ; நானுநின் றாற்றுவதே. உஅரு

### 8. பாங்கி ஆற்றுவித்தல்

அருகுங் கலவி அளித்தகன் றார்அருள் இன்மைஎண்ணி
உருகுந் தனிநெஞ்சும் உண்மகிழ் கூரவந் தொண்மதியைப்

பொருபைங் கதலியும் பூகமும் கன்னலும் பூவுங்கொண்டு
வருகின்ற தாலவர் ஊர்மலி நீருந்தி வாணுதலே.

(உரை) அவரூர் வெள்ளம் ஆற்றில் வருதலால் அதில் ஆடலாம் என்று கூறித் தலைவி துயரைப் பாங்கி ஆற்றுவித்தல். கதலி - வாழை. பூகம் - கமுகு. கன்னல் - கரும்பு. அவரூர் மலிநீர் உந்தி வருகின்ற தால் என்றது, அதில் ஆடவே, பிரிவால் உருகும் நெஞ்சு உண்மகிழ் கூரும் ஆதலால் ; 'ஆடுகம் வாநம் மகன்றவரூர் அகலாப் புதுநீர், பாடுகம் வாபொற் பசலைதந் தார்திறம்' - **தஞ்சை.** உ௫௫. 'நந்தி...காவிரிநீர், ஆட்டாதே வைத்தென்னை ஆயிரமும் செய்தீரே' - **நந்திக்கலம்பகம்.** இ. வி. க௫௫. உ௬௬

## 9. நெஞ்சில் நினைந்து இரங்கல்

தேருத அன்பினர் சென்றுழிச் சென்றஎன் சிந்தைகண்டு
மாருது கூட வரநின்ற தோஇங்கு வந்தெனுள்ளம்
வேருய துகண்டு மீண்டது வோஅன்றி மாண்டதுவோ
ஆருத மையலுற் றேனறி யேன்வந் தடுத்ததுவே.

(உரை) தலைவி கூற்று. வேருயது - தலைவன் பிரிவினுல் மாறுபட்டது. மீண்டது, மாறுபட்டமை கண்டு. இ. வி. க௫௫, பாங்கி ஆற்றுவித்துத் தலைவி நெஞ்சு நினைந்திரங்கற்கு மேற்கோள். உ௬௭

## 10. காமமிக்க கழிபடர் கிளவி

செங்கால் மடநடை ஓதிமங் காளுங்கள் சேவலிருந்(து)
எங்கா தலரைஇன் றென்சொல்லு மோஎன்ன நீருமதன்
பங்காய் இருந்து பரிந்துசொல் லீர்அரும் பாவிஎன்றே
தங்காது போவிர்கொல் லோதரி யாதென் தனிநெஞ்சமே.

(உரை) சென்ற தலைவன் வரத் தாழ்த்தபோது, காமம் மிக்கதனுல் தலைவி அன்னங்களை விளித்துத தலைவனுக்குத் தன் துயர் உரைக்குமாறு வேண்டியிரங்கல். 'செங்கால் மடநாராய்' - **முத்தொள்.** ஓதிமம் - அன்னம். 'ஒண்டூவி நாராய் நின்சேவலும் நீயுமாய், வண்டூதுங் கானல் வைகறுஞ் சேறிரால், பெண்தூது வந்தேம் எனவுரைத்துக்,

காதலரைக், கணவர் கழறியக்காற் காதலர் கடிபவோ ' - பழம்பாட்டு. உஅஅ

### 11. தலைவி நெஞ்சொடு கிளத்தல்

ஏயும் கடலும் மலைபயி லூரிலும் என்னைவைத்துப்
போயங்கு நம்மை மறந்தவர் பாற்சென்று பூண்முலைமேல்
பாயுங் கணீரும் பசலையு மாய்நின்ற பாவிநெஞ்சே
நீயென்சொ லுய்மன் னவரென்சொ னூர்உன் நினைவறிந்தே.

(உரை) அங்கு - தம்மூரில். மன்னவர் - தலைவர். இ. வி. கருந. (பா - ம்) யாயுங் கடலு மலைப்ப இவ்வூரிலு மென்னை; பின்னவரென் சொனூர். உஅகூ

### 12. கடலொடு புலத்தல்

அவிகொண்ட வெங்கனல் அம்புகொண் டெய்தனர் அன்றியும்புன்
கவிகொண்டு நின்னைக் கடந்தனர் என்றுகொல் கன்றினர்தம்
புவிகொண்டு வன்புகழ் போர்ப்பவர் தேர்வழி தூர்ப்பதுநீ
குவிகொண்டல் உண்டிமிழ் தெண்டிரை மோதும் குரைகடலே.

(உரை) கடலை நொந்து கூறுதல். அவிகொண்ட - நெய்யுண்ட. கனலம்பு - நெருப்பாகிய அன்பு. எய்தனர் : இராமன் சமுத்திர ராஜன் மீது அம்பு விட்டமை குறிக்கிருள், தலைவனுக்குக் காத்தற் கடவுளாகிய திருமாலை உவமை கூறும் மரபுபற்றி. புன்கவி கொண்டு - அற்பக் குரங்காகிய அனுமனைக் கொண்டு. கடந்தனர் - தாண்டச் செய்தார். என்று கொல் - என்ற காரணத்தாலோ. கன்றினர் - பகைவர். புவி - அவர் நாட்டை. வண்புகழ் போர்ப்பவர் - வெற்றியால் விளைந்த புகழுடைய தலைவர். தூர்ப்பது, அலை மணலைக் கொண்டுவந்து குவிப்பதை எண்ணி. கொண்டல் மேகம். இ. வி. கருந, கடலொடு புலம்பலுக்கு மேற்கோள். (பா - ம்) கொண்டே யுன்னை அன்றடர் புன்கவி; கடந்திலரென்று. உகூO

### 13. ஆற்ருெடு புலம்பல்

மறைவந்தென் மேனி மணந்துயிர் வாடத் தணந்தனனின்
இறைவன் கொடுமை இயம்புதல் நாணி இரங்கிமெய்யை

நறையுந்து மாமலர்த் தூசான் மறைத்து நகர்ப்புறம்போய்
நிறைஉந்தி நீயென்செய் வாயிது வாயிலென் நீள்வினையே.

(உரை) தலைவனுக்குரிய ஆற்றைப் பழித்தல். மறைவந்து மணந்து- களவொழுக்கம் மேற்கொண்டு. தணந்தனன்நின் இறைவன் - உன் தலைவன் என்னைப் பிரிந்தான். கொடுமை - பிரிந்த கொடுமையை. ஆற்றை ஒரு பெண்ணாகச் சிலேடை வகையாற் கூறுகிறாள். இரங்கி - வருந்தி. ஒலித்து. நறையுந்து மாமலர்த் தூசால் - தேன் நிறைந்த மலரின் நுண் தாதினால்; மணமிக்க மலராலும் ஆடையாலும்; தூசு - ஆடை. 'மணிபபூ ஆடையது போர்த்து...நடந்தாய் வாழி காவேரி' - சிலப். கானல்வரி. நகர்ப்புறம் போய் - நகரின்புறத்தே ஓடி, புறத்தே சென்று. நிறை உந்தி- நீர்ச்சாலை உந்தி, நிறைந்த உந்தியுடையவள். என் வினை இதுவாயில் நீ என் செய்வாய். இ. வி. கஙுஈ. (பா - ம்) தணந்தசை நின்று; நறை யுந்திய மலர்த்தூசான் மறைத்திங் நகர்ப்புறம். உகக

## 14. புள்ளோதிமத்தொடு புலம்பல்

எங்கா தலர்செல்ல என்னையிவ் வாறுகொண் டேசுமவர்
தங்கா தலைத் தணந்தறி யார்கொல் மணந்துறையும்
செங்கானல் ஓதிமங் காள்கருங் கால்நற் சிறைஅன் றில்காள்
உங்கா தலர்செல்லில் நீருடன் போமிக் குடம்பைவிட்டே.

(உரை) அயலார் தன்னை அலர் தூற்றுதலைத் தலைவி அன்னத்தோடு கூறிப் புலம்பல். செல்ல - பிரிந்து போக. ஏசுமவர் - அலர் தூற்று வோர். மணந்துறையும் - இணை பிரியாது வாழுகிற. செங்கால் நல் ஓதிமங்காள், கருங்கால் நற்சிறை அன்றில்காள் என்க; 'செங்கால் மட நடை ஓதிமம்' - உஅஅ. குடம்பைவிட்டு - இவ்வுடம்பை விட்டு; உயிர் துறந்து விடுக என்றவாறு. இ. வி. கஙுஈ. (பா - ம்) சொன்ன என்னை; தணந்துறையும்; இறை அளிகாள்; சொல்லில். உகஉ

## 15. குருகொடு புலம்பல்

சோரு முழுமடற் கைதையும் நெய்தலும் சூழ்துறைவற்(கு)
ஏறு துரைப்பினும் ஏற்குங்கொ லோஇற்றை வாணிலவின்

நீறுமிவ் வஞ்சியும் நெஞ்சுமென் றுலிந் நிலையவற்குக்
கூறு துறங்குவ திப்புறங் காவிற் குருகினமே.

(உரை) குருகு - நாரை. முழு மடலும் சோறுகவுள்ள கைதை; கைதை - தாழை. நிலவில் வஞ்சியும் நெஞ்சும் நீறும்; காமத் தீயால் அழிந்து படுவாள் என்றவாறு. கூறாது - நீங்கள் சென்று இந்த என் நிலையை அவனுக்குக் கூறாமல். உகங

## 16 கையறு கிளவி

நன்றே இனிஅவர் நண்பு நமக்கும் அவர்க்குமுயிர்
ஒன்றே நினைவும் உரையுமொன் றேஉயர் வெண்மணற்றிண்
குன்றே குலவன்ன மேகுரு கேநம் கொடிநெடுந்தேர்
அன்றே வருவமென் றுரிருந் தேன்மெய் வருந்தியுமே.

(உரை) செயலொழிந்த நிலையில் தலைவி இரங்கிக் கூறுதல். அவர் - தலைவர். தேர் அன்றே வருவேன். இருந்தேன் - துயர் ஆற்றியிருந்தேன். இ. வி. கநுங. (பா - ம்) வருவல். உகச

## 17. கூடல் இழைத்தல்

முளைக்கும் பிறையை முனியும் திருநுதல் முத்தரும்ப
விளைக்கும் பசலை விழியிணை காட்ட விடாதஅண்டர்
கிளைக்கும் தெரிவரும் கேதகை நீழலின் கீழிருந்து [டே.
வளைக்கும் சுழிக்கும் அழிக்குமொண் கூடல் வளைக்கைகொண்

(உரை) கூடல் இழைத்தல் : தலைவனைப் பிரிந்து ஆற்றியிருக்கும் தலைவி, அவன் மீட்டும் வருவானோ என்று அறிதல் வேண்டித் தன் முன் மணலைப் பரப்பி அம்மணலில் கண்ணை மூடிக்கொண்டு ஒரு விரலால் வளையம் வளையமாகக் கோடிழுப்பாள்; வளையத்தின் முடிவானது தானுகவே அதன் தொடக்கத்தோடு வந்து பொருந்திவிட்டால், தலைவன் தலைவியை வந்து கூடுவான் என்பது கருத்து; தொடக்கத்தோடு பொருந்தாமற் போனல் தலைவன் வந்து கூடமாட்டான் என்பதாம்.

## 18. கனவு நலிபு உரைத்தல்

அரவும் களிறும் அணங்கும் குலாநெறி அன்புடனீர்
வரவும் குறியிடை வந்தெதிர் புல்லவும் வல்லிநலம்
பரவும் பணிமொழி உள்ளம் பகரவும் பாயலிடை
விரவும் கனவை நனவென்று காவி விழித்தனளே.

(உரை) கனவால் தலைவி நலிந்தமை பாங்கி கூறுதல். குலா நெறி - உலவும் வழியே. வரவும், புல்லவும், பகரவும் விரவிய கனவை என்க. பணி மொழி - பணிவான மொழியுடைய தலைவி. காவி - குவளை யொத்த கண்ணையுடைய தலைவி. கனவு நலிதலைத் தலைவி கூற்றாக உசருஇல் காண்க. இ. வி. கஙக. (பா - ம்) உலாவும் அருநெறி நீ வரவும்; உள்ளம் படிக்கவும்; நனவென்று பாவம். உஎசு

## 19. கவின் அழிபு உரைத்தல்

வருமந்த மாருதம் வண்டமிழ் நாறு மலையவெற்பா
தெருமந்த வஞ்சித் திருவனை யார்திரு மார்பகலம் [போல்
பொருமந்த மென்முலை புல்லப் பெறுதுபொன் போர்த்தது
அருமந்த வண்ணமெல் லாமவ மேஇன் றழிகின்றதே.

(உரை) தலைவியின் அழகு அழிதலைப் பாங்கி கூறுதல் (உசசு பார்க்க). மாருதம் - தென்றல். மலையம் - பொதியில். மாருதம் வண் தமிழ் நாறும்: 'தென்னந் தமிழி னுடன்பிறந்த சிறுகால்' - **மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழ்**; 'செந்தமிழின் பின்னுதித்த தென்றலே' - **தென்றல்விடு தூது** ச. தெருமந்த - கலங்கிய. பொன் போர்த்தது, பசலை. அருமந்த - அருமருந்தன்ன; 'அருமந்த அரசாட்சி எளிதோ மற் றரிதோ அம்மா' - **பெரியபுராணம்**. வண்ணம் - அழகு. அவமே - வீணாக. இ. வி. கஙக. (பா - ம்) மருமந்த; தெருமந்த நெஞ்சிற் றிருவனையாள்; போர்க்க என்போல். உஎஎ

## 20. தலைமகள் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது

பரவும் குரிசில் பகல்வரில் ஊர்பழி தூற்றும்கங்குல்
அரவும் குயவரி யும்திரி யாதிற்கும் ஆயிழையும்

**நாச்சியார் திருமொழி**யின் நாலாந் திருமொழி இக்கூடலிழைத் தலே பொருளாக வுள்ளது ; 'தெள்ளி யார்பலர் கைதொழு தேவனார், வள்ளல் மாலிருஞ் சோலை மணாளனார், பள்ளி கொள்ளு மிடத்தடி கொட் டிடக், கொள்ளு மாகில்நீ கூடிடு கூடலே' என்பது முதற் பாசுரம். "கூடலாவது, வட்டமாகக் கோட்டைக் கீறி, அதுக்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ் சுழித்து இவ்விரண்டு சுழியாகக் கூட்டினால் இரட்டைப் பட்டாற் கூடுகை, ஒற்றைப்பட்டாற் கூடாமை என்று சங்கேதம்" என்று இதையே வேறு விதமாக **நாச்சியார் திருமொழி**யுரையிற் கூறியிருக்கக் காணலாம். 'மணற் குன்றில் நீத்தகன் றூர்வருமென்று, ஆழிதிருத்திச் சுழிக்கணக் கோதி' என்பது **திருக்கோவையார்** கஅசு.

முத்தரும்பி - வியர்வை யுண்டாக. விடாத அண்டர் : பிரியாத ஆயத்தார்; அண்டர் கிளை - ஆயர் சுற்றம். தெரிவரும் - தெரிதற்கரிய. கேதகை - தாழை. வளைக்கை கொண்டு கூடல் வளைக்கும் சுழிக்கும், அழிக்கும் என்க. 'கூடற் பெருமானைக் கூடலாற் கோமானைக், கூடப் பெறுவேனேற் கூடென்று - கூடல், இழைப்பாள்போற் காட்டி இழையா திருக்கும், பிழைப்பில் பிழைபயாக் கறிந்து' என்ற **முத்தொள் ளாயிரப்** பாடலில், அழிக்கும் (அல்லது கூடல் இழையாதிருக்கும்) காரணத்தைக் காண்க. இ. வி. கருரு. உகரு

## 18. கிளியை நோக்கிக் கூறல்

நீட்டாத கூர்மைநின் செவ்வாய் கவரும் தினைக்குரல்கண்(டு)
ஓட்டா திருந்த உதவிக் குதவி உயர்விசும்பில்
பூட்டாத நன்னுதற் பொற்றொடி யார்புனங் காவலென்ன
மாட்டாய்கொல் பைங்கிளி யேவல்லை யேசென்று மன்னவற்கே.

**(உரை)** தலைவனுக்குத் தூது சொல்லுமாறு தலைவி கூறல். தினைக் குரல் - தினைக் கதிர். உதவி - எனக்குப் பதில் உதவியாக. விசும்பிற் பூட்டாத நன்னுதல் : பூட்டிய இந்திர வில்லை யொத்த நுதலை யுடையவள் என்றவாறு. புனம் காவல் என்னமாட்டாய் கொல் - புனம் காக்கிறார்கள் என்று நீ கூற மாட்டாயா. வல்லை - விரைவிலே. உகசு

### 19. சூளுறவு பொய் என்றல்

புறந்தாழ் விரிசினைப் புன்னையங் கானல்மென் பூந்துறைவர்
சிறந்தாழ் கருங்கடல் தெய்வமும் தீதுகொல் சிந்தைமென்னுண்
துறந்தாவி சேர்வதென் என்றற்றை நாளுற்ற சூள்முழுதும்
மறந்தார் இருக்க மறவாத எம்மை வருத்தியதே.

(உரை) தலைவன் செய்த சபதம் பொய்த்தமை கூறுதல். விரிசினை. விரிந்த கிளையுடைய. துறைவர்: தலைவர். 'தெய்வமும் தீதுகொல், சோர்வதென்' என்று தலைவன் முன்னம் சொன்னவாறு - தெய்வம் என்றது தலைவியை. அற்றை நாள் - என்னைக் கூடிய அந்நாள். சூள்: 'இமைபபோதும் நின்னைப், பிரியேன் மறந்தும் பிரிவுறின் மாய்களென் பேரிசையே' (கஎ) என்றது. இருக்க - வாட்டமின்றி இருக்க. இ. வி. கருரு. (பா - ம்) துறைவா; எண்ணுன்; சோர அவருற்ற நாளுற்ற; நம்மை. உகஎ

### 20. மடமை கூறியது

விடவாய் அரவை மிதித்து மதித்த விலங்கன்றியே
நடவா இரவில் நடந்தநம் காதலர் நம்மைஇனிக்
கடவார் எனநினைந் தேனிங்ங னானதென் கண்ணுமெய்யும்
மடவார் அறிவதுண் டோஉர வோர்செயும் வன்கண்மையே.

(உரை) தன் மடமையைத் தலைவி கூறுதல். நடவா - நடக்க வொண்ணாத. இங்ஙன் ஆனதென் கண்ணும் மெய்யும்: கண்ணீர் விட்டமையால் கண் சிவந்து, மெய்யும் பசலை போர்த்தது என்றபடி; 'பாயுங் கண்ணீரும் பசலையுமாய் நின்ற பாவி நெஞ்சே' - உஅகூ. மடவார் - பெண்கள், மடமையுடையவர் என இரு பொருள்; உஉஅ. உரவோர் - அறிவோர். வன்கண்மை - கொடுமை. உரவோர் வன் கண்மை மடவார் அறிவரோ என்றது நயம். இ. வி. கருரு. (பா - ம்) மிதித்துத் தவிர விலங்கு. உகூஅ

### 21. தலைவி தன்னுள்ளே சொல்லியது

மாயக் கலவி மணந்தகன் றூர்திரு மார்பகலம்
தோயப் பெறுது சுடுகின்ற மேனி துறந்தவர்தாம்

ஆயத்து நின்று வருந்திய என்னை அணைத்தணைமேல்
சாயக் குளிருமின் றேயவர் சாரற் றழைபடுத்தே.

(உரை) சுடுகின்ற தன் மேனியை அவர் சாரற்றழை யணிவித்து அணைத்தால் குளிரும் என்றவாறு. சாய - சாய்க்க. தழையாவது, தலைவன் அடையாள மாலை. இ. வி. கருந. (பா - ம்) துறந்தவர்தம் தேயத்து நின்று சுடுநதி நீரிற் றிளைத்தனமேல்; சாரற் றளைப் படுத்தே. உகக

## 22. தலைவிக்கு அவன் வரவு பாங்கி சாற்றல்

சந்தார் வனமுலை தங்கும் பசப்பும் தனிமையும்நின்
சிந்தா குலமும் சிதையும் படிசெஞ் சிறைவண்டுசூழ்
கொந்தார் அலங்கற் குழலணங் கேதங் குறைமுடித்து
வந்தார் விரைய மணிநெடுந் தேரில்நம் மன்னவரே.

(உரை) தலைவன் வந்தமை பாங்கி தலைவிக்கு உரைத்தல். சிந்தா குலம் - துயரம். தம் குறை முடித்து - தாம் சென்ற காரியத்தை முடித்து; 'முடிக்குங் குறையுண்டு' என்றமை (உஅ0) காண்க. இ. வி. கருந. (பா - ம்) அழியும்படி; சிறை வண்டினஞ்சேர் கொந்தார். நூ00

## 23. வந்தவன் தன்னொடு நொந்து வினாதல்

இங்கென் இளங்கொடி இங்ஙனம் வாடிநின் றேங்கவும்நீர்
தங்கவும் நெஞ்சம் தரித்தது வோதரி யாதநெறி
கங்குலும் நண்பக லுங்கட வாவரும் காதல்கொண்ட [யே.
மங்கையர் கண்ணுமுண் டோபெரி யோர்செய்யும் வன்கண்மை

(உரை) பாங்கி வினாதல். கொடி - தலைவி. தங்கவும் - பிரிந்திருக்கவும். தரியாத நெறி - நிற்க வொண்ணாத வழியே. கடவா வரும் - தவறாது அல்லது கடந்து வந்த. மங்கையர் என்றது தலைவியை. பெரியோர் செயும் வன்கண்மை: உகஅ; 'பெரியோர் செயும் பரிசுகளே' - சுக. வன்கண்மை - கொடுமை. நூ0க

### 24. வளை கொடுத்துழி கூறியது

முச்சங்க வண்தமிழ் போல்மொழி யாய்நம்மை முன்னுறவாய்
அச்சங் கடிந்த அருங்கடற் சேர்ப்பர் அணியநல்கும்
இச்சங்கம் அன்னையர் கொண்டிடுந் தோறும் இராதிரங்கும்
கைச்சங்கம் போலல்ல வேகழ லாதொரு காலத்துமே.

(உரை) தலைவன் தந்த வளையைப் பாங்கி தலைவியிடந் தருதல். தமிழ்போல் மொழியாய் - இனிய மொழியுடையவளே ; 'தமிழ் தழீஇய சாய லவர்' என்பதற்கு இனிமை தழுவிய சாயலையுடையவர் என்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர் (சிந்தாமணி உ௦௬ உரை). கடிந்த - நீக்கிய. அன்னையர் - நீ. இராது இரங்கும் கைச்சங்கம் - அடிக்கடி கழன்றுபோய்விடும் வளை ; இரங்குதல் - அரற்றல். கழலாது என்றது, தலைவன் வந்துவிட்டமையால் இனிக் கழலாது என்றலுமாம். ௩௦௨

## கச. வரைவு இடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல்

மணம் செய்து கொள்ளுவதற்கிடையே தலைவன் பொருள் தேடுவதை எண்ணித் தலைவியைப் பிரிதல்.

### 1. என்பொருட் பிரிவுணர்த்து ஏந்திழைக்கு என்றல்

திரைவான் முழக்கின் மணிமுர சார்ப்பத் திருந்திழையார்
விரைவான் மலர்சிந்த வெண்மணப் பந்தரில் வெந்தழல்முன்
வரைவான் விரும்பி இருநிதிக் கேக வலித்தவண்ணம்
உரைவான் மலர்க்குழ லாள்வருந் தாவண்ணம் ஒண்ணுதலே.

(உரை) பொருள் தேடி நான் பிரிவதைத் தலைவிக்கு உணர்த்துவாயாக என்று தலைவன் பாங்கிக்குரைத்தல். மணி முரசு ஆர்ப்ப : எங்கள் மணத்தின் போது ஆர்ப்ப. தழல்முன் - அக்கினி சாட்சியாக. வரைவான் விரும்பி - மணம் புரிய விரும்பி. இருநிதிக்கு ஏக - பொருள் ஈட்டுதற்குச் செல்ல. வலித்த வண்ணம் - எண்ணியது. உரை - உரைப்பாயாக. குழலாள் : தலைவி. ௩௦௩

## 2. நின் பொருட் பிரிவுரை நீ அவட்கு என்றல்

துஞ்சத் தரும்பிடி என்றுதண் சாரற் றுணைக்களிறு
மஞ்சைத் தழுவும் வளமலை நாட வரைவைஉன்னி
நெஞ்சத் துயிரொத்த வாஞ்சையை நீத்து நிதிக்ககலும்
வெஞ்சொற் பகரும் விரகுவல் லார்உன்னில் வேறில்லையே.

(உரை) நின் பொருட்பிரிவை நீயே தலைவிக்குரை என்று பாங்கி தலைவனுக்குக் கூறுதல். மஞ்சை - மேகத்தை. உன்னி - எண்ணி. வாஞ்சை - அன்பு வெம் சொல் - பிரிவு என்ற கொடுஞ்சொல். விரகு - திறமை. உன்னில் வேறில்லை என்றது, நான் சொல்லமுடியாது நீயே சொல் என்றவாறு. ௩0௪

## 3. நீடேன் என்றவன் நீங்கல்

மதிமுற் றியதன்ன வாண்முகத் தாளை வரையவல்லே
நிதிமுற்றி மீள்குவன் நீடநில் லேனெய்தல் நீலஉண்கண்
நுதிமுற் றியகுழல் நுண்ணிடை யாயெதிர் கொண்டுநுங்கள்
பதிமுற்றி மங்கலம் பாடிநின் றூடப் பரிசிலரே.

(உரை) காலந் தாழ்க்காமல் வருவேன் என்று பாங்கியிடம் சொல்லித் தலைவன் பிரிதல். வாள் - ஒளி பொருந்திய. வரைய - மணம் புரிய. வல்லே - விரைவாக. நிதிமுற்றி - பொருள் ஈட்டி. உண்கண் - மையுண்ட கண். நுண்ணிடையாய் : விளி. பரிசிலர் எதிர்கொண்டு பதிமுற்றிய பாடி ஆட, மீள்குவன் என்றவாறு. இ. வி. கருடு. ௩0௫

## 4. சூளினை நினைந்து உரைத்தல்

வல்லே வருக பொருள்மேற் பிரிக வரைகஉள்ளேன்
நில்லேன் நெடிதென்று நீயிங் குரைத்த நிழல்வளைந்த
சொல்லே தவறில் சுவறுமுந் நீர்மஞ்சு சூல்மறக்கும்
கல்லே உதயங் கடலே இலைநம் கதிரவற்கே.

(உரை) கூறிய சபதம் தவறமாட்டேனென்று தலைவன் கூறியதைப பாங்கி நினைவூட்டல். வரைக உள்ளேன் நில்லேன் நெடிது -

வரையவுள்ள யான் பிரிந்து நெடிது நில்லேன். சூள்: கஎ முந்நீர் சுவறும் - கடல் வற்றும். மஞ்சு சூல் மறக்கும் - மேகம் சூல் கொள் ளாது. கதிரவன் - சூரியன்; கல் - மலை; மலையில் அதாவது மேற்கே உதிப்பான், கடலில் அதாவது கிழக்கிலல்ல என்றவாறு. ௩0௬

## 5. பாங்கி தலைவிக்கு அவன் செலவு உணர்த்தல்

ஊரம் பலுமல ரும்முன்னை நாளும் ஒறுப்பதஞ்சி
ஆரம் பலஒன் றகன்மலை நாடர் அவிர்மலர்த்தேன்
சோரும் புயலன்ன வார்குழ லாய்நின் துணைமுலைக்கு
நேரும் பரிசு நிதிக்ககன் றேகினர் நீள்சுரமே.

(உரை) அம்பலும் அலரும், பழிமொழி; 'அம்பலென்பது சொல் நிகழாதே முகிழ் முகிழ்த்துச் சொல்வதாயிற்று; இன்னதின் கண்ணென் பது அயல் அறியலாகாதென்பது. அலரென்பது இன்னானோடு இன்னா ளிடையது போலும் பட்டதென விளங்கச் சொல்லி நிற்பது. அம்ப லென்பது பெரும் போதாய்ச் சிறிது நிற்க அலருமென நிற்பது. அல ரென்பது அப்பெரும்போது தாதும் அல்லியும் வெளிப்பட மலர்ந்தாற் போல் நிற்கும் நிலைமை' - இறையனார் அகப்பொருள், 'அம்பலும் அல ருங் களவு' என்ற உஉ ஆம் சூத்திர உரை. ஒறுபபதஞ்சி - உன்னைத் துன்புறுத்துவதை எண்ணி. ஆரம் பல ஒன்று - சந்தன மரங்களடர்ந்த. நேரும் பரிசு - கொடுப்பதற்காக குழலாய், நாடர் அஞ்சி நீள்சுரம் நிதிக் ககன்றார் என்க. ௩0எ

## 6. பிரிவு ஆற்றாமை

வல்லார் களப முலைமேல் கலைவட முந்திருத்தி
அல்லார் சுரிகுழல் மோந்தளி ஓட்டி அயாவுயிர்த்துப்
புல்லா நினைத்ததெல் லாமுகத் தாலெம் புரவலர்முன்
சொல்லா திருந்திலர் சொல்லா ததுவெஞ் சுரமொன்றுமே.

(உரை) பிரிவாற்றாது தலைவி கூறுதல். வல்லார் - வல்லொத்த. குழல் மோந்து - உச்சி மோந்து. அளியோட்டி - குழலில் மொய்த்த வண்டுகளை ஓட்டி. அயாவுயிர்த்து - வருத்தம் நீக்கி. புல்லா நினைத் தது - புல்லி எண்ணியது. 'முகத்தால் எம் புரவலர் முன் சொல்லாதிருந்

திலர் - அவர் முகக்குறிப்பினால், அவர் பிரிய எண்ணியதை எனக்குச் சொல்லியிருக்கிறார் ; வெஞ்சுரத்தின் வழியே செல்வதொன்றுமே சொல்லியதில்லை என்க. 'மந்திரக் கிழவர் தம் முகத்தால், எழுதி நீட்டிய இங்கிதம்' - கம்பர். தலைவன் பிரிய எண்ணியமை குறிப்பினால் தலைவி உணர்ந்தமை பாலைக்கலி ச, எ ஆம் பாடல்களில் விளங்கக் காணலாம். ௫0அ

## 7. தலைமகள் இரங்கல்

பாவி எனக்குப் பரிசங் குறித்தநம் பல்கிளையோ
நீவி அதற்கென்னை நீத்தவ ரோஅவர் நீத்தபின்னும்
ஆவி தரித்துய்யும் மாசுடம் போஇங் கறிகிலமால்
யாவர் மடப்பிடி யேகொடி யார்இவ் விருநிலத்தே.

(உரை) பரிசம் - மணப்பெண்ணுக்காகத் தரும் அணி ஆடை பொன் முதலியன. கிளை - சுற்றத்தார். நீத்தவர் - தலைவர். மாசுடம்பு - அழுக்குப் படிந்த என் உடல். மடப்பிடியே : பாங்கியை விளித்தது. கிளையோ, நீத்தவரோ, உடம்போ, யாவர் கொடியார் அறிகிலன். ௫0௯

## 8. பாங்கி வரவு அறிவுறுத்தல்

கருந்தா மரையன்ன கண்கழு நீர்நிறங் காட்டஇங்ஙன்
வருந்தா தொழிமதி வஞ்சிஅன் னாய்நம் வளமனைக்கு
விருந்தாக நந்தமர் வேட்டெதிர் கொள்ளும் வினையுமுற்றி
இருந்தாரை வையங் கடாயின்று நாளைவந் தெய்துவரே.

(உரை) தலைவன் வருவானென்று பாங்கி தலைவிக்கு வற்புறுத்திக் கூறுதல். கருந்தாமரை : கரும்புண்டரீகம் அனைய கண் - கரு. ஒழிமதி - ஒழிவாயாக. தமர் வேட்டு - சுற்றத்தார் விரும்பி. வினையும் - பொருளீட்டும் தொழில். தாரை வையம் கடாய் - குதிரை பூட்டிய தேரைச் செலுத்தி. ௫க0

## 9. வன்பொறை எதிர்தல்

போனார் வருக இருநிதி தேடும் பொருளுமுற்றி
ஆனாத அன்பொடென் ஆவியும் நிற்க அவரகன்ற

காளு வதுவெங் கதிர்தெறும் பாலைக் கனல்கொளுந்தி
வாளுறும் வற்றி மதியும்வெண் ணீறெழும் வன்சுரமே.

(உரை) தலைவன் பிரிந்த பின் ஆற்றியிருந்த தலைவி தனிமையில் வருந்தல். ஆளுத - அமையாத. கான் - காடு. கதிர் தெறும் - சூரிய வெம்பம் கொளுத்துகின்ற. மதி மிக்க குளிர்ச்சியுடையது, அதுவே நீறெழும் என்னத்தக்க கொடிய சுரம், அவர் அகன்ற கான் என்றெண்ணி வருந்து கிருள். நகக

## 10. வற்புறுத்தல்

பண்ணார் பனிமொழிப் பைந்தொடி யாய்வெந்த பாலைவனம்
எண்ணு திருநிதிக் கேகினர் காண்பர் எதிர்ந்தவலின்
கண்ணார் சிறுபுனல் மெய்யுறும் வேட்கை கரந்துகலை
உண்ணு தருணத்தை உண்டது போலநின் றூட்டுவதே.

(உரை) தலைவன் மீண்டு வருவானென்று பாங்கி தலைவிக்கு வற்புறுத்திக் கூறுதல். பாலைவனம்: அதன் வழியே. எண்ணுது - அது தரும் துன்பமெண்ணுது. காண்பர் - அப்பாலையிலே காண்பர். அவலின் கண் - சிறு குளத்தில். சிறு புனல் - கொஞ்ச நீரை. கரந்து - தன் வேட்கையை அடக்கிக்கொண்டு. கலை - ஆண்மான். அருணத்தை - பெண்மானை. கலை உண்ணுமல், உண்டதுபோலக் காட்டி அருணத்தை ஊட்டுவது காண்பர் என்க. பெண் மானிடத்து இங்ஙனம் கலைக்குள்ள பரிவைக் காணும் தலைவன், தன் காதலியை எண்ணித் திரும்பி விடுவான் என்று குறிபபிட்டவாறு ; இது, 'சுனைவாய் சிறுநீரை எய்தாதென் றெண்ணிப், பிணைமான் இனிதுண்ண வேண்டிக் - கலைமாத்தன், கள்ளத்தின் ஊச்சுஞ் சுரமென்பர் காதலர், உள்ளம் படர்ந்த நெறி' என்ற **ஐந்திணை ஐம்பது** (நஅ) செய்யுளைத் தழுவி வந்தது. 'காட்டுள், துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப, பிடியூட்டிப பின் னுண்ணும் களிறெனவும் உரைத்தனரே ;...காட்டுள், இன்னிழல் இன்மையான் வருந்திய மடப்பிணைக்குத், தன் நிழலைக் கொடுத்தளிக் -கும் கலையெனவும் உரைத்தனரே' என்ற **பாலைக்கலி (கக)** காண்க. நகஉ

## 11. பருவங் கண்டு பெருமகள் புலம்பல்

தார்கால மன்றலங் கொன்றையங் கானற் றடஞ்சிறைவன்
கூர்கால நாரை யுடன்குரு காலக் கொழுங்கயற்கண்
நீர்கால ஆடகம் என்னிறங் காலப் பிறங்குமழைக்
கார்காலம் வந்தது வாரார்கொல் இன்னமும் காதலரே.

(உரை) மீண்டு வருவேன் என்று தலைவன் குறிப்பிட்ட கார்காலம் வரக் கண்டு தலைவி புலம்பல். கார்கால மன்றலங் கொன்றை யங்கானல் - கொன்றை மலர்ந்து மாலைபோல் தொங்கி மணங்கமழும் கானல். கூர் கால - கூரிய காலையுடைய. குருகு ஆல - குருகுகள் ஆட. கண்ணீர் கால - கண்ணீர் துளிக்க. ஆடகம் என் நிறம் கால - என்மீது பசலை மீதூர. ஆடகம் - பொன். இவ்வண்ணம் நிகழுமாறு கார்காலம் வந்தது, காதலர் வாரார் கொல் என்க. 'தாரேற வண்டினம் கொன்றையெல் லாமென் தடமுலைமேற், பீரேறப் பீரிற்கண் ணீரேற வாடும் பிணிமுகங் கட், கேரேறத் தொட்டிக் கலைவாழ் சிதம்பர ஈசர் வெற்பிற், காரேறக் கண்டும் நம் மன்பர்பொற் றேர்வரக் கண்டிலமே' - கலைசைக்கோவை உஅ௲. இ. வி. கருரு. ௲க௲

## 12. பாங்கி புலம்பல்

குணங்கெட வற்றிய கொம்புகள் யாவும் குழைத்தமழைக்(கு)
உணங்குவ தின்றென்றொரு கொம்பு.மேலொரு கொம்புவெம்பேய்க்
கணங்கடி கொண்டுல வுங்கங்குல் வாடைக் கனல்கொளுந்தி
அணங்கிடில்வஞ்சியன் னீர்என்சொல்வேன்மன்ன ரானவர்க்கே.

(உரை) குணங் கெட வற்றிய - தங்கள் பசுமை கெட்டு வற்றிப் போன. குழைத்த - தழைத்தன; 'மழை குடக்கேர்பு குழைத்த சிறு கோல்' - நற்றிணை கசுo. வணங்குவது - வாடுவது. ஒரு கொம்புமே: கொம்பு போல்வாளாகிய தலைவி. பேய்க்கணம் - பேய்கள். கடி - குறுந்தடி. அணங்கிடில் - துன்பஞ் செய்தால். மன்னரானவர் - தலைவர். ௲கசு.

## 13. இருளை வம்பென்றல்

வழங்கும் கொடுவரி கண்டெதிர் வேழ மணிவரையின்
முழங்குங் குரலை முகிலென்று கேட்டு மொழிதளரா
அழுங்குங் குயில்கள் மயில்களின் றாலும் அரும்புமுல்லை
பழங்கண் பசலை பரந்தனர் கூறல் பணிமொழியே.

(உரை) இருளை - பாங்கி. வம்பு - பெய்யும் காலமல்லாத காலத்தில் முந்திப் பெய்யும் மழை; வம்பமாரி. இது கார்காலமல்ல என்று கூறுதல். வரி - புலி. முழங்கும் குரல் - புலியைக் கண்டு அஞ்சி முழங்கும் குரல். மொழி தளரா அழுங்கும் குயில்கள் - குயில்கள் மொழி தளர்ந்து கூவும். ஆலும் - மயில்கள் ஆடும்; கார்காலம் என்று மயங்கி. 'மடவ வாழி மஞ்ஞை மாயினம், கால மாரி பெய்தென அதனெதிர், ஆலு மாலின பிடவும் பூத்தன, காரன்று இருளை தீர்கநின் படரே, கழிந்த மாரிக் கொழிந்த பழநீர், புதுநீர் கொளீஇய உகுத்தரும், நொதுமல் வானத்து முழங்குகுரல் கேட்டே' குறுந். உருக. அனர் கூறல் - துயர் கூற வேண்டாம். பணி மொழி: தலைவியை விளித்தது. (பா - ம்) வழங்கும் குயில்கள். ருகரு

## 14. இறைமகள் மறுத்தல்

மருவந் தனத்து மணிமுத்த மாலை வகைவிடுத்துப்
புருவந் திருத்தி மதிநுதல் நீவிப் பொருள்வயிற்போய்ப்
பருவங் குறித்து வருதுமென் றார்சொற் பழுதென்னவோ
தெருவந் தொறுநறும் பூவிலை மாதர் திரிகின்றதே.

(உரை) பாங்கி கூறியதைத் தலைவி மறுததுரைத்தல். விடுத்து - கையுறையாக விடுத்து. பருவம் குறித்து வருதும் - கார் காலத்திலே திரும்பி வருவேன். தெருவம்தொறும் - தெருக்கள்தோறும். பூவிலை மாதர் திரிகின்றதே என்றது, மாதர் பூ விற்கின்றமையால், கார்காலம் வந்துவிட்டது மெய், வம்பமாரி என்ற தோழியின் கூற்றுப் பொருந்தாது என்றபடி; 'சொல்லிய சொல்வழு வாத்தொண்டை வேந்தன் துவரை வெற்பில், புல்லி யருஞ்சுரம் போனவர் வார்த்தையிற் பொய்மையொன் றும், இல்லை எனுங்கொடி யேஅது போக இதுவும் பொய்யோ,

மல்லிகை முல்லை செருந்திவிற் பார்சொலும் வார்த்தைகளே' - கரு
மாணிக்கன் கோவை உசங. ஙகசு

### 15. அவர் தூதாகி வந்தடைந்தது இப்பொழுதெனத் துணைவி சாற்றல்

பருவ மடுத்தது வந்திலர் காதலர் என்றுபைம்பொன்
உருவ மடப்பிடி யேஉயங் கேல்உயங் காதவண்ணம்
பொருபகை செற்றபொற் றேரேறி வேந்தர் பொருள்முடித்து
வருவ துரைப்பமுன் னேவந்த தால்இம் மழைமுகிலே.

(உரை) மேகத்தைக் கண்டு, இது தலைவர் விட்ட தூதாக வந்தது என்று பாங்கி தலைவிக்குக் கூறுதல். தூது விடுதற்குரிய பொருள்களுள் மேகமும் ஒன்று. அடுத்தது - வந்தது. பிடியே - பிடியன்னவள். உயங்கேல் - வருந்தேல். வேந்தர் - தலைவர். உரைப்ப - உரைக்கும் பொருட்டு. 'கொடுங் குழாய், இன்னே வருவர் நமரென் றெழில்வானம், மின்னும் அவர்தூ துரைத்து' கார்நாற்பது உ. இ. வி. கருகு. (பா - ம்) என்றும் பைம்பொன்; தேர் வெற்றி வேந்தர்; வந்ததாலிந்த மைம் முகிலே. ஙகள

### 16. தலைமகள் ஆற்றல்

கருங்கால வெண்குரு குங்கண்டல் வாய்விட அஞ்சுங்கொண்ட
பொருங்கா லழிந்து புலம்பல்நெஞ் சேதண் புறவமயில் [ல்
ஒருங்கால மேகம் இடித்துறை கால ஒலிகழலார்
வருங்காலம் வந்தது போங்காலம் இல்லைநம் மன்னுயிர்க்கே.

(உரை) கால - காலுடைய. கண்டல் - தாழை. புறவம் - முல்லை. ஒருங்கு ஆல - ஒருங்கே ஆட. உறை கால - நீர்த்துளி சிந்த. இ. வி. கருகு. (பா - ம்) புலம்பல் நெஞ்சே; உறை காலம்; அறை கழலார்; வந்ததும். ஙகஅ

### 17. தலைவன் புலம்பல்

விழிகுழி யும்படி தேர்வழி பார்த்தணை வீழ்ந்துவண்டு
கொழுதிமி ருங்குழல் சோரக் கிடந்து குடங்கையின்மேல்

ஒழுகியஅஞ்சனவெள்ளத் துணங்கும் அணங்கைமுன்சென்(று)
எழுகெனும் நெஞ்சமென் னேஅவ ரோவெனி லென்சொல்லுமே.

(உரை) பொருள் வயிற் பிரிந்த தலைவன் சென்ற இடத்தில் தலைவியை நினைந்து பிரிவாற்றாது புலம்பல். பார்த்து : பார்த்தவள், தலைவி. கொழு திமிரும் - நெய் பூசிய. அஞ்சனம் - மை. ஒழுகிய அஞ்சன மென்றது, தலைவனைக் காணாது தலைவி கண்ணீர் விடுதலால், அஞ்சனம் கரைந்தொழுகிய மை. குடங்கையின்மேல் ஒழுகிய அஞ்சனம் : 'நூனவின்ற பாகதேர் நொவ்விதாச் சென்றீக, தேனவின்ற கானத் தெழில் நோக்கித் - தானவின்ற, கற்புத்தாள் வீழ்த்துக் கவுண்மிசைக் கையூன்றி, நிற்பாள் நிலையுணர்கம் யாம்' - ஐந். ஐம். க0. அணங்கை - இந்நிலையிலுள்ள தலைவியை. எழுக எனும் - எழுந்து சென்று அடைவோம் என்னும். இ. வி. கருரு, அவனவட் புலம்பற்கு மேற்கோள்.*
(பா - ம்) வழி குழியும்படி ; அவர் யாரெனில். ௩கக

## 18. பாகற்கு உரைத்தல்

மொய்யா டகமுடித் தேர்வல வாமுன் மொழிந்தவெல்லாம்
பொய்யான தென்று புலந்துரை யாடப் பொருள்விரும்பி
மையார் குழலியை வாழ்வித்த பாவி மனத்தைஇன்றுன்
கையாக வும்பரிக் காலா கவும்அயன் கண்டிலனே.

(உரை) பொருள் வயிற் பிரிநத தலைவன் மீண்டு தேரூர்ந்து வரும்போது தேர்பபாகனுக்குக் கூறுதல். ஆடக முடி - பொன் முடி. தேர் வலவன் - பாகன். முன் மொழிந்தது, பிரியேன் என்றது முதலாயின வெல்லாம். மையார் குழலி - தலைவி. வாழ்வித்த பாவி - நான் (தலைவன்) என்றவாறு. மனத்தை - என் மனத்தை ; மனம் மிக விரைந்து தலைவி பாற் செல்ல எண்ணுகிறதென்றவாறு. உன் கையாகவும் பரிக் காலாகவும் கண்டிலனே என்றது, பாகன் கை தலைவன் மனம்போல் இருந்தால்,

*நம்பியகப்பொருள் உரை (கஎ0) மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பில், தஞ்சைவாணன் கோவைச் செய்யுள் காணப்பெறவில்லை என்ற குறிப்போடு இச்செய்யுள் இத்துறைக்கு மேற்கோளாகத் தரப்பட்டுள்ளது.

குதிரையை விரைவாகத் தூண்டும்; குதிரையின் கால் தலைவன் மனம் போல் இருந்தால், விரைவாக ஓடும்; தலைவியை விரைவிலே அடையலாம் என்றெண்ணியவாறு. பரி - குதிரை. அயன் - பிரமன். 'வலவா அயனென் மனம்போற் பரிக்கால் வகுத்திலனே' - ஆனந்த. உ௬ந. இ. வி. கஙரு, மீண்டு வருகின்ற காலத்துத் தலைவன் பாகனொடு சொல்லற்கு மேற்கோள். (பா - ம்) புலந்துரை யாடல். ந௨0

## 19. முல்லையை நோக்கிக் கூறல்

தேரிணங் குந்திரு அல்குல்நல் லாள்சிந்தை சோர்வதற்குக்
காரணம் கொண்டல் கறுத்ததன் றேமுன் சிவந்தநெற்றி
வாரணம் கால்கொண்டு மால்கொண்ட பேடைக்கு மண்கிளைத்து
பாரணங் காட்டி விடநின்று காணும் பசும்புறவே. [ப்

(உரை) தலைவன் கூற்று. சிந்தை சோர்வதற்கு - தலைவி வருந்துவதற்கு. கொண்டல் கறுத்தது, கார்காலந் தோன்றியமை. சிவந்த நெற்றி வாரணம் - சிவந்த கொண்டையுடைய சேவல். மண் கிளைத்துப் பாரணம் காட்டிவிட - சேவல் தன் காலினாலே மண்ணைக் கிளறி, பேடை உண்பதற்கேற்ற தீனியைக் காட்டிவிட. பசும் புறவு - பசிய முல்லை நிலத்தில்; காட்டிவிட, நல்லாள் காணும் பசும் புறவு, சோர்வதற்குக் காரணம் என்க. புறவிலே, சேவல் தன் காதற் பெடைக்குக் காட்டும் பரிவை இவள் கண்டு, தன்னை நான் பிரிந்தமை எண்ணிச் சோர்கின்றாள் என்றவாறு. (பா - ம்) சேர்வதற்கு. ந௨௧

## 20. மேகத்தொடு சொல்லல்

கிளைத்துக்கிளைதொதென்னைக் கேட்கும் தொறுங்கலுழ் கெண்டையுமுன்
வளைத்துக் கிடந்த வரிமணற் கூடலும் வண்ணமெல்லாம்
விளைத்துக் கிடந்த பசலையு மாயுள்ளம் விம்மிவிம்மி
இளைத்துக் கிடந்தவட் கென்சொல்ல மேகங்கள் முன்செல்வதே.

(உரை) தலைவன் கூற்று. கலுழ் கெண்டை - கலங்குகின்ற கண். வளைத்துக் கிடந்த வரி மணற் கூடல்: தலைவி என் வரவை அறியுமாறு இழைத்த கூடல் வட்டம்; உ௬ரு. வண்ணம் - உடல் அழகு. இளைத்துக்

கிடந்தவள், தலைவி. 'வேண்டும் பொருளைத் தரும்பொருட் போய்முற்றி மீண்டஎன்தேர், தூண்டும் பரிமுன் துணைமுகில் காள்சென்று கொல்லும்......ஈண்டும் பசலைமெய் போர்த்திருப் பார்தமக் கென்வரவே' தஞ்சை. உஎரு. இ. வி. கருரு. (பா - ம்) கிளைத்துக் கிடந்தெனை. ௩உஉ

## 21. தலைமகன் வரவறிவுறுத்தல்

மருண்முற் றியகளி வண்டமர் காந்தள் மலர்ந்ததுகண்(டு)
இருண்முற் றியகுழ லேந்திழை யாய்இளை யேல்இளையேல்
பொருண்முற் றிவந்து புகுந்தனர் போலுநம் பொன்னகர்வாய்
அருண்முற் றியமனத் தன்பர்தம் தேர்மணி ஆர்க்கின்றதே.

(உரை) தலைவன் தேரின் மணியொலி கேட்டுப் பாங்கி அவன் வரவு தலைவிக்குரைத்தல். காந்தள் மலர்ந்தது கார்கால வரவைக் குறிக்கிறது. அது கண்டு இளையேல் என்றது, கார்காலப் பருவத்தில் வர வேண்டிய தலைவன் வரவில்லையே என்றெண்ணி வருந்தாதே என்றபடி. அன்பர் - தலைவன். தன் வரவை யுணர்த்த வேண்டித் தலைவன் வலம்புரிச் சங்கை ஊதினன் என்று கூறும் துறைகளும் பிற நூல்களில் உள்ளன. ௩உ௩

## 22. நினைந்தமை வினுதல்

கடந்தந்த வெங்கைக் களிற்றுவெங் கானங் கடந்துசென்ற
தடந்தந்த தாமரைத் தண்புனல் நாட்டுத் தடங்கடலின்
விடந்தந் தமுதம் தருமட நோக்கிவள் மேவமனத்
திடந்தந் தறிவதுண் டோஒரு நாள்நம் இறையவனே.

(உரை) பிரிந்திருந்த காலத்தில் தலைவியை நினைத்ததுண்டா என்று பாங்கி கேட்டல். வெம் கானம் - கொடிய பாலை. தடம் - தடாகம். விடம் தந்து அமுதந் தரும் நோக்கு: உஉ. மேவ - வந்து கூட. 'கண்ணுட்கு, உள்ளக் கமலம் இடந் தந்ததோ ஒரு நாளண்ணலே' - ஆனந்த. உகூஎ. இ. வி கருரு. (பா - ம்) தடங்கடனீர்; ஒருநாள் எம். ௩உச

## 23. தோழிக்கு உற்றது உரைத்தல்

கோவையை வென்றசெவ் வாய்க்கொடி யேபொருள் கூட்டவென்று
தேவையை மேற்கொண்டு தீவினை யேன்சென்ற சென்றஇடம்

யாவையும் உங்கள் இளமரக் காவும் இழைத்தகுன்றும்
பாவையும் நீயும் பரிமளச் சோலையும் பண்ணையுமே.

(உரை) தான் தலைவியை நினைத்தமை தலைவன் கூறுதல். கொடியே: பாங்கியை விளித்தது. தேவையை - ஒரு காரியத்தை. சென்ற இடம் யாவையும் இவையாகத் தோன்றின என்றவாறு. இ. வி. கருரு. (பா - ம்) கூட்டவென்னுங். நஉரு

## 24. தலைவியொடு கூறல்

விழிகாட்டும் நவ்வி மயிலியல் காட்டும் மிழற்றுங்கிள்ளை
மொழிகாட்டும் முல்லை முகிழ்நகை காட்டும் முதுநதியின்
சுழிகாட்டும் உந்தி துணைமுலை காட்டும் பிணைஇளநீர்
கழிகாட்டி னுந்தண் கழனிநன் னாட்டி னுங் காரிகையே.

(உரை) தான் கண்டவை யாவும் தலைவியை நினைவூட்டியமை தலைவன் கூறுதல். இயல் - சாயல். கழி காட்டினும் தண் கழனி நாட்டினும் - தான் சென்ற முல்லையிலும் மருதத்திலும்; நவ்வி முதலியன இவ்விரண்டுக்குமுரியவை. (பா - ம்) தன் கழனி. நஉசு

## 25. ஆற்றுவித்திருந்தமை தலைவன் வினாதல்

சிமையார் தடவரைச் சேணெறிச் சென்றருஞ் செம்பொருளு
உமையான் ஒழிந்தங் குறைந்தஅந் நாளில் உடனிருந்தும் [க்(கு)
இமையா விழிக்கின்ற இத்துணைப் போதினும் என்னைஅன்றி
அமையா அணங்கினை எவ்வாறு நீதணி ஆற்றினையே.

(உரை) தலைவியை எவ்வாறு துயர் தணித்து வைத்திருந்தாயென்று தலைவன் பாங்கியைக் கேட்டல். இத்துணைப் போதினும் என்றது இமைப்பொழுதும் என்னைப் பிரிய இசையாத என்றபடி. அணங்கினை - தலைவியை. நீ - பாங்கி. இ. வி. கருரு. (பா - ம்) ஆற்றி வைத்திருந் தமை, ஆற்றுவித்திருந்த அருமை; சிமையாடக வரை; செய்பொரு ளுக்கு. நஉஎ

### 26. ஆற்றுவித்திருந்தமை பாங்கி கூறல்

மதிகாட் டியநுதல் வல்லிசிந் தாகுல மாற்றியதுன்
பதிகாட் டியுமுன் பனிவரை காட்டியும் பாய்திரைநீர்
நதிகாட்டி யும்புது நல்விருந் தாகி நடந்ததிண்தேர்க்
கதிகாட் டியுமுன் கலந்தசந் தாடவி காட்டியுமே.

(உரை) சிந்தாகுலம் - துயரம. பதி - ஊர். தேர்க்கதி - தேரின் செலவு. முன் கலந்த சந்தாடவி - முன்கூடிய சந்தனச் சோலை. இ. வி. ௧௫௫. (பா - ம்) ஆற்றி வைத்திருந்தமை, ஆற்றுவித்திருந்த அருமை. ௩௨௮

கைக்கிளை தொடங்கி வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் ஈறாக, களவியல் எனபபடும்; களவொழுக்கமே இவற்றுட் பயின்று வருதலால். அடுத்த கிளவியாகிய **வரைவு மலிவு** முதல் **வரைவியல்** எனப்படும். வரைவியலாவது, கற்பிற்கு நிமித்தமாகிய வரைவுக்கான முயற்சியைக் கூறும் இயல்.

## ௧௫. வரைவு மலிவு

வரைவு மலிவாவது, மணத்துக்கான முயற்சி மிகுதியாக நடைபெறுதல்.

### 1. வரைவு மறுத்தல்

உருவும் திருவும் குலனுமொப் பீர்உயர் வீறொழிய
மருவும் புணர்வும் மறுக்கும் பழுதில்லை வாணுதலும்
பருவம் பெதும்பை நிறைந்திலள் பண்பிற் பசுங்கிளியும்
பொருவும் புணர்வரி தோரையும் நாளும் பொருந்தினுமே.

(உரை) தலைவியை மணஞ்செய்து கொடுக்க, பெற்றோர் மறுத்தல். பெதும்பை நிறைந்திலள் என்றது, இன்னும் இவள் இளம்பெண் என்ற படி. பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம்பெண் என்ற எழு பருவங்களில், பெதும்பை இரண்டாவது பருவம்; வயது அ முதல் கக வரை. ௩௨௯

## 2. மறுத்துழி இரங்கல்

சான்றோர் வரவும் இருநிதி யாவும் தரவுநம்மை
ஈன்றோர் மறுத்தனர் என்பது கேட்கில் எமக்கியையும்
தேன்தோய் மலர்த்தழை தந்துகொல் யானைச் சினமுஞ்செற்ற
வான்தோய் வளமலை நாடரென் னுவர்கொல் வாணுதலே.

(உரை) மறுத்தமை யறிந்து தலைவி இரங்கல். சான்றோர் - தலைவன் பெண்கேட்டுவிட்ட பெரியோர். இருநிதி - பொருள்; பரிசம். மறுத்தனர் - மணஞ் செய்விக்க மறுத்தனர். இயையும் - பொருந்திய. தழை தந்து : ௧௪௭. கொல்யானைச் சினமும் சென்ற என்றது, தலைவன் தன்னைக் களிற்றினிடமிருந்து தப்புவித்தமையைக் கூறியது; களிறுதரு புணர்ச்சி (௫௭). நாடர் - தலைவன். என்னுவர் கொல் - எப்படி வருந்துவான் என்றவாறு. ௫௫0

## 3. காதலன் முலைவிலை கொடுத்தமை பாங்கி காதலிக்கு உணர்த்தல்

உடுக்கும் தழைகொண்டு வந்தொரு நாளும்மை ஒண்புனத்தில்
கெடுக்குங் கருங்கலை கேட்டவர் தாங்கிளி யேவெளியே
அடுக்கும் தமருநம் அன்னையும் ஊரும் அறியஇன்றே
கொடுக்கும் பரிசமெல் லாங்கொடுத் தார்நின் குவிமுலைக்கே.

(உரை) தலைவன் பரிசம் விடுத்தமையைப் பாங்கி தலைவிக்குரைத்தல். கெடுக்கும் கருங்கலை கேட்டவர் - மான் வினவி வந்தவர்; ௮௫. கிளியே : விளி. பரிசம் கொடுத்தார் என்றது, வரைதல் வேண்டி. ௫௫௧

## 4. பாங்கி தமர் வரைவு எதிர்ந்தமை தலைவிக்கு உணர்த்தல்

யாழிற் பொலிதரும் இன்சொல்நல் லாய்எவ ரேசெயினும்
ஊழிற் பெருவலி என்றுமின் றுல்இரு கோட்டொருகைச்
சூழிக் களிறு தொலைத்தவர்க் கேநின் முலைத்துணைக்கே
ஆழிப் புவனம் அறியநம் கேளிர் அடுத்தனரே.

(உரை) தலைவியின் சுற்றத்தார், மணத்துக்கிசைந்தமைக்கு அடையாளமாக, அப்பரிசத்தை ஏற்றுக்கொண்டார்களென்று பாங்கி தலைவிக்

குரைத்தல். நல்லாய் : விளி. ஊழிற் பெருவலி : 'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினும் தான்முந் துறும்' - குறள் ௩௮௦. இன்றால் - இல்லை. கோடு - கொம்பு. கை - துதிக்கை. சூழி - முக படாம். தொலைத்தவர்க்கே - தொலைத்த உன் காதலர்க்கே. ஆழிப் புவனம் - கடல் சூழ்ந்த உலகு. ௩௩௨

## 5. தலைமகள் உவகை ஆற்றாது உளத்தொடு கிளத்தல்

இன்னா நெறியும் குறியிடை யீடும் இலங்கிழையார்
பின்னாள் இழைக்கும் பெருவெறி யாட்டும் பிறர்வரைவும்
நின்னா குலமும் தவிரநெஞ் சேஇன்று நின்னுயிரை
அன்னார் மணமுர சார்க்கின்ற தால்நம் அகநகர்க்கே.

(உரை) மகிழ்ச்சியை அடக்க இயலாது தலைவி கூறுதல். இன்னா நெறி - துன்ப மிக்க வழி ; உ௦௬. குறியிடையீடு - பகற்குறி யிடையீடு, இரவுக்குறி யிடையீடு என்பன. வெறியாட்டு : உ௫௪. பிறர் வரைவு : உ௬௩. ஆகுலம் - துயரம். உயிரை யன்னார் - தலைவனுடைய. அக நகரில் மணமுரசார்க்கின்றது மணந்தைக் குறித்து. 'வருந்து நெறியும் குறியிடை யீடும் வரையயரையர், பொருந்த எடுத்த பெருவெறி யாட்டும் புகுந்துபிறர், திருந்தும் வரைவுந தவிரநெஞ் சேரங் கன் சீர்வரைவாய், இருந்தன்பு கூர்பிரம் பூர்முற்றும் மங்கலம் எய்தியதே' என ஆனந்தரங்கன் கோவைச் செய்யுள் (உஎ௩) இப்பாடலை அடியொற்றி வந்தது. இ. வி. க௫௯. (பா - ம்) இழைத்த ; மணி முரசு ; அருநகர்க்கே. ௩௩௩

## 6. தலைவனைப் பாங்கி வாழ்த்தல்

கொண்டல் வெளுக்கும் கருங்குழ லாள்மனக் கோட்டமுநின்
வண்டணி பைந்தழை வாட்டமும் கண்டகண் மாலுமந்த
விண்டலர் தாமரைத் தேவியும் போலிங்கு மேவியது
கண்டன மேஇறை வாஇது வோஇன்னம் காண்பதுவே.

(உரை) கொண்டல் - கருமேகம். வெளுக்கும், குழலின் கருமை கண்டபோது. மனக்கோட்டம் - துன்பம். மால் - திருமால். விண்டு

அலர் தாமரைத் தேவி - இதழ் விரிந்த தாமரையிலுள்ள இலக்குமி. 'கைப்போது கொண்ட தலைவாட்டம் நீங்கக் கவலையற, இப்போது மாலும் திருவுமொப் பாக இலங்குகவே' - ஆனந்த. உஎச. இ. வி. கருக. (பா - ம்) போலுமிங்ஙன். ந௩ச

## 7. தலைவி மணம்பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல்

அணங்கர வல்குல் அரிவையர் ஆரத் தனமருப்புச்
சுணங்கலர் வேங்கைத் துணர்மலை நாட துளங்குமின்போல்
வணங்கிடை மாதுன் மணம்பொருட் டாக வளையவிழ்பூங்
கணங்கமழ் சாரல் அணங்கைப் பராநிலை கண்டருளே.

(உரை) தன் மணத்தின் பொருட்டாகத் தலைவி துர்க்காதேவியை வழிபடுவதைப் பாங்கி தலைவனுக்குக் காட்டுதல்; அணங்கு - துர்க்கா தேவி. ருக்குமணி தேவி கண்ணனைத் தான் கணவனாக அடைதல் வேண்டித் துர்க்கையை வழிபட்ட செய்தியை பாகவதம் கூறும். அரிவையர் - பெண்கள். தன மருபபு - கொம்பையொத்த தனம். சுணங்கு - பசலை. அலர்வேங்கைத் துணர் மலைநாட - அப்பசலை நிற மான பொன்னிறங்கொண்ட பூவுடைய வேங்கையுள்ள மலை நாடனே; துணர் - பூங்கொத்து. வணங்கு இடை - துவளும் இடை. பராநிலை - பரவும் நிலை; அதாவது வழிபடுதலை. 'நின்பொருட் டணங்கைப், பர விப் பரவிநின் றேவரம் வேண்டுதல் பார்த்தருளே' - தஞ்சை. உஅகூ. இ. வி. கருக. (பா - ம்) தொடைமலை. ந௩ரு

## 8. கண்டோன் மகிழ்ச்சி

பாணுர் சுரும்பும் விரும்புதண் சாரல் பணிஅருவிச்
சேணுர் சிலம்பில் உறையும் கடவுளைத் தேமலர்தூய்
வாணுடி கண்ணி மணம்பொருட் டாக வழுத்துமன்பு
காணுய் மடநெஞ்ச மேவஞ்ச மோஅவள் காதன்மையே.

(உரை) தலைவி பாரா நிலை கண்ட தலைவன் மகிழ்ந்து தன் நெஞ்சுக்குக் கூறுதல். பாணூர் சுரும்பு - பாடுகின்ற வண்டு. தூய் - தூவி. வாள் நாடு கண்ணி - வாள் போன்ற ஒளிமிக்க கண்ணையுடைய தலைவி. வழுத்தும் - வணங்கும். காதன்மை - காதலுடைமை. இ. வி. கருகூ. (பா - ம்) சுரும்பு ; வருந்துமன்பு ; நங்கள் காதன்மையே. ௨௨௬

## கசு. அறத்தொடு நிற்றல்

அறத்தொடு நிற்றல் - களவொழுக்கத்தை வெளிப்படுத்தி, அறவழியிலே நிற்றல், அதாவது உண்மை கூறுதல். "'அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே' என்பது : அறமென்பது தக்கது ; தக்கதனைச் சொல்லி நிற்றல் தோழிக்கும் உரித்தென்றவாறு. அல்லதூஉம், பெண்டிர்க்கு அறமென்பது கற்பு, கற்பின் தலைநிற்றல் என்பதூஉமாம்" - இறையனார் அகப்பொருள் சூ. உக உரை.

### 1. கையறு தோழி கண்ணீர் துடைத்தல்

வாரண மாவின் மருப்பும் பொருப்பும் மலைந்தகொங்கை
பூரண மாகும் பொலங்கொடி யேபொற்பு நீஅழியும்
காரண மாவொன்றும் கண்டில மால்கண் கலுழ்வதென்னே
தோரண மாமறு கிற்பலர் கூண்டலர் தூற்றுதற்கே.

(உரை) தலைவியை ஆற்றிச் செயலற்ற தோழி அவள் கண்ணீரைத் துடைத்தல். வாரணமாவின் மருப்பு - யானைக் கொம்பு. பொருப்பு - மலை. இரண்டும் கொங்கைக் குவமை. பொலங்கொடி - பொற்கொடி போன்றவள் ; பொற்பு - அழகு. கலுழ்வது - கலங்குவது. தோரணமா மறுகில் - தோரணங் கட்டிய பெரிய வீதியில். கூண்டு - கூடி. இ. வி. கசுக. (பா - ம்) காரணமாவொன்று ; கண்டலர். ௨௨௭

### 2. தலைமகள் கலுழ்தற் காரணம் கூறல்

பண்டு நமக்குப் பரிந்துமை ஊட்டிய பங்கயக்கை
ஒண்டொடி சோர உயங்குதல் நோக்கி உயங்குமது

தண்டலை தன்னில் தலைப்பட்ட நாளில் தலைவனைநாம்
கண்டது கொண்டல்ல வோஎன்று போலும் கலுழ்கின்றதே.

(உரை) தலைவி தான் மனங் கலங்கிக் கண்ணீர் விட்ட காரணத்தைப் பாங்கிக்குக் கூறுதல். பண்டு - முன்னமே. மையூட்டிய பங்கயக்கை ஒண்டொடி, பாங்கி. அவள் சோர, உயங்குதல் நோக்கி உயங்குமது; கண்டது கொண்டல்லவோ என்று கலுழ்கின்றது போலும் என்க. உயங்குதல் - பாங்கி வருந்தல். உயங்குமது - தான் (தலைவி) வருந்துவது. இ. வி. சுகூக. (பா - ம்) தமக்கு; தயங்குமது; இன்று போலும் கலுழ்கின்றது. ௩௩அ

## 3. தலைவன் தெய்வம் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை கூறல்

கழியார் கருங்கடற் றெய்வமுன் காட்டிக் கலந்தவன்று
மொழியா தனவில்லை முன்னுற வாய்முன் மொழிந்தவண்ணம்
ஒழியார் நமைஒரு நாளுமென் றேகொண்ட துள்ளமுமென்
விழியா னதுகலுழ் வானறி யேனின்று மெல்லியலே.

(உரை) தலைவன தெய்வங் காட்டிச் சூளுறவு செய்து தெளியச் செய்ய, தலைவி அதனை மெய்யென் றெண்ணித் தெளிந்தமையைப் பாங்கிக்குக் கூறுதல். கடற் றெய்வம் - வருணன். மொழியாதன - செய்யாத சூளுறவு. ஒழியார் நமை - என்னைவிட்டுப் பிரிய மாட்டார். "இனி, அஞ்சல் உனைப்பிரி யேனெனத் தேவின்முன் ஞ்ங்குரைத்தல், வஞ்சகமென்பதறியேன்' - கோவை. உகக. இ. வி. சுகூக. (பா - ம்) தெய்வமும்; விழியானதுந் துயிலா மெலிவேன் இன்று; என்று. ௩௩௯

## 4. இறைவி தலைவன் இகந்தமை இயம்பல்

என்னுவி அன்னவர் சொல்லிய வார்த்தைக் கிடையினின்ற(து)
அந்நாள் அவர்நெஞ்சும் என்னெஞ்சு மேஅன்றி வேறுமந்தண்
பொன்னார் நறுமலர்ப் புன்னையங் கானற் புளினமுண்டு
என்னு வதற்கில்லை யேசொல்லு மாறு நுவெணின்றே.

(உரை) தலைவன் சொல் தவறியமை தலைவி கூறுதல். புளினம் - மணற் குன்று. நல் நாவதற்கு - நாவுக்கு; நா நடுவு நின்று சான்று சொல்லுமாறில்லையே என்க. 'யாரும் இல்லைத் தானே கள்வன், தானது பொய்ப் பின் யானெவன் செய்கோ......குருகும் உண்டுதாம் மணந்த ஞான்றே' - குறுந். உரு. 'பணையெழில் மென்தோள் அணைஇய அந்நாள், பிழையா வஞ்சினம் செய்த, கள்வனும் கடவனும் புணைவனும் தானே' - குறுந். ருகஅ. ருசO

## 5. தலைவி இயற்பட மொழிதல்

மைமக்கண் குவளை மலரின்முன் னேநிற்பர் வந்தரும்பில்
புக்கென் தனிநெஞ்சும் புல்லிவி டார்பொறி வாளரவின்
பைக்கொன் றியஅல்கு லாயின்று யான்செய் தபாவமென்னே
கைக்கும் தனத்துக்கு மேயதி தூரத்தர் காதலரே.

(உரை) தலைவன் நல்லியல்புடையவனென்பது தோன்றத் தலைவி கூறுதல். குவளை மலரின் : கண் திறந்திருப்பின்; அதாவது நனவில் எதிர் தோன்றுவர். அரும்பில் : இதழ் மூடிவிடில்; அதாவது கனவில் நெஞ்சம் புகுவர். புல்லி விடார் : தழுவிப் பிரியார். அரவின் பைக்கு ஒன்றிய - பாம்பின் படத்தையொத்த. கைக்கும் தனத்துக்கும் - இன்று நான் தழுவுவதற்கு. தனம் : முலை, பொருள். அதி தூரத்தர் - அணுக முடியாதிருக்கிறார். கண்ணும் நெஞ்சும் காணப் புல்லியவர், கைக்கும் தனத்துக்கும் தூரத்தர் என்றது நயம். (பா - ம்) கைக்கும் துகிலுக்கும். ருசக

## 6. பாங்கி இயல் பழித்து உரைத்தல்

கையால் தழுவின தல்லாற் புணர்ந்து கலந்தஇன்பம்
மையால் சிறந்த மதர்விழி யாய்மன மேநுகர
மெய்யால் தலைவரும் மேவிவிட் டார்அந்த வேட்கைநெஞ்சில்
உய்யாப் பெருவிழு மங்கொண்டு நீயென் உயங்குவதே.

(உரை) தலைவன் இயல்பைப பாங்கி பழித்துரைத்தல். மையால் சிறந்த வழி - மையணிந்த விழி. மதர் - செழித்த. கையால் தழுவிய இன்பத்தை மனமே நுகர மேவிவிட்டார்; வந்து மீண்டும் கூடாமையால்,

அவ்வின்பத்தை இப்போது மனத்தால் மட்டுமே எண்ணிப் பார்க்கலாம். அந்த வேட்கை - கலந்த இன்பம். விழுமம் - துன்பம். உயங்குவது - வருந்துவது. ௩௪௨

## 7. தெய்வம் பொறைகொளச் செல்குவம் என்றல்

மணங்கே தகைதரும் வண்டலந் தண்டுறை வநதென்றன்னை
உணங்கே லுயிரென் றுரைத்தவர் தாமொரு நாளுமென்கண்
குணங்கே வலமலர் தெய்வம் தொழற்குக் குறுகுதுமென்
அணங்கே அணங்கல் அணங்கிலென் ஆவி அணங்குறுமே.

(உரை) தெய்வம் குறித்துச் செய்த சத்தியத்தைத் தலைவன தவறியதைத் தெய்வம் பொறுக்கும்படி வேண்டிக் கொள்வோமென்று தலைவி பாங்கிக்குக் கூறுதல். கேதகை மணந்தரும் துறை என்க. என்றன்னை - என்னை. என்கண் குணங் கேவல மலர் என்றது, கேவலமாக நடந்துகொள்ளமாட்டார் என்றவாறு. குறுகுதும் - செல்வோமாக. அணங்கே - தோழியை விளித்தது. அணங்கல் - வருந்தாதே. ஆவி அணங்குறும் - உயிர் துன்ப மடையும். 'என்னதா உம், அணங்கல் ஓம்புமதி வாழிய நீ எனக், கணங்கெழு கடவுட் குயர் பலி தூஉய்ப், பாவினம் வருகஞ் சென்மோ தோழி' - நற்றிணை ௩௫௮. ௩௪௩

## 8. இல்வயிற் செறித்தமை இயம்பல்

கொன்னே வெகுண்டு மணிவண்ட லாடக் கொடிமருங்குற்
பொன்னே இனிப்புறம் போகலென் றாளன்னை பூந்தொடிக்கை
மின்னே பசந்தஎன் மேனியும் பார்த்துள்ளம் வெய்துயிர்த்தாள்
என்னே விளைந்ததென் னேஅறி யாரன்பர் இங்கொன்றுமே.

(உரை) தான் புறத்தே செல்லாதபடி தன்னைத் தாய் வீட்டிலே செறித்து வைத்தமை தலைவி பாங்கிக்குக் கூறுதல். கொன்னே - வீணே. ஆட, இனிபபுறம் போகல் என்றாள் அன்னை. பொன்னே: தலைவியை அன்னை விளிததது. போகல் - போகாதே. மின்னே - பாங்கியைத் தலைவி விளித்தது. தலைவன் இங்கு விளைந்ததொன்றும் அறியான் என்று இரங்கியவாறு. இ. வி. கருக. (பா - ம்) ஈங்கொன்றுமே. ௩௪௪

## 9. செவிலி கனைஇருள் அவன்வரக் கண்டமை கூறல்

**ஆ**யின் றெனக்கு மணிமுன் றில் வாய்நென்னல் அல்லிஎல்லி
வாயொன்று தேனுமிழ் மாதவிப் பந்தரில் வார்கழற்கால்
சேயொன்றி நின்ற திறமறி யாமல் செறிஇருட்கண்
பேயொன்று கண்டஞ்சி னேனென்று கூறினள் பெய்வளையே.

(**உரை**) இருளிலே தலைவன் வருவதைச் செவிலி கண்டுவிட்டா ளென்று பாங்கி தலைவிக்குக் கூறுதல். ஆய் - செவிலி. கனையிருள் - மிக்க இருள். நென்னல் - நேற்று. எல்லிவாய் - இரவிலே. வார்கழற் கால் சேய் என்றது தலைவனை. பெய்வளை என்றது தலைவியைப் பாங்கி விளித்தது. இருளில் தலைவனைப பேயென்று அஞ்சியதாகச் செவிலி கூறினாள் என்று பாங்கி கூறுகிறாள். இ. வி. கசுக. (பா - ம்) மனை முன்றில்வாய்; அல்லியல்லி. ௩௪௫

## 10. கட்டுவிச்சியை வினுதல்

**வி**ழியும் சிவந்து மொழியும் தளர்வுற்று மெய்புங்கைத்துக்
கழியும் படருறு கண்ணிக்கு வந்துமுன் கண்டறியாப்
பழிவந் தடுத்த தறிகின்றி லேன்அரும் பாவம்செய்தேன்
மொழிஇன்று நின்று குறத்தியம் மேநெல் முறத்திலிட்டே.

(உரை) தலைவியின் வேறுபாட்டை நோக்கிய செவிலி, இது எத னால் ஆயிற்று என்று தெரிதற்கு வேலனைக்கொண்டு வெறியாடச்செய்து கழங்கு பார்த்தலும், கட்டுவிச்சியை அழைத்துக் குறி கேட்டலும் உண்டு; 'கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும், ஒட்டிய திறத் தாற் செய்திக் கண்ணும்' என்பது **தொல்காப்பியம்** (பொருள். ககந). இவற்றுள், கட்டுவிச்சியை அழைத்துக் குறிகேட்டல் (= கட்டு) என்பதே இத்துறை. கட்டுவிச்சி - குறத்தி. நெல் முறத்திலிடவும், அதைக்கொண்டு அவள் குறியறிந்து சொல்வாள். இட்ட நெல்லானது பிறர் எண்ணிய எண்ணத்துக்கேற்ப வடிவுகொண்டு தோன்றி அக்குறத்திக்குச் சொல்ல, அவள் தான் அதை உணர்ந்து கேட்டோருக்குச் சொல்வாளாம்; 'விறற் சேய் கடவும், மயிலிதன் றேகொடி வாரணங் காண்கவின் சூர்தடிந்த,

அயலிதன் றேயிதன் றேநெல்லிற் ரோன்றும் அவன்வடிவே' என்ற **திருக்கோவையார்** (உஅரு) காண்க.

படர்உறு கண்ணி - துன்புறுகின்ற தலைவி. அரும்பாவம் செய்தவ ளாகிய யான், பழிவந்தடுத்தது அறிகின்றிலேன் ; குறத்தியம்மே, இன்று நெல்முறத்திலிட்டு மொழிவாயாக ; இது செவிலி கூற்று.

கட்டுவிச்சி குறிகூறும் முறைமையை, 'அது கண்டு மற்றாங்கே, ஆரானும் மூதறியும் அம்மனைமார் சொல்லுவார், பாரோர் சொலப்படும் கட்டுப் படுத்திரேல், ஆரானும் பொய்ப்படுவன் என்றார் அதுகேட்டுக், காரார் குழற்கொண்டைக் கட்டுவிச்சி கட்டேறிச், சீரார் சுளகிற் சில நெல் பிடித்தெறியா, வேரா விதிர்விதிரா மெய்சிலிராக் கைம்மோவாப், பேரா யிரமுடையான் என்றாள் பெயர்த்தேயும், காரார் திருமேனி காட்டி னாள்' என்று திருமங்கையாழ்வார் அருளிய **சிறிய திருமடலில்** காண லாம். ருசசு

## 11. கட்டுரை கூறல்

**ப**ண்பட்ட சொல்லி பணைபட்ட பன்னிரு கைபடைத்தோன்
கண்பட்ட தின்றென் கழங்கினும் பட்டது கைம்முறத்தில்
எண்பட்ட நெல்லுழி யும்மிது வேபட்ட திங்கினிநீ
புண்பட்ட நெஞ்சுடை அன்னைஇவ் வாறு புலம்பல்நின்றே.

(உரை) கட்டுப பார்த்த கட்டுவிச்சி கட்டுரை கூறுதல். - பண்பட்ட சொல்லி - தலைவி. பணைபட்ட - கிளைத்த. பன்னிரு கை படைத் தோன் : வேலன் (முருகன்). அவன் கண்பட்டதென்ற செய்தி இன்று என் கழங்கினும் பட்டது; அதாவது கழங்கிலும் நான் காணமுடிகிறது. 'எய்யா உள்ளமொடு இனையல் வாழி, மைதபு கழங்கிற் பட்டதும் உளதே, அதுதான், மையில் காட்சியின் வயங்குயிர் மயங்கிய, தெய்வ ஆணுரு ஆகு தல் தெளிவே' - **தமிழ் நெறி**. கஎ. கை முறத்தில் எண்பட்ட நெல்லுழி யும் இதுவே பட்டது - முறத்திலுள்ள நெல்லை ஒற்றை இரட்டை என் எண்ணியபோதும் இதுவே புலப்படுகிறது. 'முந்நாழி முச் சிறங்கை நெல்லளந்து கொடுவா, முறத்திலொரு படிநெல்லை என் முன்னேவை யம்மே, இந்நாழி நெல்லையுமுக் கூறுசெய்தோர் கூற்றை, இரட்டைபட எண்ணினபோ தொற்றைபட்ட தம்மே' என்பது **மீனாட்சி**

யம்மை தறம் (உசு). புலம்பல் நின்றே : புலம்பற்க. அன்னை : விளி. (பா - ம்) கண்பட்டதன்றென் ; புலம்ப நின்றே. ௩௪எ

## 12. தோழி தலைவியை வினுதல்

வரியும் கரியும் வருநெறி யூரின் மணிநிதிகள்
சொரியும் பிறரும் துணிகு வராம்மஞ்சு சூழ்சிலம்பர்
புரியும் பொருளும் நமர்பொருந் தாருட் புலம்பலுற்ற
அரியங் குழலணங்கே என்செய் வேனென்னும் அன்னையுமே.

(உரை) கட்டுவிச்சி இவ்வாறு கூறியது கேட்டு, தலைவன் விடுதத பொருளைப பெற்றுக்கொள்ளச் சுற்றத்தார் இசையவில்லை என்று பாங்கி தலைவிக்குக் கூறுதல். வரியும் கரியும் - புலியும் யானையும். சிலம்பர் - தலைவர். புரியும் பொருள் - பரிசம். நமர் பொருந்தார் - நமர் ஏற்றுக் கொள்ள மாட்டார். உட் புலம்பலுற்ற - வருந்தலுற்ற. அரி யங்குழ லணங்கே : வண்டு பொருந்திய குழலையுடைய தலைவி. அன்னை என்ன செய்வேன் என்று சொல்லி மீண்டும் வருந்துகிருள் என்க. ௩௪அ

## 13. தலைவி தோழியை வினுதல்

நோய்நாடி யானுற்ற நோய்முதல் நாடிஅந் நோய்தணிக்கும்
வாய்நாடி வாய்த்த மருந்துசெய் யாமலிம் மன்றிலன்னை
வேய்நாடு தோளியர் முன்வெறி யாடல் விரும்புமிது
நீநாடி ஒன்றுசொல் லாதென்கொ லோஇன்சொல் நேரிழையே.

(உரை) என் நோய்க்கு வெறியாடல் மருந்தாகாது என்பதை நீ ஏன் சொல்லவில்லை என்று பாங்கியைத் தலைவி கேட்டல். ' நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும், வாய்நாடி வாய்பபச் செயல் ' என்னும் தறள் (கூசஅ) இங்கு அப்படியே பெய்யபபெற்றுள்ளது. வேய் நாடு தோளியர் - மூங்கிலொத்த தோளுடைய பிற பெண்கள். வெறி யாடல் : உருச பார்க்க. நேரிழை : பாங்கியை விளித்தது. ௩௪௯

## 14 அறத்தொடு நிலை மறுத்தல்

பூஞெொன்று மென்முலைப் பொற்றொடி யாய்நிறம் போர்த்தபைம்பொன்
காணுந் தொறுங்கலுழ் அன்னைக்கு நின்னருங் கற்புடனே

சேணின் றுயர்ந்த மரபுக் கடாத செயலையின்று
நாணின்றி நின்று மொழிவதின் மாய்களென் நல்லுயிரே.

**(உரை)** நிகழ்ந்ததைத் தாயிடம் கூற இசையேன் என்பதைத் தலைவி பாங்கிக்குக் கூறுதல். பொற்றொடியாய் : பாங்கி. பைம்பொன் - பசலை நிறத்தை. கலுழ் அன்னைக்கு - வருந்தும் தாய்க்கு. நின் கற்பு என்றது தன் கற்பை. சேணின் றுயர்ந்த மரபு - நீண்ட காலமாக வருகின்ற உயர்குல மரபு. அடாத செயல் - பொருந்தாத களவொழுக்கம். மொழிவதின் - தாயிடம் மொழிவதைவிட. 'மாய்க - உயிர் விடுவேனாக. 'தோழி யாக்கை, இன்னுயிர் கழிவ தாயினும் நின்மகள், ஆய்மலர் உண்கண் பசலை, காம நோயெனச் செப்பா தீமே' - **அகம்** ௫௨. 'அன்னைக் கிம்மறை உணர்த்தி நிலமிசை, மன்னிய வாழ்க்கையம் ஆதலின் உணர்த் தாது, இன்னுயிர் இன்னே விடுகேன், பொன்னேர் மேனி மின்னிழை யானே' - **தமிழ் நெறி**. க0க. ௩௫0

### 15. அறத்தொடு நிலையுடன் படுத்தல்

**வி**ல்லார் நுதலும் விழியும் பசப்பும் வெறிக்குமுன்னே
சொல்லா தொழியினின் றன்னையும் நாடும் துடிமருங்குல்
நல்லாய் குலனும் நலனுமெய் நாணும் நயந்தகற்பும்
எலலாம் இழியுமென் றேஇனி மேலிதற் கென்செய்வதே.

(உரை) மறுத்த தலைவியை அறத்தொடு நிலை உடன்படுமாறு பாங்கி கூறுதல். வில்லார் - வில்லொத்த. வெறிக்கு முன்னே - தாய் வெறியாடல் எடுக்கு முன்னே. இன்று நாடும் - வெறியாடல் இன்று எடுப்பாள். நல்லாய் : விளி. இழியும் - அழிந்துவிடும். 'அன்பு மன்றே கற்பு மன்றே, நனறொடு வநத ஒழுக்கமு மன்றே, ஆற்றுதல் புரியி னல்லது, கொற்றொடி மாதர் கூறிய திறமே' - **தமிழ் நெறி**. க0உ. (பா - ம்) வில்லா. ௩௫க

### 16. தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல்

**அ**ன்னை ஒறுப்பினும் நம்அய லார்நின்றொறுப்பினும்இங்(கு)
உன்னை மறப்ப தொழிந்துரை செய்வல் ஒருவர்வந்து

புன்னை உகுத்தமென் பூக்கறி யாக்கும் புதுமணற்சோ(று)
என்னை அருத்த வருத்தமுற் றேனென் றியம்பினரே.

(உரை) தோழிக்கு உண்மை கூறுதல். ஒறுப்பினும் - கடிந்துரைப்பினும். உன்னை மறைபப தொழிந்து உரை செய்வல் - உண்மையை உனக்குச் சொல்லாது மறைப்பதை விட்டுவிட்டுச் சொல்லுகிறேன். ஒருவர் - தலைவர். பூக்கறியாக்கும் மணற் சோறு என்றது,. சிற்றில் கட்டி முத்துப்போன்ற புன்னையரும்பை உலையிலிட்டு மணற் சோறாக்கி விளையாடியதை. அருத்த - ஊட்ட. ௩௫உ

## 17. பாங்கி வெறி விலக்கல்

சேயவற் காறு முகங்கண்ட தல்லது சிந்தைஎன்னோய்
ஆயிழைக் காறு முகங்கண்டி லேனன்னை யேஅறிஇப்
பேயினுக் காறு மருந்தென்கொ லோவெண் பிறைஎயிற்று
வாயினுக் கிங்கெய்து மோஇளம் பால்மறி வள்ளூரமே.

(உரை) இவள் நோய்க்கு, வேலனுக்கு மறியைப் பலியூட்டுவது மருநதாகாது என்று பாஙகி கூறுதல். உருச, உகூஉ பார்க்க. சேயவற்கு ஆறுமுகம் கண்டதல்லது, ஆயிழைக்கு ஆறுமுகம கண்டிலேன் : சிலேடை. முருகனுக்கு ஆறுமுகம் உண்டே யொழிய, இவளுக்கு ஆறுமுகமில்லை ; சேய் - முருகன். சேய்மையிலுள்ள தலைவனுக்குத்தான் ஆறுதல் உண்டே யொழிய, இவளுக்குப் பிரிவு காரணமாக ஆறுதல் இல்லை ; ஆறுமுகம் - ஆறுதற்கான வழி. ‘ அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகந் தோன்றும் ’ என்ற பாடல் காண்க. இபபேய் - தலைவியைப் பிடித்த நோய். இளம் பால் மறி வள்ளூரம் - இளம் ஆட்டுக்குட்டியின் இறைச்சி. ‘ தண்ணென் சாயல் இவள் உள் நோய் தணிய, எண்ணினை கொடுத்தி யாயின், அண்ணல் ஆகமும் உண்ணுமோ பலியே ’ - **தமிழ்நெறி**. கoச. ‘ முருகயர்ந்து வந்த முதுவாய்வேல, சினவல் ஓம்புமதி வினவுவ துடையேன், பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு, சிறுமறி கொன்றிவள் நறுநுதல் நீவி, வணங்கினை கொடுத்தி யாயின் அணங்கிய, விண்தோய் மாமலைச் சிலம்பன், ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே ’ - **குறுந்**. ௩௬உ. ௩௫௩

### 18. செவிலி பாங்கியை வினுதல்

மறியார் தடங்கண் மயிலனை யாய்இந்த மானெவரும்
குறியா அருந்துயர் கொண்டதும் கண்ட குறியுமன்னை
வெறியாடல் எண்ணிய வேட்கையும் நீவிலக் கும்திறனும்
அறியா தழுங்குகின் றேன்சொல்லு வாயிங் கறிந்ததுவே.

(உரை) இவ்வாறு பாங்கி வெறிவிலக்கியது காரணமாகச் செவிலிக்கு ஐயந்தோன்றிப பாங்கியை வினுதல். மறி - மான்கன்று. இந்த மான் - தலைவி. குறியா - வெளிப்படாத. அன்னை - தலைவியின் நற்ருய். அறிநதது, நீ அறிநதவற்றை. நடுச

### 19. பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்

சோலைத் திருமுரு கன்னு ெருருவன் தொடிமலர்க்கை
நீலத்தின் மேல்விழி நெய்தல்வைத் தாள்அந் நினைவறிந்து
கோலத் திருவனை யீர்வம்மின் நீரது கொண்மினென்ன
மாலைக் கருங்குழல் வல்லிதன் பாவைக்கு வாங்கினளே.

(உரை) பூத்தருபுணர்ச்சி: தலைவனிடம் இளமைப் பிராயத்தே ஒரு குவளைப பூவைப பெற்றமை காரணமாக அது தொடங்கி அவன்மீது அன்பு கொண்டு தலைவி வருந்துகின்ருள் என்பதைப் பாங்கி கூறுதல். "எம்மைக், கூழைக் கற்றைக் குழவிப பிராயதது, மாழைகலந்த ஏழை நீர்மையாரொடு நாட்கோலஞ் செய்து விளையாடி வம்மினென்று போக்கிஞய்; போக்கின வழி, யாம் போய் ஒரு வெண்மணல் பரந்த தண் மலர்ப பொழிலிடை விளையாடி நின்றேமாக, ஒருதோன்றல் ஒருசுனைக் குவளைப பூக்கொண்டு அவ்வழியே போந்தான்; போதர, நின்மகள் அவனை நோக்கி, அபபூவினை என் பாவைக்கு அணியத தம்மின் என்ருள்; அவனும் பிறிது சிநதியாது கொடுத்து நீங்கிஞன்; இஃது அறிவது அறியாக் காலத்து நிகழ்ந்தது என்னும்" - இறையஞர் அகப்பொருள் சூ. கச உரை.

முருகு அன்னுன் - முருகனையொத்த ஒரு தோன்றல். கை நீலத்தின்மேல் - அவன் கையிலிருந்த குவளை மலர்மீது. விழி நெய்தல் வைத்தாள் - தன் குவளையொத்த கண்ணுற் கண்டு அதை விரும்பிஞள். நீலம்

நெய்தல் என்றது நயம். என்ன - என்று அவன் சொல்ல. பாவைக்கு - தான் விளையாடும் பாவைக்குச் சூட்டுவதற்காக. 'முளை எயிறு நிரம்பா இளமைப பருவத்து, ஒளிதிகழ் ஒருவன் நீட்டிய, தளையவிழ் கண்ணி தாங்கினள் உவந்தே' - **தமிழ் நெறி.** கo௫. ௩௫௫

## 20. புனல்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்

ஆடுந் துறையில் அருவினை யேன்கை அகன்றரிவை
ஓடும் புனலில் ஒழுகிய நாள்என் அழுகுரல் கேட்(டு)
ஏடொன்று பூந்தொடை ஏந்தல்முன் நீந்தி எடுத்தணைத்து
நீடுந் தடங்கரை நில்லுமென் றான்எம்மை நேரிழையே.

(உரை) நீராடும்போது ஒருநாள் தலைவி நீர்ச்சுழியில் அகப்பட்டு வருந்த, அபபோது ஒருதோன்றல் அவள் அழுகுரல் கேட்டுவந்து அவளைக் கரை சேர்த்தான், அதுமுதல் அவள் அவன்மீது அன்புகொண்டவளாயி னுள் என்று பாங்கி கூறுதல். அருவினையேன் கை யகன்று - என்னை நீங்கி. ஏடொன்று பூநதொடை - இதழ்பொருநதிய பூமாலை. நிலலும் என்றான் - கரையில் நிறுத்திச் சென்றான். 'காமர் கடும்புனல் கலந் தெம்மோ டாடுவாள், தாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்நததனோ டொழு கலால், நீள்நாக நறும்பைநதார் தயங்கப்பாய்ந் தருளினன், பூணுகம் உறத் தழீஇப போதந்தான் அகனகலம், வருமுலை புணர்நதன என்பதனல் என் தோழி, அருமழை தரல்வேண்டிற் றருகிற்கும் பெருமையளே' - **கலித் தொகை** ௩௯. ௩௫௬

## 21. களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்

மலைக்கோடி யின்மழை யின்மருங் கோடுவெண் மாமதியின்
கலைக்கோ டுழுத கழைஇருஞ் சாரல் கனங்குழைதன்
முலைக்கோடு பின்னும் முழக்கோ டெதிரும் முதுகளிற்றின்
கொலைக்கோடு முன்னும் குளிப்பநின் றானொரு கொற்றவனே.

(உரை) யானையைக் கண்டு அஞ்சிய தலைவியை ஒரு கொற்றவன் யானையை வேலாலெறிந்து காத்தான் என்று கூறுதல் முகமாகப பாங்கி உண்மை அறிவுறுத்தல். மலைக்கோடியின் - மலைச் சிகரத்தில். மழை

யின் மருங்கு ஓடு - மேகத்தின் மருங்கே ஓடும். கலைக்கோடு - கலையின் கொம்பு. கழை - அவ்வளவு உயர்ந்து வளர்ந்த மூங்கில். முலைக்கோடு பின்னும் களிற்றின் கொலைக்கோடு முன்னும் குளிப்ப என்க. முழக் கோடு - முழங்கி. குளிப்ப - தைக்க. நின்றான் என்றது, தலைவியை மறைத்துக் களிற்றை எதிர்த்து நின்றான் என்றவாறு. ௩௫ள

## 22. தலைமகள் வேற்றுமை கண்டு நற்றாய் செவிலியை வினாதல்

குணங்குற்ற மென்னுமிக் கூறறி யாத குதலைமென்சொல்
அணங்குற்ற மையல் அறிந்தனை யோஅரும் பாமுலைகள்
சுணங்குற் றனவளை தோளுற் றனவில்லை சொற்றளரும்
நிணங்குற்ற வேற்கண் நிறம்பசப் பூரும் நிரைவளைக்கே.

(உரை) நற்றாய் - தலைவியைப் பெற்ற தாய். குணங் குற்றம் அறியாத என்றது, தாய் தன் பெண் இன்னும் சிறுபெண் என்று எண்ணியமையால். அணங்கு உற்ற - இவள் உற்ற. அரும்பா முலைகள் என்றது, இளமை குறித்தவாறு. சுணங்குற்றன - பசலை போர்த்தன. உற்றன இல்லை - கழன்று போயின. நிணம்குற்ற வேல் - நிணத்திலே தைத்த வேலொத்த. இத்துறை, எரிவளை வேற்றுமைக் கேது வினாதல் என்னவும் பெறும். இ. வி. கசுக. (பா - ம்) பசப்பூர. ௩௫அ

## 23. நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நிற்றல்

திருந்தா மொழியும் திரளா முலையும் தரளமென்னும்
முருந்தாகு மென்னகை மூரலும் துய்ய முருகவிழ்பூங்
கருந்தாழ் குழலுமென் கைவந்த தில்லை கனங்குழையாய்
அருந்தா அமுதமன் னாள்அறி வானின்னை அன்னனின்றே.

(உரை) செவிலி உண்மையை நற்றாய்க்குரைத்தல். தரளம், முருந்து, வெண்மை குறித்தன. மூரல் - முறுவல். மொழியும் திருந்தா; முலையும் திரளா; மூரலும் முருந்தாகும்; குழலும் என் கைவந்ததில்லை என்க. இவை தலைவி இன்னும் பேதைப் பருவமுடையவளே என்

பதைக் குறித்தன. கனங்குழையாய்: நற்றாயைச் செவிலி விளித்தது. அறிவால் நின்னை யன்னள் என்றது இளமைப் பருவமுடைய தலைவி இன்று அறிவு நிரம்பப பெற்றாள் என்றவாறு. ‘ முதுக் குறைந்தனளே முதுக் குறைந்தனளே, மலையனொள்வேற் கண்ணி, முலையும் வாரா முதுக் குறைந்தனளே ’ - சிற்றெட்டகம். (பா - ம்) நின்னையன்ன நின்றே. நடுகூ

## 24. நற்றாய் தமருக்கு அறத்தொடு நிற்றல்

கலைமதிக் கும்புல மிக்கோ ரையுமுங்கள் கங்கைஅன்னீர்
நிலைமதிக் குங்குல நீர்மையும் பார்த்தின்று நேரிலல்லால்
அலைமதிக் குந்தெள் ளமுதமன் னாள்அரும் பாமுலைகள்
விலைமதிக் குந்தர மோவேலை ஞாலமும் மேருவுமே.

(உரை) தமர் - உறவினர். புலமிக் கோரையும் என்றது தலைவனை. உங்கள் குலநீர்மையும் என்றது தமரை. பார்த்து இன்று நேரிலல்லால் - இவற்றைக் கருதி இன்று மணமுடிக்க இசையினல்லால். தலைவியை விலைமதிக்கும தரமில்லாதபடியால், இன்று நேரலாம் என்று கூறிய வாறு. நடுசுO

## 25. வரைவு மறுத்தல்

முலைமுற் றியமென் முகிழ்நகை மானுக்கு மூதறிவுங்
கலைமுற் றியகுல னுங்கல னாகக் கருதுமென்று
மலைமுற் றியபுயத் தாயன்னை கூறமற் றென்னையர்வான்
சிலைமுற் றியவெங் கணைதெரிந் தார்கண் சிவந்துறுத்தே.

(உரை) தலைவியைத் தலைவனுக்கு மணம் நேரத் தமர் இசைய வில்லை என்பதைப பாங்கி தலைவனுக்குக் கூறுதல். மூதறிவு என்றது, அவள் இளமை நீங்கி மணப்பருவம் அடைந்தாள் என்று குறித்தது. கருதுமென்றது, கருதிக் கொடுப்பீராக என்றபடி. புயத்தாய்: தலைவனை விளித்தது. அன்னை - நற்றாய். என்னையர்: தந்தையும் பிற சுற்றத் தாரும். கணை தெரிந்தார் என்றது மணத்துக்கு இசையாமல் போருக்கு எழுந்தனர் என்றபடி.

பின்வரும் 'உடன்போக்கு' என்ற பிரிவு, தலைவி தலைவனுடன் தமரறியாது சென்று விடுதலைக் கூறுதலால், அவள் அவ்வாறு செல்வதற்குத் தோற்றுவாயாக, 'தமர் இசைந்திலர்' என்று பாங்கி அவனுக்குக் கூறும் இத்துறை பொருள் தொடர்புக்கு இன்றியமையாதது. ஆனால் பெரும்பாலான கோவைகளில் இத்துறை காணப்படவில்லை. ௩௬௧

## கஎ. உடன்போக்கு

உடன் போக்கு - தலைவி தமரறியாது தலைவனுடன் போதல்.

### 1. பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்தல்

**வ**ரிநீல மன்ன மதர்விழி மாதின் வனமுலைக்கு
விரிநீர் உலகு விலைபொருந் தாரெமர் வெள்ளருவி
சொரிநீல வெற்பநின் தோளன்றி வேறு துணையுமில்லைப்
புரிநீ இவள்புனை யும்பழி நீங்கிப் புகழெய்தவே.

(உரை) தலைவியைத் தலைவனுக்குக் கொடுக்கத் தமர் உடன்படாமை கூறிய தோழி, அவளை உடன்கொண்டு செல்லுமாறு அவனுக்குக் கூறுதல். விலைபொருந்தார் எமர் என்றது, வரைதற்கு எம்மவர் உடன்படார் என்றவாறு. புனையும் பழி, அலர்தூற்றலால் வரும் பழி. இப்பழி நீங்கிப புகழெய்துமாறு புரிநீ; அதாவது உடன்கொண்டு சென்று மணந்து கொள் என்க. ௩௬௨

### 2 தலைவன் உடன்போக்கு மறுத்தல்

**இ**லனென்னும் நாவினர்க் கில்லெலன்னும் நாவினும் இன்சொலிலாப்
புலனென்னு நாவிற் புகைஎழுங் கானகம் போதுகைக்கு
மலர்மன்னு பாயலில் வைக்கினும் கைக்கு மலரடிகள்
கலன்மன்னு கொங்கைநல் லாய்வல்ல வோநின் கனங்குழைக்கே.

(உரை) தலைவியின் மென்மைத் தன்மை கூறி அவளை உடன்கொண்டு செல்லத் தலைவன் மறுத்தல். நாவினும் நாவினும் புகை எழும் கானகம் என்க. இல்லையென்று இரப்போருக்கு இல்லை என்று ஈதலை மறுக்கும் நாவும் இன்சொல் இல்லாத நாவும் மிகக்கொடியன. இவை

போன்ற கொடுமையுடையது புகை எழும் கானகம் என்க. போது கைக்கு - போவதற்கு. வைக்கினும் கைக்கும் - மலர் மிதித்தாலும் இவள் அடி வருந்தும் மென்மையுடையது என்றபடி. கலன் - அணிகள். நின் கனங்குழைக்கு, கைக்கும் மலரடிகள் கானகம் போதுகைக்கு வல்லவோ, அல்லவாதலால், உடன்கொண்டு செல்ல இயலாது. இல னென்னும் நா: 'இரப்போர்க் கீயா இன்மை யான் உறவே' - புறம் எஉ. 'இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்' - குறள் உஉங. ஙசுங

### 3. பாங்கி தலைவனை உடன்படுத்தல்

வல்லினும் நல்ல வனமுலை யாள்மண் ணெலாமுறங்கும்
அல்லினும் வாணெடுங் கண்ணடை யாமல் அருந்தனிகூர்
இல்லினும் மெல்லிய ளீரென்செய் தீரென் றிரங்குமன்னை
சொல்லினும் வெய்யதன் றேசொன்ன நாவுஞ் சுடுசுரமே.

(உரை) தலைவன் இசையச்செய்தல். வல் - சூதாடு கருவி. அல் - இருள். கண்ணடையாமல் - துயில் கொள்ளாமல். தனிகூர் - தனிமையில் துயருறுகின்ற. சொல்லினும் வெய்யதன்றே: 'நாவினாற் சுட்ட வடு' (குறள் கஉகூ) என்றமை காண்க. சொன்ன நாவும் சுடு சுரம்: 'அதன் பேருரைத்தால், வாயுஞ் சுடும்' - கோவை. ஙகசு; 'கருதின் வேம் உள்ளமும்' - கம்பர். ஙசுச

### 4. தலைவன் போக்கு உடன்படுதல்

இன்னாத கானும் இனிதென்று நீரிங் கியைந்தஅன்பும்
அந்நாள் அளித்த அணங்குமுண் டேஎன்றன் ஆவிஅன்ன
மின்னார் திருந்திழை மெய்வருந் தாவகை மெல்லமெல்லப்
பன்னாள் படவு முடன்கொண்டு சேறும் பணிமொழியே.

(உரை) இன்னாத கான் - கொடிய பாலை. திருந்திழை - தலைவி. சேறும் - செல்லுதும், செல்வேன். இ. வி. கசுச. (பா - ம்) அன்னாள் அளித்த; எனதாவி; ஆவி யன்னார்; சேறு பணிமொழியே. ஙசுரு

## 5. பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்

குறுந்தாள் மலர்க்குரவுந்நெடுந் தாண்மலர்க் கோங்கமும்நின்
நறுந்தார் குழலுக்கு நல்குவர் நாளை நணுகலரைச்
செறுந்தாரை வேல்வல்ல சேயனை யார்தம் திருமெய்நொந்து
பெறுந்தாய் உனைவளர்க் கப்பெற்ற தாயுடன் பேதுறவே.

(உரை) தலைவியை அழைத்துச் செல்லத் தலைவன் இசைந்தமை பாங்கி தலைவிக்குரைத்தல். குறுந்தாள் மலர்க் குரவும் - குறுகிய காம்புடைய குராமலரும். நெடுந்தாள் மலருடைய கோங்கம். குராவும் கோங்கமும் நல்குவர், சேயனையார். நணுகலரை - பகைவரை. செறும் - கொல்லும். தாரை வேல் - கூர்மையான வேல். சேய் அனையார் - முருகனை ஒத்தவர். சேயனையார் (தம்மைப்) பெறுந் தாய் உன்னை வளர்க்கவும், பெற்ற தாய் பேதுறவும் நல்குவர். பேதுற என்றது, இவள் பிரிவினால் நற்றாயும் செவிலியும் துன்பமடைய. ௩௬௬

## 6. தலைவி நாண் அழிவு இரங்கல்

போகின்ற வானப் புயல்வழி மாறிப் புனலின்றியே
சாகின்ற வேழமும் கன்றும் பிடியும் தழலின்றியே
வேகின்ற கானத்து வெற்பர்பின் போக விரும்புநெஞ்சில்
ஆகின்ற அன்புக் கருமந்த நாணம் அழிகின்றதே.

(உரை) அவனோடு உடன்சென்றால் தன் நாணம் அழிந்துவிடுமே என்று தலைவி இரங்கல். புயல் - மேகம். மாறி - மழை பெய்யாது போக. கானத்து - சுரம் வழியே. அருமந்த - அருமருந்தன்ன. 'அளிதோ தானே நாணே நம்மொடு, நனி நீடு உழந்தன்று மன்னே இனியே, தாங்கும் அளவைத் தாங்கிக், காமம் நெரிதரக் கைந்நில் லாதே' - குறுந். கசுக. ௩௬௭

## 7. தலைவி ஒருப்பட்டு எழுதல்

கடலுக நிற்பது கற்பொன்று மேஎன்றும் கன்னியர்க்கு
மடநாண் வருவது போவதன் றேபல வம்பலர்தம்

இடனும் இருப்பதில் எய்துவம் பாலையில் ஏகுமன்பர்
உடனுகப் போக ஒருப்படு நீயென் உளமகிழ்ந்தே.

(உரை) தலைவனுடன் செல்ல இசைந்து எழுதல். இருப்பதில் எய்துவம் - தலைவன் இருப்பை அடைவோம். ஒருபபடு நீ - நீ உடன்படு வாயாக என்று தலைவி தன் நெஞ்சுக்குரைத்தவாறு. ௫௯அ

## 8. வரைவு மாட்சி

மின்னே மருங்குல் விளங்குபைங் கோதை விளங்கிழைநின்
பின்னே வருதல் கருதிய போதுமென் பிள்ளைக்கிள்ளை
அன்னே மகவன்பும் அற்றனை யோஎன் றரற்றஅன்பின்
கொன்னே அருமந்த கொங்கைகண் ணீரிற் குளித்தனவே.

(உரை) மணங் குறித்துத் தலைவி உடன் செல்லுவதன் அருமையைப் பாங்கி கூறுதல். நின் பின்னே: தலைவனை விளித்துக் கூறியது. மகவு - குழந்தை. மகவினிடம் அன்பும் அற்றனையோ அன்னே என்று கிளி அழைத்துச் சொல்லுகிறது. அரற்ற - கூற. அன்பின் - அன்பினலே. குளித்தன - தலைவி கண்ணீர் விட்டாள் என்றவாறு. இ. வி. ௧௯௪, அருமனம் ஒருப்பட் டெழுந்தமை பாங்கி தலைவற் குணர்த்தற்கு மேற்கோள். (பா - ம்) நெருங்கு பைங்கோதை; அன்பும் அத்தனையோ என்ற தத்தைபின். ௫௯௯

## 9. பாங்கி கையடை கொடுத்தல்

வடமால் வரைநிலை சாயினும் வார்புயல் வாரிபுகும்
கடனு கியநெறி கைவிட்டு நீங்கினும் கந்தலைக்கும்
அடமாக் களிற்றன்ப நின்னையன் ஞர்பின்னை என்னையன்ஞர்
உடனுகு கேண்மை ஒழிந்தறி யார்இவ் வுலகத்திலே.

(உரை) பாங்கி தலைவியைத் தலைவனிடம் அடைக்கலமாகக் கொடுத்தல். கையடைப் படலம் என்பது **கம்பராமாயண**த்தில் இராமனைத் தசரதன் விசுவாமித்திர முனிவனிடம் ஒப்புவிக்கும் பகுதி என்பது அறிதற் குரியது. வடமால்வரை: வரையன்ன முலை. வார் புயல்: தலைவியின் கூந்தல். கருத்து, இவள் இளமை கழியினும். கந்து அலைக்கும் -

கட்டப்பட்ட தறியை அலைக்கின்ற. உடனுறை கேண்மை - என்னுடனே பிரியாதிருக்கும் நட்பு. தலைவி இதுவரை என்னைப் பிரியாத கேண்மை ஒழிந்தறியாள். இதுபோல இனி உன்னைப் பிரியாத கேண்மை ஒழிந்தறியாமை வேண்டும் என்றவாறு. 'கொங்கை தளரினும் கூந்தல் நரைப்பினும் ஏந்தல் மற்றிவ், வங்கை யடைக்கல மென்றே கருதி அருள்கண்டாய்' - **பாண்டிக் கோவை.** 'அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும், பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த, நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும், நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர...... ...நின், பிழையா நன்மொழி தேறிய இவட்கே' - **நற்றிணை** கo. ௩எo

## 10. பாங்கி வைகிருள் விடுத்தல்

**ஊ**ரும் கலிகெழு சேரியும் தாயரும் உட்புலம்பத்
தேரும் பழிபுக ழாக்கிவந் தெய்துவை சேயனையாய்
வாரும் மணிவடம் வம்பும் பொருமுலை வல்லியுடன்
யாரும் துயில்கொளும் நள்ளிருள் யாமத் தெழுந்தருளே.

(உரை) நள்ளிருளில் பாங்கி தலைவியைத் தலைவனுடன் செல்ல விடுத்தல். வைகிருள் - தங்கிய இருளில். பழி புகழாக்கி வந்தெய்துவை என்றது, அலர் மறையுமாறு மணம் புரிந்து புகழாக்கி வருவாயாக என்றவாறு. எழுந்தருள் - இப்போது செல்வாயாக. இ. வி. கசுச. (பா - ம்) கலிகெழும் ; புலம்பி ; எய்துவல் ; பருமணி வம்பும். ௩எக

## 11. தலைமகளைத் தலைமகன் சுரத்துய்த்தல்

செல்லும் சுரமனல் தீந்திலை மாறிய திண்புறவம்
கல்லும் குலவுமென் றஞ்சல்மின் னேஅருங் கான்துறையும்
அல்லும் பகலும் அரிவரி தாவும் அகன்பொழிலும்
நெல்லும் கரும்பும் சுரும்பமர் காவியும் நீழலுமே.

(உரை) தலைவன் தலைவியைப் பாலையில் மெல்லக்கொண்டு செல்லுதல். அனல் தீந்து இலை மாறி - நெருப்புக் கொளுத்த இலைகள் யாவும் எரிந்துபோய். அரி - வண்டு. 'வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே, மாநனை கொழுதி மகிழ்குயில் ஆலும், நறுந்தண் பொழில கானம், குறும்பல் லூரயாஞ் செல்லு மாறே' - **நற்றிணை** க. ௩எஉ

### 12. தலைமகன் தலைமகள் அசைவறிந்து இருத்தல்

திருந்திய பஞ்செனு அஞ்சும்நின் கஞ்சமென் சீறடிகள்
வருந்திய செந்தளிர் வண்ணமும் வாடினை மாதவியும்
குருந்தமும் அந்தண் குராவும் மராவுமென் கோங்கமுடன்
பொருந்திய சோலை இருந்தசை வாறுதும் பொற்கொடியே.

(உரை) அசைவு - சோர்வு. அறிந்து இடையிலே தங்குதல். கஞ்ச மென் சீறடி - தாமரை யொத்த சிற்றடி. அடிகள் வருந்தின, வண்ணமும் வாடினை, சோலையிலிருந்து அசைவு ஆறுதும். மரா - மரவம். ௩எ௩

### 13. உவந்தலர் சூட்டி உள்மகிழ்ந்து உரைத்தல்

விண்ணுங் கருகுங் கொடுஞ்சுரம் போந்து வெயிலெறிப்ப
வண்ணம் கருகிய வல்லிபொற் றோளும் வனமுலையும்
தண்ணங் குரவ மணநாறும் கோதையும் தண்ணளியும்
கண்ணுங்கண் டேவெளி யேகளி கூருநம் கண்ணிணையே.

(உரை) தலைவிக்கு மலர் சூட்டித் தலைவன் மகிழ்ந்துரைத்தல். விண்ணையும் வெம்மையால் கருகச் செய்யும் கொடுஞ் சுரம். கோதை - கூந்தல். தண்ணளி - அன்பு. ௩எ௪

### 14. தலைவன் மகிழ்ச்சி

தொகத்தா மரைவெஞ் சுரத்துவெண் பாடலஞ்சோலையிலெ
அகத்தா மரையின் றலர்த்திய வாஇவ் வலங்கல்சுற் றுன் [ன்
நகத்தா மரையும் கழுநீர் மலரன்ன நாட்டமும்நன்
முகத்தா மரையரும் புங்குறு வேர்வும் முறுவலுமே.

(உரை) மலர் சூட்டியபின் அவளைப பாராட்டல. தாம் மரை தொக - தாவும் மானினங்கள் ஒடுங்கும்படியான. பாடலஞ் சோலை - பாதிரிச்சோலை. அகத்தாமரை - உள்ளம். அலர்த்தியவா : மகிழச் செய்த அருமை. அலங்கல் - மாலை. நகத் தாமரை - கொங்கை ; நகம் - மலை. நாட்டம் - கண். நகத்தாமரை முதலாயின என் அகத்தாமரையை அலர்த்தியவா. ௩எ௫

### 15. கண்புதை நாணமீதூரல்

நெய்யொன்று நீள்சுடர் வேற்கடுங் காளை நிரைவளைநீர்
கொய்யும் குரவும் மரவும் தொடுத்துக் குழலணியச்
செய்யும் தவமற்று யாவர்செய் தாரெனச் செங்குழைதோய்
மையுண் குவளையின் மேல்வளைக் காந்தள் மலர்ந்தனவே.

(உரை) இச்செய்யுள் கவிக்கூற்று. தலைவன் புகழ்தலைக் கேட்ட தலைவி நாணம் மீதூரக் கண் புதைத்தல். நெய்யொன்றுவேல் - நெய் தடவிய வேல். காளை - தலைவன். நிரைவளை : விளி. என - என்று சொல்ல. குவளையின் மேல் மலர்க் காந்தள் மலர்ந்தன - கண்களைத் தன் காந்தளங் கரத்தால் மூடிக்கொண்டாள். ருஎசு

### 16. கண்டோர் அயிர்த்தல்

கருவார் புயலொன்றும் கண்டறி யாதஇக் கானகத்தே
வருவார் சிலரிவர் மற்றிவர் யாவர்கொல் வாரிதந்த
திருவாம் எனிலிவள் செங்கையில் பங்கய மில்லைச்செல்வன்
மருவார் துளவணி மாலெனில் மார்பின் மறுவில்லையே.

(உரை) சுரத்திடை இவ்விருவரையுங் கண்டோர், இவர் தேவரோ மானிடரோ என்று ஐயுறல். மேகமே எப்போதும் வாராத இச்சுரம் என்றது, அதன் வெம்மையைக் கூறியவாறு. வருவார் சிலர் : தலைவன் தலைவியான இவ்விருவர். வாரி தந்த திரு - பாற்கடல் தந்த இலக்குமி. பங்கயம் - தாமரை. செல்வன் - தலைவன். மருவார் துளவு - மணம் பொருந்திய துளசி. மால் - திருமால். மார்பில் மறு, இலக்குமி மார்பிடத்தே தங்குவதால். இ. வி. கசுச. (பா - ம்) புயலென்றும் ; சிலரிலர். ருஎஎ

### 17. கண்டோர் மகிழ்ச்சி

முன்செல்ல நாணும் முகிழ்நகை வல்லி முருகனிவன்
பின்செல்ல நாணும் பிடிநடை காணஇப் பேருலகில்
புன்செல்வர் தேடும் பொருள்போல் இறுகப் பொதிந்தவண்ணம்
என்சொல்லி எங்ஙன் தொலைந்ததிவ் வாறிவ் விருஞ்சுரமே.

(உரை) கண்டோர், தலைவனுந் தலைவியும் சுரங்கடந்து வந்தமைக்கு மகிழ்தல். புன்செல்வர் தேடும் பொருள் - 'கலர் தேடிய செல்வம்' (கஉரு). இவ்விருஞ்சுரம் எங்ஙன் தொலைநதது என்றது வியப்பு. இ. வி. கசுச. (பா - ம்) பின் செல்ல எண்ணும் ; என் சொல்லல். ருஎஅ

## 18. வனத்திடை பெண்டிர் நினைத்தமை கூறல்

அன்போ டுருகிய ஆர்கழைக் கானிடை ஆர்கழலான்
பின்போம் இளங்கொடி பெண்ணலம் கண்டு பெருந்தடங்கண்
மின்போல் மகளிர்தம் மேவுங் கொழுநரை வேட்கையுடன்
என்போ டுறப்புல்லி ஏகலொட் டார்தம் இயல்கடந்தே.

(உரை) வழியில் கண்ட பெண்டிர் செயலைக் கூறுதல் ; கவி கூற்று. கழைக் கான் - மூங்கிற்காடு. ஆர்கழலான் - ஒலிக்கின்ற கழல் அணிந்த இத்தலைவன். ஏக ஒட்டார் - அப்பாற் செல்லவிடார். ருஎகூ

## 19. கண்டோர் இரங்கல்

பேதைப் பருவம் கழிந்திலள் இன்னமும் பேணியதன்
காதற் கொழுநன் விழுமிய கேண்மையைக் காதலித்துப்
போதற் கரிய புகையழற் கானகம் போந்தஇந்த
மாதைப் பயந்த மடந்தைஎவ் வாறுயிர் வாழ்ந்தனளே.

(உரை) கண்டோர், தலைவியின் நற்றாய் துயரை எண்ணி இரங்கல். பேதைபபருவங் கழிந்திலள் : தலைவியின் இளமை குறித்தது. பயந்த மடந்தை - பெற்ற நற்றாய். இ. வி. கசுக. (பா - ம்) எரியனற் கானகம். ருஅ0

## 20. கண்டோர் காதலின் விலக்கல்

மையோ டரிக்கண்ணி வண்ணம் கருகி வருந்தினள்இவ்
வெய்யோனும் வெற்பில் விழுமள வாயினன் வெம்புலியும்
எய்யோ டிகலும் இருள்துஞ்சும் அல்லிலெம் இல்லிற்றங்கி
நெய்யோ டிலங்கிலை வேல்ஐய நீசெல்லு நீணகர்க்கே.

(உரை) பொழுது சாய்ந்தமையால் இனி நீங்கள் இவ்வழியே போதல் தகாது, இரவில் எம்மில்லில் தங்கிச் செல்க என்று கண்டோர்

தலைவனிடம் கூறுதல். ஓடரி - ரேகை படர்ந்த. வெய்யோன் - சூரியன். வெற்பில் விழுமளவாயினன் - மறைந்தான். எய் - முள்ளம் பன்றி; 'எய்ம் முள்ளன்ன பரூஉ மயிர்' - நற்றிணை கூஅ. புலியும் எய்யும் போரிடும் அல்; அல் - இராப்பொழுது. நீள் நகர்க்கு: உன் நகருக்கு. 'செங்கதிர்ச் செல்வனும் அத்தஞ் சேர்ந்தனன், கொங்கிவர் குழலோ டிவ்வழித், தங் கினை சென்மோ தகைவெய் யோனே' - தமிழ் நெறி. ககச. ௩அக

## 21. தலைவன் தன்பதி அணிமை சாற்றல்

**மா**விடை கொள்ள மலர்ந்தகண் ணாய்இனி வன்சுரமோர்
ஏவிடை போதும் இதுகடந் தால்முன் இரும்பழனப்
பூவிடை வண்டிக் கினியமந் தாரப் புதுநறவைக்
காவிடை வண்டு விருந்திடும் ஊரும் கழனியுமே.

(உரை) தன் நகர் அருகிலுள்ள தென்பதைத் தலைவன் தலைவிக்குக் கூறுதல். மாவிடை கொள்ள மலர்ந்த கண்ணாய்: மாவடு கண்ணுக் குவமையாதலால், கண்ணுக்குத் தோற்ற மா விடை கொண்ட தென்ற படி. ஏ விடை போதும்-ஓர் அம்பு வீழ் எல்லைதான் இனி இச்சுரம் கடக்க வேண்டும். பழனம் - வயல். நறவு - தேன். சுரம் கடந்தால் தனது ஊரும் கழனியும் காணலாம் எனத் தலைவன் கூறுகிறான். (பா - ம்) கண்டோர் தன் பதி யணிமை சாற்றல். ௩அஉ

## 22. தலைவன் தன்பதி அடைந்தமை தலைவிக்கு உணர்த்தல்

**பா**வையர் கொய்யும் பனிமலர்க் காஇது பாவையர்தம்
ஆவியன் னாருடன் ஆடும் துறைஇ தரும்பவிழ்பூங்
காவி களைந்து கடைசியர் ஆர்க்கும் கழனியுடன்
ஓவிய மாளிகைச் சூழ்வி து காண்நம் உறைபதியே.

(உரை) ஆவியன்னார் - நாயகர். காவி களைந்து கடைசியர் ஆர்க்கும் கழனி - உழவர் வயலிலுள்ள களையாகிய குவளை மலர்களைக் களைந் தெறிந்து விட்டு ஆரவாரிக்கும் வயல்கள்; கடைசியர் - உழவர் குலப் பெண்கள். 'கடைசியர் முகமுங் காலுங் கைகளுங் கமலமென்னார், படைவிழி குவளை யென்னார், பவளவாய் குமுதமென்னார், அடையவுங்

களைந்தார் மள்ளர்' - திருவிளையாடல், நாட்டுப் படலம் உரு. நம் உறை பதி - நாம் வாழும் ஊர். ௩அ௩

23. தலைவன் தலைவியொடு தன்மனை சாரல்

சங்க முழங்க மணிமுர சார்ப்பத் தமரெதிர்கொள்
அங்கண் நலந்திகழ் ஆவணம் போயகன் மாளிகையில்
பொங்கிலை வேலனும் பூவையும் மேவினர் புண்டரிகச்
செங்கை வலந்திகி ரித்திரு மாலும் திருவுமொத்தே.

(உரை) இருவரும் தலைவன் இல்லம் அடைதல். அங்கண் - அவ்விடத்து. ஆவணம் - கடைவீதி. பொங்கிலை வேலன் : இலையுடைய வேலேந்திய தலைவன். பூவை - தலைவி. புண்டரிகம் - தாமரை. திகிரி - சக்கரமேந்திய. இ. வி. கசுச. (பா - ம்) செங்கண் மலர்த் திகிரி. ௩அச

## கஅ. கற்பொடு புணர்ந்த கவ்வை

தலைவி தலைவனோடு சென்றமை பலரும் அறிதல். கற்பு - தலைவி தமரைப பிரிநது தலைவனுடன் சென்றமை ; கவ்வை - பலரறி சொல். ' இடைச்சுர மருங்கின் அவள் தமர் எய்திக், கடைக்கொண்டு பெயர்த்த லிற் கலங்கஞர் எய்திக், கற்பொடு புணர்ந்த கவ்வை '-தொல்காப்பியம்.

1. செவிலி பாங்கியை வினுதல்

மானும் கிளியும் மயிலும் பயில வளர்த்தெடுத்த
யானும் பரிவுற ஈன்றநற் றாயும் இரங்கிநையத்
தேனும் குயிலும் அனையசொல் லாள்சுரம் சென்றதுநீ
தானும் அறிந்திலை யோமுன்செய் பாவம் தளிரியலே.

(உரை) மகள் எங்கே போயினள் என்று பாங்கியைச் செவிலி வினுதல். யான் - செவிலி. பரிவுற - துன்பமடைய. சுரஞ் சென்றது - பாலை வழியே சென்றது. தளிரியல் : பாங்கி. ௩அ௫

## 2. பாங்கி செவிலிக்கு உணர்த்தல்

கூர்ந்த சினக்களி றன்றுவென் றூரினும் கொள்ளைநிதி
ஈந்த வருக்கென் இளமுலை யாக இருங்குரவர்
நேர்ந்தனர் என்றஞ்சி நென்னலென் னோக்கி நெடிதுயிர்த்தாள்
வார்ந்த கருங்குழல் வல்லிபின் ஏக வலித்துள்ளமே.

(உரை) தலைவி விரும்பியவாறு தலைவனுக்கு மணஞ் செய்து கொடுக்க நம்மவர் உடன்படாமையால், அவள் தலைவனுடன் போயினள் என்று பாங்கி செவிலிக்குக் கூறுதல். சினக்களிறு அன்று வென்றூரினும் - யானையினின்று தன்னைக் காத்த தலைவனினும்; இது களிறு தரு புணர்ச்சி குறித்தது (௩௫). நிதி ஈந்தவருக்கு என் இளமுலையாக நேர்ந்தனர் - மிகுதியும் பொருள் ஈந்தவருக்குத் தலைவியைக் கொடுக்க எண்ணினர். குரவர் - தாய்தந்தையர். நென்னல் - நேற்று. என் நோக்கி - என்னை நோக்கி. வல்லி - தலைவி பின் ஏக: வென்றூர் பின் ஏக. உள்ளம் வலித்து - மனந்துணிந்து. ௩அ௬

## 3. செவிலி தன் அறிவின்மை சாற்றல்

மறியும் கயலும் அனையகண் ணாள்வரிப் பந்துதந்தும்
செறியும் பசுங்கிளி செங்கையில் தந்தும் செழுந்திவலை
எறியும் திரைஎன் றிறுகஎற் புல்லியும் இன்னுமின்ன
அறியும் குறிகள்செய் தாள்அவ மேஎன் அறிவின்மையே.

(உரை) தலைவி தான் தலைவனுடன் செல்லத் துணிந்தமையைக் குறிப்பால் பல முறை உணர்த்தியும் தான் அறிந்துகொள்ளவில்லையே என்று செவிலி தன்னை நொந்து கொள்ளுதல். மறி - மான். கயல் - மீன். வரிப்பந்து தந்தும் - பிரிந்து போகின்றமையால் தன்னிடமிருந்த பந்தைச் செவிலியிடம் ஒப்படைத்தாள். கிளி தந்ததும் அப்படியே. திவலை எறியுந்திரை (மோதுகின்ற அலை) என்றது, பிரிந்தமைக்குப் பின்னர் கண்ணீர் விடப் போகிறாள் என்று எண்ணியது. எற் புல்லியும் - என்னை (செவிலியை) தழுவியும். அவமே - வீணாயிற்று. ௩அஎ

### 4. செவிலி தேற்றுவோர்க்கு எதிரழிந்து மொழிதல்

**தோ**ற்றம் திருவனை யார்சுரம் போன துணிவுகண்டீர்
ஆற்றும் தெரிவையர் ஆற்றல்கண் டீர்இன் னமுதருந்திப் [ல்
போற்றும் கிளியுமென் பாவையும் பூவையும் போற்றுசெஞ்சொ
மாற்றம் பொறுக்கவற் றோதெரி வீர்நம் மடநெஞ்சமே.

(உரை) செவிலி தன்னைத் தேற்றுவோருக்கு வருந்திக் கூறுதல். திரு அனையார், மகள். தெரிவையர் - நாங்கள் என்று செவிலி தம்மவரைக் குறிப்பிட்டவாறு. ஆற்றல் கண்டீர் என்றது, ஆறுதற்கான தன்மை இல்லை என்றபடி. கிளி பூவைகளின் சொல்லைக் கேட்கும் போது துயரம் பொறுக்கவில்லை என்றவாறு; பொறுக்கவற்றோ - பொறுக்கவல்லதோ. (பா - ம்) தெருவீர். ௩௮௮

### 5. தெய்வம் வாழ்த்தல்

**வே**மாறு செல்லஎம் மெல்லிய லாளை விதித்தனைநீ
யாமாறு செய்தனை ஆரணங் கேநின் அருளொழிந்தால்
யாமாறு வண்ணம் இதற்கொன்றும் இல்லையோர் ஏதிலன்பின்
போமாறு செய்தனை நீவரு மாறு புரிந்தருளே.

(உரை) தலைவி விரைவிலே மீண்டுவரச் செய்யவேண்டுமென்று செவிலி துர்க்கையை வேண்டுதல். வேம் ஆறு-வேகின்ற பாலை வழியே. யாம் ஆறு வண்ணம் - யாம் ஆறுதல் பெறும் வழி. ஏதிலன் - அயலான். போகத் துணைசெய்த நீ, வரத் துணைசெய்வாயாக. பாலைக்குத் துர்க்கை தெய்வமாதலால், அவளைப் பரவியவாறு. முருகனைப் பரவுதலுமுண்டு. இ. வி. ௧௯௯. (பா - ம்) வேமாறு செய்ய என்; விடுத்தனை நீ; ஏமாறு வண்ணம்; செய்வித்த நீவருமாறும்; புரந்தருளே. ௩௮௯

### 6. செவிலி நற்றாய்க்கு உரைத்தல்

**தொ**டுப்பார் தொடுத்தலர் தூற்றும் பழிவந்து சூழ்விதியைச்
தடுப்பார் எவரினிச் சாற்றுவ தென்கொல் தடத்தின்முன்வீழ்
எடுப்பான் ஒருவன் இருப்பநின் றூர்தம் இருநிதிக்குக் [ந்(து)
கொடுப்பான் இசைந்தனம்என் றுசொன்னால்நங் குலக்கொடியே.

(உரை) கற்பின் வழியே தலைவி தனக்கு உற்ற தலைவனை யடைந் திருக்கிறாள் என்று செவிலி நற்றாய்க்குரைத்தல். தொடுப்பார்-பழிச்சொல் சொல்லத்தொடுப்பவர். அலர் - பழிச்சொல். தடத்தின்முன் வீழ்ந்து எடுப் பான் இருக்க என்றது, புனல்தரு புணர்ச்சியைக் குறித்தது (௩௫௯). நின்றார்தம் இருநிதி : பிறர் வரை வுணர்த்தியமை காண்க (௨௯௩). எடுப்பான் இருப்ப, நின்றார் நிதிக்கு நம் கொடியைக் கொடுப்பான் இசைந்தனம் என்று சொன்னால், விதியைத் தடுப்பார் எவர். இ. வி. ககூகூ. (பா - ம்) தாற்றும்படி ; சொன்னணம். ௩௬0

## 7. நற்றாய் இரங்கல்

பூவையுண் டோபுனக் கிள்ளையுண் டோவெண் புதியமணற்
பாவையுண் டோபெற்ற பாவியுண்டோகுன்றுபார்த்தழைக்கும்
தேவையுண் டோகற்ற சிற்றிலுண் டோமற்றெனசுற்றமுண்டோ
யாவையுண் டோமக ளேசெல்லு நீஇவ் வருஞ்சுரத்தே.

(உரை) சுரத்தின் அருமை எண்ணித் தலைவியைப் பெற்ற தாய் இரங்கல். பூவை - நாகணவாய்ப்புள். பாவி என்றது, தான் படும் துயரத்தினாலே. குன்று பார்த்தழைக்கும் தேவை : வரை எதிர் கூவ லாகிய விளையாட்டு. சுற்றம் - வண்டலாயம். நீ செல்லும் அருஞ் சுரத்தே இவை யுண்டோ என்று மகளை எண்ணிக் கேட்டு நற்றாய் இரங்குகிறாள். இ. வி. ககூகூ. (பா - ம்) என் புதிய மன்றற் பாவை ; குற்றமுண்டோ ; செல்ல, சொல்லு ; சுரமே. ௩௬க

## 8. நற்றாய் பாங்கி தன்னொடு புலம்பல்

தாயென்செய் தாளென்று தள்ளிஎன் பாவைதன் பால்மயங்க
மாயஞ்செய் தானொரு வள்ளல்பின் னேஅழல் வெஞ்சுரத்துப்
போயென்செய் தாளென் றறிகிலன் ஒன்றும் பொறியிலியேன்
நீயென்செய் தாய்மக ளேகண்கள் நீர்மல்க நின்றுநின்றே.

(உரை) தள்ளி என்றது, என்ன குற்றங்கண்டு தாயிடம் உண்மை ஒளித்து என்றவாறு. என்பாவை - மகள். தன்பால் - தலைவன்பால். செய்தான் - செய்தவனை. நீ என்செய்தாய் என்றது பாங்கியை

வினவியது. இ. வி. கசுசு. (பா - ம்) வன்சுரத்து; பொறியிலியை; செய்வாய். ௩௬௨

## 9. பாங்கி அயலொடு புலம்பல்

புறந்தாழ் புரிகுழற் பூவைதன் பாவை புனைஅலங்கல்
சிறந்தான் ஒருவள்ளல் செய்கையதாமெனத் தெய்வந்தொழாள்
அறந்தான் நிலைபெற் றரும்பழி காக்கும் அறிவுநெஞ்சிற்
பிறந்தாள் அருஞ்சுரம் பின்செல்லவேண்டுங்கொல்பேதையரே.

(உரை) மற்றப் பெண்களோடு பாங்கி புலம்பல். புனை அலங்கல் - புனைந்த மாலை. ஒரு வள்ளல் செங்கையதாம்: பூத்தரு புணர்ச்சியைக் குறித்தவாறு (௩௫). தெய்வந் தொழாள் என்றது, காதல் நாயகனை யன்றி வேறு தெய்வமின்மையால்; 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்' - குறள் ௫௫. அறந்தான் நிலைபெற்று அரும்பழி காக்கும் அறிவு: 'சுரம்நனி இனிய ஆகுக தில்ல, அறநெறி இதுவெனத் தெளிந்த என், பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே' - ஐங்குறு. ௩௭௧. 'இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின், சிறந்தானை வழிபடீச் சென்றனள், அறந்தலைப் பிரியா ஆறுமற் றதுவே' - கலித்தொகை ௯. பேதையரே: மற்றப் பாங்கியரை விளித்தது. இ. வி. கசுசு. (பா - ம்) என்பாவை; செங்கையதால், சேக்கையதாம். ௩௬௩

## 10. நற்றாய் அயலொடு புலம்பல்

என்போல நீரும் இனியருங் காதல்கொண் டேதிலன்றன்
பின்போம் மகவைப் பெறுதொழி வீர்பெற்ற பாவிமலர்ப்
பொன்போல் அரியஎன் பூவையைவெஞ்சுரம் போக்கிஇங்ஙன்
அன்போ டழுங்குகின் றேன்அயல் வாழும் அரிவையரே.

(உரை) மற்றப பெண்டிரோடு நற்றாய் புலம்பல். அருங்காதல் கொண்டுபோம் மகவு என்க; மகவு - பெண். பாவி - பாவியாகிய யான். மலர்பபொன் - இலக்குமி. அயல்வாழும் அரிவையரே - விளி. 'பெண் பெறுகை தனைபபோலப பெரியதுயர் தானுமுண்டோ பேசுங்காலே' - உத்தர ராமாயணம், இராவணன் பிறப்பு சுக. 'பெண்பெற் றிலமென் பதுந்துன்ப மாய்ப்பெற் றவர்பிரிந்தாற், கண்பெற் றவர்வண்ட லாடிடம்

காண்டொறும்...நெஞ்சம், புண்பெற்றிடு மென்ப வாற்செய லேதினிப் பூவையரே' - திருப்பதிக் கோவை சசரு. ருகூச

## 11. நற்றாய் தலைமகள் பயிலிடத்தொடு புலம்பல்

நன்றே உமக்கவர் நல்லதெல் லாஞ்சொல்ல நவ்வி இளங்
கன்றே அருமணிக் கந்துக மேகண் கலந்தழைக்கும்
குன்றே குவளையங் கொய்தட மேஎதிர் கூங்குயிலே
என்றேகொல் உம்மையும் என்னையும் காணவந் தெய்துவதே.

**(உரை)** தலைவி விளையாடிய இடங்களைக் கண்டு நற்றாய் புலம்பல். அவர் - தலைவி. உமக்கு என்றது நவ்வியிளங் கன்றையும் கந்துகத்தை யும் குன்றையும் தடத்தையும் குயிலையும். கந்துகம் - பந்து. கலந் தழைக்கும் என்றது, வரை எதிர் கூவல்; எதிர் கூங்குயில் என்றது, குயிலழைத்தல். இவை தலைவி பயின்ற விளையாடல்கள். அவர் காண என்று கொல் வந்து எய்துவது என்க. இ. வி. கசுசு. (பா - ம்) சொல்லி; குவலையங் கொய்தடமே; கூர்ங்குயிலே. ருகூரு

## 12. நிமித்தம் போற்றல்

மைமயோ டரிக்கண்ணி வள்ளலும் தானும் வரக்கரைந்தால்
நெய்யோ டளைந்த நிணப்பலி நல்குவன் நெல்லுணங்கும்
செய்யோடு கெண்டையுஞ் சேலுந் தருகுவன் சேரஎட்டுக்
கையோன் வலத்திருக் கண்பெற்ற காதலன் கார்க்கொடியே.

**(உரை)** என் மகளும் அவள் காதலனும் மீண்டு வரும்படி நீ கரை வாயாபின், உனக்கு நல்ல உணவு தருவேன் என்று நற்றாய் காக்கையை வேண்டல். நிமித்தம் - சகுனம். மையோ டரிக்கண்ணி : ருஅக, கரைந் தால் - நீ கூவுவாயாயின். காக்கை கூவுதலைக் கரைதல் என்பது மரபு; 'காக்கை கரவா கரந்துண்ணும்' என்பது குறள் உஎ; 'உரையார் தொல்புகழ் உத்தமனைவரக், கரையாய் காக்கைப பிள்ளையாய்' - பெரிய திருமொழி. க0, க0, உ. காக்கை கரைந்தால் விருந்துவரும் என்பது பண்டுமட்டுமன்றி இன்றுவரையுள்ள கொள்கை. 'விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே' என்பது காக்கைபாடினியார் பாட்டு (குறுந். உக0).

நிணப்பலி: இறைச்சி யுணவு. பலி: மேற்காட்டிய 'காக்கையது பலியே' என்பதிற் காண்க (உகரு); 'நிணப்பலி யோக்குவன்...குலக் கொடியே' - திருக். உ௲௫. செய்யோடு - வயலில் ஓடுகின்ற. தருகுவன்: பலியும் இம்மீன்களும் தருவேன் என்றவாறு. எட்டுக் கையோன் - சிவபிரான்; 'எண்தோள் வீசி நின்றாடும் பிரான்' - அப்பர். வலத் திருக்கண்: சூரியன்; சிவபிரானது மூன்று கண்களும் முறையே சூரி யன் சந்திரன் அக்கினி என்ற முச்சுடரும் என்று புராணங்கள் கூறும். பெற்ற காதலன் என்றது, சூரியனது புதல்வனான சனிபகவான்; சனிக் குரிய வாகனமாகிய காக்கை என்றவாறு. கார்க்கொடி - கரிய காக்கை; 'உன்னிரண்டு, கண்பாவையும் பெறு வாய்கிளை பேணுங் கருங் கொடியே' - மதுரை. உ௬௬, 'கரைவாய்...கார்க்கொடியே' கலைசை. ௩௫0. 'மருவில் தூவிச் சிறுகருங் காக்கை, அன்புடை மரபின்நின் கிளையோ டாரப், பச்சூன் பெய்த பைந்நிண வல்சி, பொலம்புனை கலத்தில் தருகுவென் மாதோ, வெஞ்சின விறல்வேற் காளையொடு, அஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமே'-ஐங். ௩௯௧. (பா - ம்) வலந்திருக்கண். ௩௯௬

## 13. சுரம் தணிவித்தல்

வானம் சொரிக மழைகதி ரோனை மறைக்கமஞ்சு
கானம் தழைக்கக் கனமயில் ஆலுக காவிடைநற்
றேனும் சுரும்பும் செறிகதண் ணீர்வளம் செல்கதென்னன்
மீனஞ்சு கண்ணி விடலைபின் போகிய வெஞ்சுரமே.

(உரை) மழை பெய்வது முதலியவற்றால் சுரத்தின் கொடுமை குறைவதாக என்று நற்றாய் தெய்வத்தை வேண்டுதல். வானம் மழை சொரிக, கதிரோனை மஞ்சு மறைக்க; கதிரோன் சூரியன்; மஞ்சு - மேகம். ஆலுக - ஆடுக. தென்னன் மீன் - பாண்டியன் கொடியாகிய மீனை யொத்த. வெம் சுரமே - வெப்பமுடைய சுரம், இவ்வாறெல்லாம் ஆகுக. விடலை: பாலைவனத்துக்குரிய தலைவன் பெயர். 'மள்ளர் கொட் டின் மஞ்ஞை ஆலும், உயர்நெடுங் குன்றம் படுமழை தலைஇச், சுரம் நனி இனிய ஆகுக தில்ல, அறநெறி இதுவெனத் தெளிந்த என், பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே' - ஐங். ௩௭௧. ௩௯௭

## 14. நன்மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கல்

பஞ்சென அஞ்சும் பதயுகம் காந்தளைப் பாந்தளென்று
அஞ்சும் மனந்தனம் ஆகஞ் செறிந்தில யாளிதங்கும்
வெஞ்சுரம் இன்று விடலைபின் போக விரும்பியவா
வஞ்சி மருங்குனல் லீர்வினை யேன்பெற்ற வாணுதலே.

(உரை) பாதமும் மனமும் மென்மையான தலைவி இக்கொடும் பாலைவழியே எவ்வாறு சென்றாள் என்று நற்றாய் பாங்கியரோடு சொல்லி இரங்கல். பஞ்சென - பஞ்சென்று சொன்னாலே. அஞ்சும் - மிதிக்க அஞ்சும். பதயுகம் - அடியிரண்டும். பாந்தள் - பாம்பு ; காந்தள் மலரைப் பாம்பென்று அஞ்சுகின்ற மனம். தனம் ஆகம் செறிந்தில என்றது இளமை குறித்தபடி. யாளி - சிங்கம். நல்லீர் : பாங்கியரை விளித்தது. வினையேன் : தன்னைக் குறிப்பிட்டவாறு. 'பரற்கானம் ஆற்றின கொல்லோ - அரக்கார்ந்த, பஞ்சிகொண்டு ஊட்டினும் பையெனப் பை யெனஎன்று, அஞ்சிப்பின் வாங்கும் அடி' - நாலடி. ௩௯௬.

பதயுகம் (அடிகள்) என்றமையால் நற்றாய் தலைமகளின் மென்மைத் தன்மைக்கு இரங்கியமையும், அஞ்சும் மனம் என்றமையால் அவள் அச்சத் தன்மைக்கு அச்சமுற்றிரங்கலும், தனம் செறிந்தில என்றமையால் அவள் இளமைத் தன்மைக்கு உளமெலிந்திரங்கலும் கூறியவா றாயிற்று. இம்மூன்றும் பிற கோவைகளுள் மூன்று துறைகளாய்க் காணப்படுதலு முண்டு. ௩௯௮

## 15. செவிலி ஆற்றாத் தாயைத் தேற்றல்

அருகாத அன்புடன் இன்புற மேல்வந் தடுகளிற்றைப்
பொருகாளை பின்சுரம் போயினள் என்று புலம்பிநையேல்
குருகார் கமலக் கொடிதங்கு தேயம் குறுகியவர்
ஒருகாலி னுக்கும் ஒருகையின் நீருக்கும் உட்பட்டதே.

(உரை) மகளின் பிரிவாற்றாமல் வருந்தும் நற்றாயைச் செவிலி தேற்றுதல். அருகாத - குறையாத. பொரு காளை - களிற்றுடன் பொருத தலைவன். நையேல் - வருந்தாதே. கமலக்கொடி - தாமரைத் திருவாகிய நம் மகள். தங்கு தேயம் : தங்கியுள்ள இடம் என்றவாறு.

குறுகியவர் ஒரு காலினுக்கு : குறள் வடிவெடுத்த வாமனமூர்த்திகொண்ட திரிவிக்கிரமாவதாரத்தில் பூமி முழுவதையும் அளந்த ஓரடிக்குள்; குறுகியவர் ஒரு கையில் நீருக்கு - குறுமுனியாகிய அகத்தியர் கடலை யுண்டுவிடும் பொருட்டுத் தம் கையிலெடுத்த உழுநதளவு நீருக்குள்; கருத்து, தலைவி எங்கிருநதாலும் கண்டு தேடிவிடலாம் என்க; **குலோத்துங்க சோழன் கோவை** ருஅஅ - ருகூ0 செய்யுட்களைக் காண்க. ‘நிலந் தொட்டுப் புகாஅர் வான மேறார், இலங்கிரு முநநீர் காலிற் செல்லார், நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின், குடிமுறை குடிமுறை தெரியிற், கெடுநரும் உளரோ நம் காதலோரே’ - **குறுந்.** கரு0. ருகூகூ

## 16. முக்கோற் பகவரை வினுதல்

**உ**றித்தாழ் கரகமும் ஊன்றுமுக் கோலும் உடுத்தசெவ்வான்
எறித்தால் அனைய இருந்துவர் ஆடையும் இந்திரவி
மறித்தால் அனைய குடையுங்கொண் டேவரு வீரொருவன்
நெறித்தாழ் குழல்வல்லி முன்செல்லு மோஇந் நெடுஞ்சுரத்தே.

(உரை) முக்கோலை ஏந்தி எதிரே பாலை வழியே வரும் அந்தணரைப பார்த்து, என் மகளும் மற்றொருவனும் இபபாலை வழியே போகக் கண்டீரோ என வினுதல். உறித்தாழ் கரகம் - உறியில் கட்டித் தாழத் தொங்கவிட்ட கமண்டலம். முக்கோல் - தண்டு. துவர் ஆடை - காவியுடை. ‘எறித்தரு கதிர்த்தாங்கி ஏந்திய குடைநீழல், உறித் தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும், நெறிபடடச் சுவல் அசைஇ...கொளைநடை அந்தணீர், என் மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனும்...காணிரோ பெரும’ என்பது **பாலைக்கலி** அ. இந்து இரவி-சந்திரனையும் சூரியனையும். செல்லுமோ-செல்லக் கண்டீரோ. ச00

## 17. மிக்கோர் ஏதுக் காட்டல்

**மு**ற்று முகிழ்நகை வல்லியை மொய்குழல் முன்வருந்திப்
பெற்றாய் ஒழியப் பிறந்திலை யோபிற வாஅமரர்
வற்று உததி மருந்தைமுன் னுண்ட வாறறிந்தும்
கற்று எனநின் றிரங்குதி யோகடுங் கானகத்தே.

(உரை) அப்பெரியோர், தலைமகள் தலைமகன் ஒருவனுக்கு உரிய ளாதலே உலகியல்பு என்று கூறிக் காரணமுங் காட்டல். முற்று முகிழ் நகை: 'முற்று முகிழ்முலை எவ்வாறு சென்றனள்' - அசதிக் கோவை. மொய்குழல்: நீ. பிறப்பில்லாத அமரர், கடலில் பிறந்த அமுதத்தை யுண்டார்கள்; அவ்வமுதம் கடலுக்குப் பயன்படவில்லை; அதுபோலவேதான் உன் மகளும்; நீ இரங்குவதென் என்றவாறு. அமரர் - தேவர். உததி - கடல். மருந்து - அமுதம். கற்று - கன்றை யுடைய பசு; இவளும் மகளையுடைமையால்; 'கற்று மனமெனக் கதறி யும் பதறியும்' - திருவாசகம். 'சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை, நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செயும், தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே' என்ற பாலைக்கலிப் பாடலை (அ) ஒப்பு நோக்குக. சுOக

### 18. செவிலி எயிற்றியை வினாதல்

ஒன்றிக் கலந்தங் கொருவரைப் போலும் இருவர்தம்மில்
இன்றிக் கடுஞ்சுரத் தேகினரோ இழை கோத்தணிந்த
வென்றிக் கொடுவரிப் பற்பல பூந்தழை வேய்ந்தஅல்குற்
குன்றித் தனத்துப் புளினர்தங் கோலக் குலக்கொடியே.

(உரை) தலைவியைக் கண்டதுண்டா என்று நற்றாய் எயிற்றியைக் கேட்டல்; எயிற்றி - பாலை நிலத்துக்குரியவளான மறத்தி. இன்று இக் கடுஞ்சுரம் என்க. கொடுவரிப் பல் - புலிபபல்; 'புலிப்பற் கோத்த புலம்பு மணித் தாலி' - அகம் எ. புளினர் - வேடர். குலக்கொடியே, ஏகினரோ; நீ கண்டாயோ என்றவாறு. சுOஉ

### 19. செவிலி குரவொடு புலம்பல்

இரும்பாவை பெற்றனை இன்குர வேஇங்கொர் ஏதிலன்பின்
வரும்பாவை நில்லென்ன வாயில்லை யோமழைக் கண்மணியுட்
கரும்பாவை அன்னஎன் கன்னியைக் கைவிடும் அன்னைஒத்த
அரும்பாவி நீயும் அறிகுவன் பாவி அகன்புறவே.

(உரை) நற்றாய் குராமரத்தோடு புலம்பல். குராமரம் பாலைக்குரியது. பாவை பெற்றனை இன்குரவே என்றது, குரவம்பூ பாவையின் வடிவு உடையதா யிருத்தலால்; இது குரவம்பாவை என்னவும்பெறும்; 'குரவம் பாவை கொப்புளித்து' - சிந்தாமணி உ௬௨௦. பாவி நீயும், அறிகுவன் அகன் புறவே என்றது, புறவொடு புலம்பல்; புறவு - முல்லை நிலம். இச்செய்யுளில் குரவொடு புலம்பலும் புறவொடு புலம்பலும் இரண்டு துறையும் கூறியவாறு. ௪௦௩

## 20. சுவடு கண்டு இரங்கல்

பூவடி வாளி எயினர்கண் ணிப்பிழை போந்தஉழை
தாவடி தீயும் தழல்நெடும் பாலை தடக்கைவென்றி
மாவடி யாங்கவை யூங்கிவை மாவை மலைந்தவள்ளல்
சேவடி ஈங்கிவை செங்கனி வாய்மங்கை சீறடியே.

(உரை) தலைவன் தலைவியருடைய அடிச்சுவட்டைக் கண்டு செவிலி இரங்கிக் கூறுதல். வாளி - அம்பு. எயினர் கண்ணி - வேடர் விரித்த வலை. உழை தாவடி தீயும் தழல் - தாவுகின்ற மானின் அடியும் தீந்து போகும் வெப்பமுடைய. மா அடி: விலங்கின் அடிகளாகும், ஆங்கு அவை என்று செவிலி ஒவ்வொன்றாகச் சுட்டிக் காண்கிறாள். மாவை மலைந்த வள்ளல் - அவ்விலங்கினோடு பொருத தலைவன். மங்கை, தலைவி. ஊங்கு இவை வள்ளல் சேவடி, ஈங்கு இவை மங்கை சீறடி. ௪௦௪

## 21. செவிலி கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்

பைந்தார் விடலையும் நீயும் தகஇப் பரிசெதிரே
வந்தார் சிலருள ரோசொல்லு வீர்வண்ட லாடுமந்தண்
சந்தார் தடமுலை ஆயமும் தாயரும் தான்வளர்த்த
செந்தார் மழலைக் கிளியுமென் போல்நின்று தேடவைத்தே.

(உரை) காதலனும் காதலியுமாக அவ்வழி வருவோரைக் கண்டு, உங்களைப போலவே இருவர் எதிரே சென்றமை கண்டீரோ என்று கேட்டல். தக இப பரிசு - உங்களைப் போலவே இருவர்; சிலர் என்றது,

தான் கருதிய இருவரை. இ. வி. கசுசு. (பா - ம்) நீயுந் தழைக இப்பரிசெதிரே ; உளரோ மகனே ; போலின்று. உ௦டு

## 22. அவர் செலவுணர்ந்திச் செவிலியை மீட்டல்

மீளா தொழிவதென் அன்னைவெங் கானகம் பைங்குழைதோய்
வாளார் நயனியும் வள்ளலும் போய்வன் சுரத்திடையே
நாளார் மலர்ப்பொழில் நண்பகற் றங்கினர் பின்பகற்போய்த்
தாளார் நறுமலர்த் தண்புனல் நாட்டின்று சார்குவரே.

(உரை) அவர்கள், தலைவனுந் தலைவியும் நலமே சுரங் கடந்து பொழில் சென்றமை கூறிச் செவிலியை மீண்டு வரச் செய்தல். வாளார் நயனி - வாளொத்த கண்ணுடைய மகள். தண் புனல் நாடு என்றது, சுரங் கடந்த பின்னுள்ள மருத நிலத்தை என்றவாறு. உ௦சு

## 23. செவிலி புதல்வியைக் காணாது கவலை கூர்தல்

கல்லார் சுரத்தில் வருவார் இருவரைக் கண்டவெல்லை
எல்லாம் அவரவர் என்றிருந் தேன்அவர் எம்மிருவர்
அல்லா நிலைமை அருவினை யேன்இங் கறிந்தபின்னும்
செல்லாது மீண்டொரு காலிரு காலுமென் சிந்தையுமே.

(உரை) கவலை கூர்தல் - கவலை மிகுதல். கல்லார் - கற்கள் நிறைந்த. இருவரை - எவரேனும் இருவரை. எல்லாம் அவரவர் என்று - இருவராய் வரக் கண்டோர் எல்லாம் என் மகளுந் தலைவனுமே என்று. எம்மிருவர் - என் மகளுந் தலைவியும். ஒருகால் - ஒரு தடவை. இரு காலும் : கால்கள் திரும்ப மறுக்கின்றன என்றவாறு. இ. வி. கசுசு. (பா - ம்) சுரத்து. உ௦எ

# கக. மீட்சி

மீட்சி-தலைவன் தலைவியைக்கொண்டு தலைவி இல்லத்துக்குமீளுதல்.

## 1. தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்கு உணர்த்தல்

ஏடார் மலர்க்குழல் வல்லியை அன்னைஇத் தீவினையேன்
நாடா இடமில்லை ஞாலத் தகல்வயின் நன்கமலக்
காடார் பழனக் கழனிநன் னாடு கடந்துதன்னூர்
வாடா வளமனைக் கொண்டுசென் றான்ஒரு வள்ளலின்றே.

(உரை) தலைவி தலைவனுடன் அவனூர் அடைந்தாள் என்பதைச் செவிலி நற்றாய்க் குரைத்தல். ஏடார் - இதழ் விரிந்த. அன்னை : விளி. தீவினையேன் என்றது தன்னை (செவிலி). பழனக் கழனி நன்னாடு : மருதம். இ. வி. கசுஅ. (பா ம்) சேடார் ; வெந்தீவினையேன் ; நாடாவயின் ; பழனத் தகவயின். ௪0௮

## 2. ஊர் வரைந்த நெடுந்தகை மீட்சி

அனைத்தாய தன்னகர் ஆன்றபொன் மாளிகைச் சான்றவர்முன்
எனைத்தாய பல்கிளை ஏத்த மணம்புரிந் தின்புறுநாள்
மனைத்தாயர் தந்தைதன் ஊர்வண்ட லாயம் மறந்ததெல்லாம்
நினைத்தாள் நிரைவளை மீண்டான் அறிந்து நெடுந்தகையே.

(உரை) தலைவியைத் தன்னூர் கொண்டு சென்று மணம் புரிந்து வாழுந் தலைவன், அவள் தன் தாய் வீட்டை நினைந்தமை யுணர்ந்து, அவளையுடன்கொண்டு அவள் தாய் வீடு திரும்பல். சான்றவர்-பெரியோர். கிளை-சுற்றம். மனைத்தாயர் முதலியோரை நிரைவளை நினைத்தாள், அஃதறிந்து நெடுந்தகை மீண்டான். இ. வி. கசுஅ, உடன்போய் வரைந்த நெடுந் தகை மீட்சியுரைத்தற்கு மேற்கோள். (பா - ம்) தினைத்தாய தன்னகர் ; ஒன்றிப் பொன். ௪0௯

## 3. மீணெறித் தன்மை வானுதற்கு உரைத்தல்

துப்போது சேயிதழ்த் தூநகை யாய்வெஞ் சுரத்திடைநாம்
அப்போ திருந்த அகன்பொழி லாம்இது ஆரமுலைக்(கு)

ஒப்போ தியபொன் முலைக்கன்னி காரம் உதுவதுநீ
எப்போதும் வைகும் இளமரக் காவும் இலஞ்சியுமே.

(உரை) திரும்பி வரும் தலைவன் முன்னந் தாங்கள் வந்த சுரம் முதலிய நெறியின் தன்மையைத் தலைவிக்குக் காட்டல். துப்பு ஒத்து - பவளம் போன்ற. சேயிதழ் - செவ்விதழ். அப்போது - முன்னம் என்னூர் சென்றபோது. இருந்த - தங்கிய. கன்னிகாரம் - கோங்கு; 'கன்னிகாரத்து.........ஒருத்தி தோன்றி' - சிலப். கக. ககO. உன் முலைக்கு ஒப்பாகச் சொல்லிய பொன்னிற அரும்பையுடைய கோங்க மரம் உதுவாகும். இலஞ்சி - சோலை. (இ. வி.) கசுஅ, தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றற்கு மேற்கோள். (பா - ம்) பொழிலாயத் துன்னுர முலை; மென்முலைக் கன்னிகார மிம்முற்றத்து நீ சகO

## 4. தலைவி முன்செல்வோர் தம்மொடு தன்வரவு பாங்கியர்க்கு உணர்த்தல்

ஒன்றே உளங்கொண் டிருபிறப் பெய்தி முத் தீயுமுய்த்து
நன்றே நவில்கின்ற நான்மறை யீர்தம்மை நானகன்ற
அன்றே தொடங்கி அலமரும் ஆயத் தரிவையர்க்குச்
சென்றே வருவ துரைமின்கள் யாம்அத் திருநகர்க்கே.

(உரை) பாங்கியர்க்கு உரைக்குமாறு தலைவி சொல்லி யனுப்புதல்; முன் செல்வோர், அந்தணர். ஒன்றே உளங்கொண்டு - கடவுள் என்ற ஒரு பொருளையே எண்ணி; 'வேறோரா நெஞ்சத்துக் குறிப்பேவல் செயல் மாலைக் கொளைநடை அந்தணீர்' என்றது காண்க (பாலைக்கலி அ). இருபிறப்பு அந்தணருக்குரியது; இரு பிறப்பாளன் - சச. முத்தீயும் உய்த்து - காருகபத்தியம் ஆகவனீயம் தாட்சிணாக்கினி ஆகிய மூவகை வேதாக்கினியும் ஓம்பி; 'இருபிறப் பாளர் முத்தீப் புரைய'-புறம் நகூஎ. நவில்கின்ற - வேதத்தை ஓதுகின்ற. நான்மறையீர் - நான்கு வேதத்துக்கு முரிய அந்தணரே. ஒன்று முதல் நான்குவரை, எண்ணலங்காரம். தம்மை என்றது பாங்கியரை. அலமரும் ஆயத்து அரிவையர் - துன்புறும் பாங்கியர். சென்றே - நீங்கள் சென்று. யாம் நகர்க்கு வருவது உரைமின்கள். இ. வி. கசுஅ. (பா - ம்) எய்திப் முத்தியுற்ற. சகக

### 5. முன் சென்றோர் பாங்கியர்க்கு உணர்த்தல்

நண்போ டினியதொர் நல்விருந் தெய்துவிர் நாளைஎல்லைத்
தண்போ தணிகுழற் றையனல் லீர்செய்ய தண்டமிழ்தோய்
பண்போல் இனிய பணிமொழிச் செந்தளிர்ப் பைந்தொடிதன்
கண்போல் ஒருவற் கலந்துடன் மீள்வது கண்டனமே.

(உரை) அவர்கள் அவ்வாறே உணர்த்தல். விருந்து எய்துவிர் - விருந்து வரும். தமிழ்தோய் பண்போல் இனிய : 'தென் செய்த பண்ணின் திறம்' என்றது காண்க (சரு). பணிமொழி - பணிவுடைய மொழியினள். இ. வி. கசுஅ. (பா - ம்) எய்துவர். சகஉ

### 6. பாங்கியர் கேட்டு நற்றாய்க்கு உணர்த்தல்

மேவியொன் னார்எம்மை மெய்த்துணை போக விடுத்திருந்த
பாவியென் னாவகை பாக்கியம் செய்தனம் பாயரிக்கண்
காவியன் னாள்அருங் கானகம் நீந்திநம் மாநகர்வாய்
ஆவியன் னாரொடு வந்தனள் காண்என்பர் அந்தணரே.

(உரை) ஒன்னார் என்றது வேண்டாதவரை. இவர் தம்மைப் பாவி என்று சொல்லா வகை, பாக்கியம் செய்தனம் என்கின்றனர் பாங்கியர். பாக்கியமாவது, மீண்டு வந்தமை. ஆவி அன்னார் - தலைவன். இ. வி. கசுஅ. (பா - ம்) ஒன்னாரென்ன. சகங

### 7. வேலனை நற்றாய் வினவுதல்

கருமோ கரவரி வண்டும் சுரும்பும் கலந்துதம்மிற்
பொருமோதி மின்னுடன் போந்தபுண் வேலர் புகன்றஎம்மில்
வருமோ விடலை வரவொழிந் தால்உண் மகிழ்வதுவை
தருமோ நமக்கவ னைத்தந்த தாய்எண்ணிச் சாற்றுகவே.

(உரை) தலைமகளைத் தலைவன் இங்கு அழைத்து வருவானா, மணஞ்செய்துகொள்வானா, அவனை ஈன்ற தாயையும் எண்ணிச் சொல்வாயாக என்று நற்றாய் வேலனை அழைத்துக் குறி கேட்டல். மோகர வரி வண்டு - மயங்கிய வண்டு. வண்டும் சுரும்பும் பொரும் கூந்தலுடைய மின்; ஓதி - கூந்தல்; மின் - தலைவி. வதுவை - மணம்

‘ முதுவாய் வேல, கூறுக மாதோநின் கழங்கின் திட்பம், மாறு வரும் பனி கலுழுங் கங்குலில், ஆறுதது துயருமெங் கண்ணினிது படீஇயர், எம்மனை முந்துறத் தருமோ, தன்மனை உய்க்குமோ யாதவன் குறிப்பே ’ - **அகம்** கசுரு. ‘ சுரம்போய் வருவோன், என்மானை என்மனை யிற்றருமோ தன்னை யீன்ற நற்றாய், தன்மா நகருய்க்கு மோசொல்லு வீரொன்று தாலெனக்கே’ - **தஞ்சை.** ௩௫௪. இத்துறை, நற்றாய் தலைமகன் உளங் கோள் வேலனை வினாதல் என்னவும் பெறும். ௪௧௪

## ௨௦. தன்மனை வரைதல்

தன்மனை வரைதல் - தலைவன் தலைவியைத் தன் வீட்டில் மணம் செய்துகொள்ளுதல்.

### 1. தோழி நற்றாய்க்கு வரைந்தமை கூறல்

அன்னே வதுவை அதுநம்மி லேவந் தயரவெண்ணின்
முன்னே வரைவு முடிந்தது போலும் முகிழ்த்தகொங்கைப்
பொன்னே சுணங்கின் அணங்கினை வெஞ்சுரம் போயகன்று
கொன்னே வளங்கெழு பொற்கொடி மாநகர்கொண்டுசென்றே.

(உரை) வரைந்தமை - தலைவன் தலைவியை மணந்தமை. அன்னே - விளி. வதுவை நம்மிலே அயர - நம் வீட்டில் மணம் புரிய. கொண்டு சென்று, வரைவு முடிந்தது போலும். ௪௧௫

### 2. தலைமகன் பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கு இயம்பு சென்று என்றல்

ஓங்கும் பலவும் கதலியும் சூழுமெம் மூர்வயிற்போய்ப்
பாங்கொன் றியகுழல் வேள்விமுன் னுகப் பணிமொழியாய்
வாங்கும் சிலைநுதல் மங்கைக்கு மங்கல நாண்புனைந்த(து)
ஈங்குன் பெருந்தமர் யாவர்க்கும் நீசென் றியம்புகவே.

(உரை) நான் மணந்தமை உம்மவருக்குச் சொல்க என்று தலைவன் பாங்கிக்குக் கூறுதல். வேள்வி முன்னுக - அக்கினி சாட்சியாக. இ. வி. கஎக, உற்றாங் கிருவரும் தலைவி இல்வந்துழித் தலைவன்

பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க் கியம்பு சென்று என்றற்கு மேற்கோள். (பா - ம்) பாங்கொன்றிய செழும் பாவகன் முன்னர். சகசு

### 3. பாங்கி தானது முன்னே சாற்றியது உரைத்தல்

காயமும் திண்ணமும் கார்வரை போலும் கருங்களிறும்
சீயமும் போலும் திறலண்ண லேசுரம் செல்லஉய்த்த
மாயமும் போயுன் வளநகர்க் கெய்தி வரைந்ததுவும்
ஆயமும் சேரியும் ஊருமுன் னேஇங் கறிந்ததுவே.

(உரை) அது - மணஞ் செய்துகொண்ட செய்தியை. காயமும் திண்ணமும் - உடலும் வலிமையும். கார்வரை - கரிய மலை. சீயம் - சிங்கம்; களிறும் சீயமும் ஒத்த திறல். எய்தி வரைந்தது முன்னே இங்கறிந்தது. சகஎ

## உக. உடன்போக்கு இடையீடு

உடன்போக்கு இடையீடு - தலைவனும் தலைவியும் செல்லும்போது இடையில் நிகழும் தடை.

### 1. நீங்கும் கிழத்தி பாங்கியர் தமக்குத் தன் செலவு உணர்த்தி விடுத்தல்

இன்னே இரங்குமென் ஆயத் தவருக்கும் ஈன்றெடுத்த
அன்னே எனவருந் தன்னைய ருக்குமிவ் வாண்டகைதன்
பின்னே வளங்கெழு தண்ணருங் கானம் பெயர்கின்றசொல்
சொன்னேன் உமக்கெம தூர்செல்லு வீரிது சொல்லுமினே.

(உரை) தான் தலைவனுடன் செல்லுதலைப பாங்கியருக்கு உணர்த்தி விடுதல்; கிழத்தி - தலைவி. தன்னையர் - தாய் தந்தையர். சொல் - தான் போகின்றதாகிய செய்தி. எமதூர் செல்லுவீர்: தன்னூருக்குச் செல்வோரை வழியிற் கண்டு சொல்லுதல். இ. வி. களரு. (பா - ம்) என்னே எனவரும்; கானகம் போகின்றவா; சொல்லுமின்றே. சகஅ

### 2. நற்றாய்க்குக் கண்டோர் மொழிதல்

அன்பே மருவி அருஞ்சிலை பூண்டகை ஆண்டகைபின்
நின்பேதை சென்றனள் நீள்நிழற் கானிடை நீபுலம்புற்(று)

என்பே துறுவ திலங்கிழை யாயிங்ஙன் ஏகியமான்
தன்பே ரறிவுக் குயர்வட மீனும் தகுவதன்றே.

(உரை) இவ்வாறு தலைவியால் சொல்லி விடுக்கப் பெற்ற அந்தணர் அச்செய்தியை நற்றாய்க்குக் கூறுதல். சிலை - வில். என் பேதுறுவது - வருந்துவது ஏன். உயர் வட மீன் - கற்பில் உயர்ந்த வட மீனாகிய அருந்ததி; 'வடமீன் புரையுங் கற்பின் மடமொழி' - புறம் கஉஉ; 'இறந்த கற்பினட்கு எவ்வம் படரன்மின், சிறந்தானை வழிபடீஇச் சென்றனள், அறநதலைப் பிரியா ஆறுமற் றதுவே' - பாலைக்கலி. அ. தகுவ தன்று - ஒப்பதன்று. சகக

3. தமர் பின்சேறலைத் தலைவி கண்டு தலைவற்கு உணர்த்தல்

கொம்மைய வென்றிக் கொடுஞ்சிலை வாங்கிக் கொடுஞ்சரங்கள்
செம்மைய வாகத் தெரிந்துகைக் கொண்டு செயிர்த்தெழுந்த
வெம்மைய ராகின ரோதம ரோவிறல் வேடர்கொல்லோ
எம்மைய ரோஅறி யேன்சிறி யேனிவ் விருஞ்சுரத்தே.

(உரை) தன்னைத் திரும்ப அழைத்துச் செல்ல வேண்டுமென்ற எண்ணத்தோடு தம்மவர் தொடர்ந்து வருவதைக் கண்டு தலைவி கூறுதல். கொம்மைய - வலிமை பொருந்திய. செயிர்த்து - கோபித்து. வெம்மையர் - கொடியவரோ என்றபடி. எம்மையரோ - என் தந்தை முதலியவரோ. சஉ௦

4. அவன் விடுத்து ஏகல்

போரே கருதி வரிலெவ ராயினும் போர்தொலைத்து
நேரே விசும்பை நிறைகுடி ஏற்றுவன் நின்னையரேல்
யாரே இவரை இகலிலொப் பார்இவ் விருநிலத்தில்
வாரேய் வனமுலை யாய்மறை கோஇவ் வனமருங்கே.

(உரை) தொடர்ந்து வருவோர் தலைவியின் தமர் என்றறிந்து தலைவன் அவர்களோடு போரிடாது தலைவியை அவர்கள்பால் விடுத்தல். விசும்பை நிறைகுடி ஏற்றுவன் என்றது, அவர்களை மாய்ப்பேன் என்றவாறு; 'விண்ணங் குடியேற்றி' - கந்தர் கலிவெண்பா. நின்னையரேல் -

உன் தமரா யிருப்பின். இகலில் - போரில். ஏய் - பொருந்தும். மறைகோ - நான் மறைந்திருப்பேன். சஉக

## 5. அவன் புறங்கண்டு கவன்று உரையாடல்

என்னையர்க் கென்றும் இவற்கென்றும் ஏதம் கருதிலிந்த
மின்னயர் வுற்றுயிர் வீடுமிங் கென்றுமிவ் வெற்பிடையே
தன்னை அரும்திறல் சாயக் கரந்த தலைவனுக்கென்
முன்னை அருந்தவ மோஅறி வோவந்து முன்நின்றதே.

(உரை) அவன் மறையக் கண்டு தலைவி கூறுதல்; கவன்று - கவலையுற்று. என்னையர் - என் தந்தையர். இவற்கு - இத்தலைவனுக்கு. ஏதம் - இருவரும் போரிடில் துன்பம்வரு மாதலினாலே. மின் அயர் வுற்று வீடும் - மின்னாகிய நான் துன்புற்று இறந்து படுவேன். என்றும் - என்று தலைவன் கருதி. தன்னை அரும்திறல் சாயக் கரந்த - தன் அரிய போர் வலிமை புலபபடாதவாறு மறைத்த. சஉஉ

## 6. கண்டோர் இரங்கல்

இருகுன் றனைய இளமுலை மானுடன் ஏகுமிவன்
ஒருகுன் றெனநின் றுடலும்வெங் கூற்ற மடல்குறித்து
வருகின்ற வாறென வாட்டருஞ் செங்கை மறவர்கெட்டேம்
அருகொன்ற நின்றினி யார்தடுப் பாரென் றறிகிலமே.

(உரை) கண்டோர் தலைவனும் தலைவியின் தமரும் போர் புரிவரோ என்றஞ்சி வருந்தல். இவன் ஒரு குன்றெனச் சினத்தோடு கூற்றம் அடல் குறித்து வருவதொபப வர, கண்ட மறவர் அருகு ஒன்ற, யார் தடுபபார் என்க. அடல் குறித்து - போரை எண்ணி. மறவர் - தலைவியின் தமர். அருகு ஒன்ற - நெருங்க. கெட்டேம் என்றது: இருவர் நிலையும் கண்டு இரங்கியவாறு; 'கெட்டேன்' என்றது காண்க (உகசு). இ. வி. கஎரு, தமர்பின் சேறலைக் கண்டோர் இரங்கற்கு மேற்கோள். (பா - ம்) மாதுடன்; வெருள்கின் றனனென நீற்றனன் கூற்றம்; வருகின்ற வான்தொடர் வேங்கையைப போலும்; செங்கைச் சினவர்; அருகொன்றி. சஉ௩

## 7. கண்டோர் தமரைத் தெருட்டல்

குலனும் நலனும் குணமுங் குன்றுத குரிசிலிவன்
நலனென் றியஇவள் கற்பினிற் பாள்பின் நண்ணியநீர்
வலனும் பொருசிலை வண்மையும் தொன்மை மரபுங்குன்றுப்
புலனும் பெரிதுடை யீர்இனி யாம்என் புகல்வதுவே.

**(உரை)** இவ்வாறு இரங்கியவர்கள் தமருக்கு நல்லறிவு கொளுத்துதல். குரிசில் - சிறந்தவன். கற்பின் நிற்பாள் என்றது இவளது இச் செயல் கற்பொடு பொருந்துவதாகும் என்றபடி. பின் நண்ணிய நீர் - இவள் பின்தொடர்ந்துவந்த நீர். குன்றுப புலனும் - நிறைந்த அறிவும். என் புகல்வது என்றது, நீவிர தலைவனொடு பொர எண்ணுதல் தக்கதன்று என்றவாறு. சஉச

## 8. சான்றோர் விலக்கு

விற்கொண்ட காளையர் மீளா அறிஞரின் மெய்யுணர்ந்தோர்
சொற்கொண்டு மீண்டுதம் தொன்னகர் மேயினர்தோகையிவள்
கற்கொண்ட கானம் கடந்துபொற் சீறடி கன்றினளாம்
இற்கொண்ட போதிங் கிதுநின்ற ஊர்சுற்றம் யாங்கழுமே.

**(உரை)** பின் சென்ற தமரைச் சான்றோர் நல்லுரை கூறி விலக்கி மீளச் செய்யவும் சுற்றத்தார் தலைவி தவிராமைக்காகத் துயருறுதல். காளையர் - தலைவியின் தமரான மறவர். மீளா - தம்மூர் நோக்கி மீளவும். மீண்டு - தம்மூர் மீண்டு. இற்கொண்டபோது - வீட்டுக் கழைத்துவந்த போது. ஊர் சுற்றம் - ஊரும் சுற்றமும். யாங்கழும் - எவ்வாறு துயருற்றது. (பா -ம்) மிளா வறிஞ்ஞரின் ; தன்றொன்னகர். சஉரு

## 9. பெயர்க என உரைத்தல்

செழுங்கொண்ட லும்மதி யுந்தவழ் சாரற் றிகழுருவிக்
கொழுங்குன்ற வாணர் குலமக ளேபைங் குரைகடற்போல்
அழுங்கும் கிளையுநம் அன்னையும் தந்தையும் ஆயவெள்ளத்(து)
ஒழுங்கும் புகழப் பெயர்களம் மோடுன் உளமகிழ்ந்தே.

(உரை) தலைவியை அவளூருக்குப் பெயர்க என்று தலைவன் அழைத்தல். அழுங்கும் கிளையும் - துன்புற்ற சுற்றமும். ஒழுங்கு - நிரை. புகழ - நம்மைக் கண்டு மகிழ்ந்து புகழுமாறு. பெயர்க - மீண்டு செல்ல வருவாயாக. சஉசு

## 10. தமர் பின்வந்துழி நிகழ்ந்தமை கூறல்

ஊன்தோய் சுடர்வடி வேல்வல னேந்தி உடன்றமரில்
ஏன்றோர் புரந்தவர் என்னையர் தோன்றில் இருஞ்சுரத்து
வான்தோய் குலத்து மறலிஅன் னானை மறைத்தகுன்று
சான்றோ மொழியுமென் றோஎன்றன் ஆருயிர் தாங்கரிதே.

(உரை) தமர்பின் செல்லுந தலைவி தலைவனை எண்ணித் தன் மனத்துள் வருந்தல். ஊன் தோய் - ஊனிலே தைத்த. உடன்று - சினந்து. அமரில் ஏன்று - போரில் எதிர்த்து. புரந்தவர் - பெற்றோர். என்னையர் - உடன்பிறந்தோர் முதலாயினோர். இவர்கள் இடைச்சுரத்துத் தோன்றில், மறைத்த குன்று சான்றாக மொழியுமென்று அஞ்சி என் உயிர் தாங்கரிது என்று வருந்துகிறாள். மறலி அன்னான் - கூற்றை யொத்த தலைவன். (பா - ம்) புரங்கவர். சஉஎ

## 11. ஊரது நிலைமை தோழி உரைத்தல்

சென்றாக நின்ற இடந்தொறும் காதல் திகழ்ந்தவண்ணம்
ஒன்றாக நின்றலர் தூற்றிய ஊர்உர வோனுடன்நீ
குன்றாக் கொடுநெறி சென்றனை என்னக் கொடியஉயிர்
பொன்றா திருக்கினும் யாவினும் சாலப் புலம்பியதே.

(உரை) முன்னமே அலர்தூற்றிய ஊரார், இபபோது இவள் கொடுநெறி சென்றனளென்றறிந்து மிகவும் வருநதினரென்று பாங்கி தலைவிக்குரைத்தல். அலா தூற்றிய ஊர் - முன்னே பழிதத ஊரினர். உரவோன் - தலைவன். குன்றாக் கொடு நெறி - கொடுமை குன்றாத சுரத்தின் வழியே. என்ன - என்று கூறியவுடன். பொன்றாது - அழியாமல். முன்னமே பழித்த ஊர் இபபோது வருநதிற்று. (பா - ம்) தின்றாக நின்ற. சஉஅ

### 12. தலைமகற்கு நற்றாய் கூறியது

பூணார் வனமுலைப் பூவையும் நீயும் புணர்ந்துடனே
சேணார் கொடுநெறி சென்றஅந் நாள்முதல் சிந்தைநொந்து
காணா தலமரும் அன்னையும் நீசென்று காட்டுதிமின்
கோணாக கற்பினள் மங்கல நாணுமிக் கோலமுமே.

(உரை) மணந்த தலைவியின் கோலத்தைத் தலைவியின் நற்றாயிடம் காட்டுமாறு தலைவனுக்கு அவன் நற்றாய் கூறுதல்; ' "அறனன்றம்ம தானே நிறையழிந்து, ஆழ்துயர் அவலம் உழக்கும், காதற் றாய்க்குக் காட்டினை வம்மே" (கஙஉ) என்பது தலைமகற்குத் தலைமகன் நற்றாய் சொல்லியது' என்ற **தமிழ்நெறி விளக்கம்** காண்க. அன்னையும் - நற்றாயிடத்தில். கற்பினள் - கற்புடையவளான தலைவியின்; மங்கல நாணும் இக்கோலமும் காட்டுதி. (பா - ம்) கற்பின்நன். சஉகூ

### 13. உடன்போக்கு இடையீடுற்று வரைதல்

மின்சென்ற வேற்கண்ணி அண்ணல்பின் போகிய வெஞ்சுரத்
பின்சென்ற அன்னையர் பேதையர் மீண்டு பெரிதுவந்து [துப்
முன்சென்ற கேண்மை முறைவழு வாமல் முதுநகர்க்கே
மன்சென்று வேட்கை மணநயந் தார்கள்தம் வாழ்மனைக்கே.

(உரை) உடன் போக்குத் தடைப்பட்ட பின் மணம் நிகழ்தல். இது கவி கூற்று. அன்னையரும் பாங்கியரும். சஙo

## உஉ. வரைதல்

வரைதல் - மணஞ்செய்து கொள்ளல்.

### 1. தலைமகன் வரைந்துழி மகிழ்ச்சி

பன்னாள் முயன்று வரைந்துட னாகிய பாயலினும்
முன்னாள் தளர்ந்தது மெய்முயங் காமல் முயங்கினளின்(று)
என்னா ருயிரனை யாளுட னாக இயைந்தஇன்பம்
அந்நாள் அமுதம் அருந்திய வானவர் ஆனந்தமே.

(உரை) மணஞ் செய்த போது பெற்ற மகிழ்ச்சியைத் தலைவன் கூறுதல். முயங்கினள் - கூடினள். அந்நாள் - பண்டு. ௪௩௧

## 2. புணர்ச்சியின் மகிழ்தல்

**அ**றந்தங்கு வானிலும் ஆர்கலி சூழ்ந்த அவனியிலும்
பிறந்தென் பதமிங்ஙன் பெற்றவ ரார்இன்று பேரமளிப்
புறந்தங்கு மென்குழற் பூவைமெல் லாகத்தைப் புல்லுந்தொறும்
இறந்தும் பிறந்தும் இனியமென் போகம் இயைந்தனமே.

(உரை) வான் - வானுலகு; அறிந்தங்கு என்றது அறஞ்செய்தோர் தங்குதற்குரியதாதலால். ஆர்கலி : கடல். அவனி - பூவுலகு. என் - என்ன பயன். பதம் - தகுதி. ௪௩௨

இதுவரை, வரைவியல் என்றும், இனி வருவது மணத்தின் பின்னுள்ள நிகழ்ச்சிகளைக் கூறுதலால் **கற்பியல்** என்று சொல்லப்பெறும்.

# உ௫. இல்வாழ்க்கை

இல்வாழ்க்கை - தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்துதல்.

## 1. உழையர் வாழ்த்து

**வே**லும் சிலையுமில் லாவிறல் வேளன்ன வேந்தனும்இச
சேலும்கயலும் அனையகண் ணாளும் திகிரியங்கை
மாலும் திருவும் மதிமுடி யோனும் மலைமகளும்
போலும் தகையின்று போலென்றும் நீவிர் புணர்ந்திருமே.

(உரை) ஏவலாளர் இருவரையும் வாழ்த்துதல்; உழையர் - ஏவலாளர். வேல் இல்லா வேள் - முருகன். சிலை இல்லா வேள் - மன்மதன். அன்ன - இவர்களை யொத்த. வேந்தன் - தலைவன். திகிரியங்கை மால் - சக்கரமேந்திய திருமால். மதிமுடியோன் - திங்களை முடித்த சிவபிரான். மலைமகள் - உமாதேவி. ௪௩௫

## 2. தோழி வாழ்த்து

**தே**ற்றிய வஞ்சினம் பொய்யா வகைநின் திருப்புயத்தில்
ஏற்றிய தொங்கல் நறுங்குழற் கேற்றி இலங்கிழையார்

தூற்றிய பேரல ரும்தொலை யாஎன்கண் சோர்புன லும்
மாற்றிய எம்பெரு மான்வாழி வாழி வளஞ்சிறந்தே.

(உரை) தலைவனைப பாங்கி வாழ்த்தல். வஞ்சினம் பொய்யா வகை: பிரியேன் என்ற சூளுறவு பொய்க்காதபடி; கஎ. ஏற்றிய தொங்கல் குழற்கு ஏற்றி என்றது, உன் மாலையை இவளுக்குத் தந்து; அதாவது இவளை நீ மணந்து என்றவாறு. நறுங்குழல் - தலைவி. அலரும், தொலையாத என் கண் சோர் புனலும் மாற்றிய பெருமான் வாழி. இ. வி. கஅ௦, தலைவனைப் பாங்கி வாழ்த்தற்கு மேற்கோள். (பா - ம்) இவள் குழற்கேற்றி; தூற்றிய போலவரும். ௨௩௪

## 3. பாங்கியைப் புகழ்தல்

அந்நாள் முதனின்றும் இன்றளவாய்வரும் அப்படர்போய்ப்
பொன்னார் அமளி பொருந்தினம் யாம்பொருந் தாதவரின்
இன்னா அரும்பிணிக் கின்மருந் தாக இடைநின்றுநீ
முன்னாள் முயன்ற முயற்சியிவ் வாறு முடிந்ததுவே.

(உரை) தலைவியைத் தான் பெறப பாங்கி உதவியமை தலைவன் புகழ்தல். அந்நாள் முதல் - இவளைத் தான் அறிநத நாள் முதல் (உக). அபபடர் - தலைவியைக் கூடாமையாகிய துன்பம். இன் மருந்து - இனிய மருநது. முடிநதது, மணமாகி இல்லற வாழ்க்கை கூடிற்று. இ. வி. கஅ௦, தலைவி முன் பாங்கியைப புகழ்தற்கு மேற்கோள். (பா - ம்) முதலின் றளவுள வாய அரும்படர். ௨௩௫

## 4. பாங்கி புகழ்தல்

பனிநின்ற சோலைப் பலவுச் சினைகலை பாய்ந்துகளக்
கனிநின்று நீளும் கணமலை நாட கழைக்கரும்பை
நுனிநின் றருந்திய தொக்குமன் றேமின் நுடங்கிடையாள்
துனிநின்ற நாணம் தடுக்கநின் னோடு தொடுத்தஅன்பே.

(உரை) தலைவனைப் பாங்கி புகழ்தல். பனிநின்ற - மேகந் தங்கிய. கழைக்கரும்பை நுனி நின்று அருந்தியதொக்கும்: 'எஞ்ஞான்றும், குருத்திற் கரும்பு தின் றற்றே'; 'நுனியிற் கரும்புதின் றற்றே':

நாலடி. உகக, கஙஅ. நுடங்கிடையாள் - துவளும் இடையுடைய தலைவி. துனி - ஊடல். இடையாள் நின்னோடு தொடுத்த அன்பு, அருந்தியதொக்கும் என்க. இ. வி. கஅ௦. (பா - ம்) பலவின் சுளைரசம் பாய்ந்துலவும்; கனமலை, தொடுத்த நண்பே. சஙசு

## 5. தலைமகற்குத் தோழி சொல்லியது

இன்னிசை வண்டுறை தாரிறை வாமின் இலங்குவெற்பர்
தன்னிசை வைத்துத் தவறா துனக்குத் தருகவென்றும்
மன்னிய கேண்மை மறவாமல் நீயும் வரைகவென்றும்
கன்னியும் நானும் கடவுளை வேண்டினம் காதலித்தே.

(உரை) தலைவன் மணத்தல் வேண்டித் தாங்கள் கடவுளை வேண்டினமை பாங்கி தலைவனுக்குக் கூறுதல். வெற்பர் - தலைவியின் தமர். தருக வென்றும் வரைகவென்றும் கடவுளை வேண்டினம். தன்னிசை வைத்து - தன் புகழ் கெடாமல்; 'பிரிவுறின் மாய்க என் பேரிசை' என்றமை காண்க (கஎ). கன்னி - தலைவி. சஙஎ

## 6. ஆரா அன்பின் அவன்நிலை கூறல்

முருகவிழ் முங்குழல் மோந்திவள் ஏந்து முலைபுளகித்(து)
உருகி மயங்கி முயங்கியும் நீர்உல வாதஇன்பம்
பெருகுவ தன்றிப் பிரிந்தறி யீர்பின்னை யானுமக்கிங்(கு)
அருகிய நாளென்செய் தீர்ஐய னேஇந்த அன்புகொண்டே.

(உரை) மணமாகுமளவும் எவ்வாறு பிரிந்து ஆற்றியிருந்தானென்று பாங்கி அவனை வினுதல். உலவாத - தெவிட்டாத. யான் என்றது தலைவியை. அருகிய - கிடையாது போன. இ. வி. கஅ௦, பாங்கி தலைவனை வரையுநாளளவும் நிலைபெற ஆற்றிய நிலைமை வினுதற்கு மேற்கோள். (பா - ம்) மோந்தவந்து; உருக முயங்கி மயங்கியும்; யலம் பிறவா பின்னை. சஙஅ

## 7. பூங்கொடி அன்பு பகர்தல்

தினைக்காவல் மாறி மலைக்கும் வெம்போர்வெஞ் சிலைக்குறவர்
மனைக்காவு லிற்றனி வைகிய நாளும் வரைவிடைவைத்(து)

உனைக்காவ லாய்விட் டுறைந்தஅந் நாளும் ஒழிந்ததெங்கே
சுனைக்காவி அன்னகண் ணாய்தொலை யாநலந் துய்க்குமன்பே.

(உரை) தலைவன் வரையு நாள்வரை தலைவி அன்புடன் ஆற்றி யிருந்தமை பாங்கி அவளை வினுதல். மனைக்காவல்: இற்செறித்தமை; 'இற்காவலும் பூணும் வந்தே' என்றமை காண்க (கஎக). உன்னை என் காவலிலே தலைவர் விட்டுச் செல்ல நீ உறைந்த அந்நாள் என்றவாறு. உன் அன்பு ஒழிந்ததெங்கே என்க; எவ்வாறு நீ வருந்தாதிருந்தாய் என்றவாறு. இ. வி. க௮௦, வரையு நாளளவும் வருந்தாதிருந்தமை பாங்கி தலைவியை வினுதற்கு மேற்கோள். (பா - ம்) உனைக்காதலர் விட்டுறைந்த அந்நாளும் ஒளித்ததெங்கே. ௨௩௬

## 8. ஆற்றினமை கூறல்

பாங்காய இன்பப் பணிமொழி யாய்இப் பரிசுநெஞ்சில்
தாங்கா வருநலம் தாங்கரி தோதலை நாளளித்த
பூங்காவி யுண்டு புரவலர் தாம்வந் திரவுபகல்
நீங்காத நெஞ்சமுண் டென்தஞ்ச மாகிய நீயுமுண்டே.

(உரை) தலைவி தான் ஆற்றியிருந்தமைக்குக் காரணம் கூறுதல். பூங்காவி: குவளைமலர்; பாவைக்குத் தலைவன் மலர் தந்தமை (௩௫௫). நெஞ்சமும் நீயும் என்றது, தலைவன் நினைவும் தோழி துணையும் கொண்டு ஆற்றியிருந்தமை கூறியவாறு. இ. வி. க௮௦, தலைமகன் வருந்தாதிருந்ததற்குக் காரணம் கூறற்கு மேற்கோள். (பா - ம்) வீணைப பணி மொழியாய்; தஞ்சமாகிய நெஞ்சுமுண்டே. ௨௪௦

## 9. தலைவி ஒழுக்கம் தலைவனுக்கு உரைத்தல்

கண்டால் எழலும் தொழலுநில் லாமலும் கண்முன்சொல்வ
உண்டாயின் ஒன்று பலவுக் குரைத்தலும் ஒண்கமலத் [(து)
தண்டா மரையவர் சான்றோர் அருள்பெறுந் தன்மையுமுட்
கொண்டாள் உரையன்றி யேகுறிப் பாள்நம் குலக்கொடியே.

(உரை) தலைவியின் நல்லியல்புகளைப பாங்கி தலைவனுக்குப் புகழ்ந்து கூறுதல். எழல் - கணவனைக் கண்டால் எழுதல். கண்முன்

நில்லாமை என்க. சொல்ல வேண்டுவதுண்டாயின், பல சொற் கேட்டவிடத்து ஒன்று சொல்லுதல். ஒண்கமலத் தண்டாமரையவர் என்றது, தாமரை மாலையணிந்தவரான அந்தணர் அருளும் என்றவாறு. இதுவும் சான்றோர் அருளும் பெறுந்தன்மை யுட்கொண்டாள். நம் குலக்கொடி, உட்கொண்டாள், உரையன்றியே குறிப்பாள்; வாய்ச்சொல்லின்றியே குறிப்பறிந்து ஒழுகவல்லவள் என்றவாறு. (பா - ம்) சான்றோருளம் பெறுதன்மையும். ௪௪௧

## 10. உண்டியின் உவத்தல்

முருகொன் றியதல்ல பல்லவத் தல்ல முகிழ்த்தரும்பக்
கருகும் கயலன்ன கண்சிவப் பூரக் கமழ்புகையுட்
செருகுங் கருணையும் தீம்பால் அடிசிலும் தேவரன்று
பருகும் அமுதமன் றோஎன்னை ஆளும் பசுங்கொடியே.

(உரை) தலைவி ஆக்கிய உண்டியைத் தலைவன் உவந்து கூறுதல். முருகு - மணம். பல்லவம் தளிர். முகிழ்த்தரும்ப - வியர்வை அரும்ப. மணமில்லாததும் தளிர் பொருந்தாததுமான அரும்பு என்றபடி. தீம்பால் அடிசில் - இனிய பாற்சோறு. கருணை - பொரிக்கறி. இவை தேவருக்கும் ஏற்ற அமுதமாகும் எனப் பாராட்டுகிறான். பசுங்கொடி: விளி. ௪௪௨

## 11. காதல்நிலை உரைத்தல்

தோளிற் கரும்பும் முலையிற் கொடிவிடு தொய்யிலுங்கண்
வாளிற் களவின் மறுமையும் தீயின் மணிமவுலி
தாளிற் பணியும் தளரிடை நையத் தனத்தினுடன்
நாளுக்கு நாளும் நலம்புதி தாக நடக்கின்றதே.

(உரை) தலைவன் தலைவியினுடைய காதலின் சிறப்பைக் கூறுதல். தொய்யில் - மார்பில் சந்தனத்தா லெழுதிய சித்திரம். களவின் மறுமை - களங்கனியின் மை போன்ற கருமை நிறம்; இது ஒளி பொருந்திய கண்ணிற் பொருந்தவும். தீயொத்த ஒளியுடைய இரத்தினங்கள் பதித்த தனது மவுலி அவள் தாளிலே பணிய என்றவாறு. பணிதல், ஊடற்காலத்து. தனத்தினுடன் தளரிடை நைய என்க.

நாளுக்கு நாளும் நலம் புதிதாக நடக்கின்றதே: 'அறிதோ றறியாமை கண்டற்றால் காமஞ் - செறிதோறும் சேயிழை மாட்டு' - குறள் ககக0. 'கொவ்வைச் செவ் வாயிற் கொடியிடைதோள், புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும் போகம் பின்னும் புதிதாய், மணந்தாழ் புரிகுழ லாளல்குல் போல வளர்கின்றதே' - திருக். கூ. சசரு

## 12. மணமனைச் சென்ற செவிலிக்குத் தோழி சொல்லியது

அணங்கும் கடவுள் அணிநெடுந் தேரண் ணலையொழிய
வணங்கும் கடவுள்மற் றொன்றறி யாள்வரி வண்டினங்கள்
இணங்கும் சுரிகுழல் வல்லியன் னாள்தங்கும் இல்லதன்றிக்
கணங்கொண் டெழுஞ்சுடர் பட்டறி யாதவர் காதலரே.

(உரை) தலைவியைக் காண வெண்ணி மணமனைக்குச் சென்ற செவிலிக்குத் தோழி இருவர் காதலொழுக்கமும் கூறுதல். கடவுள் மற்றொன்றறியாள்: 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழு தெழு வாள்' - குறள் ருரு. காதலர், அன்னாள் தங்கும் இல்லதன்றிச் சுடர் பட்டறியாதவர்; தலைவி மீது அத்துணை அன்பு கொண்டு ஒழுகுபவன் என்றவாறு. சுடர் படுதலாவது சூரியன் அத்தமித்தல்; அத்தமிக்கும் போது இல்லந் திரும்பி விடுவான் என்க; 'வெய்யோன், மலைத்தலை செல்லிற் கடைத்தலையாம் அண்ணல் வாரணமே'-மதுரை. ருஉஉ. சசசு

## 13. செவிலிக்குத் தோழி இல்வாழ்க்கை நன்றென்றல்

பாலு றடிசிலும் ஊனுர் கொழுங்குறைப் பாகுமுற்ற
தேனுர் கருனையும் தீம்புளிப் பாகுநின் சேயிழையாள்
ஆனுத அன்பின் அமைத்திமிழ் வாரி அமுதென்றன்பர்
தானுர நல்கி அகமகிழ் கூரும் தகுதியளே.

(உரை) இருவருடைய இல்வாழ்க்கையின் சிறப்பைப் பாங்கி செவி லிக்குக் கூறுதல். பால் நாறு அடிசில் - பால்மணம் பொருந்திய அடி சில். ஊனுர் கொழுங்குறைப்பாகு: உண்டிவகை. ஊன் - இறைச்சி; குறை - உண்ணுதற்குப பக்குவப்படுத்திய இறைச்சி; 'வல்லோன் அட்ட பல்லூன் கொழுங்குறை' - பெரும்பாணாற்றுப்படை சஎஉ.

கருணே - பொரித்த கறி. ஆறுத - அளவற்ற. இமிழ் வாரி அமுது - ஒலிக்கின்ற கடலில் பிறந்த அமுதம். ஆர - வயிருர. இ. வி. கஅ0, பாங்கி செவிலிக்கு இல்வாழ்க்கை நன்றுணர்த்தற்கு மேற்கோள். (பா-ம்) ஊணுர் ; அமைத்துமிழ் ; அமிழ்தினன்பன். சசரு

## 14. நற்ருய்க்குச் செவிலி

### தலைமகள் வாழ்க்கை நன்று என்றல்

அருந்தும் பசியும் அடுமணற் சோறும் அயர்ந்திறைவன்
வருந்தும் பசிக்கு வருந்துமில் வாழ்க்கையும் வேட்கையுடன்
பொருந்தும் விருந்தும் புறந்தரு நீர்மையும் போற்றியவன்
திருந்தும் திறஞ்செய லுங்கற்ற வாநின் திருமகளே.

(உரை) தலைவியின் கற்பியலை நற்ருய்க்குச் செவிலி கூறுதல். அயர்ந்து - மறந்து ; விளையாட்டுக்களை விட்டுவிட்டு என்றவாறு. புறந் தரும் நீர்மை - போற்றி உபசரிக்கும் தன்மை. கற்றவா - எவ்வாறு கற்ருள் என்ற அருமை. இ. வி. கஅ0, மணமனைச் சென்று வந்த செவிலி பொற்ருெடி கற்பியல் நற்ருய்க் குணர்த்தற்கு மேற்கோள். (பா - ம்) பசிக்குமில் வாழ்க்கையும் வேட்கையும் வண்மையுடன் ; போற்றியன்றி. சசசு

## உச. பரத்தையிற் பிரிவு

பிரிவு ஆறுவகை ; ‘ ஓதல் காவல் பகைதணி வினையே, வேந்தர்க் குற்றுழி பொருட்பிணி பரத்தை என்று, ஆங்கவ் வாறே அவ்வயிற் பிரிவே ’ என்பது இறையனுர் அகப்பொருள் (௩௫) ; ‘ பரத்தை, புறப் பெண்டிர் மாட்டுப் பிரியும் பிரிவு ; பரம் என்பது புறம் ; அஃது ஆரியச் சொல்... இனிப் பரத்தையர் மாட்டுப் பிரியுமே எனின், இவன் கண் டார் கண் தாழ்வானும், ஆகலான், தலைமகள் மாட்டே கிடந்த அன்பிலன் ஆயினும். அல்லதூஉம், கண்டுழியெல்லாம் உள்ளத்தைச் செலீஇ உள்ளத்தின் வழி ஓடுமாகலான் நிறையிலனும் ; நிறையிலானது பொரு

-விறப்பு என்னையோ என்பது...இவள்கண் அன்பிலனாய்க் கண்டார் கண் தாழ்ந்து நிறையிலனாய்ப் பிரிந்தானல்லன்; என்னை ? தலைமகளின் நீங்கி ஆடல் காண்பல் பாடல் கேட்பல் எனப் பிரியும்; பிரிய அவற் றின்கட் சென்ற உணர்வு தலைமகள் மாட்டு நின்ற உணர்வினை மறைக் கும். என்னை ? இரண்டுணர்வு உடனில்லாமையின்; இவ்வகை மறைப்ப இவர் கண்ணதே உள்ளமாமென்பது; என்னை ? தாம் இயல் பாகவே பிறரையும் நயப்பிக்கப்படும் வனப்புடையார் ஆடற்றகையானும் பாடற் குறலானும் நயப்பித்து மென்று எடுத்துக் கொண்டால் ஆடவர்கள் நயபபது சொல்லவேண்டுமோ என்பது" என்ற அதன் உரைபபகுதிகள் இங்கு அறியத்தக்கன.

**நம்பியகப்பொரு** ளுடையார், இவ் வாறு பிரிவுகளையும் கூறும் போது, பரத்தையிற் பிரிவை முதலாவதாக வைத்துக் கூறுவார்; 'பரத் தையிற் பிரிதல் ஓதற்குப் படர்தல், அருட்டகு காவலொடு தூதிற்கு அகறல், உதவிக்கு ஏகல் நிதியிற்கு இகத்தலென்று, உரைபெறு கற்பிற் பிரிவுஅறு வகைத்தே' - சூ. சுஉ.

பரத்தையிடம் செல்லும் பொருட்டுத் தலைவன் தலைவியைப பிரி தல்; பரத்தை - பொதுமகள்.

### 1. புலவிக்கு ஏதுக் கூறல்

பங்கே ருகத்தண் பழனநல் லூரன் பவனிவரக்
கொங்கேர் நறுங்குழற் கோதையர் கண்டு குவித்தகையும்
அங்கே அவரவர் அன்புக் கருள்செய் தமைத்தகையும்
பொங்கேர் இளமுலை யாள்புல வாவகை போவதன்றே.

(உரை) தலைவன் பவனிவந்தபோது, பரத்தையர் அவனைப் பரவி யமையும் அவன் அவர்களுக்கு அருளியமையும் தலைவியின் ஊடலுக்குக் காரணமாமென்றல். பங்கேருகம் - தாமரை. பழனம் - வயல். ஊரன் - மருதநிலத்தலைவன். கொங்கேர் - தேன் பொருந்திய. கோதையர் - பரத்தையர். முலையாள் : தலைவி. புலவா வகை போவதன்றே - புலவி

ஏற்படாது போகாது; புலவிக்குக் காரணமாயின. இ. வி. கஅ௨, காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏதுவீதாம் இவ்விறைவிக்கு என்றற்கு மேற்கோள். (பா - ம்) கொங்கேய்; போதவன்றே. சசஎ

## 2. தனித்துழி இறைவி துனித்தழுது இரங்கல்

மருப்பார் வனமுலை மங்கையர் சேரியில் வைகலுந்தன்
விருப்பால் உறைநல மேவிய காதலர் வேட்கைவெந்தீ
உருப்பால் உருகிய ஆவியும் பாவி உடம்புங்கொண்டே
இருப்பார்பிறருமுண் டோநெஞ்சமே இங்கெனையொழித்தே.

(உரை) தனித்த விடத்துத் தலைவி வருந்தித் தன் நெஞ்சுக்குக் கூறல். மருப்பார் - கொம்பை யொத்த. மங்கையர் சேரி - பரத்தையர் சேரி. உருப்பால் - வெம்மையினால். சசஅ

## 3. அடிசில் அமைத்து மடவரல் இரங்கல்

அலையேற் றியஇப்பி வைத்தடுப் பாக அரும்பவிழ்தேன்
உலையேற் றியசங்கின் நித்திலம் பெய்தனல் ஒண்துகிராற்
கலையேற் றியநுதல் நாமடும் சோறிடக் கைக்கமலத்(து)
இலையேற்ற வெம்பசி இன்றிலை யோநம் இறைவருக்கே.

(உரை) தலைவி அமைத்த அடிசிலை அவன் உண்ண வாராதவழி அவள் இரங்கல். அலைகடலிலிருந்து கரையில் ஒதுக்கிய சிப்பியை அடுப்பாக வைத்து என்க. தேனை உலையேற்றிய சங்கிலே நித்திலத்தை (முத்தை) அரிசியாகப் பெய்து; துகிர் - பவளம்; இது அனலாக மூட்டி; அடும் - சமைத்த. இலை ஏற்ற வெம் பசி - இதை இலையிலே வாங்கி யுண்ட கொடிய பசி. அதாவது, தான் முன்னமே சிறுசோறட்டு விளையாடி நின்றபோது, அவன் வந்து இரந்து நின்றமை குறித்தது. இன்றில்லையோ என்றது, பரத்தை வீட்டில் தங்கி உண்ண வாராது ஒழிந்தமைக்கு இரங்கி. இ. வி. கஅ௨. (பா - ம்) மடவாள்இரங்கல்; பெய்தபின் ஒண்துகிலார் கலையேற்றிய நுதலார் அடும்; இலையேற்று. சசகூ

### 4. இரவினும் எய்தா உரவோற்கு இரங்கல்

காவும் பருமணற் கானலும் போயருங் கங்குலினும்
வாவும் பரிநெடுந் தேர்வரக் காண்கிலம் வாவிதொறும்
மேவும் கருங்கயல் செங்கழு நீரின் மிசைபிறழப்
பூவும் புலவும் கமழ்புன லூரன் புகழ்ச்சிநன்றே.

(உரை) இரவினும் அவன் வாராமை கண்டு தலைவி வருந்தல். வாவும் - தாண்டுகின்ற. புகழ்ச்சி நன்றே என்றது, தன்னை முன்னமே அவன் புகழ்ந்துரைத்தமை எண்ணி நகைத்தவாறு. இ. வி. கஅஉ, தலைவன் பிரிந்தமைக்கிரங்கலுக்கு மேற்கோள். (பா - ம்) புகற்சி. ௨௫0

### 5. ஈங்கிது என்னெனப் பாங்கி வினுதல்

மறையிற் புணர்வன் றிமன்றற் புணர்வின்றுவாய்த்தநன்னுள்
நிறையிற் சிறந்தநன் னீர்மையெல் லாம்நிறை நீருணின்று
பொறையற்ற வேட்கையி னுற்புலந் தாரின் நலஞ்சிதையக்
கறையுற்ற வேற்கணல் லாய்என்னை யோவந்த காரணமே.

(உரை) இங்ஙனம் நீ துன்புறுதற்குக் காரணம் யாதென்று பாங்கி கேட்டல். மறையிற் புணர்வு - களவு. மன்றற் புணர்வு - கற்பொழுக்கம். நிறை - கற்பு. இதன் நீர்மை எல்லாம், புலந்தாரின் நலஞ் சிதைய வந்த காரணம் என்னையோ ; புலந்தாரின் - ஊடிய தலைவியைப்போல. ௨௫௧

### 6. இறைவன் புறத்தொழுக்கு இறைமகள் உரைத்தல்

வாரேற் றியமுலை மங்கையர் தங்களை வைகலும்பொற்
றேரேற்றி வந்து மகிழ்மணஞ் செய்யவும் சேரியன்றி
ஊரேற் றியபுன லூரன் தகைமையை உள்ளுந்தொறும்
தாரேற் றியகுழ லாய்தழ லாம்என் தனிநெஞ்சமே.

(உரை) தலைவன் பரத்தையோடு கூடி ஒழுகுதலைத் தலைவி பாங்கிக்குக் கூறுதல். மங்கையர் - பரத்தையரை. மணஞ் செய்யவும் - கூடி ஒழுகவும். தழலாம் - தழல்போல வெதும்புகின்றது. ௨௫௨

### 7. தலைவியைப் பாங்கி கழறல்

மாலைக் குமுத மலர்தருந் தேனுண்ட வண்டுவரக்
காலைக் கமலம் குவிந்தது வோஅரும் கற்பினுக்கங்(கு)
ஏலக் கருங்குழல் மங்கையர் காதலர் என்செயினும்
சீலத் தியல்புகுன் றார்வருந் தேல்மெய் திருந்திழையே.

(உரை) தலைவன் குற்றத்தைக் கற்புடைய மகளிர் கூறுதல் தகா தென்று பாங்கி தலைவியை இடித்துரைத்தல். வண்டு இரவிலே குமுதத்தின் தேனுண்டதே என்று காலையில் அது வரும்போது தாமரை மூடிக்கொள்ளாது; அதுபோல. 'அன்புடைக் கணவர் அழிதகச் செய்யினும், பெண் பிறந்தோர்க்குப் பொறையே பெருமை' - பெருங்கதை ௪. ௧௪. ௬௮ - ௬௨ இ. வி. ௪௫௩. (பா - ம்) மலர்தரு; கற்பினுக்கும். ௪௫௩

### 8. செவ்வணி அணிந்து சேடியை விடுத்தல்

பரிதி நிறத்துப் பணிதுகில் ஆர்த்துப் பணைமுலைமேற்
குருதி நிறத்தொளிர் குங்குமஞ் சேர்த்திபிக் கோலங்கொண்டு
கருதிய கற்புக் கடனெறி கூறிநம் காதலர்க்கு
வருதி எனப்பகர்ந் தேவிடுஞ் சேடியை வாணுதலே.

(உரை) தலைவி பூப்புற்றதை அறிவித்தற் பொருட்டு, செம்மலர், செவ்வுடை, செஞ்சந்தனம் முதலியவற்றை ஒரு சேடிக்கு அணிவித்து, அவளைப் பரத்தை வீட்டிலிருக்கும் தலைவன்பால் அனுப்புதல். பரிதி நிறத்த துகில் - செவ்வுடை; பரிதி - சூரியன். ஆர்த்து - அணிந்து. குருதி - இரத்தம். 'அரத்தம் உடீஇ அணிபழுப்புப் பூசிச், சிரத்தையாற் செங்கழுநீர் சூடிப் - பரத்தை, நினைநோக்கிக் கூறினும் நீமொழிய லென்று, மனைநோக்கி மாண விடும்'-திணைமாலை நூற்றைம்பது ௧0௪. இ. வி. ௧௮௨. (பா - ம்) நிறத்த பணித்துகில்; குருதி நிறத்துகிர்; விடு. ௪௫௪

### 9. செவ்வணி உழையர் கண்டு அழுங்கிக் கூறல்

தும்பேர் உலகறி தையனல் லார்மனை தங்குமெங்கோன்
நம்பேர் மறந்ததை நாமறிந் திங்ஙனம் நாணழிந்த

செம்பேர் அணிநலங் கொண்டுநம் சேடியர் சென்றுநிற்பக்
கொம்பே விதித்ததை யோகொடி தேநம் குடிப்பிறப்பே.

(உரை) விடக் கண்டு அயல் மனையிலுள்ளார் வருந்திக் கூறுதல். உலகறி தையல் : பரத்தை. நம் பேர் என்றது, தலைவியை. செம்பே ரணி நலம் - செவ்வணி. கொம்பே : விளி. ௬௫

## 10. பரத்தையர் கண்டு பழித்தல்

தண்ணந் துறைவன் மனையுறை பாவை தகுதிசொல்லில்
பண்ணென் றியமொழி யீர்வசை யேபணி வார்குவளைக்
கண்ணும் குழலும் கருகித் துகிலும் கனதனமும்
வண்ணம் சிவந்து வெளுத்தது நாணும் மடமையுமே.

(உரை) சேரியில் வரக்கண்ட சேடியைப் பரத்தையர் பழித்தல். பாவை - தலைவி. தகுதி சொல்லில் வசையே என்க. பணிவார் - குளிர்ச்சி பொருந்திய. நாணுக்கும் மடத்துக்கும் நிறம் வெண்மை யெனல் மரபு. இ. வி. ௧௮௨. (பா - ம்) வசையேற் பணிவார். ௬௬

இதன்பின் பரத்தையர் உலகியல் நோக்கித் தலைவியை விடுத்தல் என்ற துறையொன்று சில கோவைகளுட் காணபெறும். பூப்புற்ற தலைவி நீராடியபின் தலைவன் தலைவியுடனிருக்க வேண்டுமென்பது விதி; 'பூப்பின் புறப்பா டீராறு நாளும், நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்' - தொல்; 'தீண்டாநாள் முந்நாளும் நோக்கர் நீராடியபின், ஈராறு நாளும் இகவற்க என்பதே, பேரறிவாளர் துணிவு' - ஆசாரக் கோவை ௬௨; 'பூத்த காலை புனையிழை மனைவியை, நீரா டியபின் ஈராறு நாளும், கருவயிற் றுறூஉங் கால மாதலின், பிரியப பெறுஅன் பரத்தையிற் பிரிவோன்' - நம்பி. ௧0. செவ்வணி யணிந்து சேடியைத் தலைவன்பால் விடுத்தலும் இவ்வுலகியல் பற்றியே யாகும். இது கண்டவுடன், தலைவன் தலைவியிடம் வருவான்; பரத்தையும் அவனைப் போக விடுவாள்.

## 11. வாயில் நேர்வித்தல்

புறத்தா ளெழுகி வரினுமிப் போது புகையுயிர்த்தல்
அறத்தாறும் அன்பும் அருளுமன் றேஅன்பர் தேர்கடவி

மறத்தாரை வாள்விழி யாய்மணி மாளிகை வாசல்வந்துன்
திறத்தார்வ முற்றுநின் முர்எதிர் கோடல் சிறப்புடைத்தே.

(உரை) தலைவன் வருவதைக் கண்ட பாங்கி முதலாயினோர் தலைவிக்குக் கூறி எதிர்கொள்ளச் சொல்லுதல். வாயில் - தலைவனையும் தலைவியையும் இடைநின்று கூட்டும் தூது; பாங்கி முதலியவர்கள். தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, உழையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் என்னும் பன்னிருவரும் கற்புக் காலத்துக்குரிய வாயில்களாவர். புறத்தாறு ஒழுகி: புறத்தொழுக்கு என்றமை (சஙஉ) காண்க. புகை உயிர்த்தல் - அவன் வரக்கண்ட இப்போது நீ (தலைவி) கோபித்தல். அறத்தாறு - அறவொழுக்கம். அருளும் அன்பும் அன்று: சஙரு. கடவி - செலுத்தி. உன் திறத்து - உன்மீது. எதிர்கோடல் - நீ சென்று எதிர்கொள்ளுதல். இ. வி. கஅஉ. (பா - ம்) திருமாளிகை. சஙஎ

## 12. உழையர் தலைமகன் வரவு உணர்த்தல்

நந்தாப் பழனக் கழனிநல் லூரர் நறுங்கழுநீர்ச்
செந்தார் அணிகுழற் சேடிசெல் லாமுன் திருந்திழையார்
சந்தாப மாற உலகியல் நோக்கித் தலைவிஇற்கண்
வந்தார் வழுவுவ ரோபெரி யோர்தம் மரபியலே.

(உரை) தலைவன் வந்தமை ஏவலாளர் தலைவிக்கு உணர்த்தல். நந்தா - குறையாத. கழுநீர்ச் செந்தார் - செங்கழுநீர் மாலை. சேடி - செவ்வணி யணிந்த சேடி. திருந்திழையார் சந்தாபம் ஆற - திருந்திய அணிகலன் அணிந்த தலைவியின் பிரிவாற்றாமை நீங்க. உலகியல்: மேலே கூறியது காண்க; தலைவன் தலைவியோடு உறைதல் வேண்டும் என்ற கட்டுப்பாடு உணர்ந்து; 'பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி, பூப்பின் புறப்பா டீரறு நாளும், நீத்தகன்று உறைதல் அறத்தாறு அன்றே' - இறை. சூ. சரு. இற்கண் - வீட்டின்கண்ணே. பெரியோர் தம் மரபுக்கேற்ற இயல்பு வழுவார் என்றபடி. சஙஅ

### 13. கிழவோள் தன்மை உழையோர் கூறல்

பலரும் பரவப் பனிமலர்க் காவும் பழனமுஞ்சென்(று)
உலவும் குரிசில் ஒருதனி யேவந் தொளியிழையார்
இலகுந் திருமனை எய்துமுன் யாரும் அடுப்பவெய்தா
மலர்மென் குழலி மனந்துனி மாறி மகிழ்வுற்றதே.

(உரை) அவர்கள் தலைவியின் நிலையைத் தலைவனுக் குரைத்தல். ஒளியிழையார்: தலைவி. யாரும் அடுப்ப எய்தா: வாயில்கள் யாரும் அடுத்துக் கூறித் தலைவனை அழைப்பதற்கு எய்தமுடியாத குழலி என்க. குழலி: தலைவி. துனி - துயரம். (பா - ம்) ஒளியிழையீர். ௪௫௯

### 14. தலைவனும் தலைவியும் கலவியின் மயங்கல்

உள்ளத் துவகை ஒருதலைப் பட்ட இருதலைப்பைம்
புள்ளொத் தினிய புதுமலர்ப் பாயற் புணர்ந்தஇன்ப
வெள்ளக் கடலிடை வீழ்ந்துட னீந்துவர் மெய்மறந்து
வள்ளக் கமல வளவய லூரனும் மாதருமே.

(உரை) புணர்ச்சியின் மகிழ்தல் கூறியவாறு. இருதலைப்புள்; இரு தலையும் ஒருடலும் ஒருயிரும் உள்ள பறவையென்று இலக்கியத்திற் பயில்வது; 'இருதலைப் புள்ளின் ஒருயிரேம் ஆதலால், பிரிவும் வரவும் விளைவும் செப்பும் நம்மிடை உளவாகா' - **பரிபாடல்** அ உரை; 'யாம் இருதலைப் புள்ளின் ஒருயிரேம் ஆதலின், காதலாள் உயிர் நீங்கின் என் னுயிரும் ஏதமெய்தி நிற்கும்' - **சிந்தாமணி** ௧௬௩௧ உரை; 'யாமே, பிரிவின் றியைந்த துவரா நட்பின், இருதலைப் புள்ளின் ஒருயி ரம்மே'- **அகம்** ௧௨; 'ஒருயிர்ப் புள்ளின இருதலை' - **கலி**. அ௯. இ. வி. ௧அ௨. ௪௬0

### 15. மகப்பொறை கூர்ந்த வண்ணம் உரைத்தல்

சீலந் தகைபெறு சாலியன் ஞள்சிறு வற்றரித்த
காலந் தமது கவினுறப் பெற்றன காலமின்னும்
கோலந் தருஞ்செங் குமுதமும் நீலமும் குன்றெடுத்த
பாலன் துயில்கொண்ட பாயலும் காலைப் பதுமமுமே.

(உரை) பாங்கி கூற்று; தலைவி புதல்வனைப் பெற்றமை கூறுதல். சீலந் தகை பெறு சாலி - கற்பிற் சிறந்த அருந்ததி; சாலி - அருந்ததி; 'சாலி ஒரு மீன் தகையாளை' - சிலப். க. ௫க. அன்னாள் - தலைவி. சிறுவன் தரித்த காலம் - கருப்பமுற்றிருந்த காலம். கவினுற - அழகு இன்னும் மிகுதியாக. காலமின்னும்: காலத்தே தோன்றிய இவள் இடை, அல்லது மேனி. செங்குமுதம் - வாய். நீலம் - கண்கள். குன்றெடுத்த பாலன் - திருமால்; அவன் துயில்கொண்ட பாயல், ஆலிலை; வயிறு. காலைப்பதுமம்: முகம். இ. வி. க௮௩. (பா - ம்) கவினிறம் பெற்றன; கால மின்னு. ௬௯௧

## 16. வெள்ளணி அணிந்து விடுத்தல்

துதையும் சுரும்புறை மல்லிகை வேய்ந்துவெண் தூசுபுனைந்
இதையம் களிவர நித்திலம் பூண்டெதிர்ந் தார்உடலம் [(து)
புதையம் பனைய விழிமட மாதர்பொற் பூண்புதல்வன்
உதையம் புகல இகலிமுன் னேடுவர் ஊரனுக்கே.

(உரை) தலைவி புதல்வன் பெற்றமையைப் பரத்தை வீட்டிலுள்ள தலைவனுக்கு அறிவிக்க எண்ணி, வெண்மலர் வெள்ளுடை முதலியன அணிந்து ஒரு சேடியைத் தலைவன்பால் தலைவி அனுப்புதல். வெண்மை மங்கலத்தைக் குறிக்கும் நிறம். புதல்வன் பிறந்த அன்று வெள்ளணி பூணல் மரபு; இதுபற்றியே பிறந்தநாள் வெள்ளணி நாள் எனவும் பெறும். இந்நாள் விழா, நாள் மங்கலமென்றும், பெருமங்கலமென்றும் வழங்கும்; 'பிறந்த நாள்வயிற் பெரு மங்கலம்' என்பது தொல். புறத் திணை ௩௬. இம்மரபை யொட்டி, சேடியை வெள்ளணி யுடுத்து அனுப்புவர், இதைக் கண்ட தலைவன் புதல்வனைக் காண மீள்வான் என்பது வழக்கு. துதையும் சுரும்பு - நெருங்கிய வண்டுகள். தூசு - ஆடை. இதையம் - இதயம். நித்திலம் - முத்து. எதிர்ந்தார் உடலம் புதை அம்பு - பகைவர் உடலில் தைக்கும் அம்பு. அனைய விழி - அவ்வம் பொத்த கூர்மையுடைய விழி. புதல்வன் உதயம் புகல - புதல்வன் பிறந்தமை அறிவித்ததற்கு. இகலி: ஒருவரோடொருவர் இடித்துக் கொண்டு. மாதர் ஊரனுக்குப் புகல இகலி முன்னேடுவர்: மகிழ்ச்சி

மிகுதியினாலே தாமே சொல்ல ஒடுகின்றனர். இ. வி. கஅங. (பா - ம்) அகலமுன் னேடுவர். ௬௬உ

## 17. வரவு கண்டு வாயில் மொழிதல்

புறந்தாழ் சுரிகுழற் பூவையன் னீர்பொறை பூண்டவற்கின்(று)
அறந்தான் உறுதுணை யாயதன் றேதம் அகமகிழ்ந்து
மறந்தாழ் களிற்றன்பர் வந்தன ராம்நம் மரபினுக்குச்
சிறந்தான் ஒருவன் பிறந்தான் இவனென்று செல்லுமுன்னே.

(உரை) தலைவன் வருதல் கண்டு பாங்கி தலைவிக்குக் கூறுதல். சுரிகுழல் - சுருண்ட குழல். பூவையன்னீர் : தலைவியை விளித்தது. அறம் என்றது, மேலே கூறிய உலகியலை. செல்லுமுன்னே - சொல்லக் கருதிச் செல்லுமுன்னே. ௬௬ங

## 18. வாயில் மறை

கையார் வரிவளைக் காரிகை நீயும் கடும்பரியும்
மையார் விழிவிலை மங்கையர் இல்லம் மறந்துவந்த(து)
எய்யா திருந்திலம் நையா வருமணி ஈன்றெடுத்த
மெய்யாற வும்மவர் தந்துணி யாறவும் வேண்டுமின்றே.

(உரை) வாயில் மறை - தலைவனை வாயில்கள் தடுத்தல். இத் துறை 'தலைவி நெய்யாடியது இகுளை சாற்றல்' என்னவும் பெறும். காரிகை - தலைவி பரி - ஏறிவந்த குதிரை. விலை மங்கையர் - பரத்தையர். எய்யாது - அறியாமல். திலம் நையாவரும் - நெய்யாடி நைந்திருக்கிருள்; திலம் - எள். அவர் - தலைவி. ஆகவே இன்று மெய்யாறவும் துனியாறவும் வேண்டுதலால் நீ வாரற்க என்றவாறு. இ. வி. கஅங. தலைவி நெய்யாடியது இகுளை சாற்றற்கு மேற்கோள். (பா - ம்) விழிவலை; எய்யாது இருந்திலனய்யா, எய்யாதிருந்திலனையா; மெய்யாரவும்; மெய்யாறவும் விரவுந்; துணிவாரவும். ௬௬௬

## 19. யாணரைக் காண விரும்பல்

செய்யும் தவமுடை யேன்சென்று காண்குவ தென்றுசெவ்வி
மையுண் குவளை மடங்கொளும் நோக்கும் மனமகிழ்வும்

கையும் குழவியும் தீம்பா லெறிக்கும் கனதனமும்
நெய்யும் பசந்து நிலவெழும் மேனியின் நீர்மையுமே.

(உரை) தலைவியின் புதிய வளமைக் கோலத்தைக் காணத் தலைவன் விரும்புதல். என்று - எபபோது. நெய் - எண்ணெய். நிலவெழு மேனியென்றது, உடல் வெளுத்தமை. 'பாலார் முலையும் நெய்வார் குழலும், பாணியிற் பாலனும் மேனியில் நீடு பசுநரம்பும், காணிய என்ன தவஞ் செய்தனஞ் சென்ற காலத்திலே' கோடீ. சா0க. இ. வி. கஅரு, தலைவன் தன் மனத்துவகை கூர்தற்கு மேற்கோள். (பா - ம்) காண்கு வதே செலவி ; மடங்கெழு ; மேனியும். சசா ரு

## 20. தோழி வாயில் வேண்டல்

மருவார் குழலி வருந்திய மெய்யும் மகவுங்கையும்
பருவார் முனிந்த பெருந்தன பாரமும் பச்சுடம்பும்
ஒருவாத உள்ளத் துவகையும் காணநம் ஊரர்நின்பொற்
றிருவாசல் வந்துநின் றூர்அறி யேன்நின் திருவுள்ளமே.

(உரை) தலைவன் வந்தமை பாங்கி தலைவிக்குக் கூறி வாயில் வேண்டல். குழலியாகிய உனது. பரு வார் - பெரிய கச்சு. பச்சுடம்பு - பசுமையுடைய மேனி. ஒருவாத - நீங்காத. ஊரர் - தலைவன். அறி யேன் நின் திருவுள்ளமே என்றது, உள்ளே யழைக்கலாமா என்று அனு மதி கேட்டவாறு. இ. வி. கஅரு, தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றற்கு மேற்கோள். (பா - ம்) பயோதர பாரமும். சசாசா

## 21. வாயில் நேர்வித்தல்

கரப்பற்ற அன்புடன் இன்புற ஆர்வங் கலந்தகொங்கை
பொரப்பெற்ற எங்கையர் தங்களை நீங்கிப் புகன்றதெய்வம்
தரப்பெற்ற செல்வன் திருமுகங் காணத் தலைவனிங்கு
வரப்பெற் றரிதினன் றேமற்று நீஎன்னை வாழ்விப்பதே.

(உரை) தலைவனை அழைத்துவரத் தலைவி அனுமதி தரல். கரப் பற்ற - வஞ்சனையில்லாத. எங்கையர் - பரத்தையர். செல்வன் - புதல்வன். வரபபெற்று அரிதினன்றே - வந்தமை அரியதல்லவா. (பா - ம்) அன்புடனின்புற மார்வம். சசாஎ

### 22. புதல்வனைக் காண்டல்

ஆவுங் கனகமும் அந்தணர்க் கீந்தங் கமரர்க்கெல்லாம்
பூவும் புகையும் பொழிந்தவி யேற்றிப் புதியபண்ணும்
பாவும் புனைந்து பரிசிலர் பாடப் பருவநன்றி
யாவும் பெறஎடுத் தான்குடித் தோன்றலை ஏந்தலுமே.

(உரை) தலைவன் புதல்வனை ஏந்தி மகிழ்தல். அந்தணர்க் கீந்து : பரிசிலாகத் தந்து ; தருதல் மரபு ; 'அந்தணர் ஆவொடு பொன் பெற்றார்' - **முத்தொள்.** அமரர் - தேவர் ; அவி - வேள்வி. பரிசிலர், பரிசில் பெற வேண்டிப் புதிய பண்ணும் பாவும் பாட. பருவ நன்றி - காலத்துக்குரிய நன்மை. எடுத்தான் - கையில் தூக்கினன். **இ. வி.** கஅங. (பா - ம்) அவிபோற்றி. சகூஅ

### 23. கலந்துழி மகிழ்தல்

மரகத நன்னிறம் பொன்னிற மான வடிவுமுற்றும்
நிரைதரும் சாபமும் நீலோற் பலமும் நிவரரும்பும்
விரைகமழ் தொண்டையும் மெல்லியல் காம வெதுப்புங்கண்டு
கரையழி அன்புறும் இன்புறும் ஊரன் களிசிறந்தே.

(உரை) தலைவியைக் கண்டு உறவாடிய தலைவன் மகிழ்தல். புதல்வன் பிறந்தமையா லுண்டான மரகத நிறம் இப்போது பொன்னிறம் கொண்ட வடிவம். முற்றும் நிரைதரும் சாபமும் - வில்லொத்த புருவமும். நீலோற்பலம் - குவளை ; கண். நிவர்தல் - ஓங்குதல். அரும்பு : முல்லையரும்பொத்த பற்கள். விரை கமழ் தொண்டை - மணம்பொருந்திய தொண்டைமலரொத்த வாயிதழ். மெல்லியல் - தலைவி. காம வெதுப்பு - வேட்கை. கரையழி - கரையில்லாத. ஊரன் அன்புறும் இன்புறும். சகூகூ

### 24. விழிதுயில் கண்டு உவந்துழி உரைத்தல்

மானுங் கலையு மறிந்தகம் விம்ம மகவும்வல்லி
தானுந் தலைவனும் தங்குமிப் பாயற்குத் தாழ்வுவண்டும்

தேனும் சுரும்பும் செறிகுழ லீர்இந்தச் சேயைப்பெற்ற
கோனும் கவரியும் காணப் பெறுத குறையொன்றுமே.

(உரை) பாயலிலமர்ந்த தலைவன் தலைவி புதல்வன் மூவரையுங் கண்டு தோழி கூறுதல். பெண் மானும் கலையும் இவர்கள் நிலைகண்டு மனந்தடுமாற என்க. மகவு - புதல்வன். வல்லிதானும் - தலைவியும். செறிகுழலீர் : பாங்கியரை விளித்தது. ௪௭௦

## 25. புலத்தல்

ஆம்பால் விரவின தன்பால் அறிந்திலர் அன்னமன்னீர்
போம்பா லனையசொற் பூவையர் சேரியிற் புல்லிஇங்ஙன்
யாம்பா லனைக்கொண் டினிவைகல் போக்குதும் எம்முலையிற்
றீம்பால் படிலவர் செய்குறி மார்பிற் சிதையுமன்றே.

(உரை) தலைவன் தூதாக வரவிட்ட பாங்கியர் முதலாயினோரிடம் தலைவி புலத்தல். பால் விரவினது : தான் புதல்வனைப் பெற்றமை காரணமாகத் தன்னுடம்பில் பால் பரவியது. அறிந்திலர் - தலைவன் அறிந்திலன். போம் - நீங்கள் செல்வீராக. பூவையர் சேரியில் - பரத்தையர் சேரிக்கு. வைகல் போக்குதும் : மகனே துணையாக இனி நான் பொழுதைக் கழிப்பேன். தீம்பால் படில் : தலைவன் என்னைத் தழுவுங் காலததில் பால்படில். அவர் செய்குறி சிதையும் : தலைவன் மார்பில் பரத்தையர் செய்த குறி அழியும் என்று பழித்தவாறு. 'புதல்வனை ஈன்ற என் மேனி, முயங்கன்மோ தெய்ய நின் மார்புசிதைப் பதுவே' - ஐங். சுரு. இ. வி. ௯அரு, தலைவி யுணர்ந்து தலைவனொடு புலத்தலுக்கு மேற்கோள். (பா - ம்) ஆம்பால் வரையினர் ; அறிந்தயிலன்னம். ௪௭௧

## 26. பள்ளியில் அழுங்கல்

துணையேதும் இன்றி நடுங்குமின் போலும் துடிமருங்குற்
பிணையே மடநடைப் பெண்ணமு தேஇன்பப் பேருததிப்
புணையே அனையபொற் றேருளும் தனமுமிப் பொங்கமளி
அணையே பொருந்தி வரும்புற மோஎமக் காவதின்றே.

(உரை) தலைவன் தழுவுதற்கு இடங் கொடாது பள்ளியில் பொருந்திய தலைவிக்குக் கூறி வருந்தல். பேருததி - பெருங் கடல். புணை - அதைக் கடத்தற்கேற்ற தெப்பம்; அதை யொத்த தோளும் தனமும். அமளி - பள்ளி. வரும்புறமோ என்றது, தலைவி அவனைத் திரும்பிப் பாராது முதுகு காட்டிப் பள்ளியிற் பொருந்தியமையால். 'அறங்காட் டியகரத் தைவேல் அசதி அகன்சிலம்பில், நிறங்காட்டும் கஞ்சத் திருவனை யீர்முக நீண்டகுமிழ்த், திறங்காட்டும் வேலும் சிலையும் கொல் யானையும் தேருங் கொண்டு, புறங்காட்ட வுந்தகு மோசிலைக் காமன் பூசலிலே' - அசதிக்கோவை. இ. வி. ௧அ௩. (பா - ம்) அனைய பொருளும்; வருமற்றமோ. ௭௭௨

## 27. பதங்கம் பழிச்சல்

அறவோர் மொழிந்த அரிந்தமன் காத்த அகன்புறவுக்(கு)
உறவோ பதங்கம் வியங்கமன் றோஉத விக்குதவி
நறவோடு தண்புனல் நாடனென் றேஎன்கண் நல்கியதால்
மறவோம் இதற்குள்ள வாசிஎந் நாளும் மடமயிலே.

(உரை) பள்ளியினிடத்துத் தலைவன் அழுங்கி நின்றாக, அயலிருந்த புள்ளொன்று கூவிய குரல் கேட்டுத் தலைவி அஞ்சித் தலைவனை ஓடித் தழுவிக்கொள்ளவும், தலைவன் அப்புள்ளைப் பாராட்டுதல். அரிந்தமன் : திருமால்; சிபிச் சக்கரவர்த்தி காத்த புறவு - தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறவு; 'கொடுஞ் சிறைக், கூருகிர்ப் பருந்தின் ஏறு குறித்து ஒரீஇத், தன்னகம் புக்க குறுநடைப் புறவின், தபுதி யஞ்சிச் சீரை புக்க, வரையா ஈகை உரவோன்' - **புறம்** ௪௩. பதங்கம் - பறவை. வியங்கம் - விகங்கம்; ஆகாயத்தில் செல்வது. நறவு ஓடு - தேன் பாய்கின்ற. வாசி - தகுதி. இத்தகைய செய்தி யொன்றைப் **பெருங்கதை**யினுள்ளும் காணலாம். ஊடிய பதுமாபதி, கூகையின் குரல் கேட்டு அஞ்சி உதயணனைத் தழுவினாள்; 'நீண்டன்மின் பெருமனைத் தீரிய உரைத்து, மாடத்தகத்தில் ஆடுவினைக் காவினுட், கொம்பர் மீமிசைக் கூகைவந் துலாஅய், வித்தகக் கைவினைச் சத்தி ஏறி, உட்குத்தக உரைத்தலும் கட்கின் பாவை, நெஞ்சந் துட்கென நெடுவிடை நின்ற, காற்றெறி வாழையின் ஆற்ற நடுங்கி; அஞ்சில் ஓதி

ஆகத் தசைத்தர, அச்ச முயக்கம் நச்சுவணன் விரும்பி' - பெருங். ௩. ௩௪. ௧௫௦ - ௧௫௮. இ. வி. ௧௮௩. (பா - ம்) அனந்தவன் காத்த. விகங்கம். ௨௭௩

## 28. புதுப்புனல் வரவு உணர்த்தல்

ஏராடு சிந்துர இந்திர சாபம் இறைஞ்சுநுதல்
வேர்வாட நீல விழிசிவப் பாட விளங்கிழையார்
தாராடு பைங்குழற் பின்னக மாடத் தழூஉஞ்சிவிறிப்
போராட வந்தது தண்புன லாடப் புரவலற்கே.

(உரை) ஆற்றில் புதுப் புனல் வந்தமை பரத்தையர் தலைவனுக் குணர்த்தல். சிந்துரம் - பொட்டு. இந்திர சாபம் - இந்திர வில். விழி சிவப் பாடல், நீராடலின் மிகுதி காரணமாக. பின்னகம் - குழலின் பின்னல். சிவிறிப் போர் - புனலாடுகையில் நீரை ஒருவர்மீதொருவர் வீசி விளையாடல்; சிவிறி - நீர் வீசுங் கருவி. தலைவன் பரத்தையைத் தேர் மீதேற்றிச் சென்று புனலாடுவான் என்று கூறுதல் மரபு; 'விருந்தி யற் பரத்தையைப் பெருந்தேர் மிசைக்கொண்டு, இளமரக் காவின் விளை யாடற்கும், புனலா டற்கும் புறநகர்ப் போகும்' - இ. வி. ௬௨; 'புனலா டல் கூறவே, அதற்கு ஏதுவாகிய புதுப் புனல் வரவும் கொள்ளப்படும்'; அதற்கு மேற்கோள். (பா - ம்) தழுசிவிறிப்; புனலாடப். ௨௭௪

## 29. புனையிழை மகளிர் புனலாட்டு விரும்பல்

குருகோடு கம்புட் குலமிரிந் தார்ப்பக் கொடுந்திரைசூழ்
இருகோடு மள்ளர் எறிபறை ஆர்ப்ப இடுமணற்குன்(று)
அருகோடு தண்புனல் வண்புன லூரனொ டாடுதற்கு
வருகோடி அன்புடை யாரொரு கோடி மடந்தையரே.

(உரை) பரத்தையர் தலைவனோடு புனலாடல் விரும்புதல். கம்புள் - ஒரு நீர்ப் பறவை. இரிந்து - இவை யெல்லாம் கலைந்து. இரு கோடு - இரு கரையிலும். எறிபறை - அடிக்கின்ற பறை. அருகோடு தண் புனல் - அருகிலே ஓடும் குளிர்ந்த நீர். இ. வி. ௬௨. (பா - ம்) குலமிருந் தார்பப; எறிமணி. ௨௭௫

## 30. பரத்தை தற்புகழ்தல்

அரியார் மதர்விழி ஆயமும் தானும் அகன்றுறைவாய்
விரியார் கருங்கழல் மன்புறங் காப்பினும் என்புறமே
புரியா தொழுகுவ னேல்அழி யாத புகழ்படையாக்
கரியார் திருவில் தரியா துடைகஎன் கைச்சங்கமே.

(உரை) தலைவி எவ்வளவுதான் தலைவனைக் காவல் செய்து வைப்பினும் அவன் அவளைப் பிரிந்து தன்னிடம் வரச் செய்ய முடியுமென்று பரத்தை தன்னைப் புகழ்ந்து கூறிக்கொள்ளுதல். மதர் விழி - செழித்த விழி. கருங்கழல் மன் - தலைவன். தானும் : தலைவியும். காப்பினும் - காவல் செய்து வைப்பினும். என் புறமே - என்னிடத்து (பரத்தை யிடத்து). புரியாது ஒழுகுவனேல் - வாராதிருப்பானாயின். கரியார் திரு : புகழ் படையாத தீயோர் செல்வம் கெடுவதுபோல் என் செல்வமுங் கெடுக என்றவாறு ; 'கலர் தேடிய செல்வம்' (கஉ௫) என்றது காண்க. தற்புகழ்தல் தலைவிக்குரியதன்று என்று **இறையனார் அகப்பொருள்** கூறும் ; 'கிழவோன் முன்னர்க் கிழத்தி தற்புகழ்தல், புலவிக் காலத்துப புரைவ தன்றே' - சூ. சஎ ; 'இனிக் கிழவி தற்புகழ்தல் பெருளெனவே பரத்தை தற்புகழப் பெறுமென்பது பெற்றாம்.' 'வெஞ்சுடர் நோக்கு நெருஞ்சியி லூரனை வெண்முறுவற், செஞ்சுடர் வாண்முகத் தாள் முன்னை என்பாற் பிரியலனேல், அஞ்சுடர் வேலரி கேசரி கோளமு ணுட்டுடைந்தார், தஞ்சுடர் வாட்படை போல உடைகஎன் சங்கங்களே' - **பாண்டிக்கோவை.** இ. வி. கOஉ. (பா - ம்) விரியார் நறுந் தொடை. சஎகூ

## 31. புனலாடியதில்லை என்ற தலைமகற்கு உரைத்தல்

ஏந்திய வள்ளத் தினிய நறுமகிழ் வெய்தவைத்து
மாந்திய மாதருன் மால்வரைத் தோள்மலி நீர்ப்புணையா
நீந்திய வாறெம்மை நீமறைத் தால்என் நெடுவிசும்பில்
காந்திய ஞாயிற் றொளிமறைத் தாரெவர் கைவிரித்தே.

(உரை) பரத்தையோடு புனலாடி மீண்ட தலைவன் தான் புனலாடவில்லை என்று பொய்யுரைத்த விடத்துத் தலைவி கூறுதல். வள்ளம் -

கிண்ணம். நறா - கள். மாந்திய மாதர் - குடித்த பரத்தை. நீந்தியவாறு என்பது உன்னைக் கூடியது என்றும், உன்னோடு புனலாடியது என்றும் இரு பொருள் குறிக்கும். எவர் ஞாயிற்றின் ஒளியைக் கையால் மறைத்தார் என்றவாறு. 'பரந்த திறலாரைப் பாசிமே லிட்டுக், கரந்து மறைக்கலும் ஆமோ...விண்ணியங்கும், ஞாயிற்றைக் கைம்மறைப் பார்இல்' - **பழமொழி நானூறு** ௩௪. இதற்கு நேராக, பரத்தை புனலாட்டிய ஈரம் புலர்த்திவா என்று தலைவி கூறியதாக ஒரு துறை பிற கோவைகளில் உள்ளது. ௪௭௭

### 32. அங்கவர் யாரையும் அறியேன் என்றல்

**ம**ன்னும் புலவியை மாற்றியும் தேற்றியும் வல்லவண்ணம்
இன்னும் தெளிந்திலை என்னைஎன் னேஎன்செய் கேனிதற்கு
முன்னம் படிந்து முழுகுநன் னீர்க்கங்கை முன்னுறையும்
அன்னம் படியுங்கொல் லோஉவர் ஆழியில் ஆரணங்கே.

**(உரை)** பரத்தையொருத்தியையும் அறியேனென்று தலைவன்கூறுதல். தெளிந்திலை - நான் இவ்வாறு கூறியும் நீ புலவி நீங்கவில்லை. கங்கையிற் படிந்த அன்னம் உவர் ஆழியிற் படியுமோ என்றது, உன்னை மணந்த நான் பரத்தையை விரும்புவேனோ என்றபடி. உவராழி - உப்புக் கடல். இச்செய்யுள், 'பாவைநீ புலவியின் நீடல் பாவியேற்கு, ஆவியொன்று இரண்டுடம்பு அல்லது ஊற்றுநீர்க், கூவல்வாய் வெண்மணல் குறுகச் செல்லுமே, மேவிபூங் கங்கையுள் விளைந்த அன்னமே' என்ற **சிந்தாமணிச்** செய்யுளைத் தழுவி வந்தது (௧௦௧௭). இ. வி. ௧௮௩. (பா - ம்) தெளியிலை ; முன்றுறை நீத்து அன்னம். ௪௭௮

### 33. காமக்கிழத்தியைக் கண்டமை கூறல்

**தே**ரொன்று வீதித் தெரிவைநின் பாலனைக் கண்டுகையால்
வாரொன் றணைத்து மணிமுத் தருந்தி மகிழ்ந்திடநான்
ஆரென்று கூற அவளறி யாமல்நின் அன்னைஎன்றாள்
நீரின்று சொன்னதெல் லாம்என்ன மாயம் நெடுந்தகையே.

(உரை) இவ்வாறு அவன் கூறக்கேட்ட தலைவி, வீதியில் ஒருத்தி தன் மகனை எடுத்து அணைக்கத் தான் கண்டு அவளே அவனது காமக்கிழத்தி எனத் துணிந்தமை கூறுதல். காமக்கிழத்தி: 'ஒருவன் தனக்கே உரிமை பூண்டு, வருகுலப பரத்தையர் மகளிராகிக், காமக்கு வரைநதோர் காமக் கிழத்தியர்: காமக் கிழத்திய ரென்பார் சேரிப பரத்தையர் போலப் பலர்க்கும் உரியாரன்றி ஒருவற்கே உரிமை பூண்டுவரும் குலபபரத்தையர் மகளிராய்க் காமங் காரணமாகத் தலைவனால் வரைநதுகொள்ளப் பட்டா ரென்றவாறு' - **நம்பி.** சூ. ௧௧உ, உரை. தெரிவை - பரத்தை. கூற-நீ யாரென்று நான் கேட்கவும். அறியாமல் - நான் அப்புதல்வன் தாயென் பது அறியாமல். நின் அன்னை என்றாள் - அன்னை என்று புதல்வனிடஞ் சொன்னாள். என்ன மாயம் - யாரையும் அறியேன் என்றமை யாவும் பொய் என்றவாறு. 'யாவரும் விழையும் பொலந் தொடிப் புதல்வனைத், தேர்வழங்கு தெருவிற் றமியோற் கண்ட, கூரெயிற் றரிவை குறுகி யாருங், காணுநர் இன்மையிற் சேர்த்தனள் பேணிப், பொலங்கலஞ் சுமந்த பூண்தாங் கிளமுலை, வருக மாளஎன் னுயிரெனப பெரிதுவந்து, கொண்டனள்' - **அகம்** ௧௬. ௬௪௬

## 34. தலைவியைப் பரத்தை பழித்தல்

தேமே குவளையும் செங்நெலும் கன்னலும் சேர்ந்தநன்னர்
ஆமேய் கழனி அகன்புன லூரன் அகல மெல்லாம்
யாமே விரும்பினம் என்றெம்மை ஏசுவர் போலத்தம்மைத்
தாமே பழிப்பர் தலைவியர் தாமும் தனம்படைத்தே.

(உரை) தேமே குவளை - தேன் பொருந்திய குவளை. ஆ - பசு. அகலம் - மார்பு. தனம் - முலை, பொருள். தாமே பழிப்பர் என்றது, தலைவி தனம் படைத்திருந்தும், தலைவனைத் தன்னிடமே இருக்கச் செய்ய இயலாமையை இகழ்ந்து. 'கிழவோன் தன்னையும் கிழத்தி தன்னையும், இகழ்தலும் தம்மைப் புகழ்தலும் நிகழ்பொருள், காத்தலும் பரத்தையர் கடனென மொழிப' - **இலக்கண விளக்கச் சூத்திரம்** ௧0உ, அகத்திணையியல். **இ. வி.** ௧0உ. (பா - ம்) சேர; நன்னீராமே. ௬௪0

### 35. காமக்கிழத்தி பரத்தையைப் பழித்தல்

முருகார் முளரியும் முள்ளியும் முண்டகம் மூரியரம்
பொருகா ரிரும்பும் கனகமும் பொன்பொங்கு தாரகையும்
குருகார் தடங்களில் கெண்டையும் மீனெம் குரிசிலுக்கு
வருகாதல் நல்கிய எங்கையும் யானும் மடந்தையரே.

(உரை) தலைவன், தன்னையும் பரத்தையையும் ஒன்றாக எண்ணியமை கருதிக் காமக்கிழத்தி பழித்தல். முளரி - தாமரை. முள்ளி - முள்ளிச்செடி, அற்பமானது. முண்டகம்-இவ்விரண்டிக்கும் முண்டகம் என்ற பொதுப்பெயரிருத்தலினால், தலைவன் இரண்டையும் ஒரேபடித்தாகக் கருதும் இயல்புடையவன் என்கிறாள். இபபடியே அவனுக்கு இரும்பும் கனகமும், பொன்; தாரகையும் கெண்டையும், மீன் என்றவாறு. மூரியரம் பொரு - வலிமை பொருந்திய அரத்தையொத்த. கனகம் - பொன்; பொன் என்ற பெயர் இரும்புக்குமுண்டு. தாரகை - நட்சத்திரம்; விண்மீன். தடம் - குளம். கெண்டை - கெண்டை மீன். எங்கையர் - பரத்தையர். மடந்தையர் - ஒருபடியாய், மனைவி போன்றவர். 'வேயுங் கரும்பும் விடமும் செந் தேனும்வெள் வேலும் சந்தும், நாயும் சுரபியும் ஒன்றாக எண்ணிய நாயகர்க்கே' - ஆநா். சசுகூ. 'வெங்காடியும் தேனுவின் பாலும் சருக்கரையும், உபபு நிகரெனச் செல்கா வலர்க்கிசை யுன்னிசையே' - கோடீ. சoசு. இ. வி. கூo. (பா - ம்) குருகார் குறுங்கழி; கெண்டையும் நேரெங்; காதல் மிக்கு வரைந்தவர் யாரும் மனைவியரே; வனவியரே. சஅக

### 36. நற்பரத்தையை நயப்புப்பரத்தை பழித்தல்

கோடலஞ் செங்கைநல் லார்கொங்கை ஏற்றமென் கோங்கினு
பாடலங் காவும் பருமணற் குன்றும் பயின்றுநம்பால் [டன்
ஆடலும் பாடலும் கண்டுகொண் டாடுவ தன்றிஅன்பின்
ஊடலும் கூடலும் உண்டுகொல் லோபொய்கை ஊரனுக்கே.

(உரை) சேரிப் பரத்தை, காதற் பரத்தை என்னுமிருவகையினருள், முன்னவளைப் பின்னவள் பழித்தல். முன்னவள், பொது மகள்; பின்னவள் குறித்த ஒரு தலைவனுக்கே நட்புப பூண்டு ஒழுகுபவள்.

கோடல் - காந்தள். பயிலலாம், கொண்டாடலாமே யன்றி, ஊடலும் கூடலும் அவளுக்கு இல்லையென்று பழித்தவாறு. இ. வி. ௧௦௨, கிழவோற் பழித்தற்கு மேற்கோள். (பா - ம்) எற்றமு மெங்களுடன் ; பயின்று தமராடலும். ௬௮௨

## 37. சுடரோடு கூறல்

பொலன்கலன் சேர்த்திப் புரிநூல் அணிந்து புனைவயிரம்
இலங்குதண் டேற்றி இனியநெய் யூட்டி இருவினையேன்
வலங்கொளுஞ் செஞ்சுட ரோமறந் தாரென்ன வஞ்சினமுட்
கலங்குகின் றேன்அரு ளாய்கது வாமல் கடைக்கணித்தே.

(உரை) தலைவன் வாராமை கண்டு, தலைவி தான் வழிபடும் விளக்கை விளிதல். சுடர் - விளக்கின் சுடர். நூல் - திரி. தண்டு - விளக்குத்தண்டு. வஞ்சினம் - பிரியேன் என்று அவன் கூறிய வஞ்சினத்தை எண்ணி. கதுவாமல் - கலங்காமல். விளக்கேற்றி வைத்து வணங்கி அதனொடு புலம்பலை, 'சிலைநாடு தோளண்ண லோடு செந்தீ வலஞ் செய்யுமந்தத், தலைநாளில் நீயொரு சான்றல்லவோ வெண் தாள நிலாக், கலைநாண் மதியர் கடம்பா டவியிற் கலந்தகலப், பொலநாண் மணி விளக் கேவிலக் காது பொருந்திலையே' என்ற மதுரைக்கோவையும் (௩உ௯) கூறும் ; திருக்கோவை ௧௮எ. ௬௮௩

## 38. கனவில் கண்டு கலங்கல்

நெய்யுண் சுரிகுழல் நேரிழை யாய்நென்னல் நீளிரவின்
மையுண் குவளை மலிபுன லூரன் மலர்க்கமலக்
கையுந் தலையும்என் காலுமொன் றான கனவுதன்னை
மெய்யென் றருவினை யேன்விழித் தேனென் விழியிணையே.

(உரை) கனவிலே தலைவன் வரக்கண்டமை தலைவி தோழியிடங் கூறி வருந்தல். நெய்யுண் சுரிகுழல் - நெய் பூசிய சுருண்ட கூந்தல். நென்னல் - நேற்று. ஊரன் கையுந் தலையும் என் காலும் ஒன்றானது என்றது, தலைவி புலந்தபோது அவன் அவள் அடியிற் பணிந்தான் என்று கூறியவாறு. அடியில் தலைவன் பணிதலை, 'என்னையா னேபுகழ்ந்தேன

என்றுதே எவ்வுயிர்க்கும், மன்னர்கோன் நந்தி வரதுங்கன் - பொன்முடி யின், மேல்வருடுந் தொண்டை விரைநாறும் இன்னமும் என், கால்வரு டுஞ் சேடியர்தம் கை' என்ற நந்திக்கலம்பகச் செய்யுளால் அறியலாம். (பா - ம்) காதுமொன்றுன. சஅச

## 39. பாணன் வாயில்மறை

ஏவார் நயனியர் தன்மைக் கியைந்தன்றி இன்மைசொல்லாக்
கோவாய பாண குறியுமுண் டோகுறித் தார்தமில்லம்
காவாத ஊரரெம் தங்கையர் முற்றும் அகற்றிடினும்
மேவா துடற்றினும் போகா வுளர்எவ் விடத்தினுமே.

(உரை) தலைவன் தூதாக வந்த பாணனைத் தலைவி வெகுண்டு கூறு தல். ஏவார் நயனியர் - அம்பொத்த கண்ணியரான பரத்தையர். இயைந்து - ஏற்றவாறு. பாண : விளி. குறித்தார்தம் இல்லம் காவாத ஊரர் - அவனைக் குறித்து வருந்தி யிருக்கும் என் இல்லம் வாராத தலைவன். தங்கையர் - பரத்தையர். அகற்றிடினும் - அவனை விலக்கிய போதிலும். உடற்றினும் - துன்புறுத்தினும். போகா உளர் - அவரை விட்டு நீங்காமல் அங்கேயே இருப்பார். சஅரு

## 40. பாணன் கூற்று

ஆறு முனிவுக் கடியேன் பொருளல்ல ஆயினுமிங்(கு)
ஏறுத விண்ணப்பம் இங்கிது கேட்டருள் எற்றிவுளி
மாறு தழுங்கப் புடைத்தார் இருக்கஅம் மத்திகையை
வேறுகி நின்று வெறுப்பதென் பாவம் விளங்கிழையே.

(உரை) வாயில் மறுக்கப்பட்ட பாணன் தன்னைக் கோபிக்க வேண்டாமென்று கூறுதல். ஆறு முனிவு - தணியாத கோபம். இவுளி - குதிரை. புடைத்தார் இருக்க - அடித்தவர் இருக்க. மத்திகை - சவுக்கு. குதிரையைச் சவுக்கால் அடித்தவரை நோவாது மத்திகையை வெறுப்பது என்ன பாவம் என்றவாறு ;எய்தவனிருக்க அம்பை நோவா னேன் என்பது போல. சஅசு

## 41. விறலி வாயில்மறை

அயிலும் கயலும் அனையகண் அஞ்சன மாற்றிவஞ்சத்
துயிலும் துடைத்தஅன் றேசெவி தூர்ந்தது சோர்ந்ததுள்
மயிலின் புறத்து முருகனைப் போல வருமகிணன் [ளம்
பயிலும் பரத்தையர் பாடியிற் பாடினி பாடினியே.

(உரை) வாயில் வேண்டி வந்த விறலிக்குத் தலைவி வாயில் மறுத்தல். விறலி - பாடினி; உள்ள நிகழ்ச்சி புறத்தே உடம்பில் புலப்படுமாறு பாடியாடவல்லவள். அஞ்சனம் - கண்ணுக்கிட்ட மை. துயிலுந் துடைத்தது - துயிலைப் போக்கியது. செவி தாழ்த்தது - காது கேட்கவில்லை. மகிணன் - மகிழ்நன், காதலன். பரத்தையர் பாடியில் - தலைவன் தங்கியுள்ள பரத்தையர் சேரியில். பாடு இனி பாடினி - இங்குப் பாடி வாயில் கேட்கவேண்டாம், அங்கே சென்று பாடுவாயாக. 'வஞ்சம், பண்ணும் பரத்தையர் சேரியிற் பாடினி பாடினிப்போய், உண்ணுங் கடுவும் அமுதமும் நாணலும் ஒண்கரும்பும், மண்ணும் பசும் பொன்னும் ஒன்றாக எண்ணிய மன்னவர்க்கே' - தஞ்சை. ௪௫௪; 'கலைவிழிப பாடினியே சென்று பாடினியே...ஒன்றாக எண்ணிய நாயகர்க்கே' - ஆநூர். ௪௩௯. இ. வி. ௧௮௯. (பா - ம்) செவி தாழ்த்தது. ௪௮௭

## 42. கூத்தர் வாயில்மறை

வடிக்கண் ணியரொடு வந்தென்னை நீவந் தனைசெயினும்
நடிக்கும் பழைய நடத்திலொன் றாம்இந் நடிமறவார்
அடிக்கண் அதிரக் கழல்விரி நாமங்கொள் ஆரியஇப்
படிக்கண் நகர்முழு தும்பாடி ஆடும் பரத்தையரே.

(உரை) தலைவன் தூதாக வந்த கூத்தனுக்குத் தலைவி வாயில் மறுத்தல். வடிக்கண்ணியர்: பெண்கள். நடிக்கும் பழைய நடம் - நீ என்னை வந்தனை செய்து அத்தலைவனுக்காக வாயில் வேண்டினும், இதையும் உன் பழைய நடங்களுள் ஒன்றாகவே கொள்வேன்; இநநடி, பரத்தையர் மறவார் என்றவாறு. நகர் முழுதும் பாடியாடும் பரத்தையர் என்க. ஆரிய - கூத்தனை விளித்தது; கூத்தன் ஆரியக் கூத்தன் எனப் படுவான்; 'ஆரியர் கயிறாடு பறை' - குறுந். ௭; 'சிரமாலை ஆரிய' -

சிரா. ௪௬௩. 'ஆரியக்கூத் தாடினலும் காரியத்திலே கண்' என்பது வழக்கிலுள்ள பழமொழி. படிக்கண் - பூமியிலே. நான் வாயில் கொடேன் என்பது கருத்து. இ. வி. ௧அ௩. (பா - ம்) கண்ணியரொடும் வந்தனை நீ வந்தனை செயலுன்; நடத்திலொன்றே; மின்னடி மறவார்; அதிர் கழல் வீரிய நாமங்கொள் ஆரிய; நாமங்கள். ௪அஅ

## 43. காமக் கிழத்தி வாயில் வேண்டல்

வெறுக்கத் தகுவன செய்யினும் ஊரன் விளங்கிழைநீ
பொறுக்கத் தகுதிஎம் போலல்லை யேவெம் புரவிஇன்றிச்
சிறுக்கைத் தலங்கொண்டு தேர்கடவா நின்ற சிங்கம்பெற்றும்
கறுக்கத் தகுவதன் றேசிவப் பூரநின் கண்ணிணையே.

(உரை) பொறுப்பது கடன் என்று கூறிக் காமக்கிழத்தி வாயில் வேண்டல். ஊரன் செய்யினும் நீ பொறுக்சத் தகுதி. எம்போலல்லை எனறது, பரத்தையராகிய யாம் பொறுக்கமாட்டோம், ஆயினும் தலைவியான நீ பொறுக்கும் கடப்பாடுடையை என்றவாறு. புரவி இன்றி - குதிரை இல்லாமல். சிறு கைத்தலம் - சிறிய கையால். தேர்கடவா நின்ற சிங்கம் - சிறு தேருருட்டி விளையாடும் புதல்வன். நின் கண்ணிணை சிவக் கும்படி தலைவன்மீது கோபித்தலாகாது. கறுத்தல் - கோபித்தல். 'வெறுப் பனவே செய்யுமென் சிறுமையை நின்பெருமையினற், பொறுபபவனே'- திருவாசகம் ௪௦௬. இ. வி. ௧அ௩. (பா - ம்) பொறுக்கத்தகாத எம் போலில்லையே; சிறுக்கத்தலம்; கறுக்கத்தகுவனன்றே, கறுக்கத்தருவ தன்றே; சிவபுரும். ௪அ௬

## 44. காமக் கிழத்தி கூற்று

பைக்கொண்ட அல்குல் பருமம் புனையும் பரத்தையர்மேல்
மெய்க்கொண்ட வம்பு மிகுத்தனை யேல்விளை செங்நெலொடு
மைக்கொண்ட நீல வளவய லூர வளைப்பலுன்னைக்
கைக்கொண்ட எங்கள் கவினளித் தேகுநின் காதல்கொண்டே.

(உரை) தலைவியில்லஞ் செல்லத் தலைவன் துணிந்தமை யறிந்து காமக்கிழத்தி அவனுக்குக் கூறுதல். பை - படம். பருமம் - ஓர் அணி வகை. வம்பு - அன்பின்மை. வளைப்பல் - உன்னைப பற்றிக் கொள்

வேன். கவின் - அழிந்த என் அழகு. நீ எனக்குத் தந்த காதலை எடுத்துக் கொண்டு, எங்களிடம் நீ கொண்ட கவினைத் தந்து செல்வாயாக. கவினளித்தேகு என்றது, 'மாண்நலந்தா எனவகுத்தற் கண்ணும்' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தில் (பொருள். க௫௦) கருதிய துறை. 'துறைவனைக், கண்ணினுற் காண இயையுங்கொல் என்தோழி, வண்ணந்தா என்கம் தொடுத்து' - ஐந்திணை எழுபது ௬௪. ௪௬௦

## 45. விருந்து கண்டு இறைவி பெருந்துனி ஒழிதல்

வண்டார் கொழுநன் வரவது கேட்டு மலர்க்கணம்பு
கொண்டாள் புருவச் சிலைகுனித் தாள்தன் குளிர்பிறைசூழ்
வெண்டா மரையின் வெயர்த் துயிர்த் தாள்நல் விருந்தயலே
கண்டாள் முகமலர்ந் தாள்புரந் தாள்அரும் கற்பினையே.

(உரை) தலைவன் விருந்தை உடன்கொண்டு வந்தமை யறிந்து தலைவி ஊடலை ஒழிதல். மலர்க்கண் அம்புகொண்டாள் - கண்ணீர் விட்டாள்; அம்பு - நீர். புருவச் சிலை குனித்தாள் - கோபத்தால் புருவத்தை நெறித்தாள். சந்திரன் தாமரையைக் குவியச் செய்பவனாதலால், பிறைசூழ் தாமரையினும் வெயர்த்துயிர்த்தாள்; பெருமூச்சு விட்டாள். தலைவன் வரக்கேட்டு இங்ஙனமானவள், நல்விருந்து கண்டாள், முகமலர்ந்தாள் என்க. புரந்தாள் - விருந்தோம்பினாள்; கற்பினைக் காத்தாள். இ. வி. க௮௩, விருநதுடன் வந்துழிப் பொறுத்தற்கு மேற்கோள். (பா - ம்) மகிழ்நன் வருவது; குனித்தாள் குளிர்வெண் பனிசூழ் வெண்டாமரை வியர்த்தாள் உயிர்த்தாள்; புலர்ந்தாள். ௪௬௧

## 46. விருந்துடன் வந்தோன் அறிந்துடன் மகிழ்தல்

கருந்துன்று வார்குழற் கண்ணி இல் வாழ்க்கையும் கையுஞ்செவ்
முருந்தொன்று மூரல் முறுவலும் காண முகமறியா [வாய்
விருந்தொன்றி வேறொன்றின் மீளா அருந்துனி மீட்கநல்ல
மருந்தொன்று வந்திங்ங னேமன மேஇன்று வாய்த்ததுவே.

(உரை) தலைவி ஊடல் நீங்கியமை கண்டு தலைவன் மகிழ்தல். துன்று - நெருங்கிய. காண - கண்டு. முகமறியா விருந்து - புதிதாய்

வந்த விருந்து. ஒன்றி - அவ்விருந்தை ஓம்பி. வேறெதனாலும் மீட்டற் கரிய ஊடலை மீட்டற்கு நல்ல மருந்தாக இவ்விருந்து வாய்த்தது என்க. துனி - புலவி. தலைவன் இவ்வாறு மகிழ்ந்ததை, 'தடமருப்பு எருமை மடநடைக் குழவி, தூண்டொறும் யாத்த காண்தகு நல்லிற், கொடுங் குழை பெய்த செழுஞ்செய் பேழைச், சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப, வாளை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇப், புகையுண் டமர்த்த கண் ணள் தகைபெறப், பிறைநுதற் பொறித்த சிறுநுண் பல்வியர், அந்து கில் தலையில் துடையினள் நபபுலநது, அட்டி லோளே அம்மா அரிவை, எமக்கே வருகதில் விருநதே சிவப்பான்று, சிறியமுள் ளெயிறு தோன்ற, முறுவல் கொண்ட முகங்காண் கம்மே' என்ற நற்றிணைச் செய்யுளில் (கஉO) விளங்கக் காணலாம். இ. வி. கஅ௬, விருந்தொடு வந்துழிப் பொறுத்தல் கண்டு தலைமகன் மகிழ்தற்கு மேற்கோள். (பா - ம்) கருந் தொன்று; கன்னி; முறுவலுங்கூர; விருநதொன்று; வந்து வாய்த் ததுவே. சசஉ

## 47. சேக்கையிற் புலத்தல்

திருத்திஅன் போடு திளைக்கின்ற இன்பச் செருக்கிடையே
கருத்திலங் குற்ற கலாமிங் கறிந்திலம் காதலியான்
ஒருத்தியென் றன்னை ஒருவனென் றேஇருந் தேனினிநீ
இருத்திஎன் றேமொழி யாஇழிந் தாள்பள்ளி யின்னகமே.

(உரை) பாயலில் தலைவி மிக்க ஊடலோடிருத்தல். கருத்தில் - தலைவியின் கருத்தில். கலாம் - மனக் கலக்கம், கலகம். உனக்குக் காதலி யான் ஒருத்தி யென்றும், எனக்குக் காதலன் நீ ஒருவன் என்றும் இருந்தேன் என்று தலைவி அவனிடம் கூறி அவனைப் பள்ளியில் இருக் கச் செய்து, தான் பள்ளியினின்று நீங்கிப போகிறாள். அறிநதிலம் என்றது தலைவன் நிகழ்நததைத் தனக்குள் கூறி அழுங்கல். மொழியா - மொழிந்து. இழிந்தாள் - நீங்கிச் சென்றாள். பள்ளியின்னகம் - பள்ளியி லிருநது. இ. வி. கஅ௬, ஒளித்த ஊடல் வெளிபபடலுக்கு மேற்கோள். (பா - ம்) திருத்திய அன்பர்; செவ்விச் செருக்கிடையே; கலாபம் அறிந் திலம்; ஒழித்தாள்; பள்ளி இன்னகையே. சசந

### 48. சீறேல் என்றவள் சீறடி தொழுதல்

படர்ந்த கலாமின்ன தென்றுரை யாமல் பயிலமளி
கடந்த கலாபங் கலைபுறஞ் சூழக் கதந்தணியத்
தொடர்ந்தக லாத துணையடித் தாமரை சூடவள்ளல்
மடந்தை பொருதென்செய் வாள்மலி நீர்கண்கள்மல்கினளே.

(உரை) தலைவியின் புலவி கண்டு தலைவன் அவளுடைய சிறிய அடியில் வணங்கல் ; சீறேல் - கோபியாதே. படர்ந்த கலாம் - கொண்ட கோபம். அமளிகடந்த கலாபம் - பள்ளியினின்றும் நீங்கிய மயில் அனைய தலைவி. கதம் - கோபம். தணிய - தணியுமாறு. வள்ளல் தொடர்ந்து தாமரை சூட ; தாமரை போன்ற பாதத்தைத் தலையிலே சூட ; 'ஊரன் மலர்க் கமலக் கையுந் தலையும் என் காலு மொன்றான கனவு' - சஅச. இ. வி. கஅச, தலைமகள் விருந்து கண்டொளித்த ஊடல் பள்ளியிடத்து வெளிபடத் தலைமகன் நோக்கிச் சீறேலென்று அவள் சீறடி தொழு தற்கு மேற்கோள். (பா - ம்) சூடிவல் இம்மடந்தை கலாமகலா மலி நீர். சகூச

### 49. இஃதெங்கையர் காணில் நன்றன்று என்றல்

தொடிவைத்த செங்கை அலவன் உலாவுந் துறைசெய்தோர்
வடிவொத்த சிந்தை மலிபுன லூர வணங்கியநின்
முடிவைத்த செங்கையும் மென்முலை யாக முயங்கவந்தென்
அடிவைத்த செங்கையும் எங்கையர் காணில் அறவுநன்றே.

(உரை) நீ என் அடிதொழுதலைப் பரத்தையர் கண்டால் உனக்கு இழுக்கு என்று தலைவி கூறுதல்; எங்கையர் - பரத்தையர். அலவன் - நண்டு. வடிவு : சீறடி (சகூச) தொழுத தோற்றம். புனலூர : தலைவனை விளித்தது. அடிவைதத செங்கையும் என்றது தன்னை வணங்கியதைச் சுட்டி. அறவும் நன்றே என்றது பழித்தவாறு. இ. வி. கஅரு. (பா - ம்) செங்கயலே வானுலாவும்; துறை செயத்தோர். சகூரு

### 50. புலவி

பங்கய மல்லற் பழனநன் னாடும் பதியுமில்லும்
எங்கையர் போல இனியமல் லேம்எங்கள் பாற்றொடர்பு

செங்கயல் பாயக் கருங்கயம் மேவிய சேவலன்னம்
சங்கய லேதிரி தண்புன லூர தகுவதன்றே.

(உரை) தலைவி புலவி தணியாது ஊடுதல். பங்கயம் - தாமரை. மல்லல் - வளமை. கயம் - தடாகம். இனியமல்லேம், எங்கள்பாற் றொடர்பு, ஊர, தகுவதன்று என்க. இ. வி. க அ ரு, தலைவி புலவி தணியாளாகற்கு மேற்கோள். (பா - ம்) பாயும். ௬௬௬

## 51. புலவி நீக்கல்

குளங்கெழு தாமரை வண்டினை மேற்குதி கொண்டகெண்டை
இளங்கமு கின்குலை சிந்துநன் னாட இறைஞ்சுசெந்நெல்
வளங்கெழு நாடும் வயல்சூழ் நகரும் மரபுமிக்கோய்க்(கு)
உளங்கெழு கேண்மைநன் றேஎங்க ளோடிவ் வுலகத்திலே.

(உரை) தலைவி புலவி நீங்கிக் கூறுதல். கெண்டை கமுகின் குலை சிந்துமென்றது, நாட்டின் வளத்தைக் குறித்தது. மிக்கோய்க்கு - மிக்கவனான உனக்கு. நாடும் நகரும் மரபும் மிக்கோய்க்கு எங்களோடு கேண்மை நன்றே. (பா - ம்) விளங்கெழு நாடும். ௬௬௭

## 52. பாங்கி தலைவன் கொடுமை சாற்றல்

இன்னா தனவும் இனியதெ னமற் றினையனவும்
மன்னா மகிழ்வும் இகழ்வும்வந் தால்வளர் காட்டெருமை
நன்னா குறங்கும் நளிர்புன லூரன் நலஞ்சிறந்த
பொன்னார் வனமுலை என்னநின் னோடு புலப்பதுவே.

(உரை) உவந்த காலத்துத் தலைவன் மகிழ்தலையும் உவர்த்த காலத்து அவன் இகழ்தலையும் தோழி எடுத்துக் கூறுதல்; இத்துறை, பாங்கி அன்பிலை கொடியை என்று இணர்த்தார் மார்பனை இகழ்தல் என வும் கூறப்பெறும். 'வேம்பின் பைங்காய் என் தோழி தரினே, தேம் பூங் கட்டி என்றனிர் இனியே, பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர், தைஇத் திங்கட் டண்ணிய தரினும், அதுவே, வெய்ய உவர்க்கும் என் றனிர், ஐய அற்றால் அன்பின் பாலே' என்ற குறுந்தொகை (௧௯௬) காண்க. நாகு - கன்று. ௬௬௮

### 53. தோழி வாயில் மறுத்தல்

நெறியார் அலங்கல் மணிமுடி யாய்இன்று நின்னைஅன்றி
அறியா இவளிங் கரியளென் றேமண்ணில் ஆரிடத்தும்
குறியாத அன்புடைக் கொம்பனை யாரைக் குறுகிஅந்தண்
முறியார் களப முலைமுகந் தோறும் முயங்குவதே.

(உரை) தலைவன் பரத்தையரிடம் சென்றமை கூறிப பழித்துத் தோழி வாயில் மறுத்தல். அலங்கல் - மாலை. முடியாய் : விளி. ஆரிடத்தும் குறியாத அன்புடைக் கொம்பனையார் - பரத்தையர். முறிதல் - துளிர்த்தல். இவள் அரியள் என்றே நீ கொம்பனையாரை முயங்குவது. இ. வி. கஅரு, பாங்கி அன்பிலை கொடியை என்றிணர்த்தார் மார்பனை இகழ்தற்கு மேற்கோள். (பா - ம்) முடியாயென்று ; முயல்க சென்றே. சகக

### 54. வாயில் நேர்வித்தல்

பூவே அனையர் புரிகுழற் பாவையர் பூவைஅயில்
மாவே அனையர் வரிகழற் காளையர் வாள்நெடுங்கண்
ஏவே அனைய இலங்கிழை யாய்நின் றிரங்கலென்னே
நீவேய் அனைய நிரைவளைத் தோளின் நிறம்பசந்தே.

(உரை) பெண்டிர் இயல்பும் ஆடவர் இயல்பும் சொல்லி, தலைவனை ஏற்குமாறு தோழி தலைவிக்குக் கூறுதல். பாவையர் பூவே அனையர், காளையர் மா அனையர் ; மா - பூவில் தேனை உண்டு பின்னர் அதைத் துறந்து சென்று விடும் வண்டு ; அயில் - உண்கின்ற. ஏவே அனைய - அம்பை ஒத்த ; ஏ - அம்பு. நீ தோளின் நிறம் பசந்து இரங்கல் என்னே; எனவே வாயில் நேர்வாயாக என்று தோழி கூறியவாறு. இ. வி. கஅரு. (பா - ம்) அனைய ; பூவில் வரு ; தோளி. ருOO

### 55. புதல்வனை வாயில் நேர்வித்தல்

முரிய விசும்பு முழங்கமுன் வந்த முதுகளிற்றைத்
திரிய முனிந்த திறலினன் நீஇன்றென் சேரிவரக்
கரிய நறுங்குஞ்சிக் கிஞ்சுக வாயிதழ்க் கன்னலின்சொல்
அரிய இளங்களிற் றுக்கஞ்சு வானென்கொல்ஆண்டகையே.

(உரை) பாங்கி புதல்வனைச் சுட்டித் தலைவனுக்கு வாயில் நேர்வித்தல். முதுகளிற்றை யடக்கித் தலைவியைக் கூடிய நீ இப்புதல்வனாகிய இளங்களிற்றுக்கு ஒளிப்பானேன் என்க. திறலினன் - வலிமை பெற்றவன். என் : தலைவியின். கரிய குஞ்சி - கரிய குழல். கிஞ்சுகம் - கிளி. கன்னல் - கரும்பு. இளங்களிறு - புதல்வன். ஆண்தகை : தலைவனை விளித்தது. ௫0௧

## 56. புதல்வன் வாயில் வேண்டல்

**ப**ண்டுவந் தார்சிலர் பாணரும் பாகரும் போலுமல்ல
விண்டுவந் தாலன்ன மென்குழ லாய்விரை யார்பழன
வண்டுவந் தாலும் வளவய லூரன் மதலையையும்
கொண்டுவந் தாலென்கொலோ இனிநீ துனிகொள்கின்றதே.

(உரை) புதல்வனை அழைத்துக் கொண்டு தலைவன் வருகின்றான், நீ வாயில் நேராது என்ன செய்வாய் என்று பாங்கி தலைவியை வினவுதல். பண்டு - முன்னமே. வந்தார் - வந்தவராகிய. பாகர் - தேர்ப்பாகன். வண்டு வந்து ஆலும் ஊரன் : தலைவன். மதலையை - புதல்வனை. தலைவன் தேர்மீது தலைவி இல்லம் அடையும் போது வழியில் விளையாடி நிற்கும் புதல்வனை ஏந்திக்கொண்டு வருவான், புதல்வன் வருகின்றமையால் தலைவி புலத்தலை விடுவாள் என்றல் மரபு. ௫0௨

## 57. புதல்வற் புலத்தல்

**மை**வார் குழல்மட மங்கையர் தங்கள் வதுவையுன்னிக்
கைவா ரணங்கட வும்பெரு மானைக் கலுழ்ந்தழைத்துன்
செவ்வாய் அமுத மளைந்தசெஞ் சாந்தம் சிதையப்புல்லி
இவ்வாறு செய்ததெல் லாம்அவர் மேனியில் ஏறுவதே.

(உரை) தலைவி தான் தழுவிய தன் புதல்வன் மீதிருந்த சாந்தம் அழிந்து அவனைப் புல்லிய தலைவன்மீது ஏறியமை கண்டு புதல்வனைப் புலத்தல் மங்கையர் தங்கள் வதுவை என்றது பரத்தையர் கூட்டத்தை. உன்னி - நாடி. கை வாரணம் - யானை. கடவும் - செலுத்தும். பெருமான் - தலைவன் ; யானையேறிச் செல்லுகிறான். கலுழ்ந்து -

தலைவி கண்ணீர் விட்டு. மகனை அழைத்துக் கூறுகிறாள். செவ்வாய் அமுதம் அளைந்த செஞ்சாந்தம் : புதல்வனுக்குப் பூசிய சாந்தத்தில் அவனது வாயெச்சில் ஒழுகியுள்ளமையால். அவர் மேனியில் ஏறுவதே என்றது, உன்னை அவன் எடுத்துத் தழுவும்போது இச்சாந்தம் அவன் மீது ஏறுமே என்று கூறிப் புலந்தவாறு. இ. வி. கஅ௩. (பா - ம்) பெருமானை ; செவ்வாய் முதல அணிந்த ; யாவர்மேல் இனி ஏறுவதே. ௫0௩

## 58. மகற் கறிவுறுத்தல்

கொய்யும் சுவற்பரி யுங்குலப் பாகுமுட் கோலுமில்லா
வையம் கடவும் மழகளி றேவருந் தாமலெங்கை
செய்யும் பெருந்தவ மேகலந் தாருழைத் தீமையையும்
பொய்யுங்கல் லாதொழி வாய்புன லூரனைப் போலஇன்றே.

(உரை) தந்தையின் தீய ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்ளாதே என்று புதல்வனுக்குத் தலைவி அறிவுறுததல். சுவல் - குதிரையின் கழுத்து மயிர் ; 'கொய் சுவற் புரவி' பாகு - பாகன். முட்கோல் - தாற்றுக் கோல். இல்லா வையம - இவை யாவு மில்லாத தேர்; சிறு தேர். மழ களிறு, புதல்வன். எங்கை - பரத்தை. ஊரனைபபோலத் தீமையும் பொய்யும் கல்லா தொழிவாய். 'கூடலுங்கள், செங்கோல் முறைமை முழுதுங்கொள் வாய்பொற் சிறுசதங்கை, பொங்கோடை' வாரணமே உந்தை போலஎம் போலொருவர், தங்கோல முந்தனி யுங்கண்டு போகை தவிர்ந்தருளே' - மதுரை. ௩௫௨. இ. வி. கஅ௩. (பா - ம்) மதகளிறே ; தீமையும் அபபொய்யும். ௫0௪

## 59. மகற் பழித்து உரைத்தல்

குன்றே அனைய கடவுட் குலம்வலங் கொண்டுவந்த(து)
என்றே விடுத்த திருவினை யேஇனி எங்கையர்பால்
சென்றே வருக மறக்கஇன் றேசெம்ம லூரன்செல்வக்
கன்றே உனக்குங் கசந்தன வோஇக் கனதனமே.

(உரை) கோயிலுக்குச் சென்றுவரும்பொருட்டு அனுபபியபுதல்வன் மீண்டு வநது பாலுண்ணாமை கண்டு பழித்தல். கடவுட் குலம் வலங்

கொண்டு - கோயில் சென்று வணங்கி விட்டு. விடுத்தது இருவினையே - உன்னைப் போக விட்டது தீமையே. எங்கையர்பால் சென்றே வருக - நீயும் இனிப் பரத்தையரிடம் செல்வாயாக. இன்றே மறக்க: அல்லது என்னை இன்றே மறந்தாலும் மறந்துவிடுக. செல்வக் கன்றே: மகனே. கசந்தனவோ கனதனம் என்றது அவன் பாலுண்ணுமைக்கு இரங்கி; 'வலத்தியல் சூல மதுரேசர் கோயில் வலஞ்செயப போய்ச், சலத்தியல் செய்து வருங்களி றேவிலை சாற்றிவிற்கும், நலத்தியல் சேரிக்கு நல்விருந தாவது நாளும்உங்கள், குலத்தியல் பாயிருந் தாலுன்னையோ நொந்து கூறுவதே'; கனக்குன்ற வில்லி கடம்பாடவி நின்று கண் பிசைந்து, சினக்குந் தொறுமழுந் தெள்ளமுதே சிந்தை சென்றுருகிற், றனக்கென் றவரன்பை யாசைகொண் டாடுமுன் தந்தைக் கல்லால், உனக்குங் களிதந்த தோளெங்கை மார்கொங்கை ஊற்றின்பமே' - மதுரை. ருசுக - ரு௫௦. கலி. ௫உ ஒப்பிடுக. ௫௦௫

## 60. உணர்ப்புவயின் வாரா ஊடல்

கருகாத நீலமும் கூறுப் பவளமும் கால்வளையும்
இருகார் முகம்பற்ப ராகமும் வானவில் என்றமுத்தும்
சருகாய நெஞ்சத் திடைஎழுங் காமத் தழல்முகத்தும்
உருகா வயிரமும் உண்டுகொ லோநம் ஒளிஇழைக்கே.

(உரை) உணர்பபுவயின் வாரா ஊடல் - தலைவன் தெளிவிக்கப படுந் தன்மைக்கண் நில்லா ஊடல்; தொல். பொருள். க௫௦, நச்சினார்க் கினியர்; 'உணர்ப்புவயின் வாரா ஊடலுற் றோள்வயின், உணர்த்தல் வேண்டிய கிழவோன் பால்நின்று, தான்வெருண் டாக்கிய தகுதிக்கண்ணும்.........வகைபட வந்த கிளவி யெல்லாந், தோழிக் குரிய என்மனார் புலவர்' - என்பது சூத்திரம். உணர்ப்பு - தெளிவிக்கப்படுதல். நீலம் - குவளை; குவளையொத்த கண் கருமையுடையது, கருகாத என்றது, கோபத்தாலும் அழுகையாலும் சிவந்த கண் என்றவாறு. கூறுப பவளம் - பேசாத வாய்; பவளம், வாயிதழ். கால் வளையும் - இருகோடியும் வளைந்த. இரு கார்முகம் - வில்லிரண்டு; இருபுருவமும் என்க. பற்பராகம் - தொனியால் பதுமராகம் என்ற மாணிக்க வகை; முகமாகிய தாமரையில் தோன்றிய மாறுபாடும் என்க; கோபத்தில் முகம்மாறுபடும்.

வானவில், வில்லொத்த நுதல். அது ஈன்ற முத்து, அதில் அரும்பிய வேர்வைத் துளி. சருகாய நெஞ்சு - பிரிவினால் வெதும்பிச் சருகான நெஞ்சு. தழல் முகத்தும் உருகா வயிரம்; இரக்கமில்லாத கோபமாகிய மன வயிரம். இத்தனையும் உண்டுகொலோ நம் ஒளியிழையான தலைவிக்கு என்றவாறு. நீலம், பவளம், பற்பராகம், முத்து, வயிரம் என்ற மணிகளும், வளை என்ற அணிகலத்தின் பெயரும் தொனிக்கின்றன. ௫0௬

## 61. கழிந்தது நிகழ்த்தல்

ஈன்றோர் வருந்த இருஞ்சுரப் போக்கும் எயினரில்லின்
மான்றோல் படுத்து வதியும் துயிலும் வனத்திடையே
ஊன்றோய் கடுங்கணை நின்னையர் தோன்ற ஒளித்ததுவும்
கான்றோய் மலர்க்குழ லாய்மற வேன்ஒரு காலத்துமே.

(உரை) முன்னம் இடைச்சுரத்தில் நிகழ்ந்தவற்றைத் தலைவன் கூறுதல். சுரப்போக்கு: உடன்போக்கு. எயினர் - வேடர். அவர் இல்லில் வதிந்தமை : ௩௮௧. நின்னையர் : உன் தந்தை முதலாயினோர் ஒளித்தது ௪௨௧.
௫0எ

## 62. தலைவற்குத் தோழி கூறல்

நிழலைச் சுளித்து நிமிர்களிற் றாய்அந்த நீர்கொண்டன்றி
அழலைத் தழல்கொண் டவித்தவ ராஅமு தார்குமுத
மழலைக் கிளிமொழி வஞ்சியன் னாள்நெஞ்சும் வாள்விழியும்
சுழலச் சுழலும் துனிஒழிப் பாய்அத துனிஒழிந்தே.

(உரை) நிழலைச் சுளித்து நிமிர் களிற்றாய் - தனது நிழலையும் வேறு யானையென்று சினந்து காலால் மிதிக்கும் மதம் பொருந்திய யானையை உடையவனே; 'கஞ்சுகம் வாய்த்த கவளம்தன் கைக்கொண்ட, குஞ்சரம் வென்ற கொலைவேழம் - துஞ்சா, நிழலையும் பாய்ந்திறுத் தோடாது தான்தன், நிழலையுந் தான்சுளிக்கும் நின்று' - **புறப்பொருள் வெண்பா மாலை** ௩௫0. நெருப்பை நெருப்பினால் அவிக்க முடியாதென்றவாறு. வஞ்சியன்னாளாகிய தலைவியின் துனி யொழிப்பாயாக என்று தலைவனுக்குத் தோழி கூறியது.
௫0அ

## 63. ஆற்ருமை வாயில்

வில்லார் புருவம் நெரியத் திருநுதல் வேர்வரும்பக்
கல்லாரம் அன்னநின் கண்பனி கூரக் கலந்தொருசொல்
சொல்லாத தொண்டைத் துவர்வாய் அதரந் துடித்துநிற்ப
அல்லார் குழலணங் கேஅப ராதம் அறிந்திலனே.

(உரை) தன் ஆற்ருமையே வாயிலாகத் தலைவன் தலைவியைக் கண்டு கூறுதல். கல்லாரம் - குவளை மலர். தொண்டைத் துவர் வாய் அதரம் - தொண்டைக் கனியொத்துச் சிவந்த இதழ். அபராதம் - நான் செய்த பிழை. ௩௦௯.

## 64. தலைவன் பொய்மை தலைவி கூறல்

தேனுகர் வண்டும் ஞிமிறும் சுரும்பும் செறிகுவளைப்
பூநகு தண்புனற் பொய்கைநல் லூரர் புதுப்புனலும்
கானமர் புள்ளும் கடவுளும் வாசியும் காய்சினமால்
யானையும் ஆவர்கொல லோநாளு நாளும்வந் தெங்கையரே.

(உரை) பரத்தைபாற் சென்றுவந்த தலைவனிடத்துத் தலைவி ஊடவும், அவன் புதுபபுனல் காணச சென்றேன், கானமர் புள் காணச் செனறேன என்பது முதலாகப பொய்யுரைத்தானென்று தலைவி கூறுதல். இவற்றை மருதக்கலியினுள் விரிவாய்க் காணலாம். புதுப்புனல்: 'வையை வருபுன லாடத் தவிர்ந்தேன்'; புள்: 'குறும்பூழ்பபோர் கண்டேம்'; கடவுள்: 'உடனுறை வாழ்க்கைக் குதவியுறையும் கடவுளர்கட் டங்கினேன'; வாசி (குதிரை): 'குதிரை வழங்கி வருவல்'; யானை: 'புத்தியானை வந்தது காண்பான் யான் தங்கினேன்' - கலி. ௯௪, ௯௫, ௯௬, ௯௭, ௯௭. தேன் நுகர் வண்டு; ஞிமிறு - வண்டில் ஒரு வகை. ௩௧௦

## 65. புணர்ச்சியின் மகிழ்தல்

சுரும்பும் குவளையும் அன்றிலும் பேடும் துணர்விரிபூங்
கரும்பும் கவளக் களிறுமன் றேகடற் பாலமுதம்
அரும்பும் துணைமுலை ஆகம் குளிப்ப அறிவழிந்து
விரும்பும் கலவி நிலத்திரு வேமும் விளங்கிழையே.

(உரை) தலைவன் கூற்று. சுரும்பு : தலைவன் ; குவளை : தலைவி. அவ்விதமே அன்றிலும் பேடும், கரும்பும் களிறும். கலவி நிலத்து - கலவியில். இருவேமும் - நாம் இருவரும். விளங்கிழை : விளி. ருகக

## 66. புணர்ச்சியின் விதும்பல்

நிறைபோ னதுமட நாணமும் போயது நின்றநெஞ்சம்
அறைபோன தன்றிங் கதன்வழி யேஎன் அணிவளையும்
இறைபோ னதுபின்னை நீயுமிங் கில்லை இலங்கிழையாய்
பொறைபோன அன்புடை யாரெங்ங னேபின் புலம்புவதே.

(உரை) தலைவி வேட்கை மிகவினுன் காண்டற்கு விரைதல். நிறை-கற்பு. அறை போனது - கெட்டழிந்தது. இறை : கையினின்று நீங்கியது என்க. 'ஒருநாள் நீர், நீங்குங்கால் நெகிழ்போடும் வளையென வும் உளதன்றோ' - கலி. உ௫. பொறை போன அன்புடையார் - கலவியிடத்தும் பொறையில்லாத தலைவர். 'என், பொன்னுகம் பூணத் தழுவுமப் போதும் புலபபரென்றால், என்னுகும் என்றறியேன் இவ ராசையும் இன்பமுமே' - மதுரை. ௩௬௪. (பா - ம்) அவன் வழியே. ருக௨

## 67. பாங்கி தலைவனைப் புகழ்தல்

அறததிற் றருமன் பொருளிற் றனபதி ஆய்ந்தஇன்பத்
திறத்திற் சிலைமதன் சிந்தையிற் புந்தி திருந்துவண்மைப்
புறத்திற் புவிஅயல் போற்றுங் கலையிற் பொதியமுனி
மறத்திற் சிறந்த வளவய லூரன் மடங்கலின்றே.

(உரை) தருமன் - தரும ராசனுன யமன். தனபதி - குபேரன். சிலைமதன் - மன்மதன். சிந்தையிற் புந்தி - அறிவில் புதனை யொப்பான். வண்மைப் புறத்தில் - வரையாது வழங்குதலில். புவி - பூமி யொப்பான். பொதிய முனி - அகத்தியன். மறம் - வீரம். மடங்கல் - சிங்கம். ருக௩

## 68. பாங்கி தலைவியைப் புகழ்தல்

கற்புக் கருந்ததி நாணுக்கு மானக் கவரிநன்மான் [ன்றன்
பொற்புக்கும் வாய்ந்த பொறைக்கும்பொன் பூமகள் கோமக

அற்புத் துணைவி அறத்துக் கெலாமன்னை ஆடகமால்
வெற்புக் குயர்ந்த மனைக்குநந் தாத விளக்கொளியே.

(உரை) நாணுக்கு மானக் கவரிமான் : 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார், உயிர்நீப்பர் மானம் வரின்' - குறள் ௯௬௯. பொற்புக்குப் பொன் - அழகில் திருமகள். பொறைக்குப பூமகள் - பொறுத்தலில் பூமியொப்பாள். கோமகன் - தலைவன். அற்பு - அன்பு. அறத்துக்கு அன்னை : ௩௨ அறமும் வளர்த்த உமாதேவி ஒப்பாள். ஆடகமால் வெற்பு - பொன் மலையான மேரு. உயர்ந்த - அதனினும் பெரிதான. நந்தாத - குன்றுதலில்லாத. விளக்கொளி : 'மனைக்கு விளக்கம் மடவாள்' - நான்மணிக்கடிகை ௧௦௫. ௫௧௪

## உ௫. ஓதற் பிரிவு

அறுவகைப பிரிவினுள், இரண்டாவது ஓதற் பிரிவு ; தலைவன் கல்வி காரணமாகத் தலைவியைப பிரிதல். இவ்வாறு பிரிந்திருக்குங் காலம் மூன்றாண்டு என்று தொல்காப்பியம் கூறும்; 'வேண்டிய கல்வி யாண்டு மூன் றிறவாது' - பொருள். ௧௮௬.

### 1. தோழிக்கு உரைத்தல்

தானே அருங்கலை தந்தவன் சங்கப் பலகையின்கீழ்
மானே பதங்கள் வருந்தமுன் நின்றதும் வாய்த்தசெஞ்சொற்
றேனே அருட்பொருள் தேடவும் பாணர்பின் சென்றதுவும்
கானே கமழ்கொன்றை யானறி வோர்தரங் காட்டியதே.

(உரை) ஓதற்குத் தான் பிரிய எண்ணியமை தலைவன் தோழிக்குக் கூறுதல். தானே அருங்கலை தந்தவன் - சிவபிரான். சங்கப் பலகை - பாண்டியனது தமிழ்ச் சங்கத்துக்குச் சோமசுந்தரக் கடவுளால் அளிக்கப் பெற்றுப் பொற்றாமரை வாவியில் மிதந்த பலகை. பதங்கள் வருந்த - திருவடிகள் வருந்த. முன்னின்றது, தருமிக்குப் பாட்டெழுதி யனுப்பியபோது. அருட்பொருள் : அருளாகிய பொருள். பாணர்பின் சென்றது : சேரமானிடம் பொருள் பெறும்படி பாணபத்திரனுக்குச் சீட்டுக்

கொடுத்தனுப்பியது (அல்லது விறகு விற்றதுவுமாம்). கொன்றையான் - சிவபிரான். அறிவோர் தரம் - கற்றோரின் சிறப்பு. எனவே, கல்வியின் மேம்பாடு இதுவாதலால், நானும் கற்கச் செல்வேன் என்று பிரிவுணர்த்தியவாறு. ௫௧௫

## 2. தலைவிக்கு உரைத்தல்

**ப**ணந்தாங் குலகில் பலகலை நூலும் பழுதறவே
உணர்ந்தார் உணர்வை உணர்தலுற் றார்உண ராதபுல்லர்
குணந்தான் எனநுடங் குங்கொடிபோலிடைக்கொவ்வைச்செவ்வாய்
மணந்தாழ் மடமயி லேவரு வார்இன்று மன்னவரே.

(உரை) பணந்தாங்கு உலகு - ஆதிசேடன் தலையில் தங்கிய இப் பூவுலகம்; பணம் - பாம்பின் படம்; பொருளை முதன்மையாகவுடைய உலகு எனலுமாம். உணர்ந்தா ருணர்வை உணர்தலுற்றார் - கற்றாருடைய அறிவைக் கற்குமாறு தலைவன் சென்றிருக்கிறான். புல்லர் குணந்தான் என - அற்பர் குணம்போன்ற; அற்பமான. ௫௧௬

## 3. பிரிவு உடன்படாமை

**பா**யும் கயலொண் பழனநல் லூரஎம் பாவையைநீத்(து)
ஆயும் கலையி னகத்திலே போலும் அளியினமேன்
மாயஞ்செய் துள்ளம் மயங்க முயங்கி மருவியவப்
பேயின் திறத்தும் பிரிதலின் றென்று பேசுவரே.

(உரை) தலைவியின் பிரிவாற்றாமை தோழி தலைவனுக்குக் கூறுதல். எம்பாவை: தலைவி. கலை - கல்வி. 'கலந்தாரைக் கை விடுதல் ஒல்லா... இனனன்றே, பேஎயொ டானும் பிரிவு' - பழமொழி. ௧௨௨. ௫௧௭

## 4. தலைமகள் கார்ப்பருவம் கண்டு இரங்கல்

**கூ**ற்றவர் கற்ற கலைமாக் கடற்கரை காண்பதற்கே
உற்றவர் உற்ற துணர்ந்திலர் போல்ஒரு மூன்றரணம்
செற்றவர் கற்றைச் சடைக்கொன்றை காட்டத் திருமடந்தை
கொற்றவர் போலிவ் விருவிசும் பேறிய கொண்டல்களே.

(உரை) கார்காலம் வரக் கண்டு, அக்காலத்து மீண்டு வருவே னென்று சொல்லிப் பிரிந்த தலைவனை எண்ணி யிரங்கல். கலை மாக் கடல்: ' கல்வி என்னும் பல்கடல் ' - திருவாசகம். உற்றவர்-உற்ற தலை வன். உற்றது உணர்ந்திலர்போல்-கார்ப பருவம் வந்துற்றமை யுணரார் போலும். மூன்று அரணம் செற்றவர் - திரிபுரங்களாகிய மூன்று அரணங்களையும் அழித்த சிவபிரான். கொன்றை அவருக்குரிய மலர். அம்மலரின் நிறமாகிய பொன்னிறம் மின்னல் காட்ட. திருமடந்தை கொற்றவர் - திருமால். அவர்போல் - அவர் நிறமாகிய நீல நிறம் பெற்று; என்றது, மழை சுமநத மேகங்களை; கார்காலம் வநததென்றவாறு. விசும்பு - ஆகாயம். கொண்டல் - கீழ்மேகம். ருகஅ

## உசு. காவற் பிரிவு

அதாவது, தலைவன் நாடு காத்தற்காகத் தலைவியைப பிரிந்து செல் லுதல். இக்காவற் பிரிவு இரண்டு வகை என்று **நம்பியகப் பொருள்** கூறும்; ' அறபபுறங் காவல் நாடு காவல் எனச், சிறபபுறு காவற் றிற மிரு வகைத்தே ' - எஉ.

### 1. பிரிவு உணர்த்தல்

அல்லவை நீக்கி அறப்புறங் காக்கவும் ஆதுலர்கள்
சொல்லுவ கேட்டவர் துன்பம் துடைக்கவும் சூழ்கடற்பார்
எல்லையில் ஒன்றையொன் றின்று செயுமிகல் வாட்டுதற்கும்
செல்லுவ தேகட னும்நாடு காவல் சிறந்தவர்க்கே.

(உரை) காவலுக்காகத் தான் பிரிவதைத் தலைவன் தோழியிடம கூறு தல். அல்லவை - தீயவை. அறபபுறங் காக்கவும்: ' அறபபுறங் காவல '- **நம்பி**; தருமத்தைப பாதுகாக்கவும். ஆதுலர் - வறியோர். இகல் வாட்டுதற்கு - போரிடும் பகைவரை ஒடுக்க. நாடு காவல் சிறநதவர்க்கு: களவித் தலைவன் அரசன் என்பது கருத்தாதலினால் நாடு காத்தல் தொழிலும் இவனுக்குரியது. **இ. வி.** கஅசு, காவற் பிரிவு தலைவன் பாங்கிக் கறிவுறுத்தற்கு மேற்கோள். ருகசு

## 2. பிரிவு உடன்படாமை

பண்காவல் கொண்ட பனிமொழிச் செங்கைப் பசுங்கிளிக்குங்
கண்காவல் என்பது கண்டுசெல் வீர்கொல் கருங்கடல்சூழ்
மண்காவல் கொண்ட வடிநெடு வேல்முடி மன்னவற்குப்
பெண்காவல் கொள்கை பெரும்பழி போலும் பெருந்தகையே.

(உரை) தோழி கூற்று. பசுங்கிளி - தலைவி. உம் கண் காவல் - உமது கண் பார்வையே காவல் என்பது. கண்டு நீ செல்ல ஒருப்படு வாயோ. மன்னவற்கு - மன்னவனாகிய உனக்கு. கொள்கை - கொள் ளுதல் பழிபோலும் என்று பழித்துரைததவாறு. 'விண்காவல் கொண்ட திலோத்தமை தான்முதல் மெல்லியலார், கண் காவல் கொண் டருள் காரிகை காவலர் கார்க்கடல்சூழ், மண்காவல்கொண்ட மனத்தின ராயினர் வாணன் தஞ்சைப, பண்காவல் கொண்ட மொழிச் செய்ய வாயிதழ்ப 'பைங்கிளியே' என்ற **தஞ்சைவாணன் கோவை** (௭௧௪) காண்க. 'மண் காவல் கொண்டவா பெண்காவல் நீத்தனர்' - **சீகாழி.** ௫௧௧. இ. வி. ௧அ௬. (பா - ம்) பணி மொழி ; என்பதும் ; கண்டு சொல்வீர் , சொற்கருங்கடல் ; மணிநெடு வேல். ௫௨௦

## 3. தலைவன் பிரிவு பாங்கி தலைவிக்கு உணர்த்தல்

ஆடுங் கொடிநெடுந் தேரன்பர் நாளை அறப்புறனும்
நாடும் புரக்க நயந்தனர் போலும் நறைமதமாக்
கோடும் குரும்பையும் செவ்விள நீரும் குறித்தசெப்பும்
ஓடும் புறங்கண் டியர்தன பாரததில் ஒல்கிடையே.

(உரை) அறப்புறன் - மேற்கூறிய அறப்புறங் காவல் ; நாடு - நாடு காவல். புரக்க - காக்க. நயந்தனர் - விரும்பிச் சென்றார். நறைமதமாக் கோடு - மணம்பெற்ற மதமுடைய யானையின் கொம்பு. கோடு, குரும்பை, இளநீர், செப்பு என்பன தனத்துக்குவமை. புறங் கண்டு - இவற்றை வென்று. ஒல்கு இடை - துவளும் இடையுடையவளே ; விளி. ௫௨௧

### 4. தலைமகள் கூதிர்ப் பருவம் கண்டு வருந்தல்

**நி**றைசூல் எழிலி பொழிந்துகண் மாறிய பின்னைநின்ற
குறைசூழ் புறவு குழைப்பவிண் சோரும் குறுந்துளிகொண்(டு)
அறைசூறை வாடை அலைக்குமிந் நாளிங் கறிந்திலர்கொல்
நறைசூழ் மலர்க்குழ லாய்நாடு காவல் நயந்தனரே.

(உரை) கூதிர்ப் பருவமாவது, ஐப்பசி கார்த்திகை மாதங்கள். இப் பருவத்து வருவேன் என்று பிரிந்த தலைவன் வாராமைக்குத் தலைவி வருந்தல். நிறைசூல் எழிலி: நிறைந்த நீர்பொதிந்த மேகம்; சூல் - கருப்பம். 'கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை' - **திருமுருகாற்றுப் படை** எ. கண் மாறிய பின்னை - அருளின் இயல்பு மாறிய பின்னை. புறவு குழைப்ப - முல்லை நிலம் குழையும்படி. விண் சோரும் - வானம் பொழிகின்ற. அறைசூறை வாடை - சூறைக்காற்றாக அடிக்கும் வாடை. அலைக்கும் இந்நாள் - துன்புறுத்தும் இபபருவத்தில். குழலாய்: தோழியை விளித்தது. நயந்தவர் - தலைவன். அலைக்கும் இந்நாள் அறிந் திலா கொல் என்றது, வரவில்லையே என்று வருந்தியவாறு. **இ. வி.** கஅகூ. (பா - ம்) குழைபயன் சோரும்; இந்நாள் இங் கறிகிலர் கொல். ௫௨௨

## ௨எ. பகைதணிவினைப் பிரிவு

பகை தணி வினைப்பிரிவு: பகைமைகொண்ட இரு வேந்தரைப் பகை தணிவித்து நட்புண்டாக்குதற் பொருட்டுத் தலைவன் தூதாய்ச் செல்லுதல். எனவே இது **தூதிற் பிரிவு** என்னவும் பெறும்; **மதுரைக் கோவை** இதை **இணங்கலர்ப் பொருத்தல்** என்று கூறும்.

### 1. பிரிவு உணர்த்தல்

**மூ**ளா அரும்பகை மூண்டிரு வேந்தர்கள் மொய்யமரின்
மாளா வகைசென்று மாற்றுதல் வேண்டி மணிவரைவேய்த்
தோளாய் பிரிந்து வருநா ளளவும் சுரும்பிமிரும்
தாளார் மலர்க்குழ லாள்வருந் தாவகை சாற்றுகவே.

(உரை) தான் தூதிற் பிரிவதைத் தலைவிக்குக் கூறி அவளை ஆற்றுவிக்குமாறு தலைவன் தோழிக்குணர்த்தல். மொய்யமர் - நெருங்கிய போர். வேய்த்தோளாய் : தோழியை விளித்தது. சுரும்பு இம்ரும் - வண்டு முரல்கின்ற. குழலாள் - தலைவி. சாற்றுக - நீ சொல்வாயாக. இ. வி. ௧௮௬. (பா-ம்) அரும்பழி; சுரும்பிமிர்பூ. ௫௨௩

### 2. தோழி பிரிவு விலக்கல்

**வே**யும் கரும்பும் விரும்பிய தோளிந்த மெல்லியலும்
ஆயும் பகைகொண் டிருக்கவைத் தோஎதிர்ந் தார்முனையில்
பாயும் புரவிப் படைஇரு வேந்தர் பகைத்தவரைப்
போயும் தணித்துப் பொருந்திடு மாறு வருந்துவதே.

(உரை) தலைவன் பிரிவதைத் தோழி தடுத்தல். வேயும் கரும்பும் தோளுக் குவமை. மெல்லியலும் ஆயும் பகை கொண்டு என்றது, அவன் பிரிவால் இவள் வருநதுவது கண்டு ஆய் பழிப்பாளாதலால். முனையில் - போர்க்களத்தில். புரவிபபடை - குதிரைபபடை. இப்பகையிருக்க, அப்பகை தணிக்க வருநதுவதேன் என்றவாறு. இ. வி. ௧௮௬, பாங்கி பிரிவுடன்படாமைக்கு மேற்கோள். (பா - ம்) துணிந்து. ௫௨௪

### 3. பாங்கி தலைவிக்கு உணர்த்தல்

**ப**ரிகெழு தானை இகலிரு வேநதர் பகைதணிப்ப
வரிகழ லாண்மைநம் மன்னர்சென் றார்கொல் மணிஅருவி
சொரிமழை தாழ்வரைத் தோகையஞ் சாரல் துடிமருங்குல்
புரிகுழல் வாணகைப் பூண்முலை நாண்மலர்ப் பொற்கொடியே.

(உரை) தலைவன் பிரிநதமை யுணர்த்தல். பரிகெழு தானை : புரவிபபடை. இகல் - போர். நம் மன்னர் : தலைவன். ௫௨௫

### 4. முன்பனிப் பருவம் கண்டு இரங்கல்

**ப**ருந்தார் சுடரிலை வேற்படை வேந்தர் பகைதணிப்பப்
பிரிந்தார் வருகிலர் பெய்வளை யாய்பிர சம்புலர்ந்து
கருந்தா மரையெனச் செந்தா மரைகரு கப்பெருக
வருந்தார் வருந்துற மஞ்சுதெற் கோட வரும்பனியே.

(உரை) முன்பனிப் பருவம் - மார்கழி தை மாதங்கள். பருந்தார் சுடரிலை வேற்படை - பருந்து பொருந்திய வேல்; வேல் பகைவரைக் கொன்றபின், இறந்தார் உடல்கள் தனக்கு உணவாதல்பற்றிப் பருந்து வேலைச் சுற்றும் என்றவாறு. 'அரும்பவிழ்தார்க் கோதை அரசெறிந்த ஒள்வேல், பெரும்புலவும் செஞ்சாந்தும் நாறிச் - சுரும்பொடு, வண்டாடு பக்கமும் உண்டு குறுநரி, கொண்டாடு பக்கமும் உண்டு' என்று **முத்தொளாயிர**த்துள் நரிக்குச் சொல்லியது காண்க. பிரசம் - தேன். செந்தாமரை - முகம்; கருந்தாமரை என்னும்படி, வருந்துவதால் கருக; முன்பனிக் காலத்தில் தாமரை கருகுவது இயற்கை; 'முகை போன கஞ்சங்கள் முன்பனியால் வெந்து மூளு கின்ற, புகைபோல' - **ஆநூ**. சகக. மஞ்சு தெற்கோட மேகங்கள் தெற்கு நோக்கிச் செல்ல. பனி வரும் - பனிக்காலம் வந்துவிட்டது. பனிக்காலத்தினும் வாடை வீசும், காற்று தெற்கு நோக்கியடிக்கு மாத லால், மஞ்சு தெற்கோட என்றவாறு; 'வயங்குகதிர் கரந்த வாடை வைகறை, விசும்புரி வதுபோல் வியலிடத் தொழுகி, மங்குல் மாமழை தென்புலம் படரும், பனியிருங் கங்குல்' - **அகம்** உச. இ. வி. கஅசு. (பா - ம்) பகைவேந்தர்; புலந்து; வருந்துர மஞ்சுதற் கோடி வரும். ௫உசு

## உ அ. உற்றுழிப் பிரிவு

உற்றுழிப் பிரிவு - தலைவன் தன் நண்பனை வேந்தனுக்குப் போரில் துணை செய்யும்பொருட்டுப் பிரிதல்; உற்றுழி - துன்பம் உற்ற இடத்து. இது **வேந்தர்க்குற்றுழிப் பிரிவு** எனவும் **துணைவயிற் பிரிவு** எனவும் வழங்கும்.

### 1. பிரிவு உணர்த்தல்

காந்தும் சினத்துப் புகர்முக வெங்கர டக்களிற்று
வேந்தன் பகைவினை முன்செல்லு மால்பின் மிகுசெருவில்
சேர்ந்தங் குதவி செயச்செல்ல வேண்டுமின் செய்வளையாய்
சாந்தம் புரிகுழ லாள்வருந் தாவகை சாற்றுகவே.

(உரை) தலைவன் தலைவிக்குத் தன் பிரிவு உணர்த்துமாறு தோழிக்குக் கூறுதல். காந்தும் - வெம்புகின்ற. வெம் கடக் களிறு - கொடிய மதமுடைய யானை. முன் செல்லும் - முற்கொண்டு செல்வான். செரு - போர். வளையாய் : தோழி. ருஉஎ

## 2. பிரிவு விலக்கல்

கன்னற் சிலைமதன் காந்துஞ் செருவில் கலங்குகின்ற
இன்னற் குதவிசெய் தாலென்ன தாகும் இருஞ்செருவின்
மன்னர்க் குதவி செயப்பிரி யும்மவர் வான்தொடுகாச்
செந்நெற் பழனக் கழனிநல் லூரஎம் சேயிழைக்கே.

(உரை) தோழி விலக்கல். காந்தும் - வெபபம் தருகின்ற; துன்புறுத்துகின்ற. இன்னற்கு - தலைவியின் துன்பத்துக்கு. வான் தொடு கா - வானைத் தொடும்படி ஓங்கி வளர்ந்த சோலை. மன்னர்க்கு உதவி செய்யப் பிரியும் நீ எம் சேயிழைக்கு மன்மதன் போரில் உதவி செய்தால் என்ன என்றவாறு. இ. வி. கஅசு, துணைவயிற் பிரிவு தலைமகனு லுணர்ந்த தோழி பிரிவுடன்படாமைக்கு மேற்கோள். (பா - ம்) காதும்; பிரியும் வரியுங் கழற்காற் செந்நெல். ருஉஅ

## 3. தலைவிக்கு உரைத்தல்

வகையுற்ற தார்புனை மன்னர்க்கு மன்னர் மறங்கெழுவான்
பகையுற் றுழிஉத விக்கிசைந் தார்அணி பைங்குரும்பைத்
தகையுற்று வம்பு தருக்கிஅம் போருகஞ் சாய்த்தறவே
மிகையுற் றெழுந்தன பாரம்பொ ருஇடை மெல்லியலே.

(உரை) தலைவன் பிரிவதைத் தோழி தலைவிக்குரைத்தல். தார் - மாலை. மறம்கெழு - வீரமிக்க. உற்றுழி உதவிக்கு இசைந்தார் - பகைவந்தவிடத்துத் துணைசெய்ய இசைந்தார். வம்பு - கச்சு. அம்போருகம் - தாமரை. குரும்பையும் அம்போருகமும் தனத்துக் குவமை. மிகையுற்று - பெருத்து. இடை - இடையுடைய. ருஉகூ

### 4. பாணனைப் பாசறை விடுத்தல்

தகைமெலி யக்கொங்கை தாங்குபைம் பொன்னும்வெஞ் சாயகப்பூத்
தொகைமெலி யப்படுந் துயரமும் சொல்க தொழுதிறைஞ்சாப்
பகைமெலி யத்தங்கு பாசறை மேற்செல்லும் பாணமுல்லை
முகைமலி யப்புனை தொங்கலெங் கேள்வர்தம் முன்புசென்றே.

(உரை) பாசறையில் தங்கியுள்ள தலைவனுக்குத் தலைவி பாணனைத் தூதாக அனுப்புதல்; பாசறை - பகைமேற் சென்ற படை தங்குமிடம். பைம்பொன் - பசலை. வெம்சாயகப் பூத்தொகை - கொடிய மலரம்புகள்; சாயகம் - அம்பு; மன்மதன் விடும் மலர்க்கணைகள். மெலிய-துன்புறுத்த. துயரம் - நான் படுந்துயரம். இறைஞ்சா - வணங்காத. முகை - அரும்பு. தொங்கலெங்கேள்வர் - மாலையணிந்த நாயகர். (இ. வி. கஅசு. (பா - ம்) தங்கு; சொல்லு; இறைஞ்ச; பாணன்; அம்கேள்வன்றன். ருரு௦

### 5. பாணனைத் தலைவன் கேட்டல்

தேதா வெனமுரல் செவ்வழி யாழ்கொண்டு சேரிவிட்டுப்
போதாத பாணரெப் போதுவந் தீர்புல வுண்பருந்து
மீதாடு பாசறை வாய்வினை யேனுக்கு வேல்நெடுங்கண்
சூதார் வனமுலைத் தோகைஎன் னோநின்று சொல்லியதே.

(உரை) வந்த பாணனைத் தலைவன் கேட்டல். என முரல் - என்று ஒலிக்கின்ற. செவ்வழி - ஒரு பண். போதாத பாணர் - எபபோதும் வாராத பாணனாகிய நீ. பாசறைவாய் - இப்பாசறையிடத்தில். தோகை: தலைவி. சொல்லியது என்னோ. (இ. வி. கஅசு. (பா - ம்) சேதாவன முலை; செவ்வழியாய்; புலவும் பருந்து. ருருக

### 6. பாணன் கழறல்

திருவடி வீழ்ந்தடி யேன்திரு வேவிடை யென்றுசெப்பப்
பருவரல் எம்பெரு மாட்டி பகர்ந்தது பற்றலரைப்
பொருதிகல் வென்ற புனைமணித் தேரும் புரவலரும்
வருவது கண்டிட யாம்பெற்றி லேம்என்னும் வாசகமே.

(உரை) அவன் கூறுதல். திருவே : தலைவியை அவன் விளித்தது. விடை - விடை தருவாயாக. செபப - கூற. பருவரல் - துன்பம் நிறைந்த. பற்றலரை - பகைவரை. எம்பெருமாட்டி பகர்ந்தது, புரவலர் வருவது யாம் கண்டிடப பெற்றிலேம் என்னும் வாசகம் ; நீ மீளவில லையே என்றவாறு. இ. வி. ௧அ௬. (பா - ம்) கண்டு சொலபபெற்றி லேம். ௫௩௨

## 7. தலைவன் பாசறைப் புலம்பல்

சாந்தங் கமழும் தடமுலை யாள்நின்ற தன்மையது
வேந்தன் பகைமுற்றி மீளலெந் நாள்வெயில் போயொளித்துக்
காந்துங் கடுங்கன லும்பொடி போர்க்குங் கடைப்பனிநாள்
போந்திங் கிருந்துவிட் டேனென்ன பாவம் புகல்வதுவே.

(உரை) தலைவியை எண்ணி, இனி என்று மீள்வது என்று தலை வன் வருந்தல் ; இத்துறை பாசறை முல்லை என்னவும் பெறும். நின்ற தன்மை - தலைவி யிருந்த இயல்பு. ஒளித்து - வெப்பம் நீங்கி. கடுங் கனலும் பொடி போர்க்கும் கடைபபனி : பனியின் கொடுமையினின்று தபப எண்ணிக் கனலானது பொடி போர்த்திருக்கிறது என்க. கடைப் பனியாவது, மாசி பங்குனி மாதங்களாகிய பின் பனிக் காலம். இருநது விட்டேன் என்றது தான் தலைவியைப பிரிந்து இருந்து விட்ட மையை. இ. வி. ௧அ௬. (பா - ம்) தன்மை இது ; மீள எண்ணேன் ; போந்தும். ௫௩௩

## 8. உருவெளி

வரிதருங் காஞ்சி மணிநெடுந் தேரும் வயங்கெழில்வார்
பரியும் மிருகட் பகடுமை வாட்படை யுங்குவிந்து
திரிய முனிந்தது தேர்வல வாகல வாச்செருவிட்
டிரிய முனிந்திறை கொண்டகல் காலையில் எத்திக்குமே.

(உரை) ஓராண்டினுள் தன் வினைமுற்றி மீளவேண்டிய தலைவன் அவ்வினை ஓராண்டின் முடியாது காலம் நீட்டித்த வழி, தலைவி உரு வெளிப்பாடு கண்டு பாகனிடம் கூறுதல். காஞ்சி : காஞ்சி என்னும் புறத்துறை, தலைவி இடையிலே அணிந்துள்ள ஓர் அணி. காஞ்சித் துறையாவது, வேற்று மன்னன் வந்தவிடத்து, அரசன் காஞ்சிப்பூச்சூடித்

தன் காவலிடத்தைக் காத்தல்; 'செருவெய்யோன், காஞ்சி மலையக் கடைக்கணித்து நிற்பதோ, தோஞ்செய் மறவர் தொழில்' - பு. வெ. மாலை கக. தேர் - தேர், அல்குல். வார் பரியும் இருகட் பகடும் - குதிரைப படையும் யானைப் படையும்; கச்சுக்கு இரங்கும் யானை யொத்த தனமும். வாட்படை - வாளாகிய படை, கண். போர்க்களத்துக்கும் தலைவிக்கும் சிலேடை. தேர்வலவா பாகனை விளித்தது. கலவாச் செரு - கலவாத போர், தலைவியைக் கூடாத போர். இரிய முனிந்து இறை கொண்டு அகல் காலையில் - பகைவர் ஓடப் பொருதற் பொருட்டு வேந்தன் துணையாக வந்தவிடத்து; வினை கழன்ற தோற்றம் குறித்தவாறு. எத்திக்கும் போர்க்களம் இவ்வுருவெளியைத் தந்தது என்க. 'மைக் குஞ்சரநிரை யால்தஞ்சை வாணன் மருவலரைக், கைக்குங் கணங்கெழு பாசறை யூடு கயலும்வில்லும், மொய்க்கும் சுடரிள அம்புலி தானும் முயங்கி எல்லாத், திக்குந் தொழவருமே சுருளோலைத் திருமுகமே' - தஞ்சை. சஉ௫. இ. வி. க௮சு, வினைமுற்றி மீண்டவன் உருவுவெளிப் பாடு கண்டு கூறியதற்கு மேற் கோள். (பா - ம்) அகல்வார் செரு. ௫௩௪

### 9. தோழி நிமித்தம் கூறல்

அரவிசைக் குந்திரு அல்குனல் லாய்அடை யார்மடியப்
பொரவிசைக் கும்பரி பூண்டபொற் றேர்நம் புரவலர்தாம்
வரவிசைக் கும்பல்லி வாமம் துடிக்கும் வரிநெடுங்கண்
இரவிசைக் குங்குழ லோடிள வாடைஇன் றென்செய்யுமே.

(உரை) நன்னிமித்தங் கண்டு, தலைவன் வருவான் என்று தோழி தலைவிக்குக் கூறுதல். அரவு இசைக்கும் - பாம்பை யொத்த. அடையார் - பகைவர். பொர இசைக்கும் பரி - பொருதற்குச் செலுத்தும் குதிரை. பல்லி அப்புரவலர்தாம் வர, இசைக்கும்; இசைக்கும் - சொல்லும். வாமம் துடிக்கும் - இடப்பக்கம் துடிக்கும். இவ்விரு நிமித்தங்களும் நன்மை தருவன என்பதை, 'புனைநலம் வாட்டுநர் அல்லர் மனை வயின், பல்லியும் பாங்கொத்து இசைத்தன, நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே' என்ற கலித்தொகையாலும்(கஉ) உணரலாம். இனி இளவாடை என் செய்யும் என்றவாறு. இ. வி. க௮சு. (பா - ம்) பூண்டு. ௫௩௫

## 10. வினைமுற்றி மீண்டது

புங்கம் படவண் டிமிர்நறுங் கோதைப் புரிகுழலாய்
அங்கம் படர்கொண் டழிவதென் னேஇனி அன்றினரைப்
பங்கம் படவென்ற பன்மணித் தேர்வெம் பரிகடவிச்
சங்கம் படக முழங்கவந் தார்நம் தலைவரின்றே.

(உரை) வினைமுற்றித் தலைவன் மீண்டமை பாங்கி தலைவிக் குணர்த்தல். புங்கம்பட - கூட்டமாக. வண்டு இமிர் நறுங்கோதை - வண்டு ஒலிக்கும் நறு மாலை. படர் - துன்பம். அழிவது - வருந்துவது. அன்றினர் - பகைவர். பங்கம்பட - கெடும்படியாக. பரி கடவி - குதிரையைச் செலுத்தி. படகம் - வெற்றி முரசு. இ. வி. ௩௪௬. (பா - ம்) வண்டிமிர்தரும்; இனியாடினரை. ௫௯௬

## 11. தலைவன் வந்துழித் தலைவி மகிழ்ச்சி

பரியும் கரியும் பரிநெடுந் தேரும் படைகவிந்து
விரியுங் கடலன்ன தானையும் வேந்தும்வெம் போர்கடந்து
வரியுங் கழல்முடி மன்னர் நின்றேத்த வரும்பரிசு
தெரியுந் தெரியிழை யீர்காண வாருமிச் சேணிலத்தே.

(உரை) தலைவன் வருவதறிந்து தலைவி மகிழ்ந்து கூறுதல். பரியும் கரியும் - குதிரைப்படையும் யானைப்படையும். தானை - சேனை. வரும் பரிசு - வரும் தன்மையை. தெரியிழையீர் : பாங்கியரை விளித்தது. இ. வி. ௩௪௭. (பா - ம்) துறை : தலைவி கூற்று. படை நவின்று; மன்னன் பொற்றேரில் வரும் பரிசு. ௫௯௭

## 12. வலம்புரி வாழ்த்து

மேலோட நின்று விரைகின்ற ஆவிக்கும் பாவிவிழிச்
சேலோடு நீர்க்கும் தெருமந்த நெஞ்சிற்கும் செஞ்சடையோ
காலோ குறுமுனி கையோ மடுவின் கரையில்வந்த [ன்
மாலோ இறைவர் மணிநெடுந் தேரில் வலம்புரியே.

(உரை) தலைவனது சங்கின் ஒலி கேட்டுத் தலைவி சங்கை வாழ்த்து தல். ஓடநின்று விரைகின்ற ஆவி - பிரிவாற்றாமை காரணமாக உடலி

ணின்றும் போகத் துணியும் உயிர். விழிச் சேலோடு நீர் : கண்ணீர். தெருமந்த நெஞ்சு - சுழல்கின்ற நெஞ்சு. செஞ்சடையோன் - சிவபிரான். குறுமுனி - அகத்தியன். மடுவின் கரையில் வந்த மால் : மடுவின் கரையில் முதலை வாய்ப்பட்ட கஜேந்திரன் கூவ வந்து காத்த திருமால். நிரனிறையாகக் கொள்க. வலம்புரியானது, ஆவிக்குக் காலோ, நீர்க்குக் கையோ, நெஞ்சுக்கு மாலோ என்க. இறைவர் - தலைவன். வலம்புரி - வலம்புரிச் சங்கு. சிவபெருமான் கால், மார்க்கண்டேயனுக்காக யமனை உதைத்தமையால், ஆவி போகாமல் காக்கவல்லது. குறுமுனி கை, கடலேழையும் தன்னுளடக்கி உண்டமையால், கண்ணீரைத் தடுக்கவல்லது. திருமால், காத்தற்றொழில் உடையவனுதலாலே, தெருமந்த நெஞ்சுக்குத் துயர் போக்கவல்லவன். ருகூஅ

## உகூ. பொருள்வயிற் பிரிவு

பொருள் தேடுவது காரணமாகத் தலைவன் பிரிதல். 'அருளிலார்க் கவ்வுலகமில்லை பொருளிலார்க் கிவ்வுலகமில்லாகியாங்கு'-குறள் உசஎ.

### 1. பிரிவு உணர்த்தல்

அருள்கொண் டியற்றும் அறமும் அறநெறி ஆய்ந்தமென்பூச்
சுருள்கொண்ட கோதையர் தோள்புணர் இன்பமும் சூழ்சுரும்பு
மருள்கொண்டு பாடும் மதுமலர்ச் சோலை மயிலனையாய்
பொருள்கொண் டொழியமுற் றுதென்று ஞாலம் புகலுமின்றே.

(உரை) பொருளின் இன்றியமையாமை கூறித் தலைவன் தோழிக்குத் தன் பிரிவுணர்த்தல். அறமும் இன்பமும், பொருள் கொண்டொழிய முற்றுதென்று ஞாலம் புகலும்: 'வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவண தெய்த இருதலையும் எய்தும்' - நாலடி ககச. மயிலனையாய் : விளி. ஞாலம் - உலகம். 'அரிதாய அறனெய்தி அருளியோர்க்கு அளித்தலும், பெரிதாய பகைவென்று பேணுரைத் தெறுதலும், புரிவமர் காதலின் புணர்ச்சியும் தருமெனப், பிரிவெண்ணிப் பொருள்வயின் சென்ற நம் காதலர்' - கலித்தொகை கக. புகலு மாதலினுலே நான் அது தேடிப்போவேன் என்றவாறு. ருகூக

### 2. தோழி செலவு அழுங்குவித்தல்

சேலும் கயலும் அனையகண் ணாள்சிறு வன்சதங்கைக்
காலும் தளர்நடை யுங்கையும் வையமும் கன்னலுந்தீம்
பாலும் கலந்த பவளத் தமுதும் தவளமுத்தும்
போலும் பொருட்பிரி வும்முள வோநம் புரவலனே.

(உரை) புதல்வனுடைய கால், நடை, கை, வையமும், பவளம் போன்ற வாயமுதும், நகை போன்ற முத்தும் பொருள் தேடுமிடத்தே உள்ளனவோ என்று கூறித் தலைவன் பிரிவதைத் தடுத்தல். வையமும் - சிறு தேரும். உளவோ என்றது, இல்லையாதலால் நீ பிரியற்க என்றவாறு. ருசo

### 3. அமையாமை கூறிச் செலவு அழுங்குவித்தல்

மன்னிய செல்வமும் மாறா இளமையும் வேறகலா
இன்னுயி ரும்பெறில் ஏதமுண் டோஇகல் வேல்நெடுங்கண்
மின்னிய நுண்ணிடை மென்னடைஅன்னம்மெலியவந்திங்(கு)
உன்னிய ஒண்பொருள் மேல்வள்ள லேஇங் கொருப்பட்டதே.

(உரை) தலைவி உயிர் விடுவாளென்று கூறித் தோழி செலவழுங்குவித்தல். நிலைபெற்ற செல்வமும், மாறாத இளமையும், நீ பிரிந்தால் அகலாதிருக்கும் உயிரும் பெற்றால், ஏதமில்லை ; ஆனால், செல்வம் நிலையற்றது, இளமை மாறும், நீ பிரியின் இவள் உயிர் அகலும் ; ஆகவே ஏதமுண்டு, பிரியற்க என்க. அன்னம் மெலிய - தலைவி வருந்த ஒருப்பட்டது - தேட எண்ணியது. ' இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார், வளமை விழைதக்க துண்டோ - உளநாள், ஒரோஒகை தம்முள் தழீஇ - ஒரோஒகை, ஒன்றன்கூ றுடை உடுப்பவரே ஆயினும், ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை அரிதரோ, சென்ற இளமை தரற்கு'- கலி. கஅ. (பா - ம்) உன்னியல். ருசக

### 4. தலைவிக்குப் பிரிவு உணர்த்தல்

படைத்தார் படைத்த பொருளால் முயன்ற பயனுலகில்
கிடைத்தார் அவரவர் என்பது கேட்டுமுன் கேடில்செல்வம்

உடைத்தாய அன்பினர் ஒண்பொருள் தேடிஉதவ லுள்ளத்(து)
அடைத்தார் அணிவளை யாய்அடை யாத அகன்புலத்தே.

**(உரை)** பாங்கி தலைவன் பிரிவதைக் கூறுதல். கேட்டு : என்ற மூதுரையைக் கேட்டு ; 'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்' - **திருக்.** ௩௩௨. கேடில் செல்வம் உடைத்தாய அன்பினர் : கல்விமிக்க தலைவன் ; 'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு-மாடல்ல மற்றை யவை' - **குறள்** ௪௦௦. உள்ளத்தடைத்தார் - மனத்திலே எண்ணினர். அகன்புலத்தே தேடி உதவல் உள்ளத் தடைத்தார் என்க. ௫௪௨

### 5. தலைவி நிலை கூறி விடுத்தல்

இனவா ரணந்திரி வெஞ்சுரம் போக இரும்பொருட்கு
நினைவாகில் உம்மை விலக்குகி லேம்செல்லும் நீள்புனத்து
மனவார் அகலல்குல் வல்லியை நீர்வரு வார்சிலரை
வினவா தொழியும் வினவின்முற் றாது வினைஉமக்கே.

**(உரை)** தலைவியின் துயரைத் தோழி குறிப்பால் உணர்த்தி விடுத்தல். வாரணம் - யானை. இரும்பொருட்குப் போக நினைவாகில் என்க. விலக்குகிலேம் : யாம் தடுக்கவில்லை. வல்லியை: தலைவியின் தன்மையை. வருவார் சிலரை - இங்கிருந்து எதிர்ப்பட்டு வருவோரை. வினவா தொழியும் : தலைவி எப்படி யிருக்கிறாளென்று கேளாதே. வினவின் முற்றாது வினை - கேட்டால், நீ மேற்கொண்டு சென்ற வினை தடைப் படும். 'செல்வினிச் சென்றுநீ செய்யும் வினைமுற்றி, அன்பற மாறி யாம் உள்ளத் துறநதவள், பண்பும் அறிதிரோ என்று வருவாரை, என் திறம் யாதும் வினவல் வினவின், பகலின் விளங்குநின் செம்மல் சிதைய‌த், தவலரும் செய்வினை முற்றாமல் ஆண்டோர், அவலம் படுதலும் உண்டு' என்ற **கலித்தொகையை** (௧௯) இச்செய்யுள் தழுவி வந்தது. ௫௪௩

### 6. இரவுநீட்டம் கூறிச் செலவு அழுங்குவித்தல்

ஓருநா ழிகைசெல்லில் ஒன்பதி னாயிரம் ஊழிசெல்லும்
அருநா ழிகைஅவை ஆறைந்தும் நீந்தி அருவரைகள்

இருநாலும் ஆழ்கடல் ஏழும் கடந்திளை யாமலென்றாழ்
வருநாளும் உண்டுகொல் நீசென்ற நாளிம் மதிநுதற்கே.

(உரை) தலைவன் பிரியின் இராப்பொழுது தலைவிக்கு மிக நீண்டதாய்ப் புலப்படுமென்று கூறி, தோழி தலைவன் செலவழுங்குவித்தல். இரவில் ஒரு நாழிகை செல்வது ஒன்பதிணாயிரம் ஊழியாகத் தோன்றும். அரு நாழிகை - போதற்கு அரிய நாழிகை. ஆறைந்து : முப்பது ; ஓர் இராப்பொழுது. நீந்தி : இந்நீண்ட நேரத்தையும் கடந்து. அருவரைகள் இருநாலும் : அட்டகுலபர்வதங்கள் என்னும் மலைகள் எட்டையும். கடலேழும் - ஏழு கடலையும். கடந்து இளையாமல் என்றாழ் வரு நாளும் உண்டுகொல் - இவ்வளவையும் கடந்து சூரியன் இவளுக்கு இரவு நீங்குமாறு, மீண்டும் வந்து உதிப்பானோ ; என்றாழ் - சூரியன். தலைவிக்கு இரவு இவ்வளவு நெடிதாய்த் தோன்றுகிறது. நீ சென்ற நாள் - நீ பிரிந்து சென்ற காலத்தில். இம் மதிநுதல் : தலைவி. ௫௪௪

## 7. பிரிவு ஆற்றாமை

புறந்தாழ் அளகஞ் சரியப் புளகம் புரியக்கொங்கை
சிறந்தாகம் மூழ்கித் திளைத்ததெல் லாஞ்செல்வ மேவிரும்பி
மறந்தார் முடிய மறந்தன ராயின் மடநெஞ்சமே
இறந்தால் இனிப்பிற வாகாப்பெண் பால்வந் தெழுமையுமே.

(உரை) பிரிவாற்றாத தலைவி தன் நெஞ்சுக்குக் கூறுதல். அளகம் - கூந்தல். ஆகம் - தன் உடல். திளைத்ததெல்லாம் - தலைவன் இன்புற்றிருந்ததெல்லாம். செல்வமே விரும்பி - பொருள் தேடிச் சென்று. இறந்தால் - நான் இறந்து போனால். இனி எழுமையும் பெண்பால் பிறவு ஆகா - ஏழு பிறப்பும் நான் பெண்ணாய்ப் பிறக்கவேண்டாம். ௫௪௫

## 8. வன்புறை எதிரழிதல்

நகையாடி வைகலும் சென்றுமென் னுநிற்பர் நானவரைத்
தகையா துமக்கிது தன்மையென் றேன்தணப் போமினிஎன்(று)
உகையா மணிநெடுந் தேர்ச்சுரம் போயினர் ஒண்பொருட்கென்
மிகையால் எனக்கிங்ங னேவந்த தால்இந்த வெந்துயரே.

(உரை) தலைவி கூற்று. வைகலும் சென்றும் - தினமும் செல்வேம் என்பார் தலைவர்; கூற, தலைவி தடுக்கிருள். தணப்போம் இனி - பிரிவைத் தணந்து விடுவோம். என்று - என்று கூறியிருந்தும். உகையா - உகைத்து. இவ்வாறு நிகழ்ந்ததைத் தலைவி தோழியிடம் கூறி எதிரழிகிருள். ௫௯௬

## 9. பிரிவு ஆற்றுவித்தல்

இருங்கற் புடையவர் இன்புறும் ஆடவர் ஏகுவதும்
அருங்கற் புடையவர் ஆற்றும் திறனும் அணிஇழைபொன்
மருங்குற் படர்முலை யாய்அவர் மீண்டும் வருவதுவும்
கருங்கற் புடைதழு வுங்கடல் ஞாலம் கடனென்னுமே.

(உரை) ஆற்றியிருப்பது கற்புடையவர் கடன் என்று தோழி கூறுதல். இன்புறும் - காதலுக்குரிய. ஏகுவதும் - பிரிந்து செல்வதும். முலையாய் - விளி. அவர் - அத்தலைவர். புடைதழுவும் கடல் ஞாலம் - பாறையில் மோதும் கடலால் சூழப்பட்ட உலகத்தவர். ‘ வினையே ஆடவர்க் குயிரே வாணுதல், மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் ’ - குறுந். ௧௩௫. இ. வி. ௧௮௬, பாங்கி தலைவிக் குடன் படுத்தற்கு மேற்கோள். (பா - ம்) இன்புற; அணியிழைப்பென்; கடனென்றுமே. ௫௯௭

## 10. இல்லத் தழுங்கல்

தொழுது வணங்கி மணங்கமழ் தார்ப்பெய்து தொய்யின்மெய்
எழுதி முயங்கி மயங்கின மாக இருங்கயற்கண் [யில்
அழுது சிவந்து பசந்தது நாம்இங் ககலுவமேல்
பழுது பிறந்து விடுந்தனி ஆவி பணிமொழிக்கே.

(உரை) பாங்கியின் சொற்களைக் கேட்ட தலைவன், பொருள் தேடிப் போகாது இல்லத்தில் தங்கி, தலைவியைப் பிரிதலைத் தவிர்தல். தொழுது வணங்கி மயங்கினம் என்று அவன் தன் நெஞ்சுக்குக் கூறுதல்; இவ்வாறு செய்தது, பிரிவுக்கு விடை பெறும் பொருட்டு; ‘ இள

முலை, போழ்திடைப் படாஅமல் முயங்கியும் அமையாரென், தாழ்கதுப் பணிகுவர் காதலர் மற்றவர், சூழ்வதை எவன் கொல் அறியேன் என்னும்; கழிபெரு நல்கலொன் நுடைத்தென என்தோழி, அழிவொடு கலங்கிய எவ்வத்தள் ஒருநாள் நீர், பொழுதிடைப் படநீப்பின் வாழ் வாளோ, ஒழிகினிப் பெருமநின் பொருட்பிணிச் செலவே' - கலி. ச. ஆவி பழுது பிறந்துவிடும் - உயிர் விடுவாள் என்றவாறு. இ. வி. அங, பிரியக் கருதிய தலைமகன் இல்லின் கண்ணே செல வழுங்குதற்கு மேற்கோள். ருசஅ

## 11. தலைமகன் செலவு அழுங்கல்

**வ**ரியரி தங்கும் மருணெறிக் கானமும் வானருவி
சொரிதரு துங்கக் கிரியுமுண் டோகொய் சுவற்கவனப்
பரிபுர நீள்குரப் பாய்பரித் தேர்வல்ல பாகஎன்றும்
தெரிவரி தால்இது வோபண்டு நாம்சென்ற சேணெறியே.

(உரை) வரி அரி - புலி சிங்கம். மருள் நெறிக் கானம் - மயங்கத் தக்க நெறியுடைய காடு. கவனம் - குதிரையின் கதி. பாக : விளி. தெரிவரிதால் : வழி தெரியவில்லை ; இதைச் சொல்லித் தலைவன் செல வைத் தவிர்ந்தவாறு. ருசகூ

## 12. சுரத்திடை அழுங்கல்

**செ**ன்றே பொருள்முற்றி மீளுதல் அன்றெனில் தேர்ந்திதனை
அன்றே தவிர்தலன் றேஅறி வார்தொழில் ஆரழற்றிண்
குன்றே நெருங்குங் கொடுஞ்சுரத் தென்னையும் கொண்டுவந்து
நின்றே வருந்துநெஞ் சேஅஞ்சு வேன்நின் நிலையதற்கே.

(உரை) இடைச் சுரத்திற் செல்லுந தலைவன் தன் நெஞ்சொடு கூறி வருந்திச் செலவழுங்கல். அன்றே தவிர்தல் - பிரிய நினைத்த அன்றே தவிர்தல். மீளுதல் அல்லது தவிர்தலன்றே அறிவார் தொழில். குன்றே நெருங்கும் - குன்று மிகுந்த. என்னையும் என்றது, நெஞ்சை விளித்துக் கூறுகின்றமையால். நின் நிலைக்கு அஞ்சுவேன் என்க. இ. வி. அங, பிரியக் கருதிய தலைமகன் இடைச்சுரத்தின் கண்ணே

செல வழுங்கியதற்கு மேற்கோள். (பா - ம்) வினைமுற்றி ; மீளுவது ; இந்நிலை. ருற

## 13. சுரத்திடைக் கனவொடு புலம்பல்

**வ**னவேய் பொருதடந் தோள்வடந் தோய்முலை வல்லிபுல்ல
கனவே எனஉன்னி நாட்டந் திறந்துள ஞானமிலார்
எனவே தனிநின் றிரங்கவெங் கானத் திகலுங்கங்குற்
கனவே உனக்கும் கனவெய்து மால்ஒரு காலத்திலே.

(உரை) பொருள் முற்றி மீண்டு சுரத்திடை வந்த தலைவன் தலைவியைக் கனவிற் கண்டு அக்கனவொடு புலம்பல். வன வேய் - காட்டு மூங்கில். வடம் - மாலை. புல்ல - புல்லியதாய்த் தெரிய. நாட்டம் - கண். இகலும் - எதிர்ப்பட்ட. கனவே : விளி. இ. வி. கஅசு, தலைவி பிரிந்துழிக் கனவு கண்டிரங்கற்கு மேற்கோள். (பா - ம்) வல்லுப புல்ல ; துறந்து நன் ஞானமில்லார் ; திகழுங் கங்குல். ருக

## 14. உருவெளி

**வி**ரும்பும் பொருள்முற்றி வெவ்வினை யேன்இன்று மீளுநெறி
இரும்பும் பொறிஎழும் கானமன் றோஇள நீருமந்தண்
கரும்பும் கமுகும் கதலியும் சேல்களும் காமரிசைச்
சுரும்பும் பயில்குழற் சோலையும் நீகொண்டு தோன்றுவதே.

(உரை) பொருள் முற்றி மீண்டு வருந் தலைவன் வழியில் தலைவி உருவெளிப்பாடு தோன்றக் கண்டு கூறுதல். இரும்பும் பொறி எழும் கான மென்றது, சுரத்தின் வெம்மையைக் கூறியது. இளநீர் - தனம் ; கரும்பு - தோள் ; கமுகு - கழுத்து ; கதலி - தொடை ; சேல் (மீன்) - கண் ; சுரும்பு பயில் சோலை - குழல். காமர் இசை - இனிய இசை பாடுகின்ற. நீ என்றது, இத்தனையுங் கொண்டு தோன்றும் தலைவியின் உருவெளியை விளித்து. 'உலகினெல்லாம், காணுந் திசைதொறும் கார்க்கய லுஞ்செங் கனியொடுபைம், பூணும் புணர்முலை யுங்கொண்டு தோன்றுமொர் பூங்கொடியே' - திருக். ருசக. இரும்பும் பொறி எழுங் கானத்தில் இத்தகைய நீ தோன்றுவதே என்றவாறு. ருஉ

### 15. தலைவி இளவேனிற் பருவம் கண்டு புலம்பல்

தளவே பொருநகைத் தையனல் லாய்நம் தனத்திலும்வே(று)
உளவே தனமென் றெழுந்தன ராக உயங்கியநம்
அளவே நெருங்கும் அருங்குயில் வேளை வரஅழைக்கும்
இளவேனில் வந்தும் வருகிலர் காதலர் இன்னமுமே.

(உரை) இளவேனில் - சித்திரை வைகாசி மாதங்கள். தளவு - முல்லை. தனம் - முலை, பொருள். உயங்கிய - பிரிவாற்றாது வருந்திய. வேளை - மன்மதனை. அழைக்கும் இளவேனில்: வசந்த காலமாதலால் குயில் கூவுவது தலைவிக்குத் துயரை விளைவிக்கின்றது; 'குயில் மாருத மாந்,தேர்த்தனி வீரன் திருநாளிதுவந்து சேர்ம்னென்று......ஆர்த்தது'- தஞ்சை. சஉஉ. ருருரு

### 16. பிரிவு ஆற்றாமை

மறித்துப் பிறையொன்று வந்திடும் காலை வருவலென்று
குறித்துப் பிரிந்தனர் கோல்வளை யாய்மென் குவளையங்கண்
நெறித்துப் புனைந்து நறுநுதல் நீவி நிரைவளைகைச்
செறித்துப் புணைமுலை மேற்றொய்யில் தீட்டிய செங்கையரே.

(உரை) தலைவி கூற்று. மறித்துப் பிறையொன்று வந்திடும் காலை: இப்பிறை போய் அடுத்த பிறை வருவதற்குள். குறித்து - பருவம் குறித்து. வளையாய்: விளி. செறித்து - மீண்டும் பொருத்தி. தீட்டிய செங்கையர் - தலைவர். இன்னும் வந்திலரே என்றவாறு. ருருச

### 17. பிழைத்தது பருவம் என்று இரங்கல்

அரும்புறு கொங்கை அலருறு கோதை அயிலுறுகண்
கரும்புறும் இன்சொற் கனங்குழை யாய்களி கொண்டுவண்டு
சுரும்புறு மென்கொன்றை சூழ்சடை போலொளி தோன்றுசெக்கர்ப்
பெரும்பிறை தோன்றியும் தோன்றார் பொருளிற் பிரிந்தவரே.

(உரை) இளவேனிற் காலத்து வருவேனென்று பிரிந்த தலைவன் வாராமையால், இது அப்பருவமல்ல என்று இரங்கல். அரும்புறு:

அரும்புபோன்ற. அலருறு - மலர் சூடிய. அயிலுறு கண் - வேலொத்த கண். குழையாய்: தோழியை விளித்தது. செக்கர் - சிவந்த வானத்தில் ௫௫௫

## 18. வரவு மொழிதல்

குரவலர் பூங்குழ லார்நெடு வீதி குறுகவண்டு
விரவலர் தாவ மிகமிக வாழ்த்தி வியந்துமுன்னின்(று)
இரவலர் ஏத்த இனவளை ஆர்ப்ப இயம்முழங்கப்
புரவலர் இன்றுவந் தார்திரு வேதம் பொருள்முடித்தே.

(உரை) தலைவன் பொருளோடு வந்தமை தோழி தலைவிக்குரைத்தல். குரவலர்-குராமலர் அணிந்த. இரவலர் - பரிசில் வேண்டுவோர். இயம் - வாத்தியம். புரவலர் - தலைவன். திருவே: தலைவியை விளித்தது. இ. வி. ௧௮௬. (பா - ம்) குறுகி; தாவி; வாழ்த்த. ௫௫௬

## 19. கடிதின் வந்தீர் எனும் ஈன்றாட்குத் தலைவன் கூறல்

கருங்குல வெற்பும் கடும்புன லாறும்வெங் கானமெல்லாம்
சுருங்க இமைப்பொழு திற்கொண்டு மீண்டன தோகையன்னாள்
மருங்குல் எடுத்த மகவுமுள் ளாவி வருந்துயிர்ப்பும்
நெருங்கும் வளைக்கையின் நீவநில் லாதகண் ணீரும்வந்தே.

(உரை) விரைவிலே வந்தமை குறித்துப் பாராட்டிய செவிலிக்குத் தலைவன் கூறுதல். கருங்குல வெற்பு - மலைகள். சுருங்க - சிறியவை என்னும்படி. கொண்டு மீண்டன - என்னை அழைத்து வந்தன. அன்னாள்: தலைவி. மகவு - புதல்வன். உயிர்ப்பு - என் பிரிவினாலேற்பட்ட பெருமூச்சு. கையின் - கையினாலே. நீவ - தடவி நீக்க. மகவும் உயிர்ப்பும் கண்ணீரும் என்னை இமைப்பொழுதிற் கொண்டு மீண்டன. ௫௫௭

## 20. நினைத்தமை கூறல்

எண்ணா அரும்பொருள் ஏகுஞ் சுரத்தில் எனைப்பகலும்
கண்ணார வந்துன் கவினலங் காட்டுதி கங்குலெல்லாம்

தண்ணார் மலர்ப்பள்ளி தங்கவி டாது தழுவுதிநீ
பெண்ணார் அமுதனை யாய்வினை யேனைப் பிரிந்ததின்றே.

(உரை) தலைவன் தலைவிக்குக் கூறுதல். எண்ணு அரும்பொருள் : பொருளை எண்ணி. பகலும் கவின் நலம் காட்டுதி : பகலில் தான் தலைவி யின் உருவெளித் தோற்றங் கண்டமை. கங்குலெல்லாம் - இரவிலே. பள்ளி - படுக்கை. தழுவுதி : தான் தழுவக் கண்ட கனவைக் குறித்த வாறு. பிரிந்தது இன்றே-ஆகவே நீ என்னைப் பிரிந்திருக்கவில்லை. ருருஅ

## 21. காணு நிலை உரைத்தல்

வானகத் தேநின்று வந்தனை யாய்இங்ஙன் நீவருந்த
யானகத் தேகொண் டிராததெந் நாள்உன்னை எய்தியவெம்
கானகத் தேஉண் மறந்தனை யோஅருங் கங்குலினும்
ஊனகத் தேகொண் டொளித்தனை யோகண் துயின்றிலவே.

(உரை) தலைவி கூறுதல். வந்தனையாய் - வந்தெொத்து வந்த வனே. இங்ஙன் - மேற் கூறியவாறு. ஊனகத்தே கொண்டு - என்னுடலினுள்ளே. கண் துயின்றில என்று தன் நிலையைத் தலைவி அவனுக்குக் கூறுகிறாள். ருருகூ

## 22. பள்ளியிடை மகிழ்ச்சி

முருந்தே அனைய முறுவலும் செவ்வி முகமுங்கண்டு
மருந்தே அனைய மழலையும் கேட்டு மதுகரஞ்சூழ்
செருந்தேர் அலங்கற் செறிகுழல் மோந்துசித் தங்களிகூர்ந்(து)
இருந்தேன் இனிவருந் தேன்இள வாடை எறிதுளிக்கே.

(உரை) தலைவன் தன் மகிழ்ச்சியைக் கூறுதல். முருந்து - மயி லிறகின் அடிக் குருத்து ; அனைய முறுவல் - வெண்முறுவல். மதுகரம் - வண்டு. செருந்து - செருந்தி மலர். வருந்தேன் இளவாடை எறிதுளிக்கு : ருகூரு. ருசுo

### 23. தலைவியைத் தலைவன் மிகுதிகொண்டு வியத்தல்

**வெ**திர்கொண்ட தோளிஎன் மேல்வைத்த காதல்கொல் விண்வடபால்
கதிர்கொண்ட மீனன்ன கற்பினற் பான்மைகொல் காய்கனகப்
பிதிர்கொண்ட மென்முலை பின்முறை வேட்பப் பெதும்பையைஇன்(று)
எதிர்கொண் டதுமண மங்கல மானதும் ஏற்றுவந்தே.

(உரை) வெதிர் - மூங்கில். வடபால் மீன் - அருந்ததி. கற்பின் பான்மை: 'வடமீன் புரையுங் கற்பின் மடமொழி' - **புறம்** கஉஉ. கதிர் கொண்ட - ஒளி பொருந்திய. கனகப் பிதிர் - பொற் சுணங்கு. பின்முறை வேட்ப - பின்முறை வதுவை செய்ய. மங்கலமானதும் ஏற்று உவந்து எதிர்கொண்டது காதல்கொல், பான்மைகொல்.

பின்முறை வதுவை என்பது தலைவன் இரண்டா முறை வரைந்து கொள்ளுதல். இவ்வாறு வரைந்து கொள்ளப்படுபவள் பெதும்பைப் பருவத்தினள் என்பது மரபு; 'பின்னர் வரைந்த பெதும்பையும் - இரண்டாவது வரைந்து கொள்ளப்பட்ட பெதும்பைப் பருவக்கிழத்தியும்' என்பது **நம்பியகப்பொருள்** சுரு. இவள் 'பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தி' எனப்படுவாள் (**நம்பி.** ருகூ). காமக்கிழத்தியர் பின்முறை வதுவைக்குரியர். ருசுக

### 24. இல்லறம்

**வே**ந்தன் பொருளுக்கு வெஞ்சுரம் போய்வந்த வெம்மைஎல்லாம்
பூந்தண் பெடையமர் சேக்கையிற் போக்கினள் பூவைஅன்னாள்
ஏந்தும் புதல்வனை இன்புற மார்பில் எடுத்தணைத்து
மோந்தும் தலைவ ருடன்முலை யாகம் முயங்கியுமே.

(உரை) இல்வாழ்க்கைச் சிறப்பு; கவிகூற்று. பூவையன்னாள், அணைத்தும் மோந்தும் முயங்கியும் வெம்மையெல்லாம் போக்கினள். சேக்கை - பள்ளி. ஆகம் - மார்பு. ருசுஉ

## ௯0. துறவறம்

*அல்லொடு நண்பகல் ஐம்புல னால்அரும் போகந்துய்த்து*
*வல்லியும் மல்லல் வளவய லூரனும் மாதருமே*
*சொல்லிய கேள்வித் துறைமுடி வாய்ந்து துணைவியரோ(டு)*
*இல்லறங் காத்துத் துறவறம் தாங்கல் இயைந்தனரே.*

(உரை) இல்வாழ்க்கை முற்றியபின் தலைவனுந் தலைவியும் துறவு மேற்கொள்வதைக் கூறுகிறது. கவி கூற்று. ஐம்புலனால் அரும் போகம் துய்த்து: 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள' - குறள் ௧௧0௧. கேள்வித்துறை முடிவு ஆய்ந்து - கல்வி கேள்விகளின் முடிவான பயனை ஆராய்ந்தறிந்து. 'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயன்' என்றமையால், முடிவு வீட்டின்பம். (பா - ம்) தாங்கள்.

இங்ஙனம் தலைவனும் தலைவியரும் பிறரும் ஒருங்கே துறவு மேற் கொண்டமை, சீவகன் துறவு பூண்டபோது நிகழ்ந்ததென்று **சீவக சிந்தாமணி**யால் அறியலாம்.

'காமஞ் சான்ற கடைக்கோட் காலை, ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி, அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும், சிறந்தது பயிற் றல் இறந்ததன் பயனே' என்ற **தொல்காப்பியம்** (பொருள். ௧௯0) இத் துறவுநிலையைச் சுட்டுகிறது. 'மக்களொடு மகிழ்ந்து மனை யறங் காத்து, மிக்க காம வேட்கை தீர்ந்துழித், தலைவனுந் தலைவியும் தம்பதி நீங்கித், தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப' என்பது **நம்பி யகப்பொருள்** அகத்திணையியல் இறுதிச் சூத்திரம் (௧௧௫). **மதுரைக் கோவை** தலைவன் துறவு நினைதல் என்பதை, 'ஆலவாயுறை யத்தர் மற்றை, வாழிக் கமலம் எனக்களித் தாரடி மாறிவைத்தே' என்ற வரி களாற் காட்டும். **திருப்பதிக்கோவை**யொன்றே துறவைக் கூறுகிறது; 'நல்லறத் தாற்பெறு தற்கரி தாய்பெற்ற நாயகமீங், கில்லறத்தாறெய்தி வாழ்ந்திருப் பான்அணங் கேயினிநாம், தொல்லறத் தாற்றமிழ் தேர்மாற னைத்துதித் தேதொடர்பால், வெல்லறத தாரொடொன் றும்பெரு வாழ் வெய்த வேண்டுதுமே' (௫உஎ) என்பது அதன் இறுதிச் செய்யுள்.௫௬௩

முற்றும்

# விசேடக் குறிப்புக்கள்

**பாட்டு** க. தளிர் ஈன்று, அரும்பி, மலர்ந்து, தேன் பொதிந்து, வண்டினம் கொண்டு, புறம் படர்கின்றமையால் கொடி ; ‘ பூமரு கண்ணிணை வண்டாப் புணர்மென் முலையரும்பாத், தேமரு செவ்வாய் தளிராச் செருச்செந் நிலத்தை வென்ற, மாமரு தானையெங் கோன்வையை வார்பொழி லேர்கலந்த, காமரு பூங்கொடி கண்டே களித்தவெங் கண்ணிணையே ’ - **பாண்டிக்கோவை.**

ரு. அலமரும் - சுழலும்.

சு. காமானலம் - காம அனலம்; காமமாகிய நெருப்பு ; ‘ சோகானலம் சுட ’ என்பர் பின்னும் (உசுக); ‘ ஆற்றரிய வெங்கோபானலம் ’- **மதுரைக்கோவை** ருசஉ. இப்பாடலோடு, ‘ ஊருங் குலனும் நலனுஞ் சிறந்தொரு வர்க்கொருவர்,சேரும் அவரறச் சிந்தையொன் றுயுற்ற செவ்வியின்பம், யாரிங் கொருவர்பெற் றார்என்னை யேயன்றி இவ்வுலகிற், காருங் கமலமும் போற்கரு மாணிக்கன் கப்பலிலே ’ என்ற **கப்பற் கோவைச்** செய்யுளை ஒப்புநோக்குக.

கசு. சுரும்புண்டெழு நன் மலரில் தொலை நலம் : ‘ குவளை, வண்டுபடு மலரிற் சாஅய்த் தமியேன் மன்ற ’ - **குறுந்தொகை** ருO ; ‘ வண்டுபோ கட்ட மலர்போல் மருள்மாலை, உண்டுபோ கட்ட உயிர்க்கு’- **நளவெண்பா** கஉரு.

கஎ. வரி ஏர் - ரேகையால் அழகு பெற்ற.

உக. புல்லத்தகுவதும் : நான் நட்பு பூணத்தகுபவள் என்க. நெடுங் கண் செல்லத்தகுவது : ‘ திருமான் முகமலர்ச் சேயரி பாய்கயல் சென்று சென்றவ், வொருமான் நகைமுக மாமல ரோடை உலாவருமே ’ - **தஞ்சை.** ருO. இனிய சொல்லத்தகுவது : இனிய மொழிகள் சொல்லு வல்லவள்.

சO. முயங்குத லுறுத்தல் : ‘ தலைவி முயங்குதற்கு உடன்பட்ட அருமையை வலியுறுத்திக் கூறுதல் ’ - **தஞ்சை.** கஎ உரை.

சஉ. ‘ கனமே குழல் ; கனம் - முகில் ’ - **தஞ்சை.** சகூ உரை.

ருசு. முலைக்கே பழி வைத்து, நுண்ணேரிடை அழியும் ; முலை தனது பாரத்தால் இடை அழியும்படி செய்த பழி.

௫எ. என்னை மன்னுயிர் - என்னோடு பொருந்திய உயிராகிய பாங்கன்.

௬௪. மேனி கோமளமே என்க; மென்மை அல்லது அழகு பொருந்தியது. குழலானது சாமளமே, மயிலே என்றவாறு.

எ௩. இன்னலம் - இனிய நலம். 'இந்நலம்' என்றிருந்திருக்கலாம்.

எ௪. புனையா எழில் என்றது தோற்றத்தை; தோற்றமாவது தலைவனொடு கூட்டத்தாற் பிறந்ததோரழகு.

எ௫. பழங்கண் - துன்பம்; இத்துன்பமானது பசலை புரிநதது.

௯0. வீநத துப்போடு ஒழி வேழம் - வலியழிந்து வந்த யானை; துபபு - வலிமை.

க0உ. யானும் பிறரும் என்றது யானும் பிற பெண்டிரும் (பாங்கியரும்) என்றவாறு.

க0௩. சினத்து உறை வாங்கிய திண்பிறை அம்பில் என்க. உறை - அம்பறாத்தூணி. திண்பிறை அம்பு - வலிய பிறைவடிவாயுள்ள அம்பு. இசை ஏழும் - சபத சுரங்களும்.

க௩௬. பாடம், பரிந்தழுமே என்றிருக்கவேண்டும்; அழும் - மணற்பாவை நம்மைத் தேடிக் காணமல் அழும், ஆகவே நாம் அங்கே செல்வோம் என்றவாறு. புனல் ஆடவும் பெற்றிலம், பாவை பரிந்தழும் என்ற வேறு குறிப்புக்களால், தலைவி நாணொடு நீங்கியமை புலப்படுத்தியவாறு.

க௩அ. தடக்கை வெற்பு - யானை. வள்ளல், உருவது குமாரனும் மாரனும் மன்னும், கண்ணியும் தழையும் தருவது, தடக்கை வெற்புப் பொருவது, போவதும் அயலே, வருவதும் நிற்பதும் நின்பொருட்டே கொல்.

க௪௩. இருநிதி - பெருநிதி என்னலுமாம்.

க௫உ. உன்னை மலர்கொய்யு மிடத்து உடனழைத்துச் சென்றால், காந்தளும் முல்லையும் கண்டு நடுங்கி அலராது முகையாக நிற்கும்; ஆகவே நீ வாரற்க; இச்செயலையின் நீழலில் நிற்பாயாக என்று கூறிக் குறியிடத்தே தலைவியை நிறுத்துப பாங்கி செல்லுதல். உகையார் - செல்லுதல் பொருந்திய. தருமே - தரும். (பா - ம்) செயலயல்.

க௫௩. பாவை அழுமென்றதை க௩௬ இலும் காண்க.

க௫௭. நெஞ்சம் மிக்கது வாய் சோர்தல்-நெஞ்சம் மிக்க துயரத்தை வாயாற் கூறிச் சோர்தல்.

க௬0. சூடினம் ஆடினம் நாம் இருவரும் சூடி ஆடினம் என்றவாறு.

க௬௩. 'ஏனது சுவைபடினும் நீகை தொட்டது, வானோர் அமுதம் புரையுமால் எமக்கென, அடிசிலும் பூவும், தொடுதற் கண்ணும்' - தொல். பொருள். க௪௪.

க௭௫. செழியர் வெற்றிக் கயல் பொருங்கண் - பாண்டியர் கொடியாகிய மீனையொத்த கண்ணையுடையவள்.

க௮உ. கிரி - பன்றி. களிறு ஆய் - களிறும் ஆகி. தலைவன் வரும் நெறியிலுள்ள உருமும் கிரியும் களிறும் என்க. அகம் வலித்து - மனம் வலியது. புணர்முலை நோக்கி அன்னை போயினள், இனி என்று வருமென்று உணர்வரிதால், என் செய்வோம் என்று பாங்கி கூறித் தலைவனைக் குறிவரல் விலக்கல். என்று வருமென்று உணர்வரிதால் என்றது, அன்னை அடிக்கடி வருகிறாள், உன்னைக் காணில் பழியுண்டாகும் என்றவாறு; 'அனமுந் தொழுநடை பாற்பல் கால்வரும் அன்னையுமே' - தஞ்சை. க௫௬.

ககக. அரி - சிங்கமென்றுமாம்.

உ0௭. (பா - ம்) ஆகஞ் செறிந்த.

உக௪. துத்தி - பாம்பின் படத்திலுள்ள பொறி; 'பைத்த பாம்பின் துத்தி ஏய்ப்ப' - பொருநராற்றுப் படை ௬௯.

உகக. 'நிமிர்கடுங் காலும்' என்பதே சரியான பாடமாதல் வேண்டும். நீர், கனல், கால், விசும்பு, பார் என இதனுள் ஐம்பூதத்தையும் குறித்தவாறு காண்க.

உஉக. நெஞ்சும் அழிவந்த என்று கொண்டு, அழிவந்த என்பதை வினைமுற்றாக்கி, நெஞ்சும் என்பதை அதன் எழுவாயாகக் கொள்ளவும். 'குன்றக் கூகை குழறினும்...அஞ்சுமன் அளித்தென் நெஞ்சம்' - குறுந். க௫௩.

உஉ௫. இப்பாடல் 'இது பிற செய்யுட் கவி' என்ற குறிப்புடன், தஞ்சைவாணன் கோவை சொக்கப்ப நாவலருரையில் இதே துறைக்குச் செய்யுளாக கக௫ என்ற எண்ணோடு எடுத்தாளப் பெற்றுள்ளது.

உ௩௦. துணைபிரியா அருமந்த அன்னங்கள் எனப் பிரிக்க.

உ௩௧. இப்பாடல் தோழி கூற்று. 'சொல்லலுற்றார்' என்பது பிழை எனத் தோற்றுகிறது; 'சேறலுற்றார்' (தலைவர் வரத் தொடங்கினார்) என்பது பாடமாயிருக்கலாம்.

உ௪௪. இதிற் காட்டிய குறுந்தொகைப் பாட்டினுள், 'தாயின் முட்டை' என்பது 'தாயீன் முட்டை' என்றிருக்கவேண்டும்.

உ௫உ. குரு - ஒளி பொருந்திய; 'குருவுங் கெழுவும் நிறனாகும்மே' - தொல். சொல். ௩௦௩.

உ௬௫. திங்களும் ஊர் கொண்டதே: 'மதி ஊர் கொண்டதே - திங்களைப் பரிவேடம் வளைந்தது' - தஞ்சை. உ௩௪ உரை.

உஎஎ. பிள்ளைத் தமிழ் வரி 'தென்னன் தமிழ்' என்றிருக்கலாம்.

உ௮௩. அருணனுக்குக் காலில்லை என்பது ஐதிகம்.

உ௮௫. வருநாள்: இன்ன நாள் வருவேன் என்று குறித்துப் பிரிந்த அந்த வருதற்குரிய நாள். மறபபு ஆர் நினைவார் என்று பிரித்து மறந்த பின் யார் நினைபபார் என்றும் பொருள் கொள்ளலாம்.

உ௯௧. உந்தி: ஆறு; நிறை உந்தி - நிறைந்த நீருடைய ஆறு. 'மாலைப் பெய்த மணங்கமழ் உந்தி' - குறுந். ௩௬௧.

உ௯உ. கடைசி வரியில் மோனை இல்லை; 'போம் இங்கு உடம்பை விட்டு' என்றாவது, 'போம் உம் குடம்பை விட்டு' என்றாவது பாடமிருக்கலாம். ஓதிமங்களும் அன்றில்களும், காதலர் செல்லில் குடம்பை (கூடு) விட்டு வெளியே செல்லமுடியும், வீட்டைக் கடத்தற்குரியவாளல்லாத நான் என்ன செய்வேன் என்றவாறு.

உ௯௫. வண்டர் - வண்டு. வண்டு கிளைக்கும் கேதகை நீழல்.

உ௯எ. கடற்றெய்வங் காட்டிச் சூளுற்றமை ௩௩௯ - ம் காண்க.

உ௯௯. அவர் சாரற்றழை: தலைவன் கையுறையாகத் தந்த தழை.

௩௦௧. தரியாத நெறி - அங்ஙனம் நெஞ்சம் தரிக்காத தன்மை. கடவாவரும - கடவிவரும்.

௩௦௬. நிழல் அளாநத சொல் - அருள் தழுவிய சொல்; நிழல் - அருள்; 'தண்ணிழல் வாழ்க்கை' - பட்டினப்பாலை உ௦௪.

௩௧௧. வன்புறை - வற்புறுத்துதலைக் கூறுதல். இது தோழி கூற்று. என் ஆவி என்றது, தலைவி.

௩௧௨. அவல் - பள்ளம்; பள்ளத்தில் தேங்கி நின்ற நீர்.

௩௧௪. கடிகொண்டு - காவல் கொண்டு.

௩௧௫. வகை விடுத்து - கலைந்திருந்த அணிகலன்களை யெல்லாம் ஒழுங்கு பெறத் திருத்தி; 'ஒள்ளிழை திருத்துவர் காதலர்' - கலி. ௪.

௩௧௯. வண்டு கொழுது இமிருங் குழல்; வண்டு துளைந்து ஒலிக்கின்ற கூந்தல். உணங்குதல் - காய்தல்; எனவே வெள்ளத்து உணங்கும் என்றது நயம். என் நெஞ்சமானது, தலைவியிடம் சென்று, எழுக எனும்; ஆனால், இதற்கு அவள் நீமட்டுமே வந்திருக்கிறாய், அவர் (தலைவர்) எங்கே என்று கேட்டால், நெஞ்சம் என்ன சொல்லும் என்று இரங்கியவாறு. இபபாடல் 'இது பிற செய்யுட் கவி' என்ற குறிப்புடன், தஞ்சைவாணன் கோவை சொக்கபப நாவலருரையில் இதே துறைக்குச் செய்யுளாக உஎ௩ என்ற எண்ணோடு எடுத்தாளப் பெற்றுள்ளது.

௩௨௫. தேவை - விருபபம்.

௩௩அ. கண் கலுழ்கின்றதற்குத் தலைமகள் காரணம் கூறுதலுமாம். நமக்கு - கண்களுக்கு. உயங்கும் மதுத்தண்டலை - மதுவுக்காக வண்டு உயங்கும் சோலை. நாம் - கண்கள்.

௩௪௦. நா அதற்கு இல்லையே; அதற்கு - சான்றாயிருந்த அபபுளினத்துக்கு; நா இல்லாமையால் புளினம் சான்று சொல்லுமாறில்லை.

௩௪௧. கண்மலரின் முன்னே நிற்பர் என்றது, நனவில் தலைவன் உருவெளித்தோற்றங் காணுதலை.

௩௪அ. வரியும் கரியும் வருநெறியுடைய ஊரிலே மணிநிதிகள் சொரிகின்ற பிறரும் வரைவு துணிகுவராம் என்க.

௩௫௦, ௩௫௧. இவ்விரு பாடல்களையும் முறையே தோழி கூற்றாகவும் தலைவி கூற்றாகவும் கொள்ளலாம். நின் - தலைவியின்.

௩௫௧. தாயிடம் கூற மறுத்த தோழியைத் தலைவி உடன்படுத்தல். நுதலும் விழியும் பசப்பும் அன்னை கண்டு, வெறியெடுப்பாள், பிறகு எல்லாம் அழியும் என்க. 'அழியுமன்றே' என்பது பாடமாயிருக்கலாம்.

௩௫௩. பேய் : வேலன்.

௩௬௦. 'கங்கை அன்ன' என்பது பாடமாயிருக்கலாம். குலச் சிறப்புக்குக் கங்கையைச் சொல்வது மரபு.

௩௬௨. விரிநீர் உலகு விலை பொருந்தார் - உலகையே விலையாகக் கொடுத்தாலும் எமர் பொருந்தமாட்டார்; 'விலை மதிக்குந் தரமோ வேலை ஞாலமும் மேருவுமே' (௩௬௦) என்றது காண்க.

௩௬௩. இன்சொல் இலாப்புலன் - இனிய நெல் விளையாத புலம்; சொல் - நெல்; இங்குப புகைதான் விளையும் என்றவாறு.

௩௬௬. தாரைவேல்: 'வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட, தீரவேல் செவ்வேள் திருக்கை வேல்' என்ற பாடல் காண்க.

௩௬௮. வம்பலர் இடமும் இருபபதில் எய்துவம் என்று கொண்டு, புதியவர் வாழும் இடமாகிய இருபபை அடைவோம் எனலுமாம்.

௩௭௦. இபபாடல், 'இது பிற செய்யுட் கவி' என்ற குறிப்போடு, தஞ்சை. சொ. நாவலருரையில், ௩௧௪ என்ற எண்ணுடன் பயின்று வருகிறது. (பா - ம்) வரை நிரை; வண்புயல்; கைவிட; உடறுய.

௩௭௧. அரிவரி தாவும் - கோடுடைய வண்டுகள் தாவும்; 'அறி வரிதாய' என்பது பாடமா யிருக்கலாம்.

௩௭௩. 'பஞ்செென அஞ்சும் பதயுகம்' - ௩௯௮.

௩௭௬. இத்துறை கண்புதையும் நாணமீதூரலுங் கூறுகின்றது. 'நாணமீதுறல்' எனவும் பாடம்.

௩௭௮. புன்செல்வர் தேடிய பொருளைத் தொலையாதவாறு இறுகப பொதிந்து வைத்திருப்பர். அங்ஙனந் தொலைதற்கரிதாயுள்ள இச்சுரம் எங்ஙன் தொலைந்தது என்க.

௩௮௮. ஆற்றும் தெரிவையர் - தேற்றுகின்ற பெண்டிர்.

௩௯௦. (பா - ம்) எடுத்தான்; சென்றுள்நம். ௩௯௩. பிறந்தால்.

௩௯௬. நெல்லுணங்கும்-நெல்லின் உணங்கலும்;உணங்கல்-உணவு.

௪௦௮. இபபாடல் 'இது பிற செய்யுட் கவி' என்ற குறிப்புடன், தஞ்சைவாணன் கோவை சொக்கபப நாவலருரையில் இதே துறைக் குச் செய்யுளாக ௩௪௯ என்ற எண்ணோடு எடுத்தாளப்பெற்றுள்ளது.

௪௧௪. 'நமக்கவனை' என்பது பாடமாதல் வேண்டும். அவனை - தலைவனை; அவனைப் பெற்ற தாய் நம் வீட்டில் உண்மகிழ் வதுவை தருமோ, வேலனே, எண்ணிச் சாற்றுக.

௪௨௮. யாவினும் - எல்லாவற்றையும்விட.

௪௩௩. உழையர் - அயலிலுள்ளார் எனலுமாம்.

௪௪௩. 'கொடியிடைக்கு, நாளிற் சிறந்து சிறந்தொரு கோடி நலந்தருமே' - **மதுரை.** ௬௬.

௪௪௯. கைக்கமலமாகிய இலையிலே (கையிலே) ஏற்ற வெம்பசி.

௪௫௧. புலந்தாரின் - மனம் வேறுபட்டோரைப் போல.

௪௫௬. நாணும் மடமையும் வெளுத்தது என்றது, தலைவி செவ்வணி யணிவித்துச் சேடியை அனுபபியமையால் அவளுடைய நாணின்மையும் அறிவின்மையும் வெளிபபட்டன என்று பழித்தவாறு.

௪௬௪. திலம் நையாவரும் அணி என்று கொண்டு, எள்ளினின்றெடுத்த எண்ணெயாலான நெய்யணி என்னலுமாம்

௪௭௨. வறும் புறம் - ஒன்றுமில்லாத முதுகுப்புறம்.

௪௭௩. சிபி காத்த புறவுக்கு இப்பதங்கம் உறவோ என்க. அரிந்தமன், 'அரிஞ்சயன்' என்றிருந்திருக்கலாம்; இது ஒரு சோழன் பெயர். வியங்கம்: அங்கமில்லாதது; எனவே எவ்வாறு உதவி செய்தது என்றவாறுமாம். புனல்நாடன் - நீர் நாடன் எனவும் சோழன் எனவும் இரு பொருள். என்னைச் சோழன் என்றெண்ணி, சிபி செய்த உதவிக்குதவி என்கண் நல்கியது என்கிறான் தலைவன்.

௪௭௪. பின்னகம் - பின்புறம்.

௪௭௮. இப்பாடல் 'இது பிற செய்யுட் கவி' என்ற குறிப்புடன், **தஞ்சை.** சொ. நாவலருரையில் இதே துறைக்குச் செய்யுளாக ௩௬௬ என்ற எண்ணோடு எடுத்தாளப்பெற்றுள்ளது. (பா-ம்) என்னே என்னே.

௪௮௧. அரம்பொரு கார் இரும்பு-அரம் பொருகின்ற கரிய இரும்பு.

௪௮௩. கதுவாமல் - வருத்தாமல் எனலுமாம்.

௪௮௫. போகா உளர் - எங்கும் போகாத உள்ளத்தவர்.

௪௯௨. காண - காண்பதற்கு. ௫௧௧. (பா - ம்) குறிப்ப.

௪௯௫. 'கொடுமை ஒழுக்கம் கோடல் வேண்டி, அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக், காதல எங்கையர் காணின் நன்றென, மாதர் சான்ற வகையின் கண்ணும்' - **தொல்.** பொருள் ௧௪௫.

௫௧௭. ஊர, பாவையை நீத்து நீ ஆயும் கலையின் அகத்து இலை போலும் அளியினம்; அளி (அருள்) என்பது நீ கற்கும் கல்வியில் இல்லை போலும் என்றபடி. மேல் மாயம் செய்து மருவிய பேய் என்க.

௫௨௦. கண்காவல்: 'மண்கடந் தமரர் வைகும் வான்கடந் தானைத் தான்தன், கண்கட வாமற் காத்த காரிகை வலியளே காண்' - **கம்பர்,** பால. உலாவியற் படலம் ௭.

# பழமொழி அகராதி

எண் : பாட்டெண்


அரவும் அரியும் வெந்தீயும் அரசும் இளைதாயினும் கொல்லும் 126

அழல் குளித்த இரும்புண்ட நீர் 16

அழலை நீர் கொண் டன்றித் தழல்கொண் டவித்தவரார் 508

ஆமை தன் பார்ப்பை இகந் துயிர் காக்கும் 244

இரப்பார் ஒருவர்க்கு இரு நிதி வைத்து உள்ளம் கரப் பார் உரைசெயும் கள்ளம் 143

இரும்பும் கனகமும் பொன் 481

இவுளி மாறுதழுங்கப் புடைத் தார் இருக்க மத்திகையை வெறுப்பதென் 486

ஊழிற் பெருவலி என்று மின்று 332

ஒரு நாழிகை செல்லில் ஒன் பதினாயிரம் ஊழி செல்லும் 544

கங்கை உறையும் அன்னம் உவராழியில் படியுங் கொல்லோ 478

கரியார் திருவிற் றரியாது உடைக என் கைச் சங்கம் 476

கரும்பை நுனிநின் றருந்திய தொக்கும் 436

கலர் தேடிய செல்வம் 125

கவி கொணர்ந்த மலைமேல் மருந்து வந்தோ விடம் மாற்றுவது 111

கழுதும் உறங்கும் பிறங்கி ருள் 256

கற்புணையாக முந்நீர் கடப்பார் கருத்து ஒக்கும் 105

கன்னியர்க்கு மடநாண் வரு வது போவதன்று 368

கனவே உனக்கும் கனவெய்து மால் ஒரு காலத்திலே 551

காற்றும் நெருப்பும் கலந்த தென்ன வரும் காரி 257

குழவி மழலைக் கென்றே பொருள் - அவையடக்கம்

சிறு கொடிக்கோ மதவேழம் துவக்குண்பது 49

சுடர் பட்டறியாதவர் காதலர் 444

ஞாயிற்று ஒளி மறைத்தார் எவர் கைவிரித்தே 477

தாரகையும் கெண்டையும் மீன் 481

நடிக்கும் பழைய நடத்தில் ஒன்று 488

நதிக்கொரு வான்புணே தோன்றில் வருந்துவரோ 50
நீருக வேலே நெருப்பெழுங் காலே மாறு உணர்வும் மதியும் 52
பகருந் தகைமையதோ பெரியோர் தம் பரிசுகள் 61
பிரியேன் பிரிவுறின் மாய்க என் பேரிசை 17
புணேயின்றி யார் கடப்பார் புனற் பொன்னியை 109
பெண்பால் பிறவு ஆகா இனி வந்தெழுமையுமே 545
பெரியோர் தம் மரபியல் வழுவுவரோ 458
பேயின் திறத்தும் பிரிதலின்று என்று பேசுவர் 517
பேயினுக்கு ஆறு மருந்து என் கொலோ 353
மங்கையர் கண்ணுமுண்டோ பெரியோர் செயும் வன்கண்மை 301
மஞ்சறியா மின்னும் வானறியாத மருந்தும் நெஞ்சறியாத நினைவும் உண்டோ 140
மடவாரினும் உண்டுகொல் வன்னெஞ்சர் 228
மதியை மழுவு கை காட்டி மொழிந்திரங்குமது 216
மரப்பாவையும் கண்டு உருகாததல்ல 143
முளரியும் முள்ளியும் முண்டகம் 481
மெழுகில் உருகிய அன்பு 5
வகுத்தவற்கும் முடியாதிந்த வல்லவம் 122
வாய்திறக்கில் உகுமோ மணி நித்திலம் 84
விதியைத் தடுப்பவர் எவர் 390

# அரும்பொருள் அகராதி

எண் : பாட்டெண்

அகத்தாமரை 375
அகத்தியன் : குறுகியவர் 399; குறுமுனி 538; நீரை யுண்டமை 399, 538; பொதியமுனி 513
அகநகர் 333
அகப்பொருள் - அவை யடக்கம்
அகம் வலிது 182
அகலாத நாண் 36
அசனி நேர் குரல் 215
அஞ்சல் அஞ்சல் 179
அஞ்சனம் 319, 487
அஞ்சேல் அஞ்சேல் 211
அஞர் கூரல் 315
அட்டகுல பர்வதங்கள் 283, 544

அடி தைவருதல் 31
அடிப்புனம் 253
அடுக்கல் மலே 253
அணங்கல் - வருந்தற்க 343
அணங்கு 46; தூர்க்கை 44, 365; தோழி 343; வரையர மகள் 246, 268
அணங்குதல் 314
அணங்கைப் பரவுதல் 335
அணி இயல் 193-4
அதிதூரத்தர் 341
அந்தணர் 400, 413
அந்தணர்க்கு ஆவும் கனகமும் ஈதல் 468
அந்தணர் தன்மை 411; தாமரை மாலேயுடையவர் 441
அந்திமாலே 183
அபராதம் 509
அம்பலும் அலரும் 307
அம்பிகாபதி : அவை.
அம்பு - நீர் 491
அம்போருக மாளிகை 223
அமரர் அமுத முண்டமை 22
அமரருக்கு அவியேற்றல் 468
அமுதம் : வற்ரு உததி மருந்து [401
அயன் 320
அயா வுயிர்த்தல் 308
அயிலுறு செங்கண் 555
அரவந் தரும் அலர் 273
அரவிந்த மாளிகை 205
அரவு நஞ்சுமிழல் 195
அரவை மிதித்து நடந்த காதலன் [298
அரிதோ அரிது 262
அரிந்தமன் 473
அரியங் குழலணங்கு 348 [394
அரிவை 117, 211, 335, 356,
அருகிய நாள் 438
அருணம் - மான் 312 [283
அருணன் : சூரியனுக்கு வலவன்
அருந்ததி 514; சாலி 461; வட மீன் 419, 561
அருந்தா அமுத மன்னுள் 359
அரும்பா முலேகள் 358
அரும்புறு கொங்கை 555
அருமணிக் கந்துகம் 395
அருமந்த அன்னங்கள் உகூ௦; - கொங்கை 369; - நாணம் அழிதல் 367; - வண்ணம் 277
அருமறை 238-9, 260
அருவரைகள் இருநாலு 544
அருவினே 169
அருவினேயேன் 62, 199, 201, 221, 356, 407 [538
அருள் கொண்டியற்றும் அறம்
அருளியல் சிதைத்தல் 123
அல்லகுறி 233
அல்லி 1; அல்லிக் குவளே 203
அல்லும் பகலும் 372
அல்லொடு நண்பகல் 563
அலங்காரம் 249
அலர்க்குறி 221
அலர் தூற்றல் 390
அலர் தூற்றிய ஊர் 428
அலர் மாற்றியது 434
அலருறு கோதை 555
அலவன் உலாவுந் துறை 495
அலவன் தொடி வைத்த செங்கை
அவம் 277, 387 [ஒத்தல் 495
அவல் - பள்ளம் 412 [290
அவிகொண்ட வெங்கனல் அம்பு
அழகெறிக்கும் தொடி 7
அழுகுரல் 356

அளி ஒட்டல் 308
அளி மூசுதல் 76
அளை தாழ் அரவு 126
அறத்தாறும் அன்பும் அருளும் அன்று 457
அறத்திற் றருமன் 513
அறத்துக்கு அன்னை 514
அறந்தாங்கு வான் 432
அறப்புறங்காவல் 519, 521-2
அறமும் இன்பமும் பொருளாலா மெனல் 539
அறிஞர் மொழியுங் கலைகள் 47
அறிவார் தொழில் 550
அறிவின் பிறந்தகம் 151
அறிவின்மை கண்டிலேன் 63
அறிவு கொளுத்துதல் 51
அறிவோர் தரம் காட்டியது 515
அறுகால் 30
அறுமுகன் 112
அறை குறை 522
அன்பினுக் கஞ்சுவேன் 192 [5
அன்பை என்னே உரை செய்வது
அன்றில் 292 ; - அனையோம் 13 ; நெகிழுமெனல் 123 ; அன்றி லும் பேடுமான இருவர் 511
அன்றினர் 536 [294
அன்னத்தொடு புலம்பல் 292,
அன்னம் துணை பிரியாமை 230
அன்னமும் சேவலும் சேக்கை புகுதல் 164
அன்னை - உமாதேவி 514
அனுமான் - கவி 111 ; கடல் தாண்டியது 290
அனை (அன்னை) : தலைவி 216
ஆகுலம் 333
ஆங்கு ஈங்கு ஊங்கு 404
ஆசாரக்கோவை ஆட்சி 126
ஆசும் பழுதில் பொன் 7
ஆடகப் பொன் 68, 255
ஆடகம் தலைவி நிறம் காலுதல் 313
ஆடகமால் வெற்பு 514; முடி 320
ஆடல் மயில் 180
ஆடலும் பாடலும் 482
ஆடிடம் 184, 185
ஆண்டுகொண்டமை 8
ஆதிசேடன் 516 ; - உச்சி தாங்கிய மணி 115 ; மாயோன் சேக்கை 154
ஆதுலர் துன்பம் துடைத்தல் 519
ஆமேய் கழனி 480
ஆமை தன் பார்பபை இகந்துயிர் காத்தல் 243
ஆய வெள்ளம் 20
ஆயு - ஆயுள் 23
ஆரம் - சந்தனம் 194
ஆரியன் - கூத்தன் 488
ஆருயிர் நடக்கின்றது 19
ஆலகால விடம் பாற்கடலில் வந்தமை 22
ஆலம் 208
ஆவணம் 384
ஆவலி - நகரேகை 261 [538
ஆவிக்குச் செஞ்சடையோன் கால்
ஆவி பழுது பிறந்துவிடும் 548
ஆவும் கனகமும் அந்தணர்க் கீதல் 468
ஆழி தொட்ட சுழி 186
ஆழிப்புவனம் 332
ஆளி 217, 398
ஆறுத மையல் 287
ஆறுமுகம் 353 ; ஆறுமுகன் 199
இகுளை 219, 315
இசை எழு 103
இசை மாய்க எனல் 17
இசையினம் - வண்டினம் 9

இந்திர சாபம் இறைஞ்சுநுதல் 474
இந்திரவி மறித்தாலனைய குடை-
இந்திரவிற் கூசிய நுதல் 3 [400
இந்திரன் செல்வம் 23
இப்பி அடுப்பாக வைத்தல் 449
இபம் - யானை 145, 217
இபமருப்பு 257
இம்மைக்கும் மறுமைக்கும் 119
இமைப்பொழுதிற் கொண்டு மீண்
டன 557
இமைப்போதும் பிரியேன் 17
இமையவர் 4, 65
இமையா விழிக்கின்ற இத்துணைப
இயம் முழங்கல் 556 [போது 327
இரலை 96
இரவலர் ஏததல் 556
இரவிற் பகல் பெரிதெனல் 272
இரவு - இரத்தல் 82
இருகால் ஒருகை வாரணம் 235
இருகால் வளைந்த வில் 268
இருகைக் களிறு - தலைவன் 198
இருகோட் டொருகைக்களிறு 332
இருட்குறி 190
இருதலைபபுள் 460
இரு நிதி 143, 303, 311 - 2,
இருபிறப்பாளன் 44 [330, 390
இருபிறப்பு 411 [அன்பு 16
இரும்புண்ட நீரல்லவோ இயைந்த
இரும்பும்பொறிஎழும் கானம் 552
இருவர்க்கும் ஆவி ஒன்று 13
இருவி 184 ; - படும்புனம் 136
இருவி மறுகுலை ஈனல் 253
இருவினையேன் 72, 247
இருள் துஞ்சும் அல் 381
இருளும் புயலும் தவமுயலல் 97
இல்லறம் காத்தனம் 563
இல்லிடம் கிடையாது வந்த பரி
இல்லென்னும் நா 363 [சம் 263
இலஞ்சி 410 [274
இலவும் கவிரும் அனைய செவ்வாய்
இலன் என்னும் நாவினர் 363
இழைகோத்தணிந்த கொடுவரிப்
இழைத்த குன்று 325 [பல் 402
இளங்களிறு - புதல்வன் 501
இளம்பால் மறிவள்ளுரம் 353
இளமரக் கா 325, 410
இளவண்டல் 197
இளவாடை 535
இளவேய் பொருமிருதோள் 33
இளவேனில் 553
இளையார் விளையாடு நீழல் 193
இளையேல் இளையேல் 323
இற்காவல் பூணல் 171
இறந்தும் பிறந்தும் இயைந்த
போகம் 432
இறை - மணிக்கட்டு 132, 248
இறைஞ்சு செநநெல் 497
இறைஞ்சும் எண்கு 192
இன்சொலிலாப புலனென்னும்
இன்பக் கள் 6 [நா 363
இன்பத்தில் மதன் 513
இன்பப பேருததிப்புணை 472
இன்பம் - அமுதம் அருந்திய வான
வர் ஆனந்தம் 431
இன்ப வெள்ளக்கடல் 460
இன்று நாளை எழுந்தருள் 282
இன்று நாளைவந் தெய்துவர் 310
இன்னம் 27, 92, 334
இன்னா நெறி 333
ஈன்ற மெய்யாற வேண்டல் 464
உகை - செலுத்துதல் 152
உடம்பிருக்குஞ் சிறை 233

உடம்பின் உடம்பொளித்தல் 6
உடனுறை பக்கம் 227
உடுக்குலம் 278
உண்டி அருகியது 74
உணங்கல் 44, 314, 319, 343
உததி 401, 472 [356
உதயம் கதிரவனுக்குக் கல் எனல்
உதிக்கும் திசை தடுமாறல் 53
உது 410
உம்பர் - தேவர் 69
உமாதேவி : அன்னை 514 ; சிவ பிரான் புடையிலுள்ள மான் 78 ; மலைமகள் 433
உமையவர் - சிவபிரான் 4
உமையாள் தலைவனை ஒன்றிய வாறு 282
உயங்குதல் 12, 30, 54, 317, 338, 342
உயிர் ஒன்றெனல் 294
உயிரகலந் தொன்றாய் உடம்பின் உடம்பொளித்தல் 6
உயிர் மருநது 44
உயிர் மாய்க எனல் 350
உயிரொத்த வாஞ்சை 304
உரவோர் செயும் வன்கண்மை மடவார் அறிவதுண்டோ 298
உருகா வயிரம் 506
உருபபு - வெம்மை 448
உருமேறு 192
உலகறி தையல் - பரத்தை 455
உலகியல் 110, 458
உலைவாய் அழல் குளித்த இரும்பு
உவர் ஆழி 478 [16
உவை உவை 159
உழுவை 217, 251 [தமை 94
உழைக்கன்றைக் கண்களா லழைத்
உழையர் கூற்று 433, 458 - 9
உளஞானமிலார் 551
உளமகிழ் தூங்கும் பரிசு 44
உற்பலம் - குவளை 4
உற்றுழி யுதவி 529
உறித்தாழ் கரகம் 400
உறை - நீர்த்துளி 318
உறை சிந்துகண் 169
ஊசல் 67, 75, 128, 185
ஊசலாடும் மனம் 12
ஊடலும் கூடலும் 482
ஊதை 4
ஊர்காவலர் துஞ்சாமை 274
ஊர் துஞ்சாமை 235, 240
ஊர் புலம்பல் 428
ஊன்று முக்கோல் 400
ஊனதத்தே கொண்டிருத்தல் 559
எங்கை - பரத்தை 467, 481,
எட்டுக்கையோன் 396 [495 - 6
எண்குன்றம் 280
எண்பட்ட நெல் 347
எதிர்நின்று கூறுந்தன்மை இல் லாமை 102
எம்பிரான் 47, 59, 280
எம்பெருமாட்டி 204, 532
எம்பெருமான் 434
எம்மையர் 420
எய் - முள்ளம்பன்றி 381
எயில் 268
எயிற்றி 402
எயினர் 404, 507
எரியும் சுடர் துணை 213
எருமை நன்குை 498
எல்லி - இரவு 39 ; சூரியன் 163
எல்லும் குமுதம் அலரும் 141
எழுகடல் 283

எழுத ஒண்ணுத வடிவு 8
எழுதரி தென்றல் 121
எழுதரிய பொன் 202
எழுபரித்தேர்க்கு ஒருகால் 281
எழுபிறபபும் நீங்கா நிலைபெற்ற நேயம் 10
எழுமையும் பெண்பிறவாகா 545
என்பு மாலை 119
என்றூழ் - சூரியன் 544
என்னையர் 361, 422, 427
ஏசுதல் - அலர்தூற்றல் 292
ஏதிலர் 167
ஏதிலன் பின் போம் மகளைப் பெறு தொழிவீரெனல் 394
ஏலங்கமழ்குழல் 77
ஏவிடை - அம்புவீழெல்லை 382
ஏவினுக்கு இவரை ஒப்பாரில்லை 92
ஏழாலும் ஐயமுறுதல் 74
ஏற்று மருபபு 257
ஏறனையான் 51
ஏறுத விண்ணப்பம் 486
ஐம்பால் 30
ஐம்புலனால் அரும்போகந் துய்த்தல் 563
ஐம்பூதம் 219
ஐயா-தநதை முதலாயினோர் 418, 420, 421
ஐவனம் 137, 184
ஐவாய் - ஐம்புலன் 69
ஒருகால் இருகாலும் 407
ஒருகைக் களிறு 198
ஒருதலைப்பட்ட இருதலைப்புள் 460
ஒழுக்கம் - மதிகண் டிகழ்தல் 74
ஒற்றைத்திகிரித் தேரோன் 53
ஒற்றை நீள்மரம் 236
ஒன்று பலவுக் குரைத்தல் 441
ஓங்கற் சிலம்பு 12
ஓட்டாதிருந்த உதவி 296
ஓதிமம் 288, 292
ஓம்படை 161, 180
ஓவியம் 2
ஓவிய மாளிகைச் சூழ்வு 383
கங்குல் நீளுதல் 24
கங்குலும் நண்பகலும் 301
கங்கை 110, 360; கங்கை முன்னுறையும் அன்னம் 478
கச்சணி பச்சிளநீர் 269
கஞ்சம் 270
கஞ்சமின் 167
கஞ்சமென் சீறடி 373
கட்டுரை 135
கட்புலனுமெனல் 18
கடமலை 87, 89
கடல் ஏழு 544
கடல் தெய்வம் 297, 339
கடல் தேர்வழி தூர்த்தல் 290
கடல் வாணர் 177
கடலன்ன அன்பினெம் ஆவி 280
கடலன்ன காதல் 180
கடலில் கதிரவன் உதிக்கவில்லை எனல் 306
கடலைப பருகு செந்தீ 189
கடவாரணம் 228, 255
கடவுட்குலம் வலஞ்செய்தல் 505
கடவுள் 110, 336
கடவுளுமாவர் எங்கையர் 510
கடவுளை வேண்டினமை 437
கடி 314
கடைசியர் காவிகளைந்து ஆர்த்தல் 383
கண் அலமரல் 3, 40; சிவப்பூரல் 489
கண்டல் வாய்விடல் 318
கண்டலந் தண்துறை 129
கண்ணிணை களிகூரல் 374

கண்மணியுட் கரும்பாவையன்ன கண்ணி 403
கண் வாமந் துடித்தல் 535
கணைதெரிந்தார் 361
கதம் தணிதல் 494
கதலி 260, 286, 416
கதிர்வேல் 125
கதிரவன் 306
கந்தலைக்கும் அடல்மாக்களிறு 370
கந்துகம் 75, 355
கம் - தலை : அவை.
கம்புட் குலம்இரிதல் 475
கயல்புடைத்தல் 275
கரதலம் 31
காரம் 251
கரிய நறுங் குஞ்சிக்களிறு 501
கரியார் திரு உடைதல் 476
கருகாத நீலம் 506
கருங்கண் சிவப்பு 79
கருங்கால் அன்றில் 292
கருங்கால வெண்குருகு 318
கருநதாமரை 129, 310
கரும்பின் உடுக்குலம் 279
கரும்புண்டரீகம் 16
கரும்பும் களிறுமான இருவர் 511
கரும்புருவச் சிலை 41
கருணை 442, 445
கல் - சூரியன் அத்தமிக்கும் மலை [306
கல்லாரம் 509
கல்லார வாவி 139
கல்வி செற்றூர் 59
கலர் தேடிய செல்வம் 125
கலவ மயில் 134, 264
கலாபம் 19, 494
கலாப மயில் 38, 57
கலாம் - பூசல் 493 - 4
கலுழ்தல் 322, 337 - 9
கலை உண்ணுது அருணத்தை ஊட்டல் 312
கலைநிறை திங்கள் 271
கலைபிரிந்த மடமான்பிணை 29
கலைமதி அமுதஞ் சிதறல் 232
கலைமதிக்கும் புலமிக்கோர் 360
கலைமதி துஞ்சும் வெற்பு 91
கலைமதியின் பிளவே அனைய திரு நுதல் 33
கலைமதி விடமாதல் 232
கலைமாக் கடல் 518
கலையார் விடுக்க வல்லார் 118
கலையில் பொதிய முனி 513
கலை வினவல் 87, 88, 331
கவர்செயுமரிக்கண் 59
கவரிமான் 514
கவிகொணர்ந்த மலைமேல் மருந்து [111
கவிர் அனைய செவ்வாய் 273
கவிரிதழ் 116
கழுங்காடல் 75, 79, 160
கழங்கினல் கட்டுப் பார்த்தல் 347
கழங்கு 114
கழனி நன்னுடு 326
கழுதும் உறங்கும் இருள்நாள் 256
கழுநீர் நிறம் 310
கழுநீர் மலரன்ன நாட்டம் 375
கழைக் கரும்பு 436
கழைவில் 125, 179
கள்வருந் துயில்கூர் இரவு 210
களப முலை 308
களவனம் - நண்டு 197
களவிற் கிடையூறு 240
களவின் மறுமை 443
களவே செயுமரிக்கண் 33
களிற்றின் கொலைக்கோடு 357

களிறுதரு புணர்ச்சி 330, 357, 386
களிறு பிடிக்கு மஞ்சைத் தருதல் [304
கற்பக ஊசல் 200
கற்பக வண்தழை 115
கற்பித்தல் : கற்பிக்க வேண்டா 95
கற்பினிற்பாள் 424
கற்புக் கடனெறி 454
கற்புக் கருந்ததி 514 [547
கற்புடையவர் ஆற்றுவது கடன்
கற்பொன்றுமே கடனுக நிற்பது 368
கற்றதெல்லாம் பொய்யோ 170
கற்ற என இரங்கல் 401
கறி - மிளகு 11, 83
கன்றினர் 290
கன்னுபரணம் 176
கன்னிக் கடவுள் 110
கன்னிகாரம் 410
கன்னிநாக நிழல் 159
கனகத்தடமேரு 42
கனகப பிதிர்கொண்ட மூலை 561
கனம் - மேகம் 41
கனலும் பொடி போர்க்கும் பனி நாள் 533
கனவில் தலைவன் தோன்றல் 341
கனவில் தலைவியைக் கண்டமை
கனவு 20, 268, 484 [558
கனவை நனவென்று விழித்தல் 276
கனவொடு தலைவன் புலம்பல் 551
கஜேந்திரன் வரலாறு 538
காக்கை கரைய வேண்டல் 396
காக்கை - சனியின் வாகனம் 396
காஞ்சி : துறை, அணிகலன் 534
காதல்கொண்ட மங்கையர் 301
காதற் புணர்ச்சி 20
காதன்மை 336
காந்தள் 85, 110, 159, 194, 323, 876; - தலைவியைக் கண்டு அலராது 152
காந்தளஞ் செம்முகை 225
காந்தளைப் பாந்தளென அஞ்சும் [398
காமக் கனல் 62
காமக் கிழத்தி 479
காமத் தழல் 506
காமவெதுப்பு 469
காமானலம் - காமத்தீ 6
காயம் 172, 417
கார்க்கொடி : காக்கை 396
கார்காலம் 313
கார்முகம் 506
காரி - எருது 257
காரிகை 153, 214, 284, 326
காரியம் 86
கால் எறிந்தமை 226, 229
காலைக் கமலம் 271
காவலர் கடுகுதல் 236, 240 [397
காவிடை தேனும் சுரும்பும் செறிக
காவியும் குமுதமும் தோயும் கம
காவின் புறம்படர் வல்லி 1 [லம் 9
காளையவர் வண்டொத்தவர் 500
காற்றும் நெருப்பும் கலந்தது 257
கான்தோய் மலர்க்குழல் 507
கான்யாறு 191
கானம் தழைக 397
கானவர் 163; - இல் பெரிதும் இகழ்ச்சியது 149
கிஞ்சுகம் 5; - வாயிதழ் 501
கிரி - பன்றி 182
கிழிகொண்டு மடலேறல் 120
கிளியை வாழ்த்தல் 83

கிளியொடு புலம்பல் 296
கிளியோடு பகைத்தவர் 85
கிளி வேட்கை 122
கிளைத்துக் கிளைத்துக் . கேட்டல்
துஞ்சரம் 96 [322
குடங்கையின்மேல் ஒழுகிய அஞ்
சன வெள்ளம் 319
குடம்பை 292
குடிஞை 236, 240 ; - கொடுங்
குரல் 221
குடிப பிறப்பு கொடிதெனல் 455
குணங்குற்றமென்னும் கூறு 358
குதிகொண்ட நீரிற் கயல் 269
குதிரைப படை 537
குதிரையாவர் எங்கையர் 510
குமாரன் 138
குமிழ் 27
குமுதம் தரும் தேன் உண்ட வண்டு
வரக் கமலம் குவியாதெனல்
குயவரி - புலி 278 [453
குயில் அழுங்கும் 315
குயிலழைத்தல் 15, 75, 166,
குரம்பு 114 [395
குரவம் 192, 205
குரவம் பாவை 403
குரவமணநாறும் கோதை 374
குரவின் குறுந்தாள் மலர் 366
குரவு 224, 375
குரவொடு புலம்பல் 403
குரா 27, 373
குருகு - யானைக் கோட்டின்
குருத்து 198
குருகொடு புலம்பல் 293 - 4
குருதி நிறத்தொளிர் குங்குமம்
குருந்தம் 27, 373
குருவிகள் மகளிர் பந்தாடிய
தொப்ப எழுந்து விழுதல் 80
குல தெய்வம் 10 ; பாங்கன் 73 ;
தலைவி 102
குலபபாகு 504
குலவாணுதலின் மன்றல் 262
குலனும் நலனும் குணமும் குன்
ருத குரிசில் 424
குலனும் நலனும் நாணும் கற்பும்
அழியுமெனல் 351
குவளை 85, 194
குவளையங் கொய்தடம் 395
குவளையின்மேல் காந்தள் மலர்தல்
குவளையும் நெய்தலும் 42 [376
குழல் மோத்தல் 308
குழவி மழலைக் கென்ஞேபொருள்:
குழற் பின்னகம் 474 [அவை.
குழைத்தல் - தழைத்தல் 314
குற்றேவல் வாய்த்தது 264
குறத்தி யம்மே 346
குறவர் 103, 112, 125, 178,
184 ; - மனைக் காவல் 439
குறள் ஆட்சி 332, 349, 393
குறி மருண்டமை 220, 228
குறியிடையீடு 333
குறுகியவர் - வாமனர், அகத்தியர்
குறுமுயலாகவும் கூடும் 92 [399
குறுமுனி கை 538
குறை - காரியம் 104, 279
குறைபபாகு - உண்டி வகை
குன்ற மழைத்தல் 15 [445
குன்றவாணர் குல தெய்வம் 102 ;
குலமகள் 426 ; - மடவியர் 94
குன்று சான்றெனல் 427
கூகைக்குப் பலி நேர்தல் 215
கூகை குழறல் 236, 240

கூடலிழைத்தல் 295, 322 ; ஆழி
தொட்ட சுழி 186
கூண்டு - கூடி 190, 337
கூதிர்ப் பருவம் 522
கூர்கால நாரை 313
கூற்றம் 54, 164 ; - அன்னவேற்
படை 269 ; கடிந்த கோமான்
,258 ; வருகின்றவாறு 423
கூற்று 106
கூற்றும் அருபபெழு கோலம்
கூருப பவளம் 506 [257
கெட்டேம்: இரக்கச் சொல்
423 ; கெட்டேன் 216
கெண்டை கமுகின் குலை சிந்துதல்
கேகயங்கள் 173 [497
கேசம் 19
கேட்டிய - கேட்டு 173
கேடில் செல்வம் - கல்வி 542
கேதகை 295, 343
கேவலம் 74, 343
கேள்வித் துறை முடிவு 563
கைக்கமலம் 449
கைக்கும் தனத்துக்கும் அதிதூரத்
கைச்சங்கம் 302 [தர் 341
கைதை 211, 293
கைம்மாறு 133
கையகலுதல் 36, 356
கையடை 34
கையறவு 270, 275
கையுறை வகை 113
கைவாரணம் 503
கைவினையாளர் 144
கொங்கை தங்கு பொன் 530
கொடுவரி - புலி 191-2, 315
கொண்டல் 94, 150, 185, 290,
318 ; - கறுத்தது 321 ; -
நாறல் 173 ; - வெளுக்கும் கருங்
குழல் 334
கொண்டு நிலை 124
கொந்தளபாரம் 205
கொம்பு ஊதல் 217
கொம்மைப பணை முலை 118
கொம்மைய வென்றிக் கொடுஞ்
சிலை 420
கொய் சுவற் கவனப் பரிபுர நீள்
குரப் பாய் பரி 549
கொய்சுவற்,பரி 504
கொல்லி ஓவியம் 2
கொல்லிச் சுரும்பு 203
கொவ்வைச் செவ்வாய் 516
கொழுதுதல் 256, 319
கொள்ளை நிதி 386
கொன்றை 48, 76 ; - மாலை 120
கொன்னகர் 240 ; கொன்னூர்
கோகிலம் 137 [193
கோங்கம் 373
கோங்கரும்பின செந்நிற நாண்
மலர்ததாது 259
கோங்கரும்பு 1, 11, 141
கோங்கின் நெடுந்தாள் மலர் 366
கோங்கு 27
கோடல் 224
கோடி சுரும்பு 257
கோடி மடநதையர் 475
கோடையும் கொண்டலும் கண்
டறியாத குளிர் பொழில் 150
கோமளம் 10, 64, 77 [325
கோவையை வென்ற செவ்வாய்
கோழி குரல் காட்டல் 235, 240
கோழி மண் கிளைத்தல் 321
கோளரி 198 [குறை 470
கோனும் கவரியும் காணப் பெறாத

சங்கப் பலகை 515
சங்கம் உடைக எனல் 476
சங்க முழங்கல் 384
சங்கின் நித்திலம் பெய்தல் 449
சங்கு கழலாதெனல் 302
சங்குமிழா நின்ற முத்து 150
சங்கோலிடும் புனல் 37
சஞ்சீவி மலை 111
சடைபோ லொளி தோன்று செக்கர்ப் பெரும் பிறை 555
சந்தனம் 25, 94
சந்தாடவி 328
சந்தாபம் 458
சரி - வழி 14
சனி - சூரியன் புதல்வன் 396
சாந்தகிற்போது 90
சாந்தம் 145, 193
சாந்து புலருதல் 3
சாபம் - வில் 469
சாமளம் 64
சாயகப பூத்தொகை 530
சாலி அன்னுள் 461
சிகாமணி 214
சிங்கம் களிற்று மருபபைப் பறித்தது அதன் வோருநதல் 198, 271
சிந்தாகுலம் 300, 328
சிந்துரம் 474
சிநதையிற் புந்தி 513
சிமையார் தடவரை 327
சிலம்பில் உறையும் கடவுள் 336
சிலை - மலை 56; சிலைமேல் முகில் [111
சிலைவாணர் மடமகள் 106
சிலேடை : ஆணும் பெண்ணும் 291; ஆறுமுகம் 353; தலைவியும் போர்க்களமும் 334; தனம் 480; தனமும் பொருப்பிடமும் 72; மடவார் 228, 298
சிவந்த நெற்றி வாரணம் 321
சிவபிரான் : அம்பிகாபதி - அவை; உமையவர் 4; உமையாள் தலைவன் 282; எட்டுக் கையோன் 396; எம்பிரான் 22; ஒரு மான் காத்தும் ஒரு மான் புடையு முடைய எங்கள் பெருமான் 78; கங்கை சென்னிக் கடவுள் 110; கொன்றையான் 515; செஞ்சடையோன் 538; செய்ய கொன்றைத் தாரோன் 53; தானே அருங் கலை தந்தவன் 515; நிலா எறிக்கும் மின்போல் ஒளிர் கொன்றை வேணிப பிரான் 48; புராரி 23; மதி முடியோன் 433; விடமுண்ட நாதர் 120
சிவபிரான் கால் 538; - சடை ஒக்கும் செக்கர்வான் 78; - சடைக் கொன்றை 518; - சடையிலுள்ள பிறை 555
சிவபிரான் சங்கப் பலகை தந்தது 515; தவஞ்செய்தது 48; திரிபுர மெரித்தது 518; பதங்கள் வருந்த நின்றது 515; பாணர் பின் சென்றது 515; மன்மதனுல் மலரம்பு ஏவப பெற்றது 48; விடமுண்டது 4, 222
சிவிறிப போர் 474
சிற்றில் 25, 189, 391
சிறுகால் 117; - அசைய ஒசியும் [இடை 30
சிறுகுடியூர் 98
சிறுகுடில் 29

சிறு கைத் தலம் 489
சிறு சோறு 114
சிறு தேர் கடவல் 489
சிறு புனல் 312
சிறைபபுறம் 247 , 278-9
சீயம் 417
சீலத்தியல்பு குன்றுமை 453
சீறூர் 144, 185, 189
சுடர்பட் டறியாதவர் காதலர் 444
சுடலை நீறு 119
சுணங்கலர் வேங்கை 335
சுரப போக்கு 507
சுரபுன்னை 9, 200, 224
சுரம்போய் வநத வெம்மை 562
சுரருலகு 99
சுருதி 183 [நலம் 16
சுரும்புண்டெழு மலரில் தொலை
சுரும்பும் குவளையுமான இருவர்
சுழிக்கே அழுந்தும் நதி 50 [511
சுளித்தல் 508
சுளையார் பலவு 100
சுறவு 181, 243
சுனைக்காவி 439
சுனையாடல் 76, 77
சூட்டெலி நேர்தல் 215
சூதம் - மா 9,200 ; சூதவடு 122
சூர் அணங்கல் 195
சூரர மாதர் 196
சூரியன் - அருக்கன் 165 ; ஒற்றைத் திகிரித் தேரோன் 53 ; கதிரவன் 306 ; சிவபிரான் வலத் திருக்கண் 396 ; தனித் திகிரித் தேரோன் 98
சூல் எழிலி 522
சூழிக் களிறு 332
செக்கர் மாலை 165
செங்கால் ஓதிமம் 288, 292
செங்கேழ் விழி 209
செங்கோல் வேந்தன் பகை 37
செநதளவு 51
செநதாமரை கருந்தாமரை என
செநதாமரைப் பொன் 23 [526
செந்தாமரை யடி 239
செபபுதல் - அவை.
செமபஞ்சு 140
செம்முகம் 45
செய்குன்று 185
செய்வினை மறுத்தல்74
செயலை 152
செருநதி 27 ; செருந்து 560
செல்வக் கன்று 505
செல்வம் பெற்றிழத்தல் 245
செலவு 74
செவ்வணி 454, 458 ; செம்பேரணி 455
செவ்வழி யாழ் 531
செவ்வாய் மழலை 41
செவ்வாய் வெளுப்பு 79
செவ்வி அருமை128;எளிமை 129
செவி தூர்நதது 487
செவிலி பேய் கண்டு அஞ்சினே னெனல் 345
செழியர் வெற்றிக் கயல் 175
செறியாதவர் 106
சென்றும் - செல்லுதும் 546
சேடன் : ஆதிசேடன் 115
சேடி 454 - 5, 458
சேநத துபபு 90
சேய் 108, 345
சேயவற் காறுமுகம் 353 [366
சேயனையாய் 371 ; சேயனையார்
சேர்ப்பர் 248 ; சேர்ப்பன் 177, [227, 233
சேவ லன்னம் 496

சேறும் - செல்லுதும் 365
சோல்லினும் வெய்யது 364
சொற் புணையாகத் துயர்க்கடல் நீந்தல் 105
சொன்ன நாவுஞ் சுடு சுரம் 364
சோகானலம் 261
சோதி நுதல் 41
சோரும் முழுமடற் கைதை 293
ஞமலி 240
ஞாளி - நாய் 235
ஞானமிலார் 551
ஞிமிறு 510
தக்கார் தகவு 241
தகரம் செறிவனம் 61
தங்கையர் - பரதையர் 485
தடக்கை வெற்பு - யானை 138 ; தடக்கை வென்றிமா 404
தண்டமிழ்தோய் பண்போலினிய பணிமொழி 412
தண்டலை 14, 43, 67, 338
தண்ணளி 123
தண்ணீர் வளஞ்செல்க 397
தபபு - அவை
தமிழ்-தண்டமிழ் தோய்பண் 412; முச்சங்க வண்டமிழ் 302 ; வண்டமிழ் 277
தமிழ் போல் மொழியாய் 302
தாளம் 77, 90; தாளத்தூநகை 99
தருமன் - யமன் 513
தருவோடு வல்லி தழுவும் சாரல் 2
தலையாய நண்புடையார்-பனை 118
தலைவன் கையும் தலையும் தலைவி காலுமொன்றுன கனவு 484
தலைவன் சாரல் தழை படுத்தால் குளிருமெனல் 299
தலைவன் தலைவியைப் பணிதல் 484,494; அன்னை எனல் 216
தலைவன் தன் மனம் பாகன் கையாகவும் பரிக்காலாகவும் இல்லையே எனல் 320
தலைவன் நற்குய் 366, 414
தலைவன் நெஞ்சினேடுழுங்கல் 550, நெஞ்சொடு கூறல் 12, 18, 82, 336
தலைவன் பரத்தையரைச் சேரியன்றி ஊரேற்றியமை 452 ; தேரேற்றி வருதல் 452
தலைவன் பவனி வருதல் 447
தலைவன் புதல்வனை உடன் கொண்டு வருதல் 502; எடுத்தல் 468 ; காண வருதல் 467
தலைவன் பொய்யுரைத்தல் 510
தலைவன் மணற்சோறு இரந்தமை 419 [கேற்றல் 434
தலைவன் மாலையைத் தலைவி குழற்
தலைவனுடைய பதி முதலியன காட்டியது 328
தலைவனுற்ற சூள் 297
தலைவி அறிவின்மை 107
தலைவி உருவெளிபபாடு 552,558
தலைவி கண்முன் நிலலாமை 441
தலைவி சிறுவற்றறித்த காலம் கவினுறப் பெறுதல் 461
தலைவி தலைவனை யொழியக் கடவுள் மற்றறியாள் 444
தலைவி துனி மாறல் 459
தலைவி நிலை வினவா தொழி எனல் 543
தலைவி நெய்யாடியது இகுளை சாற்றல் 464 ; பாலனைக் கொண்டு வைகல் போக்குது மெனல் 471

தலைவி பொறுக்கத்தக்கவள 489
தலைவியின் கற்பொழுக்கத்துக்குரிய செயல்கள் 441
தலைவியின் பேதைமை 106; பேரறிவு 419; மூதறிவு 107, 361
தலைவியின் மரகத நிறம் பொன்னிறமாதல் 469
தலைவியை அணங்கெனல் 79
தலைவியைப பிரிநததின்றெனல் 558
தலைவியைப பிரிநத நெஞ்சு 287, [289
தவளமுதது 540
தழல் முன் வரைய விரும்பல் 303
தழலினறி வேகின்ற கானம் 367
தழை தநதமை 330-1
தழை வாட்டம் 334
தளவந தரு நகை 197
தளவின் முகை 38
தளவு 553
தளிரன்ன எழில் 17
தன்னையர் 418
தனபதி 513
தனபாரம் 30, 181, 205
தனய சுசநதமை 505
தனம் : முலை, பொருள் 553
தனித் திகிரித் தேர் 98
தனு - வில் 145
தாமம் கருகுதல் 3
தாமரைதேவி 334
தாய் துஞ்சாமை 235, 240
தாய் துயிலறிதல் 200
தாரகை 481
தாரணி 23
தாரு - மரம் 204
தாரூர் குழலி 98
தாரை - ஒழுக்கம் 123; ஒழுங்கு 108; குதிரையின் கதி 310; கூர்மை 108, 366, 457; வழி 84, 87, 108
தாரை வாள்விழி 457
தாரை வேல் 108, 366
தாரை விஞதல் 84
தாரை வையம் 310
தாலப புரவி - பனைமடல் மா 119
தாவா இளமை 6
தானம் - இடம 196
தானவர் 69
திகிரி - செங்கை வலந திகிரித் திருமால் 384
திங்கள ஊர்கொண்டது மணஞ் செய்தற்குரிய காலம் 265
திண்கோட்டிரலை 96
திண்ணம் 417
திரி எற்றல் 483
திரு : கஞ்சமின் 167; கமலத் திரு 66; செநதாமரைப பொன் 23; தாமரைத் தேவி 334; பரவை வழங்க வநத கமலமென்பூந்திரு 60; பொன் 514; மலர்ச்செநதிரு 159; மலர்பபாவை 159; மலர்ப பொன் 391;வாரிதந்ததிரு 377
திருக்கண் வளர்ந்த மாயோன் 154
திரு நிறம 77
திருநுதல் முத்தரும்பல் 295; வோவு 509
திருநெடுங் கண் 170
திருபபாற்கடல் 22 [154
திருமகள் பாற்கடலிற் பிறந்தது
திருமடந்தை கொற்றவர் 518
திருமனை 202

திருமால் 115, 141, 334, 384; திகிரியங்கைமால் 433; திருமடந்தைகொற்றவர் 518; துளவணி மால் 377; பிரமன் தந்தை 23; மன்மதன் தந்தை 135; மாயோன் 154; வாமனர் 399; வையங் கடந்த மலரடியார் 135
திருமால் கடல் கடைந்தது 120; குன்றெடுத்தது 461; கைச் சங்கு 115; துயில் கொண்ட பாயல்-ஆலிலை 461; மடுவின் கரையில வந்தது 538; மார்பில் மறு 377
திருமாலுந் திருவுமொத்தல 334, 384
திருமாளிகை 209
திருமான் பணிமலர்ச் சீறடி 28
திருமுகம் 199
திருமுருகு 355
திருமேனி 45, 104; - அழுங்குதல 11, 13
திருவடி 532
திருவனையார 32, 277, 388
திருவின் கையில் பங்கயமிருத்தல் 377
திருவுள்ளம் அறியேனெனல 466
திருவுளத்தில் ஏறுதொழிவது 52
திரையமுதின் உரு 2
திலம் நையாவருதல் 464
தினைக்காவல் 439
தினைக்குரல் 296
தினைமாவும் தேனும் குழைத்தருந்தல் 162
தீட்டாத கூர்மை 296
தீதாகிலென் நன்றாகிலென் 147
தீம்பாலடிசில் 442
தீம்பாலெறிக்கும் கனதனம் 465
தீவினை 262
தீவினையேன் 218, 325
துகிர் அனலாக ஏற்றுதல் 449
துங்கப்புயல் 271
துடிக்கைக் காவலர் 274
துத்தி நாகச் சிகாமணி 214
துப்போது சேயிதழ் 410
துயில்போனமை 24
துர்க்கை 335, 365; ஆரணங்கு 389; கன்னிக்கடவுள 110
துருமம 230
துவக்குண்ணல்-பிணித்தல் 8, 49
துவராடை 400
துளவணி மால 377
துறவறம் இயைந்தமை 563
துறைவன் 37, 244
துனி மீட்கவல்ல மருந்து 492
தூசு 291; தூசும் கலையும் 7
தெய்வதத்தை வாழ்த்தல் 58
தெய்வந்தரப்பெற்ற செல்வன் 467
தெய்வந்தொழச் செல்லல் 343
தெய்வந்தொழாள் 393
தெய்வப்பாவலர் முன் செய்த நூல் 45
தெய்வம் அளிக்குமெனல் 27
தெய்வம் காட்டிக் கலந்தமை 339
தெரிவை 44, 479
தென்செய்த பண் 45
தென்றல் 49, 150, 249; புதிய தென்றல் 31
தென்னன் மீனக்கொடி 397
தேதா என முரல் யாழ் 531
தேய்கின்ற திங்கள் 188
தேயு 23
தேர் கடவா நின்ற சிங்கம் 489
தேர்ப்படை 537
தேர் மணி ஆர்த்தல் 323
தேர் வலவன் 320, 534

தேர்வழி பார்த்தல் 319
தேவமகள் 67
தேவர் பருகும் அமுதம் 442
தேவை 325, 391
தேன் உலேயேற்றல் 449
தொண்டை 469 ; - துவர் வாய
தரம் 509
தொய்யில் 173, 443, 548, 554
தொல்லே வல்வினே 178 [146
தொன்றுதொட்டு வந்த கேண்மை
தோகைக்கணம் நடம்செய்தல் 11,
265; பெடைகாணபபெருநடஞ்
செய் சோலே 161
தோரணமாமறுகு 337
தோரை 137, 329
தோழி தஞ்சம் 440
தோள் புணேயா நீந்தல் 477
தோளின் நிறம் பசத்தல் 500
தோற்றம் · புனேயா எழில் 74
நகை நிலவு 59
நஞ்சு - நைநது 140
நடமாடு நயனம் 131
நடி - நடம் 488
நணுகலர் 366
நந்தாத விளக்கொளி 514
நயபபுப பரத்தை 482
நயனக்கடை 72
நயனி 406 ; நயனியர் 485
நரந்தம் 27
நல்வினே 18
நலந்தா எனல் 490
நவமணி ஆழி 225
நவரேகையன்ன மருங்குல் 59
நள்ளிருள் யாமம் 371
நள்ளென் பகல் 281
நற்பரத்தை 482
நற்ருய் 385 ; - எவ்வாறு உயிர்
வாழ்ந்தாளெனல் 380
நறு உண்ணல் 477
நனவில் தலேவன் உருவெளி 341
நனவென உன்னல் 551
நாகங்கள் நலிவு செய்யாமை 207
நாக நீழல் 168
நாகம் : மலே, பாம்பு, யானே 206
நாகவெற்பு 450
நாடுகாவல் 519, 521
நாடும் நகரும் மரபும் மக்கவன்497
நாண் மடமை 284
நாணுக்குக் கவரிமான் 514
நாணும் மடமையும வெளுத்தது
நாமங்கள் 69 [456
நாய் துஞ்சாமை 235, 240
நாவி வாச நறுங்குழல் 70
நாவுஞ் சுடு சுரம் 364
நாலடியார் ஆட்சி 118
நாழிகை ஆறைந்து 544
நாளுக்கு நாளும் நலம் புதிது 443
நாளும் நாளும் 510
நாற்றம் முதலிய எழு 74
நான்மறையவர் 411
நானிலம் 223
நிணபபலி 396
நித்திலம் 84, 114
நிதம்பம் 122 [236, 274
நிலவு பகல் போலெறித்தல்
நிலவு படப பார்த்திருத்தல் 231
நிலவு பவளத்துள்ளே பகலே
வந்து பாரித்தது 39
நிலவு வெளிப்படுதல் 236, 240
நிலேயல் 70
நிழலளேந்த சொல் 306
நிழலேச்சுளித்து நிமிர்களிறு 508

நிறை உந்தி 291
நிறைபோனது 512
நிறைவுங் குறைவுமில்லா மதி 4
நீடுயிர்த்தல் 222 ; நீடுயிர்ப்பு 66
நீர்க்குக் குறுமுனி கை 538
நீர் கொண்ட கேண்மை 265
நீலத்தின்மேல் நெய்தல் வைத்தல்
நீலம் 77 ; ஒருமணி 506 [355
நீலோற்பலம் 469
நீள்வினை 291
நுடங்கிடையாள் 263
நுதிமுற்றிய குழல் 305
நூபுரசதாமரை அன்னம் 210
நெஞ்சம் அறைபோனது 512
நெஞ்சை வினுதல் 289
நெய்தல் 221
நெய்பசுந்து நிலவெழுமேனி 465
நெய்யாடல் 464
நெய்யொன்றுவேல் 376, 381
நெய்யோடளைந்த நிணபபலி 396
நெய் வைதத கூந்தல் 58
நெல எண்ணிக் குறி கூறல் 347
நெல்லுணங்கும் செய் 396
நெல்லை முறத்திலிட்டுக் குறி கேட்டல் 346 - 7
நேயம் நீடுமோ எனல் 26
நோதுமலர் 11, 263
நோய் நாடி நோய் முதனுடி அது தணிக்கும் வாய் நாடி வாய்தத மருநது செய்தல் 349
பகடு 534
பகல் இரவின் மிக நெடிதெனல் [272
பகை தணிவினை 523
பகையாடவர் 131
பங்கயம் 210
பங்கேருகம் 155, 209, 447
பச்சிள நீர் 269
பச்சுடம்பு 466 [358
பசபபு 256, 260, 300, 351,
பஞ்சறியாத பனிமலர்ச் சீறடி 140
பஞ்சுரம் - ஒரு பண் 160
பஞ்சென அஞ்சும் பதம் 373, [398
படகம் முழங்கல 536
படி - பூமி 228
படிறன் 144 [412
பண் 45, 468 ; தமிழ் தோய்பண்
பண்காவல் கொண்ட பனிமொழி 520
பண்ணுர் பனிமொழி 62 ;-மொழி 101 ; 312
பண்ணின் திறம் 45
பண்ணே 325
பண்ணென்று சொல்லி 288
பண்பட்ட சொல்லி 347
பண்போல் மொழி 85
பணைந்தாங்குலகு 516
பணிலம் 177
பணை ஒன்று தோளி 109, 347
பதங்கம் 473
பதயுகம் 398
பநதாடல் 80, 128, 160
பயில்வு 74
பரத்தை - ஆரிடத்தும் குறியாத அன்புடைக் கொம்பனையார் 499 ; உலகறி தையல் 455 ; விலைமங்கை 464
பரத்தை செய்குறி சிதையுமெனல் 471
பரத்தையர் குவித்த கை 447 ; பாடி 487 ; பாடி ஆடல் 488
பரவை வழங்க வந்த கமலமென் பூந்திரு 60

பரிசம் 309, 331
பரிசிலர் பாடியாடல் 305
பரிசிலர் புதிய பண்ணும் பாவும் புனைந்து பாடல் 468
பரிதி 173; - நிறத்த துகில் 454
பரிமளச் சோலை 71, 325
பரிமளம் 155
பரியும் பொருள் 348
பருமம் 490
பருவங்குறித்துவருதுமெனல் 316
பல்லவத்தல்ல 442
பல்லி தலைவன் வரவிசைத்தல் 535
பலவு 416, 436
பலி நல்கல் 396; நேர்தல் 215
பவர் - கொடி 83
பவளத்தமுது 540
பவளம் 77, 506
பழங்கண் - துன்பம் 75, 315
பழமொழி நானூறு ஆட்சி 517
பழன்க்கழனி நன்னடு 408
பழிபுகழாக்கி வநதெய்துவை 371
பழைய நடம் 488
பழையரும் போல்வர் 135
பள்ளியின் இழிதல் 493
பளிக்கரங்கு 57
பற்பராகம் - ஒருமணி 506
பற்றலர் 532
பறி - உடல் 218
பன்னிருகை படைத்தோன் 347
பனியோர் நறுமலர்ப பாயல் 153; பாவை 81, 159
பாக்கியம் செய்தனம் 413
பாகன் பரிவிடல் 158
பாகு 504 [530
பாசறை 531; - செல்லும்பாணன்
பாடலங்கா 482; - சோலை 375
பாடினி பாடினியே 487
பாண்டியர் மீனக்கொடி 175, 397
பாணர் சுரும்பு 336
பாணினங்கள் 160
பாதகக் கண் 122; பாதகம் 131
பாந்தள் 397
பாரணம் காட்டிவிடல் 321
பால் நாறடிசில் 445
பாலை 311 - 2, 368
பாவை அழுமெனல் 136, 153
பாற்கடல் 154, 209; கடைந்தது 69, 250; நஞ்சும் அமுதும் தந்தமை 22
பாறார் கடல் 189
பானுள் இரவு 215
பானு 190
பிணையும் கலையும் 85
பிரசம் 248, 526
பிரமன் 141; அயன் 320; உந்தி தந்த அண்ணல் 23, வகுத்தவன் 122, 172
பிள்ளைக் கிள்ளை அரற்றல் 369
பிறர் வரைவு 263, 333
பிறவா அமரர் 401
பிறை அம்பு 103 [தல் 491
பிறைசூழ் தாமரை வெயர்த் துயிர்த்
பிறைதொழு கென்றல் 78
பிறைதோய் குன்றம் 76
பிறை மறித்து வருங்காலம் 554
பின்பனிக் காலம் - கடைப்பனி நாள் 533
பின்முறை வதுவை 561
பீலியின் கால் வெண்மை 38
புகர்முகக் களிறு 258; மா 196
புகழும் பழியும் 121

புகையுயிர்த்தல் 447
புங்கம்படுதல் 536
புண்டரிகம் 16, 384
புணர்குறி 220 224
புதல்வன் உதயம் 462
புதிய அழகு 35; - பண் 462
புதியர் 135; புதியார் 34, 112
புதியவர் வேட்டை 89
புதுப்புனலாவர் எங்கையர் 510
புதுமலர்ப் பாயல் 460
புந்தி 513
புயல் கண்டறியாத கானகம் 377
புயல்வாரி புகும் கடலுகிய நெறி [370
புரவிப்படை 524
புராரியின் தேயு 23
புல்லர் குணம் 516
புல்லென்று வாடல் 45 [531
புலவுண் பருந்து மீதாடு பாசறை
புலிபபல் கோத்தணிதல் 402
புலிகொண்டு வண்புகழ் போர்பப
புழற்காற் குவளை 212 [வர் 290
புள் புலம்பல் 202, 220
புள்ளுமாவர் எங்கையர் 510
புளகஞ் செய் தோள் 31
புளிபபாகு 445
புளினர்தங் குலக்கொடி 402
புறத்தாரெழுமுகி வருதல் 457
புறவம் 318, 372
புறவு - புரு 473
புறவு - முல்லை 25, 321, 403
புன்கவி - அற்பக் குரங்கு 290
புன்செல்வர் தேடும்பொருள் 378
புன்மாலை வடிவுகொண்ட பிறை 164
புன்னை 27; - உகுத்தமென் பூக் கறி 352; - கடற்பாற் றரளஞ் சொரிதல் 231; - காய் உதிர் தல் 226 - நீழல் 231, 243
புன்னையங் கானல் 36, 297
புன்னையங்கானற் புளினம் 165, 340
புனக் கன்னி 224
புனக்குறவர் 112, 115
புனங்காவல் 171, 178
புனங் காவலர் 94
புனல்தரு புணர்ச்சி 356, 390
புனல் நாடன் - சோழன் 473
புனல் நாடு 98, 273, 324, 406
புனல் புலமபல் 220
புனலாடல் 136, 166
புனலின்றிச் சாகின்ற வேழம்
பூகம் 286 [367
பூங்கேச மன்றல் 74
பூத்தரு புணர்ச்சி 385, 393
பூத்தறியா அலர் 249
பூமகள் 514
பூரணம் 337
பூவடிவாளி எயினர் 404
பூவிலை மாதர் 316 [றல் 468
பூவும்புகையும் பொழிந்து அவி எற்
பூவே அனையர் பாவையர் 500
பூளைமலர் 119
பெண் காவல் கொள்கை 520
பெண்ணரசு 126
பெண் பிறவாகா எழுமையும் 545
பெதும்பைப பருவம் 329, 561
பெரியோர் இன்ன செய்யார் 123; செயும் வன்கண்மை 501; தம் பரிசுகள் 61; தம் மரபியல் வழுவுவரோ 458
பெருநயப்பு 9
பெருநாள் - மணநாள் 252

பேதுறுதல் 366, 419
பேதை 393, 419
பேதைப்பருவம் 380
பேய்க்கணம் உலவுஙகஙகுல் 314
பேயின் பிறை எயிற்றுவாய் 353
பேயினுக்காறு மருந்து 353
பேரறிவு 284
பேரிசை மாய்க எனல் 17
பேரூர் 98
பேரோத ஞாலம் 53
பைங்கயல் செஙகயலாதல் 5
பையபையப் போகின்றதேர் 158
பொதியமுனி 513
பொதியில் 161
பொதும்பர் 29
பொய்தலாடல் 25
பொய்யுங தீமையுங கல்லா தொழிக எனல் 504
பொருள் முற்றல் 311, 552
பொருளில் தனபதி 513
பொழில் தலைவி ஒத்தல் 28
பொற்புக்குப பொன் 514
பொறியிலியேன் 392
பொறைக்குப பூமகள் 514
பொறை பூண்டவர்க்கு அறம் துணையாதல் 463
பொன் - திரு 514
பொன்மணியூசல் 67
பொன்மாளிகை 409
பொன்னடித்தாமரை - அவை.
பொன்னி - காவேரி 109
பொன்னிறம் 77
போங்காலமில்லை நம்மன்னுயிர்க்கு [318
போதகம் - யானை 223
மகரம் 61, 127
மகளிர் கொழுநரைப் புல்லித் தம் இயல் கடந்து ஏக ஒட்டார் 379
மகிணன் 487
மகிழ்வும் இகழ்வும் 498
மங்கலநாண் 429 ; - புனைந்தமை [416
மங்கலம்பாடல் 305
மஞ்சறியா மின் 140
மஞ்சு 137, 195 [397
மஞ்சு கதிரோனை மறைக்க எனல்
மஞ்சு சூல்மறக்குமெனல் 306
மஞ்ஞை 144
மடநதை 36, 69, 99
மடநடைப் பெண்ணமுது 472
மடநாண் 66, 127; கன்னியர்க்கு வருவது போவதன்று 368 ; நிதி 275
மடநாணம் 37, 512
மடல் 118-120
மடலுக்காகப் பனைவெட்டல் 123
மடவார் - இரு பொருள் 228
மண்ணில் விண்ணிலும் 6
மண்ணெலா முறங்கும் அல் 364
மணபபந்தர் 303
மணம் நயந்தமை 430
மணம் புரிந்தமை 409
மணம் பொருட்டாக அணஙகைப் பரவுதல் 335
மணமங்கலமானது 561
மணமுரசார்த்தல் 333
மணற்சிற்றில் 128
மணற்சோறு 128, 130, 352, 446 ; அடுதல் 231
மணற்பாவை 391 ; தலைவியைத் தேடி அழுமெனல் 136
மணிமாளிகை வாசல் 457
மணிமேகலை 36

மணியூசல் 67, 128
மணிவண்டல் 129
மத்திகை 486
மதர்விழி ஆயம் 476
மதன் 288, 513
மதனன் 104
மதிகண்டலரும் குமுதம் 269
மதிமுற்றிய வாள்முகம் 305
மதியின் கலைக்கோடுழுதகழை 357
மதியும் வெண்ணீறெழும் சுரம் 311
மதியைப பொருபைஙகதலி 286
மதுகரஞ்சூழ் செருந்து 560
மதுமலர்வல்லி 263
மநதமாருதம் 277
மநதரநாகம் 250 ; மலை 22, 69
மநதாரப புதுநறவு 382 ; மந்தாரம் 184
மயிலழைத்தல் 75
மயில ஆலுதல் 264, 315, 318, 397
மயிலின் புறத்து முருகன் 487 ; மயிலூர்தி 134
மரபபாவை 143
மரபியல் 110, 458
மரபினுக்குச் சிறந்தான் பிறந்தானெனல் 463
மரபுக்கடாத செயல் 350
மரபு துணியா வெறி 254
மரவு 376 ; மரா 27, 373
மருங்கில் பாவி 63
மருங்குலெடுத்த மகவு 557
மருந்து - அமுதம் 69
மருப்பின வேர் 271
மல்லிகை 462 ;-நாண்மலர் 203;- பந்தர் 200
மலர்க்கண்கள் 35
மலர்க்கணை சிந்தல் 285
மலர்த்தூசு 291
மலர்ப்பணை 128
மலர்மாளிகை - தாமரை 156
மலரணங்கு 13
மலரம்பு 48
மலைக்குறவர் 189
மலையவெற்பு 277
மலைவாணர் மடமகள் 54
மவ்வல் 184, 205, 211-2
மழகளிறு 504
மழலைக்கிளி 405, 508
மழைக்க - மழைபெய்ய 15
மழைக்கண் 15, 29, 94
மழைக்குழல் 15, 204
மழைக்குன்றவாணர் 94
மழைமதம் 200
மழைவள்ளல் 52, 55, 186, 201
மள்ளர் பறை எறிதல் 475
மறத்தில் மடங்கல் 513
மறலிபோலும் கண் 35
மறலியன்னான் 427
மறவர் 423
மறவேல் விழி 181
மறியின் குருதிமண் 262
மறுகுலை ஈனல் 253
மறுமை 119
மறை - களவொழுக்கம் 291
மறையன்ன வாய்மை 273
மறையிற் புணர்வு 451
மன்மதன் 212 ; சிலைக்காமவேள் 113 ; மாரன் 138
மன்றல் 262
மன்றலங்கொன்றை 313
மன்றற் புணர்வு 451
மன்றில் வெறியாடல் 349
மன்றுசூழ் மறுகு 120

மன்னுயிர் - பாங்கன் 57
மனக்கோட்டம் 334
மனத்துக் கவலை 264
மனத்துறை தெய்வம் 103
மனைக்கு விளக்கொளி 514
மாகம் சிறந்த மதி 207
மாசுடம்பு 309
மாட்டுகில்லேன் 46
மாதங்கம் 200
மாதர் - தலைவி 460
மாதவி 267, 373 ;-நிழல் 162;- பந்தர் 345
மாதவி பெற்ற மணிமேகலை 36
மானம் 244
மாயக்கலவி 299
மாயோன் 154
மார்க்கண்டன் வரலாறு 538
மார்பகலம் 299
மாரன் வைத்த தனம் 42
மாருதம் 276
மால - திருமால், மயக்கம் 60
மால்வரை-மயக்கமாகிய மலை 133
மாவிடை கொள்ள மலர்ந்த கண் 382
மாவின் இளந்தளிர் 40, கனி உகுதல 229 ; தளிர் 1
மாவே அனையர் காளையர் 500
மாறூர் 189
மான்தோல் படுத்து வதியும் துயில் [507
மானிடம் 2
மானுங்கலையும் விம்மல 470
மீன் - காமவேள் கொடி 113 ; பாண்டியர் கொடி 175, 397
மீனறியாத விரி கடல் போலும் விழி 237
மூக்கோற் பகவர் 400
முகத்தால் சொல்லியமை 308
முச்சங்க வண் தமிழ் 302
முட்கோல் - தாற்றுக்கோல் 504
முத்தீ 411
முதுகளிறு 357, 501
முதுநதியின் சுழி காட்டும் உந்தி [326
முதுமறலி 175
முந்நீர் 105; - சுவறுமெனல் 306 ; - விடம் 275
முரசார்த்தல் 303, 384
முருகன் 70, 378, 487 ; அறுமுகன் 112; ஆறுமுகன் 199; குமரன் 128 ; குமாரன் 138 ; சேய் 108, 353, 366, 371 ; திருமுருகு 335; பன்னிருகை படைத்தோன் 347; மயிலூர்தி 134;வேலன் 188; வேள் 169
முருகன் ஆகத்துநூல் 112 ; கதிர் வடிவேல் 112 ; வள்ளிக்கு அஞ்சலென்றது 179
முருகொன்றியதல்ல 442
முருந்தனைய முறுவல் 500
முருந்தாகு மென்னகைமூரல் 359
முருநதொன்று மூரல் 492
முல்லை 159, 326 ; - தலைவி முறுவல் கண்டு அலராது 152; நாறல் 173 ; - போல் நகையார் 25 ; - முகை 530
முலைக்கோடு 357
முலைமலை - தலைவி 204
முலைவிலை 331, 360, 362
முழவுந துஞ்சாது 235
முள்ளி 481
முளரி 100, 481
முளைக்கும் பிறையை முனியம் நுதல 295

முறத்தில் நெல்லிட்டுக் குறி
கூறல் 346-7
முறம்போல் செவி வாரணம் 179
முறுவலமுத்து 127
முன்பனிபபருவம் 526
மூசியவண்டு 3
மூரியரம் பொருகாரிரும்பு 481
மூன்றரணம் செற்றவர் 518
மெய் கைத்தல 346
மெய் வாய் கண் மூக்குச் செவி 69
மெலல மெல்ல 19
மெழுகில உருகிய அன்பு 5
மேகம் இடித்துறை காலுதல்318;
தெற்கோடுதல் 526
மேரு 203, 360, 514; கொன்
றைத் தாரோன் வரிசிலை 53;
சயிலம் 42; வடமால்வரை 370
மேனகை 68, 99
மைக்கண் 151
மைக்காவி 100
மைம்மான்விழி 133
மையூட்டிய பங்கயக்கை 338
மையோடரிக்கண்ணி 381, 396
மொழியால் ஒரு கோடி பைங்
கிள்ளையை யழைத்தல் 94
மோகர வரிவண்டு 414
யாணர்த்தடஞ் சிலம்பன் 270
யாணர் - புதுநலம் 465
யாழ்மொழித் தோகைக் குழாம் 21
யாழிற் பொலிதரு மின்கொல் 332
யாழுங் குழலு மனைய சொல்லாள்
180
யானை - தடக்கை வெற்பு 138;
தடக்கை வென்றி மா 405
யானைப் படை 537
யானை மருப்பின் குருத்தைச் சிங்
கம் உண்ணல் 271
யானையுமாவர் எங்கையர் 510
வங்கப் புணரி 250
வங்கம் 275
வங்க முந்நீர் 43
வஞ்ச மாரன் 42
வஞ்சினம் 350, 434
வடக்குங்குமக் கொங்கை 19
வடந்திருத்தல் 308
வடமலையின் சிகரம் 61
வடமால்வரை 370
வடமீன் 419, 561
வடவைத் தீ 189
வடிக் கண்ணியர் 488
வண்டல் 43, 67, 129, 139,
197, 344
வண்டலந் தண்துறை 343
வண்டலாடல் 14 [409
வண்டலாயம் 43, 65, 160, 405,
வண்டும் ஞிமிறும் சுரும்பும் 510
வண்டு முரலுதல் 3; விருந்திடல்
வண்டொடு புலம்பல் 166 [382
வண்டோச்சி மருங்கணைதல் 30
வண்ணக்கிழி 120
வண்தமிழ் நாறும் மலைய வெற்பு
வண்மையில் புவி 513 [277
வணக்கினர் 53
வதுவை 414-5
வந்தன சொல்லல் 146
வம்பு 529; அன்பின்மை 490;
வயிரம் 506 [வீண் 3
வரிச் சஙகு 266; வரிபபநது 387
வரி - புலி 46
வருகு - வருவேன் 14
வருணன் 339

வரை எதிர் கூவல் 82, 130, 151 391, 395 [437
வரைக எனக் கடவுளை வேண்டல்
வரை நின்றதோர் தெய்வம் 65
வரையர மகள் 67, 268, 270
வரையுறை தெய்வம் 2
வரைவிடை வைத்துப் பிரிந்தமை
வரைவு 258, 415 [439
வல்லவம் - திறமை 122
வல்வினை 178, 246
வல்வினையேன் 24 [282
வலவனுக்கு இருகாலும் இல்லை
வலித்தல் - துணிதல் 303, 386
வள்ளி 199
வள்ளூரம் 353
வளங்கோதை இளங்கொடி 165
வளைஇறை போதல் 512
வளைக்கும் சுழிக்கும் அழிக்கும் ஒண்கூடல் 295
வளைத்துக் கிடந்த வரி மணற்
வறுங்களம் 188 [கூடல் 322
வறும புறம் 472
வன்கண்மை 142,169,298,301
வன்புறை 62
வன்முரசார்த்தல் 255
வன்னிக் கடவுள் 110
வாசகம் 532
வாசி - குதிரை 510; தகுதி 473
வாசியறச் சொல்லும 9
வாஞ்சை 304
வாடை 150, 213; வாடைக் கனல் 314; வாடைக்கு இனி வருந்தேன் 554
வாமந் துடித்தல் 535
வாமனர் 135, 399
வாமான் 267
வாயமுதம் அளைந்த செஞ்சாந்தம்
வாயில் பெற்றுய்தல் 21 [503
வாரணம் - கோழி 321; யானை
வாரண மா 337 [543
வாரி அமுது 445
வாரி தந்த திரு 377
வாரிமயல் 58
வால்வளை 79
வாவி ஒன்றுத மட அன்னம் 172
வாழ்வித்த தெய்வம் 187
வாழிவாழி 434
வானகத்தே நின்று வந்தனையாய்
வானகம் 537 [539
வானம் சொரிக மழை 397
வானவில் ஈன்ற முத்து 506 [549
வானருவி சொரிதரு துங்கக்கிரி
வானறியாத மதி 237; - மருந்து
வாறுறு 311 [140
விசாலம் 122
விசும்பிற் பூட்டாத நன்னுதல்
விசும்பேறியகொண்டல் 518[296
விசும்பை நிறைகுடி ஏற்றுவன்
விஞ்சை 208 [421
விஞ்சையா மகள் 2, 67
விடந்தந தமுதந்தரும் மடநோக்கு
விடலை 397-8, 405, 411 [324
விடை 532 [374
விண்ணுங் கருகுங் கொடுஞ் சுரம்
விண்ணோர் அருந்தும் மருந்து 27
விதி 26; விதிவசம் 20
விந்தமலை 205
விநாயகர் - மும்மதவாரணம் 179; வள்ளிமுன் வந்தது 179
வியங்கம் - அங்கமில்லாதது, விகங்
விரகு 246, 304 [கம் 473
விருந்து புறந்தரு நீர்மை 446

விருந்து போற்றுகெனல் 234
வில் இல்லா வேள் 433
வில்லும் பிறையும் திறையிடு நுதல் [141
விலை மங்கையர் 464
விழிதுயில் 470
விழியிணையால் ஒரு கோடி சொல் [லல் 93
விழுமம் 342
விளைா நலம் 6
விளக்குக்கு நெய்யூட்டல் 483
விளக்கை வழிபடல் 483 [169
வினை 13 ; வினையேன் 127,145,
வீநத துப போமொழி வேழம் [90
வெண்டாமரை 491
வெண்ணீறணிந்து மடலேறல் 120
வெண் மணபபநதர் 303 ; மணற் சோறு 82
வெதிர் - மூங்கில் 561
வெய்துயிர்த்தல் 343
வெப்யோன் வெற்பில் விழுமள வாயினன் 381
வெவ்வினையேன் 158
வெள்ளணி 462
வெள்ளெருக்கு 119
வெறியாட்டு 254, 333, 351, [354
வெறியாடல் விரும்பல் 349
வெறி விலக்கல் 353
வேங்கை 85, 194, 335
வேங்கைத் தழையன்றிக் குறவர் வேறறியார் 115
வேங்கை பூத்தமை மணத்துக்குரிய காலம் 265
வேட்டை பொய்யெனல் 89
வேணிபபிரான் 48
வேதனை 54
வேய்கள் தவம் செய்வது 32
வேய்நாடு தோளி 349
வேரல் 29
வேல் இல்லா வேள் 433
வேலவிளக்கு 202
வேலர்கை நீண்டல 262
வேலவர் 87
வேலன் 188, 388
வேலை ஞாலமும் மேருவும் 360
வேலைநீருக நெருபபெழுங்காலை 52
வேழம் முழங்கு குரலை முகிலெனல் [35
வேழம் விளைதல 90
வேழம் வேல் தைத்தது கதிர் செருகித் திண்கிரி செல்வது போலும் 80
வேள் 35 43 ; மன்மதன் 113, 285,433, 553; முருகன் 433
வேள்வி முன்னுக வரைதல் 416
வேளும் திறையிடு மென்மயிற் சாயல 35
வேளை விலையாக்கியமை 43
வையங் கடந்த மலரடியார் 135
வையம் - சிறுதேர் 540
வை வேல் 70
வை வைத்த வேல் 58

# கிளவிக் கொத்து


| பாட்டு | | பக்கம் |
|---|---|---|
| அவையடக்கம் | .... | ௧ |
| அறத்தொடு நிற்றல் (337 - 361) | .... | ௧௪௬ |
| இடந்தலைப்பாடு (25 - 43) | .... | ௧௩ |
| இயற்கைப் புணர்ச்சி (5 - 24) | .... | ௪ |
| இரவுக்குறி (190 - 218) | .... | ௮௨ |
| இரவுக்குறி இடையீடு (219 - 236) | .... | ௯௪ |
| இல்வாழ்க்கை (433 - 446) | .... | ௧௯௦ |
| உடன்போக்கு (362 - 384) | .... | ௧௫௯ |
| உடன்போக்கு இடையீடு (418 - 430) | .... | ௧௮௪ |
| உற்றுழிப் பிரிவு (527 - 538) | .... | ௨௩௬ |
| ஒருசார் பகற்குறி (164 - 181) | .... | ௭௧ |
| ஒருவழித் தணத்தல் (279 - 302) | .... | ௧௨௦ |
| ஓதற் பிரிவு (515 - 518) | .... | ௨௩௦ |
| கற்பொடு புணர்ந்த கவ்வை (385 - 407) | .... | ௧௬௮ |
| காவற் பிரிவு (519 - 522) | .... | ௨௩௨ |
| கைக்கிளை (1 - 4) | .... | ௨ |
| தன்மனை வரைதல் (415 - 417) | ... | ௧௮௩ |
| துறவறம் (563) | .... | ௨௫௩ |
| பகற்குறி இடையீடு (182 - 189) | .... | ௭௯ |
| பகை தணிவினைப் பிரிவு (523 - 526) | .... | ௨௩௪ |
| பரத்தையிற் பிரிவு (447 - 514) | .... | ௧௯௬ |
| பாங்கற் கூட்டம் (44 - 73) | .... | ௨௦ |
| பாங்கி மதி யுடன்பாடு (74 - 93) | .... | ௩௨ |
| பாங்கியிற் கூட்டம் (94 - 163) | .... | ௪௨ |
| பொருள்வயிற் பிரிவு (539 - 562) | .... | ௨௪௨ |
| மீட்சி (408 - 414) | .... | ௧௮௦ |
| வரைதல் (431 - 432) | .... | ௧௮௯ |
| வரைதல் வேட்கை (237 - 258) | .... | ௧௦௨ |
| வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிதல் (303 - 328) | .... | ௧௩௦ |
| வரைவு கடாதல் (259 - 278) | .... | ௧௧௨ |
| வரைவு மலிவு (329 - 336) | .... | ௧௪௨ |

# பாட்டு முதற்குறிப்பகராதி

எண் : பாட்டெண்


அடுங்கால 226
அணங்கர 335
அணங்கும் 44, 444
அந்நாள 435
அயிலும 487
அரவந் 210
அரவிசை 535
அரவும 276
அரியாமத 190
அரியார 208, 476
அருகாத 399
அருகுங 286
அருந்தும் 446
அரும்புறு 555
அருவியும 137
அருள் 539
அருளம்பி அவை.
அல்லவை 519
அல்லொடு 563
அலையேற 449
அவ்வாறு 167
அவிகொண்ட 290
அழியும் 186
அளகம 31
அளியாற் 232
அளைதாழ 126
அற்புதஞ 268
அறததிற 513
அறந்தங்கு 432
அறவோர் 473
அறுகால் 30
அறையும் 280
அறைவார் 248
அன்பேமரு 419
அன்போடு 379
அன்னே 415
அன்னை 240, 352
அனைத்தாய 409
ஆகும் 95
ஆடுங்கழ 114
ஆடுங்கொடி 521
ஆடுந்துறை 356
ஆடும் 222
ஆம்பால் 471
ஆமைதன 244
ஆயின 345
ஆவுங 468
ஆழுங 180
ஆருமுனி 486
இங்கென் 301
இடமாம் 29
இடிகொத் 217
இதுமலர் 263
இயலும் 175
இரப்பார் 143
இரவிற 272
இருகாலும் 283
இருகுணற 423
இருங்கற் 547
இரும்பாவை 403
இருவிமறு 253
இருளும் 97
இலவா 139
இலைவும் 274
இலனென் 363
இளங்கொம் 49
இளவேய 33
இனறலங 249
இனறு 333,365,498
இன்னிசை 437
இன்னேஇர 418
இனததுகரு 264
இனவார 543
ஈங்கார் 86
ஈன்றோர் 507
உகையார 152
உடன்றிய 275
உடுகரும் 91
உடுகருமதழை 331
உண்ணின்ற 238
உமையாள் 282
உயயா 20
உரவெங 247, 273
உரிதோல் 242
உருமும் 182
உருவது 138
உருவுந்திரு 329
உரைகரும் 84
உவரும 83
உழிபார்த்து 227
உள்ளத்து 460
உள்ளம் 93, 281
உறிததாழ் 400
உறுமதாரை 108
ஊரமபல 307
ஊரும்கலி 371
ஊனதோய் 427
ஊனறென்றி 65
எங்காதலா 292
எண்ணு 558
எண்போல் 48
என்போல 394
என்றால் 124
என்றவி 176, 340
என்னையர்க 422

எனக்காவி 132
ஏடார் 408
ஏந்திய 477
ஏயும்கட 289
ஏராடு 474
ஏவார 485
ஏற்றுமரு 257
ஐயோ 170
ஒடிக்கும 279
ஒருகால 4
ஒருகாலமு 235
ஒருதனியே 32
ஒருநாழிகை 544
ஒருநாள் 252, 285
ஒருவருமே 236
ஒன்றிக் 402
ஒன்றேஉள 411
ஓங்கும் 416
கங்குற் 250, 271
கடந்தந்த 324
கடமலை 87
கடவாரண 228
கடறபாற் 231
கடனுகளி 368
கடுங்கால் 229
ண்டால் 441
ணஒன் 109
ணக்கும் 260
ரப்புறற 467
ரிதாகி 28
கருகாத 506
கருகிய 5
கருங்கால 318
கருஙகுல 557
கருந்தாம 130, 310
கருந்துன்று 492
கருநாண் 284
கருமபுண்ட 16
கருமோகர 414
கருவார் 377
கல்லார் 407
கல்லும் 149
கலவம் 214
கலைமதிக் 360
கழியார் 339
கழுதும் 256
களிதஙகு 265
கறபுக்கரு 514
கற்றவர் 518
கறியுறு 11
கன்னற்சிலை 528
கன்னுக 206
கனமே 42
கனைஇருள் 234
காதல் 36
காநதும 527
காயமும 417
காலையும் 183
காவும்பரு 450
கானே 187
கிளைத்துக் 322
குணஙகுற் 358
குணஙகெட 314
குரவலர் 556
குருகை 198
குருகோடு 475
குருந்தம 27
குருவி 136
குலனும் 424
குழிவந்த 221
குளங்கெழு 497
குளிக்கும 82
குறுந்தாள் 366
குன்றமழை 15
குன்றேஅனைய 505
கூர்ந்த 386
கூருகிர் 215
கூவிக் 166
கூற்றம் 164
கூனுங 178
கையார் 464
கையால் 342
கையும் 135
கைவால் 79
கோண்டல் 334
கொத்தார் 204
கொந்தார் 239
கொம்மை 119, 420
கொய்கின்ற 185
கொய்யும் 504
கொன்னூர் 193
கொன்னே 202, 344
கோடலஞ் 482
கோடிய 76
கோடையும் 150
கோவையை 325
சஙகமுழ 384
சந்தார 300
சாந்தகிற் 90
சாந்தங் 533
சாந்தம் 145
சாயா 142
சான்றோர் 330
சிமையார் 327
சிலைகசே 56
சிலைமேல் 111
சினத்துறை 103
சினவெங 184

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நீதஞ்செய் | 200 | தளவந் | 197 | தேரும் | |
| நீலந்தகை | 461 | தளவேபொரு | 553 | தேரொன்று | 4[illegible] |
| நீறும் | 102 | தனனல் | 107 | தேரோ | [illegible] |
| சுரிகுழல் | 40 | தன்னிற் | 110 | தேற்றிய | 43 |
| சுரியேர் | 14 | தன்னையும் | 266 | தேருத | 28 |
| சுருஙகா | 9 | தனியே | 81 | தேனுகர் | 51 |
| சுரும்பும் | 511 | தாயென் | 392 | தோகத்தா | 37 |
| சுரும்பெழு | 41 | தார்கால | 313 | தொடிவைத்த | 49[illegible] |
| சுழிக்கே | 50 | தாரூர் | 98 | தொடுப்பார் | 39[illegible] |
| சுறவார் | 243 | தானே அருங | 515 | தொழுது | 54[illegible] |
| சுறவே | 181 | திருத்தி அன் | 493 | தோளானும் | 8 |
| சூதார் | 163 | திருந்தா | 359 | தோளிற் | 443 |
| சேஙகால் | 288 | திருந்திய | 22, 199 | தோளும் | 35 |
| செஞ்சேல் | 195, 211 | திருந்தியபஞ் | 373 | தோற்றம் | 54, 388 |
| செய்யும்தவ | 465 | திருவடி | 532 | நகையாடி | 54[illegible] |
| செல்லத் | 169 | திருவே | 55 | நடைபோல் | 7 |
| செல்லும் | 372 | திருவோ | 2 | நண்போடி | 41 |
| செழுஙகொண் | 426 | திரைவார் | 129 | நந்தாப் | 4[illegible] |
| செறியா | 106 | திரைவான் | 303 | நம்போல் | 2[illegible] |
| சென்றுக | 428 | தினைககாவல் | 439 | நலமார் | 15 |
| சென்றேபொ | 550 | தினைமா | 162 | நவரேகை | 5[illegible] |
| சேறா | 168 | தீட்டாத | 296 | நன்றே | 294, 395 |
| சேயவற் | 353 | தீட்டிய | 173 | நிரையார் | 194 |
| சேலும்கய | 540 | தீதாகி | 147 | நிழலைச்சுளி | 5[illegible] |
| சொல்லேன் | 46 | துஞ்சத | 304 | நிறைசூல் | 5[illegible] |
| சோகானல | 261 | துணையேதும் | 472 | நிறைபோன | 51 |
| சோலை | 120, 355 | துதையும் | 462 | நினையாமல் | |
| சோரு | 293 | துப்போது | 410 | நினையோ | 1 |
| தகைமெலி | 530 | துறைவாய் | 128 | நீங்கிற் | 1[illegible] |
| தண்ணந் | 456 | தூசும் | 7 | நீடுங | 2[illegible] |
| தம்பேர் | 455 | தூயசெந் | 23 | நீயோ | 15[illegible] |
| தருக்கும் | 144 | தேன்செய்த | 45 | நீரும் | 219 |
| தலையாய | 118 | தேதாவென | 531 | நீலம் | 77 |
| தழஙகும் | 75 | தேமேகுவ | 480 | நீருக | 52 |
| தழைக்கின்ற | 94 | தேய்கின்ற | 188 | நெய்யுண் | 484 |
| தள்ளா | 6 | தேரிணங் | 321 | நெய்யொன்று | 37[illegible] |

நறியாா 499
நோய்காடி 349
பங்கயமல் 496
பங்கேருக 155, 209
பங்கேருக 447
பஞ்செசன 398
படர்ந்தகலா 494
படைத்தார் 542
பணைகாவல் 520
பணடு 338, 502
பண்ணா 62, 312
பண்ணாமொழி 101
பண்பட்ட 347
பணைந்தாங 516
பரவும் 278
பரிகெழு 525
பரிதிகிற 454
பரியுங 537
பருந்தார் 526
பருவமடு 317
பலரும்பா 459
பறியிடை 218
பனுனள் 431
பனிநின்ற 436
பனியேர் 153, 159
பாஙகாய 440
பாடின 160
பாடுங 57
பாணர் 336
பாயுஙகய 517
பாவி 309
பாவையர் 383
பாறுனடி 445
புகையாட 131
புஙகம்பட 536
புதியார் 112
புல்லத 21
புழறகால் 212
புள்ளும் 220
புறததாரு 457
புறந்தாழ் 393, 463
புறந்தாழ்விரி 297
புறநதாழள 545
புறவார் 25
புனத்தே 88
புனையும் 127
பூஙகற்ப 115
பூஙகேச 74
பூணாவன 429
பூணும 38
பூவொனறு 350
பூவடி 404
பூவேஅனை 500
பூவையுண் 391
பேடைகின்று 161
பெறுதற் 245
பேணததகு 270
பேணும 121
பேதாய் 151
பேதைபபரு 380
பேரோத 53
பைக்கொண 490
பைந்தார் 405
பொருகுன் 96
பொருமாறு 196
பொலன்கல 483
பொற்பிணை 105
பொன்றுத 157
பொனனோ 165
போகினற 367
போரேகரு 421
போறறும 258
போனார் 311
மகரம 61
மகிழ்ந்தா 123
மஞ்சறி 140
மணநகே 343
மணியார் 254
மதிகண்ட 269
மதிகாட்டிய 328
மதிமுறறி 305
மயில்போல் 24
மரகத 469
மருணமுற 323
மருப்பாா 448
மருமாந 78
மருவந்த 316
மருவாரகுழ 466
மருவிய 80
மலலற் 177
மலைக்கோடி 357
மறகரும் 66
மறிததுப் 554
மறியாா 354
மறியும் 387
மறையிற் 451
மறைவநதென் 291
மனனியசெல் 541
மனனும் 478
மனநகா 171
மாயககல 299
மாலைக்குமுத 453
மாவிடை 382
மாவின் 1
மாவையும் 116
மாறாா 189
மானுந 385, 470
மிகலே 39

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மிருததேன் | 122 | மைக்கண் | 341 | வாமானுக | 267 |
| மின்கண | 174 | மைககா | 241 | வார்க்குன | 255 |
| மின்குறை | 104 | மைங்கிற | 259 | வாரண | 337 |
| மின்சென்ற | 430 | மையோ | 381, 396 | வாரேறறி | 452 |
| மின்னே | 92, 246 | மைவார் | 503 | வாவி | 63, 172 |
| மின்னேமரு | 369 | மொய்ம்மால் | 133 | வாளா | 73, 146 |
| மீளா | 406 | மொய்யாடக | 320 | வானக | 99, 559 |
| மீனறி | 237 | யாங்காணும் | 10 | வானம | 397 |
| முச்சங்க | 302 | யாமம | 224 | விடவாய் | 298 |
| முதுவான | 216 | யாழிற் | 332 | விணணுங | 374 |
| முரியவிசு | 501 | யானும | 51 | விண்போய் | 85 |
| முரியும் | 191 | வகையுற்ற | 529 | விரியும் | 213 |
| முருகவிழு | 438 | வடகுங | 19 | விரும்பும் | 552 |
| முருகாமுளை | 481 | வடம்பரிக் | 233 | வில்லார் | 351, 509 |
| முருகொன | 442 | வடமால் | 370 | வில்லும் | 141 |
| முருநதே | 560 | வடிக்கண் | 488 | விலையாக்கி | 43 |
| முலைககா | 113 | வண்டலை | 67 | விழிகாட்டும் | 326 |
| முலைமுற | 361 | வண்டார் | 491 | விழிகுழியும் | 319 |
| முளைக்கும் | 295 | வரஇங | 192 | விழியும் | 346 |
| முறுமுகிழ் | 401 | வரலிங்க | 225 | விற்கொண் | 425 |
| முற்றும | 71 | வரவிந்த | 205 | வினைவரும் | 125 |
| முறம்போல் | 179 | வரிதருங | 534 | வீழ்கின்ற | 201 |
| முன்செல்ல | 378 | வரிநீல | 362 | வேங்கோல் | 37 |
| முன்றிலும் | 262 | வரியரி | 549 | வெதிர்கொண் | 561 |
| முன்னுவி | 70 | வரியும் | 348 | வெயிலே | 64 |
| முன்னுள் | 60 | வரியோர் | 17 | வெல்ல | 148 |
| முன்னே | 47 | வருமந்த | 230, 277 | வெறுக்கத | 489 |
| மூசிய | 3 | வல்லார் | 308 | வென்றே | 117 |
| மூளா | 523 | வல்லிக் | 203 | வேந்தன | 562 |
| மெய்வாய் | 69 | வல்லினும் | 364 | வேமாறு | 389 |
| மேகஞ் | 207 | வல்லைவரு | 306 | வேயுஞ் | 524 |
| மேகம | 158 | வழங்கும் | 315 | வேலும்சிலை | 433 |
| மேவிங | 134 | வழிகின்ற | 34 | வேறிங | 251 |
| மேலோட | 538 | வளையார் | 100 | வைவைத்த | 58 |
| மேவியொன் | 413 | வனவேய் | 551 | | |